# கந்தபுராண ஆராய்ச்சி

ந. இராமலிங்கம்

ய்6:226:g
N88
1258

பதிப்புத்துறை

காமராசர் பல்கலைக்கழகம்

939|91

# கந்தபுராண ஆராய்ச்சி

ந. இராமலிங்கம்

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பதிப்புரிமை :

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை – 625 021

Publications Division
Madurai Kamaraj University
Madurai - 625 021

விலை ரூ. 40-00

பதிப்பு எண் : 102

பதிப்பு விவரங்கள் :

ஆசிரியர் : டாக்டர் ந. இராமலிங்கம்,
தமிழ்ப் பேராசிரியர்
யாதவர் கல்லூரி
மதுரை - 14

தலைப்பு : கந்த புராண ஆராய்ச்சி

3) பதிப்பு :

இடம் மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
(Madurai Kamaraj University
Madurai-21)

பதிப்பித்தோர் : பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
(Publications Division, Madurai Kamaraj University, Madurai-21)

ஆண்டு : 1988 – முதற் பதிப்பு

4) மொத்த பக்கங்கள் : 24 + 422

5) பொருள் : கந்த புராணம்

6) அச்சும் அமைப்பும் செல்லம் பிரிண்டர்ஸ், மதுரை-9

ஒ26:அ21;g
N88

# முன்னுரை

டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள்

தமிழ்ப் பல்கலைக் கழக (தஞ்சாவூர்)

முன்னாள் துணைவேந்தர்

டாக்டர் ந. இராமலிங்கம் கந்தபுராணத்தைத் தமது டாக்டர் பட்ட அறிக்கைக்காக ஆய்ந்து வரும் செய்தியை ஓரிரு-முறை கூறியிருந்தாலும் இப்பொழுது தான் அதன் அச்சுப்படியைப் பார்க்க முடிந்தது. முயன்று செய்திகளைத் திரட்டி வகைசெய்து தனது அறிக்கையில் தந்திருக்கிறார். பாராட்டத்தக்க முயர்சி.

சங்க இலக்கியங்களில் ஊர்த் தெய்வமாகவும் வேலன் வெறி-யாடலிலும் குன்றுகளிலும் இடம் பெற்றிருந்த முருகன், பின்னர் குறிப்பாகத் திருமுருகாற்றுப்படையில் ஆறுமுகனாகப் புராணத் தெய்-வங்களுடன் இணைக்கப்பெற்று மனிதநிலை மாறி மனிதனல்லாத தெய்வநிலையைப் பெறுகிறான். சிற்றொழுக்கு, புராணக் கதைகளால் பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்துப் பேராறாக மாறுகிறது. சிறு தலைமை முழுமுதல் தலைமையாக மாறுகிறது. இந்நூலில் முற்பகுதி இவ்வளர்ச்சியை விரிவாகக் கூறுகிறது.

வேதகாலக் கடவுளரின் செய்தி விளக்கங்களுக்கும் பிற்கால விளக்கங்களுக்கும் வேறுபாடு பல என்று, கடவுள் வரலாற்றைத் தொகுக்கும் நூல்கள் பல தெளிவாக்குகின்றன. அஞ்சத்தக்கவனாக இருந்த உருத்திரன், பின்னர் சிவனாக, பேரருளாளனாக மாறுகிறான். பெண்கள் வணங்கத்தகாத கார்த்திகேயன் எல்லோருக்கும் அபயம்

தரும் சுப்பிரமணியனாக- ஸ்கந்தனாக-முருகனாகத் தமிழகத்தில் உருவாகின்றான். ஏற்பும் இணைப்பும் பெருந்தெய்வாக அவனை மாற்றுகின்றன. இந்த நிலையையும் டாக்டர் இராமலிங்கம் சுட்டு-கின்றார். பின் வெளியீடுகளில் இந்தச் செய்தியை விரிவாக்குவார் என்று நம்புகின்றேன்.

பிற நாடுகளிலும் முருகன் வழிபாட்டை ஒத்த மரபுகள் காணப்படுவதை வேறுசிலரும் கூறியுள்ளனர். 1936-ஆம் ஆண்டில்(?) திருவனந்தபுரத்தில் நடந்த அகில இந்திய கீழ்த்திசை மாநாட்டில் பலராலும் சுட்டப்பட்ட கட்டுரை ஒன்றை நான் நினைவு கூர்தல் வேண்டும். காலஞ் சென்ற பேராசிரியர் என். கோபாலபிள்ளை அலெக்சாந்தர் படையெடுப்பின் பின்பே ஸ்கந்தன்-கந்தன் வழிபாடு இந்திய நாட்டில் பெருமை பெற்றது என்று அதில் வாதித்தார். அலெக்சாந்தருக்கு இஸ்கந்தர் என்ற பெயருண்டு. ஸ்கந்தன் என்ற பெயரை எளிதாக இஸ்கந்தரிலிருந்து தோற்றுவித்திட முடியும். மேலும் பல பொருத்தங்களையும் கூறி அவர் திறமையாக விளக்கி யுள்ளார். அந்தக் கட்டுரையில் பால்காவடியுடன் கோழிச்சேவல் கொடியேந்தி, சைபீரிய மலை மக்கள் கடவுளை வழிபடுவதையும் குறிப்பிட்டுள்ளார். உலக வழிபாட்டு மரபுகளில் சில முருக வழிபாட்டோடு பொருந்தியிருப்பதை மறுக்க இயலாது அவை இணைப்பற்ற சிதறல்களாகத் தோன்றலாம் எனினும் அவை உலகின் வேறு பிற இடங்களிலும் காணப்படுவது வழிபாட்டு முறையின் உலகளாவிய பொருத்தத்தைக் காட்டும் உலகநிலை ஒற்றுமை இது.

தமிழகத்திலிருந்து அக் கூறுகள் சென்றனவா? அல்லது தமிழகம் கடன் வாங்கியதா? என்று உறுதியாகக் கூறுவதற்கும் இப்பொழுது ஆய்வுமுறை திருத்தம் பெற்றுவிட்டது. அவ்வாறு விளக்கமாக ஆய்வதற்கு டாக்டர் இராமலிங்கத்தின் நூல் துணை செய்யும்.

காலஞ் சென்ற செங்கல்வராய பிள்ளை தேவாரத்திற்குப் பொருளடைவு செய்து படிப்பார்க்குத் துணை நின்றது போன்று கந்தபுராணத்திற்கும் பொருளடைவு செய்து வெளியிட வேண்டும். இப்போது வெளியாகும் நூலில் பல செய்திகள் தலைப்புகளாகப் பிரித்துக் கூறப் பெற்றுள்ளன. எனினும் விடுபாடின்றிப் பொருளடைவாகத் (ஒளிநெறி போன்று) தொகுத்து வெளியிட்டால் திட்பமான ஆய்விற்கு அது அடிப்படையாக அமையும்.

வகுப்பில் ஆசிரியர் கூறும் பல கருத்துக்களையும் ஊன்றிக் கவனித்து அவற்றைப் பின்னர் ஆசிரியர்கள் மறந்தாலும் தான் மறவாது மேலும் ஊசாவித் தெரிபவர் இராமலிங்கம். அவர்கள் நூலைப் படிப்பதில் எனக்கு மகிழ்ச்சி. சில வரிகள் அதைப்பற்றி எழுதுவதில் நிம்மதி.

# அணிந்துரை

டாக்டர் வை. இரத்தினசபாபதி எம்.ஏ., பிஎச். டி.,
சைவ சித்தாந்தத் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை—600005

திருவருள் நலத்தால் மிக்குப் பொலியும் திருவினராகவும் திருமுறைவாணர்களை அருளாசிரியர்களாகக் கொண்டு போற்றியும் வணங்கியும் வாழும் பேறாளராகவும் திருவருள் பழுத்த நெஞ்சினராய்ப் பிறர்மாட்டும் அருள் நலம் பொதுளப் பழுநிய செஞ்சொல் வாணராகவும் நுண்மாண் நுழைபுலம் மிக்கு ஆன்றவிந்த கொள்கைச் சான்றோராகவும் அறங்கரை நாவின் அந்தணராகவும் புலியரசர் போற்றும் கவியரசராகவும் வாழ்ந்து சிறந்த வரலாற்றுப் பெரும்புகழ்வாணர் கச்சியப்ப சிவாசாரியர் அருளிய கந்தபுராணத்தை ஆய்வியற்பொருளாக எடுத்துக்கொண்டு, அரிதின் முயன்று யாத்த அருந்தமிழ் ஆய்வுப் பெட்டகமே, பேராசிரியர், முனைவர் இராமலிங்கனார் அவர்கள் அமைத்து உதவிய 'கந்தபுராண ஆராய்ச்சி' என்ற இந்நூல்.

தமிழகத்து இலக்கியவானில் எழுஞாயிறாக விளங்கி வரும் முனைவர் இராமலிங்கனார் செந்தமிழ் மரபும் சைவநலமும் பழுநிய செஞ்சொல் நிறைந்த கொஞ்சு தமிழ் நடையால் இந்நூலை யாத்திருப்பது சைவ உலகமும் தமிழ்கூறு நல்லுலகமும் ஏற்றிப் போற்றிப் பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

சைவமரபும் குமர மரபும், தமிழ்மரபும், வடமொழி மரபும், புராண மரபும், இலக்கிய மரபும், வரலாற்று மரபும், கற்பனை மரபும் ஆகிய இவைகள் ஒன்றோடொன்று மோதியும் பின்னியும் பிறழ்ந்தும், உறழ்ந்தும் நெளிந்தும் பிணைக்கும் கலாம் மிகுதியும் நின்று நிலவும் இடங்களிலெல்லாம் முனைவர் பேராசிரியர் இராமலிங்கனார் அவர்கள் அறநெறியும், தமிழ்மரபும், செஞ்சொற்றுணிபும் பின்னணியாக நிற்க, எடுக்கும் முடிபுகள் அவர்தம் நடுநிலை நெஞ்சில் அறம் தோய்ந்த செழுமையைப் புலப்படுத்தும் சான்றுகள். அவை இந்நூல் முழுவதும் விரவிநிற்கக் காணலாம். இவ்வகையில் இந்நூல் ஆய்வாளர் உலகில் ஒளிதரும் கலங்கரை விளக்கமாக நின்று நிலவும் பெருமையுடையது.

ஆய்வு நூற்செய்திகளைப் பகுத்தும் தொகுத்தும் அமைத்துக் கொண்ட பாங்கின் செழுமையால் இந்நூலாசிரியர் முனைவர் பட்டம் பெற்றுள்ளார் என்பது வரலாற்றுண்மை. ஆயினும், 'தமிழ்க் கந்தபுராணமும் வடமொழிக் கந்தபுராணமும்' என்ற தலைப்பில் சற்றொப்பப் பதினான்கு சிறு தலைப்புகளில் பேராசிரியர் எழுதிக் காட்டும் நெறியானது வெற்று ஒப்புமை நெறியன்று. தமிழும் சைவமும் வீறுகொண்டு எழுந்து நின்று, உலகளாவிய பெருமைக் குரிய தமிழகப் பண்பாட்டு மரபினை உணர்ந்து துய்ப்பதற்குரிய பண்பாட்டுக் களஞ்சியமாகும். 'கந்தபுராண ஆராய்ச்சி' என்னும் இந்நூலின் மணிமுடியாகத் திகழுவதும் என் உள்ளத்தை மிகவும் ஈர்த்துச் செறித்த இயல்புடையதும் ஆகும்.

நூலாசிரியனைவிட, தொகுப்பாசிரியனைவிட ஆராய்ச்சியாளனுக்குப் பெருஞ் சுமையாக இருப்பதும், கட்டாயப் பணியாக இருப்பதும் ஆகிய தொல்லைச் செயல் ஒன்று உண்டு. தொடர்பு பட்ட அனைத்து நூல்களையும் ஆய்வியல் போக்கில், பட்டறைப் பணியை நிறைவுறுத்தும் நோக்கில் ஓர் எழுத்தரைப் போலக் கடுமையாக உழைத்தும், இணைத்து நிறுத்தியும் பாடுபடவேண்டும். இது வரை வெளி வந்து என்னால் படித்தறியப் பெற்ற நூற்றுக் கணக்கான நூல்களையெல்லாம் விஞ்சி நிற்கும் சிறப்புடைய நூலாய் அவ்வழியில் திகழுவதைக் கண்டு வியவாமல் இருக்க முடியாது சிறந்த முடிவு எடுக்கும் தெளிந்த நூற்புலமையும் தெள்ளிய நடையும் நூலெங்கும் விளங்குவன போன்றே நூலாசிரியரின் உழைப்பும் எல்லா இடங்களிலும் விஞ்சிப் பரந்திருப்பதை இந்நூலில் கண்டு வியவாமல் இருக்க முடியாது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில், தத்துவத்துறையில் கச்சியப்ப சிவாசாரியாரின் கந்தபுராணம் கூறிய சைவசித்தாந்தக் கொள்கை பற்றிய ஆய்வு ஒன்றற்கு யான் வழிகாட்டியாக இருந்த சூழல் எனக்கு அமைந்தது. ஆனால், முனைவர் இராமலிங்கனார் அவர்கள் நூல் முழுவதும் ஏற்ற இடங்களிலெல்லாம் சைவசித்தாந்தக் கொள்கைகளை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆங்காங்கே எழுதியிருப்பது நூலாசிரியரின் தெளிந்த சைவசித்தாந்த நுண்மாண், நுழைபுலத்தைப் புலப்படுத்தும் சான்றாக அமைகின்றது. மேலும்

"(சூரபன்மனை) வேதாந்தப் பள்ளியில் பயிலும் நன்மாணாக்கனாகவும் அக்கொள்கையினைத் தன் வாழ்க்கையில் அழுந்தப் பின் பற்றுவோனாகவும் படைத்துக் காட்டி. இறுதியில் உறுதிபெற இக் கொள்கை அவனுக்குத் துணை புரியவில்லை என்பதனையும் கதைப் போக்கால் உணர்த்தி, சைவசித்தாந்த நெறியே பிறநெறிகளிலும் விழுப்பமானது என்பதைக் கச்சியப்பர் வலியுறுத்துவர்" என்று எழுதியுள்ள நூலாசிரியரின் கணிப்பு அவர்தம் மெய்ப்பொருளியல் நோக்கைத் தெளிவுபடுத்தும் விழுமிய சான்றாகும். மேலும் கொள்கையால் உயர்வு தாழ்வு உண்டு, இல்லை என்று கூறாமது வாழ்வியலில் உறுதி பெற அவனுக்கு அக்கொள்கையானல் துணைபுரியவில்லை என்று திட்ட வட்டமாகக் கூறியிருப்பது ஆசிரியரின் தத்துவப் பின்னணியின் தாக்கத்துக்கு ஒரு விழுமிய சான்றாக அமைகிறது.

சர்க்கரைப் பொம்மையை எந்த இடத்தில் சுவைத்தாலும் இனிப்பே அமைவது போல நூல் முழுவதும் எந்த இடத்தைத் தொட்டாலும் தமிழ் மணமும் சைவ நலமும் ஆசிரியரின் உழைப்பின் பெருமையும் நுண்மாண் நுழைப்புலச் சிறப்பும் அன்றி வெற்றெனத் தொகுத்த செய்தியாக ஏதும் வெளிப்பட்டிலது.

அடுத்து, கந்தபுராணப் படிப்பில் ஈடுபடுவோர் அன்றும் இன்றும் இடர்ப்பாட்டுக்குள்ளாவது ஓரிடத்தில் தான். ஐமுகச் சிவனும் ஆறுமுகச்சிவனும் என்ற இருவரில் பரத்துவம் யாருக்கும் என்பதே. இத்துறையில் அருளாளர்கள் பலரும் தத்தம் கருத்தை வலியுறுத்திச் சென்றுள்ளனர். அருளாளர்தம் கருத்துக்களை அங்கங்கே எடுத்துக்காட்டி, எழுதியும், கூறியும், தெளிவுறுத்தியும் அவரவர்தம் பெருமைகளைச் சிறப்புற எடுத்துக்காட்டி வரும் இந்நூலாசிரியர், 'முருகன் முழுமுதற்றன்மை' என்ற தலைப்பில் நடுவுநிலை மாறாது ஒரு கருத்தை எடுத்துக் கூறி விளக்கும் தன்மை இந்நூல் மக்கள் மன்றத்தில் எடுத்துக்காட்டி நிலைநாட்ட முற்படும் கொள்கை இன்னது என்பதை மாசுமறு இன்றி அமைப்பதாக உள்ளது.

"பத்திநிலையிலும், சாத்திரநிலையிலும் சிவனைமுழுமுதற் கடவுளாக ஒத்துக்கொண்ட சைவமரபில் தோன்றிய கச்சியப்ப அம்மரபுக்கு மாறுபடாமல் முருகனை முழுமுதற் கடவுளாக உயர்ந்த மிகவும் முயன்றுள்ளமையினை நூலின் முழுப்பார்வையினால்

உணரலாம். நூலின் தொடக்கப் பகுதியில், 'சிவனே முருகன் என்ற கருத்தைக் கதைமாந்தர் வாயிலாகவும், தம் கூற்றாகவும், பல்கால் வற்புறுத்தி வந்த கச்சியப்பர், படிப்படியாக முருகனின் முழுதற்றன்மையினை வளர்த்துச் சென்று நூலின் இறுதிப் பகுதியில் 'முருகனே சிவன்' என்ற கருத்து வலிமை பெறுமாறு அமைத்துள்ள திறத்தினை ஈண்டுக் காண்போம்''என அறுதியிட்டுரைப்பது சிக்கலுக்குச் சிறந்த ஆய்ந்துணர்ந்தடக்கிய முற்றுப்புள்ளி எனக் கருதலாம். 'சிவனே முருகன், என்ற தொடக்கமும் 'முருகனே சிவன்' என்ற முடிப்பும் நூலாசிரியர் தெளி-பொருட் புலமைக்குச் சான்றாக நின்ற கருத்தமைவுகள். மெய்ப்பொருள் நூலுடையார்க்கே அவற்றின் பெருமை தெரிந்துணரலாம்

பேராசிரியர் முனைவர் இராமலிங்கனார் அவர்களின் தெள்ளிய செஞ்சொற் செம்மாந்த நடை வாழ்வுறுக! முருகனை முழுமுதலாகக் கொண்ட தெளிந்த கவியரசர் கச்சியப்பரின் அனைத்-துத் திறமைகளையும் சிறிய ஆடி என நின்று எடுத்துக்காட்டும் திப்பிய நுட்பம் சேர்ந்த இந்நூல் சைவமரபுக்கேயன்றி, தமிழ் மரபுக்கும் குமரமரபுக்கும் தனித்துணை நின்று சிறப்பூட்டும் செவ்விய பசுமைச் செந்தமிழ் நூலாக நின்று மக்கள் மனமாசு நீக்குவதாக!

இறைவனால் அசரீரியாக எடுத்துக்கொடுக்க இந்நூல் யாக்கப் பெற்றது என்ற வரலாறு இந்நூலுக்கு இல்லை என்ற ஒரு குறையைத் தவிர அணைத்திலக்கணமும் பொதுள மக்களின் வாழ்வியற் பாதையை முழுநோக்காகக் கொண்டு யாக்கப்பெற்ற இந்நூல் அனைத்து வளங்களும் பொதுளும் பல்கலைக் களஞ்சியமாகும் என்பது என் கருத்து. தமிழகத்து அனைத்துமக்களும் படித்துப் பயன்பெற வேண்டும் என வேண்டி வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

# நன்றியுரை

'கந்தபுராண ஆராய்ச்சி' என்னும் தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நான் அறிஞர் பட்டத்திற்காக (1979-இல்) பணித்த ஆய்வேடு இன்று நூல் வடிவம் பெறுகின்றது முதறிஞர் குழுவின் அமைப்பாளராகத் திகழ்ந்து ஆய்வு முழுமை பெற நெறிப்படுத்தியுதவிய அமரர் டாக்டர். வ. சுப. மாணிக்கனார் [முன்னாள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கட்கும், அக்குழுவின் உறுப்பினராக இருந்து ஊக்கப்படுத்தி-யுதவிய டாக்டர் சி. பாலசுப்பிரமணியனார் [தமிழ்த்துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக் கழகம்] அவர்கட்கும் முதற்கண் என் உளங் கனிந்த நன்றியுரியதாகும்.

நூலிற்கு முன்னுரையளித்துதவிய டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் [முன்னாள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கட்கும், அணிந்துரை நல்கிய டாக்டர். வை. இரத்தினசபாபதி [சைவ சித்தாந்தத் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம் அவர்கட்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

ஆய்வுக்கு வேண்டிய உதவிகளைக் காலத்தினால் ஆற்றிய டாக்டர் தா.வே. வீராசாமி அவர்கட்கும், டாக்டர் சு. வேங்கடராமன் அவர்கட்கும் என் அகங்கனிந்த நன்றி. கல்லூரியில் பணியாற்றிக் கொண்டே ஆய்வினை மேற்கொள்ள வாய்ப்பளித்த பேராசிரியர் தி.அ. சொக்கலிங்கனார் [முன்னாள் யாதவர் கல்லூரி முதல்வர் இந்நாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தேர்வாணையர், அவர்கட்கும், டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் [முன்னாள் யாதவர் கல்லூரி முதல்வர், இந்நாள் தமிழ் நாடு சட்டமன்றத் தலைவர்] அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வுரை மதுரை காமராசர் பல்கலைக் கழக வெளியீ-டாக வருவதற்குப் பரிந்துரை செய்த பதிப்புக் குழுவிற்குப், அதனை நூல் வடிவில் வெளிவரப் பெருமுயற்சி எடுத்துக் கொண்ட பதிப்பாளர் டாக்டர் கதிர். மகாதேவன் அவர்கட்கும், மற்றும் பதிப்புத் துறை-யினர்க்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன். அச்சிட்டு உதவிய செல்லம் பிரிண்டர்ஸ் உரிமையாளர்க்கும் என் நன்றி.

மதுரை-14 ந. இராமலிங்கம்

25-8-1989.

## சுருக்கக் குறியீட்டு விளக்கம் (*Abbreviations*)

| | | |
|---|---|---|
| அகம். | — | அகநானூறு |
| அவை. | — | அவையடக்கம் |
| ஆறு. | — | ஆற்றுப்படலம் |
| ஆசுர. | — | ஆஸுர காண்டம் |
| உ.ஆ. | — | உரையாசிரியர் |
| ஐங்குறு. | — | ஐங்குறுநூறு |
| கலித். | — | கலித்தொகை |
| கழகம். | — | திருநெல்வேலித் தென்னிந்திய சைவ-சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் |
| க.வா. | — | கடவுள் வாழ்த்து |
| குறிஞ்சி. | — | குறிஞ்சிப்பாட்டு |
| குறுந். | — | குறுந் தொகை |
| சம். | — | ஸம்பவ காண்டம் |
| தக்ஷ. | — | தக்ஷ காண்டம் |
| திருமுருகு. | — | திருமுருகாற்றுப்படை |
| தேவ. | — | தேவ காண்டம் |
| தொ.ஆ | — | தொகுப்பாசிரியர் |
| தொல். பொருள். | — | தொல்காப்பியம் - பொருளதிகாரம் |
| நகர.(அ)திருநகர | — | திருநகரப் படலம் |
| நற். | — | நற்றிணை |
| நாடு | — | திருநாட்டுப் படலம் |
| ப.ஆ. | — | பதிப்பாசிரியர் |
| பட்டினப். | — | பட்டினப்பாலை |
| பதிற்று. | — | பதிற்றுப்பத்து |
| பரி. | — | பரிபாடல் |
| பா.ப. | — | பாயிரப்படலம் |
| பாயி. | — | பாயிரம் |
| புறம். | — | புறநானூறு |
| பெரும்பாண். | — | பெரும்பாணாற்றுப்படை |
| மதுரைக். | — | மதுரைக்காஞ்சி |
| மொ.பெ.ஆ. | — | மொழிபெயர்ப்பாசிரியர் |
| யுத்த. | — | யுத்த காண்டம் |
| வ.ஆ. | — | வசன ஆசிரியர் |
| வ.உ. | — | விற்பனை உரிமை |
| வீரமா. | — | வீரமாஹேந்தர காண்டம் |

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | | iii |
| அணிந்துரை | | vii |
| நன்றியுரை | | vi |
| சுருக்கக் குறியீட்டு விளக்கம் | | xi |
| ஆய்வு முன்னுரை | | xvi |
| I. இயல் ஒன்று | | |
| 1. கந்தபுராணமும் முன்னூல்களும் | ... | |
| 2. தமிழ்க் கந்தபுராணமும் வடமொழிக் கந்தபுராணமும் | ... | 42 |
| 3. கந்தபுராணப் பின்னணி | ... | 82 |
| II, இயல் இரண்டு | | |
| 1. கந்தபுராண அமைப்பு | ... | 103 |
| 2. கந்தபுராணத்தின் நோக்கம் | ... | 128 |
| 3. இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் | ... | 145 |
| 4. சமயக் கருத்துக்கள் | ... | 158 |
| 5. கந்தபுராணத்தில் தமிழ் இலக்கிய மரபுகள் | ... | 186 |
| 6. கச்சியப்பரின் புலமைப் பாங்குகள் | ... | 210 |
| I. இயல் மூன்று | | |
| 1. முருகன் அழகுத் தோற்றங்கள் | ... | 227 |
| 2. முருகனும் பிற தெய்வங்களும் | ... | 249 |
| 3. முருகனின் மக்கட் பண்புகள் | ... | 276 |
| 4. முருகன் முழுமுதற்றன்மை | ... | 292 |
| முடிவுரை | ... | 318 |

பக்கம்


V. பின்னிணைப்புக்கள்

1. முருகன் திருப்பெயர்கள் ... 327

2. முருகன் உறைவிடங்களும் முருகன் சிவனை வணங்கிய திருத்தலங்களும் ... 367

3. வடமொழிக்கந்தபுராணமும் தமிழ்க்கந்தபுராணமும் வேறுபடுமிடங்கள் ... 369

4. கச்சியப்பரின் புதிய கூறுகள் ... 374

5. படைச்சொற்கள் ... 376

6. அணிகலன்கள் ... 379

7. வேள்நூல் கருத்துக்கள் ... 386

8. கச்சியப்பரைக் குறித்த பாராட்டுக்கள் ... 386

9. கந்தபுராண வெளியீடுகள் ... 389

V துணைநூற்பட்டியல் (Bibliography) ... 396

பிழையும் திருத்தமும் ... 415

# ஆய்வு முன்னுரை

தமிழ்ப் புராணங்கள் பலவற்றுள்ளும் நடைச்சிறப்பாலும் பொருட்சிறப்பாலும், சொல் அழகாலும் சிறந்து நிற்கும் ஒன்பது புராணங்களுள் கந்தபுராணமும் ஒன்றாகும். "தொண்டர்தம் பெருமையைக் கூறும் திருத்தொண்டர்புராணம் பெரியபுராணம் ஆயிற்று. இறைவன் பெருமையைக்கூறும் கந்தபுராணமோ, புராண-நன்னாயகம்' 'ஆயிற்று" என்பர்[1]. இக்கருத்தை, "வேல் தனிநாயகன் தன் புராணம் நன்னாயகமா மெனக்கொள்க இஞ்ஞாலமெல்லாம்' (6: 24: 265) என்ற கச்சியப்பரின் திருவாக்கும் வலியுறுத்தும்

"எத்துணைக்காலந் திருப்பித் திருப்பிப் படிப்பினுங் கேட்பினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்து அமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணம்"[2] என்றும், "இந்தக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள், நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம் இராசவசியம் முதலிய பயன்களைத் தாந்தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம், சத்தியம், முக்காலுஞ் சத்தியம்"[3] என்றும் இந்நூலின் சிறப்பினையும் தெய்வத்தன்மையையும் கந்தபுராணத்தை முதன்முதலாகப் பதிப்பித்த ஆறுமுக நாவலர் போற்றுவர்.

**கந்தபுராண வெளியீடுகள்**

கந்தபுராணத்தினை ஏட்டுச் சுவடியிலிருந்து எடுத்து ஒழுங்குபடுத்தி முதற்பதிப்பாக வெளியிட்ட பெருமை யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலருக்கே உரியது. அப்பதிப்பு வெளிவந்தது 1869-ஆம் ஆண்டு என்பர்.[4] அதனைத் தொடர்ந்து வை. ஆறுமுகம் பிள்ளை முதலியோரால் 1958-ஆம் ஆண்டுவரை ஒன்பது பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. முன்னர் வெளிவந்த நாவலரின் பதிப்புக்களையும் திருவோத்தூர் ம.தி. பானுகவி அவர்களின் பதிப்பினையும் (கந்த புராணக்கலாபூஷண உரை) அடிப்படையாகக் கொண்டு தி.பட்டுச் சாமி ஓதுவாரால் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடாகக் கந்தபுராணம் முத்தொகுதிகளாக 1952, 1953,ஆம் ஆண்டுகளில்

வெளிவந்தது. இவையன்றி மூலமும் உரையுமாகவும், மூலமும் வசனமுமாகவும், மூலமும் பொழிப்புரையுமாகவும், கந்தபுராணச் செய்யுட்கள் சிலவற்றை மட்டும் தொகுத்துத் திரட்டுநூற்களாகவும் உரைநடை நூற்களாகவும் (வசனம்) பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளமை இந்நூலின் பால் மக்கள் கொண்டுள்ள பற்றினைப் புலப்படுத்தும் (பின்னிணைப்பில் உள்ள 'கந்தபுராண வெளியீடுகள்' என்னுந் தலைப்பில் பதிப்புக்கள் பற்றிய செய்தியை விரிவாகக் காணலாம்.)

கந்தபுராணம் பற்றிய முன் ஆய்வுகள்

சென்ற நூற்றாண்டின் இறுதியில் சி. செந்திநாதையர் கந்தபுராணத்தைப் பல்கால் பயின்று 'கந்தபுராண நவநீதம் என்னும் நூலைச் செய்தார். சமயபிரகரணம் முதல் பத்தி பிரகரணம் முடிய எட்டு பிரகரணங்களாக வகுத்துக்கொண்டு சைவசமயக் கொள்கையின்படி கந்தபுராணத்தைத் தம் நூலுள் விளக்குவர்.[5] 'கந்த புராணமாகிய பாற்கடலில் திரட்டிய வெண்ணெய்'[6] என்று அந்நூலை அறிஞர் பாராட்டுவர். சு.சிவ பாதசுந்தரனாரின் 'கந்தபுராண விளக்கம் என்னும் நூல் கந்தபுராணக் கதைப்போக்குடன் இடையிடையே சில இன்றியமையாப் பாக்களுக்கு விளக்கம் கூறும்வகையில் அமைந்துள்ளது.[7] இந்நூலாசிரியர் வள்ளியம்மை திருமணப்படலத்தைச் சைவ சித்தாந்த முறையில் விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது, கந்தபுராணத்தின் சிறியதொரு திறனாய்வு நூலாக இதனைக் குறுதலாம்.

ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார் தமது 'உபதேசத்திரயம்' என்னும் நூலில் கந்தபுராணத்திலுள்ள உபதேசப் படலங்களின் கருத்துக்களைப் தொகுத்துத்தருதலுடன் அக்கருத்துளுக்கு ஆதாரமாக வடமொழிக் கந்தபுராணத்தின் சுலோகங்களையும் அவற்றின் பொருளுடன் ஒப்பிட்டுக்காட்டுவர்.[9] ரா.பி. சேதுப்பிள்ளை 'வேலும் வில்லும்' என்ற நூலில் கம்பராமாயணத்திலிருந்தும் கந்தபுராணத்திலிருந்தும் ஒப்புமையான பாக்களைத் தொகுத்துத் தந்துள்ளார். கம்பரையும் கச்சிப்பரையும் ஒப்பிட்டு ஆராயும் கட்டுரையும் அந்நூலுள் இடம் பெற்றுள்ளது குறிக்கத்தகும்.[10] இரா. சாரங்கபாணிப பரிடல் திறன்

என்னும் தம் ஆய்வு நூலில் பரிபாடலையும் கந்தபுராணத்தையும் சுருக்கமாக ஒப்பிட்டுரைப்பர்.[11]

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 'கந்தபுராண கலாச்சாரம்' கந்தபுராணப் பெருமையினையும், யாழ்ப்பாணத் தமிழர்களிடையே கந்தபுராணப் பண்பாடு தோற்றுவித்த எழுச்சியினையும் விவரித்தலுடன் பிறந்த அகமாகிய தமிழ் நாட்டைக் காட்டிலும் புக்க அகமாகிய யாழ்ப்பாணத்திலே கந்தபுராணம் பல நூற்றாண்டுகளாய்ப் பயன்பட்டு வருதலையும் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டும்.[12] அவ்வறிஞரின் 'கந்தபுராண போதனை' இப்புராணத்தில் தெளிவுறுத்தப்பெறும் சமயக் கருத்துக்கள் முதலியவற்றைத் தெளிவாக விளக்கும்.[12] இந்நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்து சமயத் தொண்டாற்றிய ஞானியாரடிகள் தம் நாவன்மையால் கந்தபுராணத்தில் மிளிரும் கருத்துக்களைத் தமிழ் உள்ளங்களில் நன்கு வேரூன்றச் செய்தார். 'ஞானியாரடிகள் கந்தர் சட்டிச் சொற்பொழிவுகள்' என்னும் நூலில் முருகனது தோற்றம் (அவதாரம்). வேலின் பெருமை. சூரபன்மன் முதலியோர் முருகனால் அருள்பெற்றுய்ந்தமை முதலிய செய்திகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.[14] திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடாகிய கந்தபுராணத்தின் பிற்பகுதியில் திகழும் தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளையின் 'கந்தபுராணச் சிற்றாராய்ச்சி' இப்புராணத்திலுள்ள உவமைகள், அணிகள் சொல்லாட்சிகள் முதலிய செய்திகளைத் தொகுத்தும் வகைப்படுத்தியும் விளக்கும்.[15]

பொன். சுப்பிரமணியபிள்ளையின் 'கந்தபுராண நவநிதியம்' என்னும் நூல் சைவசித்தாந்தக் கருத்துக்களை இணைத்து இப் புராணத்திற்கு விளக்கம் காணும் வகையில் எழுந்தது. திரு. வி. கலியாணசுந்தரனார் 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலில்[16] கந்தபுராண நிகழ்ச்சிகள் சிலவற்றிற்கு மெய்ப்பொருள் நிலையில் உட்பொருள் கண்டு உணர்த்துவர்.[17] மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர் 'முருகன்' என்னும் தமது நூலுள் 'கந்தபுராணத் தத்துவம்' என்ற கட்டுரையில் சைவசித்தாந்த நெறியில் கந்தபுராண நிகழ்ச்சிகள் அமைந்திருத்தலை வலியுறுத்துவர்.[18] ந.ரா. முருகவேள் "கந்தபுராண நுண்பொருள்'[19] என்னும் கட்டுரையில் சைவ சாத்திரக் கருத்தை மையமாகக் கொண்டு இப்புராணத்தை ஆய்வர்

திருமுருக கிருபானந்தவாரியாரின் 'கந்தன் கருணை' 'கந்தவேள் கருணை' என்னும் இரு நூல்கள் கச்சியப்பரின் கந்தபுராணக் கதையினை எளிய இனிய தமிழ் நடையில் தருதலுடன் இடையிடையே சில செய்யுட்களையும் எடுத்துக்காட்டி நுட்பமாக விளக்கும் வகையில் அமைந்துள்ளன.[20] சி. பாலசுப்பிரமணியன் 'கச்சியப்பர் காட்டும் முருகன்' என்னும் கட்டுரையில் முருகன் செறுநரைத் தேய்த்து உறுநரைக் காத்து வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் கருணை வள்ளலாகக் காட்சிதருதலைக் கச்சியப்பர் வழிநின்று விளக்குவார்.[21] க. ந. திருநாவுக்கரசு 'கந்தபுராண இலக்கியக் கொள்கை' பற்றிய கட்டுரையில் கந்தபுராண அமைப்பு, கந்தபுராணத்தில் புராணப் பண்புகளும் காப்பியப் பண்புகளும், கலையழகும் கற்பனைவளமும் முதலிய தலைப்புக்களில் ஆராய்ந்துள்ளார்.[22] திருமதி இரத்தினா நவரத்தினம் 'கார்த்திகேயன் (Karttikeya, The Divine Child) என்ற தமது ஆங்கில நூலில் 'The Concept of Muruga in Kandapuranam' என்னும் கட்டுரையில் இப்புராணத்தினை மெய்பொருள் நிலையில் விளக்கிச் சைவசித்தாந்தமே கந்தபுராணத்தின் உட்பொருள் என வலியுறுத்துப.[23] தமிழியல் (Journal of Tamil Studies) இதழ்களில் கமில் சுவலபில் 'A Guide to Murukan', 'Skanda Murukan' என்னும் கட்டுரைகளில் கந்தபுராணக் கருத்துக்கள் சிலவற்றை ஆய்ந்துள்ளார்.[24] மு. அருணாசலனார் பதினாம்காம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கச்சியப்பர் வரலாறு, கந்தபுராணத்தின் காலம் முதலியவற்றைத் தெளிவாக ஆராய்ந்துள்ளார்.

அ. விசயலக்குமி 'முருக வழிபாடு' என்னும் ஆய்வு நூலில் கந்தபுராணக் கருத்துக்களையும், அக்கருத்துக்குச் சான்றாகச் செய்யுட்கள் சிலவற்றையும் எடுத்தாண்டுள்ளார்,[26] அவருடைய 'கந்தபுராணம் ஓர் அமைப்பியல் ஆய்வு' என்ற ஆய்வுக்கட்டுரை கந்தபுராணத்திலுள்ள கதைகளைத் துணுக்குக்கதைகள், தனிக்கதைகள், கூட்டுக்கதைகள் முதலியனவாகப் பகுத்துக்கொண்டு கந்தபுராணத்தின் அமைப்பினை ஆராயும்.[27]

கந்தபுராணம் குறித்து ஆய்ந்துரைத்த அறிஞர்களின் கருத்துக்கள் அந்நூலை மேலும் விரிவாக ஆராய எனக்கு ஊற்றமாய் அமைந்தன. ஆய்வுக்கட்டுரையினகத்து மேற்சுட்டிய அறிஞர்களின் கருத்துக்கள் வேண்டுமிடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு

கந்தபுராணத்தைப் பல்வேறு நிலைகளில் தனித்தனியே ஆராய்ந்துள்ள போதிலும் டாக்டர் பட்ட ஆய்விற்குரிய பொருளாக இதனைத் தனியே எடுத்து இதுகாறும் ஆய்வு நிகழ்த்தப்பெறவில்லை. அவ்வகையில் இவ்வாய்வு முதலாய்வாக அமைகிறது.

ஆய்வின் நோக்கம்

முருகக்கடவுள் சங்ககாலத்தில் தலைமையும், முழுமுதற்தன்மையும் பெற்றுத் திகழ்ந்தமையால் முருகவழிபாடு தமிழ்ச் சமுதாயத்தில் ஓங்கிப் பரந்திருந்தமையும், சமண எதிர்ப்பு இயக்கமாகச் சைவ சமயத்தை வளர்த்த நாயன்மார்கள் காலத்தில் சிவனே முழுமுதற்றன்மையும் தலைமையும் பெறுதலால் முருக வணக்கத்திக் தேக்கம் ஏற்பட்டமையும், நாயன்மார்கள் வளர்த்த சைவ சமயத்திற்கும் சிவனது தலைமைக்கும் மாறுபடாமல் முருகனை மீண்டும் முழுமுதற் கடவுளாகக் கச்சியப்பர் உயர்த்தியிருத்தலையும் காட்டுதலே இவ்வாய்வின் பெருநோக்கமாகும். பண்டைத் தமிழகத்தில் நிலவிய வேல் வழிபாட்டை மீண்டும் முருக வழிபாட்டுடன் இணைத்து நிறுவியுள்ள திறத்தைக் காட்டுதலும், தாம் வழிநூலாசிரியரெனினும் மூலநூலாசிரியர்க்கு முற்றிலும் அடிமைப்பட்டுவிடாமல் முந்தைய வழிநூலாசிரியரின் நெறிகளைத் தழுவியும், தமிழ்க் காப்பியமரபுகளைப் பேணியும் தம்படைப்பினை முதனூலாகவே கொள்ளுமாறு உயர்த்தியுள்ள பாங்கினை வடமொழிக் கந்தபுராணத்துடன் ஒப்பிட்டு வெளிக்காட்டுதலும் இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

ஆய்வுப்பொருள்

10,345 விருத்தப்பாக்களில் ஆறு காண்டங்களாகப் பகுத்துக் கொண்டு கச்சியப்பர் பாடியுள்ள கந்தபுராணமே ஆய்வுப்பொருளாக எடுத்துக்கொள்ளப்பெற்றது. கந்தபுராணத்தின் தொடர்ச்சியாகக் ச்சியப்பரின் மாணாக்கர் கோனேரியப்பரும், ஞானவரோதயரும் பாடியுள்ள உபதேச காண்டங்கள் இவ்வாய்விற்குப் பொருளாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. தென்னகத்துப்படியெனக் கருதப்படும் ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம் இரண்டு பாகங்களும் (சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் மொழிபெயர்ப்பு) ஒப்பாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற்றன. காண்டங்கள், படலங்கள், செய்யுட்கள் ஆகியவற்றை எண்முறையில் ஆய்வினகத்தே தருதற்கு எளிமையாக இருத்தலால் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடாகிய கந்தபுராணமே இவ்வாய்வில் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

ஆய்வின் பாகுபாடுகள்

முதலியல்

இவ்வாய்வின் முதலியல் 'கந்தபுராணமும் முன்னூல்களும் தமிழ்க் கந்தபுராணமும் வடமொழிக் கந்தபுராணமும்', 'கந்தபுராணப் பின்னணி' என்னும் முப்பகுதிகளைக் கொண்டுள்ளது. 'கந்தபுராணமும் முன்னூல்களும்' என்ற பகுதியில் சங்ககாலமுதல் கந்தபுராணக் காலம்வரை அமைந்த இலக்கியங்களில் முருகனது புராணக்கூறுகள் படிப்படியாக வளர்ந்துவந்துள்ள திறமும் சைவத் திருமுறைக் காலத்தில் முருக வழிபாட்டில் தேக்கம் நிலவினும் தமிழ்ப் பழங்குடி மக்களாம் குறவர், வேடுவர் முதலியோர் வழிபாட்டில் முருகனது தலைமை குறையாதிருத்தலும், கல்லாடர் காலத்தில் சைவவுலகில், முருகநெறி மீண்டும் தலை எடுத்தலும் பிறவும் விளக்கப்படும்.

'தமிழ்க் கந்தபுராணமும் வடமொழிக் கந்தபுராணமும்' என்னும் பகுதியில் கச்சியப்பர் வடமொழியிலுள்ள ஸ்காந்தபுராணத்தில் தென்னகத்துப் படியினையே (South Indian Text) முதனூலாகக் கொண்டமையும், சிவனை முழுமுதற்பொருளாக ஏற்றுக்கொண்ட சைவவுலகில் முருகனை அந்நிலைக்கு மீண்டும் உயர்த்தும் அமைதிப்புரட்சிக்கு அடித்தளம் அமைத்தல், பண்டைத் தமிழகத்தில் நிலவிய வேல் வழிபாட்டை மீண்டும் நிறுவுதல், புராணத்தைக் காப்பியச்சுவை குன்றாது பெயர்த்துத் தருதல் போன்ற காரணங்கட்காக முதனூலிலிருந்து ஆசிரியர் வேறுபடுமிடங்களும், புதியனவாகப் படைத்த நிகழ்ச்சிகளும் ஒப்பீடு செய்து ஆராயப்படும்.

'கந்தபுராணப் பின்னணி' என்னும் பகுதி முருகனைத் தலைவனாகக் கொண்டு ஒப்பற்ற பெருநூல் தோன்றுதற்குத் துணையாகவிருந்த சமுதாயச் சூழலை வரலாற்றுப் பின்னணியில் விளக்கும்.

இரண்டாம் இயல்

இவ்வியல் 'கந்தபுராண அமைப்பு', 'கந்தபுராணத்தின் நோக்கம்', 'இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்', 'சமயக் கருத்துக்கள் 'கந்தபுராணத்தில் தமிழ் இலக்கிய மரபுகள்', கச்சியப்பரின் புலமைப்பாங்குகள்' என்னும் ஆறு பகுதிகளைக் கொண்டுள்ளது.

'கந்தபுராண அமைப்பு' என்னும் பகுதியில் முந்து தமிழ்க்காப்பிய நெறிகளையும், தண்டியாசிரியர் கூறியுள்ள பெருங்காப்பிய

இலக்கணத்தையும் உள்ளத்திற்கொண்டு கந்தபுராணத்தைக் காப்பியமாக்க ஆசிரியர் முயன்றுள்ள திறன் ஆராயப்பெறும்.

'கந்தபுராணத்தின் நோக்கம்' என்ற பகுதியில் முருகனது விழுமுதற்றன்மையினைத் தம படைப்பின் மூலம் வெளிப்படுத்தும் ஆசிரியரின் பெருநோக்கத்திற்குத் துணையாக ஊழ், தவம், விடுதலை என்னும் மூன்றும் கந்தபுராணத்தின் பாவிகமாகப் பொலிதல் விளக்கப்படும்.

'இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்' என்ற பகுதியில் பிற தமிழ்க்காப்பியங்களினின்றும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் கந்தபுராணத்தில் வேறுபட்டிருத்தலும், காப்பியத்தின் பாவிகம், முருகனது பேராற்றல், கதைமாந்தரின் பத்தியுணர்வு, சமுதாய மேம்பாடு முதலியவற்றைப் புலப்படுத்தற்கு ஆசிரியர் 'அல்லியற்கை'யினைப் பயன் கொண்டமையும் விளக்கப்பெறும்.

'சமயக் கருத்துக்கள்' என்னும் பகுதியில் உணர்ச்சிக்கூறாம் பத்தித்திறத்தையும், செயற்கூறாம் வழிபாட்டு நெறிமுறையினையும் அறிவுக்கூறாம் மெய்ப்பொருட்கருத்துக்களையும் ஆசிரியர் விளக்கியிருக்கும் பாங்கு மொழியப்படும்.

'கந்தபுராணத்தில் தமிழ் இலக்கிய மரபுகள்' என்னும் பகுதியில் தமிழ் இலக்கிய உலகம் வகுத்துக்கொண்ட அகம், புறம் ஆகிய இரு மரபுகளை ஆசிரியர் தழுவிக்கொண்ட பாங்கும், தெய்வக் கதையினைத் தமிழில் படைத்தலால் அம்மரபில் மேற்கொண்ட மாற்றங்களும், இன்னபிறவும் விளக்கப்படும்.

மூன்றாம் இயல்

இவ்வியல் 'முருகன் அழகுத் தோற்றங்கள்', 'முருகனும் பிற தெய்வங்களும்', 'முருகனின் மக்கட் பண்புகள்', 'முருகன் முழுமுதற்றன்மை' என்னும நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.

'முருகன் அழகுத் தோற்றங்கள்' என்னும் பகுதியில் முருகனது கவின்மிகு தோற்றங்களைப் பத்தியுணர்வுடன் வருணிக்குமிடங்களில் 'குமாரதந்திரம்', 'ஸ்ரீதத்துவநிதி' முதலிய சிற்பநூல்

உணர்வுடன் கச்சியப்பர் பாடியிருந்தாலும், முருகனது பல்வேறு தோற்றங்களுள் ஆறுமுகமும் பன்னிருகரமும் கொண்ட வடிவமும் தென்னகத்திற்குரிய சோமாக்கந்தவடிவமும் ஆசிரியரைப் பெரிதும் கவர்ந்துள்ளமையையும், 'உடம்பிடித்தெய்வ'மாம் வேலினை முருகனது வடிவமாகவே படைத்துக்காட்டியிருக்கும் கவிஞரின் பாங்கும் மொழியப்படும்.

"முருகனும் பிற தெய்வகளும்' என்னும் பகுதியில் முருகனுக்குப் பிற தெய்வங்கட்குமுள்ள தொடர்புகளும், அத்தெய்வக் குழுவினுள் முருகன் தலைமை தோன்றத் திகழுதலும், பிறவும் ஆராயப்பெறும்.

'முருகனின் மக்கட்பண்புகள்' என்னும் பகுதி தெய்வத்தன்மையுடைய முருகனது கதையைக் காப்பியமாகப் பாடுதலால் முருகன்மீது படிந்துள்ள மக்கட்பண்புகளை வகைப்படுத்தி விளக்கும்

'முருகன் முழுதற்றன்மை' என்னும் பகுதி புராணத்தின் தொடக்கப் பகுதிகளில் 'சிவனே முருகன்' என்ற கருத்தைப் பல்கால் வலியுறுத்திச் சென்று, படிப்படியாக முருகனை முழுமுதற்கடவுளாக உயர்த்தியிருத்தலையும், புராணத்தின் இறுதிப்பகுதிகளில் 'முருகனே சிவன்' என்ற கருத்து வலிமைபெறுமாறு அமைத்திருத்தலையும் புலப்படுத்தும்.

இறுதிப் பகுதியாம் முடிவுரையில் ஆய்வின் முடிபுகள் தொகுத்து அளிக்கப் பெற்றுள்ளன.

இம்மூன்று இயல்களிலும் ஆய்ந்துரைத்த முடிபுகட்குத் தொகுக்கப்பெற்ற சான்றுகளைப் பின்னிணைப்பில் விரிவாகக் காணலாம். ஆய்வினகத்து இடையிடையே பொருத்தமான சான்றுகளைக் காட்டியிருப்பினும் கூடுதலானசான்றுகள் மேலும் உள என்பதனை இப்பின்னிணைப்புக்கள் புலப்படுத்தும்.

# மேற்கோள்

1. வ.சு. செங்கல்வராயபிள்ளை, 'கந்தபுராண வரலாற்று ஆராய்ச்சி', கந்தபுராணம். (திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு), ப.7.

2. சி. கணபதிப்பிள்ளை, கந்தபுராண போதனை, ப 1இல் மேற்கோளாக எடுத்தாளப்பெற்றது.

3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், 'கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்'. கந்தபுராணம், (ஆறுமுக நாவலர் பதிப்பு), ப 17.

4. சே.வெ. ஜம்புலிங்கம், 'நூலாசிரியர் சரித்திரக்குறிப்பு தெய்வயானையம்மை திருமணப்படலம், ப.3.

5. சி. செந்திநாதையர், கந்தபுராண நவநீதம்.

6. சி. கணபதிப்பிள்ளை. கந்தபுராண கலாசாரம், ப. 75.

7. சு.சிவபாதசுந்தரம், கந்தபுராண விளக்கம்.

8. ———, ப. 111.

9. ராம.சொ.சொக்கலிங்கச் செட்டியார், உபதேசத்திரயம்.

10. ரா.பி.சேதுப்பிள்ளை, வேலும் வில்லும்.

11. இரா. சாரங்கபாணி, பரிபாடல் திறன், பக். 194-196.

12. சி. கணபதிப்பிள்ளை, கந்தபுராண கலாசாரம், ப.43.

13. சி. கணபதிப்பிள்ளை, கந்தபுராண போதனை.

14. மு. இராசாக்கண்ணு முதலியார், (தொ. ஆ.) ஞானியாரடிகள் கந்தர்சட்டிச் சொற்பொழிவுகள்.

15. வ.சு. செங்கல்வராயபிள்ளை, கந்தபுராணச் சிற்றாராய்ச்சி கந்தபுராணம் (முதல் மூன்று காண்டங்கள்), பக். 543-566: கந்தபுராணம் (யுத்த, தேவ காண்டங்கள்), பக்.363-375; கந்த. புராணம் (தக்ஷ காண்டம்), பக்.253-263.

16. பொன். சுப்பிரமணியபிள்ளை, கந்தபுராண நவநிதியம்

17. திரு.வி. கலியாணசுந்தரனார், முருகன் அல்லது அழகு, பக். 64-71, 121-129.

18. ச. தண்டபாணி தேசிகர், முருகன், ப. 97.

19. நா. ரா. முருகவேள். 'கந்தபுராண நுண்பொருள்' முருகன் பெருமை, பக். 124-142.

20. திருமுருக கிருபானந்தவாரியார், கந்தன் கருணை.
திருமுருக கிருபானந்தவாரியார், கந்தவேள் கருணை.

21. சி. பாலசுப்பிரமணியன், 'கச்சியப்பர் காட்டும் முருகன்,' முருகன் காட்சி, பக். ) 1 )2.

22. க. த. திருநாவுக்கரசு, 'இலக்கியக் கொள்கை-கந்தபுராணம்', தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி 3, பக். 27-84.

23. Ratna, Navaratnam, 'The Concept of Muruga in Kandapuranam'. Karttikeya, pp. 165-181.

24. Kamil V. Zvelebil, 'A Guide to Murukan', Journal of Tamil studies. June, 1976. pp. 1-22.

Kamil V. Zvelebil, 'Skanda Murukan', Journal of Tamil Studies, June 1978, pp. 1-11.

25. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு (பதினான்காம் நூற்றாண்டு) பக். 61-88.

26. அ. விசயலக்குமி, முருக வழிபாடு, பக். 31, 58, 61.

27. அ. விசயலக்குமி, கந்தபுராணம் ஓர் அமைப்பியல் ஆய்வு, கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வாயிலாக எம். பில் பட்டத்தேர்வின் ஒரு பகுதியாகப் படைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை, 1977.

# I இயல் ஒன்று

1. கந்தபுராணமும் முன்னூல்களும்

2. தமிழ்க் கந்தபுராணமும் வடமொழிக் கந்தபுராணமும்

3. கந்தபுராணப் பின்னணி

# 1

# கந்தபுராணமும் முன்னூல்களும்

"மக்கள் வாழ்வு முதல் முதல் தொடங்கப்பட்ட இடம் மலை என்பது அறிஞர் கொள்கை. இஃது இயற்கை நூலாசிரியர் பலர் ஒப்பமுடிந்த உண்மை ............ தமிழ் மக்கள் வாழ்வு என்று மலை நிலத்தில் துவங்கப்பட்டதோ, அன்று தொட்டு இன்றுவரை முருகன் தமிழ்நாட்டுத் தெய்வமாகப் போற்றப்பட்டு வருகிறான். தமிழ்நாட்டுப் பழங்கடவுள் முருகனே," என்றுரைப்பர் திரு.வி.க.[1]

தொன்மைக் காலத்தில் மலைவாழ் மக்களிடம் வெறியாட்டாகத் திகழ்ந்த முருகவழிபாடு படிப்படியாகப் பிறநில மக்களாலும் போற்றப்பட்டு வளர்ந்து, இடைக்காலத்தில் வடமொழித் தொடர்பால் புராணக் கலப்புற்றுப் பெருக்கம் எய்திய காலச் சூழலில், அக்கால மக்களின் தேவையை நிறைவு செய்ய எழுந்த ஒரு பெருங்காப்பியம் கந்தபுராணம். முருகனைப் பற்றிய இப்பெருநூலுக்கு முதனூல் சூதமுனி வடமொழியில் இயற்றிய காந்தமே (அவை:14) எனக் கச்சியப்பர் அவையடக்கத்தில் குறிப்பிட்டிருந்தாலும், அடிப்படைத் தமிழ்மரபில் வந்த முருகனைப் பற்றிய கருத்துக்களை அவரால் முற்றவும் ஒதுக்க முடியவில்லை என்பதனை அகச்சான்றுகளால் உணர்கிறோம். எனவே, கந்தபுராணத்திற்கு முன்னுள்ள தமிழ் நூற்களிற் காணும் முருகனது புராணக் கூறுகள், வழிபாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றின் வளர்ச்சியினைக் கந்தபுராணத்துடன் ஒப்பிட்டும், உறழ்ந்தும் ஈண்டு ஆராயப் படும். புராணக் கூறுகளையும் வழிபாட்டு நெறிகளையும் இணைத்துக் காண்பதே முறையெனினும் தெளிவு கருதி அவ்விரண்டினையும் இரண்டாகப் பகுத்துச் சங்க இலக்கியப் பகுதியில் விளக்கப்படும்.

## I

## சங்க இலக்கியத்தில் புராணக் கூறுகள்

சங்கப் பனுவல்களில் முருகனைப் பற்றிய புராண, வழிபாட்டுக் கருத்துக்கள் செய்திகளாகவும், உவமைகளாகவும் உரைக்கப்படும்.

பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படையும், எட்டுத்தொகையினுள் பரிபாடலுந்தாம் முருகனைப் பற்றிய செய்தியினை விரிவாகக் கூறுகின்றன. ஏனையவற்றில் பாடற் கருத்துக்களின் போக்கில் சில செய்திகள் நுவலப்படும். திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் காலத்தாற் பிற்பட்டவையென்று அறிஞர் கருதுப. இருப்பினும் சங்க இலக்கியம் என்ற பொதுத் தலைப்பின் கீழ் இவற்றையும் ஒருசேர வைத்துப் பேசப்படும் போக்குத் தமிழறிஞரிடையே நிலவுவதால் அத்தன்மையிலேயே அவ்விருநூற்களும் சங்க இலக்கியத்துடன் இணைத்தே இப்பகுதியுள் ஆராயப்படும்.

## 1. முருகன் தோன்றிய வரலாறு

முருகன் தோன்றிய வரலாற்றைப் பாரித்துக் கூறும் நூல் பரிபாடலே. திருமுருகாற்றுப்படை அவ்வரலாற்றைச் சுருக்கமாக உரைக்கும். ஐந்தாம் பரிபாடலின் ஆசிரியர் கடுவனிளவெயினனார் செவ்வேளின் பிறப்பை விரிவாகக் கூறியுள்ளார்.

"சிவனாகிய பைங்கட்பார்ப்பான் உமையோடு புணர்ந்து காமத்தை நுகர்கின்ற வதுவை நாளின்கண் அமையாத புணர்ச்சியை ஒருகாலத்து அமைந்தானாக, இந்திரன் அவனிடம் சென்று, ஒரு வரம் பெற்று 'இந்தப் புணர்ச்சியால் தோன்றிய கருவை அழிப்பாயாக' என வேண்ட, இமையாநாட்டத்திறைவனும் வாய்மையனாதலின், அக்கருவினுருவைப் பலகண்டமாகச் சிதைத்து இந்திரன்பாற் கொடுத்தான். சிதைக்கப்பட்ட இக்கரு அமரர்சேனைக்குத் தலைவனாகும் என்பதை நொசிப்பின் (அவதிஞானம், சமாதி) உணர்ந்த ஏழு முனிவர்களும் இந்திரனுக்குத் துன்பம் வாராதெனக் கூறி அவனிடமிருந்து அவற்றைப் பெற்றுச் சென்றனர். அவர்களின் மனைவியர் அவ்வாறே கொள்ளின் சாலார் எனக் கருதி ஒரு வேள்வி செய்து, அழலில் அக்கருவினைப் பெய்தனர். கடவுட் கற்பினளாகிய சாலினி (அருந்ததி) ஒழிய கார்த்திகை மகளிர் அனைவரும் அதனை அயின்றனர். கணவர் வேண்ட உண்ட காரணத்தால் மறுவற்ற கற்பினையுடைய மகளிர் அறுவரும் சூலுற்று இமயமலையிலுள்ள சரவணப்பொய்கையில் பதுமப்பாயலில் குழந்தைகளை ஈன்றனர். ஈன்ற ஞான்றே இந்திரன் இகல் கொண்டு, முனிவர்கட்குக் கொடுத்த வரத்தையும் கடந்து, வச்சிரத்தால் அவைகளை வெட்டினான். ஆறுதுணிகளும் ஆறுவடிவமாகிப் பின் ஒன்றாயிற்று."[2]

"மணிமிடற்றண்ணற்கு மதியாரற் பிறந்தோய்" என்று குன்றம் பூதனாரும்,[3] "அறுவர் பயந்த ஆறமர் செல்வ," "ஆல்கெழு கடவுட் புதல்வ" என்று நக்கீரரும்,[4] "ஆலமர் செல்வன் அணிசால் மகன்" என்று மருதனிளநாகனாரும்[5] இதே செய்தியினைச் சுருக்கமாக உரைத்துள்ளனர். முருகன் தோற்றத்திற்கு அனலன் தொடர்பினைப் பரிபாடல் பகரவில்லையாயினும் திருமுருகாற்றுப்படை,

"நெடும் பெருஞ்சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமர் செல்வ"[6]

என்று அச்செய்தியினைக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

முருகனது தந்தையைச் சங்க இலக்கியம் குழப்பமின்றித் தெளிவாகக் குறிப்பிடினும் அவன் தாயரைப் பலராகப் பேசும். "மலைமகள் மகனே,"[7] "அறுவர் பயந்த ஆறமர்செல்வ,"[8] "மதியாரற் பிறந்தோய்,"[9] "கொற்றவை சிறுவ",[10] "பழையோள்குழவி",[11] "பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத் துணங்கையஞ் செல்வி"[12] என்னும் தொடர்களில் மலைமகள், கார்த்திகைமாதர், கொற்றவை, பழையோள், துணங்கையஞ்செல்வி ஆகியோர் அவனது தாயராகச் சுட்டப்பெறுதலை உணரலாம். திருமுருகாற்றுப்படை, பரிபாடல் இவ்விரு நூல்களிற்றான் அவன் மலைமகள் மகனாகவும் கார்த்திகைமாதர் மகனாகவும் கூறப் பெறுவன். பிற இலக்கியங்களில் பழந்தமிழரது பெண் தெய்வத்தின் மகனாகவே குறிப்பிடப் பெறுகின்றான். புறநானூறு, அகநானூறு, போன்ற இலக்கியங்களில் 'சேஎய்'[13] என்ற சொல்லால் முருகனைக் குறிப்பிடுதலால் தொன்மைக்காலத் தமிழ்நாட்டுப் பெண்தெய்வங்களின் மகனாகவே முருகனை ஏற்றுக் கொண்டுள்ளமை புலனாகும். "முருகன் தாய்த் தெய்வத்தினின்று பிறந்த செய்தி தமிழ்நாட்டுக்கே உரியது,"[14] என்பார் கருத்தும் இவண் கருதத்தக்கது.

கந்தபுராணத்தில் கந்தன் உதித்த வரலாறு பல படலங்களில் (1:3-1:11) விரிவாக இயம்பப்படும். சூரன் முதலியவர்களின் சொல்லொணாப் பருவரற்கு ஆட்பட்ட இந்திரனது தவத்திற்கு இரங்கிய சிவன், "நம்மிடை ஒருசேய் தோன்றிச் சூரனைக்காதி உம்மைக் காப்பன்" (1:3:35) எனப் புகன்று மறைந்தான். காலம் கடந்தும் செயல் நிகழா நிலையில், இந்திரன், திருமால் முதலியவர்களிடம் நிகழ்ந்ததை விளம்பிய

பின்னர், இறைவனது மோனத்தைக் கலைக்கக் காமவேள் கயி லைக்கு உய்க்கப்படுகின்றான். கணையெய்த காமன் எரிந்து சாம்பலா னான். பின்னர், பார்வதி திருமணம் நிகழ்ந்தும் இந்திரன் விருப்பம் நிறைவேறவில்லை. மீண்டும் இந்திரன், திருமால், நான்முகன் ஆகிய மூவரும் கயிலை சென்று இறைவனை வேண்ட, சிவன் தன் தொல் லைத் திருமுகம் ஆறுங்கொண்டு, அம்முகங்களில் உள்ள நெற்றிக் கண்டோறும் ஆறு தீப்பொறியைத் தோற்றுவித்து (1:11:44) கங்கை யில் அவற்றை உய்க்குமாறு பணித்தான். வாயுதேவனும் அனலனும் அவ்வறுசுடரையும் முறையே ஒவ்வொரு நாழிகை ஏந்தி வந்து கங்கையில் உய்க்க, கங்கை அவற்றை ஒரு நாழிகையில் சரவணத் தடத்தில் சேர்த்தனள். அங்கு அச்சோதிப் பிழம்பு கருணைகூர் முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு திருமுருகனாக உதித்தது (1:11:92). திருமால் முதலியோர் வேண்ட, கார்த்திகைத் தெரிவையர் முலையமுதூட்ட முற்படும்பொழுது அவர்கட்கு உதவ அறுமுகவொருவன் அறுசிறார் வடிவு கொண்டு திகழ்ந்தான் (1:11:116). உமை அங்கு வந்த பொழுது பின்னர் ஆறு குழந்தை களையும் அன்புடன் எடுத்துப் புல்லி, ஆறுமுகமும் பன்னிரு புயமும் கொண்ட ஓருருவமாக்கிக் 'கந்தன்' என்ற பெயர் அமையுமாறு செய்தனள் (1:13:21).

சிவன்-மலைமகள் இவ்விருவர்தம் மகன் முருகன் என்பதும், சர வணப் பொய்கையில் உதித்தோன் என்பதும் சங்க இலக்கியங்களிலும் கந்தபுராணத்திலும் காணும் பொதுக் கருத்துக்களாயினும், அவன் தோன்றற்குரிய காரணம் சங்கச் செய்யுட்களில் விளக்கம் பெறவில்லை. தோன்றிய வரலாறும் வேறுபடக் காண்கின்றோம்.

கந்தபுராணத்தில் இந்திரன் முதலிய தேவர்கள் வேண்ட சிவனால் தோற்றுவிக்கப்படும் முருகன், பரிபாடலில் இந்திரனுக்குப் பகைவனாகக் காட்சி தருவன். முருகனது தோற்றத்திற்கு ஏங்கித் தவிக்கும் இந்திரனைக் கந்தபுராணமும், முருகனைப் பகைவனாகக் கருதுவதுடன், கருவிலேயே அவனைச் சிதைக்கும் எண்ணங்கொண்ட இந்திரனைப் பரிபாடலும் காட்டும். பயந்த தாயரைப் பலராகச் சுட்டும் சங்க இலக்கியப் போக்கினின்றும் வளர்ச்சிபெற்று மலை மகளையே தாயாகச் சுட்டும் நிலையினைக் கந்தபுராணத்தில் காண் கின்றோம். ஈன்ற தாயராகக் கார்த்திகைத் தெரிவையரைக் காட்டும் அந்நிலையிலிருந்தும் வேறுபட்டு வளர்ப்புத் தாயராகக் கந்தபுராணம் அவர்களைக் காட்டும். கார்த்திகை மாதர்க்காகப் பிரிந்த முருகனது உருவம் அன்னையின் அன்பு அரவணைப்பால் மீண்டும் ஒன்றா

யிற்று (1:11:116) எனக் குறிப்பிடுவர் கச்சியப்பர். தன்னை இகல் கொண்டு வெட்டிய இந்திரனை அழித்தற்காக ஒரே வடிவம் பெற்றான் எனப் பரிபாடல் பேசும். பகையை அழிக்க அவ்வடிவம் பெற்ற மையைக் காட்டிலும் அன்பிற்காக அவ்வடிவம் பெற்றதாகக் கச்சி யப்பர் குறிப்பிடுதல் விழுப்பமாக உள்ளது.

வடமொழித் தொன்மைக் காப்பியங்களிற் (இராமாயணம், மகா பாரதம்) காணும் முருகனது புராணக் கூறுகளில்[15] சில பரிபாடலிற் காணப்படுகின்றன. முருகனது புராணக் கூறுகள் ஒழுங்குறுத்தப் பெற்று வடமொழிக் கந்தபுராணம் தொகுக்கப்பட்ட பின்னர்த் தோன்றியது தமிழ்க் கந்தபுராணம் ஆதலின் முருகனது தோற்றம் பற்றிய வரலாறு சங்க இலக்கியத்தைக் காட்டிலும் செம்மையுற அமைந்துள்ளது.

தமிழ்த் தெய்வமாம் கொற்றவையின் மகனாகக் காட்ட முத னூல் கச்சியப்பருக்கு வாய்ப்பளிக்கவில்லை யெனினும் ஒரே ஓரிடத் தில் முருகனைக் 'கொற்றவை சிறுவன்' (4:4:398) எனக் குறிப் பிடுதல் கருதத்தக்கது.

## 2. இளம்பருவ வெற்றி

முருகனைப் போர்த்தெய்வமாகவும்,[16] அப்போருக்குரிய வலிமை,[17] கடுஞ்சினம்,[18] முன்னியதை முடிக்குந் திறல்[19] முதலிய பண்புகளைக் கொண்டோனாகவும் சங்கப் பாக்கள் உவமை முகத்தான் குறிப்பிடும்.

பிறந்த ஞான்றே முருகன் இந்திரனை வெறுங்கையுடன் எதிர்த்து வெற்றி கண்டமையினையும், தோற்ற இந்திரன் தன் மெய்யின் ஒரு கூறைப் பிரித்து மயிலாக்கி அவனுக்குக் கொடுத்தமையினையும், அதனைக் கண்ட அனலனும் கூற்றுவனும் அவ்வாறே தம்மெய்யிற் பிரித்து முறையே கோழிச்சேவலையும், ஆட்டினையும் கொடுத்தமை யினையும் பரிபாடல் புகலும்.[20]

இளம் பருவத்தில் முருகன் இயற்றிய திருவிளையாடலால் உலகப் பொருள்கள் நிலைகுலைந்தமை கண்ட இந்திரன் முதலியோர் (வருணன், கூற்றுவன், கதிரோன், அனிலன், கனலோன்) கந்தனோடு இகலிப் பொருது மடிந்தமையினையும் (1:14:56-57) பின்னர்த் தேவகுருவாம் வியாழனது வேண்டுகோளை ஏற்ற முருகன், இந்திரன்

முதலியவர்களை மீண்டும் எழுப்பியதனையும் (1:14:78) கந்தபுராணம் விரித்துரைக்கும். இக்குழவிப்பருவப் போரில் தோற்றவர்கள் அளித்த பொருள்களைப் பற்றிய குறிப்பு இவண் காணப் டவில்லையெனினும் முருகன் அருளால் எழுந்த இந்திரன் முதலியோர் கந்தனைப் போற்றிய பின்னர், "உன்னருளுக்கு நிகராக ஆற்றுவது யாதுளது? உனக்கு அடியவராக எங்களை இப்பொழுது ஈதும் என்றாலும், தொன்றுதொட்டு வழியடிமையாக வரும் எங்களைப் புதிய அடிமைகளாக அளிப்பது எங்ஙனம் இயலும்? தாதையர் பெறச் சிறுவர் தங்களை அவர்க்கு அருள்கை தக்க பரிசோ?" (1:14:86) எனக் கூறியதாகக் கச்சியப்பர் நவில்வர். தன் மெய்யில் ஒரு கூறினைப் பிரித்துத் திறைப் பொருளாகத் தந்த செய்தியினை மேலும் விரித்துத் தங்களையே அடிமையாக அளிக்கும் போக்கில் கந்தபுராணம் விளக்குவது பத்திநெறிக் காலத்தின் இயல்பெனக் கருதலாம்.

## 3. சூர்மா தடிதல்

முருகன் சூரனைத் தடிந்த செயலைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் உவமைகளாகவும், செய்திகளாகவும் பல்வேறிடங்களில் விளக்கியுள்ளன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் கடல் வெற்றியினை முருகன் சூர்மா தடிந்த செய்தியுடன் குமட்டூர்க் கண்ணனார் ஒப்பிட்டுரைப்பர்.[21] பிறரை வருத்துதலை இயல்பாக உடையவர்களாகவும்,[22] மாயத்தில் வல்லவராகவும்,[23] கொன்றுணல் அஞ்சாக் கொடுமையாளராகவும்[24] அவுணர்களைக் குறிப்பிடுவதோடு, அவர்கட்குக் காவலாக இருக்கும் சூரனைக் 'கடுஞ்சூர்'[25] என்றும் 'நோயுடை நுடங்கு சூர்'[26] என்றும் 'குதிரை முகமும் மக்கள் உடலுங் கொண்ட வடிவினை உடையவன்'[27] என்றும் சங்க நூல்கள் குறிப்பிடும். இத்தகைய பேராற்றல் படைத்த சூரபதுமனையும் அவனது சுற்றத்தாரையும் கடற்போரில் வேலால் முருகன் அழித்த செய்திகள் அவனது வேலின் வெற்றியாகப் பல இடங்களில் விரித்துரைக்கப் பட்டுள்ளன.[28]

புராணக்கதைகளை ஆர்வமுடன் எடுத்துரைக்கும் கடுவனிளவெயினனாரும், முருகனை அன்பு நெறியிற் கண்டேத்தும் நக்கீரனாரும் அவன் சூர்மா தடிந்த செயலைச் சற்று விளக்கமாகப் பாடியுள்ளனர். "முருகன் பிணிமுகம் என்னும் யானை மீது இவர்ந்து கடலில் உள்ள பாறைக் கற்கள் நொறுங்கும்படிச் சென்று, சூரபன்

மாவாகிய மாமரத்தை அறுத்து. அவுணர் குலம் அழியுமாறு அமர் உழக்கினான்"[29] என்றும், "பார்முதிர் பனிக்கடல் நிலைகுலையுமாறு உட்புகுந்து, பேய்மகள் கருந்தலையைக் கையிலேந்திக் களம் பாடித் தோளசைத்துத் துணங்கைக் கூத்தாடும் வண்ணம் அவுணர் நல் வலம் அடங்க, மக்கள் வடிவும் விலங்குவடிவும் உடைய சூரனை உடல் அற்று வேறாகுமாறு முருகன் வேலால் தடிந்தான்" [30] என்றும் அவ்விருவரும் முறையே மொழிந்துள்ளனர். சூரனது செல்வக் களிப் பிழந்த மகேந்திர மூதூர் "முருகுடன்று கறுத்த கலியழி மூதூர்"[31] என்றும் பதிற்றுப்பத்தில் சுட்டப்பெறும்.

கந்தபுராணத்துள் பல்லாயிரம் பாக்களில் விரித்துரைக்கப்படும் இப்போர் நிகழ்ச்சியைச் சங்கப்பாக்கள் சுருக்கமாகவே குறிப்பிடும். சூரபன்மன் இளவலாம் சிங்கமுகனைப் பற்றியும், மைந்தர் களாம் பானுகோபன், அக்கினிமுகன் முதலியோரைப் பற்றியும் சிறுகுறிப்புக்கள் கூட சங்க இலக்கியத்துள் இடம்பெறவில்லை என்பது நினையத்தக்கது.

*"சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்"*[32]
*"சூர்மருங் கறுத்த மொய்ம்பின மதவலி"*[33]

என வருமிடங்களில் 'சூர்மருங் கறுத்த' என்ற தொடர்கட்கு 'சூரபன்மாவைக் குலத்தொடு அழித்த' எனப் பொருள் கொள்ளப்படு தலால் சூரனையன்றி அவன் இளவல், மைந்தர் முதலியோரையும் முருகன் தடிந்த செய்தியை ஊகிக்க இயலும்.

கந்தபுராணக் கதை தமிழ்நாட்டுக் கதையென்றும், இராம இராவணக் கதைக்கு முன்னர்த் தென்னாட்டின்கண் வழங்கிய கதை யென்றும் மறைமலையடிகளார் கருத்துரைப்பர்.[34] கந்தபுராணக் குறிப் புக்கள் காணப்பெறும் அளவிற்கு இராமாயணக் குறிப்புக்கள் சங்க இலக்கியத்துள் இடம் பெறாமை அவரது கருத்துக்கு அரண் செய்யும். "தொடக்க நிலையில் முருகனது பகைவன் சூர். பின்னர் அதுவே 'சூரன்' என்பதோடு இணைந்தது. சூரபதுமனது தொடக்க வடிவம் (Proto-type of the great anti-god) 'சூர்' ஆக இருக்கலாம்" என்று அறிஞர் கருதுப.[35] அதனால் அச்சம், துன்பம், கொடுமை, வஞ்சம் என்ற பொருளைத் தரும் 'சூர்' என்ற சொல்லே, அவைகளைப் பிறருக்குத் தருகின்ற ஒருவனுக்கு ஆகி, அவனே 'சூரன்' எனப்

பட்டான் எனக் கொள்வதில் தவறில்லை. அன்றியும், வடநாட்டுத் தொன்மைக் காப்பியங்களிலும், குமாரசம்பவத்திலும், புராணங்களிலும் கந்தன் மகிடாசுரனையும் தாரகனையும் தடிந்த செய்தியே விவரிக்கப்படுவதும்[36] நோக்கத்தக்கது. எனவே, முருகன் சூர்மா தடிந்த செயல் தென்னாட்டில் நிலவிய முருகனைப் பற்றிய பழங்கதைக் கூறாகக் கொள்ளலாம். வடநூற் கதையினைத் தமிழில் தந்த கச்சியப்பரும் அப்பழங்கதை மரபினை விடாது போற்றும் வகையில் சூரபதுமனைப் பல்வேறிடங்களில் 'சூர்' (2:12:43; 2:10:8) என்றே குறித்தலும் இங்கு உளங்கொளற்குரித்தாம்.

## 4. குன்றம் கொன்ற குன்றாக்கொற்றம்

முருகன் தன் படையுடன் மகேந்திரம் நோக்கிச் செல்லுகையில் ஆண்டு எதிர்ப்பட்ட தாரகனையும் அவன் உறைதற்கு இடமாகிய கிரவுஞ்ச வெற்பினையும் வேலால் தடிந்தமையினைக் கந்தபுராணம் பல பாக்களில் விரித்துரைக்கும். சங்கப் பனுவல்களில், பரிபாடல்,[37] திருமுருகாற்றுப்படை,[38] குறுந்தொகை[39] என்ற மூன்று நூல்களே இக்குன்ற மெறிந்த செய்தியைக் குறிப்பிடும். கிரவுஞ்சகிரி என்ற வடமொழிப் பெயரால் அம்மலையைச் சுட்டாது "புள்ளொடு பெயரிய பொருப்பு" என்றும், "குருகொடு பெயர்பெற்ற மால்வரை" என்றும், சங்க இலக்கியம் தமிழ்ப்படுத்தி உரைக்கும். "இந்நெறி சங்க இலக்கிய நெறியாகும்" என்பர்.[40] முருகன் மலைக்குரிய தெய்வமாக இருந்தும், மலையையே அழித்தான் என்ற நயந்தோன்றுமாறு,

*"குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து*
*விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!"*[41]

என்று நக்கீரர் போற்றுவர். இவ்வாறு சூரபதுமனின் தம்பியாம் தாரகனைத் தடிந்தமையினை வெளிப்படக்கூறாது, அவன் உறைவிடமாகிய கிரவுஞ்ச வெற்பைக் கந்தன் வேலால் பொன்றுவித்த செய்தியினை மட்டும் சங்கப் பாக்கள் குறிப்பிடும்.

## 5. செவ்வேள் தோற்றம்

"மாக் கடலினின்றும் நிவந்தெழுந்த இளஞாயிற்றின் இயற்கை அழகில் உள்ளம் தோய்ந்த அன்பர்கள், அதனையே இறையென

வழிபட்டு வணங்கினர். அதுவே பின்னர் நீலமயில் மீது வீற்றிருக்கும் செவ்வேள் வழிபாடாக மலர்ந்தது. நீலக்கடலை நீலமயிலாகவும் அதில் எழும் காலைக் கதிரோனைச் செந்நிற முருகனாகவும் கண்டனர்."[42] தொல்காப்பியரும், குறிஞ்சித் தெய்வமாம் முருகனைச் 'சேயோன்'[43] என்றே குறிப்பிடுவர். சங்கப் பனுவல்களும் முருகனைச் செந்நிறமுடையவனாகவே யாண்டும் குறிப்பிடும். 'வேள்' என்ற சொல் மன்மதன், முருகன் ஆகிய இருவருக்கும் உரிய பொதுச் சொல்லாதலால் கருவேளை நீக்கி முருகவேளை உணர்த்த செவ்வேள் என்று பண்டையோர் சுட்டினர். செவ்வேள் எனும் பெயர் பரிபாடலில் மட்டும் தான் வந்துள்ளது.[44]

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முருகன் தோற்றத்தைக் கடலில் எழும் காலைக் கதிரவனோடு ஒப்பிட்டுரைப்பர்.[45] அவரே அகநானூற்றுப் பாடலொன்றில் செவ்வானத்தை முருகனது மார்பிற்கு உவமையாக்குவர்.[46] கடுவனிளவெயினனார், செவ்வேளின் தோற்றத்தை "ஞாயிற்றேர் நிறத்தகை"[47] என்றும், நப்பண்ணனார்,

*"உடைய மொலியலுஞ் செய்யைமற் றாங்கே*
*படையும் பவழக் கொடிநிறங் கொள்ளும்*
*உருவு முருவத்தீ யொத்தி முகனும்*
*விரிகதிர் முற்றா விரிசுட ரொத்தி"*[48]

என்றும் பரிபாடலில் போற்றுவர். குறுந்தொகைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் இவர்களினும் மேலாகச் சென்று முருகனது திருவடி, திருமேனி, உடை, வேல், கொடி ஆகிய அனைத்தையுமே செந்நிறமாகக் கண்டு போற்றியுள்ளார். இவ்வாறு அனைத்தும் செம்மையாக விளங்கும் முருகனை அழகுக்கு உவமையாக்குவதில் சங்கப் புலவர்கள் நிறைவு கண்டனர்.

கந்தபுராணம் முருகனைப் பல பெயர்களால் சுட்டியிருப்பினும், முதல்முதல் 'செவ்வேள்' (1:பாயிரம்:3) என்ற பெயரால் குறிப்பிடுதல் இங்குக் கருதத்தக்கது. அன்றியும், "அந்தியின் வனப்புடை மெய்க்குகன்" (1:14:79) என்றும், தாய்தந்தையர் நடுவண் அவன் வீற்றிருக்கும் தோற்றத்தை,

*"ஞால மேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்*
*மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றொக்கும்"*
(1:13:26)

என்றும் நவிலும். முன்னோர் முருகன் தோற்றத்தைச் செந்நிறமாகக் கண்டு போற்றிய நெறியில் கச்சியப்பரும் சென்றுள்ளமையினை இதனால் உணரமுடியும்.

## 6. முகங்களும் கைகளும்

ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளுமுடைய முருகன் திரு வுருவத்தைப் பரிபடாலும், திருமுருகாற்றுப்படையும் விரிவாகப் பேசும். பிற சங்கப் பாக்கள் இவைகளைக் குறிப்பிடவில்லை என்பது இங்கு நினையத்தகுவது.

*''மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்''*[49]
*''அறுமுகத் தாறிரு தோளால்''*[50]
*''ஆறிரு தோளவை யறுமுகம் விரித்தவை''*[51]

எனப் பரிபாடலும்,

*''மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்''*[52]
*பன்னிரு கையும் பாற்பட வியற்றி''*[53]

எனத் திருமுருகாற்றுப்படையும் மொழியும். அந்த ஆறுமுகங்களின் வினைகளையும், அம்முகங்களின் வினைகளுக்கு ஏற்பப் பன்னிரு கை களும் இயற்றும் வினைகளையும் திருமுருகாற்றுப்படை விளக்கமாக விளம்பும்.

ஒருமுகம் தன் பல்கதிரால் உலக இருள் அகற்றுவதாகவும், பிறிதொரு முகம் தன் மேல் அன்பு செய்தவர் துதிக்கக் காதலின் உவந்து வரங்கொடுப்பதாகவும், மூன்றாவது முகம் அந்தணர் வேள் விக்கு ஊறு நிகழாதவாறு நினைப்பதாகவும், நான்காவது முகம் வேதாகமங்களில் மறைந்து கிடக்கும் பொருள்களை இருடிகள் இன்பம் அடையுமாறு ஆராய்ந்துணர்த்தித் திங்கள் போன்று திசை விளக்குவதாகவும், ஐந்தாவது முகம் நடுவுநிலையைக் கெடுத்து வைரம் கொண்ட திருவுள்ளத்தோடே பகைவர்களைக் கொன்று களவேள்வி நிகழ்த்துவதாகவும், ஆறாவது முகம் வள்ளியோடு மகிழ்ச்சியைப் பொருந்துவதாகவும், அவ்வாறு முகங்களின் வினை களுக்கேற்ப, ஒருகை விண்ணில் இயங்கும் தேவர்க்குப் பாதுகாவலாக ஏந்தியதாகவும், ஒருகை மருங்கிலே அமைந்து விளங்குவதாகவும், ஒருகை அங்குசத்தைக் கடாவுவதாகவும், ஒருகை குறங்கில் விளங் குவதாகவும், இருகைகள் பரிசையினையும் வேற்படையினையும்

வலமாகச் சுழற்றுவதாகவும், ஒருகை மார்போடு திகழ்வதாகவும், ஒருகை தாரொடு பொலிவதாகவும், ஒருகை வளைகள் சுழல களவேள்விக்கு வேண்டிய குறிப்பை இயற்றுவதாகவும், ஒருகை பாடின் படுமணி இரட்டுவதாகவும், ஒருகை மழையினைப் பொழிவிப்பதாகவும், ஒருகை வானரமகளிர்க்கு வதுவை சூட்டுவதாகவும் திருச்சீரலைவாயில் எழுந்தருளியுள்ள முருகனை நக்கீரர் விவரிப்பர்.[54]

"மேற்கண்ட உருவ அமைதி ஆரியக்கடவுளான கார்த்திகேயனுடையது. திராவிடரின் கடவுளான முருகனுக்கும், பார்ப்பனருக்கும் யாகங்களுக்கும் ஒருவகையான தொடர்பும் இல்லை. ஆனால் மேற்-கூறப்பட்ட திருமுருகாற்றுப்படைப் பகுதியில் அவன் பார்ப்பனர் பாதுகாவலனாகக் கூறப்படுகின்றான்," என்று குறிப்பிட்டுத் திருமுருகாற்றுப்படை தமிழ்நாட்டு முருகனை ஆரியக்கடவுளான கார்த்திகேயனோடு தொடர்பு படுத்தியுள்ளதாக அறிஞர் கருதுவர்.[55] எனவே, பண்பாட்டுக் கலப்பினால் முருகனது புராணக்கூறுகளும் வளர்ச்சியுறுவதை இதனால் அறிகின்றோம்.

கந்தபுராணத்துள் முருகனைச் சுட்டும் பல்வேறு பெயர்களுள் ஆறுமுகன், பன்னிரு தோளன் போன்ற பெயர்களே பிற பெயர்களினும் மிகுதியாகக் காணப்படுவதும், புராணத்தின் முதலிலும் இறுதியிலும் அக்கடவுளை வாழ்த்தும் போது,

> *"மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி*
> *ஏவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி"*
> *(1: பாயிரம் : 3)*

என்றும்,

> *"ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க"* (6:24 : 261)

என்றும் குறிப்பிடுதலும், சரவணத்துதித்த முருகனைக்,

> *"கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங்*
> *கொண்டே*
> *ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய"*
> *(1:11:92)*

என்றும் புகல்வதும், செவ்வேளின் உருவ அமைதியில் ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும் உடைய தோற்றமே கச்சியப்பரைப் பெரிதும் கவர்ந்துள்ளமை புலப்படும்.

## 7. ஆடையும் அணியும்

குன்றி ஏய்க்கும் உடுக்கையும்,[56] சிவந்த ஆடையும்,[57] வெண்ணிற ஆடையும்[58] தரிப்பவன் என்றும், அவ்வாடையினை நிலத்தில் தோயுமாறு உடுப்பவன்[59] என்றும், முத்துமாலையை உரத்தில் அணிபவன் [60] என்றும் சங்கப்பாக்கள் இயம்பும்.

## 8. மாலை

சுரும்புகள் மூசாத காந்தள் மலரையும்,[61] செச்சை மலரையும்[62] தொடுத்துக் கண்ணியாகவும், செங்கடம்பு மலரைக் கோத்து மார்பில் மாலையாகவும்[63] அணிந்து உடையின் வண்ணமாகவே காட்சி தருகின்றான். அதனால் நப்பண்ணனார், "உடையும் ஒலியலும் செய்யை"[64] என்று பரிபாடலில் போற்றுவர்.

கச்சியப்பரும், இத்தகைய தமிழ் மரபினைத் தழுவி "காந்தளஞ் சென்னியன்" (5:1:10), "செச்சை மௌலியான்" (6: 24: 214), "கள்ளிரைத்திடு பூந்தண்தார் கடம்பணிகாளை" (6: 24: 7), "கோடலும் மராத்தொடு குரவுஞ் செச்சையும் சூடியகுமர" (1:14:69) என முருகனைக் குறிப்பிடுவர்.

## 9. படைகள்

முருகனுக்குரிய படைகளில் தலைமையிடம் பெறுவது வேல். வேலன் வெற்றிக்கு வேலே துணை நின்றது என்ற கருத்தில் முருகன் பகைவரைத் தடிந்தமையினை விளக்கும் பொழுதெல்லாம் வேலைக் குறிப்பிடச் சங்கப் புலவர்கள் மறப்பதில்லை. வெற்றிக்குத் துணைபுரியும் அவன் கையில் விளங்கும் வேலினைச் "செஞ்சுடர் நெடுவேல்",[65] "செவ்வேல்",[66] "வென்வேல்",[67] "எஃகு",[68] "சுடர்ப்படை",[69] "ஏந்திலை"[70] எனப் பல்வேறு அடைபுணர்த்தும் பல்பெயரானும் வழங்கியுள்ளனர். பகைவரைக் கோறற்கு முருகன் கையில் ஏந்திய வேலின் நுடக்கத்தைக் கொண்மூவின் மின்னலுக்கு ஒப்புமைப்படுத்துவர்.[71] அவ்வேலை எவரிடமிருந்து பெற்றான் என்று சங்கச் செய்யுட்கள் சுட்டில.

பகைவரை அழித்து வெற்றி ஈட்டித் தரும் ஒரு கருவியாகவே வேலினைச் சங்கப் பாக்கள் கூறும். கச்சியப்பர் முருகனது வேலினை

வெற்றி தேடித்தரும் வெறும் கருவியாகச் சுட்டாமல் மாயையில் அகப்பட்டுச் சிக்கித் தவிக்கும் உயிர்களை விடுவிக்கும் ஞான வேலாகவும் (1: 20: 186; 4: 5: 206) கந்தக் கடவுளாகவும் (4:5:212) படைத்துக் காட்டுவர். 'சத்தி' ஆயுதமாகிய இவ்வேலை முருகன் சிவனிடமிருந்து பெற்றதாகவும் கூறுவர்.

செவ்வேளின் பிற படைக்கலங்களாக வில், தோமரம், வாள், ஈட்டி, கோடரி, கணிச்சி, மழு, பரிசை ஆகியவற்றைச் சங்கப் பனுவல்கள் சுட்டும்.[72] மேற்சுட்டிய கருவிகளில் அம்புகொண்டு முருகன் அவுணரை அழித்த செய்தியைத் தீப்புத் தோளார் மட்டும் குறிப்பிடுவர்.[73] இறுதி ஆயுதமாகவே முருகன் வேலைப் பயன்படுத்தியிருப்பினும் கணைப்போரே அவன் மிகுதியாக இயற்றியமையினைக் கந்தபுராணம் பாரித்துரைப்பதும் ஈண்டு நினையத்தகுவது.

## 10. கொடியும் ஊர்தியும்

கோழியும் மயிலும் முருகனுக்குக் கொடியாகத் திகழ்தலைச் சங்கப் பாக்கள் பல்வேறிடங்களில் சுட்டியுள்ளன.

''சேவலங் கொடியோன்'' [74], ''கோழி ஓங்கிய வென்றடு விறற் கொடி'', [75] ''வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ''[76] என வரும் பகுதிகளும், ''மணிமயிலுயரிய .... .... .... ஒண்செய்யோன்''[77], ''பல் பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய ஒடியா விழவின் நெடியோன்'' [78], ''பல்பொறி மஞ்ஞை வெல்கொடி'' [79] என வரும் பகுதிகளும் சேவலும் மயிலும் அவனுக்குரிய கொடி என்பதனை உணர்த்தும்.

களிறு, மயில், யாடு இம்மூன்றும் முருகற்கு ஊர்தியாகப் பயன் பட்டமையினைச் சங்கப்பாக்கள் மொழியும். ''கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு'', [80] ''பிணிமுக வூர்தி யொண்செய்யோன்'',[81] ''கால்கிளர்ந் தன்ன வேழம் மேற் கொண்டு''[82], ''ஊர்ந்ததை, எரி புரை யோடை யிடையிமைக்குஞ் சென்னிப் பொருசமங் கடந்த புகழ்சால் வேழம்'',[83] ''சேயுயர் பிணிமுகம் ஊர்ந்தமருழக்கி''[84], ''பிணி முகம் ஊர்ந்த வெல்போர் இறைவ'' [85] எனவும், ''விறல்வெய்யோன் ஊர்மயில்'', [86] ''விரைமயில்மேல் ஞாயிறு'' [87] எனவும், ''இருங்கண் வெள்யாட்டு எழில்மறி கொடுத்தோன்''[88] எனவும் வரும் சங்க

இலக்கியப் பகுதிகள் அவை மூன்றும் அவற்கு ஊர்தியாகத் துணை நின்றமையினைக் காட்டும். சிவன், திருமால், இந்திரன் மூவருக்கும் முறையே விடையும், கருடனும், யானையும் கொடிகளாகவும், ஊர்திகளாகவும் விளங்கியதனைச் சங்கப் புலவர்கள் சுட்டியது போல்[89] செவ்வேளுக்கு மயில் அவ்விரு திறமாகவும் பயன்பட்டமையினைச் சுட்டியுள்ளனர்.

களிற்றை ஊர்தியாகக் கொண்டமையினைக் கந்தபுராணம் யாண்டும் குறிப்பிடவில்லை. மயிலை ஊர்தியாகக் கொண்டமையே பலவிடங்களில் விளக்கப்படுகின்றது. ஓரிடத்தில் மட்டிலும் முருகனைப் "பிணிமுகம் உயர்த்து நின்ற பெருந்தகை" (4:13:453) எனக் கச்சியப்பர் சுட்டுதலை மயிலையும் அவன் கொடியாகக் கொண்டவன் என்ற சங்ககாலப் புராணக்கருத்தின் ஊற்றமாகக் கொள்ளலாம்.

தன்னிடம் தோற்ற இந்திரனிடமிருந்து மயிலையும் அனலனிடமிருந்து கோழிச் சேவலையும், கூற்றுவனிடமிருந்து யாட்டையும் முருகன் பெற்றதாகப் பரிபாடல் உணர்த்தியமையை முன்னர்க் கண்டோம். கச்சியப்பர் முருகன் அவற்றைப் பெற்ற திறத்தை வேறுபட மொழிகுவர். "முருகன் சூரபன்மனோடு கடும்போர் புரிகையில் இந்திரன் மயில் வடிவெடுத்து அவனைத் தாங்கினான்" (4:13:378-382) என்றும், "கந்தனின் தேர்க்கொடி சூரபன்மனால் அறுந்து வீழ்ந்த பொழுது, தேவர்களின் வேண்டுகோளை ஏற்று அனலன் கோழிக் கொடியாகி அண்டம் வெடிபட ஆர்த்தான்" (4:13:206) என்றும் கந்தபுராணம் நுவலும் செய்தி பரிபாடலுடன் ஒரு திறத்தில் ஒத்திருப்பினும், கந்தன் அவைகளைப் பெற்றமுறை வேறுபட்டுள்ளது. தோற்றவர் அஞ்சி அளிக்கும் நிலையினின்றும் வளர்ந்து அன்புடன் உதவும் நிலையினைக் கந்தபுராணத்தில் காண்கின்றோம். கூற்றுவன் வெள்யாடு நல்கிய செய்தியை, நாரதர் வேள்வியில் தோன்றிய யாடு உலகவர்க்குத் தீங்கு செய்ய, அதனை அடக்கி முருகன் ஊர்தியாகக் கொண்டதாகக் கந்தபுராணம் மாறுபட்டும் விரித்தும் உரைக்கும் (1:15).

## 11. திருவடி

முருகனை அழகின் உருவாகக் கண்ட சங்கப் புலவர்கள் அவன் திருவடியைத் தாமரையோடு ஒப்பிட்டு இன்புறுவர்.[90] தம்மை

அடைந்த அன்பர்களைப் பிறவிக்கடலில் வீழாமல் தாங்கும் பொருட்டு அவர் தம் அறியாமையைக் கெடுக்கும் திருவடி என்றும் போற்றுவர்[91]. செந்நிறம் வாய்ந்ததும், தோலால் தைத்த முதுகுடையதும், பீலிப் போழால் அலங்கரிக்கப்பட்டதுமாகிய செருப்பினை அத்திருவடியில் அணிந்துள்ளமையினை நல்லச்சுதனார் நயம்பட உரைப்பர்.[92] "தெய்வங்கட்கும், கடவுளர்க்கும் காலிற்குரிய செருப்பு முதலிய அணிகள் ஆகமங்களில் கூறப்படவில்லை. வடநாட்டிலும் சூரியனுக்கு எடுக்கப் பெற்ற சிலைகளில் காலில் செருப்பு போன்ற அணிகலனைக் காணலாம். இது பாரசீகத் தொடர்பால் ஏற்பட்டது" என்றும், "ஆனால் முருகன் காலுக்கு (பரிபாடலில்) செருப்பு கூறியது வியப்பான செய்தியாகும்," என்றும் நவில்வர்.[93] கார்த்திகேய வழிபாடு சூரிய வழிபாட்டிலிருந்து கிளைத்ததாக நம்பும் வடநாட்டுக் கொள்கையின் தாக்கமாக இதனைக் கருதலாம்.[94] கச்சியப்பர் தம் நூலுள் முருகன் செருப்பு அணிந்தமையினை யாண்டும் கூறவில்லை என்பது கருதத்தக்கது.

## 12. அகவாழ்வு

முருகனது மனைவியராக வள்ளியம்மை, தெய்வயானை இருவரும் திகழ்வர். வள்ளி களவுநெறியில் உடன்போக்குச் சென்றமையினை அம்மள்ளனார் உவமைமுகத்தான்,

> "என்னுள் வருதியோ நன்னடைக் கொடிச்சி
> முருகு புணர்ந் தியன்ற வள்ளிபோல"[95]

எனக் குறிப்பிடுவர்.

> "அறுமுகத் தாரிரு தோளால் வென்றி
> நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே"[96]

என்றும்,

> "குறப்பிணாக் கொடியைக் கூடியோய்"[97]

என்றும் முருகன் வள்ளியை மணந்த செய்தி கூறப்படுகிறது. எனவே முருகன் தமிழ் நெறியாம் களவு நெறியில் உடன்போக்கு முதலியன நிகழ்த்தி வள்ளியை மணந்த செய்தியினை உணருகின்றோம்.

கச்சியப்பர் தமிழின் அகமரபுகளைத் தழுவி இயற்கைப் புணர்ச்சி, முன்னுறவுணர்தல், தோழியிற் கூட்டம் முதலியன அமை

யுமாறு வள்ளியம்மை திருமணப் படலத்தை அமைத்துச் சங்க நெறியைப் போற்றியுள்ளார். முந்நான்கு தோளும், முகங்களோர் மூவிரண்டும் கொண்டு முருகன் வள்ளியைக் கலந்து கருணை செய்த வாற்றைக் (6: 24: 115, 116) கச்சியப்பர் விளக்கும் பகுதி "அறுமுகத் தாறிரு தோளால் வென்றி நறுமலர் வள்ளிப்பூ நயந் தோயே" என்ற கேசவனாரின் பரிபாடல் பகுதியைத் தழுவி அமைத்தது போல் காணப்படுகின்றது.

*"மறுவில் கற்பின் வாணுதல் கணவன்"*[98]
*"தாவில் கொள்கை மடந்தையோடு*
*சின்னாள் ஆவினன்குடி அசைதலுமுரியன்"*[99]

என வரும் நக்கீரர் வாக்கால் அவன் தெய்வயானைக்கும் கணவன் என்பது பெறப்படும். அத் தெய்வயானை 'இந்திரன் மகள்' என்றும் வள்ளியைத் தன் கணவன் களவில் கூடியதுணர்ந்து அவள் கண்கள் திருப்பரங்குன்றத்தில் திகழும் முகில் போல் நீரைப் பொழிந்தது என்றும் குன்றம்பூதனார் பாடுவர்.[100] 'தெய்வயானையின் ஊடல் தீர்த்து முருகன் கூடியதுணர்ந்த வள்ளி, முருகன் கைகளைக் கட்டி, கோதையையே கோலாகக் கொண்டு புடைப்ப, அதனைக் கண்டு தெய்வயானை, வள்ளி இவ்விருவரின் மயிலும், கிளியும் பொருவதாகவும், இருவரின் தோழியரும் மாலை சுழற்றியும் பந்தெறிந்தும் பொருவதாகவும், இறுதியில் தெய்வயானையின் தோழியர் வள்ளியின் தோழியரோடு பொரவியலாது சுனையில் கரந்து நீராடியும், வண்டுகளாய் முரண்றும், மயிலாய் ஆடியும், குயிலாய்க் கூவியும் உயிர் பிழைத்தனர் என்றும் உரைத்து, இப்போட்டிப் போரில் வள்ளியின் பக்கலினரே வெற்றியுற்றமையினை அவரே நயம்பட எடுத்துரைப்பர்.[101] "துறக்கத்தவள்"[102] "ஐயிரு நூற்று மெய்ந்நயனத்தவன் மகள்"[103] போன்ற பண்புப் பெயர்களானன்றி வள்ளியைக் குறிப்பிடுதல் போல் தெய்வயானை என்ற இயற்பெயரால் சங்கஇலக்கியம் குறிப்பிடவில்லை என்பது ஈண்டு நினையத்தகுவது. வள்ளியையும், தெய்வயானையையும் விட்டுக்கொடுக்காத முரண்பட்ட மாந்தர்களாகக் காட்டும் சங்க இலக்கியப் போக்கினின்றும் வேறுபட்டு இருவரையும் இணைந்த உள்ளம் கொண்டோர்களாகக் கச்சியப்பர் படைத்துக் காட்டுவர். முருகன் வள்ளியை உடன் கொண்டு கந்த வெற்புச் சென்றகாலை, தெய்வயானை, வள்ளியை எடுத்துப் புல்லி "இன்றுனைத் துணையாய்ப் பெற்றேன்" (6:24:254) என்று புகலுவதாகக் கூறிக் கந்த

வேளின் அகவாழ்வை சிக்கலற்றதாகவும், அமைதி நிறைந்ததாகவும் காட்டுவர் கச்சியப்பர்.

பரங்குன்றில் வள்ளியையும், வானுலகில் தெய்வயானை யையும், முருகன் மணந்ததாகவும்,[104] தேவர்கள் எய்தும் நுகர்ச்சியை மண்ணுலகத்தவரும் எய்துகவெனத் தந்தது முருகன் பரங்குன்றில் வள்ளியை மணந்த செயல்[105] என்றும் பரிபாடற் புலவர் பாடுவர். கச்சியப்பர் விண்ணவரும், மண்ணவரும் ஒருங்கு நுகரும் வண்ணம் அவ்விருவர் திருமணமும் பரங்குன்றிலும் வேடர் சிற்றூரிலும் நிகழு மாறு அமைத்து ஆண்டவன் அருள்நிலைக்கு விண்ணவரும், மண் ணவரும் ஒரே தன்மையர் என்னும் கருத்தைப் புலப்படுப்பர்.

## 13. முருகன் முழுமுதற்றன்மை

சங்ககால மக்களால் வழிபடப்பெற்ற பிற கடவுளரினும் முருகன் முதன்மையுடையவன் என்னும் கருத்துப் புலப்படும் வண் ணம் பல புலவர்கள் முருகனைப் போற்றியுள்ளனர். 'புள்ளணி நீள் கொடிச் செல்வனும்', மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்', 'நூற்றுப் பத்தடுக்கிய நாட்டத்தை யுடையோனும்', பிறரும் நான் முகனுக்கேற்பட்ட சாபத்தை நீக்குவான் வேண்டி முருகனைக் காண வந்தனர் என்று நக்கீரரும்,[104] 'திருமால், சிவன், பிரமன் ஆகிய மூவரும், ஆதித்தர் பன்னிருவரும், மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், உருத்திரர் பதினொருவரும், திக்குப்பாலகர் எண்மரும், இவரல்லாத பிற தேவர்களும், அசுரர்களும், வேதம் உணர்ந்த தவ வொழுக்கத்தினரும் முருகனைக் காணப் பரங்குன்றம் அண்மினர்' என்று நல்லந்துவனாரும்[107] மொழிவதாலும் மூவரிலும் முதன்மை யுடையவன் முருகன் என்ற கருத்தை உணர்கின்றோம். 'நல்வினை, தீவினை ஆகியவற்றின் பயனை நுகரச் செய்பவனாகவும்',[108] ஏழுலகினையும் ஆள்பவனாகவும்',[109] 'இவ்வுலகத்திற்கு வரம்பாகத் திகழ்பவனாகவும்'[110] செவ்வேளைப் போற்றி அவனது முழுமுதற் றன்மையை நிறுவுவர்.

கச்சியப்பர் முருகனது முதன்மையினையும், சிவனுக்கு மாறா காத நிலையில் அவனது முழுமுதற்றன்மையினையும் நூலின் பல் வேறிடங்களில் குறிப்பிடுவர். 'முருகன் முழுமுதற்றன்மை' என்ற பகுதியில் இஃது விரிவாக ஆராயப்படும்.

## 14. முருகன் உறையும் இடங்கள்

வருத்துதலையுடைய் முருகன் கோயில் ஒன்று "அணங்குடை முருகன் கோட்டம்"[111] என்று புகலப்படுகின்றது. முருகன் கோயில் கொண்டுள்ள செந்திலம்பதி, "திருமணி விளக்கின் அலைவாய்"[112] என்றும், "வெண்டலைப் புணரி அலைக்குஞ் செந்தில்"[113] என்றும் சுட்டப்பெறுகின்றது. பரிபாடல் திருப்பரங்குன்றத்தையும், திருமுருகாற்றுப்படை திருப்பரங்குன்றம் முதலிய அறுபடை வீடுகளையும் அவன் எழுந்தருளியிருக்கும் இடங்களாகப் பாடுகின்றன. இவையன்றி வெறியயர் களன், காடு, கா, துருத்தி, யாறு, குளம், சதுக்கம், சந்தி, கடம்புமரம், மன்றம், பொதியில், கந்துடைநிலை (ஆதீண்டுகுற்றி) ஆகிய இடங்களிலும் அவன் தோன்றுவான் என்று திருமுருகாற்றுப்படை மொழியும்.[114]

இவ்வாறு பலவிடங்களிலும் உறைபவனாயினும் அவன் விரும்பி உறையுமிடம் மலையே என்பதனை ஓதலாந்தையார், "முருகமர் மாமலை"[115] என்று சுட்டுவர். "இராப் பொழுதில் முருகன் கரத்தில் வேலேந்திக் குறிஞ்சி நிலத்தில் உலவுவதாகவும், அக்காட்சியைக் கண்ணுறின் முகமன் கூறிச் செந்தினையை நீரோடு தூவி அந்நெடுவேளைப் பரவுவர்" என்றும் அகநானூறு குறிப்பிடுதலால்[116] மலையே அவன் உலவுவதற்குரிய சிறப்புமிக்க இடம் என்பது போதருகின்றது.

முருகன் ஆடல் பயிலும்பொழுது அவன் உலவும் இடங்களை நக்கீரரின் ஆற்றுப்படை நெறியில்,

*"குளத்தினுல வும்நதி குறைந்திடு துருத்திக்*
*களத்தினுல வும்நிரைகொள் கந்துடை நிலைத்தாந்*
*தளத்தினுல வும்பனவர் சாலையுல வும்...."* (1 : 14 : 4)

என்று விளக்குவதோடு, சிவனுக்குரிய இடமாகக் கயிலை வெற்புத் திகழ்தல் போல் கந்தனுக்குரிய இடமாகக் கந்தவெற்பு விளங்குதலையும் கந்தபுராணம் சுட்டும். அன்றியும் அறுபடை வீடுகளும் காஞ்சி முதலிய பிற இடங்களும் அவன் வீற்றிருக்கும் இடமாகக் குறிப்பிடினும், செருத்தணி (திருத்தணி) மலையே அவனுக்குரிய சிறப்புமிக்க இடமாகப் பேசப்படும் **(6:24:219,221).**

# II

# சங்க இலக்கியத்தில் வழிபாட்டு முறைகள்

சங்க காலத்தில் நிலம் பற்றி வாழும் தமிழ்ப் பழங்குடிமக்கள் முருகனை வழிபட்ட முறைக்கும், நாகரிக மக்கள் (நகரத்தைச் சார்ந்தோர், ஆரியப் பண்பாட்டை ஏற்றுக்கொண்டோர்) வழிபட்ட முறைக்கும் வேறுபாடு காணப்படுகின்றது. முன்னவர் வழிபாட்டில் வெறியாடலுக்குரிய கடவுளாகவும், பின்னவர் வழிபாட்டில் மறைவழி நிகழும் வேள்வித் தெய்வமாகவும் முருகன் திகழ்கின்றான்.

## 1. வெறியாடல்

முருகன் பருவப் பெண்களுக்கு நோய் ஏற்படுத்துவதனையும் அந்நோய் தணிவினையாம் வெறியாட்டினையும் பல பாக்கள் நுவல் கின்றன. பரிபாடல் முருகனை 'வெறி கொண்டான்'[117] என்று சுட்டும். வெறியாட்டு நடுஇரவிலும்[118] சில நேரங்களில் இரவு முழுவதும்[119] நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. குறிஞ்சித் தெய்வத்தின் வழிபாடு அத்திணைக்குரிய சிறுபொழுதில் நிகழ்வது இவண் கருதத்தக்கது.

இல்லத்தின் முற்றத்தில் மணல் பரப்பி,[120] செந்நெல்லின் வெண் பொரி சிதறி [121] பொன்னகர் வரைப்பாகத்[122] திகழும் இடமே வேலன் வெறியாட்டிற்குரிய இடமாகும்.

## 2. படையல் உணவு

முருகனுக்குப் படையல் உணவாக உயிர்ப்பலி கொடுத்தல் மிகுதியாக நவிலப்படும். ஆட்டுக்கிடாய், சிறுமறி ஆகியவற்றின் கழுத்தை அறுத்துத் தினை அரிசியை அவற்றின் குருதியில் தூவி, பிரப்பில் வைத்துக் கலந்து சிறுபலியாகக் கொடுப்பர்.[123] பல்வேறு நிறமுடைய சோறும் பலியாகப் படைக்கப்படுவது உண்டு.[124]

## 3. இசையும் கூத்தும்

கானவர் கிளையுடன் கள்ளருந்தி, தொண்டகப்பறை முழக்கி, மகளிரோடு குரவைக் கூத்தாட வேலனும் (தெய்வம்ஏறப்பெற்றவன்)

அம்மகளிரைத் தழுவிக் கொண்டு ஆடுவான்.[125] பல்வேறு வாச்சியங்கள் ஒலிக்க முருகனது கடம்பும் களிறும் பாடி, பனந்தோடும் கடம்ப மாலையும் கையிற் கொண்டு அசைந்தசைந்து இரவெல்லாம் ஆடுவர்.[126] சில இடங்களில் முருகு மெய்ப்பட்ட புலைத்தி தாவிக் குதித்து ஆடுதலும் உண்டு.[127]

## 4. சடங்குகள்

கோழிக் கொடியை நாட்டி, நெய்யோடு வெண்சிறுகடுகையும் அப்பி, மந்திரம் சொல்லுதல்,[128] வேலிற்கு மாலை சூட்டுதல்,[129] குறிஞ்சிப் பூவைக் கடம்பமரத்தில் சூட்டுதல்,[130] பச்சை மஞ்சளுடன் சந்தனம் முதலிய நறுமணப் பொருளைத் தெளித்து நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடுதல்[131] முதலிய சடங்குகள் அவ்வெறியாட்டின்பொழுது நிகழ்ந்தன. வெறியாடும் வேலன் மாறுபாடு கொண்ட நிறத்தினையுடைய இரு உடைகளை உடுத்தி, செந்நூலினைக் காப்பாகத் தரித்துக்[132] கடம்பமலரையும்[133] சந்தனத்தையும் அணிந்தும்[134] கழங்கினைக் கொண்டு ஆய்ந்து கன்னத்தைக் (தாயத்தை) கையில் ஏந்தி முருகே பெண்ணின் நோய்க்குக் காரணம் என்பான்.[135] சிலவேளைகளில் மறியின் குருதியைத் தலைவியின் நெற்றியில் தடவுதலும் உண்டு.[136] இவ்வாறு நிகழ்த்திப் பெண்ணின் நோய் தணிய முருகனை வேண்டுவர். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இத்தகைய முருக வழிபாட்டு முறையினை மிகப் பழமையானது என்றும், சமுதாயக் கூட்டு வாழ்க்கையின் அடிப்படையில் தோன்றியது என்றும் கூறுவர்.[137]

கச்சியப்பர், சிறுகுழந்தை (வள்ளி) கிடைக்கப் பெற்ற நம்பிராசன் மகிழ்ந்து தன் தெய்வத்திற்கு வழிபாடு நிகழ்த்தியமையினை,

*''தொண்டகம தார்ப்பக் குரவைமுறை தூங்குவித்தான்''*
(6 : 24 : 39)

என்றும்,

*''காலை யதற்பின் கடவுட் பலி செலுத்தி*
*வாலரிசி மஞ்சள் மலர்சிந்தி மறியறுத்துக்*
*கோல நெடுவேற் குமரன்விழாக் கொண்டாடி*
*வேலனை முற்கொண்டு வெறியாட்டு நேர்வித்தான்''*
(6 : 24 : 40)

என்றும் குறிப்பிடுவதோடு வள்ளியின் வாடிய மேனி வருத்தம் கண்ட அந்நம்பிராசன் தேவராட்டியையும் வெறியாட்டாளனையும் அழைத்து வந்து வெறியயர்வித்ததாகவும், (6:24:155), அவ்வாறு வெறி யயர்கின்ற காலை வேலன் (வெறியாட்டாளன்) மேல் குமரவேள் வந்து தோன்றியதாகவும் (6:24:156) உரைத்துத் தமிழ்ப் பழங்குடி மக்களின் முருக வழிபாட்டு முறையினை ஏற்ற இடத்தில் அமைத்துப் பழந்தமிழ்ப் பண்பாட்டைப் போற்றியுள்ளமை பாராட்டற்குரியது.

## 5. நாகரிகமக்கள் வழிபாடு

புகார் நகரத்து வணிகர், தெய்வங்களுக்கு அவி வழங்குவதிலும், அமரரைப் பேணுவதிலும், பகடு ஓம்புவதிலும் ஈடுபட்டுள்ளனர் என் பதனைப் பட்டினப்பாலை உணர்த்தும்.[138] இதிலிருந்து பார்ப்பனரின் ஆதிக்கம் நகரங்களிற் சிறப்புற்றிருந்ததை அறியலாம் என்பர்.[139] ஆரியக் கலப்பு வழிபாட்டில் அந்தணரும், வேள்வியும், மந்திரமும், சிறப்பிடம் பெறும். நாற்பத்தெட்டி யாண்டு பிரமசரியம் காத்த மறைவழி அந்தணர்களும், முத்தீச் செல்வத்து இருபிறப்பாளரும், முப்புரிநூல் தரித்தும், புலராக் காழகம் புலர உடுத்தியும், உச்சிக் கூப்பிய கையினராய், ஆறெழுத்து மந்திரத்தை மறைவாக ஒலித்துக் கொண்டு ஏரகத்துறையும் முருகனை மலரால் வழிபடுவர்.[140] முருக னைக் காணின் கைதொழுது பரவி, அவன் திருவடி தன் தலையில் படுமாறு வணங்கிப் பல்வேறு சிறப்புப் பெயர்களால் அவனை ஏத்தித் துதிப்பர்.[141] பரங்குன்றத்துறையும் செவ்வேளை வேள்வி இயற்றியும், அவி அளித்தும்,[142] மறை முழக்கியும், தெய்வப் பண்ணிசைத்தும்[143] வழிபடுவர். தீவர்த்தி, இசைக்கருவிகள், சந்தனம் முதலிய நறுமணப் பொருள்கள், கொடி ஆகியவற்றை ஏந்தி வழிபடுவோர் வர, வேலன் பூ, துகில், மணி, வேல் முதலியன சுமந்து வந்து கடம்பு மரத்தைத் துதித்துப் பாடுவான். அம்மரத்தின் அரைப்பகுதியில் வேலனால் சந்தனம் தெளிக்கப்பட்ட கிடாய், பலிக்கெனக் கட்டப்பட்டிருக்கும்.[144] பரங்குன்றில் பூசனை செய்வோர் எழுப்பும் அகிற்புகையினால் தேவரும் கண்ணிமைத்து அகன்றதாக நல்லழிசியார் பாடுவர்.[145] முருகனுக்கு நகரங்களில் விழாவெடுப்பதைக் கலித்தொகையும் குறிப்பிடும்.[146] முருகனது ஊர்தியாகிய களிற்றின் கவள மிச்சிலை உண்ணின் கன்னிப் பெண்கள் நல்ல கணவரை எய்துவர் என்றும், மணந்த பெண்கள் கணவன் தண்ணளியைக் குறையாது பெறுவர் என்றும் கருதி

பரங்குன்றத்துறையும் யானையை இருசாராரும் வழிபட்டுப் பூசை செய்வர்.[147] தமிழ்ப் பழங்குடிமக்கள் வழிபாட்டினும், நாகரிக மக்கள் வழிபாட்டில் உயிர்ப்பலி அருகியே காணப்படுகின்றது. அறிஞர்கள் அதனை நாகரிக வழிபாடாகக் கருதவில்லை என்பதனை "அவி சொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத் துண்ணாமை நன்று" என்ற வள்ளுவத்தால் உணரலாம். சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கால் உயிர்ப்பலி முருகவழிபாட்டிலும் குறைந்து வந்துள்ளமையினைக் காண்கின்றோம். நாரதன் இயற்றிய வேள்வியில் தோன்றும் ஆட்டினை,

*"அங்கிதனில் வந்ததகர் ஆற்றுமகந் தன்னில்*
*நங்களின மேபலவும் நாளுமடு கின்றார்*
*இங்கிவரை யானடுவன் என்றிசைவு கொண்டே*
*வெங்கனலை யேந்துபரி மீதெழுதல் போலும்"*

(1:15:3)

என்று தற்குறிப்பேற்றிப் பாடுவர் கச்சியப்பர். இதனால் இறைவழிபாட்டில் உயிர்க்கொலை புரிதல் நாகரிக வழிபாடன்று என்பது கந்தபுராண ஆசிரியரின் உட்கோள் என்பது புலப்படும்.

## 6. வேண்டலும் அருளலும்

பழங்குடி மக்களின் வழிபாட்டில் முருகன் இடுக்கண் தருபவனாகவும், அதனை நீக்குதற்கே அவனுக்கு வெறியாட்டெடுத்து வேண்டுவதாகவும் உணர்கின்றோம். நாகரிக மக்கள் வழிபாட்டில் கனவிற் கண்ட காதலரை நனவிற் பெறவும், கருவயிறு வாய்க்கவும், மழை வளம் சுரக்கவும் வேண்டியதாகக் காண்கின்றோம்.[148]

கந்தனுக்குரிய சிறப்பு நாட்களில் நோன்பிருந்து வழிபட்டவர்களையும் அதனால் பயனுற்றவர்களையும் குறிப்பிட்டு, வேண்டலையும் அருளலையும் கந்தபுராணத்தில் உள்ள கந்தவிரதப்படலம் (6:23) விளக்கமாக இயம்பும்.

பரிபாடற் புலவர்கள் செவ்வேளின் திருவடியிலே உறைதலை அன்புடன் வேண்டுவதோடு,[149]

*"…. …. …. …. யாஅ மிரப்பவை*
*பொருளும் பொன்னும் போகமும் மல்ல நின்பால்*
*அருளு மன்பு மறனு மூன்றும்*
*உருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே"*[150]

என்றும் வேண்டுவர். இத்தகைய வேண்டுதல், ஆழ்வார், நாயன்மார் பாசுரங்களில் வரும் வேண்டுதல்களுக்கு ஊற்றமாகவும், உறுதுணையாகவும் அமைந்திருக்கலாம் என்பர்.[151]

பானுகோபனைப் பொருது வெற்றி பெற்ற வீரவாகுவின் செயல் கண்டு மகிழ்ந்த கந்தன், "வேண்டுவ விரைந்து கேண்மதி நல்குதும்"(4:11:151) என்றபொழுது,

*"கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்*
*மேலை இந்திரன் அரசினைக் கனவினும் வெஃகேன்*
*மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்*
*சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்"*
(4:11:154)

என்று வேண்டியதாகக் கச்சியப்பர் மொழிதல் மேற்சுட்டிய கடுவனிளவெயினனாரின் வேண்டுதலைத் தழுவி அமைத்தது போல் காணப்படுகின்றது.

தம்மை அடைந்த அன்பர்களைப் பிறவிக்கடலில் விழாமல் தாங்கும் பொருட்டு அவர்களிடத்துள்ள அறியாமையினைக் கெடுக்கும் திருவடியையுடையவனாகவும்,[152] தன் திருவடியை நினைந்து வந்தோர்க்கு அணங்குசால் வடிவத்தை மறைத்து மணங்கமழ் தெய்வத்து இளநலன் காட்டி 'அஞ்சல் ஓம்புமதி' என்று ஆறுதல் மொழி புகன்று அடைக்கலம் தருபவனாகவும்,[153] பெறலரும் பரிசிலாகிய வீடுபேற்றை நல்குபவனாகவும் நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் மொழிகுவர்.

அச்சம் தரும் அணங்குசால் வடிவினை (விசுவரூபம்) ஆணவத்தால் உந்தப் பெற்றோர்க்குக் காட்டுவதாகவும்,[155] மணங்கமழ் தெய்வத்து இளநலத்தை மகேந்திரச் சிறையில் வாடும் சயந்தனுக்குக் காட்டி அவன் அச்சத்தை நீக்கியதாகவும் (8:10:4-11) உரைத்து

ஆற்றுப்படை புகலும் முருகன் அருட்செயலைத் தம் நூலிலும் கச்சியப்பர் தழுவிக் கொள்வர். இருமை இன்பமும் தருபவனாகக் காட்டும் சங்க இலக்கியக் கோட்பாட்டை,

*"இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்*
*சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்"*
*(1 : பாயிரம்: 4)*

என நூற்பயனாகக் கூறிப் போற்றுவர்.

தேவரையும், அசுரரையும் ஒப்ப நினையாமல் தேவரைக் காத்து அசுரரை அழித்தலால் முருகன் நடுவுநிலையைக் கெடுத்தும், அன்பர்களுக்கு அருள் செய்பவன் என்ற கருத்தைத் திருமுருகாற்றுப் படை உணர்த்தும்.[156] கச்சியப்பர் நடுவுநிலை நீங்கினவனாகக் காட்டாமல் அசுரனாகிய தீயவனையும் தூயவனாக்கும் அருள் உள்ளம் கொண்டோனாக முருகனைப் படைத்துக் காட்டி (4:13:496) ஆண்டவன் அருளின் வலிமையினைப் புலப்படுப்பர்.

## III

## சிலப்பதிகாரத்தில் புராணக்கூறுகளும் வழிபாட்டு முறைகளும்

இளங்கோவடிகள் காப்பியத்தலைவனாம் கோவலனின் செந்நிறத் தோற்றத்திற்குச் செவ்வேளையும்,[157] காப்பியத் தலைவியாம் கண்ணகியின் விழிக்கு அறுமுகன் வேலினையும்[158] ஒப்பிட்டுரைத்தலால் முருகனைப் பற்றிய புராணக்கதைகள் சிலப்பதிகாரச் சமுதாயத்தினர்க்குச் சிறப்பாக அறிமுகமாகியிருந்தமையினை உணர்கின்றோம்.

கிரவுஞ்ச வெற்பினை முருகன் அழித்தமையினை,

*"கடல்வயி று கிழித்து மலைநெஞ்சு பிளந்தாங்*
*கவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்"*[159]

எனக் குறிப்பிடுதலால் அம்மலை கடலினுள் இருந்ததாக உணர்கின்றோம். மாதவியின் பதினொரு ஆடலைச் சுட்டும்போது,

*" .... .... மாக்கட னடுவண்*
*நீர்த்திரை யரங்கத்து நிகர்த்துமுன் னின்ற*
*சூர்த்திறங் கடந்தோ னாடிய துடியும்"*[160]

என்று குறிப்பிட்டுச் சூரனை வென்ற வெற்றிக் களிப்பால் அலையே அரங்கமாகக் கொண்டு முருகன் துடிக்கூத்து ஆடியதாகச் சுட்டுவர். இவ்விரு செய்திகளும் சங்க இலக்கியங்களிலும் கந்தபுராணத்திலும் காணப்பெறாதவை.

முருகன் மனைவியாம் வள்ளியைக் ''குறமகள்''[161] என்றும், அவன் கரத்தில் விளங்கும் 'சத்தி' ஆயுதத்தை 'உடம்பிடி'[162] என்றும் இளங்கோவடிகள் சுட்டுவர். அவன் எழுந்தருளியிருக்கும் இடங்களாகச் செந்தில், செங்கோடு, வெண்குன்று, ஏரகம் ஆகியவற்றையும்[163] புகார் நகரத்திலும் மதுரையிலும் அவனுக்குத் தனிக்கோயில்கள் இருந்தமையினையும், [164] அவன் 'சக்தி' ஆயுதமாகிய வேலுக்கென எடுத்த 'வேற்கோட்டம்' ஒன்று புகாரில் விளங்கியமையினையும் [165] இளங்கோவடிகள் குறிப்பிடுவர். வேலாயுதத்தை ஓர் கருவியாகக் காணாது 'உடம்பிடித் தெய்வ' மாகத் (4:13:487) காணும் கச்சியப்பர் நெறிக்கு இவ்வேற்கோட்டம் பற்றிய செய்தி ஊற்றமாக அமைந்திருக்கலாம்.

வழிபாட்டுக் கூறுகளில் வேலனை வேண்டி ஆடும் வெறியாடல் விளக்கமாக நவிலப்படுகின்றது.[166] வெறியாட்டின் போது நீலப்பறவை மேல் தங்கள் குலமகளாம் வள்ளியுடன் முருகன் வருவான் என்று நம்பியும், அவ்வாறு வரின் 'தலைவன்' களவு நெறி ஒரீஇ கற்பு நெறியில் தலைப்பெய்யவும், அயல்மணம் ஒழியவும் வரம் வேண்டி மலைமிசை வாழ்நர் அவன் அடிகளைத் தொழுவதாகவும் குன்றக் குரவையில் பாடுவர்.[167]

நெடுவேளுக்குரிய குன்றத்தின் மீதேறிச் சென்ற கண்ணகி வேங்கைமர நீழலில் நின்றதாகவும்[168] அவளைக் கண்ட மலைவாழ் மக்கள் ''வள்ளிபோல்வீர்' என விளித்ததாகவும் [169] அவளைத் தங்கள் குலத்தெய்வமாகக் கொண்டதாகவும்,[170] சங்க கால மக்கள் முருகனை வழிபட்டாங்குத் தொண்டகம் முழக்கியும், கோடு வாய்வைத்தும், கொடுமணி இயக்கியும், குறிஞ்சி பாடியும், நறும்புகை எடுத்தும் அவளை வழிபடுவதாகவும் மொழிவதுடன், காப்பியத்தின் இறுதியில் உள்ள வாழ்த்துக் காதையில், ''வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்''[172] என அப்பத்தினித் தெய்வத்தின் கூற்றாக உரைத்தலானும் குறிஞ்சித் தெய்வமான முருக வணக்கத்தோடு இணைத்தே இளங்கோவடிகள் காப்பியத் தலைவியாம் கண்ணகியைத் தெய்வமாக உயர்த்தியுள்ளமையினை உணர்கின்றோம். அடிகளார் புறச்

சமயத்தைச் சார்ந்திருப்பினும் தாம் பிறந்த மலைநாட்டிற்குரிய தமிழ்க் கடவுளாம் முருக வழிபாட்டோடு இணைத்துக் கண்ணகி வழிபாட்டை நிலைபெறச் செய்தமை உளங்கொளற்குரியது.

## IV

## திருமுறைகளில் புராணக் கூறுகள்

### 1. நால்வர் திருமுறைகள்

நாயன்மார்கள் நால்வரும் தங்கள் பாடல்களில் சிவனையன்றிப் பிற கடவுளரை யாண்டும் போற்றவில்லையாயினும், முருகன், விநாயகர் போன்ற தெய்வங்களைச் சிவனது மகன்மை உறவினைக் காட்டும் வகையில் பலவிடங்களில் சுட்டிச் சென்றுள்ளனர்.

சிவன் இமையவர்தம் பகையினை அழித்தற்காக அறுமுக யிறையை அருளினார்[173] என்றும், அவ்வறுமுகன் மயிலை ஊர்தி யாகக் கொண்டவன்[174] என்றும், சூரனைத் தடிந்தவன்[175] என்றும், வள்ளி முலை தோய்பவன்[176] என்றும், குறிஞ்சி நில மடவார் குறிஞ்சிப்பண் பாடி முருகனது பெருமைகளைத் துதிப்பர்[177] என்றும் சம்பந்தர் முருகனது புராணக் கூறுகளைக் குறிப்பிடுவர்.

கந்தன்,[178] அறுமுகயிறை,[179] இளங்குமரன்,[180] குமரவேள்[181] குமரன்,[182] சாமி,[183] சேந்தன்,[184] சேய்,[185] மயிலேறவன்,[186] முருகன்,[187] மைந்தன்,[188] வேள்[189] ஆகிய பெயர்களால் சம்பந்தர் முருகனைச் சுட்டுவர். இவரே முதன்முதலாகக் 'கந்தன்' என்ற பெயரால் முருகனைச் சுட்டுதல் கருதத்தகும். சேய்ஞலூரைச் "சேயடைந்த சேய்நலூர்"[190] என்று அடைகொடுத்துக் குறிப் பிடுவர். கந்தன் செந்தில் நோக்கி வருகையில் மண்ணியாற்றங் கரையை எய்தி தேவதச்சனால் ஒரு நகரம் நிறுவி அங்குத் தங்கி யிருந்தான் என்றும், அதனால் அந்நகரத்தைத் தேவர்கள் 'சேய்ஞ லூர்' என்று அழைத்தனர் (1:24) என்றும் கந்தபுராணம் விரித் துரைப்பதும் ஈண்டுக் கருதத்தக்கது.

அப்பர் தேவாரத்தில் சிவனார் மகன், சரவணத்தில் தோன் றியவன், ஆறுமுகமும் பன்னிரண்டு கண்களுமுடையவன், வேலைப் படையாகவும் கோழியைக் கொடியாகவும் மயிலை ஊர்தியாகவும் கொண்டவன், சூரபன்மனைக் கடலில் அட்டவன், செந்தில் வீற்

றிருப்பவன், வள்ளிமணாளன், சிவபெருமானை வழுத்துபவன் என முருகன் குறிப்பிடப் பெறுவன்.[191]

வேலன், அறுமுகன், கடம்பன், குமரன், கோழிக் கொடியோன், சரவணத்தான், மயிலூர்தி, முருகவேள் என்னும் பெயர்களால் முருகனை நாவரசர் சுட்டுவர்.[192]

சுந்தரர் தேவாரத்தில் உமையின் மகன்,[193] தாரகனைப் பொன்றுவித்தவன்,[194] கடலுள் மாவாகி நின்ற சூரனைக் காய்ந்தவன்,[195] அமரர் சேனைக்குத் தலைவன்,[196] யானை, மயில் ஆகியவற்றை ஊர்தியாகவுடையவன்,[197] வள்ளிக்குக் கணவன்,[198] வேலைப் படைக்கலமாகவுடையவன்,[199] பிரமன், திருமால் முதலியோருடன் கூடிச் சிவனைப் போற்றுபவன்[200] என முருகன் குறிப்பிடப் பெறுவன்.

சுந்தரர் முன்னவர் போன்றே முருகனைப் பல பெயர்களால் குறிப்பிடினும் செட்டியப்பன்[201] என்று புதுமையாகச் சுட்டியுள்ளார்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் சிவனை முருகனோடு இணைத்துக் 'குமரன்தன் தாதை'[202] என்றும் 'நல்வேலன் தாதை' என்றும்[203] குறிப்பிடுவர். அவரே திருக்கோவையாரில் வாரணத்தைக் கொடியாகவும் மயிலை ஊர்தியாகவும் கொண்டு வேலால் சூர் தடிந்தவன்[204] என்று சுட்டுவதுடன், சங்க இலக்கிய நெறியில், தலைவியின் நோய்க்கு முருகனே காரணம்[205] என்றும் நவில்வர்.

## 2. ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பாவாகிய ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள், முன்னோர் மரபினை ஒட்டி முருகனது புராணக் கூறுகளைச் சுட்டுவதோடு புதியனவாகக் கங்கைமைந்தன்,[206] திருமால்மருகன்,[207] தெய்வயானை கணவன்,[208] அசுரர் மாள்விற்காக உழிஞை சூடி வானமர் விளைத்த தாளாளன்,[209] வில்லினைப் படையாகக் கொண்டவன்,[210] குராமர நீழலில் வீற்றிருப்பவன்[211] என முருகனைக் குறிப்பிடுவர். "சுப்பிரமணியன்"[212] என்ற பெயரால் முருகன் முதன் முதலாகச் சுட்டப்படுவது இத்திருமுறையில்தான். முருகன் மீது பாடப்பெற்ற சேந்தனாரின் திருவிடைக்கழித் திருவிசைப்பா இத் திருமுறையில் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

### 3. பதினோராம் திருமுறை

இத்திருமுறையிலுள்ள திருக்கயிலாய ஞானஉலா, திருக் கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, திருத்தொண்டர் திருவந்தாதி முதலிய நூல்களில் முருகனது மரபு வழிப்பட்ட புராணக்கூறுகள் இடம்பெறுகின்றன. நக்கீரரின் திரு முருகாற்றுப்படை இத்திருமுறையில் சேர்த்திருப்பது குறிப்பிடத் தக்கது.

''முருகனுக்குச் சிவன் கோயில்களில் முக்கிய இடம் அளிக் கப்பட வேண்டும் என ஆகமங்கள் வலியுறுத்தியதால் முருகன் சைவ உலகில் பெருங்கடவுளாகத் திகழ்ந்தான்.[213] அதனால் அக் காலத் தேவையினையுணர்ந்து சிவனையன்றிப் பிற கடவுளரைப் போற்றாத சைவத் திருமுறைகளில் சேந்தனாரின் திருவிடைக்கழித் திருவிசைப்பாவும், நக்கீரரின் திருமுருகாற்றுப்படையும் இணைக்கப் பட்டுள்ளன என்று நாம் கருதலாம்.

### 4. பெரிய புராணம்

பன்னிரண்டாம் திருமுறையாக விளங்கும் இப்புராணத்துள் சுந்தரரின் அழகுமிகு தோற்றம் ''முன்னேவந் தெதிர் தோன்றும் முருக''னோடு ஒப்பிடப்பெறும்.[214] தூமணித் தொட்டிலில் தவழும் சம்பந்தரைத் தாமரை மிசை விளங்கும் இளமுருகனாகச்[215] சேக்கிழார் காண்பர். ஒட்டக்கூத்தர், அருணகிரியார் போன்றோர் திருஞான சம்பந்தரை முருகனின் அவதாரமென வெளிப்படையாகப் பாடுதற்குச் சேக்கிழாரின் இக்குறிப்பினை நாம் முதலாகக் கருதலாம். முருகன் கிரவுஞ்சமலையினை அழித்துத் தேவர்களைக் காத்தமையினைக் கண்ணப்பநாயனார் புராணத்தும், சண்டேசுரநாயனார் புராணத்தும் குறிப்பிடுவர்.[216] பிள்ளைக்கறி யளித்த சிறுத்தொண்டர்க்கு அருள் வழங்க வரும் இறைவனை ''மலை பயந்த, தையலோடுஞ் சர வணத்துத் தனய ரோடுந் தாம் அணைவார்''[217] எனப் பாடித் தாய் தந்தையரின் நடுவில் திகழும் கந்தன் வடிவமாகிய சோமாக்கந்த வடிவத்தை நினைவுறுப்பர். சண்டேசுர நாயனார் பிறந்த மண்ணி யாற்றங்கரையிலுள்ள சேய்ஞலூரைச், ''சேந்தன் அளித்த திரு மறையோர் மூதூர்''[218] என்று கந்தபுராணக் குறிப்புத் தோன்ற வுரைப்பர். வேடர்க்கதிபதியாம் நாகன், மகப்பேறு வேண்டிப் பண்டைய வெறியாடல் முறையில் முருகவேளுக்குக் குரவை தூங்கப் பெருவிழா

எடுத்தமையினைக் கண்ணப்பநாயனார் புராணத்தில் விளக்கமாக மொழிவர்.[219]

சங்க காலத்தில் செவ்வேள் பிற கடவுளரினும் தலைமையுடையவனாகத் திகழ்ந்தமையினை முன்னர்க் கண்டோம். திருமுறைகளில் சிவனது தலைமை தோன்றுமாறு சிவனையே நாயன்மார்கள் போற்றிப் புகழுதலாலும், சிவனைப் போற்றும் கடவுளர் வரிசையில் முருகனையும் சேர்த்து அப்பரும், சுந்தரரும் பாடுதலாலும் பத்தி இயக்கம் தோன்றி வளர்ந்த காலச் சூழ்நிலையில் நாகரிக மக்கள் வழிபாட்டில் முருகன் தலைமையிடம் பெறவில்லை என்பது புலனாகிறது. சமண எதிர்ப்பு இயக்கமாக இப்பத்தி இயக்கம் முனைந்து செயற்பட்ட பொழுது சிவனையே தலைமைக்கடவுளாகக் கொண்டதில் வியப்பில்லை. அதே வேளையில் வேடுவர் போன்ற தமிழ்ப் பழங்குடி மக்கள் வழிபாட்டில் முருகன் தலைமையெய்தியிருந்தமையினைச் சம்பந்தர், சேக்கிழார் ஆகியோரின் திருமுறைகளில் காணும் முருக வழிபாட்டுக் கூறுகளால் உணர்கின்றோம். சைவ உலகம் காலப்போக்கில் தமிழ் வழியிற்றோன்றிய முருகனை முழுதும் ஒதுக்க முடியவில்லை என்பதனைச் சேந்தனாரின் திருவிடைக்கழித் திருவிசைப்பாவும், நக்கீரரின் திருமுருகாற்றுப்படையும் திருமுறைத் தொகுப்பில் சேர்ந்தமையால் உணரலாம். திருமுறைகளில் குறிப்பிடப்பெற்றுள்ள சோமாக்கந்த வடிவமும், முருகனைச் சுட்டுகின்ற 'கந்தன்' முதலிய பெயர்களும் கச்சியப்பரைப் பெரிதும் கவர்ந்துள்ளமையினைக் காண்கின்றோம்.[220]

## V

## சிற்றிலக்கியங்களில் புராணக் கூறுகள்

முந்து நூற்களில் முருகனது புராணக்கூறுகளை விரித்தலில் பரிபாடலுக்கு அடுத்த நிலையில் கல்லாடம் சிறப்பிடம் பெறும். சிற்றிலக்கியங்களில் கந்தனுக்கு வாழ்த்துச் சொல்லும் முதல் நூலாகவும் இந்நூல் விளங்குகின்றது.

சரவணத்துத் தோன்றிக் கார்த்திகை மாதர் அறுவரிடம் முலையுண்ணல்,[221] நாரதர் வேள்வியில் எழுந்த தகரினை ஊர்தியாகக் கொள்ளல்,[222] "ஓம்" எனும் பிரணவப் பொருள் அறியாத நான்முகனைச் சிறை வைத்தல்,[223] சிவனும், தேவர்களும் வேண்ட அவனைச் சிறை விடுத்தல்,[224] சிவனாகிய தந்தைக்குப் பிரணவப் பொருள்

உரைத்தல்,[225] அகத்தியர்க்கு மறைப்பொருள் விரித்தல்,[226] உமையிடமிருந்து 'சத்தி'யாகிய வேற்படையினைப் பெறுதல்,[227] சிங்கமுகனைப் பொருதுவேறல்,[228] மாவடிவாகிய சூரன் வேலால் இருகூறுபட்டு விழ, வீழ்ந்த கூறிரண்டும் மயிலாகவும் சேவலாகவும் எதிர்த்து வர, அவைகளை முறையே ஊர்தியாகவும், கொடியாகவும் கொள்ளல்,[229] வணிகர் குடியில் தோன்றி இறையனாரின் அகப்பொருட்குப் பரணர் முதலோர் கேட்பப் பொருள் விரித்தல்[230] ஆகிய முருகனைப் பற்றிய புதிய புராணக் கூறுகளைக் கல்லாடர் குறிப்பிடுவர். சங்க காலத்திற்குப் பிறகு கல்லாடர் காலத்திற்றான்[231] (பதினொராம் நூற்றாண்டு) முருகனது புராணக்கூறுகள் நன்கு வளர்ந்துள்ளமையினைக் காண்கின்றோம்.

உமையிடமிருந்து வேலை முருகன் பெற்ற செய்தியைச் சிவனிடமிருந்து பெற்றதாகக் கந்தபுராணம் மாற்றியுரைக்கும் (1:18:38). உருத்திரசன்மனாய்த் தோன்றிய முருகனே இறையனார் களவியலுக்குப் பொருள் புகன்றதாக உரைக்கும் கல்லாடர் கருத்தைச் சற்று மாற்றிப் பலருரைத்த அக்களவியலின் உண்மைப் பொருளை நிறுவிக் காட்டினன் (4:13:261) என்று கந்தபுராணம் நக்கீரர் உரை வழி நின்று உரைக்கும். இவ்விரு செய்திகளைத் தவிர பிறவனைத்தையும் கந்தபுராணத்தில் மாற்றமின்றிக் காணலாம்.

ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் முருகனை வாழ்த்தும்பொழுது, 'சூரபன்மனுக்கு மறைவாய் வந்த மலையின் மார்பினையும், சூரபன்மனையும் ஒக்க ஒரே காலத்தில் ஊடுருவுமாறு வேலால் பொருதவன்' [232] என்றும், கோயிலைப் பாடிய பகுதியில், ''எழுமலை கொல்லும் அசனி'' [233] என்றும் முருகனைச் சுட்டுவர்.

இது தாரகனுக்கு உதவியாயிருந்த கிரவுஞ்ச மலை அன்றென்றும், சூரனுக்குக் காவலாகி எப்பொழுதும் மறைந்திருந்து துணை செய்த ஏழு மலைகள் என்றும், சூரனையும் அம்மலைகளையும் ஒரே காலத்தில் முருகவேள் வேலால் அழித்தனன் என்றும் வ. சு. செங்கல்வராயபிள்ளை கருதுவர். [234] அருணகிரியாரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு, ''கிளைப்பட்டெழுசூர் உரமுங்கிரியும் தொளைபட்டுருவத் தொடுவேலவனே''[235] என்று கந்தர் அனுபூதியில் பாடுவர்.

கோயிலைப் பாடிய பகுதியில் மலைமகள், சம்பந்தரின் வரலாற்றினைக் கலைமகளிடம்,

"வருகதை தெய்வமகளென் மருமகள் வள்ளிவதுவை
மனமகிழ் பிள்ளைமுருகன் மதுரையில் வெல்லுமினிய
தொருகதை சொல்லு"[236]

எனக் கேட்டதாகப் பாடி முருகனே சம்பந்தராய்த் தோன்றினார் என்ற கருத்தை ஒட்டக்கூத்தர் வற்புறுத்துவர். அருணகிரியாரும் திருப்புகழில்,

"தம்பந்தம றத்தவ நோற்பவர் குறைதீரச்
சம்பந்தனெ னத்தமிழ் தேக்கிய பெருமாளே"[237]

என்றும், பகழிக்கூத்தரும் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழில்,

"கலைதெரி புகலி வளமுற மருவு கவுணிய வருக"[238]

என்றும் இக்கருத்தைப் பின்பற்றி மொழிவர்.

சூரனுக்குத் துணையாய் நின்ற ஏழு மலைகளையும் கந்தன் வேலால் தடிந்தமை, முருகனே சம்பந்தராய்த் தோன்றி தமிழ் வளர்த்தமை ஆகிய இருபுராணக் கூறுகளையும் முன்னூல்களும், பின்னூல்களும் வலியுறுத்தினும் கச்சியப்பர் தம் நூலுள் யாண்டும் குறிப்பிடவில்லை. 'திருமுருகனே திருஞானசம்பந்தராக வந்து பிறந்தான்' என்று கூறப்பெறும் கருத்து உபசார வழக்காகவே கொள்ளப்பெற வேண்டும் என்பதும், ஆளுடைய பிள்ளையார் கூற்றிற்கு மாறுபட்டது என்பதும் அறிஞரால் ஆய்ந்து முடிவு போக்கப் பெற்ற செய்திகளாம் என்பர்.[239] ஒட்டக்கூத்தர், அருணகிரிநாதர், பகழிக்கூத்தர் முதலியோர் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு பாடினாலும் கச்சியப்பருக்கு இக்கருத்தில் உடன்பாடில்லை என்பது புலனாகிறது.

சூரபன்மன் குதிரை முகம் கொண்டவன் என்ற கருத்துத் தோன்றுமாறு பேய்முறைப் பாட்டில்,

"சூரொடும்பொர வஞ்சிசூடிய பிள்ளையார்படை
தொட்டநாள்
ஈருடம்பு மிசைந்திரண்டுதி ரப்பரப்பு மிறைத்தனம்"[240]

என்று ஒட்டக்கூத்தர் பாடுவர், ஈருடம்பு என்பதற்கு அந்நூலின் உரை

யாசிரியர் 'குதிரையும் அசுரனுமான இரண்டு வடிவம்' என்று பொருள் கொள்வர்.[241] சூரபன்மன் துரக வங்கிசத்தின் முதல் என்றும் பிறிதோரிடத்தில் கருத்துரைப்பர்.[242] "இருபேருருவின் ஒருபேரியாக்கை"[243] என்று நக்கீரரும், "ஈரணிக்கேற்ற ஒடியாப் ப . வத்துச் சூர்"[244] என்று மருதனிளநாகனாரும் குறிப்பிடுதல் ஈண்டு நினையத் தகுவது. கச்சியப்பர், சூரபன்மனை குதிரை முகம் உடையோனாக யாண்டும் குறிப்பிடாமையால் இக்கருத்தும் அவருக்கு உடன்பாடன்று என்பது போதரும்.

பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் முருகனது புராணக் கூறுகள் காணப் படுகின்றன. இப்புராண ஆசிரியர், முருகனைத் "தமிழ்க்கு நல்ல தண்டமிழ் முருகன்"[245] என்றும், "நற்றமிழ் முருகன்"[246] என்றும், "தமிழ் முருகன்"[247] என்றும், சுட்டுதலோடு "கந்தன்"[248] என்ற பெயராலும் அவனைப் பலவிடங்களில் குறிப்பிடுவர். முருகன் கையில் இலங்கும் வேலினை 'உடம்பிடி'[249] என்றும் மொழிவர்.

இப்புராணவாசிரியர் வழியில், கச்சியப்பரும் முருகனைச் "சங்கத்தவர்க்குள் தலையாந் தமிழ்ப் புலவன்" (4:12:456) என்றும், அவன் கையிலங்கு வேலினை 'உடம்பிடி' (4:13:487) என்றும் குறிப்பிட்டாலும், அத்திருவிளையாடற் புராணம் புகலும் 'முருகவேள் உக்கிர குமரனாகத் தோன்றியமை',[250] 'தடாதகைப் பிராட்டியின் திருமணச் சடங்கினை முருகன் அருகிருந்து நிகழ்த்துதல்'[251] போன்ற புராணக் கூறுகளைக் கச்சியப்பர் யாண்டும் குறிப்பிடவில்லை. முழுமுதற்றன்மைக்கும், உலகியலுக்கும் அப்புராணக்கூறுகள் பொருத்தமின்றியிருத்தலால் கச்சியப்பர் அவற்றை விடுத்தனர் எனக் கருதலாம்.

## முடிவுரை

சங்ககால முதல் கந்தபுராணக் காலம் வரையுள்ள இலக்கியங்களில் கந்தனது புராணக் கூறுகள் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளன. சங்க நூல்களாம் பரிபாடல், திருமுருகாற்றுப்படைக்குப் பிறகு கல்லாடர் காலத்திற்றான் முருகனது புராணக் கூறுகள் மிகுதியும் வளர்ச்சி பெற்றிருந்தமையினைக் காண்கின்றோம். கந்தனைப் பிறவியெடுப்பவனாகக் கூறுதல் அவனது முழுமுதற்றன்மைக்கு ஏற்றம்

தாராததால் முருகனே சம்பந்தராகப் பிறந்தார், முருகனே உக்கிர குமார பாண்டியனாகப் பிறந்தான் என்ற முந்து நூற்களின் புராணக் கூறுகளைக் கச்சியப்பர் விடுத்துள்ளார். 'பத்தியின் மூலமாகத் தமிழ் மக்களின் எண்ணத்தை ஈர்க்கக் கருதிய நாயன்மார்கள் சிவன் திருவுருவம், திருவிளையாடல் முதலியவற்றைக் காப்பியங்களி லிருந்தும் புராணங்களிலிருந்தும் எடுத்தாளும் பொழுது அங்குள்ள உயர்நிலையை மட்டுமே சிறப்பித்துப் பாடுவர். தாழ்நிலையைச் சற்றுக் கூட எடுத்தாளவில்லை'.[252] அத்தகைய சைவ நாயன்மார் வகுத்த தடத்தில் சென்று தமிழுலகில் முருக பத்தியை வளர்க்க விரும்பிய கச்சியப்பர் முந்து நூற்களிலுள்ள முருகனது உயர்நிலைப் புராணக் கூறுகளை மட்டுந் தழுவிக்கொண்டு அல்லனவற்றை விடுத்துள்ளார். சங்கப்பனுவலில் காணும் முருகனது புராணக் கூறுகள் முருகன் முழுமுதற்றன்மை, அருளின் வலிமை, வேலின் தலைமை, பத்தி உணர்வு ஆகியவற்றை வலியுறுத்தும் போக்கில் கந்தபுராணத்தில் மாற்றம் எய்தியுள்ளன. சங்ககாலத்தில் முருகனுக் கிருந்த தலைமை, திருமுறைக் காலத்தில் சிவனுக்கு ஏற்பட்டிருந் தாலும் பழங்குடி மக்களாகிய குறவர், வேடர் முதலியோர் வழி பாட்டில் முருகனது தலைமை குறையவில்லை யென்பதனைத் திரு முறைச் சான்றுகள் கொண்டே உணருகின்றோம். ஒன்பதாந் திரு முறையிலும், பதினொராந் திருமுறையிலும் முருகனைப் போற்றும் பாக்கள் இடம் பெற்றிருத்தலும், கல்லாடத்தில் முருகனது புராணக் கூறுகள் மிகுதியாக வளர்ச்சி பெற்றிருத்தலும் சைவ உலகில் முருகனுக்கு மீண்டும் தலைமை அரும்புதற்குரிய அடையாளமாகக் கருதலாம்.

## மேற்கோள்

1. திரு. வி. கலியாணசுந்தரனார், முருகன் அல்லது அழகு, பக். 27 - 28.
2. பரி., 5 : 27-54.
3. — — — — —, 9:7.
4. திருமுருகு., 255-256.
5. கலித்., 83 : 13-15.
6. திருமுருகு., 253 - 255.
7. — — — — —, 257.
8. — — — — —, 255.
9. பரி., 9 : 7.

10. திருமுருகு., 258.
11. — — — — —, 259.
12. பெரும்பாண்., 458 - 459.
13. புறம்., 14 : 19, 120 : 21, 125 50; அகம்., 266 : 21.
14. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப.34.
15. E.W. Hopkins, Epic Mythology, pp. 227-228.
16. அகம்., 1 : 3.
17. நற்., 225 : 1.
18. புறம்., 16:12; அகம்., 158:16; பொருந., 131.
19. புறம்., 56:14.
20. பரி., 5 : 54-62.
21. பதிற்று., 11:1-6.
22. — — — — —, 11:4.
23. பரி., 5 : 7.
24. — — — — —, 5 : 6.
25. — — — — —, 9:70.
பெரும்பாண்., 457.
26. பரி., 5 : 4.
27. கலித்., 93 : 25 - 26; திருமுருகு., 57.
28. கலித்., 93 : 25 - 26, 27 : 15-16, 104 : 13-14.
பரி., 5 : 7, 9 : 70, 14 : 18, 18 : 4, 19 : 101-103, 21:8,
திருமுருகு., 57-60, 45 - 46.
29. பரி., 5 : 1-9.
30. திருமுருகு., 45-61.
31. பதிற்று., 26:12.
32. அகம்., 59 : 10-11.
33. திருமுருகு., 275.
34. மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், — — — — — ப. 312.
35. Kamil V. Zvelebil, 'A Guide to Murukan', Journal of Tamil Studies, June, '76. p.6
36. E. W. Hopkins, Epic Mythology, p. 228.
37. பரி., 21:9, 5 : 9-10, 8 : 29, 19:36, 19 : 102.
38. திருமுருகு., 266-267.
39. குறுந்., கடவுள் வாழ்த்து, 3-4.

40. இரா. சாரங்கபாணி, பரிபாடல் திறன், ப.176.
41. திருமுருகு., 266-267.
42. இரா. சாரங்கபாணி, பரிபாடல் திறன், ப. 166.
43. தொல். பொருள்., நூ.5.
44. இரா. சாரங்கபாணி, பரிபாடல் திறன், பக்.171-172.
45. திருமுருகு., 1-2.
46. அகம்., 120: 1-3.
47. பரி., 5 : 12.
48. — — — –, 19 : 97-100.
49. – — — —, 5 : 11.
50. — — — –, 14 : 21.
51. – — — —, 21 : 67.
52. திருமுருகு.,103.
53. — — — — —, 118.
54. – — — —, 91-118.
55. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, பக். 137-138.
56. குறுந்., கடவுள் வாழ்த்து, 3.
57. பரி., 19 : 97.
திருமுருகு., 206.
58. கலித்., 105 : 17.
59. – – – –, 105 : 17.
திருமுருகு., 214.
60. அகம்., 120 : 1.
61. திருமுருகு., 43-44.
62. – — — –, 208.
63. நற்., 34 : 8 ; பரி., 5:81; திருமுருகு., 10-11.
64. பரி., 19 : 97.
65. குறுந்., கடவுள் வாழ்த்து, 4.
66. கலித், 93 : 26; திருமுருகு.,61.
67. கலித்., 27 : 16.
68. பரி., 9:79.
திருமுருகு., 111.
69. பரி., 14:18.
70. — — – – –, 17:2.
71. குறிஞ்சி., 51-54.

72. பரி., 5:63-68.
திருமுருகு., 111.
73. குறுந்., 2 : 1-2.
74. குறுந்., கடவுள் வாழ்த்து, 5,
75. திருமுருகு., 38.
76. ———— , 219.
77. புறம்., 56 : 7.
78. அகம்., 149 : 15-16.
79. திருமுருகு., 122.
80. பதிற்று., 11:6.
81. புறம்., 56 : 8.
82. திருமுருகு., 82.
83. பரி., 21 : 1-2.
84. — — — — —, 5:2.
85. — — — — —, 17:49.
86. — — — — —, 8:67.
87. — — — —, 18 : 26.
88. — — — —, 5 : 62.
89. புறம்., கடவுள்வாழ்த்து, 3-4.
திருமுருகு., 150-121.
— — — —, 152-159.
90. குறுந்., கடவுள் வாழ்த்து, 1.
91. திருமுருகு., 4.
92. பரி., 21 : 1-7.
93. பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், ப.202.
94. V.C Srivastava, Sun worship in Ancient India, p.295.
Lalta Prasad Pandey, Sun worship in Ancient India, p.56.
95. நற்., 82 : 4.
96. பரி., 14 : 21-22.
97. — — — —, 19 : 95.
98. திருமுருகு., 6.
99. — — — —, 175-176.
100. பரி., 9 : 8-11.
101. — — — —, 9 : 27-69.
102. — — — —, 19 :7.

103. பரி., 9:9.
104. — — — —, 19 : 6-7.
105. — — — —, 19 : 3-5.
106. திருமுருகு., 148-175.
107. பரி., 1-9.
108. — — — —, 5 : 19-21.
109. — — — —, 8:64.
110. — — — —, 5:17.
111. புறம்., 299 : 6.
112. அகம்., 266 : 20-22.
113. புறம்., 55 : 18-19.
114. திருமுருகு. , 223-227.
115. ஐங்குறு., 308 : 4.
116. அகம்., 272 : 13-15.
117. பரி., 9 : 44.
118. அகம்., 22 : 8-11.
119. — — — —, 138 : 9-13.
120. நற்., 268 : 9.
ஐங்குறு., 248 : 1.
121. குறுந்., 53 : 4.
122. ஐங்குறு., 247 : 2.
123. குறுந்., 362.
அகம்., 242 : 8-12.
— — — —, 292 : 2-4.
— — — —, 22 : 8-11.
திருமுருகு., 218, 232-235.
124. குறுந்., 362 : 3.
125. திருமுருகு., 190-217.
126. அகம்., 98 : 16-19, 138:9-13.
127. புறம்., 259 : 5-6.
128. திருமுருகு., 227-228.
129. அகம்., 22 : 8.
130. மதுரைக்., 611-615.
131. திருமுருகு., 235-239.
132. — — — —, 230-231.

133. நற்., 34 : 11.
134. திருமுருகு., 193.
135. நற்., 282 : 5; ஐங்குறு., 245 : 2-3.
136. குறுந்., 362 : 4.
137. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப.18.
138. பட்டினப்., 200-202.
139. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.156.
140. திருமுருகு., 177-189.
141. — — — —, 251-276.
142. பரி., 8 : 80.
143. — — — —, 18 : 52.
144. — — — —, 17 : 1-8.
145. — — — —, 17 : 29 - 32,
146. கலித்., 83 : 14-15.
147. பரி., 19 : 90-94.
148. — — — —, 8 : 103-108, 129-130.
149. — — — —, 9 : 82-85, 18 : 54-56.
150. — — — —, 5 : 78-81.
151. இரா . சாரங்கபாணி, பரிபாடல் திறன், பக்.180-181.
152. திருமுருகு., 4.
153. — — — —, 289-291.
154. — — — —, 295.
155. முருகன் தன் பேருருக் காட்சியினைச் சூரபதுமனுக்கும் (4 : 13 : 430), தன்னொடு மலைந்த இந்திரன் முதலியோருக்கும் (1 : 14 : 27) காட்டியது இவண் நினையத்தகுவது.
156. திருமுருகு., 99.
157. சிலப்பதிகாரம், 1:38.
158. — — — —, 2 : 49-51.
159. — — — —, 23 : 188-189.
160. — — — —, 6 : 49-51.
161. — — — —, 24 : 18.
162. — — — —, 24 : 20.
163. — — — —, 24 : 8.
164. — — — —, 5 : 170, 14 : 10.
165. — — — —, 9 : 11.

166. சிலப்பதிகாரம், 24 : 11-18.
167. — — — —, 24 : 15-18.
168. — — — —, 23 : 190-191.
169. — — — —, 24 : 1 : 3.
170. — — — —, 24 : 1 : 10-12.
171. — — — —, 24 : 1 : 16-18.
172. — — — —, 29 : 10.

** வ. சு. செங்கல்வராய பிள்ளையின் தேவார ஒளிநெறி, திருவாசக ஒளிநெறி, திருக்கோவையார் ஒளிநெறி என்னும் நூல்களில் உள்ளவாறு திருமுறை எண்கள் இவண் தரப்பட்டுள்ளன.

173. திருஞானசம்பந்தர் தேவாரம், 209 : 1, 210 : 6, 325 : 3.
174. — — — —, 223 : 2.
175. — — — —, 198 : 1.
176. — — — —, 196 : 6.
177. — — — —, 12 : 10.
178. — — — —, 371 : 1.
179. — — — —, 325 : 3.
180. — — — —, 209 : 1.
181. — — — —, 293 : 6.
182. — — — —, 199 : 6, 209 : 1.
183. — — — —, 251 : 9.
184. — — — —, 210 : 6.
185. — — — —, 48 : 11.
186. — — — —, 115:13.
187. — — — —, 12:10, 117:8.
188. — — — —, 198:1.
189. — — — —, 187:2, 326:1.
190. — — — —, 48:11.
191. வ. சு. செங்கல்வராயபிள்ளை, தேவார ஒளிநெறிக் கட்டுரை (அப்பர்), ப. 232.
192. — — — —, ப. 232
193. சுந்தரர் தேவாரம், 38:5, 46:9, 49:9, 62:4.
194. — — — —, 16:9.
195. — — — —, 64:6, 83:5.
196. — — — —, 68:7.

197. சுந்தரர் தேவாரம், 38:8.
198. ————, 18:6, 68:7.
199. ————, 5:2, 34:16.
200. ————, 73:9.
201. ————, 59:10.
202. திருவாசகம், 14:17.
203. ————, 9:3.
204. திருக்கோவையார், 285.
205. ————, 282.
206. திருவிசைப்பா, 7:5.
207, ————, 7:6.
208. ————, 7:2.
209. ————, 7:8.
210. ————, 7:10.
211. ————, 7 : 3.
212. ————, 7 : 3.
213. கோ. சுந்தரமூர்த்தி, சைவ சமயம், ப.127.
214. பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம், 144.
215. பெரியபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், 41.
216. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 12.
பெரியபுராணம், சண்டேசுர நாயனார் புராணம், 1.
217. பெரியபுராணம், சிறுத்தொண்ட நாயனார் புராணம், 84.
218. பெரியபுராணம், சண்டேசுர நாயனார் புராணம், 1.
219. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 10-11.
220. 'தமிழ்க் கந்தபுராணமும் வடமொழிக் கந்தபுராணமும்,' 'முருகன் அழகுத் தோற்றங்கள்' என்னும் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளது.
221. கல்லாடம், முருகக் கடவுள் வாழ்த்து, 39-40.
222. ————, 32-34.
223. ————, 43-44.
224. ————, 45-46.
225. ————, 41-42.
226. ————, 49.
227. ————, 12-15.
228. ————, 2-7.

229. கல்லாடம், 23-31.
230. — — — —, 52-55.
231. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பதினொராம் நூற்றாண்டு, ப.34.
232. தக்கயாகப் பரணி, 5.
233. — — — —, 170.
234. வ. சு. செங்கல்வராயபிள்ளை, அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும், ப.163.
235. கந்தர் அநுபூதி, 4.
236. தக்கயாகப்பரணி மூலமும் உரையும், தாழிசை, 169.
237. திருப்புகழ், 1281.
238. பகழிக்கூத்தர், திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், 61.
239. சொ. சிங்காரவேலன், திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், ப.45.
240. தக்கயாகப்பரணி மூலமும் உரையும், தாழிசை, 221.
241. தக்கயாகப்பரணி மூலமும் உரையும், ப. 95.
242. — — — —, ப. 65.
243. திருமுருகு., 57.
244. கலித்., 93:25.
245. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், 44:26.
246. — — — —, 44:26.
247. — — — —, 44:28.
248. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், கடவுள் வாழ்த்து, 18; 44:29.
249. — — — —, 18.
250. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், 10:3.
251. — — — —, 4:25.
252. கோ. சுந்தரமூர்த்தி, சைவ சமயம், ப. 46.

# 2

# தமிழ்க் கந்தபுராணமும் வடமொழிக் கந்தபுராணமும்

## முன்னுரை

இலக்கிய ஆய்வு முறைகளில் ஒப்பாய்வும் சிறப்பிடம் பெறும். சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாவில் கால்கொள்ளப்பெற்ற இந்நெறி ஆங்கிலமொழிச் செல்வாக்கால் நம் நாட்டிலும் ஆங்கிலம் பயின்ற தமிழறிஞர்களால் மேற்கொள்ளப் பெற்றது.

''சென்ற நூற்றாண்டின் இறுதிமுதல் இன்றுவரை ஒப்பிட்டுச் சிந்தனை கால் கொள்ளத் தொடங்கியுள்ளது. ஜி. யு. போப்பையர், எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், என். கே. சித்தாந்தா போன்ற அறிஞர் பெருமக்கள் சங்க இலக்கியம் கிரேக்க இலக்கியத்துடனும் வீரயுகப் பாடல்களுடனும் ஒப்பிடத்தக்கது என்ற கருத்தை வற்புறுத்தினர்.[1] தமிழில் இத்துறைக்கு முன்னோடியாகக் காட்சிதரும் திரு. வ. வே. சு. ஐயர் அவர்களின் 'கம்பராமாயணத் திறனாய்வு' தமிழ் இலக்கிய ஒப்பாய்வின் அடித்தளமாகும். அவர் கம்பரது கவித் திறனைக் கிரேக்க, இலத்தீன், ஆங்கிலக் காப்பியங்களுடனும் வால்மீகியின் இராமாயணத்தோடும் ஒப்பிட்டுக்காட்டிக் காப்பியத்திறனை வெளிப்படுத்தியுள்ளார்.[2] ''டாக்டர் வ. சுப. மாணிக்கத்தின் 'தமிழ்க் காதல்' கிரேக்க, உரோமப் பெண்மைப் பண்பையும், காதலுறவையும் சங்க இலக்கியத்துடன் ஒப்பிடுகின்றது. டாக்டர் க. கைலாசபதியின் 'தமிழ் வீரயுகப்பாடல்' (Tamil Heroic Poetry) பற்றிய ஆங்கில ஆய்வுநூல் தமிழில் ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கு ஒருபடி முன்னேற்றந் தருவதாகும்'' எனலாம்.[3] ''இலண்டன் பல்கலைக்கழகத்திலே தமிழ் விரிவுரையாளராகவிருக்கும் கலாநிதி ஜே. ஆர். மார், தமது எட்டுத்தொகை நூல்கள் பற்றிய ஆராய்ச்சி உரையில், கிரேக்க வாய்மொழி இலக்கியத்திற்கும் தமிழ்ப்பாடல்களுக்குமுள்ள ஒப்புமையைச் சுட்டிக் காட்டியுள்ளார்.''[4] எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழண்ணல், எஸ். இராமகிருஷ்ணன், சச்சிதானந்தம் போன்றோரும் இத்துறையில் தக்கவழிகாட்டிகளாக விளங்குகின்றனர்.

இந்த அளவு ஒப்பாய்வுத்துறை தமிழில் பிறமொழிச் செல் வாக்கால் வளர்ந்து வந்துள்ளதாகத் தோன்றினும் இத்துறைக்கு வித்திட்ட பெருமை தொல்காப்பியருக்கே உரியது. ''தொல்காப் பியம் களவுக் கூட்டத்தினைக் கந்தருவ வழக்கத்தோடு ஒப்பிடக் காண்கிறோம். ஒலி நிலையில் அந்தணர் மறையோடும் சொல் நிலையில் வடமொழியோடும் சில ஒப்பிடல்கள் உள. 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' எனவும், 'யாமெய்யாக் கண்ட வற்றுள் இல்லை' எனவும் வரும் திருக்குறள்களில் ஒப்பியற்பார்வை முகிழ்க்கின்றது''[5] என்பார் கருத்தும் ஈண்டு நினையத்தகும். இடைக் காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்களில் பலர் வடமொழி, தமிழ் மொழி அறிவு நிரம்பப் பெற்றவர்களாய் விளங்கி ஒப்பாய்வுத் துறையினை வளர்த்தமையும் மறுக்கத்தக்கதன்று. தொல்காப்பியர், வள்ளுவர் போன்றோரால் கால்கொள்ளப் பெற்று, உரையாசிரியர் களால் உரமூட்டப்பெற்றுத் தற்கால இருமொழிப் புலமையரால் சிறந்து வளர்ந்து வருகின்றது ஒப்பாய்வுத்துறை. ''முழுதும் ஒப்பு மையான பொருள்களை ஒத்திட்டுக் காண்பதிற் பயனுமில்லை, அறிவுமில்லை. அடிப்படையில் ஒற்றுமையும் கூறுபாட்டின் வேற் றுமையும் உடைய பொருள்களே ஒத்து உறழ்ந்து காணற்குரியவை'' என்பர்.[6] அவ்வகையில் தமிழ்க் கந்தபுராணம், வடமொழிக் கந்த புராணம் ஆகிய இருநூல்களிலும் காணப்படும் உறழ்ச்சிக் கூறுகள் இவ்வியலில் விளக்கப்படும்.

வடமொழிக் காப்பியங்களைத் தமிழில் பெயர்த்துப் படைத் தலுக்கு வழிகாட்டியாக விளங்கியவர் கொங்குவேளிர். அவரது நெறியில் சென்ற திருத்தக்கதேவர், கம்பர், கச்சியப்பர் முதலி யோர் பல கூறுகளில் மூலநூலை விஞ்சிய அளவில் தங்கள் படைப் புக்களை உயர்த்தியுள்ளனர். மூல நூல் ஒரு மொழியிலும் வழி நூல் கள் வேறு மொழியிலும் அமையுமாயின் வழிநூல்கள் தம் மொழிக் கேற்பவும், பேசும் மக்களின் நாகரிகத்திற்கேற்பவும், பண்புநோக்கிலும் மேற்கொள்ளும் மாற்றங்கள் தவிர்க்க இயலாதன.[7] கச்சியப்பர்,

*''முன்சொல் கின்ற முனிவட நூ றெரீஇத்*
*தென்சொ லாற்சிறி யேனுரை செய்தலான்''* (அவை : 3)

என்றும்,

*''முன்பு சூதன் மொழிவட நூற்கதை*
*பின்பி யான்றமிழ்ப் பெற்றியிற் செப்புகேன்''* (அவை : 16)

என்றும் கூறித் தம் படைப்பிற்கு முதனூல் சூதன் மொழிந்த ''காந்தமே'' (அவை : 15) எனத் தெளிவுறுத்துவர். கச்சியப்பரைத் தழுவிக் 'கந்தபுராணச் சுருக்கம்' பாடிய சம்பந்த சரணாலயர்,

> *''நன்புவி யிடத்துமிக்க நைமிச வனத்து வாழுந்*
> *துன்பில்சீர் முனிவர்கேட்பச் சூதனங் குரைத்த காந்தம்*
> *இன்புறு கச்சியப்பன் இயம்பினன் தமிழால்''*[8]

எனப் புகலுவதும் இக்கருத்துக்கு மேலும் அரண் செய்யும். 'தமிழ்ப் பெற்றியிற் செப்புகேன்' எனக் கச்சியப்பர் அவையடக்கத்தில் குறிப் பிடுதலால், தமிழ் நாகரிகம், பண்பாடு, தமிழ்க் காப்பியமரபு முதலிய கூறுகளை மனத்தில் கொண்டு நூலினைப் படைத்துள்ளார் என் பதனை அறிகின்றோம். இத்தகு காரணங்கட்காக முதனூலில் விளம்பிய சிலவற்றை மாற்றியும், கூறிய சிலவற்றைப் பெருக்கியும், விடுத்தும், புகலாதசிலவற்றைப் படைத்தும் தமிழ்க் கந்தபுராணத்தை யாத்துள்ளார்.

## முதனூல் எது?

வடமொழியில் உள்ள ஸ்காந்தபுராணப் படிகளில் (text) 'வடநாட்டுப் படி,' 'தென்னாட்டுப்படி' என இருவகை உண்டு. இவ்விரு படிகளும் மிக்க வேறுபாடுடையன. வடநாட்டுப் படி 'காசிக்காண்டம், நாகரக் காண்டம், பிரம்ம காண்டம், வைணவக் காண்டம், ரேவ காண்டம்,பிரபாச காண்டம், அவந்தி காண்டம் என ஏழு பகுதிகளாக அமைந்துள்ளதாக வடமொழிப் புராண ஆய் வாளர் கூறுவர்.[9] ''கந்தனின்அவதார நோக்கம் தாரகனைத் தடிதலே என்ற போக்கில் வடநாட்டுப் படிகள் அமைந்து கிடக்கின்றன.[10] சம்பவ, ஆசுர,வீரமாகேந்திர, யுத்த, தேவ, தட்ச, உபதேச என ஏழு காண்டங்களாகக் கொண்டு சூரனைத் தடிதலைக் கந்தன் அவதார நோக்கமாக்கி விரிந்துரைப்பது தென்னகத்துப்படிகள். தென்னாட்டுப் படிகளின் காண்டங்களின் அமைப்பும், முருகன் அவதார நோக்கமும் முன்னவற்றிலிருந்து மாறுபட்டிருப்பது இங்குக் கருதத்தக்கது. வட நாட்டு மரபில் புராணங்கள் அனைத்தையும் வியாசர் பாடியதாகக் கருதுவர். தமிழ்நாட்டில் புராணங்களைச் சூதமுனிவர் புகன்றதாக நம்புவது மரபு. 'முன்பு சூதன் மொழி வடநூற்கதை'என்று ஆசிரியரே குறிப்பிடுவதாலும், காண்டங்களின் வைப்புமுறையாலும், கந்தன்

அவதார நோக்கத்தினாலும், கச்சியப்பர் தென்னாட்டுப் படியினைத் தழுவியே தம் நூலைப் படைத்துள்ளமை புலனாகும்.

ஸ்காந்த புராணம், 'சிவரகசிய கண்டம்' என்ற பெயரில் சென்ற நூற்றாண்டின் இறுதியில் (1893) கிரந்த எழுத்தில் அனந்த வைத்தியநாதசிவன் என்பவரால் திருவாடியில் (திருவையாறு) வெளியிடப் பெற்றது.[11] அதே காலத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்றும் அவரால் திருவாடி வாணிவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பித்து வெளியிடப்பட்டது.[12] எழுபது ஆண்டுகட்குப் பின்னர் (1963) அந்நூலையே தேவநாகரி மூலம் (Text), தமிழ் முலம் (Transliteration), தமிழ் மொழிபெயர்ப்பு (Translation) ஆகிய முக்கூறுகளும் அமைய சேங்காலிபுரம் அனந்தராம தீட்சதர் இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.[13]

'சுப்பிரமணிய பராக்கிரமம்' எழுதிய நா. கதிரைவேற்பிள்ளையும்,[14] 'சுப்பிரமணிய வியாசம்', 'ஸ்ரீமத் குமாரசுவாமியம்' போன்ற நூல்களை ஆக்கித் தந்த பாம்பன் சுவாமிகளும்,[15] 'சுப்பிரமணிய தத்துவம்' எழுதிய சுப்பிரமணிய அய்யரும்,[16] கந்தபுராண உரையாசிரியர்களாகிய ச. சுப்பிரமணியசாத்திரியும்,[17] ம. தி. பானுகவியும்[18] மேற்சுட்டிய அனந்தவைத்தியநாதசிவன் பதிப்பித்த நூலையே அளவையாகக் (பிரமாணம்) காட்டலாலும், அந்நூலும் தீட்சதர் நூலும் வேறுபாடின்றி இயலுவதாலும் முன்னது கையாள முடியாத நிலையில் சிதிலமாகவிருப்பதாலும், பின்னதையே தமிழ்க் கந்தபுராணத்தின் முதனூல் பதிப்பாகக் கொண்டு ஒப்பாய்வு நிகழ்த்தப்பெறும்.

## 1. நூலமைப்பில் மாற்றங்கள்

முதனூல் ஸம்பவகாண்டம், ஆஸுரகாண்டம், வீரமாஹேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷ காண்டம், உபதேச காண்டம் என்னும் ஏழு பகுதிகளாக அமைந்துள்ளது. இறுதியிலுள்ள உபதேசகாண்டத்தைத் தவிர பிற காண்டங்கள் அனைத்தையும் வைப்புமுறையில் மாற்றமின்றிக் கந்தபுராணம் என்னும் பெயரில் கச்சியப்பர் பெயர்த்துப்படைத்துள்ளார். காண்டங்களின் பெயர்களை உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் எனத் தமிழ்ப்பெற்றியில் செப்புவர்.

காண்டங்களின் வைப்புமுறை மாற்றமின்றிக் காணப்படினும் சில புராண நிகழ்வுகளைத் தெளிவும் இயைபும் கருதி ஒரு காண்டத்தி லின்றும்பிற காண்டங்கட்கு மாற்றுவதும் இவர்தம் இயல்பாகும். 'தாம் கொண்டுள்ள குறிக்கோளுக்கு ஏற்பவும் காவிய நலத்திற்கு ஏற்பவும், முதல்நூற் கதையை ஏற்றவகையில் மாற்ற கவிஞர்களுக்கு உரிமை உண்டு. கம்பன் வான்மீகியின் கதையையும், காளிதாசன் மகாபாரதம், பத்மபுராணம் போன்றவற்றுள் உள்ள கதைகளையும் தத்தம் காவிய அமைப்புக்கு ஏற்ப மாற்றியுள்ளனர்,'[19] என்பார் கருத்தும் இவண் நினையத்தகும்.

செந்தூரிலிருந்து புறப்பட்டுச் சென்ற கந்தன் ஏமகூடத்தில் பாசறை அமைத்திருந்தமையும், அவர்கள் வரவினை ஒற்றுவர்மூலம் சூரன் அறிந்தமையும் ஆகிய செய்திகள் வீரமகேந்திர காண்டத்தின் இறுதி அத்தியாயத்தில் முதனூலில் காணப்படுகின்றன. இவ்விரு நிகழ்ச்சிகளும் போருக்கு நேரடித் தொடர்புடையவை ஆதலால் அவைகளை யுத்தகாண்டத் தொடக்கத்தில் ஆசிரியர் மாற்றி அமைத் துள்ளார். சிறையிருந்த சயந்தன் முதலியவர்களை மீட்கும் போர்த் தொடர்பான செய்திகளை முதனூல் தேவகாண்டத்தில் அமைத் துள்ளது. கச்சியப்பர் அவற்றையும் யுத்தகாண்டத்து இறுதியில் மாற்றி அமைப்பர். வள்ளியம்மைத் திருமணமும், முசுகுந்தன் கந்த விரத வரலாறும் முதனூலில் தேவகாண்டத்திறுதியில் அமைந்துள்ளன. கந்தபுராணக் கதை நிகழ்ச்சிகள் தேவகாண்டத்தோடு முடிவதுபோன்ற உணர்வினை இது ஏற்படுத்தும். அதனால் கச்சியப்பர் இவ்விரு வரலாற்றையும் இறுதிக் காண்டமாம் தட்சகாண்டத்தின் இறுதிப் படலங்களாக மாற்றி, புராணத்தின் தலைப்புக்கு ஏற்பக் காப்பியத் தலைவன் நிகழ்ச்சிகளோடு நூலினை நிறைவு செய்வர்.

ஒவ்வொரு காண்டமும் எண்முறையில் அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டிருக்கும் முதனூல் முறையினின்றும் வேறுபட்டு, கருத்து முறையில் தலைப்புக்களோடு படலங்களை வழிநூலாசான் அமைத் துள்ளார். கச்சியப்பரின் படலப் பகுப்புமுறை பொருத்தமாகவும் சிறப்பாகவும் காணப்படுகின்றது. முதனூலில் ஒரு பாத்திரம் பிறிதொரு பாத்திரத்திடம் உரையாடும் இடைப்பகுதியில் அத்தியாயங்கள் பகுக்கப்பட்டுள்ளன.[20] புலவர் இக்குறையினைத் தம் நூலுள் முற்றும் தவிர்த்துள்ளார்.

முதனூலில் ஒரே அத்தியாயத்தில் முன்னும்பின்னும் மாறி அமைந்துள்ள நிகழ்ச்சிகளை வகைப்படுத்தித் தனித்தனிப் படலங்களாகப் பாடுதலும், பல அத்தியாயங்களில் உள்ள செய்திகளைக் கருத்து நோக்கில் ஒரே படலமாகப் பாடுதலும் இவர்தம் இயல்பு. வீரமகேந்திரகாண்டத்தில் நான்காம் அத்தியாயத்தில் உள்ள நிகழ்ச்சிகளைக் கச்சியப்பர், சதமுகன் வதைப்படலம், காவலாளர் வதைப் படலம், நகரழி படலம், சகத்திரவாகுகள் வதைப்படலம் என நான்கு படலங்களாக வகுத்துத் தெளிவுபடுத்துவர். முதனூலில் ஆறு அத்தியாயங்களில் விளக்கப்படும் பானுகோபன் முதனாட்போர் நிகழ்ச்சியினை ஒரே படலமாகப் பாடுவர். 'நேரின பொருளை நிரல்பட வைத்தாங்கு ஓரினப் பொருளை ஒருவழி' அமைப்பது ஆசிரியரின் போக்கென இதன்மூலம் உணருகின்றோம்.

## 2. காப்பிய மரபு

தண்டியின் காப்பிய இலக்கணங்களை அகத்தில் கொண்டே தமிழில் பெரும்பான்மையான புராணங்கள் படைக்கப்பட்டுள்ளன. அதனால், ''புராணங்களும் தமிழில் காப்பியங்களாகவே கருதப் பெறும் தன்மையுடையன''[21] என்பர். கச்சியப்பர் காப்பிய மரபு கருதி முதனூலினின்றும் வேறுபடுதலை இவண் காண்பாம்.

புராணத்தைக் கேட்கும் நைமிசவன முனிவர்கள் அதனைப் புகலும் சூதரிடம் இடையிடையே தோன்றி வினவி விளக்கம் காணும் வகையில் அமைந்துள்ள பகுதிகளும்,[22] உமையின் திருமணம், முருகன் பிறப்பு, தெய்வயானை திருமணம் முதலிய நிகழ்ச்சிகளை உரைக்கும் அத்தியாயங்களின் இறுதியில் இவ்வத்தியாயத்தைக் கேட்போர், படிப்போர் ஆகியோரின் பயன்களை விளக்கமாகப் புகலும் பகுதிகளும்[23] காப்பியக்கதைப் போக்கிற்கு ஊறுவிளைவிப்பன ஆதலின் கச்சியப்பர் அவற்றை நீக்கியுள்ளார். சூதரைப் பாயிரப்படலத்தளவில் நிறுத்திவிட்டுக் கவிஞரே கதையினை இயக்கிச் செல்வது கருதத்தக்கது.

தட்சகாண்டத்தில் அமைந்துள்ள தக்கன் வரலாற்றைக் கதை கேட்டு வரும் நைமிசாரணிய முனிவர்கள் வினவ, சூதமுனிவர் புகன்றதாக முதனூல் குறிப்பிடும்.[24] தேவகாண்டத்திறுதியில், சயந்

தன் தன் ஆசானாம் வியாழனிடம், தானும், தன்னைச் சார்ந் தோரும் எய்திய இன்னல்களுக்குக் காரணம் வினவ, வியாழன் சொல்லுமாறு தக்கன் கதையினை விவரிக்கும் தட்சகாண்டத்தை அமைத்துள்ளார் கச்சியப்பர் (5 : 5 : 62-66). கதை கேட்பவர் களுக்குக் கூறும் நிலையிலிருந்து காப்பியத்தில் நிலவும் மாந்தரே வினவி விளக்கங்காணும் நிலைக்கு நிகழ்ச்சிகளை மாற்றியிருத்தல் காப்பியத் திறன்மிகு செயலாகும்.

கதைநிகழ்ச்சி கயிலாயத்தில் தொடங்கினாலும் தமிழ்க் காப்பிய மரபிற்கு ஏற்றவாறு ஆறு, நாடு, நகரங்களைத் தனித்தனிப் படலங் களாகப் பாடி, புராணத் தலைவனாகிய குமரகோட்டத்து முருகனை அந்நகரோடு (காஞ்சி) இயைபுறுத்திப் புராணத்திற்குத் தோற்றுவாய் செய்வர். பாயிரப் படலத்தில் இருபத்துநான்கு விருத்தங்களில் கந்த புராணக் கதையினைச் சூதர் வாயிலாகச் சுருக்கித் தருதல் சிலப் பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி முதலிய காப்பியங்களின் தொடக்கத்தில் அமைந்துள்ள 'வருபொருள் உரைத்தல்' என்ற நெறியினைத் தழுவிய செயலாகும்.

## 3. காப்பிய உத்தி

மகாகாளரால் கரமிழந்த அசமுகி அரற்றல் ஒலியுடன் மகேந் திரம் சென்றமையினை முன்னரும், சூரன் அரசு வீற்றிருக்கும் சிறப் பினைப் பின்னரும் முதனூல் விவரிக்கும்.[25] கச்சியப்பர் இந்நிகழ்ச்சி களைத் தனித்தனிப் படலங்களாகப் பகுத்துக்கொண்டு சூரன் அரசிருக் கைச் சிறப்பினை முன்னரும் (சூரன் அரசிருக்கை படலம் 2:39) கரமிழந்த அசமுகி மகேந்திரம் செல்லுதலைப் (அசமுகிநகர் காண்படலம், 2:40) பின்னரும் அமைப்பர். கடவுளர் ஏவல் செய்ய அவுணர் வேந்தன் கவலையின்றித் திருவோலக்கத்தில் வீற்றி ருக்கும் இன்பச்சூழலில் இத்துன்ப நிகழ்ச்சியை உணருமாறு செய்தல் ஓர் காப்பிய உத்தி என்பது நோக்கத்தகும்.

சூரன் அவைக்களத்தில் தூதுரைக்கப் புகும் வீரவாகுவிற்காக முருகன் அருளால் அவண் வந்த அரியணையின் தன்மையினை, ''உன்னதமானது, பலரத்தினங்களால் சித்தரிக்கப்பட்டது, பல சூரி யர்களுக்கு ஒப்பானது, காந்தியுள்ளது''[26] என ஒரு சுலோகத்தில்

முதனூல் குறிப்பிடும். தழுவுகாப்பியம் ஆறுபாக்களில் (3:12:52-57) நயந்தோன்ற விரித்துப் பேசும். 'அத்தவிசின் ஒளி சூரனது இசைமை, ஆணை, அவன் யாக்கையில் அணிந்துள்ள பேரணிக் கதிர் ஆகியவற்றை விழுங்கியதாகவும் (3 : 12 : 57), அவ்வணையின் ஒளி அவுணர்களின் வடிவத்தையும் தெய்வதப் படிவமாக்கியதாக வும்' (3 : 12 : 54) உரைத்துச் சூரபன்மன் எதிர்காலத்தில் பெறவிருக்கும் தோல்வியினையும், தோற்பினும் முருகன் அருளால் தேவரும் போற்றும் தெய்வவடிவம் பெறவிருப்பதையும் குறிப்பாகக் கச்சியப்பர் உணர்த்துவர்.

பின் விளையும் நிகழ்ச்சிகளை முன்னறிவித்தற்குச் சில உத்தி களைக் கையாளுதல் காப்பிய ஆசிரியர்களின் பாங்காகும். சூரனது அரசிருக்கைச் சிறப்பை விழிக்கு விருந்தமுதமாகக் கண்ட வீரவாகு அச்சூரன் மீது அன்பு சுரந்திடுமாறு கூறிய மொழிகள் கச்சியப்பர் தாமே படைத்துக்கொண்ட பகுதிகளாகும். 'சூரன் தவத்தால் உற்ற உயர்வினையும், இமையோரைச் சிறைவைத்த பாவத்தால் நாளை அவன் முடியவிருப்பதையும், அவ்வாறு முடியினும் முருகன் நல்கும் முத்தியே இவன் ஆருயிர்க்கு நிலைபேறு ஆகும்' என்பதையும் (3 : 12 : 40-45) உணர்த்தும் வீரவாகுவின் தனிமொழிகள் பெரு வரமும் பேராற்றலும் படைத்த எதிர்நிலைத் தலைவனின் எதிர் கால அழிவினை முன்னுணர்த்தும் படைப்புக் கூறுகளாம். அசமுகி இந்திராணியைப் பற்ற முயலுகையில் மகாகாளரால் துணிக்கப்பட்ட அவளது கரத்தில் வடியும் குருதியின் தோற்றத்தை 'வெய்யசூர் திருவைச் சுட்டிடுங் குறைபடு ஞெகிழியின் கோல' (2: 37 : 1) மாகக் கண்டு அவுணர்களின் வீழ்ச்சிக்கு 'நாட்கோள்' செய்தவளாக அவளைப் படைத்துக்காட்டுவர் கச்சியப்பர்.

## 4. கதை மாந்தர்

கதை மாந்தரின் தலைமைத்தன்மை, மனஉணர்வு, மன வளர்ச்சி முதலியவற்றை நிலைநாட்டல்வேண்டி சில நிகழ்ச்சிகளை மாற்றியமைத்தல் கச்சியப்பர் இயல்பு.

தவமியற்றியும் பயன் விளையாமை உணர்ந்த இந்திரன், பிரம னுடனும் திருமாலுடனும் சேர்ந்து சிவனை வழிபட, இறைவன் அம் மூவருக்கும் காட்சி நல்கி, ''இப்பொழுதே முருகனை உண்டுபண்ணி சீக்கிரத்தில் அசுரர்களை சங்கரிக்கிறேன்''[27] எனக் கூறியதாக முதனூல் மொழியும். 'மேருமலையில் தவமியற்றும் இந்திரன் முன் தோன்றிய

சிவன் அந்நற்செய்தியினைப் புகன்றதாகத் (1:3:35) தழுவுநூல் உரைக்கும். சூரன் கொடுமைகட்கு மிகவும் ஆட்பட்டவன் இந்திரனே. அவன் துன்பநீக்கத்திற்குக் காரணமான முருகன் தோற்றத்தை மூவரிடத்தும் பொதுவாகச் சொல்வதைக் காட்டிலும் சிறப்பாக இந்திரனிடத்து நவிலுதலே அவனுக்கு ஏற்றம் தருவதாகும். முருகன் தோன்றிய பின்னரும், தந்துயர் நீங்கா நிலைகண்ட பிரமன் முதலிய தேவர்கள் அனைவரும் சிவன்பால் முறையிட்டதாகக் கூறும்[28] முதனூல் நிகழ்வினை 'இந்திரன் மட்டும் சென்று இறைவனை ஏத்திக் குறை களையவேண்டியதாகக் (1 : 18 : 24-32) கச்சியப்பர் மாற்றி அமைத்து இந்திரனது தலைமைத்தன்மையைக் காத்துள்ளார்.

சிவன்மீது காமக்கணை ஏவ மன்மதனை உய்த்த செயலைத் திருமாலுக்குரியதாக முதனூல் குறிப்பிடும்.[29] அச்செயலைப் பிரமன் ஆற்றியதாகக் கச்சியப்பர் புகலுவர். (1:4:53). பெற்ற மகனை அழிவுப்பாதைக்கு உய்க்கும் தந்தையாகத் திருமாலைப் படைக்க விரும்பாது இம்மாற்றத்தை மேற்கொண்டுள்ளார் புலவர்.

'குடிலைப் பொருள் வினவிய முருகனிடம் தானே பிரணவப் பொருள் என்று பிரமன் செருக்குற்று மொழிவதாகவும், இவ்வாறு மாறுபாடாகக் கூறிய அவனை வீரவாகு கைமுட்டியால் அறைந்து கந்தகிரி சிறையில் அடைத்ததாகவும் முதனூல் விவரிக்கும்.'[30] 'மிகைத்த கண்களை விழித்து, வெள்கி, விக்கி அப்பொருள் அறியாது திகைத்திருந்தனன்' (1 : 16 :10) என்றும், 'முருகனே அவன் முடிகுலுங்கக் குட்டிச் சிறை புரிந்தான்' (1 : 16 : 14-15) என்றும் கச்சியப்பர் மொழிவர். நாடோறும் அவுணர்கோன் அவையில் அஞ்சி அஞ்சிச் சாகும் பிரமனைச் செருக்குற்றுப் பேசும் ஆணவ மாந்தனாகப் படைத்தல் இயையுமாறில்லையாதலால், தன் அறியாமை எண்ணித் தவிக்கும் உணர்வினனாய் பிரமனை மாற்றிப் படைத்துள்ளார் (1 : 16 : 10). 'முகத்தில் ஒன்றதா அவ்வெழுத்துடைய முருகனே' (1 : 16 : 10) அதனை அறியாதானைத் தண்டித்ததாகப் பகர்ந்து காப்பியத் தலைமையை விழிப்புடன் போற்றுவர்.

முருகனது தூதனாகச் சென்ற வீரவாகு சூரபன்மன் அவையை அடைந்தபொழுது 'தனக்கு அரியணை இன்றெனின் சூரன் மதிக்க மாட்டான் என எண்ணி முருகனை உள்ளத்தில் ஏத்தி, அரியணை

பெற்றதாக' முதனூல் குறிப்பிடும்.[31] ''அவுணர்கோன் கீழியான் எளியவாய் நிற்றல் எம்பிரான் பெருமையின் இழிபென நினைத்து'' (3:12:49) அறுமுகன் அருளால் அரியணை பெற்றதாக வழிநூல் புகலும். எதிர்நிலைத் தலைவனிடம் தன்மதிப்பினைக் காக்க விழையும் மனநிலையைக் காட்டிலும் தன் தலைவன் பெருமையைக் காக்கத் துடிக்கும் உளநிலையுடையவனாக வீரவாகுவை உயர்த்த இம்மாற்றம் துணைபுரியும்.

சூரன் போருக்கு எழுந்து வருதலைப் பிரமன் முதலியோர் தன்னிடம் உரைத்தளவில், ''ஏ! வாயுவே இப்பொழுதே சிறந்ததும், மனதுபோல் வேகமாய் செல்கிறதுமான இரதத்தை சீக்கிரம் கொண்டு வா'' என முருகன் கட்டளையிட்டதாக முதனூல் மொழியும்,[32] ''தன்னோடு சூரன் பொரவருதலை உணர்ந்த கந்தன் பவனனைக் குறிப்பின் நோக்க 'மனவேகம்' எனப் பெயரிய தேரினை உடனே கொணர்ந்தாதகக் (4 : 13 : 45) கச்சியப்பர் பாடுவர்.

> *''கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்*
> *மாறாநீர் வையக் கணி''*[33]

என்ற குறள்வாழ்வுடையவனாகத் தேரோட்டியைக் காட்ட இம் மாற்றத்தை ஆசிரியர் மேற்கொண்டுள்ளார் எனலாம்.

வள்ளியம்மையை வளர்க்கும் பேறுபெற்ற நம்பிராசனைக் குழந்தை அற்றவனாகக் கூறும் முதனூற் கருத்தை[34] மாற்றி 'மைந்தர் பலருக்குத் தந்தையாக விளங்கியதாகவும், மகட்பேறு உன்னியே தெய்வதம் பராவி வருவதாகவும்' (6 : 24 : 18) கச்சியப்பர் புகலுவர். உடன்பிறப்பின்றி மலட்டுக் குடும்பத்தில் வளரும் பெண்ணாகக் காட்டுதலைவிட தமையன்மார் பலருள்ள குடும்பத்தில் வளரும் பெண்ணாக வள்ளியைக் காணவேண்டும் என்ற கவிஞரின் வேட்கையை இம்மாற்றத்தால் உணர்கின்றோம்.

கதைமாந்தரது மனவளர்ச்சி, அரசியல் அறிவு, பாச உணர்வு முதலிய பண்புகளை வெளிப்படுத்திக்காட்ட, கச்சியப்பர் கதை மாந்தரின் உரை, செயல் முதலியவற்றைப் பெருக்கிப் பாடுவர்.

வீரவாகுவை எதிர்த்துத் தம் மகனாம் வச்சிரவாகு மடிந்தமை அறிந்த சூரனும் அவன் மனைவியரும் ''மிகுந்த துக்கமடைந் தனர்''[35] என்று மட்டும் முதனூல் சுட்டும். கச்சியப்பர், 'உள்நிகழ் அன்பு சென்று உயிரை ஈர்த்திட' சூரன் இரங்கிப் புலம்பியமையினை யும் 'பழிதவிர் கற்புடைப் பதுமையும்' சூரன் புல்லிய பின்முறைப் புணர்வின் மாதரும் சேடியரும் எய்திய துயர் நிலையினையும் உருக்க மாக ஆறு பாக்களில் (3 : 20 : 2-7) விரித்துப் பாடுவர். பகைவரோடு பொருது களத்தில் இறந்த அக்கினிமுகனுக்காகச் 'சூரபன்மன் மிகவும் கதறி அழுதான்'[36] என்று முதனூல் சுருக்கமாக உரைக்கும். கவிஞர், ஒன்பது செய்யுட்களில் (4 : 8 : 233-241) அவன் புலம் புதலை விரித்துரைத்துத் 'தந்தை மகன்மை உணர்வினையும், சிறந்த வீரர்களை இழத்ததால் ஏற்படும் சூரன் தனிமை உணர்வினையும் புலப்படுத்துவர். பானுகோபன் மடிந்தமை கேட்டுச் சூரன் முதலியோர் புலம்புதலைப் பன்னிரண்டு சுலோகங்களில் முதனூல் சுருக்கி உரைத் தமையினை[37] வழிநூல் நாற்பத்துநான்கு விருத்தங்களில் (4 : 11 : 161-205) விரித்துப்பாடும். 'மகன் மடிந்ததால் பகைவர்கள் இனிப் பெறவிருக்கும் ஆக்கத்தை எண்ணி ஏங்கும்' சூரன் உணர்வையே வடமொழிநூல் புலப்படுத்தும்.[38] அதனால் வீரமகனை இழந்து கை யற்றுத் தவிக்கும் தந்தையின் உளக்குமுறலை உணர முடியவில்லை.

*''கூற்றோன் நகரில் குறுகினையோ அன்னதன்றேல்*
*வேற்றோர் இடந்தன்னில் மேவினையோ யானொன்றுந்*
*தேற்றேன் தனியே தியங்குகின்றேன் இத்துயரம்*
*ஆற்றேன் அரசேயென் னாருயிரே வாராயோ"*

*(4 : 11 : 177)*

என்றும், ''மிகுதுயரம் வந்த வழிச் சாகுற்றதோர் வரமும் சங்கரன் பால் பெற்றிலனே'' (4 : 11 : 174) என்றும், ''அழியாமல் பெற்ற வரமும் பிழையாய் முடிந்ததுவே'' (4:11:175) என்றும் அவன் கதறும் துயரக் குரலில் மைந்தனை வேண்டிக் கரையும் நிலையையும் அஃ தின்றேல் சாதலை வேண்டித் தவிக்கும் தாக உணர்வினையும் உணர்த்துவர் கச்சியப்பர். பானுகோபன் போர்க்களம் புகுமுன் சுட்டிய அறிவுரைகளை மீளவும் எண்ணிப்பார்க்கும் (4 : 11 : 166) மனவளர்ச்சியுடையவனாகச் சூரனை வடித்துக்காட்டுவர்.

சிங்கமுகனை இழந்து சூரன் புலம்பும்பொழுதும் 'பகைவர் இனிப்

பெறும் உயர்நிலைக் குறித்து ஏங்கும் உணர்வினையே முதனூலில் காண்கின்றோம்.'[39] சிங்கமுகன் 'உண்டிக் கடனும் ஒருவயிற்றோன் செய்கடனும்' (4 : 12 : 471) நிறைவேற்றியவன் என்பதனையும், 'உண்டு போர் என்னின் உளங்களிக்கும்' (4 : 12 : 468) அவன் வீர இயல்பினையும் சூரன் புலம்பலில் கச்சியப்பர் புலப்படுத்துவர்.

> ''பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
> பின்னை யுளபொருளை யெல்லாம் பெறலாகும்
> என்னை யுடைய இளையோனே இப்பிறப்பில்
> உன்னை இனிப்பெறுவ துண்டோ உரையாயே"
>
> (4 : 12 : 469)

என்னும் அவனது அவலக் குரலில் தன் புதல்வர்கள் தனக்காக வீரப் போரிட்டு மடிந்த துயரைக் காட்டிலும் சிங்கமுகன் பிரிவுத் துயர் ஒருபடி மிகுந்துள்ளமையினைச் சுட்டிச் சூரன் துயர்நிலையின் வளர்ச்சியையும் காட்டுவர்.

இரண்டாம் நாள் சூரபன்மன் போருக்குச் செல்லுகையில் தன் தம்பியர் மக்களாம் 'அதிசூரனையும் அசுரேந்திரனையும் படைத் தலைவர்களாகப் பட்டங்கட்டி முந்து செல்லும்படி விடுத்தான்'[40] எனக் கூறிய முதனூற் செய்தியினைத்,

> ''திரைகொள் வேலைபோல் நிறைதரு கோட்டகஞ் சிறிதோர்
> கரையி லாவழி யுடைந்திடும் அன்னது கடுப்பப்
> பொருதி றற்படை பலவுள என்னினும் போற்றும்
> அரச ரில்வழி நின்றிடா தன்னவை அழியும்" (4 : 4 : 15)

எனப் பகர்ந்து, அவர்களைச் சேனை முதல்வராய்ச் செல்லப் பணித்தான் என விரித்துரைப்பர் வழிநூலாசான்.

> ''நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
> தலைமக்கள் இல்வழி இல்''[41]

என்ற படைமாட்சிப் பண்பினை அறிந்தவன் சூரபன்மன் என்பதனை இவ்விரிவாக்கம் உணர்த்தும்.

வீரவாகுவை வென்றுவந்த பானுகோபனைச் சூரபன்மன் பாராட்டியதனைத் "தன் பக்கல் இருத்திப் பிரியமான வார்த்தை களைக் கூறினான்"[43] எனச் சுருக்கமாக வடமொழி நூல் குறிப்பிடும். "தந்தையாயினோர் இனிது வீற்றிருப்பது தமது மைந்தர் தங்குடி பரித்த பின்னன்றி மற்றுண்டோ?" (4 : 5 : 174) என்றும், "அன்று நோற்றதற்காகச் சிவன் கொடுத்தனன் என்பது சென்ற வார்த்தைகள். இவ்வரசு இன்று நீ தரப்பெற்றனன் ஐயா" (4 : 5 : 175) என்றும் அச்சூரன் உரையினை விரித்துரைத்துத் தனக்கு அனைத்தும் நல்கிய சிவனாகவே தன் மகனைக் காணும் சூரனது மனஉணர்வினைப் புலப்படுத்துவர் கச்சியப்பர்.

வீரவாகுவிடம் தோற்ற பானுகோபன் விண்ணில் மறைந்து நின்று, "இந்த நிலையில் தான் போய்விட்டால் அபகீர்த்தி ஏற்படும் எனக் கருதி மோகப் படையினை விடுத்தான்"[43] என்று முதனூல் விளம்பும். விண்ணில் மறைந்து நின்ற பானுகோபனின் உளப் போ ராட்டத்தை அவன் தனிமொழியாகப் பதினொரு பாக்களில் (4 : 5 : 148-158) விரித்துப்பாடி, 'தந்தையின் புகழில் உள்ள அவன் விழிப்புணர்வையும்' (4 : 5 : 150), பழிக்கு அஞ்சும் அவன் புறவறத்தையும் (4 : 5 : 152) சுட்டிச் செல்வர். பானுகோபன் களம் புகுமுன் தன் தந்தைக்கு இறுதியாக உரைத்த உறுதியுரை யினைக் கச்சியப்பர் பத்துப்பாக்களில் (4 : 11 : 12-21) பெருக்கிப் பாடுவர். "நாம் தேவர்களைத் துன்புறுத்தியதால் கந்தன் நம் படைகள் யாவற்றையும் அழித்தார்............... இப்பொழுதாகிலும் தேவர்களைச் சிறை விடுத்தால் நாம் உயிர் தப்ப முடியும்"[44] என்று பானுகோபன் எடுத்துரைத்ததாக முதனூல் இயம்பும். தழுவுகாப்பிய மோவெனின் அவன் உறுதியுரையினை விரித்துப் பேசி, இறுதியில்,

*"வெஞ்ச மஞ்செய வல்லவர் கிடைத்திடின் மிகவும்*
*நெஞ்ச கந்தளிர்ப் பெய்துவன் நேரலர் சமருக்*
*கஞ்சி னேன்என்று கருதலை அரசநீ இன்னும்*
*உஞ்சு வைகுதி யோவெனும் ஆசையால் உரைத்தேன்"*
(4 : 11 : 20)

எனவும் மொழிந்ததாகப் புகலும். 'நாம் உயிர் தப்ப முடியும்' என்று தன்னை உளப்படுத்திப் பேசும் முதனூல் பானுகோபனைக் காட்

டிலும் 'தான் மடிந்தாலும் தன்தந்தை உய்ய வேண்டும்' என்ற ஆசைப் பெருக்கில் ஊன்றி நிற்கும் தமிழ்க் கந்தபுராணப் பானுகோபன் பண்பு நிலையில் வளர்ந்திருப்பதனையும் மகன் தந்தை உறவுணர்வு முழுமையுறுவதையும் இப்பெருக்கம் தெளிவுபடுத்தும். "ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை ஆசைதான் அச்சீதைபால் விடுதியாயின் அனையவர் சீற்றந் தீர்வர் போதலும் புரிவர் செய்த தீமையும் பொறுப்பர் உன்மேல் காதலால் உரைத்தேன்"[45] என இந்திரசித்து இராவணனுக்கு மொழிவதும் இங்கு நினையத்தகும்.

சூரபன்மன் தன் மகனது உறுதிமொழிக்கு மறுமொழிகையில் "பிரமன் முதலியோரால் நமஸ்கரித்துத் துதிக்கப்பட்ட நான் நெஞ்சில் உயிர் துடித்தாலும் ஆரம்பித்ததைக் கைவிடேன். அவ்வாறு கை விட்டால் மிகுந்த அபகீர்த்தி உண்டாகும்"[46] என உரைத்ததாக முதனூல் ஓதும். கச்சியப்பர் ஏழு பாக்களில் (4 : 11 : 23-29) அம் மறுமொழியை விரித்துரைத்துச் சூரனின் விழுமிய பண்பாகிய மான உணர்வினை வடித்துக் காட்டுவர்.

*"இறந்திட வரினும் அல்லால் இடுக்கணொன் றுறினும் தம்பால்*
*பிறந்திடு மானந் தன்னை விடுவரோ பெரிய ரானோர்*
*சிறந்திடும் இரண்டு நாளைச் செல்வத்தை விரும்பி யானும்*
*துறந்திடேன் பிடித்த கொள்கை சூரனென் றொருபேர் பெற்றேன்"* (4 : 11 : 27)

என்னும் சூரன் உரைகளில், நிலையாத செல்வ வாழ்வைக் காட்டிலும் நிலைத்து நிற்கும் மான வாழ்வினையே அவன் உயிராகப் போற்றியதனைக் காண்கின்றோம்.

வீரவாகுவிடம் தோற்ற இரணியன், "தந்தைக்குப் பிண்டம் போட பிள்ளைகள் இல்லெனின் அபகீர்த்தி உண்டாகும். ஆகையால் நான் இருந்தே தீரவேண்டும் என எண்ணி மீனுருக்கொண்டு கடலுள் மறைந்ததாக"[47] முதனூல் மொழியும். தமிழ்க் கந்தபுராணமுடையார் பகைவரிடமிருந்து உயிர் தப்புமுன் அவனுக்கு ஏற்பட்ட உளப்போராட்டத்தினைப் பத்துப் பாக்களில் (4 : 7 : 122-131) விவரித்துத் தான் பெறும் வசையினும் தந்தை பெறும் வசைக்கு

அஞ்சியே இத்தகைய முடிவிற்கு அவன் வந்தமையினையும் (4:7:128) சுட்டித் தந்தைக்காக எதனையும் ஏற்கத்துணியும் தாயுள்ளம் கொண்டோனாக இரணியனை உயர்த்துவர். சூரபன்மன் தோற்று மறைந்த பின்னர், இரணியன் புலம்பலை இரண்டு சுலோகங்களில் ஓதும்[48] முதனூல் பகுதியினைக் கச்சியப்பர் இருபத்தொரு பாடல்களில் விரித்து ஒரு படலமாகப் (இரணியன் புலம்புறு படலம் 4:15) பாடி, தந்தை-மகன் ஆகிய இருவரின் பண்புகளையும் புலப்படுத்தியுள்ளார்.

அக்கினிமுகனை எதிர்த்துத் தம்தம்பியர், மாண்டமை உணர்ந்த வீரவாகுவின் புலம்பலைப் "பலவாறாகப் புலம்பினார்"[49] என்று மட்டும் முதனூல் சுட்டும். தழுவுநூல் ஒன்பது பாக்களில் (4 : 8 : 191-199) அப்புலம்பலை அவலச் சுவை ததும்பப் பெருக்கியுரைத்து வீரவாகுவின் உடன்பிறப்புணர்வையும் கடமையுணர்வையும் வெளிப்படுத்தும்.

மகேந்திரச் சிறையில் சயந்தன் அவுணர்களால் துன்புறுத்தப்படுவதனை மூன்று சுலோகங்களில் உரைக்கும்[50] முதனூற் செய்தியினை மிக விரிவாக ஐம்பத்தாறு செய்யுட்களில் (3 : 9 : 1-56) படிப்போர் நெஞ்சு உருகும்வண்ணம் பாடுவர். வான்பதத்தைக் கோதென்று தெளிந்து சிவன்பதத்தையே நிலையெனக் கொள்ளும் (3 : 9 : 75) சயந்தனது மனவளர்ச்சியைக் காட்ட இத்தகைய விரிவாக்கம் இன்றியமையாததாகும்.

கதைமாந்தரின் பண்புகள் முழுமையுறவேண்டி முதனூலில் காணப்படாத சில நிகழ்ச்சிகளைக் கவிஞர் படைத்து மொழிதலும் உண்டு.

சூரபன்மன் தன்னாசானாகிய சுக்கிரனை முதன்முதல் சந்திக்கும் பொழுது, 'உன்பால் என்னெஞ்சம் உருகும்; அஃதன்றி என் பானதும் உருகாநிற்கும்; எனையறியாது அன்பாகி நின்றது' (2 : 8 : 28) என உரைக்கும் பகுதிகள் வெய்ய சூரனுக்கும் அன்புருகும் நெஞ்சம் உண்டு என்பதைப் புலப்படுத்தும். அமரரைச் சிறை வைத்தமையினைப் பிழையெனத் தன்னிடம் சுட்டிய வீரவாகுவிடம், 'எங்கள் குலத்தை நலித்து வறுமை செய்ததால் அவர்களைச்

சிறை வைத்ததாகவும், அவ்வாறு செய்தல் எங்கள் முன்னோர் வகுத்த நெறிமுறையே' (3 : 12 : 115) என்றும் சூரன் பகர்தல் தன் குலமரபிற்கு மாறாத நெறியில் செல்லும் அவன் பண்பினைக் காட்டும்.

ஒற்றுவர் மூலம் பகைவரது உண்மை இயல்புணர்ந்த சூரன் தன் அமைச்சர், இளவல், மைந்தர், தானைத்தலைவர் முதலி யோரிடம் ஆராய முற்படுங்கால்,

*"துய்த்திடும் திருவினில் வலியிற் சூழ்ச்சியில்*
*எத்துணைப் பெரியர்தாம் எனினும் மேலையோர்*
*கைத்தொரு வினைசெயக் கருதிற் றம்முடை*
*மெய்த்துணை யோரைமுன் வினவிச் செய்வரால்"*

(3 : 21 : 22)

எனப் புகன்று ஆலோசனை தொடங்குதலால், 'மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்'[51] என்னும் வள்ளுவநெறி நிற்கும் அவன் இயல் பினைக் காண்கின்றோம். தன் மகனாம் பானுகோபனை முதனாட் போருக்கு உய்க்கையில் 'அவர் சிறியர்; யான் மன்னர் மன்னன்; ஆதலின் வறிது இருந்தேன்' (4 : 3 : 9) எனப் பகைமேற் செல் லாமைக்குரிய காரணத்தையும், 'சிவன் நந்தமைப் பொர கந்தனை விடுத்தனன்; ஆதலின் யானும் மைந்தனைக் கொண்டு வேறலே முறை' (4 : 3 : 10) எனத் தன் மைந்தனை அனுப்புதற்குரிய கார ணத்தையும் விளக்குதல், சூரனது தற்செருக்கையும் தருக்கமுறையில் பேசும் அவன் நாநலத்தையும் உணர்த்தும்.

தன்னை உயர்வாக மதித்தலோடு பகைவரை மிகத் தாழ் வாகக் கருதுதலே சூரன் வீழ்ச்சிக்கு வித்தாகும். முருகனது பேராற் றலையும், முழுமுதற்றன்மையையும் தன்னிடம் விரித்துரைத்த சிங்க முகனிடம்,

*"காற்றிற் றள்ளுண்டு நெருப்பினிற் சுடுண்டு கங்கை*
*ஆற்றில் தாக்குண்டு சரவணம் புக்கலை யுண்டு*
*வேற்றுப் பேர்முலை உண்டழு தேவிளை யாடும்*
*நேற்றைப் பாலனை யோபரம் பொருளென நினைந்தாய்"*

(3 : 21 : 144)

என்னும் சூரன் மறுமொழியில் பகைவரை எளியராக மதிக்கும் அவன் அறியாமையினைக் காண்கின்றோம்.

> *''ஊனவில் இறுத்து ஒட்டைமா மரத்துள் அம்பு ஒட்டி,*
> *கூனி சூழ்ச்சியால் அரசிழந்து உயர்வனம் குறுகி*
> *யானிழைத்திட இல்லிழந்து இன்னுயிர் சுமக்கும்*
> *மானுடன் வலி நீயலாது யாருளர் மதித்தார்''*[52]

என இராவணன் வீடணனிடம் உரைக்கும் பகுதியும் இங்கு நினையத் தக்கது.

களத்தில் முருகனது பேருருக் கண்டு அவன் திருவருளைப் போற்றிப் புகழும் நிலையில்,

> *''சூழுதல் வேண்டுந் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை*
> *தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந் தாலும்*
> *ஆழுதல் வேண்டுந் தீமை அகன்றுநான் இவற்கா ளாகி*
> *வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே''*
> *(4 : 13 : 444)*

எனக் குறிப்பிடுதல் அவனது விழுமிய பண்பார்கிய மான உணர்வினை எடுத்துக்காட்டும்,

வீரவாகுவைக் கூறியது கூறும் தூதுவனாக முதனூல் காட்டும்.[53] தழுவு காப்பியமோ தான்வகுத்துக் கூறும் தூதுவனாக அவனை உயர்த்திக்காட்டும் (3 : 12 : 98 - 111). இத்தூதுவன் பண்புகளைக் காப்பியமாந்தர் வாயிலாக வெளிப்படுத்தற்கும், தம்மரசனைப்பற்றி மகேந்திர மக்கள் கொண்டுள்ள எண்ணத்தை வெளிப்படுத்தற் கும் வீரவாகுவைக் கண்ட அவையோர் கூற்றுக்களாக இருபது பாடல்களை (3 : 12 : 64-83) வழிநூல் படைத்துக்காட்டியுள்ளது.

முருகனைப் பாலன் என்று இகழ்ந்த சூரனுக்கு, வீரவாகு, ''நொய்ய சொற்களால் எந்தையை இகழ்ந்தனை நொடிப்பில் வெய்ய நாத்துமித்து உன்னுயிர் வாங்குவன் விடுத்த ஐயன் ஆணை யன்றாதலின் அளித்தனம்'' (3 : 12 : 148) என மறுமொழிதலும், சூரன் ஆயிரவரிடம், ''ஒற்றுமை செய்தோன் உயிர் ஒறுத்தல் பழி

வல்லே பற்றியிவனைச் சிறைப் படுத்திடுதிர்'' (3 : 13 : 154) எனக் கட்டளையிடுதலும், தூதுவனும் வேந்தனும் அவரவர் பண்பில் தலைநிற்றலுக்கு விளக்கங்களாக அமைந்துள்ளன.

தன்னிடம் எதிர்த்துத் தோற்ற சயந்தனை அவுணர்கள் துன் புறுத்த முயலுகையில் பானுகோபன்,

*''வரிவில் வாங்கியே யான்விடுஞ் சரம்பட மயங்கிப்*
*பெரிது மெய்தளர் வுற்றனன் பேசவுங் கில்லான்*
*கருத லானென இவன்றனை வருத்தலிர்'' (2 : 43 : 90)*

எனக் கூறுதல், பகைவனையும் அருளொடு நோக்கும் அவன் ஈர நெஞ்சினைக் காட்டும்.

## 5. பாவிகம்

காப்பியத்தின் அகஉறுப்பாம் பாவிகக்[54] கருத்துக்கள் கதை மாந்தர் கூற்றிலும் கவிக்கூற்றிலும் வெளிப்படும் வண்ணம் பல செய்திகளைப் படைத்தும் விரித்தும் மொழிகுவர் கச்சியப்பர்.

அ) ஊழ்

சூரனது திருவோலக்கச் சிறப்பைக் கண்டு வியந்த வீரவாகு,

*''பீடுறு இவ்வளம் ஆயின பெற்று*
*நீடுறு மாறு நினைந்திலன் வெய்யோன்*
*வீடுறு கின்ற விதித்திறன் அன்றே'' (3 : 12 : 42)*

என்றும், தன் தமையனுக்குத் தக்கன எடுத்துரைத்தும் கேளாத நிலைகண்டு வருந்திய சிங்கமுகன்,

*''அலக்கணுற் றிருந்துநாம் இரங்கி ஆவதென்*
*விலக்கரும் விதியையாம் வெல்ல வல்லமோ''(3 : 21 : 164)*

என்றும், பானுகோபன் தன் தந்தைக்கு உய்யலாம் வழி கூறியும் பயனுறா நிலையில், ''மெய்வகை விதியை யாரே வென்றவர்'' (4 : 11 : 30) என்றும் கதைமாந்தர் கூற்றிலும், இறுதி நாட் போரில் சூரன் சேவலும் மயிலுமாக வடிவம் எடுத்து முருகனைத்

தாக்க முயன்றதனை, ''ஆட்படு நெறியிற் சேர்த்தும் ஆதியின் ஊழ் தந்து உய்க்கத் தாட்படை மயூரமாகி'' (4 : 13 : 494) வந்தான் எனக் கவிக்கூற்றிலும் படைத்து மொழிந்து எதிர்நிலைத் தலைவன் ஊழ் இருப்பினை வலியுறுத்துவர். பிரமன் இந்திரனுக்கு ஆறுதல் சொல்லும்போதும் (1 : 3 : 45), வீரவாகு மகேந்திரச் சிறையில் வாடும் சயந்தனைத் தேற்றும்போதும் (3 : 11 : 25) தேவர்களின் ஊழ் இருப்பினைக் கதைமாந்தர் வாயிலாகப் படைத்து மொழிவர்.

ஆ) தவம்

அசுர குருவாகிய சுக்கிரன் சூரனுக்குத் தவத்தை ஆற்றும் முறையினை விளக்கியமையினை,

*''மனத்தொடு புலனொன் றாக்கிப்*
*பொய் கொலை களவு காமம் புன்மைகள் உறாமே போற்றிச்*
*செய்குதி தவத்தை யென்னாச் செவியறி வுறுத்தல்*
*செய்தான்''* (2 : 8 : 33)

என்று படைத்து மொழிகுவர். சூரன் தவத்தால் பெற்ற வளர்ச்சியினைச், ''சிவன் சேவடி பேணியவர்களுள் சூரபன்மாப் போல் ஏவர் படைத்தனர் இத்திருவெல்லாம்'' (3 : 12 : 40) என்று வீரவாகுவின் கூற்றிலும் சுட்டுவர்.

சூரனுக்குத் தவத்தின் பெருமையினை விளக்குமுகமாக அமைந்த மார்க்கண்டேயர் வரலாற்றை ஐந்து சுலோகங்களில் விளக்கும்[55] முதனூற்பகுதியை 285 பாக்களில் ஓர் படலமாக விரித்துப் பாடித் (மார்க்கண்டேயப் படலம் 2 : 5) தவத்தின் உயர்வினை விளக்குவர். மகேந்திரத்தைக் காணும் வீரவாகுவின் கூற்றில்,

*''நாடி மேலெழத் தசையிலா துலறியே நரையாய்க்*
*கோடு பற்றிமுத் தசைத்திடு வோரையுங் கூற்றால்*
*வீடு வோரையும் பிணியுழப் போரையும் மிடியால்*
*வாடு வோரையுங் கண்டிலம் இதுதவ வலியே''*
(3 : 8 : 58)

என மொழிந்து அவுணர்கள் தவத்தால் பெற்ற வளர்ச்சியினைப் புலப்படுப்பர்.

இ) அருள்

தீயரையும் தூயராக்கும் ஆண்டவன் அருள்நிலையினை,

*''ஆறுமுகன் நல்கும் முத்தியலதேல் என்னுண்டு நாளும்*
*வினை செய்துழன்ற இவன் ஆருயிர்க்குநிலை'' (3 : 12 : 45)*

எனச் சூரனைக் கண்ட வீரவாகுவின் தனிமொழி மூலமாகவும்,

*''தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்*
*தூயவ ராகிமேலைத் தொல்கதி யடைவர் என்கை*
*ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர்இந் நாட்செய்த*
*மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்*
*றுய்ந்தான்'' (4 : 13 : 496)*

எனக் கவிக்கூற்றாகவும் படைத்துரைப்பர்.

சூரனுக்கு வரங்கள் அருளிய சிவன் இறுதியில், ''என்னுடைய அழிவற்ற சத்தியினாலன்றி வேறு யாராலும் உனக்கு அழிவுண்டாகாது. ஆனாலும் உனக்கு மரணம் நிச்சயம்''[58] என முதனூல் உரைத்தவற்றுள் 'மரணம்' பற்றிய கருத்துத் தீயரையும் தூயராக்கும் ஆண்டவன் அருள்நிலையாம் பாவிகத்திற்கு மாறுபடுதலால் கச்சியப்பர் அதனை மட்டும் விடுத்துள்ளார்.

## 6. தமிழ் மரபு

தமிழ் இலக்கிய மரபுகள், தமிழ்ப்பண்பாடு போன்ற காரணங்கட்காக முதனூலிலிருந்து சில செய்திகளை மாற்றியும், பெருக்கியும் உரைத்தலுடன் சில நிகழ்ச்சிகளை விடுத்தலும் கச்சியப்பரின் இயல்பாகும்.

பின்னர் நிகழும் நன்மை தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறியாகிய நிமித்தத்தினைத் தொல்காப்பியர், ''நாளும் புள்ளும்

பிறவற்றின் நிமித்தமும்"[57] என்று குறிப்பிடுவர். தமிழ் இலக்கிய உலகில் திகழும் இவ்வகை நிமித்தங்களைக் கந்தபுராணத்தில் காணலாம்.

வச்சிரவாகு வீரவாகுவோடு பொரச் செல்லுகையில் ஏற்பட்ட தீநிமித்தங்களை முதனூல், 'பட்டுப்போன மரத்தில் காகம் கரைந்ததாகவும், நரிகள் ஊளையிட்டதாகவும், மாதவிலக்கு ஏற்பட்ட பெண், கைம்பெண், செவ்வாடை தரித்த பெண், எண்ணெய் தேய்த்துக் கொண்டவன், உறுப்புக் குறையுடையோர் ஆகியோர் எதிர்ப்பட்டதாகவும்' வரிசைப்படுத்தும்.[58] கச்சியப்பர், 'அவுணர் தேர்களில் பேய்கள் பிணங்கி மலைதலையும், வச்சிரவாகுவின் சிலையுந் தூணியும், தேர்க்கொடியும் நிலத்தில் வீழ்தலையும், இடக்கண்ணும், இடப்புயமும் துடித்தலையும், முகிலின்றி விண்ணில் இடித்தலையும்' (3 : 17 : 34-36) நிமித்தங்களாகச் சுட்டித் தமிழ்இலக்கிய மரபிற்குத்தக இயன்றளவு மாற்றியுள்ளார்.

முசுகுந்தன் வரலாற்றை இருநூல்களும் விரிவாகப் பாடியுள்ளன. 'முசுகுந்தன் கந்த விரதமிருந்து வீரவாகு முதலியோரைத் தனக்குத் தம்பிகளாகப் பெற்றதாகவும்'[59] பின்னர் 'வீரவாகு தன் மகள் சித்திரவல்லியை மூத்த சகோதரனாகப் பாவிக்கப்பட்டு வந்த முசுகுந்தனுக்கு முறைப்படி விவாகம் செய்து கொடுத்ததாகவும்'[60] முதனூல் விளக்கும்.

உடன்பிறந்தோனுக்குப் பெண்கொடுத்தல் தமிழ் ஒழுக்கம் அன்மையின், இந்நிகழ்ச்சியைக் கச்சியப்பர் விழிப்புடன் மாற்றி அமைப்பர். முருகனிடம் வரம் கேட்கும் முசுகுந்தன் "ஒன்று கேண்மையின் துணைவராய்த் தருதி" (6 : 23 : 27) என்று வேண்டி வீரவாகு முதலியோரைப் பெற்றதாகவும், வீரவாகு தன் மகளை அவனுக்கு மனைவியாக்கியமையினை,

> *"சித்திர வல்லி யென்னுஞ் சீர்கெழு புதல்வி தன்னை*
> *மெய்த்தகு வதுவை நீரால் விதிமுறை வழாமல் ஈந்தான்"*
> *(6 : 23 : 39)*

எனவும் கவனமாகப் பாடுவர்.

சயந்தனது கனவில் தோன்றிய முருகனது தோற்றத்தை வருணிக்கையில் பன்னிரு கரத்தினை மட்டும் சுட்டும்[61] முதனூற் பகுதியை விரித்து அக்கரங்களில் அவன் ஏந்தியுள்ள பொருட்களை யும் சேர்த்து,

*"வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்*
*மாறி லாதவேல் அபயமே வலமிடம் வரதம்*
*ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த*
*ஆறி ரண்டுகை அறுமுகங் கொண்டுவேள் அடைந்தான்"*
*(3 : 10 : 4)*

என்று பாடுவர். நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முருகன் கரத்தில் இலங்குவதாகக் குறிப்பிடும் அங்குசம், வேல், மணி[62] ஆகியவைகள் இங்கும் சுட்டப்பெறுதல் நினையத்தக்கது. தெய்வயானைக்குச் சேடி யர் அணியுறுத்துவதனை "தேவ சேனையை ஆபரணம் வஸ்திரம் இவைகளால் அலங்கரித்தனர்"[63] என்ற அளவிற் சுட்டும் முதனூற் செய்தியினைப் பன்னிரண்டு பாக்களில் (5 : 2 : 173-184) விரித் துரைப்பர். திருமுருகாற்றுப்படையில் திகழும் சூரரமகளிர் வருணனை யினைத் தழுவி இப்பகுதி அமைந்துள்ளது உளங்கொளற்குரியது. 'பொய்யற்ற கீரன்' (6 : 24 : 264) என்று நக்கீரரைப் பாராட்டும் கச்சியப்பர் திருமுருகாற்றுப்படைக் கருத்துக்களைப் போற்றித் தழுவிக் கொள்வதில் வியப்பில்லை.

சீகாழியிலிருந்த இந்திரன் தேவர்கள் வேண்டுகோளை ஏற்றுக் கயிலாயம் ஏகுகையில் இந்திராணியிடம் பிரிவுணர்த்திய செய்தி யினை மூன்று சுலோகங்களில் முதனூல் மொழியும்.[64] கச்சியப்பர், பிரிவுணர்த்தல், மறுத்தல், உடன்படல் என்ற முறையில் அச்செய் தியினைப் பெருக்கி ஓர் படலமாகப் (2 : 31) பாடித் தமிழ் அக மரபினைப் போற்றுவர்.

இரண்டாம் நாட் போரில் தோற்று வந்த சூரபன்மன், "உறக்கமின்றி அன்றிரவு முழுதும் சண்டையைப்பற்றி பத்மகோப ளையுடன் யோசனை செய்து கொண்டிருந்தான்"[65] என்றும், தெய்வ யானையின் திருமணம் காணவந்த உமை, "நாட்டுப்பெண்ணை

தயவுடன் பார்த்துக் கையினால் தடவிக்கொடுத்து இரு கன்னங்களிலும் முத்தமிட்டாள்''[66] என்றும் முதனூல் பகரும். வேந்தர்கள் மனைவியரிடம் அரசியலை ஆராய்தலும், மாமியார் மருமகட்கு முத்தங் கொடுத்துப் பாராட்டுதலும் தமிழ் உலகியல் அன்மையின் ஆசிரியர் அவைகளை விடுத்துள்ளார். 'மாதர் மாட்டு மகிழ்ச்சியொடு தெளிதல் நீதியன்று'[67] என்ற பெருங்கதை ஆசிரியர் கூற்றும் ஈண்டு நினையத்தக்கது.

தமிழ்மரபினைப் போற்றும் வகையில் வழிநூலாசான் பல செய்திகளைப் படைத்து மொழிகுவர். நம்பியின் செயல்களாகக் காளைமாட்டினை அறுத்துச் சுற்றத்தாருக்கு உணவு படைத்தல், தொண்டகம் முழக்கிக் குரவை அயர்தல் (4 : 24 : 39), அரிசியும் மஞ்சளும், மலரும் சிதறி மறியறுத்து முருகனுக்குப் படைத்தல், வேலனைக் கொண்டு வெறியாட்டுவித்தல் (4 : 24 : 40) வயது முதிர்ந்த பெண்டிரைக்கொண்டு குழந்தைக்குப் பெயரிடுதல் (4 : 24 : 42) ஆகியன தமிழ்நாட்டு வேட்டுவக் குடியினரின் பழக்கவழக்கங்களை எடுத்துக் காட்டுவதற்கென ஆசிரியர் படைத்துக்கொண்ட கூறுகளாகும்.

காமவேளை இழந்து கைம்மை நோன்பு மேற்கொண்டு காத்திருந்த அவன் மனைவியைத் "தாபத நிலையளாகி இன்னலையடைந்தாங் குற்ற இரதி" (1 : 10 : 88) என்று குறிப்பிட்டுத் தொல்காப்பியப் புற மரபினைப் போற்றுவர். 'அழிகுநர் புறக்கொடை அயில் வாளோச்சா கழிதறுகண்மை'யாகிய புற ஒழுக்கத்தினைப்,

> *"படையி ழந்திடு நின்னுயிர் உண்டிடில் பழியாய்*
> *முடியு மென்றுதாழ்க் கின்றனம் தருமத்தின் முறையால்"*
> *(4 : 4 : 316)*

எனக் காப்பியத்தலைவனாம் முருகன் கூற்றில் படைத்துப் பாடுவர். சூரன் அமைச்சியற் படலத்தில் சிங்கமுகன் அறிவுரைக்கையில்,

> *"மன்னவர் செவியழல் மடுத்த தாமென*
> *நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்*
> *சொன்னவர் அமைச்சர்கள்" (3 : 21 : 92)*

என மொழிதலும் பிறவும் (3 : 21 : 93) வள்ளுவத்தின் ஊற்றமாக விளங்குகின்றன.

## 7. கந்தன் தமிழ்த் தெய்வம்

புராணத்தலைவனாம் முருகனுக்குக் 'கந்தன்' எனும் பெயர் அமைந்த திறத்தைக் கூறுவதில் கச்சியப்பர் முதனூலினின்றும் மாறுபடுவர். "ஏ பார்வதி, உன் புத்திரன் மூவுலகத்திலும் பராக்கிரமத்தால் ஆக்கிரமித்து சஞ்சரித்தலால் கந்தன் எனப்படுகின்றான்"[68] எனக் கந்தன் என்னும் பெயர்க் காரணத்தைச் சிவன் உமைக்கு உரைத்ததாக முதநூல் குறிப்பிடும். "கந்தன் என்ற சொல் பகைவருடைய பராக்கிரமத்தை வற்றச் செய்கின்றவன் என்ற பொருளைத் தரும் என்று வடமொழி நிகண்டு கூறுகின்றது. 'சத்ருன் சோஷயதி இதி ஸ்கந்த" என இச்சொல்லிற்கு வடமொழிச் சிந்தனையோடு விளக்கம் காண்பர் அறிஞர்.[69]

"பற்றுக்கோடு என்பதை விளக்குஞ் சொல்லே கந்து எனப்படும். கந்து எனினும் பற்றுக்கோடு எனினும், கட்டுத்தறி எனினும் ஒக்கும். மாடு, ஆடு முதலியவற்றைக் கட்டுதற்குரிய கட்டுத்தறி அல்லது கற்றூண் கந்து எனப்படும். கந்தை இடமாகக் கொண்டு அல்லது பிளந்துகொண்டு எழுந்தருளிக் காட்சி நல்குபவனே கந்தன் அல்லது கந்தப்பிள்ளை எனப்படுவான். ............... கந்தன் என்பது கந்தின் இடமாகத் தோன்றுபவன் என்று பொதுவாகப் பொருள்படுமாயினும், அது சிறப்பாக முருகனையே குறிப்பதாகும்," என முருகனுக்குரிய 'கந்தன்' என்ற பெயரைத் தமிழ்ச் சொல்லாக அறிஞர் நிறுவுவர்.[70] கந்தாகிய கட்டுத்தறி மாடு ஆடுகளை ஒன்று சேர்த்துக் கொள்ளுதல் போல் உயிர்களை ஒன்று சேர்த்துக் கொள்பவன் கந்தன் என்ற தமிழ்ச் சிந்தனையின் வளர்ச்சி நிலையில் 'ஒன்று சேர்க்கப்பட்டவன்'[71] என்ற பொருளில்,

*"அந்த மில்லதோர் மூவிரு வடிவுமொன் றாகி*
*கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்"* (1 : 13:21

எனக் கவிக்கூற்றிலும்,

*"சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ யொன்றாய்ச் செய்தாய்*
*ஆயத னாலே கந்த னாமெனு நாமம் பெற்றான்"* (1 : 14 : 17)

எனச் சிவன் கூற்றிலும் மொழிந்து 'கந்தன்' என்ற பெயரைத் தமிழ்ச் சொல்லாகக் காண்பர் கச்சியப்பர்.

புராணத்துள் பலவிடங்களில் முருகனைக் குறிப்பிடும்பொழுது தமிழோடு இயைத்து மொழிதல் கச்சியப்பர் இயல்பு.

*''சங்கத் தவர்க்குள் தலையாந் தமிழ்ப்புலவன்''*(4:12:456)

என்றும்,

*''திருத்தமிழ் மதுரை தன்னிற் சிவன்பொருள் நிறுக்கு மாற்றால்*
*உருத்திர சருமனாகி உற்றிடு நிமலன்''* (4:13:261)

என்றும் பாடி முருகனைத் தமிழ்த் தெய்வமாகக் காண்பர்.

சிவனுக்கும் உமைக்கும் இடையில் கந்தன் எழுந்தருளியிருக்கும் தோற்றம் (சோமாக்கந்த வடிவம்) தமிழ்நாட்டிலேதான் மிகுதியும் போற்றப்பட்டதாகவும், வடநாட்டில் இந்தச் சிற்பம் புகழ்பெறவில்லையென்றும் ஆராய்ச்சியாளர் கருதுப.[72] சரவணத்தில் தோன்றிய முருகனைப் பிரமன் முதலியோர் மேற்சுட்டிய தோற்றத்திலேயே முதன்முதலாக வழிபட்டமையினை,

*''விடையுற்றிடு பரமற் குமவ் விமலைக்கும் விறற்சேய்*
*இடையுற்றது கண்டார்''* (1:13:27)

எனக் கச்சியப்பர் பாடுவர்.

### 8. சிவனும் முருகனும் வேறல்லர்

சிவனை முழுமுதற் பொருளாக ஏற்றுக்கொண்ட சைவவுலகில் முருகனை அச்சிவன் நிலைக்கு உயர்த்தும் அமைதிப் புரட்சியைப் படிப்படியாகச் செய்தவர் கச்சியப்பர். அப்படிநிலைகளில் ஒன்று, 'சிவனும் முருகனும் வேறல்லர்' என்ற கோட்பாட்டினை நிலைநிறுத்திய செயல். இக்கோட்பாட்டினைச் சிவன் வாய்மொழியாகவே படைத்துக் காட்டுவர் ஆசிரியர். திருவிளையாட்டுப் படலத்துள், உமை விரும்பியாங்கு முருகன் சிறப்புக்களை எடுத்தியம்பும் சிவனார் கூற்றில்,

''நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமேகந்தன்
தன்முக மாகியுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்து மொன்றாய்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற வன்றே''

எனவும்,

''ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்''
(1 : 14 : 18-19)

எனவும் விளம்பி, 'சிவனும் முருகனும் வேறல்லர்' என்ற கருத்தினை வற்புறுத்துவர்.

## 9. முருகன் தலைமை

தேவர்கள் முருகனிடம், ''இந்திரன் சேனாபதியாக இருக்கட்டும். தாங்கள் இந்திரனாக ஆகி சூரபன்மன் முதலிய அசுரர்களை அழிக்க வேண்டும்''[73] என வேண்ட, முருகன் ''இந்திரனே உங்களுக்கு இந்திரனாக இருக்கட்டும். நானே இந்த இந்திரனுக்கு சேனாபதியாகி சூரபத்மன் முதலியவர்களை சங்கரிக்கின்றேன்''[74] எனப் புகன்றதாக முதனூல் விவரிக்கும். கச்சியப்பர்,

''வானவர் கோனை நோக்கி வறிதுற நகைத்துச் செவ்வேள்
நீநமக் களித்த தொல்சீர் நினக்குநாம் அளித்தும் நீவிர்
சேனை களாக நாமே சேனையந் தலைவனாகித்
தானவர் கிளையை யெல்லாம் வீட்டுதும் தளரேல் என்றான்''
(1 : 14 : 106)

என மாற்றி மொழிகுவர். காப்பியத் தலைவன் தலைமைத்தன்மை குறையுமாறு, இந்திரனது படைத்தலைவனாகத் தம்மைக் கூறிக் கொள்ளும் முருகன் மொழியினை மாற்றி இந்திரன் முதலிய தேவர்களைச் சேனைகளாகவும் தம்மைத் தலைவனாகவுங் கொள்ளுமாறு கந்தன் கழறியதாகப் பாடிக் காப்பியத்தலைமைக்கு ஊறு நேராது காத்துள்ளார்.

சூரனைத் தடிந்தபின்னர்த் தேவர்கள் கந்தனைப் போற்றியதை "அழிவற்றவராகிய முருகனை நமஸ்கரித்து தேவநாயகனை ஸ்தோத்திரம் செய்தார்கள்"[75] என முதனூல் சுருங்கிய அளவில் சுட்டிச் செல்வதனைத் தழுவுநூல் ஒரு படலமாகவே (தேவர்கள் போற்று படலம் 4 : 14) விரித்துப் பாடி முருகன் புகழினைப் போற்றிப் பரவும். இவ்விரிவாக்கத்தில்,

*"வேண்டேம் இனியாதும் மேலாய நின்கழற்கே*
*பூண்டேந் தொழும்பு புகழேம் பிறர்தமையே"*(4 : 14 : 8)

என்று தேவர்கள் புகலுவதாகக் குறிப்பிட்டு முருகனை அன்றிப் பிற கடவுளரை வழிபடாத வீறுடைமை தோன்றக் காட்டி முருகன் முதன்மையினை வலியுறுத்துவர்.

இறைவனது யோக நிலையை மாற்றி இறைவியைக் கூட்டுவிக்கத் தன்னைக் கயிலைக்குச் செல்லப் பணித்த பிரமன் முதலியோரிடம் மன்மதன், "உங்களுக்குத் தீங்கு செய்யும் சூரபத்மனை அவன் தம்பிகளுடன் சிற்றின்பத்தில் ஈடுபடும்படி ஆணி வைத்து அறைந்ததுபோல் எனது அம்பினால் செய்து விடுகின்றேன்........... ஸ்ரீபரமசிவனை என் அம்பிற்கு(க்) குறியாகச் செய்ய மாட்டேன்"[76] என்று மறுப்பதாக முதனூல் விளம்பும் பகுதியைக் கச்சியப்பர் விடுத்துள்ளார். கந்தன் வேலுக்கு இலக்காகும் சூரனைக் காமன் அம்பால் துன்புற்று மெலியச் செய்தல் காப்பியப் பொருண்மைக்கும் தலைமைக்கும் மாறாகும் எனக் கருதி இம்மறுப்புப் பகுதியை மட்டும் விடுத்துள்ளமை கருதத்தக்கது. பிரணவப் பொருளைச் சிவன் கட்டளைப்படி முருகன் அகத்தியருக்கு உரைத்ததாகப் புகலும்[77] முதனூற் செய்தியினையும் விடுத்ததோடு, முருகனே அதனை அகத்தியர்க்கு உரைத்ததாகப் பாடிக் காப்பியத் தலைமையைப் போற்றுவர்.

சங்க காலத்தில் ஓங்கிப் பரந்திருந்த முருக வழிபாடு நாயன்மார் காலத்தில் சற்றுத் தொய்வு அடைந்தது. களப்பிரர் ஆட்சிக்குப் பின்னர்ச் சைவ சமயம் புத்துயிர் பெற்று வளர்ந்த நாயன்மார் காலத்தில் சிவவழிபாடே சிறப்பிடம் பெற்றிருந்தது. சிவனைத்

தலைவனாகக் கொண்ட சைவக் கடவுளர் குடும்பத்தில் சிவனுக்கு மாறாகா நிலையில் முருகனுக்கு முதன்மை கொடுத்து முருக வழி பாட்டை மீண்டும் உயர்த்திய பெருமை கச்சியப்பருக்கே உரியது.

சிவனும் உமையும் தம்மை வணங்கிய முருகனையும் தெய்வ யானையையும் ஆர்வத்துடன் எடுத்தணைத்துப் பாங்கர் இருத்தி, உச்சி உயிர்த்து, 'உமக்கு எம்முறும் முதன்மை கொடுத்தும்' என்றனர் (5 : 2 : 255) எனக் குறிப்பிடுதல் சிவன் முருகனுக்கு அளித்த முதன்மையையும், இதனைக் கேட்ட பிரமன் முதலியோர் 'அவர் (சிவன்) அடி முடிமிசைக் கொண்டார்' (5 : 2 : 256) எனச் சுட்டுதல் கடவுளர் அம்முதன்மையினை ஏற்றுக்கொண்டமையையும், 'மலைமகளும் இறைவனும் மறைந்தகாலை அவ்விருவரும் அமர்ந் திருந்த அதே பீடிகையில் குமரநாயகன் தெய்வதக் களிற்றொடுங்கூடி அமர, தேவர்கள் அன்னார் மெல்லடி தொழுது வழுத்தினர்' (5 : 2 : 258-260) எனப் புகலல் ஏற்றுக்கொண்ட தலைமைக் கோட்பாட்டைச் செயற்படுத்தும் தேவர்கள் திறத்தையும் புலப் படுத்தும். சிவனெறிக்கு மாறாகாவண்ணம் முருகனது முதன்மையை நிறுவுதற்கு இத்தகு படைப்புக்கள் புலவர்க்குத் துணைபுரிகின்றன. கந்தவிரதப் படலத்தில் (6 : 23) 'நாரதர் ஏழு முனிவர்களில் தானே மேற்பட விரதம் ஒன்றை விளம்புதி என விநாயகரிடம் கேட்க, அவர் ஆறுமாமுகத்து நம்பியை வழிபாடாற்றிக் கார்த்திகை நாளில் நோன்பு இருக்குமாறு புகன்றதாகப்' (6 : 23 : 9 - 10) படைத்துத் தமையன் கூற்றால் தம்பியாம் கந்தக்கடவுளின் முதன் மையினை வலியுறுத்துவர். சைவக் கடவுளர் குடும்பத்தில் சிவன், உமை ஆகியோர் வாயிலாக முருகன் முதன்மை பெறுதலை முன்னர்ச் சுட்டிய ஆசிரியர், விநாயகர் வாயிலாகவும் முருகனுக்கு முதன்மை நல்கக் கருதி இப்பகுதியைப் படைத்துக்கொண்டமை குறிக்கத்தகும்.

## 10. முருகன் முழுமுதற்றன்மை

முருகனது முழு முதற்றன்மையைக் காக்கும் வகையில் முதனூ லினின்றும் கச்சியப்பர் வேறுபடுவர். முருகன் வள்ளியோடு கூடிய முதற்புணர்வினை, "அழகான அக்காட்டில் வள்ளியின் கூந்தலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அவள் உதட்டைப் பற்களால் கடித்து அவளோடு ரமித்தார்"[76] என்றும், தோழியிற் புணர்வினை, "அவள்

(வள்ளி) வேகமாய் எழுந்து காமவிகாரங்கொண்டவளாகி அவரை நமஸ்கரித்தாள். தேவேசனும் அவளை ஆலிங்கனம் செய்துகொண்டு மொட்டுக்கள் போன்ற தனங்களைப் பிடித்து நகங்களாற் காயமேற் படச்செய்து உதடுகளைக் கடித்துக்கொண்டு அவளுடன் ரமித்தார்"[79] என்றும் முதனூல் விவரிக்கும். கச்சியப்பர் அவ்விரு புணர்ச்சிகளையும் முறையே,

*"................... முகமா றுடையபிரான்*
*கன்னி தனையோர் கடிகாவி னிற்கலந்து*
*துன்னு கருணைசெய்து தொல்லுருவங் காட்டினனே"*

என்றும், (6 : 24 : 115)

*"வடுத்துணை நிகர்விழி வள்ளி எம்பிரான்*
*அடித்துணை வணங்கலும் அவளை அங்கையால்*
*எடுத்தனன் புல்லினன் இன்ப மெய்தினான்"*

(6 : 24 : 143)

என்றும் நாகரிகமாகச் சுட்டி முருகனது தெய்வவியல்பு கெடாது போற்றுவர். முருகனது இன்பத் தொடர்பான செய்திகளை விவரிக்கும் பொழுதெல்லாம், "குமரற்கு ஈது திருவிளையாடல் போலாம்" (6 : 24 : 160) என்றும்,

*"கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலிற் றோன்றி*
*அலைப்படு தன்மைத் தன்றோ அறுமுகன் ஆடல் எல்லாம்"*

என்றும், *(6 : 24 : 73)*

*புவனம் மன்னுயிர்த் தொகை உய்ந்திட முயங்கினான்"*

(5 : 2 : 263)

என்றும் குறிப்பிடும் ஆசிரியர் இயல்பும் இங்குக் கருதத்தக்கது.

முருகனது இளம்பருவத் திருவிளையாடலை விவரிக்கும் பொழுது, 'பாலசுப்பிரமணியன் பிராமணக்குழந்தைகள் படிக்கு மிடத்தில் தானும் சேர்ந்து தமிழ், தெலுங்கு, கன்னடம், நாகரம், கிரந்தம் முதலிய பாஷைகளை யெல்லாம் கற்றதாக' முதனூல் மொழியும்.[80] ஓதாது உணரும் ஆற்றலை உயிர்களுக்கு அருளும் இறைவன் இவ்வாறு கற்றதாகக் கிளத்தல் 'முற்றறிவினன்' என்ற கடவுட்டன்மைக்கு இழுக்கென எண்ணிப் புலவர் இதனையும் விடுத்துள்ளார்.

முற்றறிவினன் ஆகிய முருகனே பரம்பொருள் என்ற கருத்து வலிமைபெற கதைமாந்தர் கூற்றுக்களில் சிலவற்றைப் படைத்துரைப்பர். தாரகனோடு பொருது கிரவுஞ்சத்தில் மயங்கிக்கிடக்கும் வீரவாகு முதலியோரின் துயர்நிலையினை நாரதர் முருகனிடம் எடுத்துரைக்கும் பகுதி, அறியாத முருகனுக்கு அறிந்தவன் கூறுவதாக முதனூலில் அமைந்துள்ளது.[81] தமிழ்க் கந்தபுராணத்துள் அந்நிகழ்ச்சிகளைஉரைத்த நாரதன் "நிகழ்ச்சியீது உயிர்த்தொகை முற்றும் இருந்த நாயக அறிதியே யாவையும்" (1 - 20 - 106) எனக் கூறிமுடிப்பதாக நவில்வர்.

திருச்செந்திலில் வந்திருத்த முருகன், அசுரர் வரலாற்றை வினவ, தேவ குருவாகிய வியாழன் கூறுவதாக உற்பத்தி காண்டத்தின் இறுதியில் அடுத்த காண்டத்திற்குத் (அசுரகாண்டம்) தோற்றுவாய் செய்யப்படும். வியாழன்அசுரர் வரலாற்றைக் கூறுமுன்,

*"அறிதி எப்பொருளும் ஆவிகள் தோறும் செறிதி"*
*(1 : 26 : 15)*

என்றும்,

*"வெய்யர் தன்மையை வினாவிய தன்மை*
*ஐய அன்னதை யறிந்திட அன்றே*
*கைய ரேந்துயர் களைந்துள மீதில்*
*செய்ய இன்புதவு சீரருளாமால்"* *(1 : 26 : 17)*

என்றும் கூறித் தொடங்குவதாக உரைப்பர். இவ்விரு செய்திகளும் முருகன் முற்றறிவினன் என்ற கருத்துரைக்க எழுந்தவைகளாகும். துன்புறும் சயந்தனைத் தேற்றும் வீரவாகு,

*"தன்னிகர் இன்றி மேலாய்த் தற்பர வொளியா யாரும்*
*உன்னரும் பரமாய் நின்ற ஒருவனே முகங்க ளாறும்*
*பன்னிரு புயமுங் கொண்டு பாலகன் போன்று கந்தன்*
*என்னு மோர்பெயரும் எய்தி யாவருங் காண வந்தான்"*
(3 : 11 : 23)

என்று உரைக்கும் பகுதியும், சிங்கமுகன் தன் தமையனாம் சூரனுக்கு முருகன் பெருமையினை மொழியும் பகுதிகளும் (3:21:126,127,131) கந்தனே முழுமுதற்றன்மையுடையவன் என்ற கருத்தை வலியுறுத்த ஆசிரியர் படைத்துக் கொண்டவைகளாம்.

## 11. வேலின் தலைமை

வேலிற்கெனத் தனித்துக் கோட்டம் அமைந்திருந்தமையினைச் சிலப்பதிகாரம் சுட்டுதலால் 'வேல் வழிபாடு' தமிழகத்தில் நிலவி வந்தமையினை உணர்கின்றோம். வேலின் தனித்தன்மையைக் குறிப்பிடும் வகையில் சில நிகழ்வுகளை ஆசிரியர் விரித்துப் பேசுவர்.

போருக்கு எழும் முருகனிடம் படைகள் பலவற்றையும் வழங்கிய சிவன், ''எல்லா சத்ருக்களையும் அழிக்கவல்ல ஒரு சக்தி ஆயுதத்தையும் கொடுத்தனன்''[82] என்று வேலை முதனூல் குறிப்பிடும். கச்சியப்பர்,

> *''ஆயதற் பின்னர் ஏவில்மு தண்டத் தைம்பெரும் பூதமும் அடுவ*
> *தேயபல் லுயிரும் ஒருதலை முடிப்ப தேவர்மேல் விடுக்கினும் அவர்தம்*
> *மாயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி மன்னுயிர் உண்பதெப் படைக்கும்*
> *நாயக மாவ தொருதனிச் சுடர்வேல் நல்கியே மதலைகைக் கொடுத்தான்''* (1 : 18 : 38)

என்று வேலின் பேராற்றலையும் விரித்துப் பகர்வர்.

பகைவரைத் தடியும் ஒரு கருவியாகவே வேலை முருகன் கைக்கொண்டதாக முதனூல் மொழியும்.[83] தழுவுகாப்பியத்தில் கந்தன் கட்டளைகளை நிறைவேற்றும் அறிவுடைப்பொருளாக (ஞானப்பொருள்) வேல் செயலாற்றும் (1 : 20 : 180 – 181). முருகன் கட்டளைகளை நிறைவேற்றிய வேல், பகைவரைத் தீண்டிய மாசுநீங்க வான் கங்கையில் தோய்ந்த பின்னர்க் கந்தன் கரத்தில் வந்திருந்ததாகக் (1 : 20 : 186) குறிப்பிடுதல் தனித்துச் செயற்படும் வேலின் இயல்பினைப் புலப்படுத்தும்.

இரணியன் தன் தந்தைக்கு அறிவுரை புகலும்போது, சிவனது பெருமை, முருகனது பேராற்றல், வீரவாகுவின் போராற்றல் ஆகியவற்றையே எடுத்துரைத்துப் பகைமேற் சேறலைத் தடுக்க முயன்றதாக முதனூல் விளம்பும்.[84] கச்சியப்பர் வேலின் தனித்தன்மை விளங்கும் வகையில் வேலின் ஆற்றலையும் (4 : 7 : 31 - 32) இரணியன் கூற்றில் விரித்துரைப்பர்.

சுத்தோதக் கடலில் மயங்கிக் கிடந்த தங்களை மீட்ட வேற்படையினை வீரவாகு முதலியோர் "நாங்கள் முன்னர் தாரகனின் மாயையிலிருந்து நன்கு காக்கப்பட்டோம். இப்பொழுதும் எங்களை இரட்சித்தருளிய தங்களுக்கு என்ன பதில் உபகாரம் செய்யப் போகிறோம்,"[85] என்று போற்றியதாக முதனூல் குறிப்பிடும்.

> *"அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்*
> *எந்தைகண் நின்றும் வந்த இயற்கையாற் சத்தி யாம்பேர்*
> *தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்*
> *கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தேம்"*
> **(4 : 5 : 212)**

என வீரவாகு போற்றியதாக விரித்துரைத்து வேலையே கந்தனாகக் கண்டு வழிபடும் பழமரபினைப் புதுக்கியுள்ளார் கச்சியப்பர்.

## 12. சிவன் தலைமை

'காமவேளின் வில்லிலிருந்து நழுவிச் சென்ற கணை சிவனிடம் செல்லமுடியாமல், திரும்பி மலையரசன் குமாரியான பார்வதியிடம் சென்றதாகச்'[86] சுட்டும் முதனூல் நிகழ்ச்சியினை மாற்றி 'வேளின் கணைகள் ஐந்தும் விமலன் மேற்பட்டதாக'ப் (1 : 4 : 89) புகன்று முருகன் தோற்றத்திற்கு முதற் காரணனாகிய சிவனது தலைமையைப் போற்றுவர் புலவர்.

## 13. சைவம்

சைவசமயக் கொள்கைகளையும் சிவனது பெருமைகளையும் விளக்கும் பொருட்டு முதனூலில் இல்லாத சில நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் விரித்தும் படைத்தும் கச்சியப்பர் புகலுவர்.

காசிபர் தம் மக்களுக்கு உரைத்த (உபதேசம்) கருத்துக்களை ஐந்து சுலோகங்களில் நவின்றுள்ள முதனூற்பகுதியை[87] விரித்து ஓர் படலமாகப் (காசிபன் உபதேசப்படலம் 2 : 4) பாடி, சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையான இறை உயிர் தளை முதலியனவற்றை (2 : 4 : 3-4) விளக்குவர் கவிஞர். முதனூலில் மிகவும் சுருக்கமாக இயம்பிய மார்க்கண்டேயர் வரலாற்றை 285

பாக்களில் ஒரு படலமாக விரித்துப்பாடி சிவனது வரம்பிலாற்றலை யும், அடியவரைக் காக்கும் அருள் நிலையினையும் விளக்குவர்.

வீரவாகு முருகனது இயல்பினைச் சூரனிடம் எடுத்துரைக் கையில் 'இருவினைப் பயனைக் கூட்டுபவன் என்றும், இருவினை யொப்பு உண்டாகின்ற காலத்து உயிர்கட்கு வீடுபேற்றை நல்கு பவன் என்றும், காண்பான் முதலிய திறமெல்லாம் அவன் என்றும்" (3 : 12 : 136) குறிப்பிடும் பகுதிகள் சைவ சாத்திரக் கொள்கை யினை வலியுறுத்துவனவாகும்.

சைவ உலகில் சிறப்பிடம் பெறுவது திருநீறு. 'புண்ணியம் ஆவது நீறு' என்றும், 'பாவம் அறுப்பது நீறு' என்றும் திருஞான சம்பந்தரின் திருநீற்றுப் பதிகம் திருநீற்றின் பெருமையினை எடுத் துரைக்கும்.[85] சிங்கமுகன், களஞ்செல்லுமுன் தன் கோயிற்புக்குப் போருக்கு அணியம் ஆவதைக் குறிப்பிடுகையில்,

*"...... ...... ...... அரிமுகன் நெற்றி தோறும்வெண்*
*பொடிதனை அணிந்தனன் புனித மாயினான்"*

என்று பெருக்கியுரைத்துப் புனிதமாக்கும் திருநீற்றின் பெருமையினைப் போற்றுவர். தன்னுடைய உண்மைத் தன்மையைக் கேட்ட உமைக்குச் சிவன் கூறுமுகமாக ஐந்து பாக்களிலும் (6 : 5 : 3-8) தமையனும் சூரபன்மனிடம் தக்கன எடுத்துரைக்கும் சிங்கமுகன் கூற்றில் இரு பாக்களிலும் (3 : 21 : 119, 127) சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஆசிரியர் படைத்து மொழிகுவர்.

## 14. பத்தி

கச்சியப்பர் தம் வழிபடுகடவுளாம் கந்தன் மீது கொண்டுள்ள சிறப்பான பத்தியின் காரணமாகச் சில செய்திகளைப் பெருக்கிப் படைத்துள்ளார்.

தன் கனவில் முருகன் தோன்றித் தேற்றிய பின்னர்ச் சயந்தன் எய்திய மெய்ப்பாட்டினையும், அவன் முருகனைப் போற்றிய திறத் தையும் (3 : 10 : 13 - 16) பத்திமை உணர்வு தோன்ற விரித்

துரைப்பர். சூரன் இருள் வடிவங்கொண்டு தேவர்களை விழுங்க முயலுகையில் கையற்றுக் கலங்கிய அவர்கள் ஓலத்தை,

*''நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞானநா யகனே ஓலம்*
*பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்*
*எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்*
*கண்ணுதற் பெருமான் நல்குங் கடவுளே ஓலம் ஓலம்''*
*(4:13: 460)*

என விரித்துரைக்கும் பகுதி முருகனது திருநாமங்களை அடுக்கிக் கூறி அருச்சிக்கும் பாங்கில் அமைந்துள்ளது. முருகன் சரவணப் பொய்கையில் விற்றிருந்தருளுவதை இருபத்திரண்டு பாக்களில் (1:11:92-113) பத்தி உணர்வுடன் விரித்துப் பாடுவர்.

சூரனைத் தடிந்த பின்பு, செந்தில்மாநகரம் எய்திய கந்தனைத் தேவர்கள் பத்தியோடு பூசனை செய்ததாகவும், முருகன் சிவனைத் தாணுவில் வருவித்து வழிபட்டதாகவும் சுருங்கிய அளவில் முதனூல் புகலும்.[89] 'பூசனைக்குரிய பொருட்களைக் கொண்டு குமாரதந்திர நெறிப்படி கும்பம், அக்கினி, திருமேனி என்ற மூவிடங்களிலும் கந்தனைத் தேவர்கள் வழிபட்டதாகவும்' (4 : 16 : 23-24), ''இறைவன் நூல் (சிவாகமநெறி) தொடர்பு நாடி'' முருகன்,

*''ஆமயம் முதலிய ஐந்து கந்திகள்*
*மாமலர் மஞ்சனம் அமிர்தம் வான்துகில்*
*தூமணி விளக்கொடு துபங் கண்ணடி*
*சாமறை ஆதிகம் அமரர் தந்திட''*
*(4 : 16 : 32)*

சிவனை வழிபட்டதாகவும் தழுவுநூல் பெருக்கிப் பேசும். சிவ, முருக வழிபாட்டு நெறிமுறைகளை வற்புறுத்த இப் பெருக்கம் துணைபுரிதல் குறிக்கத்தகும்.

திருமுறை போன்ற பத்திப் பனுவல்களில் தோய்வுடைய கச்சியப்பர் பத்திமை உணர்வினைப் புலப்படுத்தும் பாங்கில் பல நிகழ்வுகளைப் படைத்து மொழிந்துள்ளார். தாரகனைத் தடிந்து தம்மைக் காத்த முருகனைத் தேவர்கள் பத்திமை உணர்வோடு திருமுழுக்காட்டி வழிபட்ட பாங்கினைப் பத்துப்பாக்

களில் (1 : 21 : 22-31) புகலுவர். மகேந்திரம் செல்லும் வீரவாகு கந்தமாதனத்தில் பேருருக்கொண்டு நின்றபொழுது முருகனை ஏத்திப் பத்திமை நெறியில் தலைநின்றமையினை,

"ஆவதோர் காலை எந்தை ஆறிரு தடந்தோள் வாழ்க
மூவிரு வதனம் வாழ்க முழுதருள் விழிகள் வாழ்க
தூவுடை நெடுவேல் வாழ்க தொல்படை பிறவும் வாழ்க
தேவர்கள் தேவன் சேயோன் திருவடி வாழ்க என்றான்"

என்றும், (3 : 1 : 49)

"ஆண்டகை தொழுத பாணி அணிமுடிக் கொண்டிவ் வாற்றால்
ஈண்டுசீர்க் குமர வேளை ஏத்தலும் அன்பின் கண்ணீர்
வீண்டுதெண் கடலுள் ஏகி வெள்ளமிக் குவரை மாற்றப்
பூண்டகண் டிகையை மானத் தோன்றின பொடிப்பின்
பொம்மல்" (3 : 1 : 50)

என்றும் படைத்துப் பாடிப் பத்திச் சுவையினை மிகுவிப்பர்.

சூரனை வென்ற பின்னர், செந்திலில் தங்கிய தம்மைப் பூசனை புரிந்த தேவர்கட்கு யாது வேண்டும் என வினவிய முருகனிடத்தில்,

"........ உன்னடியம் யாக்கை
நின்றிடு பகற்றுணையும் நின்னிரு கழற்கண்
மன்றதலை யன்புற வரந்தருதி எந்தாய்" (4 : 16 : 27)

எனப் பத்திமை உணர்வையே காப்பியத் தலைவனாம் கந்தனிடம் வேண்டியதாகச் சுட்டுவர்.

"........ யாமிரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்லநின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே"[90]

என்னும் கடுவனிளவெயினனாரின் வேண்டுகையும் இவண் கருதத் தக்கது. பத்திமை நெறியே உய்யும் நெறி என்ற நாயன்மார்களின் கொள்கைகளில் புலவர் ஆழங்காற்பட்டமையினை இப்படைப்புக்

கூறுகள் வெளிப்படுத்தும். கந்தனைக் காணத் தவித்த கவிஞரின் பத்தி உள்ளத்தின் துடிப்பினைப் போர்க்களத்தில் முருகனைக் காணும் பேறுற்ற சூரனைப் பாராட்டிப் பாடும் நான்கு பாக்களின் (4 : 4 : 236 - 239) வாயிலாக உணர்கின்றோம். பரங்குன்றில் தெய்வயானை மணங்காணவந்த மக்கள் தம் குறை தீர்ந்து சென் றமையினைக்,

*''கையிலார் கைகள் பெற்றும் காலிலார் கால்கள் பெற்றும்*
*மொய்யிலார் மொய்கள் பெற்றும் மூங்கைகள் மொழியைப் பெற்றும்*
*மையல்சேர் குருட ரானோர் வாள்விழி பெற்றுஞ் சென்றார்*
*ஐயன்மேல் உள்ளம் வைத்தார்க் கனையதோ அரிது மாதோ"* (5 : 2 : 84)

என அடுக்கிக் கூறிப் பத்தியின் பயனையும் எடுத்துரைப்பர்.

**முடிவுரை**

கச்சியப்பர் வடமொழியிலுள்ள கந்தபுராணங்களுள் தென்னகத்துப் படிகளைத் தழுவியே தமிழ்க் கந்தபுராணத்தை யாத்துள்ளார். நூலமைப்பில் காண்டங்களின் வைப்பு முறையினை முதனூலில் உள்ள வாறே அமைத்திருப்பினும் சில நிகழ்வுகளைத் தெளிவும் இயைபும் கருதி ஒரு காண்டத்தினின்றும் பிற காண்டத்திற்கு மாற்றுவர். எண் முறையில் அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டிருக்கும் முதனூலினின்றும் வேறுபட்டுக் கருத்துமுறையில் தலைப்புக்களுடன் படலங்களை அமைத்துக் கொள்வர். தமிழ் மரபு, காப்பிய மரபு, கதை மாந்தர் வளர்ச்சி, பாவிகம், கந்தன் தமிழ்க்கடவுள், முருகனது முழுமுதற் றன்மை போன்ற காரணங்கட்காக முதனூலில் உள்ளவற்றை மாற்றியும், பெருக்கியும், விடுத்தும், படைத்தும் தம் காப்பியத்தை நிறைவு செய்வர். படைப்புக்கூறுகள் மிகுதியாகவும், பெருக்கற்கூறுகள் அதனினும் குறைந்தும், மாற்றற்கூறுகள் மேலும் குறைந்தும், விடுத் தற்கூறுகள் மிகச் சுருங்கியும் காணப்படுகின்றன. சிவனை முழுமுதற் பொருளாக ஏற்றுக்கொண்ட சைவவுலகில் முருகனை அந்நிலைக்கு மீண்டும் உயர்த்தும் அமைதிப் புரட்சிக்கு அடித்தளம் அமைக்கவும், பழந்தமிழகத்தில் நிலவிய வேல் வழிபாட்டை மீண்டும் நிறுவவும், புராணத்தைக் காப்பியச் சுவையுடன் பெயர்த்துப் படைத்தற்கும் கச்சியப்பர் இத்தகு மாற்றங்களை மேற்கொண்டுள்ளார் எனக் கருதலாம்.

## மேற்கோள்


1. தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், ப. 82.
2. ச. வே. சுப்பிரமணியன், சிலம்பும் சிந்தாமணியும்-ஒப்பாய்வு, ப.iv.
3. தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், பக். 84 - 85.
4. க. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், ப. 39.
5. வ. சுப. மாணிக்கம், ஒப்பியல் நோக்கு, முன்னுரை, ப. 3.
6. — — — — — — —, ப. 21.
7. அ. விசுவநாதன், தமிழ்ப் பாரத நூல்களின் திறனாய்வு, (நூலாக வெளிவாராத பி எச். டி. பட்ட ஆய்வுரை) ப. 84.
8. சம்பந்தசரணாலயர், கந்தபுராணச் சுருக்கம், பாயிரம் 10.
9. Lalta Prasad Pandey, Sun-Worship in Ancient India, p. 146.
10. Vettam Mani, Puranic Encyclopaedia, p. 618.
11. அநந்தவைத்தியநாதசிவன், ஸ்ரீ வேதவியாச முனிவர் அருளிய சிவரகசிய கண்டம்.
12. அனந்தராம தீக்ஷிதர், முகவுரை, ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம் முதல் பாகம், ப. iv.
13. அனந்தராம தீக்ஷிதர், ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம் (இரண்டு பாகங்கள்)
14. நா. கதிரைவேற்பிள்ளை, சுப்பிரமணிய பராக்கிரமம், ப.205.
15. பாம்பன் சுவாமிகள், சுப்பிரமணிய வியாசம், பக். 5, 116.
16. ந. சுப்பிரமணிய ஐயர், சுப்பிரமணிய தத்துவம், பக். 123, 129, 130.
17. ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள், கந்தபுராணம் அசுர காண்டம் மூலமும் பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் இயற்றிய உரையும், பக். 226, 254.
18. ம. தி. பானுகவி, கந்தபுராண மூலமும் ம. தி. பானுகவி அவர்களியற்றிய கலாபூஷணமென்னும் உரையும், அசுரகாண்டம், ப. 156.
19. பெ. திருஞானசம்பந்தம், இலக்கியக் கொள்கை பெரிய புராணம், தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி—1, ப.312.
20. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், சம். 13, 14.

21. கி. வா. ஜகந்நாதன், தமிழ்க்காப்பியங்கள், ப. 135.
22. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், சம். 6 : 22.
23. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், தேவ. 2; சம். 23,29.
24. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், தக்ஷ. 1 : 1.
25. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், ஆசுர. 14.
26. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், வீரமா. 3 : 31.
27. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், சம். 7 : 34.
28. ——————, 37 : 1-2.
29. ——————, 8 : 8-9.
30. ——————, 33 : 31-32.
31. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், வீரமா. 3 : 30.
32. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், யுத்த. 28 : 38-39.
33. திருக்குறள், 701.
34. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், தேவ, 31: 24-25.
35. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், வீரமா. 6 : 1.
36. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், யுத்த. 19 : 41.
37. ——————, 23 : 1-12.
38. ——————, 23 : 2-4.
39. ——————, 28 : 2-3.
40. ——————, 7 : 18-19.
41. திருக்குறள், 770.
42. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், யுத்த. 15 : 19.
43. ——————, 15 : 3.
44. ——————, 211 : 5-16.
45. கம்பராமாயணம், இந்திரசித்து வதைப்படலம், செ. 6.
46. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், யுத்த. 21 : 18 - 19.
47. ——————, 17 : 51 - 53.
48. ——————, 35 : 84 - 85.
49. .... .... .... ....19 : 15.
50. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், வீரமா. 2 : 36 : 38.
51. திருக்குறள், 445.
52. கம்பராமாயணம், இராவணன் மந்திரப் படலம், செ. 109.
53. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், வீரமா, 3 : 51; 4 : 1.

54. 'கந்தபுராணத்தின் நோக்கம்' என்னும் பகுதியில் 'பாவிகம்' விரிவாக விளக்கப்படும்.
55. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், ஆசுர. 2 : 4-8.
56. — — — — — —, 3 : 22.
57. தொல். பொருள்., நூ. 88.
58. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், யுத்த. 5 : 5 - 7.
59. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், தேவ. 6 : 33.
60. — — — — — — — 6 : 49.
61. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், வீரமா, 3 : 3.
62. திருமுருகு., 111-115.
63. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், தேவ. 1 : 67.
64. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், ஆசுர. 12 : 62 - 64.
65. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், யுத்த. 12 : 57 - 59.
66. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், தேவ. 2 : 16.
67. பெருங்கதை, 3 : 14 : 34 - 35.
68. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், சம். 35 : 11.
69. கிருபானந்தவாரி, கந்தபுராணக் கவியமுதம், பக். 3 - 4.
70. மொ. அ. துரை அரங்கசாமி, அன்பு நெறியே தமிழர் நெறி, பக். 233-234.
71. கந்தர் கலிவெண்பா உரையாசிரியராகிய தி. பட்டுச்சாமி ஓதுவார் 'கந்தன்' என்ற சொல்லிற்குச் ''சேர்க்கப் பட்டவன்'' என்றே பொருள் கொள்வர். திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா மூலமும் உரையும், ப.44.
72. K.R. Venkataraman, 'Skanda Cult in South India', The Cultural Heritage of India, Vol.IV, p.304.
R. Nagaswamy, Gangaikonda Cholapuram, p.36.
பி. எல். சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, பக். 93 - 94.
73. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், சம். 31 : 55.
74. — — — — —, 31 : 58-60.
75. ஸ்ரீஸ்காந்த புராணம், யுத்த. 35 : 80–81.
76. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், சம். 9 : 41-43.

77. ஸ்ரீ ஸ்காந்த மஹாபுராணம் — —, 34 : 35.

78. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், தேவ. 3 : 79.

79. — — — — —, 4 : 21-22.

80. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், சம். 29 : 34.

81. — — — — —, சம். 41 : 4-8.

82. — — — — —, 37 : 9.

83. — — — — —, 44 : 30.

84. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், யுத்த. 16 : 14-32.

85. — — — — —, 15 : 22.

86. ஸ்ரீஸ்காந்தமஹாபுராணம், சம். 11 : 16.

87. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், ஆசுர. 1 : 50-54.

88. திருஞானசம்பந்தர், பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு, பக். 385-386.

89. ஸ்ரீஸ்காந்த மஹாபுராணம், தேவ. 1 : 12-14.

90. பரிபா., 5 : 78 - 81.

# 3

# கந்தபுராணப் பின்னணி

காப்பியங்களின் தோற்றம் தற்செயல் நிகழ்சியன்று. அரசியல், பொருளியல் காரணங்களால் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாகவும், சில இயக்கங்களின் பின்னணியாகவும் அவைகள் உருப் பெறலாம். அக்காலச் சமுதாயத் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்திலும் அவைகள் முகிழ்க்கலாம். எனவே, முருகப்பெருமானைத் தலைவனாகக் கொண்டு அன்று முதல்[1] இன்றுவரை அனைவராலும் போற்றப் பெறும் நிலையில் ஒரு பெருங்காப்பியம் தோன்றியதெனின் அக்காப்பிய காலச் சமுதாயச் சூழலை அறிந்து கொள்ளுதல் அந்நூலாய்வுக்குப் பெரிதும் இன்றியமையாததாகும்.

## 1. கந்தபுராணக் காலம்

கச்சியப்பரின் வரலாற்றில் வேறுபாடு இன்றெனினும் அவர் வாழ்ந்த காலம் குறித்துக் கருத்து வேறுபாடுகள் பல்கிக் காணப்படுகின்றன. ஏழாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரையிலும் அவர் வாழ்ந்த காலத்தைப் பலர் பலவாறு அறுதியிடுவர்.

கந்தபுராணத்தில் 'அபியுக்தர் வாக்கு' என்ற தலைப்போடு சிறப்புப் பாயிரமாகச் சேர்க்கப்பட்ட பாடல்களுள் ஒன்றில்,

*''ஏதமறு சகாத்தம் எழு நூற்றின் மேலாய்*
*இலகு கந்த புராணம் அரங் கேற்றி னானே''*

என்று குறிப்பிடுதலால் கந்தபுராணம் (சகாத்தம் 700 என்பது கி.பி. 778 ஆகும்) ஏழாம் நூற்றாண்டில் தோன்றியது என்பர் சிலர்.[2] ''சைவப்பற்றுதலுடைய ஒரு மெய்யன்பர் கந்தபுராணம் கம்பராமாயணத்திற்கு முந்தியதாக இருக்கட்டுமே என்ற பழமையில் எழுந்த பற்றுதலால், கந்தபுராணம் சகம் எழுநூற்றின் மேலாய்

(கி.பி. 778-க்கு மேல்) அரங்கேற்றப்பட்டது எனப் பொருள் தருமாறு பிற்காலத்தில் இச் செய்யுளைச் செய்து வைத்தார் என்றும் அறிஞர் கருதுவர்."[3]

கச்சியப்பர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரைத் துதித்திருத்தலால் 'சகாத்தம் எழு நூற்றின் மேல்' எனக் கூறியது சரியன்று என மறுப்பர் வ.சு. செங்கல்வராயபிள்ளை. மேலும், திகழ்தசக்கரம் — திகடசக்கரம் எனத் திரிவதற்கு முருகனே அவையில் தோன்றி வீரசோழியத்திலிருந்து 'விதி' காட்டி மறைந்தனன் என்பது செவிவழிச் செய்தியாகும். அருணகிரியாரும்,

> ''மருவு புலவனார் கவிக்குளே சிறு
> வழுவ தறைமகா சபைக்கு ளேகியே
> வகைய பெயரதா இலக்கணாவிதி மொழிவோனே'' (525)
> ''முற்பட்ட இலக்கண நூலிடை
> தப்புற்ற கவிக்கெனவே அவை
> முற்பட்டு புதுத்துறை மாறிய புலவோனே'' (793)

என அச்செய்தியைத் திருப்புகழிலும் மொழிவர். எனவே பதினோராம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகிய வீரசோழிய காலத்திற்குப் பின்னும், பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த அருணகிரிநாதருக்கு முன்னும் அவர் வாழ்ந்த காலமாகக் கொண்டு, மேலும் ஆய்ந்து கம்பர் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னும், வீரசோழிய காலத்திற்குப் பின்னும் கச்சியப்பர் வாழ்ந்தார் என அவர் முடிவு செய்வர்.[4]

கந்தபுராணம் தோன்றிய காலத்தை 'எண்ணிய சகாத்தம் எழு நூற்றின் மேலாய்' என்று தெரிவித்த செய்யுளினால் கந்தபுராணம், சிந்தாமணி எழுந்த காலத்திலேயே ஏற்பட்டதென்பார் கருத்தை மறுத்ததுடன், பதினொராம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த வீரசோழியத்திற்குப் பின் அந்நூல் தோன்றியிருக்கலாம் என்று உரைத்து அந்நூலின் காலத்தைப் பதினொராம் நூற்றாண்டின் இறுதி அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம் என்று அறுதியிடுவர் கா. சுப்பிரமணியபிள்ளை.[5]

எம். சீனிவாச ஐயங்கார் தமது 'தமிழாய்வு' (Tamil Studies) என்ற நூலில் கந்தபுராணத்தின் காலத்தை கி. பி. 950-க்கும் 1200-க்கும் இடைப்பட்டதென்பர்.[6]

தமிழ்க் கலைக்களஞ்சியம் கந்தபுராணக் காலத்தைப் பதினொராம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்று இயம்பும்.[7]

எஸ். வையாபுரிப்பிள்ளை கந்தபுராணக் காலத்தை, புராண-பிரபந்த காலமாகிய கி.பி. 1500-க்கும் கி.பி. 1850-க்கும் இடைப்பட்டதென்று நுவல்வர்.[8]

தமிழ்நாவலர் சரிதையில் குறிப்பிடப் பெறுபவரும், அந்தகக் கவி வீரராகவ முதலியார் காலத்தில் வாழ்ந்தவருமான கச்சியப்பரே கந்த புராணக் கச்சியப்பராவர் எனக் கொண்டு அவரது காலத்தைக் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு என்பர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.[9]

'தமிழ் இலக்கிய வரலாற்றில்' (பதினான்காம் நூற்றாண்டு) மு. அருணாசலம் வீரசோழியத்தை மேல் எல்லையாகவும், அருணகிரிநாதரின் திருப்புகழைக் கீழ் எல்லையாகவும் அமைத்துக் கொண்டு கச்சியப்பர் காலத்தை ஏனைய இலக்கிய வரலாற்றாசிரியர்களைக் காட்டிலும் சற்று விரிவாக ஆராய்வர்.[10] கச்சியப்பர் சமயகுரவர் நால்வருக்கும் வாழ்த்துக் கூறிய பின்னர்த் திருத்தொண்டர் வணக்கம் கூறுகின்றார். திருத்தொண்டர் என்ற கருத்து சேக்கிழாருடன் தொடங்குகின்றது. ஆதலால் 'திருத்தொண்டர் பதமலர்' தொழுகின்ற இவ்வாசிரியர் சேக்கிழாருக்குப் பிற்பட்டவர்[11] என்றும், ''கந்த புராணம் போல் அவ்வளவு சிறப்பாகப் பிறிதொரு புராணம் சைவ சித்தாந்தம் கூறுவதில்லை என்று ஆன்றோர் கூறுவார்கள். இப் புராணம், முறைப்படுத்தப்பட்டுள்ள சைவசித்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்கு கூறுகிறது. திருமந்திரத்திலிருந்து கச்சியப்பர் பல கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார். எனினும், பொதுவாக இவர் மெய்கண்ட சாத்திரம் கூறும் விளக்கங்களையே கூறுகிறார்,''[12] என்றும் குறிப்பிட்டுக் கந்தபுராண அகச்சான்று கொண்டு அக்கருத்தை மேலும் நிறுவி, மெய்கண்ட சாத்திரங்களுக்குப் (கி.பி.13-ஆம் நூற்றாண்டு)

பின்னர்த் தோன்றியவர் என்றும் உரைப்பர். பதினைந்தாம் நூற்றாண்டினரான காளமேகப் புலவர் காலத்தில் வாழ்ந்த கச்சியப்பரின் மாணாக்கராகிய ஞானவரோதயர் தம் குருவை "கருதரிய காஞ்சிவளர் கற்பகத்தாரு" எனச் சுட்டுதலானும், கந்தபுராணம் அரங்கேற்றம் பற்றிய அருணகிரிநாதரின் திருப்புகழ்க் குறிப்பினாலும், கச்சியப்பர் காலத்தை கி.பி. ஆயிரத்து நானூறுக்குச் சிறிது முன்னதாகக் கொள்ளலாம் என்று அவர் முடிவு செய்வர்.[18]

கச்சியப்பர் காலம் குறித்து ஆராய்ந்த மேற்காணும் அறிஞர்களின் கருத்துக்களில் மு. அருணாசலம் கருத்தே தற்பொழுது ஏற்புடையதாக இருத்தலால் கந்தபுராணக் காலத்தைப் பதினான்காம் நூற்றாண்டெனக் கொண்டு அவர் வாழ்ந்த காலச் சூழலை வரலாற்றுப் பின்னணியோடு காணல் பொருத்தமாகும்.

## 2. வரலாற்று அடிப்படையில் முருக வணக்கத்தின் வளர்ச்சி

முருகனைக் குறித்து அன்றுதொட்டு இன்றுகாறும் தோன்றிய நூற்களில் கந்தபுராணம் போன்று ஒரு விரிநூல் எழவில்லை. முருக வழிபாட்டு வளர்ச்சிப் படிநிலைகளில் ஏற்றமும், சிறப்பும் மிக்கதொரு காலச் சூழலில்தான் இத்தகு பெருநூல் தோன்றியிருக்க முடியும். எனவே, நூல் தோன்றிய காலத்தைக் காணுமுன் முருக வழிபாட்டு வளர்ச்சிக் கூறுகளை வரலாற்று அடிப்படையில் நோக்குவது ஏற்புடைத்தாம்.

பல்லவர் தலைநகராம் காஞ்சிபுரம் சோழர், பாண்டியர் தலைநகராம் உறையூர், மதுரை போன்று தமிழரின் தனித்தன்மையைக் காட்டும் நிலைக்களனாகத் திகழாது, கலப்புப் பண்பாட்டின் உறைவிடமாகவே விளங்கி வந்துள்ளமையினை வரலாறு நமக்கு உணர்த்தும். கச்சியப்பரும்,

> "வெள்ளை யாதி வியன்கவி யாவையுந்
> தெள்ளி தின்மொழி தென்கலையே முதல்
> உள்ள பல்கலை யோதுகின் றார்களும்
> .... .... .... .... மன்றுதொ றீண்டுவார்" (திருநகரம் : 49)

எனக் குறிப்பிட்டுப் பலமொழி பயின்றோர் அந்நகரில் உறைநலை மொழிகுவர்.

பல்லவ வேந்தர்களின் ஆதரவில் வடமொழிக் கல்வி சிறந்தோங்கி வளர்ந்தது. கதம்ப அரச மரபைத் தோற்றுவித்த மயூரசன்மன் (கி. பி. 345 - 370) மேனிலைப் படிப்பிற்காகக் காஞ்சியிலுள்ள வடமொழிக் கல்லூரிக்கு வந்தனன் என்றும் அக்கல்லூரி பல்லவ அரசனது மேற்பார்வையில் இயங்கியதாகவும் ஆய்வாளர் கூறுவர்.[14] நாலந்தாப் பல்கலைக்கழகத்தில் சிறந்த பேராசிரியராக இருந்த தருமபாலர் காஞ்சிபுரத்தினர் என்றும் கூறப்படுகின்றது.[15] பல்லவ அரசர்களின் பேரவைகளைப் பாரவி, தண்டி போன்ற வடமொழிப் பெரும்புலவர்கள் அழகு செய்தனர். பல்லவ வேந்தனாம் இராசசிம்மன் சிறந்த வடமொழிப் புலவனாகவும் திகழ்ந்தான்.[16] எனவே, பல்லவர் காலத்தில் வடமொழி நன்கு வளர்ச்சியுற்றமையினைக் காணலாம்.

ஏறக்குறைய இதே காலத்தில் (கி. பி. 300-600) வடநாட்டை ஆண்ட குப்தர்களும் வடமொழியை நன்கு போற்றிப் புரந்து வந்தமையினைக் காண்கின்றோம். வடமொழியிலுள்ள தொன்மையான புராணங்கள் ஒழுங்குபடுத்தப் பெற்றுத் தொகுக்கப் பெற்றது இவர்கள் காலத்திலே என்பர்.[17] இந்து சமயமும் (பிராமணியம்) சமஸ்கிருத இலக்கியமும் புராணங்களும் நன்கு வளர்ச்சி பெற்றன. அதனால் குப்தர்கள் காலத்தை இந்து சமயத்தின் பொற்காலம் என்றும் அழைப்பர்.[18]

இந்திய நாட்டின் வடக்கு, தெற்கு ஆகிய இரு பகுதிகளிலும் வடமொழியும், இந்து சமயமும் ஓங்கி உயர்ந்து வளர்ந்த இக்காலத்தில் தமிழகத்தில் ஆரியப் பண்பாட்டுக் கலப்பு தவிர்க்க இயலாததாகிவிட்டது. திருமுருகாற்றுப்படை, பரிபாடல் காலத்திலேயே தமிழ்க் கடவுளாம் முருகனோடு ஆரியக் கடவுளாம் கார்த்திகேயனின் பண்புகளை இணைத்துக் கூறும் நிலைகளை முன்னர்க் கண்டோம். சமயத்துறையில் இத்தகைய இரு பண்பாடுகளின் இணைப்பு முழுமையுற்றது பல்லவர் காலத்திலே எனலாம். "இத்தகைய மாறுதல் தமிழ்நாட்டில் ஏறத்தாழக் கி. பி. முதல் ஆறு நூற்றாண்டுகளில் நடந்து முடிந்தன,"[19] என்பர்.

குப்தர்கள் காலத்தில் வடநாட்டில் கார்த்திகேய வழிபாடு நன்கு வளர்ந்திருந்தமையினை, பூமராக் குகையில் கண்டெடுக்கப் பெற்ற குப்தர் காலக் காசுகளில் கார்த்திகேயன் வடிவமும், மயிலின் வடிவமும் பொறிக்கப் பெற்றிருத்தலாலும், பரமசிவன் திருமகனான குமாரக் கடவுளுக்குப் பல கோயில்கள் எழுப்பப் பெற்றதாலும், குப்த அரசர்களில் ஒருவன் 'ஸ்கந்தகுப்தன்' என்ற பெயரைத் தரித்திருந்தமையாலும் உணர்கின்றோம்.[20]

''வாதாபியை ஆண்ட சாளுக்கியர்கள் திருமாலைத் தங்கள் குலக்கடவுளாகக் கொண்டொழுகியமையோடு கார்த்திகேயனையும், பத்தி செய்தற்குரிய அன்புக் கடவுளாகப் போற்றி வந்தனர்''[21] என்பதால் இரு பேரரசுகட்கும் இடையிலுள்ள நாட்டிலும் கார்த்திகேய வழிபாடு வளர்ந்து வந்தமையினை அறிகின்றோம்.

பேரரசுகளின் அரசியல் செல்வாக்கால் அவ்வரசுகளைச் சார்ந்துள்ள சமயங்களும், செல்வாக்குடன் விரைவில் பரவுதல் வரலாறு தரும் உண்மைச் செய்தியாகும். ''பழைய வைதிகநெறி குப்தர் காலத்தில் வட இந்தியாவில் பௌராணிக மதமாக மாறுதலடைய, பௌராணிக மதம் தமிழகத்துப் பழைய சமயமுறைகளோடும் சேர்ந்து பல்லவர்கால இந்து சமயமாகியது'' என்பர்.[22] தமிழகத்தைத் தமிழரல்லாத பல்லவ வேந்தர் ஆண்டு வந்தமையும், சமற்கிருத இலக்கியத்தைச் சீரிய முறையில் அவர்கள் போற்றிப் புரந்து வந்தமையும் இரு பண்பாடுகளின் இணைப்புக்கு ஏற்றமாகவும், ஊற்றமாகவும் அமைந்தன. இத்தகு சூழ்நிலையிலே தமிழ்முருகன் வடநாட்டுக் கார்த்திகேயனோடு முழுமையாக ஒன்றுபடுத்தப்படுகிறான். தென்னகத்தில் ஆரியம் பரவும் பொழுது, ''தென்னிந்திய மொழிகளையும் ஆரியர் கற்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார்கள். மேலும், தென்னிந்திய பழக்க வழக்கங்களையும் பின்பற்ற வேண்டியிருந்ததால், அவ்விரு வேறு வாழ்க்கை முறைகளும் இணைந்த ஒரு புதிய சமுதாயம் தென்னகத்தில் உருவாகியது. அன்றியும் தென்னக மக்கள் வழிபட்ட தெய்வங்களுக்கும், ஆரியர்கள் தங்களுடைய நெகிழ்திறம் பெற்ற கடவுட் கோட்பாட்டில் இடம் அளிக்க வேண்டியதாயிற்று,''[23] என்ற கே.ஏ. நீலகண்ட சாத்திரியாரின் கருத்தும் இங்கு நினையத்தகுவது.

பல்லவர் காலத்தில் சைவ, சமணப் போராட்டங்கள் நிகழினும் சைவ சமயமே அவர்களால் புரக்கப் பெற்று நன்கு வளர்ச்சியுற்ற மையினை அறிஞர்கள் ஆய்ந்து முடிவு செய்துள்ளனர்.[24] சிவனுக்குத் தலைமை தரும் சைவத்தைப் பொதுவாகப் பல்லவர்கள் போற்றி யொழுகினும் சில அரசர்கள் சிவனின் திருமகனாம் கந்தனை ஈடு பாட்டுடன் வணங்கி வந்தமையினையும் காண்கின்றோம்.

பல்லவ வேந்தர்களில் சிலர், கந்தவர்மன், சிவக்கந்நவர்மன், கந்தசிஷ்யன் போன்ற பெயர்களைத் தங்கள் இயற்பெயர்களாகப் பெற்றுள்ளனர். ''அவர்கள் பூண்டிருந்த பட்டப் பெயர்களுள் ஒன்று 'பரம பிரமண்யன்' என்பது .... .... அவர்கள் பிரம்மண்யர்கள், சுப்பிர மணியரைப் போன்ற தூய உருவுடையவர்கள், அறிவின் இருப்பிட மாகத் திகழ்ந்தவர்கள் என்று தங்களுடைய பல கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் கூறிக் கொள்கின்றனர். 'சுப்ரமண்யன், குமாரன், குகன் எவ்வாறோ அவர் போன்றவர்' என்று காஞ்சி கைலாயநாதர் கல்வெட்டில் காண்கின்றோம். அதே போன்று காசாக்குடிச் செப்பேடு களிலும் காண்கின்றோம். எனவே, 'பரம பிரம்மண்யர்கள்' என்று தங்களைக் குறித்துக் கொள்ளுவதால் முருகப் பெருமானின் சிறந்த பக்தர்கள் என்பதும் .... .... புலனாகும்'' என்பர்[25]. மாமல்லையில் அமைந்துள்ள மும்மூர்த்தி குகையில் வடபுறத்து அறையில் முருகப் பெருமானை நின்ற கோலமாக அவர்கள் வடித்திருப்பதும்[26] இவண் குறிப்பிடத்தக்கது.

இராசசிம்மன் காஞ்சியில் எழுப்பிய கைலாசநாதர் கோயிலின் கருவறையில் பின்புறச் சுவரில் சோமாக்கந்தப் படிவம் உள்ளது.[27] இதுவன்றி மாமல்லையில் அம்மன்னன் எழுப்பிய குகைக்கோயில்களில் ஐந்து இடங்களில் இப்படிவம் காணப்படுகின்றது. ''ஈச்சுரருடைய குமாரனாக எவ்வாறு குகன் (முருகன்) சுப்ரமணியராக அவதரித் தாரோ அவ்வாறு பரமேஸ்வரனின் (இவன் தந்தையின் பெயர்) குமார னாக சுப்ரமணியனாக இவன் அவுதரித்தான்,'' என்று தன்னைக் கல்வெட்டில் கூறிக்கொள்வதால் அச்செய்தியைக் குறிப்பாக அறி வுறுத்தும் நிலையில், அவனமைத்த கோயில்களிலும் இத்தகைய சோமாக்கந்தப் படிவத்தை வெட்டுவித்தான் போலும் என்று தமிழகத் தொல்லியல் ஆய்வாளர் கருதுவர்.[28]

இதுகாறும் கூறிய வரலாற்றுச் செய்திகளிலிருந்து பல்லவர்கள் சைவ சமயத்தைத் தழுவியிருப்பினும் முருகனை முற்ற ஒதுக்காது சோமாக் கந்த வடிவத்தில் போற்றி வந்தனர் என்றும், குறிப்பிட்ட சில அரசர்கள் முருக பத்தியுடையவர்களாய்த் திகழ்ந்தனர் என்றும், முருக கார்த்தி கேய வழிபாடு முழுமையாக இணைந்தது என்றும் அறிய முடி கின்றது. வடமொழியில் காணப்பெறும் சைவ வைணவ நூல்களிற் சில தென்னகத்தில் (பல்லவர் காலத்தில்) தோன்றியிருக்கலாம் என்றும், தென்னகத்துப் படியாகிய மகாபாரதம் மிகவும் நீண்டிருத் தற்கு அக்காலத்தில் தென்னகத்தில் ஏற்பட்ட சேர்க்கைகளே காரணம் என்றும் அறிஞர்கள் கருதுவர்.[29] எனவே, வடநாட்டில் குப்தர்கள் காலத்தில் புராணங்கள் ஒழுங்குபடுத்தித் தொகுக்கப்பட்டது போல் வடமொழி செல்வாக்குடன் ஓங்கித் திகழ்ந்த இப்பல்லவர் காலத்தில் வடமொழிக் கந்தபுராணம் தென்னாட்டுத் தொல்கதைகளையும் இணைத்து ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதவும் வாய்ப் புள்ளது. வடமொழிக் கந்தபுராணத்தில் வடநாட்டுப் படிகளும், தென்னாட்டுப்படிகளும், நூலமைப்பு, கந்தன் அவதார நோக்கம் முதலியனவற்றில் வேறுபட்டிருத்தற்கும் இதுவே காரணமாகலாம்.

பல்லவர்க்குப்பின் தமிழகத்தைச் சிறப்புடன் ஆண்ட பிற்காலச் சோழ மன்னர் ஆட்சிக்காலத்திலும், பாண்டிய மன்னர் ஆட்சிக் காலத்திலும் முருகவழிபாடு சைவத்துடன் இணைந்து வளர்ந்து வந்துள்ளமையினைக் காண்கின்றோம்.

ஆதித்தசோழன் (கி.பி. 871-907) காலத்தில் புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் வட்டத்திலுள்ள கண்ணனூரில் முருகனுக் கென்று ஒரு கோயில் எழுப்பப் பெற்றது. ''ஆதித்தன் காலத்துக் கோயில்களில் இதுவே தலை சிறந்த கற்றளியாகும். முருகனையே மூலத்தான(த்) தேவதையாகக் கொண்டு சுயம்பிரதான வகுப்பைச் சேர்ந்த தனித்த முருகன் கோயிலாக விளங்குவது இதன் தனிச் சிறப்பாகும்'' என்பர்.[30] சோழர் காலத்தில் ஆகமங்களின் அடிப் படையில் கோயில்கள் அமைக்கப்படும் நிலைபிருந்தமையால் சிவன் கோயில்களில் பிற தெய்வங்களுடன் முருகன் இடம்பெற்றுத் திகழும் இன்றியமையாமை ஏற்பட்டது. முதலாம் இராசராசன் மகனாகிய

முதலாம் இராசேந்திரன் எழுப்பிய கங்கைகொண்ட சோழபுரக் கோயிலில் உலோகத்தால் வடிக்கப்பெற்ற முருகன் சிலையினை மிகச் சிறந்த உருவமைதி உடையது என்றும்,[31] இத்திருமேனி குமார தந்திர ஆகமம் இரண்டாம் சருக்கத்தில் குறித்தவாறு அமைந்துள்ளது என்றும்[32] குறிப்பிடுவர். ''முருகன் விழுமிய படைத் தலைவனாக மிளிர்ந்து தேவர்கட்கு வெற்றி ஈட்டித் தந்தது போல் இராசேந்திரன் தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவனாகத் திகழ்ந்து இதுவரையிலும் தமிழரசர்கள் பெறாத வெற்றியினைப் பன்னாடுகளில் பெற்று உயர்ந்தவன். அத்தகு பேராற்றலும், பெரு வெற்றியும் படைத்த இராசேந்திரன் தனது அன்புக் கடவுளாக முருகனைக் கொண்டது குறிப்பிடத்தக்கது,'' என்றும் உரைப்பர்.[33] திருவிடைக்கழியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது அகத்துறையில் தலைவி நிலை கண்டு தாய் இரங்குவதாகத் திருவிசைப்பா பாடிய சேந்தனார் (கி.பி.10ஆம் நூற்றாண்டு) பிற்காலச் சோழர் காலத்தவரே[34] என்பதும் அத்திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருத்தலும் ஈண்டு நினையத் தகுவது.

முதலாம் பராந்தகன் ஓகவளநாட்டுப் பகுதியில் முருகன் கோவிலுக்கு நிலதானம் வழங்கியமையும், முதலாம் இராசராசன் கூரம் சபையாரிடமிருந்து நில வரியைத் தண்டி, முருகன் கோயிலுக்குக் கொடுத்தமையும், இராசேந்திரன் முருகன் கோயில் பூசாரிகளாக வரும் வழக்கத்தினை வரன்முறை செய்ததோடு அழகிய திருச்சிற்றம்பலத்தில் முருகன் கோயிலுக்கு மேற்கூரையமைத்தமையும், முதற் குலோத்துங்கன் செங்கற்பட்டு முருகன் கோயிலுக்கு நாள்தோறும் முப்பது கலம் நெல் அளித்துவர ஏற்பாடு செய்தமையும், மூன்றாம் இராசராசன் திருப்பிடவூர் என்னும் ஊரினை அவ்வூர் முருகன் கோவிலுக்குத் தானம் அளித்தமையும், முருகன் கோயில்களில் வழிபாடு இயற்றுதற்குக் குமாரகணத்தார் என்று தனிப்பட்ட பிரிவினர் இருந்தமையும், அவர்கட்கென மானியம் அளிக்கப் பெற்றமையும் சோழர்காலக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.[35]

இக்காலப் பகுதியில் தென்தமிழ் நாட்டை ஆண்டு வந்த பாண்டிய மன்னர் பலரும் முருகவேள் திருவடிகளில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாய் விளங்கினர். ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆண்ட சடையவர்மன் வரகுணவர்மன் (இரண்டாம்

வரகுண பாண்டியன்) திருச்செந்தூர் முருகப் பெருமானுக்கு ஆண்டு முழுவதும் நாள் வழிபாடு நடத்துவதற்கு ஆயிரத்து நானூறு பொற் காசுகளை நிவந்தமாக வழங்கி, அவற்றைப் பன்னிரண்டு ஊர்களுக்குப் பிரித்துக் கொடுத்து, காசு ஒன்றுக்கு ஆண்டொன்றிற்கு நெற்பொலிசை இரண்டு கலமாக அப்பன்னிரு ஊரினரும் திருச்செந்தூர்க்கோயிலுக்கு இரண்டாயிரத்தெண்ணூறு கல நெல் ஆண்டு தோறும் அளித்து வரு மாறு ஏற்பாடு செய்துள்ளான் என்றும் நவில்வர்.[36]

முதலாம் இராசேந்திரன் கங்கைக்கரையிலிருந்து பல சைவாச் சாரியர்களை அழைத்து வந்து அவர்களைத் தமிழகத்தில் குடியேற்றிய தாகத் திரிலோசன சிவாச்சாரியார் தம் சித்தாந்தசாராவளி எனும் நூலில் குறிப்பிடுவர்.[37] முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் அத்தகைய சைவாச்சாரியர் களை தங்கள் அரச குருவாகக் கொண்டு விளங்கியமையும் வரலாறு உணர்த்தும் செய்தியாகும்.[38] கங்கைக் காவிரிப் பண்பாடு மேலும் ஒன்றுபடுதலை இவ்வரலாற்றுச் செய்திகள் வற்புறுததும்.

பல்லவருக்குப் பின் தமிழகத்தை ஆண்ட இரு பெரும் அரச மரபினரும் சைவத்தைப் போற்றி வளர்த்ததுடன் முருகப் பெருமான் மீதும் சிவனது தலைமைக்கு மாறாகா நிலையில் ஆழ்ந்த பத்தி கொண்டிருந்தமையும், இரு பண்பாடுகளின் இணைப்பு சமயத் துறை யில் மேலும் வளர்ச்சி பெற்றமையும் உணர்கின்றோம்.

### 3. கந்தபுராணக் காலச் சூழல்

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (கி.பி.880) நிகழ்ந்த திருப்புறம்பியப்போர் தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தின் வடபகுதியை ஆண்ட பல்லவப் பேரரசும், தென் பகுதியை ஆண்ட பாண்டியப் பேரரசும் வீழ்ச்சியுற்று மீண்டும் சோழப் பேரரசு உருவாவதற்கு அப்போர் காரணமாயிற்று.[39] விசயா லயனால் (கி.பி.850-871) புத்துயிர் ஊட்டப் பெற்ற சோழவரசு முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலங் களில் பெரும் பேரரசாகப் பொலிந்து மூன்றாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1216-1250) மீண்டும் வீழ்ச்சியின் இறுதிநிலையை

எய்தியது.[40] இவ்விடைப்பட்ட நானூறு ஆண்டுக்காலத்தையே தமிழக வரலாற்றின் பொற்காலம் என்பர். சோழப் பேரரசு வலி குன்றி வீழ்ச்சிப் பாதையில் செல்லும்போது தான் மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டியப் பேரரசு மீண்டும் தலையெடுத்து கி.பி.பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே தாழ்நிலை யடையத் தொடங்கிற்று. மாறவர்மன் குலசேகரபாண்டியன் மக்கள் இருவரும் தம்முட் பகை கொண்டு போரிட்டுக் கொண்ட காரணத் தால் வடநாட்டு முகமதியரின் தாக்குதலுக்குத் தமிழகம் ஆட்பட வேண்டிய அவல நிலையை அடைந்தது.[41]

கி.பி.1311இல் அலாவுதீன் கில்சியின் படைத்தலைவனாகிய மாலிக்கபூர் தக்காணத்தின்மீது படையெடுத்து வருகையில் ஒய்சாள நாட்டு வேந்தனாகிய மூன்றாம் வல்லாளன் வழிகாட்ட, தமிழகத்தில் வீரபாண்டியன் தலைநகராகிய பீர்தூல் (உறையூருக்கு அண்மையி லுள்ள ஊர்) மீதும், கண்டூர் (கண்ணனூர்) மீதும் தாக்குதல் நடத்தி வீரபாண்டியனைத் தோற்றோடச் செய்தான். பின்னர் அவன் படைகள் பிரம்ம மஸ்தபுரி (சிதம்பரம்) சென்று அங்குள்ள கோயிலைத் தாக்கி கொள்ளையிட்டன. இந்துக்களுக்குப் புனிதமான இந்த இடத்தை மாலிக்கபூர் மிக்க கவனத்துடன் கடைக்கால் வரை தோண்டிப் பாழாக்கினான். பொன், வெள்ளி, விலையுயர்ந்த இரத்தினக் கற்களைக் குவியல் குவியல்களாகச் சேகரித்துக் கொண்டு, கல்லிலே வடித்த கலைச் செல்வங்களைச் சிதைத்தும், அழித்தும் நாசமாக்கினான். நெப்போலியன் படையெடுப்பின்போது மாஸ்கோ வைக் கைவிட்டுச் சென்ற இரஷ்யர்களைப் போல அரச குடும்பத் தினர் அனைவரும் படையெடுத்துவந்த பாதகரிடம் கலைச் செல் வங்களை விட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். ''முஸ்லீம் வரலாற்றா சிரியர்கள் 'மர்ஹத்புரி' என்று எழுதிவைத்துள்ள காஞ்சிபுரத்திற்குச் சென்று அங்கிருந்த கோயில்களின் தூய்மையைக் கெடுத்து அவற் றையும் கொள்ளையடித்தான். இத்தென்னகப் படையெடுப்பினால் தென்னிந்திய செல்வத்தில் ஒரு பெரும் பகுதியை மாலிக்கபூர் கொண்டுபோய் விட்டான் என்பது உண்மை. அறுநூற்றுப் பன்னி ரண்டு யானைகள், தொண்ணூற்றாயிர மணங்கு பொன், பல பெட்டி நிறைய அணிகள், முத்துக்கள், இருபதாயிரம் குதிரைகள்

ஆகியவற்றை அவன் கொண்டு போனான் என்று 'பர்னி' கூறுகிறார்.'' என்பர். அமீர்குசுரு இப்படையெடுப்பினை ஒரு புனிதப் போராக (ஜிஹாத்-முகமதிய மதத்தைக் காக்கப் பிற மதத்தாரைப் பொருதல்) வருணிப்பர்.[42]

மாலிக்கபூர் படையெடுப்பிற்குப் பின்னரும் தமிழகத்தில் அமைதியான சூழல் ஏற்படவில்லை. பாண்டிய மன்னர்களின் அரசுரிமைப் போராட்டம் மீண்டுந் தொடர்ந்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு கேரள நாட்டு மன்னன் இரவிவர்ம குலசேகரன் பாண்டிய நாட்டைத் தாக்கியதோடு வடக்கே காஞ்சிபுரம் வரை வந்ததாகத் தெரிகின்றது.[4]

கி.பி.1335இல் மதுரையில் சுல்தானிய ஆட்சி நிறுவப் பெற்றது. அப்போது நடந்த ஒரு போரில் 'கியாதுத்தின்' என்பவன் ஒரு காட்டில் புகலிடம் நாடி ஒளிந்திருந்த ஆயிரக்கணக்கான இந்துக்களைப் பிடித்துக் கழுவிலேற்றினான் என்றும், இத்தகைய மனிதவேட்டை குருதியை உறைய வைக்கும் செய்தியாகும் என்று இபின்படுடா உரைப்பர்.[44] இவையன்றிப் பல்வேறிடங்களில் கூட்டு மதமாற்றமும் இந்துக்களை ஒட்டு மொத்தமாகத் துன்புறுத்துவதும் நிகழ்ந்து வந்தன.[45]

முகமதியர் படையெடுப்பாலும், மதுரை சுல்தான்களின் ஆளுகையாலும் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் ஒரு தேக்கம் விளைந்தமையினை உணர்கிறோம். கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் தென்னகத்து மக்கள் அமைதியின்றி வாழ்ந்ததால் கம்பனைப் போன்ற மகாகவிகள் தோன்றவில்லை என்றும் வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர்.[45] தமிழகத்தின் பாழ்பட்ட நிலையினைக் கங்காதேவியின் 'மதுராவிசயம்' ''கோயில்கள் மனித நடமாட்டமின்றிக் காட்டு விலங்குகள் வாழும் இடமாகிவிட்டது. வேள்விப்புகையும் வேதமுழக்கமும் பரவியிருந்த சிற்றூர்களில் முகமதியர்களின் மாட்டிறைச்சி சுடும் புகையும், மிலேச்சர்களின் செவிக்கின்னா ஒலிகளும் நிரம்பியுள்ளன. மதுரையில் சுற்றுப்புற ஊர்களில் தென்னந்தோப்புக்களில் மனிதத்தலைகளைத் தாங்கிய கம்பங்கள் இருக்கின்றன. பசுக்களின் குருதியால் தாமிரவருணி ஆறு செந்நிறமாகக் காட்சியளிக்கின்றது. மக்கள் வேதங்

களை மறந்தனர்; நீதி மறைந்தது; புண்ணியச் செயல்களும், பெருந் தன்மைக் குணமும் மக்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டன," என்று விவரிக்கும்.[47]

"அவர்கள் ஆண்ட காலங்களில் உள்நாட்டில் கலகங்கள் மிகுந் திருந்தமையின் மக்கள் எல்லோரும் அல்லல் வாழ்க்கையுடையோராய் இருந்தனர். அப்போது பல திருக்கோயில்கள் கொள்ளையிடப் பெற்று நாள் வழிபாடும், ஆண்டுவிழாவுமின்றிப் பல ஆண்டுகள் மூடப்பட்டி ருந்தன என்று பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சமயக் கொள்கை பற்றிப் பொதுமக்கள் பல்வகைத் துன்பங்களுக்கும் ஆளாயினர் என்பது மகமதிய ஆசிரியனாகிய இபின்படுடாவின் குறிப்புக்களால் தெரிகிறது."[48] "சுல்தானும் அவன் கீழிருந்த மாகாண ஆளுநர்களும் குடியானவர்களையும், தொழிலாளர்களையும் கசக்கிப் பிழிந்து பணந் திரட்டினார்கள்" என்றும் கூறப்படுகின்றது.[49] "தெய்வங்களின் தேவ தான நிலங்களுக்கெல்லாம் வரி விதித்ததால்"[50] தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நிலவி வந்த சமயங்களை வரைவொட்டாது தடுத் தனர் என்றும் அறிகின்றோம்.

'வேத வேள்வியை நிந்தனை செய்துழல்' அமணரைக் காட் டிலும் அத்தகைய வேள்விகளே நிகழாவண்ணம் திருக்கோயில்களை இடித்துப் பாழாக்கிக் குழப்பம் விளைவித்த முகமதியர் ஆட்சிக் காலத்தைத் தமிழகத்தின் மற்றொரு இருண்ட காலம் என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது. எங்கும் கொலையும், கொள்ளையும் மிகுந்திருந்ததுடன் வேத ஒழுக்கமும் நீதியும் மறைந்தன. மக்களிடம் அறவுணர்வும் மங்கியது. தமிழ்நாட்டின் புனிதக் கோயில்கள் சூறை யாடப்பட்டுப் பாழ்நிலை எய்தியதாலும் தேவதான நிலங்களுக்கும் குடிமைவாங்கும் கொடுமை நிலவியதாலும் உயிர்களின் ஆக்கத்திற் காக இயற்றப்படும் வழிபாடுகளும் வேள்விகளும் நடைபெறவில்லை. வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளும் வல்லாண்மையாளர்களும், சமுதாய எதிரிகளும், பொதுமக்களைத் துன்புறுத்தி வரி வாங்கிய தாகவும் உணர்கின்றோம். அதனால் நிலைத்த, வலிமை வாய்ந்த செங்கோல் ஆட்சி நடைபெறவில்லை என்பதும் பெறப்படுகிறது.

இந்து மதத்திற்கு எதிராக முகமதிய மத மாற்றம் தொடர்ந்து

நிகழ்ந்த வண்ணமிருந்தது. உயிருக்கு அஞ்சியே இவ்வாறு மதம் மாறினர் என்றும் கருதலாம். இந்து சமயத்தைச் சார்ந்த தமிழ் மக்களின் உயிர்கட்குப் பாதுகாப்பு இல்லாத நிலையும் இருந்து வந்தது. அமீர்குசுரு இதனை முகமதியர்களின் புனிதப்போராக (ஜிஹாத்) வருணிக்குமளவிற்கு மதத்தின் பெயரால் கொலைகள் நடந்தமையினையும் காண்கின்றோம். எனவே, பொதுமக்களிடத்தில் நிலையாமை உணர்வு மிக்கிருந்தமையானும், தங்களது மிகவும் புனிதமான கோயில்கள் பிற மதத்தினரால் இடித்துப் பாழாக்கப் படுதலினாலும் முன்னிருந்ததை விட மிகுதியான சமயப்பற்றும் தெய்வ நம்பிக்கையும் அவர்கள் மனத்தில் எழலாயின. அதன் விளைவாகச் சமய உணர்வோட்டமுடைய இலக்கியங்கள் மிகுதியும் தோன்றின. உலகியல் துறையில் மக்கள் மனம் ஒடுங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் ஆன்மார்த்தத் துறையில் அவர்கள் உள்ளம் விரிவுகாண இயன்றது போலும் என்றும், ஞான நெறிகளில் இக்காலத்தில் நூல்கள் பெருகியது போல் வேறெக் காலத்திலும் பெருகவில்லை என்றும் உரைப்பர்.[51]

தங்களைக் காக்கும் வல்லமையுடைய பேரரசர்கள் இல்லாத குழப்பம் மலிந்த இக்காலத்தில் மக்கள் இறைவனை நம்பியிருத்தல் இயல்பே. இதனால் பேரரசுளைத் துதிபாடும் போக்கில் பெருங்கதை, சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்கள் மலராமல் தம்மைக் காக்கும் இறைவனையே தன்னிகரில்லாத் தலைவனாகக் கொண்டு பத்திமையுணர்வு வெளிப்படும் நிலையில் காப்பியம் தோன்றும் சூழ்நிலை உருவாகியது. இத்தகைய காலப் பகுதியிலே ''மழைவளம் சுரக்கவும் முறைகோடா முடியாட்சி தழைக்கவும், உயிர்கள் குறைவின்றி வாழவும், நான்மறையின் அறங்கள் ஓங்கவும், கோயில்களில் வேள்வியும் வழிபாடும் முன்போல் சிறக்கவும், உலகில் சைவ நீதி நிலைபெறவும்'' வேண்டி,

> ''வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
> கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
> நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
> மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்''
> (1 : பாயிரம் : 5)

என்ற வாழ்த்துக்குரலுடன் - வாழ்க்கையில் நம்பிக்கை இழந்த மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் அடைக்கலக் குரலுடன் - கந்தனைத் தலைவனாகக் கொண்டு ஒரு காப்பியம் எழுந்தது. கலகம், குழப்பம், முகமதியக் கொடுங்கோன்மை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற ஏங்கித் தவித்த தமிழ்நாட்டு மக்களுக்கு வல்லாட்சி நீங்கி நல்லாட்சி மீண்டும் மலரும் என்ற நம்பிக்கையினை நல்கும் முறையில் கந்த புராணம் எழுந்தது என்றும் கூறலாம். தென்னகத்தை முகமதிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்து இந்து சமய ஆட்சியை மீண்டும் நிறுவ, வித்தியாரணியரை அரச குருவாகக் கொண்டு அரிஅரர் துங்கபத்திரை ஆற்றின் தென்கரையில் உள்ள விசய நகரத்தில் கி.பி. 1336-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினெட்டாம் நாள் முடிசூட்டிக் கொண்ட வரலாற்று நிகழ்வும்[52] இவண் கருதத்தக்கது.

சிறுபொருள் விழைந்து, அரசநீதி தவறி, வேதநெறி பிழைத்து உலகை ஆளும் அசுரன் ஆட்சியில் (3 : 12 : 101 - 102) சொல்லொணாத் துயர்க்கு ஆட்பட்டுழலும் (3 : 9) தேவர்களைக் காக்கும் அரசனாம் இந்திரன், பகைவனை எதிர்க்கும் வலியிழந்து மறைந்து திரிதலும் (2 : 21 : 11), பின்னர் முருகன் தோன்றி அசுரனைக் கொன்று மீண்டும் அமரருக்கு வாழ்வு கொடுத்தலும் போன்ற செய்திகளைக் கதை நிகழ்ச்சிகளாகக் கொண்ட கந்தபுராணம் தங்களைக் காக்கும் அரசர்களும் உயிர் தப்பி ஒளிந்து கொண்ட நிலையில் வேற்றுமதத்தினரால் அலைக்கழிக்கப்பட்டு உயிருக்குப் புகலிடம் காணாது வாடி மெலிந்திருந்த தமிழக மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் அருமருந்தாகத் திகழ்ந்ததில் வியப்பில்லை.

பல்லவர் காலத்திலேயே சைவ மடங்கள் தோன்றி இலக்கணம் தரிசனங்கள், சித்தாந்தம், யோகம், அறநூல்கள், புராணங்கள் முதலியவற்றை மக்கட்குக் கற்பித்து வந்ததுடன், சமய மையங்களாகவும் (Religious centre) திகழ்ந்தன.[53] சோழர்கள் காலத்தில் திருக்கோயில்களைச் சார்ந்து சமயப்பற்றை மக்கட்கு பரப்பும் நோக்குடன் பல மடங்கள் நிறுவப்பட்டமையினைத் கல்வெட்டுக் குறிப்புக்களால் அறிகின்றோம். இவை கோயில்களின் நிர்வாகத்தை கவனித்ததுடன் மடத்திற்கு வரும் வழிப்பயணிகளுக்கும் உதவி வந்தன. அறிவு வளர்ச்சிக்கும், அறிஞர்களைப் போற்றுதற்கும் இவை நிலைக்களமாய் இருந்தன. அங்கு சாத்திர வளர்ச்சிக்கான

பாடங்கள் சொல்லப்பட்டு ஆராய்ச்சிகள் நடந்தன. புராணங்கள் ஓதப்பெற்றன. திருப்பதிகம் என்ற தேவாரத் திருமுறைகளைப் பண்ணுடன் பாடுதற்குப் பயிற்சி அளிக்கப்பெற்றது.[54]

முகமதியர் ஆட்சிக்காலத்தில் நகரத்தைச் சார்ந்திருந்த இத்தகைய நிறுவனங்கள் செழிப்பாக இல்லாவிடினும் சிற்றூர்களி லுள்ள இத்தகைய நிறுவனங்களும், புலவர்களும், ஆசிரியர்களும் தம் தொண்டினைத் தொடர்ந்து சைவசமயத்தையும், சைவ இலக் கியங்களையும் போற்றி வளர்த்து வந்தனர். சைவத்தை மிக உயர்வாகப் போற்றி வளர்த்த பெரும் பேரரசுகள் வீழ்ந்த காலங்களில் இத்தகைய மடங்களும், புலவர்களுமே சைவ சமயத்தை வளர்த்து வந்தனர் என்பதை மறுத்தல் இயலாது. கச்சியப்பரின் கந்தபுராணம் இத்தகு காலச் சூழலிலே 'முற்றுணர் மேலவர்' (அவை : 19) ஆதரவுடன் தோன்றியது எனலாம்.

சங்க காலத்தில் தலைமையும், முழுமுதற்றன்மையும் பெற்று முருகன் விளங்கியமையினை முன்னர்க் கண்டோம். நாயன்மார் காலங்களில் சைவ சமயம் சமண எதிர்ப்பு இயக்கமாக இயங்கிய தால் சிவனே முழுமுதற்றன்மையும் தலைமையும் பெற வேண்டிய இன்றியமையா நிலை ஏற்பட்டது. எனினும், சைவ உலகில் முருகன் முற்றிலும் புறக்கணிக்கப்படாமல் சிவனோடு இணைத்துப் போற்றப் பட்டு வந்தான். சோமாக்கந்த நிலையில் அவன் வழிபடப் பெற்ற துடன் முருக பத்தியுடைய அரசர்களால் சில தனிக் கோயில்களும் அவனுக்கென எழுந்தன. முன்னரேயுள்ள முருகன் திருக்கோயில் களுக்கு அரசர்கள் அவ்வப்பொழுது நிவந்தங்கள் அளித்தும் போற்றி யுள்ளனர். கடல் கடந்தும் தமிழ்ப்பண்பாட்டை நிறுவிய இராசேந்திர சோழன் சிவனை வழிபட்டதோடன்றி முருகனைத் தன் அன்புக் கடவுளாகவும் கொண்டு ஒழுகியமையினைக் காண்கின்றோம். பல்லவர் காலப் பண்பாட்டுக் கலப்பினால் 'முருகன் - கார்த்திகேயன்' ஆகிய இருவரின் புராணக் கூறுகளும் இணைந்து முருக வழிபாடு படிப்படியாக வளர்ந்து வருவதனை இதனால் உணர்கின்றோம். சேந்தனாரின் முருகனைக் குறித்த திருவிசைப்பாக்களும், நக்கீரரின் திருமுருகாற்றுப்படையும் திருமுறைகளில் இடம் பெற்றது இச் சோழர் காலமே எனலாம். இத்தகைய வரலாற்றுச் செய்திகளால்

முருக வழிபாடு இடையறவின்றித் தொடர்ந்து நிகழ்ந்து வந்தமையினைக் காண்கின்றோம்.

பிற மதத்தினரின் தாக்குதலால் சைவக் கோயில்கள் தகர்க்கப்பட்ட பொழுது முற்காலத்தில் (நாயன்மார் காலத்தில்) தான் அற்புதங்கள் நிகழ்த்தியதுடன் தன் அடியவர்களையும் அற்புதங்கள் நிகழ்த்தச் செய்து சைவ மக்களைக் காத்தருளிய சிவன், தன் புனிதக் கோயில்கள் பாழ்படுவதைப் பார்த்துக் கொண்டுள்ளனனே என்ற ஏக்க எண்ணம் சிவனை முதலாகக் கொண்ட சைவ உலகில் ஏற்பட்டிருக்கலாம். பேராற்றல் படைத்த இராசராசனைக் காட்டிலும் மேலும் உயர்ந்து பெருவெற்றியும், பெரும் புகழும் ஈட்டித் தந்து தமிழகத்தை உய்வித்த இராசேந்திரனை வரலாற்றுலகில் கண்டவர்கள் தமிழ்மக்கள். சைவசமய உலகில் இத்தருணத்தில் சிவகுமரனாம் முருகனை வழிபடுவதில் கருத்தைச் செலுத்தியிருக்கக் கூடும். சிவனிடமிருந்து தோன்றிய முருகனைச் சிவனுக்கு மாறாகா நிலையில் முழுமுதற்பொருளாகக் காணும் முயற்சி சோழர் காலத்தில் அரும்பியிருப்பினும் பதினான்காம் நூற்றாண்டிற்றான் மலர்ந்து மணம் பரப்பத் தொடங்கியது எனலாம். சிவனும் முருகனும் வேறல்லர் என்ற கருத்தைப் பல விடங்களிலும் வற்புறுத்திச் சென்று முருகனது தலைமையும், முழுமுதற்றன்மையும் வெளிப்படும் வண்ணம் கந்த புராணத்தைப் படைத்து முருக வழிபாட்டில் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படுத்திய பெருமை அக்காலத்தில் வாழ்ந்த கச்சியப்பருக்கு உரியது. தமிழகத்திலுள்ள பல கோயில்கள் தோறும் சென்று பல்லாயிரக்கணக்கான திருப்புகழ்ப்பாக்களை இசைபொதுளப் பாடி முருக வழிபாட்டை உயர்த்திய அருணகிரிநாதர்க்கு அடித்தளம் அமைத்துத் தந்தவர் கச்சியப்பர் ஆவர்.

களப்பிரர் ஆட்சியில் தமிழர் பண்பாட்டில் ஏற்பட்ட வெற்றிடம் தமிழர்களை உணர்ச்சிமிக்கவர்களாகவும் சமயப்பற்று மிக்கவர்களாகவும் மாற்றியமைத்துப் பல்லவர் காலத்தில் பத்தியக்கம் தமிழ் நாட்டில் வேரூன்றவும் விரைவில் பரவவும் வாய்ப்பளித்ததைப்[55] போல் முகமதியப் படையெடுப்பால் தமிழகத்தில் ஏற்பட்ட பண்பாட்டுத் தேக்கம் தமிழ்மக்களை விழிப்புணர்ச்சி பெறச்செய்து மீண்டும் முருக பத்தியில் ஆழங்கால்பட்டு முருகவழிபாடு ஓங்கி வளர வாய்ப்பளித்தது என்றும் கூறலாம்.

## மேற்கோள்

1. ''அந்தப் புரமும் அறுநான்கு கோட்டத்தாரு மொன்றாய்க்
கந்தப் புராணம் பதினாயிரஞ் சொன்ன கச்சியப்பர்
தந்தப் பல்லக்குச் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராணம் அரங்கேற்றினார் தொண்டை மண்டலமே''

என்ற தொண்டை மண்டலச் சதகச் செய்யுளால் நூல் தோன்றிய காலத்திலே போற்றப்பெறும் தன்மையினை உணர முடிகின்றது
2. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பதினான்காம் நூற்றாண்டு, பக். 74—75.
3. ————————, பக் 75—76.
4. வ. சு. செங்கல்வராய பிள்ளை, கந்தபுராண வரலாற்று ஆராய்ச்சி, கந்தபுராணம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு, பக். 9—10.
5. கா. சுப்பிரமணியபிள்ளை, இலக்கிய வரலாறு — இரண்டாம் பாகம், ப. 335.
6. M. Srinivasa Iyengar, Tamil Studies, p. 214.
எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம், ப. 33-இல் மேற்கோளாக எடுத்தாளப்பெற்றது.
7. கலைக்களஞ்சியம், தொகுதி-3, ப.11,
8. எஸ். வையாபுரிப் பிள்ளை, தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம், ப. 36.
9. T. P. Meenakshisundaran, A History of Tamil Literature, p. 120.
10. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு — பதினான்காம் நூற்றாண்டு, பக். 73-88.
11. ————————, ப. 81.
12. ————————, ப. 82.
13. ————————, ப 88.
14. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, ப. 254.
15. ————————, ப.12.

16. மா. இராசமாணிக்கம்பிள்ளை, பல்லவர் வரலாறு, பக். 167—168.
17. H. G. Rawlinson, India - A Short Cultural History, p. 130.
கோ. தங்கவேலு, இந்திய வரலாறு, ப. 419.
18. கோ. தங்கவேலு, இந்திய வரலாறு, ப 410.
M. A. Mahendale and R C. Majumdar, 'The Puranas', The Classical Age, p. 291.
19. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, ப 271.
K. R Venkataraman, 'The Skanda Cult in South India', The Cultural Heritage of India, Vol. IV, p. 311.
20 கோ. தங்கவேலு, இந்திய வரலாறு, ப. 412.
————, ப. 411.
நடன. காசிநாதன், தொல்லியல், ப. 96.
21. D. C. Sircar, Studies in the Religious Life of Ancient and Medieval India, p. 5?.
22. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 72.
23. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, (மொ. பெ. ஆ.மு). ரா. பெருமாள் முதலியார். பக். 120-121.
24. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, பக் 145, 153, 264, 271.
மா. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, பக். 52-54.
25. இரா. நாகசாமி, மாமல்லை, பக். 69-70.
26. ————, ப. 66.
27. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, ப. 162.
28. இரா. நாகசாமி, மாமல்லை, பக். 150-151.
29. தெ பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ்மொழிவரலாறு, பக்.274-275.
30 ஆர். எஸ். பாலசுப்பிரமணியம், சோழர் கலைப்பாணி, பக்.49-52.
K. R. Venkataraman, 'The Skanda Cult in South India' The Cultural Heritage of India, Vol. IV, p. 310.
31. R. Nagaswamy, Gangaikonda Cholapuram, p.37.
32 ஜே. எம். சோமசுந்தரம், சிற்பமும் கலைவாழ்வும், பக். 117-118.
33. R. Nagaswamy, Gangaikonda Cholapuram, p. 37.

34. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு — பத்தாம், நூற்றாண்டு, ப. 486.
35. Rengacharya, Inscriptions of Madras Presidency 368, 393, 154, 1350, 1510.
அ. விசயலக்குமி, முருகவழிபாடு, ப. 3 இல் மேற்கோளாக எடுத்தாளப்பெற்றவை.
36. டி.வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, பக். 75 — 76.
37. கோ. சுந்தரமூர்த்தி, சைவசமயம், ப. 84.
38. வி. ரா. இராமசந்திர தீக்ஷிதர், மூன்றாங் குலோத்துங்க சோழன், ப. 69.
39. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, ப. 212.
டி. வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, ப.74.
40. இராஜு காளிதாஸ், இரா. இராசகோபாலன், தமிழர் வரலாறும் பண்பாடும், ப. 193.
41. டி. வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, பக். 149-150.
கே. கே. பிள்ளை, தென் இந்திய வரலாறு, (இரண்டாம். பகுதி), ப. 8.
42. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, பக். 357 - 358.
இராஜு காளிதாஸ், இரா. இராசகோபாலன், தமிழர்வரலாறும் பண்பாடும், பக். 270-271.
43. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, ப. 360
கே. கே. பிள்ளை, தென் இந்திய வரலாறு, ப. 11.
44. இராஜுகாளிதாஸ், இரா. இராசகோபாலன், தமிழர் வரலாறும் பண்பாடும், ப. 277.
45. ———————, ப. 280.
46. K. R. Srinivasa Iyengar, 'Dravidian', The Delhi Sultanate, p. 521.
47. R. C. Majumdar, 'Hindu Muslim Relationship', The Delhi Sultanate, p. 631.
48. டி. வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, ப.154

49. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, ப. 367.
50. இராஜு காளிதாஸ், இரா. இராசகோபாலன், தமிழர் வரலாறும் பண்பாடும், ப. 279.
51. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு - பதினான்காம் நூற்றாண்டு, ப. 3.
52. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, ப. 266.
53. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, ப. 266.
54. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, சோழர் கோயிற் பணிகள், பக். 158-159.
55. கோ. சுந்தரமூர்த்தி, பண்டைத் தமிழ் இலக்கியக் கொள்கைகள், தி. ரா. தாமோதரன், (மொ. பெ. ஆ), ப. 9.

## II இயல் இரண்டு

1. கந்தபுராணம் அமைப்பு
2. கந்தபுராணத்தின் நோக்கம்
3. இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்
4. சமயக் கருத்துக்கள்.
5. கந்தபுராணத்தில் தமிழ் இலக்கிய மரபுகள்
6. கச்சியப்பரின் புலமைப் பாங்குகள்.

# 1

# கந்தபுராண அமைப்பு

கந்தபுராண அவையடக்கத்திலிருந்து 'அறுமுகம் உடைய வோர் அமலன் மாக்கதை'யினை ( அவை : 1 ) 'முன்பு சூதன் மொழி வடநூற் கதை'யிலிருந்தே கச்சியப்பர் பெயர்த்துப் படைத்துளர் என்பதும், அக்கதையினை அங்குள்ள முறைமையில் அவ்வாறே கூறாது 'தமிழ்ப் பெற்றியில் ( அவை : 16 ) பாடியுளர் என்பதும் இந்நூலுக்குப் பெயர் கந்தபுராணம் என்பதும் ( அவை : 17 ) நாம் பெறும் செய்திகளாகும். கதைக்கு மூலம் வடமொழியாயினும் அமைப் பிற்கு மூலம் தமிழ் மரபே என்பதைப் பின்னர் விளக்கமாகக் காண் போம். 'கந்தபுராணம்' என்று ஆசிரியரே பெயரிட்டதால் 'புராண' இலக்கணங்களை மனத்தில் கொண்டுதான் படைத்துளாரோ என ஐயம் எழுதல் இயல்பே. வடமொழி, தமிழ் மொழியில் உள்ள புராண இலக்கணங்கள் இந்நூலுக்கு முழுதும் பொருந்தி வரவில்லை. ஆயினும், தண்டி கூறும் காப்பிய இலக்கணங்களும் இவருக்கு முன்-றோன்றிய காப்பியக் கவிஞர்கள் வகுத்த நெறிகளும் இவர்தம் படைப்பிற்கு ஊற்றமாகத் திகழ்தலை இப்பகுதியில் காணலாம்.

## வடமொழியில் புராண இலக்கணம்

புராணங்களை வடமொழியில் உள்ள பாகவதம் 'மகாபுரா ணங்கள்' என்றும் 'உபபுராணங்கள்' என்றும் பேசும். முன்னதற்குப் பத்து இலக்கணங்களும் (தசலட்சணம்), பின்னதற்கு ஐந்து இலக் கணங்களும் (பஞ்சலட்சணம்) வகுத்துள்ளது.[1]

வடமொழியில் உள்ள அமரசிம்மனது நிகண்டு (அமரகோசம்) முதன்முதலில் புராணத்தின் ஐந்திலக்கணங்களை நவிலும். அவை யாவன:

1. உலகத்தோற்றம் (சர்க்கம்)
2. உலகத்தோற்றவொடுக்கம் (பிரதிசர்க்கம்)

3. கடவுளர், முன்னோர் பரம்பரை (வமிசம்)
4. காலவரையறையும் மனுக்களது ஆட்சிக் காலங்களும் (மனுவந்தரம்)
5. பரிதி, திங்கள் ஆகிய குலங்களைச் சார்ந்த அரசர் வரலாறு (வமிசானுசரிதம்)[2]

## தமிழில் புராண இலக்கணம்

'புராணம்' என்ற சொல் பழமை என்னும் பொருள் பயப்ப தாகும். 'சிவபுராணம்'என்பதற்குச் 'சிவனது அநாதி முறைமையான பழமை[3]' எனத் திருவாசகத்தில் பொருள் கொள்ளப்படும். தொல் காப்பியர் உணர்த்தும் தொன்மை, தோல் என்னும் வனப்புக்களும் பழமையோடு தொடர்புடையன என்பது இங்குக் கருதத்தக்கது. 'எண்வகை வனப்பு நூல்களில் "தொன்மை" என்னும் வனப்பு நூலே பிற்காலத்தே புராணங்கள் என்று கூறப்படுகின்றன,' என்று தணிகைப்புராண உரையாசிரியராகிய பொ. வே. சோமசுந்தரனார் கூறுவர்.[4] இத்தொன்மை, தோல் ஆகியவற்றைக் காப்பிய இலக்கணம் உணர்த்தும் பகுதிகளாகக் கருதுவர் கி. வா. சகந்நாதன்.[5]

வெண்பாப்பாட்டியல், பெருங்காப்பியத்திற்கும் காப்பியத் திற்கும் புராணத்திற்கும் உரிய வேறுபாட்டை விளம்புகையில்,

*"கருது சில குன்றினுமக் காப்பியமா மென்பர்*
*பெரிதறமே யாதி பிழைத்து — வருவதுதான்*
*காப்பிய மாகும் குலவரவு காரிகை*
*யாப்பிற் புராணமே யாம்"*[6]

என்று குறிப்பிடும். "குலவரவு முதலாயினவற்றைச் சுட்டியதனால் உலகத்தோற்றமும் ஒடுக்கங்களும், மனுவந்தரமும், முனிவர் வரலாறும், அரசர் மரபும் அவர் சரிதமுங்கொள்க," என்று அதனை விளக்குவர் அப்பாட்டியல் உரையாசிரியர்.[7] யாப்பருங்கல உரையாசிரியர், "விளம் பனத்தியற்கையும்' என்னும் நூற்பாப் பகுதிக்கு உரையெழுதுமிடத்து எடுத்துக்காட்டும் மேற்கோள் சூத்திரம் ஒன்றில்,

"விளம்பனத் தியற்கை விரிக்குங் காலை
ஆரியந் தமிழொடு நேரிதின் அடக்கி
உலகின் தோற்றமும் ஊழி யிறுதியும்
வகைசால் தொண்ணூற் றறுவர தியற்கையும்
வேத நாவின் வேதியர் ஒழுக்கமும்
ஆதி காலத் தரசர் செய்கையும்
அவ்வந் நாட்டார் அறியும் வகையால்
ஆடியும் பாடியும் அறிவரக் கிளத்தல்"

எனப் புராண இலக்கணத்தைப் புகலுவர்.[8] வீரசோழிய அலங்காரப் படலத்திலும் மேற்கண்ட இந்நூற்பாவினை அதன் உரையாசிரியர் எடுத்துக்காட்டுவர்.[9]

சிதம்பரப்பாட்டியலும்,

"அறம்பொருளின்பம் வீட்டிற் குறைபாடர்கப்
பெறுவது காப்பியமாகும் புராணம் ஆகும்"

எனச் சுட்டும்.[10]

இதுகாறும் விளக்கிய இருமொழிப் புராண இலக்கணங்களையும் கீழ்க்காணுமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

## வடமொழி நூல்களில் காணும் இலக்கணம்

1. மகாபுராணங்கள் பத்திலக்கணம் கொண்டிருத்தல் வேண்டும்.
2. உபபுராணங்கள் ஐந்திலக்கணம் உடையதாயிருத்தல் வேண்டும்.

## தமிழ்மொழி நூல்களில் காணும் இலக்கணம்

1. புராணங்கள் குல்வரவு முதலாயினவற்றைக் காரிகை யாப்பில் பாடுதல் வேண்டும்.
2. புராணங்கள் நாற்பொருளில் குறைந்து வரும் இயல் புடையன.

## மேற்கண்ட புராண இலக்கணத்திற்குக் கந்தபுராணம் உட்பட்டதா?

வடமொழிப் புராணங்களை ஆராய்ந்த அறிஞர்கள், "ஐந்திலக்கணம் எப்புராணங்களிலும் பின்பற்றப்படவில்லை எனவும், வாயு, விட்டுணு, மச்ச, பிரமாண்ட புராணங்களில்தான் ஐந்திலக்கணம் கொள்கை அளவில் போற்றப்படுவதாகவும், குறிப்பிட்ட கடவுளுக்கோ அல்லது சமயத்திற்கோ இன்றியமையா இடந்தரும் போக்கில் புராணங்கள் படைக்கப்பட்டதால் ஐந்திலக்கணங்களைப் பெரும்பான்மையான புராணங்கள் கடைப்பிடிக்கவில்லை"[11] என்றும், "வடமொழிக் கந்தபுராணத்திலும் இவ்வைந்திலக்கணக் கோட்பாடு போற்றப்படவில்லை"[12] என்றும் மொழிவர். வடமொழியில் முற்றிலும் பின்பற்றப் படாத ஐந்திலக்கணக் கோட்பாட்டைத் தமிழ்க் கந்தபுராணமும் போற்றவில்லை என்பது நூலினை முழுமையாகக் காணும் போது புலனாகின்றது. சூரனுக்குச் சுக்கிரர் உரைப்பதாக அமைந்துள்ள அண்டகோசப் படலத்தில் உலகத்தின் தோற்றம் (2 : 11 – 2), அரசர் வரலாறு (2 : 11 : 26 - 28) ஆகிய இரண்டும் விவரிக்கப் பட்டிருத்தலால் ஐந்திலக்கணத்துள் இரண்டிலக்கணங்கள் மட்டும் போற்றப்பட்டிருத்தலைக் காண்கிறோம். தமிழ் இலக்கண நூல்களிற் காணும் காரிகை யாப்பினையும் கந்தபுராணம் பின்பற்றவில்லை. நாற்பொருளும் குறைந்து வாராமல் முழுதும் பொருந்திவர அமைந்திருத்தலால், இந்நிலையிலும் முன்னர்க் கண்ட இலக்கண நிலையுடன் மாறுபடுகின்றது.

எனவே, கச்சியப்பர் தாம் படைத்த புராணத்தைப் புராண இலக்கண நெறியில் நின்று முழுதும் படைக்கவில்லை என்பது புலனாகும்.

### காப்பிய நெறியில் கந்தபுராணம்

"புராணங்களைக் காப்பியங்களோடு சேர்க்காமல் தனியே எண்ணுவது வடநூலார் மரபு. தமிழில் அவற்றையுங் காப்பியங்களாகவே கருதி வந்தனர். தண்டியின் காப்பிய இலக்கணக் கோட்பாட்டை மனத்தில் கொண்டே பிற்காலத்தில் புராணங்களைப் படைத்து வந்தனர்"[13] என்றும், தமிழ்க் காப்பியங்கள்

காப்பிய அமைப்புக்களையும், புராண இயல்புகள் சிலவற்றையுங்கொண்டே அமைகின்றன. அது போலத் தமிழ்ப்புராண இலக்கியங்கள் காப்பிய அமைப்புக்களைப் பெற்றே சிறக்கின்றன,"[14] என்றும் அறிஞர்கள் கருதுப.

தனித்தனிக் கதைகளின் தொகுப்பாகிய பரஞ்சோதியின் திருவிளையாடற் புராணத்தைத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் 'தமிழ்க் காப்பியம்' ஆகவும், 'கடவுட் காப்பியம்' ஆகவும், 'காதற் காப்பியம்' ஆகவும் கூறுவர்.[15] பெரிய புராணத்தையும் காப்பியக் கண்கொண்டு அறிஞர் சிலர் ஆய்ந்துள்ளனர்.[16] இதனால் தமிழில் பெரும்பான்மையான புராணங்கள் 'காப்பிய' நோக்கிலும் படைக்கப்பட்டுள்ளன என்று அறிகின்றோம்.

தமிழில் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களின் தலைப்புக்களில் புராணம் என்ற சொல் காணப்படினும் அவைகள் முன்னர்க் கண்ட புராண இலக்கணங்களை முழுதும் கொண்டவை அல்ல. எனவே, பெரிய புராணத்தை சி. கே. சுப்பிமணிய முதலியார் போன்றவர்கள் காப்பியம் எனவும், திருவிளையாடற்புராணத்தைத் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் காப்பியம் எனவும் கூறியுள்ளனர். எனவே, தமிழ் நூல்களில் புராணம் என்ற தலைப்புப் பகுதி காணினும் அவற்றுள் காப்பியக் கூறுகள் படிந்துள்ளதை உணர்கின்றோம். அத்தகைய நூல்களுள் ஒன்று கந்த புராணம். இந்நெறியில் சிலர் கருத்தைக் காண்போம்.

அறிஞர் சிலர் கந்தபுராணத்தைச் "செந்தமிழிற் சிறந்ததோர் காப்பியம்"[17] என்றும், "புராணம் என்ற குறுகிய வரையறையைக் கடந்து, பெருங்காப்பியம் என்றே தமிழ் மக்கள் பயில்கின்ற சிறப்பான நூல்"[18] என்றும், "பெருங்காப்பியக் கடலாய் நில்வுவது தமிழ்க் கந்தபுராணமே"[19] என்றும், "படிக்கப் படிக்கத் தெவிட்டாது சுவை தரவல்லது கச்சியப்பர் தந்த காப்பியம்"[20] என்றும், "அறுமுகக் கடவுள் வரலாற்றை யோதும் தமிழ்ப் பெருங்காப்பியமாகும்"[21] என்றும், "முருகனின் தெய்வீகச் செயல்களும் தமிழ்ப் பண்பாடுகளும்

கலந்து நெய்யப்பெற்ற ஒரு காப்பியம்''[22] என்றும், ''பல்லாண்டுக ளாகத் தமிழ் மக்களால் ஆர்வத்தோடும் பத்திமை உணர்வோடும் பயிலப்பட்டு வரும் புனிதக் காப்பியம்''[23] என்றும், ''கந்தபுராணம் கதைபொதிப் பாடல்கள் பலவற்றைக் கொண்ட ஒரு பொருள் தொடர்நூல். இந்த அமைப்பில் அது ஒரு காப்பிய வடிவினை உடையதாகும்''[24] என்றும், அதனைப் படைத்த கவிஞரைத் ''தண்டியாசிரியர் சொற்றாங்குப் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கண மெல்லாம் நிரம்பப் பெற்றுப் பாடி முடித்தார்''[25] என்றும், ''ஒப்பற்ற காப்பியக் கவிஞர்''[26] என்றும் குறிப்பிடுவர். இக்கூற்றுக்களிலிருந்து இப்புராணம் காப்பியப் பார்வையிலும் நோக்கப்பட்டுள்ளதை அறி கின்றோம். இவ்வறிஞர்களின் பார்வையினைத் தொடர்ந்து தண்டி ஆசிரியர் வகுத்துள்ள காப்பியக் கொள்கைகளும், முந்து தமிழ்க் காப்பியங்களின் நெறிகளும் கந்தபுராணக்துள் அமைந்திருக்கும் பாங்கு ஈண்டு விளக்கப்படும்.

## தண்டியாசிரியரின் காப்பியக் கொள்கைகள்

அ) *''பெருங்காப் பியநிலை பேசுங் காலை*
*வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன் றே*
*ஏற்புடைத் தாகி முன்வர வியன்று*
*நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்*
*தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்*
*மலைகடல் நாடு வளநகர் பருவம்*
*இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து*
*நன்மணம் புணர்தல் பொன் முடி கவித்தல்*
*பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்*
*தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்*
*புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென் று*
*இன்னன புனைந்த நன்னடைத் தாகி*
*மந்திரந் தூது செலவிகல் வென்றி*
*சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்*
*பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி*
*நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்*
*கற்றோர் புனையும் பெற்றியதென்ப''[27]*

ஆ) ''அவைதாம்,
ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே''[28]

இ) ''பாவிகம் என்பது காப்பியப் பண்பே''[29]

மேற்குறிப்பிட்ட நூற்பாக்களின் கருத்துக்களைத் தெளிவு கருதி நாம் ஆறாகப் பகுத்துக் கொள்ளலாம்.

**1. காப்பியத் தொடக்கம்**

(அ) வாழ்த்து, (ஆ) வணக்கம், (இ) வருபொருள் உரைத்தல்.

**2. காப்பியப் பயன்**

(அ) அறம், (ஆ) பொருள், (இ) இன்பம், (ஈ) வீடு.

**3. காப்பிய வருணனை**

(அ) மலை, (ஆ) கடல், (இ) நாடு, (ஈ) நகரம், (உ) பருவம், (ஊ) இருசுடர்த் தோற்றம் முதலியன.

**4. காப்பியப் பொருள்**

(அ) தன்னிகரில்லாத் தலைவன், (ஆ) இல்லறச் செய்திகள் (மணம் புரிதல், பொழில் நுகர்தல், புனல் விளையாடல், மதுக்களி, சிறுவரைப் பெறுதல், கலவியிற்களித்தல், புலவியிற் புலத்தல்), (இ) அரசியல் செய்திகள் (முடி கவித்தல், மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி).

**5. காப்பிய அமைப்பு**

(அ) சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் முதலியனவாகப் பகுத்துக் கொள்ளல்,

(ஆ) ஒருதிறப் பாட்டாலும், பலதிறப் பாட்டாலும் பாடுதல்,

(இ) உரையும் பாடையும் விரவி வருதல்,
(ஈ) சுவையும், பாவமும் அமைதல் முதலியன.

## 6. காப்பியக் கரு

(அ) பாவிகம், (ஆ) சந்தி.

முழுக்காப்பியமும் ஒருங்கு பொருந்திய குணமாகிய பாவிகத்தை உயிராகவும் ஏனையவற்றை அவ்வுயிரால் இயக்கப்படுகின்ற உறுப்புகளாகவும் கொள்ளலாம். நுண்பொருளாக விளங்கி உடலெங்கும் பரவியிருக்கும் உயிரைப்போல் காப்பியம் முழுதும் இழைந்தோடும் நுண்பொருளாக விளங்கிக் கவிஞன் உளக்குறிப்பில் வலியுறுத்த விரும்பும் கருத்துக்களே பாவிகமாகும். இப்பாவிக உயிரின் பருவடிவே காப்பியத்தின் முழுவடிவாகும். உறுப்புக்கள் சில குறையினும் உயிருக்கு ஊறில்லை. உயிர் இன்றெனின் உறுப்புக்களால் பயனில்லை. எனவே, ஏனைய ஐந்து பகுதிகளும் காப்பியத்தின் புறவடிவென்றால் இப்பாவிகத்தையும், இதனை நோக்கிக் காப்பியக் கதை இடையறவுபடாது செல்லும் தொடர்பாகிய சந்தியையும் காப்பியத்தின் அகவடிவென்று நவிலலாம்.

## 1. காப்பியத் தொடக்கம்

'உலகெலாம்' என இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றுச் சேக்கிழார் தம் பெரியபுராணத்தைத் தொடங்கியது[80] போன்றே கச்சியப்பர் 'திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்று கந்தனால் கனவில் முதல் அடிஎடுத்துத் தரப்பெற்றுத் தம் கந்தபுராணத்தைத் தொடங்கினார் என்பது கச்சியப்ப சிவாசாரியார் புராணம் தரும் செய்தி[81]. பாயிரத்தில் உள்ள ஐந்து பாக்களில் 'திகடசக்கரம்' எனத் தொடங்கும் முதற்செய்யுளாலும் அடுத்த செய்யுளாலும் விநாயகர் வணக்கமும், மூன்ருவதுபாட்டில் முருகன் வணக்கமும், நான்காவது பாட்டில் நூற்பயனும், ஐந்தாவது பாட்டில் உலகத்தார் நலம்பெறும் பொருட்டு வேண்டும் பொதுவாழ்த்தும் இடம்பெறும்.

அதனை அடுத்து இருபத்தைந்து பாக்கள் கொண்ட 'கடவுள்

வாழ்த்து'ப்பகுதியில் சிவன், சக்தி, விநாயகர், வைரவர், வீரபத்திரர், முருகன், நந்தி, சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருத்தொண்டர், கலைமகள் ஆகியோரைப் போற்றிப் புகழ்வர். பாயிரப் பகுதியில் உலகத்துயிர்கள் ஆக்கம்பெற வாழ்த்திய பின்னர்ச் சிவன் முதலிய கடவுளர்களை வாழ்த்தியிருப்பது கருதத்தக்கது. 'தனக்குப் பயன்பட வாழ்த்துதல், உலகுக்குப் பயன்பட வாழ்த்துதல்,'[32] என்ற இருவகை வாழ்த்துக்களில் இப் புராணத்துள் முதற்கண் உள்ள வாழ்த்துக்கள் உலகுக்குப் பயன்பட வாழ்த்தும் வகையைச் சார்ந்தனவாகும். வாழ்த்தில் தொடங்கி வாழ்த்தில் முடிப்பது என்று திருத்தக்கதேவர் தொடங்கி வைத்த காப்பிய நெறி[33] இங்கும் போற்றப்பட்டுப் புராணத்தின் இறுதியிலும் 'வாழ்த்து' (6:24:261, 267) இடம்பெற்றுள்ளது.

காண்டந்தோறும் கந்தனுக்கு வாழ்த்துக்கூறித் தொடங்குதல் இவர் இயல்பாயினும் உற்பத்தி, தேவ காண்டங்களில் வாழ்த்துக் கூறவில்லை. நூலின் தொடக்கத்தில் (கடவுள் வாழ்த்துப் பகுதியில்) முருகனை விரிவாக வாழ்த்தியுள்ளமையால் முதற்காண்டத் தொடக்கத்தில் தனியே வாழ்த்தாமலும், தேவ காண்டத்தில் இடையில் வாழ்த்து அமைந்திருத்தலால் (5:4:6) அக்காண்டத் தொடக்கத்தில் தனி வாழ்த்துப் பாடாதும் சென்றுள்ளார் என நாம் கருதலாம். "நூலின் இடைப்பகுதிகளில் (காண்டங்களின் தொடக்கத்தில்) கடவுளர் வாழ்த்துக்கூறும் முறை கம்பரால் தோற்றுவிக்கப்பட்ட புது மரபு"[34] எனப் போற்றுவர். கச்சியப்பரோ காண்டத்தின் இடையிலும் கடவுள் வாழ்த்துக்கூறும் புதுநெறிகளைப் புகுத்தியுள்ளார். 'ஓமரின் "இலியட்"டிலும் (Illiad), தாந்தேயின் "டிவைன் காமிடி" யிலும் (Divne Comedy) கடவுள் வாழ்த்து முதலான பாயிரப் பகுதிகள் நூலின் இடையிடையேயும் இடம் பெற்றிருத்தல்'[35] நினையத்தகும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை இவ்விரு காப்பியங்களின் பதிகங்களுள் கதையினைச் சுருக்கித் தருவதைக் காண்கிறோம். திருத்தக்க தேவரும் இந்நெறியைப் போற்றியுள்ளார். வருபொருள் உரைத்தலாம் அந்நெறியில் நின்று பாயிரப் படலத்தில் இரு

பத்து நான்கு விருத்தங்களில் (பாயிரம்:57-80) கந்தபுராணக் கதையினைச் சூத முனிவர் வாயிலாகச் சுருக்கிப் பாடுவர் கச்சியப்பர். முதனூலில் இல்லாத இப்பகுதி ஆசிரியர் காப்பிய நெறி கருதித் தாமே படைத்துக்கொண்ட ஒன்று என்பதும் உளங்கொளற்குரியது.

இவ்வாறு வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்ற மூன்றினையும் புராணத் தொடக்கத்தில் அமைத்துள்ளார்.

## 2. காப்பியப்பயன்

நூல் அறம், பொருள், இன்பமாகிய முப்பொருளை மட்டுந்தரும் என்ற கொள்கை தொல்காப்பியர் காலத்தில் நிலவிவந்தது என்பதனை,

> *'' அந்நிலை மருங்கின் அறமுத லாகிய*
> *மும்முதற் பொருட்கும் உரிய வென்ப ''* [86]

என்ற நூற்பாவால் உணர்கின்றோம். திருவள்ளுவரும் தம் முப்பாலில் முப்பொருளையே கூறிச் செல்வர். பரிமேலழகரும் திருக்குறள் உரைப் பாயிரத்தில், '' வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூற்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்,'' என உரைப்பர். இடைக்காலத்து நூலாகிய நன்னூலில், நூற்பயன் கூறவந்த பவணந்தியாரே 'அறம், பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' [87] என்பர். தொல்காப்பியச் செய்யுளியலில் உள்ள 'தோல்' பற்றிய நூற்பாவுக்குப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் ''மெல்லென்ற சொல்லால் அறம் பொருள் இன்பம் வீடெனும் விழுப்பொருள் பயப்பச் செய்யப்படுதல்'' எனப் பொருள் கொள்ளுப.[88] அணி இலக்கண நூல்களும் காப்பியப் பயனாக நாற் பொருளையும் சுட்டும். '' அறம் பொருள் இன்பம் வீடு என்றிவற்றின் பொருளாழமாகக் காப்பியக்கதை திரண்டு உருண்டு எழ வேண்டும் என்பது இந்தியக்கொள்கை ''[89]என்பர். இவர்கள் கூறும்கருத்து இடைக் காலக் காப்பியச் சிந்தனையின் போக்கெனக் கொள்ளலாம். இடைக் காலத்தெழுந்தநூலாகியகந்தபுராணமும்அக்காலக்காப்பியச்சான்றோர் நெறி நின்று நாற்பொருளையும் நவிலுந்திறனை ஈண்டுக் காண்போம்.

## அ) அறம்

'அறம்' என்ற சொல் விரிந்த பொருளைத் தன்னகத்து அடக்கிய ஒரு சொல். ''மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கிய ஒழிதலும் அறம்'' [40] என்பர் பரிமேலழகர். ''அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடி''[41] என்ற திருவாசகத்தால் உபதேசங்களையும் அறமாகவே கருதும் போக்கும் புலனாகும். எனவே, உயிர்கள் உய்யும் பொருட்டு வழங்கும் அறவுரைகளையும் (உபதேசம்) இல்லறம், துறவறம் ஆகியவற்றையும் இதனுள் நாம் அடக்கலாம்.

கந்தபுராணத்தில் எண்ணிறந்த உபதேசங்கள் இடம் பெற்றுள்ளன. நான்கு படலங்களின் பெயர்களே (1. காசிபன் உபதேசப்படலம், 2. மாயை உபதேசப்படலம், 3. சுக்கிரன் உபதேசப் படலம், 4. உபதேசப்படலம்) உபதேசப்படலம் என்று அமைந்துள்ளன. இறுதியில் உள்ள ஓர் காண்டத்துக்கே 'உபதேச காண்டம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.[42] அதனால், 'புராணம் முழுவதற்குமே அப் பெயரை வழங்கியிருந்தாலும் பொருத்தமாயிருக்கும்' என்பர் கந்த புராண உரையாசிரியராகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.[43]

மேற்சுட்டிய நாற்படலங்களுள் மாயை உபதேசப்படலம், சுக்கிரன் உபதேசப்படலம் ஒழிந்த ஏனைய இரு படலங்களும் அறத்தை வற்புறுத்துவன. காசிபர் தனக்குப் பிறந்த சூரன்பமன் முதலியோருக்கு அறிவுரை வழங்குமிடத்து,

> ''தருமமென் றொருபொருள் உளது தாவிலா
> இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமால்
> அருமையில் வரும்பொரு ளாகும் அன்னதும்
> ஒருமையி னோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ''
>
> ''தருமமே பேரற்றிடின் அன்பு சார்ந்திடும்
> அருளெனுங் குழவியும் அணையும் ஆங்கவை
> வருவழித் தவமெனும் மாட்சி எய்துமேல்
> தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்'' (2:4:12, 13)

என அனைத்து ஆக்கங்கட்கும் அறமே அடிப்படை என்பதனை வலியுறுத்துவர். ''இவ்வறத்தை வற்புறுத்தும் காசிபர் உபதேசந்தான்

நல்லசிரியராகிய கச்சியப்ப சிவாசாரியரின் வாழ்க்கை அடிப்படை உபதேசம்'' [44] என்பர். எதிர்மறைமுகமாக, 'அறத்தைப் பேணாதவன் வாழ்வு அழிந்தொழியும்' என்பதனைப்,

''பெறலருந்திரு வுடையநீ அறத்தினைப் பேணி
முறைபு ரிந்திடா தாற்றலால் அமரரை முனிந்து
சிறையில் வைத்தனை அதுகண்டு நின்வலி சிந்தி
இறுதி செய்திட உன்னினன் யாவர்க்கும் ஈசன்'' (3:21:121)

என அண்ணனுக்கு அறிவுரை நல்கும் அரிமுகன் கூற்றில் வற்புறுத்துவர்.

இல்லறத்தின் மாண்பினை மார்க்கண்டேயப் படலத்துள் குச்சக முனிவர் மிருககண்டுயருக்கு உரைக்கும் பாங்கில் எடுத்து மொழிவர்.

'' துறந்தவர்கள் வேண்டியதொர் துப்புரவு நல்கி
இறந்தவர்கள் காமுறும் இருங்கடன் இயற்றி
அறம்பலவும் ஆற்றிவிருந் தோம்புமுறை யல்லால்
பிறந்தநெறி யாவுளதோர் பேருதவி யாதோ'' (2:5:49)

என்ற குச்சக முனிவரின் கூற்றுக்கள் வள்ளுவர் வகுத்துத் தந்த 'இல்வாழ்க்கை' நெறிகட்கு ஒரு விளக்கமாக அமைந்துள்ளன.

உண்மைத் துறவின் தன்மையினை,

'' நற்றவம தாகுமில றந்தனை நடாத்திச்
சுற்றமற நீங்குதுற வேதுறவ தம்மா'' (2:5:51)

என்ற குச்சகர் கூற்றிலும், துறவறத்தின் உயிர்ப்பண்பாகிய தவத்தின் பெருமயினைத்,

''தவந்தனின் மிக்கதொன்றில்லை தாவில்சீர்
தவந்தனை நேர்வது தானும் இல்லையால்
தவந்தனின் அரியதொன் றில்லை சாற்றிடில்
தவந்தனக் கொப்பது தவம தாகுமோ '' (2:4:23)

என்று காசிபர் கூற்றிலும் உரைப்பர். இங்ஙனம் அறம் என்பதை அறிவுரையாகவும் இல்லறம், துறவறம் என இரண்டாகப் பகுத்தும் உணர்த்துவர் ஆசிரியர்.

## ஆ) பொருள்

உலக வாழ்வு பொருள் இன்றி அமையாது. 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு' என்று பொருளின் இன்றி யமையாமையினை உவமைமுகத்தான் மொழிவர் வள்ளுவர். மாயை தன் மக்களுக்கு அறிவுரை நல்கும் மாயை உபதேசப்படலத்தில்,

*''அரிய கல்வியில்*
*சிறந்தது திருவெனச் செப்ப லாகுமால்''* (2:6:8)

என்றும்,

*''அளப்பரும் விஞ்சையே அன்றி மேன்மையும்*
*உளப்படு தருமமும் உயர்ந்த சீர்த்தியுங்*
*கொளப்படு கொற்றமும் பிறவுங் கூட்டலால்*
*வளத்தினிற் சிறந்தது மற்றொன் றில்லையே''* (2:6;12)

என்றும் கூறிப் பொருளின் உயர்வினைப் புலப்படுத்துவர்,

அரசியற் செய்திகளைத் தரும் 'அசுரேந்திரன் மகேந்திரம் செல் படலம்' (1:22), 'சூரன் அமைச்சியற் படலம்' (3:21) முதலியவையும் பொருள் உணர்த்தும் பகுதிகளாகும்.

## இ) இன்பம்

இன்பப் பொருளுக்கு மிகவும் இயைந்தவன் முருகன். குன்றம் பூதனாரின் பரிபாடலுக்கு உரையெழுதும் பரிமேலழகர், ''இக்களவிற் புணர்ச்சி உடைமையான் வள்ளி சிறந்தவாறும், அத்தமிழை ஆய்ந்தமை யான் முருகன் சிறந்தவாறும் கூறுகின்றார்'' [45]என உரைத்தல் ஈண்டுக் கருதத்தக்கது.

*''கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை*
*எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே''* [46]

என்ற பரிபாடலால் இன்பத்தின் பொருட்டுப் பரவப்படுபவன் முருகன் என்பதனை அறிகின்றோம். இம்மரபைத் தழுவியே நூற்பயனாகப் ''பார்மேல் இன்பமுற்று இனிது மேவுதலை'' (பாயிரம்:4)யும் ஆசிரியர் சுட்டுவர். இவ்வாறு, இன்பப் பயனை நூற்பயனாகக் கொள்ளும் கச்சியப்பர் இக்காப்பியத்துள் இன்பத் தொடர்பான அகத்திணைச் செய்திகளை மரபுமாறாமல் இயன்றளவு பாடியுள்ளார். வள்ளியம்மை திருமணப் படலம் (6:24) அகத்திணைப் பகுதியாகிய இன்பச்செய்திகளை விளக்க ஆசிரியருக்கு மிகுதியும் வாய்ப்பளித்துள்ளது. இருநூற்று அறுபத்தேழு பாக்களே உள்ள வள்ளியம்மை திருமணப்படலத்தில் அகமரபுகளை மிகுதியும் போற்றியுள்ளார். ஐந்திணைகட்கும் உரிய முப்பொருளும் புராணத்துள் ஆங்காங்கே பொருந்தும் முறையில் காணப்படினும் 'தமிழ்க் களவியல்' முறை மிகுதியாகத் தழுவப்படும் பகுதி வள்ளியம்மை திருமணப்படலமேயாகும். அகப்பொருள் இலக்கணத்திற்கு ஏற்ப பிற்காலத்தில் வாழ்ந்த கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்தில் களவுப் படலம்' பாடியுள்ளார். கச்சியப்பரோ இலக்கணத்திற்கு இலக்கியம் காணும் நெறியில் செல்லாது கதைப்போக்கில் களவியல் மரபினை இயன்ற அளவு தழுவிக் காப்பியத்தில் இன்பச்சுவையினை மிகுதிப் படுத்துவர். இன்பப்பயன் துய்த்த காதலர் நிலையையும் பலவிடங்களில் விவரிப்பர் (2:3:9-15; 5:2:268; 5:3:45; 5:5:61).

## ஈ) வீடு

கந்தவெற்பில் காப்பியத்தலைவனாம் முருகன் தன் இரு மனைவியருடன் வீற்றிருக்கும் தோற்றத்தைக்,

> ''*கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவ தாகி*
> *வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்*
> *பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட் டன்பர்*
> *எல்லவர் தமக்கு முத்தி இருங்கனி உதவும் என்றும்''* (6:24:258)

எனப் பாடுவர். நூற்பயன் நான்கினை முதற் பகுதியாகிய பாயிரத்தில் கூறும் போது வீடாகிய நூற்பயனையும் அடக்கியதுடன். நூலின் இறுதிப் படலத்துள்,

*'' வற்றா அருள்சேர் குமரேசன்வண் காதைதன்னைச்
சொற்றாரும் ஆராய்ந் திடுவாரும் துகளுறாமே
கற்றாரும் கற்பான் முயல்வாரும் கசிந்து கேட்கல்
உற்றாரும் வீடு நெறிப்பாலின் உறுவர் அன்றே"* (6:24:266

என்றும் தெளிவாகப் புலப்படுத்துவர்.

### 3. காப்பிய வருணனை

காப்பியங் களின் அழகை மெருகூட்டுவதில் வருணனைகளின் பங்கு இன்றியமையாதது. 'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்' போல் காப்பியத்தில் வருணனைகள் பொலிந்து தோன்று வது இயல்பு. மலை, கடல், நாடு, நகரம், பருவம், இருசுடர்த் தோற்றம் ஆகியவைகள் காப்பியத்தில் வருணனைகளாக அமையும் பகுதிகளாகும்.

திருக்கைலாசப் படலத்தில் வெள்ளியங்குன்றத்தினைப் பதினான்கு பாக்களிலும் (1:1:1-14), வள்ளியம்மை திருமணப் படலத்தில் வள்ளி வெற்பினைப் பத்துப் பாக்களிலும் (6:24:7-16) அழகொழுக வருணிப்பர். கடல்பாய்படலத்திலும், இலங்கைவீழ் படலத்திலும் கடலினைக்கதைக் குறிப்புடன் பாடுவர் (3:2:12). புராணத் தொடக் கத்தில் தொண்டை நாட்டின் அணியியல் கூறுவான் புகுந்த கவிஞர் ஆற்றுப்படலத்திலும் திருநாட்டுப் படலத்திலும், நாட்டை ஐவகை நிலங்களாகப் பகுத்துக்கொண்டு அவ்வவற்றிற்குரிய கருப்பொருளையும் காப்பிய ஆசிரியர்கள் மரபினைத் தழுவிக் கற்பனை ததும்பப் பாடுவர் (ஆறு: 12 - 18; நாடு: 2 - 7). நகரின் நெடுமதிற் பரப்பு, அகழி (நகர: 9-19) முதலியவற்றின் விளக்கம் திருநகரப்படலத்தும், மிகச் சிறந்த நகரத்திற்கு இலக்கணம் கூறுதல் போல் அமைந்த வருணனை கள் நகர்செய்படலத்தும் (2:15) திகழும். சிலப்பதிகாரத்துள் இந்திர விழவூரெடுத்த காதையுள் புகார் நகரத்தினை வருணிக்கும் பொழுது பல்வகைமன்றங்களையும்அவற்றின்இயல்புகளையும் இளங்கோவடிகள் அழகுற மொழிவர்.[47] அம்மரபினைத் தழுவிக் காஞ்சி நகரில் விளங்கும் பொய்கைகளையும், தெற்றிகளையும், கற்களையும், பொதுக்களையும், மன்றங்களையும் வருணிப்பர். ''தோற்றுயிர்க்கு உணவுநல்குதல், ஊமை

யரைப் பேசவைத்தல் முதலிய இயல்புடைய தெற்றிகளும்'' (நகர:93), "நஞ்சினை அகற்றவும், மணியினை மாற்றவும், துஞ்சியோரை எழுப்பவும், பொருள் கெடுத்தோர் வினவின் ஈதெனக் காட்டவும் ஆற்றல் பெற்ற கற்களும்" (நகர:98-99), "அயன்மனைச் சென்றோர், கணவரைப் பிழைத்தோர், அடிகளை இகழ்ந்தோர் அணுகில் துயருறும் மூகையாக்கும் மன்றங்களும்" (நகர: 100) அந்நகரில் திகழ்வ தாகப் பாடி இளங்கோவின் காப்பிய வருணனை மரபினைப் போற்றுவர். இத்தகைய வருணனைகள் முதனூலில் இல்லையென்பது இவண் கருதத்தக்கது.

சிறுபொழுதாகிய காலை, மாலை ஆகியவற்றையும் அப்பொழுதுகட்குக் காரணமாகிய இருசுடர்த் தோற்றம், மறைவு ஆகியவற்றையும் கதைநிகழ்ச்சிகளுடன் இயைபுறுத்தியும் தற்குறிப்பேற்றியும் வருணிப்பர் தாரகனைத் தடிந்த பின்னர்ச் செந்தி (திருச்செந்தூரைக் கச்சியப்பர் இங்ஙனமே எல்லா இடங்களிலும் குறித்துள்ளார்) மாநகரம் நோக்கி வரும் முருகன் தன் படைகளுடன் மண்ணியாற்றங்கரையில் இராப் பொழுதைக் கழித்தான். இராப்பொழுது கழிந்தபின்னர்ப் பகலவன் தோன்றியதை,

> *"வெம்பு தொல்லிருள் அவுணர்தங் குழுவினை வீட்டி*
> *உம்பர் மேற்செலும் மதியெனும் மடங்கலை உருத்துப்*
> *பைம்பொன் வெஞ்சுடர்க் கரங்களால் அதன்வலி படுத்துச்*
> *சிம்பு ளாமெனத்தோன்றினன் செங்கதிர்க் கடவுள்"* (1:24:55)

என வருணிக்கும் பகுதி கதை நிகழ்ச்சியினை முன்னறிவிக்கும் காப்பிய உத்தியாக விளங்கும்.

அசுரர் தோற்றத்தால் இந்திரன் அரசு இழப்பன் என்ற குறிப்பினை ஏற்றிக் காசிபன் புலம்புறு படலத்தில் கதிரவன் கரத்தலை,

> *"அந்தமில் நிருதர் என்னும் அளவைதீர் பானாட்கங்குல்*
> *வந்திடும் இன்னே யென்னா வல்லையின் மதித்து வானத்து*

*இந்திரன் ஆணை போற்றும் இலங்கெழில் நேமிப் புத்தேள்*
*சிந்துவில் கரத்தல் போன்று செங்கதிர்ச்செல்வன் போனான்''* (2:2:19)

என்று பாடுவர்.

## 4. காப்பியப் பொருள்

### அ) தன்னிகரில்லாத் தலைவன்

இக்காப்பியத்தின் ஒப்பற்றதலைவனாம் கந்தனின் தன்னிகரில்லாத் தன்மை மூன்றாம் இயலில் விரிவாக ஆராயப்படும்.

### ஆ) இல்லறச் செய்திகள்

கந்தபுராணத்துள் களவு, கற்பு இவ்விரு மணங்களும் இடம் பெறுகின்றன. வள்ளியம்மை திருமணப்படலம் முன்னதற்கும் தெய்வயானை திருமணப்படலம் பின்னதற்கும் காட்டுக்களாகப் பொலிகின்றன. இவையன்றியும் மலையரையன் மகளாகிய பார்வதி மணம், தக்கன் மகளாகிய உமையின் மணம் ஆகியவை விரிவாகவும், சூரபன்மன், தக்கன் முதலியோர் திருமணம் சுருக்கமாகவும் நவிலப் பெற்று நன்மணம் புணரும் செய்தி கந்தன் காவியத்தில் வெளிப்படுகின்றது.

பூம்பொழில் நுகர்தலையும், புனல் விளையாட்டினையும் தெய்வயானை திருமணப்படலத்தில் மணங்காண வந்தவரின் இன்பச் செய்திகளாக இருபத்தேழு பாடல்களிலும் (5:2:123-146) கள்ளுண்டு களித்தலாம் களியாட்டினைத் திருநாட்டுப் படலத்தில் உழவர் செயல்களாக ஐந்து பாக்களிலும் (நாடு: 8-12) அழகாக வருணித்துள்ளார். இத்தகைய நிகழ்ச்சிகளைப் புராணத் தலைவனுகிய கந்தனொடு இயைபுறுத்த அவனது தெய்வத்தலைமை இடங்கொடுக்காததால் கச்சியப்பர் பிற கதைமாந்தர்களோடு இயைபுறுத்திப் பாடியுள்ளார். கம்பரும் பொழில் நுகர்தல் முதலிய செய்திகளை இராமனுக்கு ஏற்றாதுஅயோத்தியிலிருந்து மிதிலைக்குச் செல்லும் மக்களின் விளையாடல்களாக அமைத்துள்ளமையும் [48] இங்கு ஒப்புநோக்குதற்குரியது.

**புதல்வரைப் பெறுதல்**

சூரபன்மன் புதல்வரைப் பெறும் செய்திகள் அசுர காண்டத்தில் 'புதல்வரைப் பெறு படல'த்திலும் (2:19), தக்கன் புதல்வரைப் பெறுதல் தக்க காண்டத்துத் 'தக்கன் மகப்பெறு படல'த்தும் (6:3 விவரிக்கப்படும்.

**கலவியிற் களித்தல்**

முருகவேள் தெய்வயானையுடனும் வள்ளியுடனும் கலவியிற் கலந்து களித்த நிலையை முறையே,

*" உறையுளின் இருக்கை நண்ணி ஒருபெருந் தலைவியோடும்*
*அறுமுகவள்ளல் பல்வேறு ஆடல்செய் திருந்தான் அன்றே"* என்றும்,
(5 : 3 : 44)

*"..........................................................முகமா றுடையபிரான்*
*கன்னி தனையோர் கடிகாவி னிற்கலந்து*
*துன்னு கருணைசெய்து தொல்லுருவங் காட்டினனே"* ( 6:24:115 )

என்றும் நனிநாகரிகமாக மொழிவர். மேலும், இந்திரன் சசியுடன் கலத்தல் ( 15:3:45 ) காசிபர் மாயையுடன் களித்தல் ( 2:3:13 ) முதலியன கலவி இன்பத்தை எடுத்துரைக்கும் பகுதிகளாகும்.

**புலவி**

புலவி பற்றிய செய்தியினைப் பரங்குன்றில் முருகனது மணங், காணச் சென்ற மக்கள் மீது வைத்து விரிவாகவும் (5:2:121, 136, 139 140, 143, 158) திருநாட்டுப் படலத்தில் தொண்டைநாட்டு மக்கள் மீது ஏற்றிக் குறிப்பாகவும் ( நாடு : 52 ) பாடியுள்ளார் ஆசிரியர்.

**இ) அரசியற் செய்திகள்**

காப்பியத் தலைவன், எதிர்நிலைத் தலைவன் ஆகியோரது அரசியற் செய்திகள் கந்தபுராணத்தில் சிறப்பாக விளக்கப்பெறும்.

**முடி கவித்தல்**

முடி கவித்தல் இரண்டு இடங்களில் விவரிக்கப் பெறுகின்றது,

புராணத்தில் எதிர்நிலைத் தலைவனாம் சூரபன்மன் தேவர்கள் ஏவல் புரிய முடிசூடிக்கொள்ளுதல் (2:16:6), சூரபன்மனை வென்ற பின்னர், வேலவன் ஏவலால் இந்திரன் முடிசூட்டப்படுதல் (5:3:40) ஆகிய இருநிகழ்ச்சிகளைப் புராணத்தில் காண்கின்றோம்.

**மந்திரம்**

அமைச்சர்களோடு சூழ்தலாகிய மந்திரச்செய்திகள் சூரன் அமைச்சியற் படலத்து (3:21) விரிவாகவும், வீரவாகு கந்த மாதனஞ் செல் படலத்தில் குறிப்பாகவும் (3:1:3-10) அமைந்துள்ளன.

**தூது**

போர் நிகழும் முன்னர் 'அறநெறி' கருதி முருகன் சூரபன்மன் கருத்தை அறிந்துவர வீரவாகுவைத் தூதாக உய்த்தமையும் (3:11:11) அவன் மகேந்திரஞ் சென்று தூதுரைத்தமையும் (3:12:94-111) புராணத்துள் தூது பொருந்தியுள்ள பகுதிக்குத் தக்க சான்றுகளாகும்.

**செலவு**

சூரபன்மனுடன் போர் உடற்ற முருகனது படைகள் எழுந்து திரண்டு செல்லுதலாகிய செலவு படைடெயழுபடலத்தில் (1:19) விவரிக்கப்படும்.

**இகல்**

பொதுவாகக் காப்பியங்களில் போர் சிறப்பிடம் பெறுவதோடு விரிவாகவும் பேசப்படுதல் இயல்பு. இலங்கையில் சிறையுற்ற சீதையை விடுவிக்கும் போர் கம்பராமாயணத்தில் தனிக் காண்டமாக அமைந்துள்ளது போன்று, மகேந்திரச் சிறையில் வாடும் சயந்தன் முதலியோரை மீட்கும் போரும் மிக விரிவாக (2969 - விருத்தத் தொகைகளில்) இங்கு அமைந்துள்ளது. 'டிராய்' நகரில் சிறை வைக்கப் பெற்ற கெலனை மீட்கும் கடும்போர் ஓமரின் இலியத்தில் விரிவாக அமைந்திருப்பதும் இங்குக் கருதத்தக்கது.

### வென்றி

எதிர்நிலைத் தலைவனாகிய சூரபன்மனின் வென்றிச் சிறப்பு திக்கு விசயப் படலத்தும்' (2:12), காப்பியத் தலைவனாம் முருகனின் வென்றிச் சிறப்பு 'தேவர்கள் போற்று படல'த்தும் (4:14) உரைக்கப்படும்.

## 5. காப்பிய அமைப்பு

சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பகுப்புமுறையினை மேற் கொள்ளாது முந்தைய காப்பிய ஆசிரியர் வகுத்த காண்டம், படலம் என்ற முறையைப் பின்பற்றித் தம் நூலினைப் பகுத்து அமைத்துள்ளார்.

மேலும், முதனூலுக்கு ஏற்பக் காண்டங்களின் வைப்பு முறையினை மாற்றாமலும், உட்பிரிவாகிய படலங்களைக் கருத்தின் முழுமை குலையாமையைக் கருத்தில்கொண்டு மாற்றியும் அமைத்துள்ளார். முதனூலில் கதைச் செய்தி முற்றுப்பெறுமுன் அடுத்த பிரிவு (அத்தியாயம்) தொடங்கும். அங்ஙனம் தம் நூலை அமைக்காமல் செய்தி முழுமையுறுவதை மனத்தில்கொண்டு படலங்களைத் தலைப்புக்களுடன்அமைத்துள்ளமை பாராட்டற்குரியது. (தமிழ்க் கந்தபுராணமும் வடமொழிக் கந்தபுராணமும்' என்ற பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது).

" *பகுதி கொண்டிடு பாக்கள் இனத்தினுள்*
*மிகுதி கொண்ட விருத்தத் தொகைகளால்*
...............................................................
............................... *தனிக்கதை சாற்றுகேன்* " (அவை: 18)

என்பதால் பலவகைப்பட்ட விருத்தப் பாக்களால் காப்பியம் அமைந்துள்ளமை புலப்படும்.

## 6. காப்பியக்கரு

பாவிகத்தையும் சந்தியையும்வேறுபிரித்து ஆராய்வது இயலாத ஒன்று.' பாவிகம் என்பது காப்பியப் பண்பே' என்ற தண்டியின் நூற்பா

விற்கு அந்நூலின் உரையாசிரியர் விளக்கம் எழுதும் போது, "பிறனில் விழைவோர் கிளை யொடுங்கெடுப", "பொறையிற் சிறந்தகவசமில்லை", "வாய்மையிற் கடியவோர் வாளியில்லை" என்பன போலக் கிடப்பது எனக் குறிப்பிட்டு. அவை முறையே இராமாயணத்தாலும், பாரதத் தாலும், அரிச்சந்திர சரித்திரத்தாலும் உணரப்படும் என்று சுட்டுப. இத்தகைய பாவிகம் கதையினும் வேறு என்றே, கதையில் பிழிந் தெடுக்கும் சாறு என்றே கொள்ளுதல் ஆகாது. கதையின் ஒருமைப் பாட்டினை அறிய உதவும் போக்கு என்பர்.[49] எனவே கதைப்பொருளின் தொடர்ச்சியைப் பற்றிய சந்தியைப் பாவிகத்தினின்றும் வேறுபிரித்து ஆராய்தல் உடலைச் சிதைத்து உயிரைக் காண்பது போறலால் அக உறுப்புக்களாகிய இவ்விரண்டினையும் ஒருங்கிணைத்துக் காணலே ஏற்புடையதாகும்.

பாவிகத்தைக் கவிஞன் வெளிப்படையாகவோ அல்லது காப் பியத்தின் போக்கில் உணர்ந்து கொள்ளுமாறு குறிப்பாகவோ உணர்த் தலாம். கச்சியப்பர் தமக்கு முன் வாழ்ந்த காப்பியச் சான்றோராகிய இளங்கோ, சாத்தனார், திருத்தக்கதேவர் ஆகியோர் வகுத்த நெறியில் பாயிரப் படலத்தில் வருபொருள் உரைத்தலாகிய கந்தபுராணச் சுருக் கத்தையும், கம்பர், சேக்கிழார் வழியில் ஆறு, நாடு, நகரம் ஆகிய மற்றையும் பாடி, புராணத்திற்குத் தோற்றுவாய் செய்வர். அவ்வாறு அமைந்துள்ள இப்படலங்களிலோ அல்லது அவையடக்கப் பகுதி யிலோ தாம் உணர்த்த விரும்பிய பாவிகத்தை இளங்கோ, சாத்தனார் போன்று வெளிப்படையாக உரைத்திருக்கலாம். கந்தபுராணம் வழி நூலாதலின் அவ்வாறு வெளிப்படக் கூறாது காப்பியப் போக்கில் அப் பண்புகளை நாம் உணர்ந்துகொள்ளுமாறு ஆங்காங்கே வெளிப்படுத்திச் செல்வர். புராணத்தின் முழுப்பார்வை மூலம் கச்சியப்பர் கீழ்க்கண்ட முக்கருத்துக்களைப் பாவிகமாக உணர்த்தியுள்ளார் எனலாம்.

1. ஊழ்வினையின் வலிமை
2. தவத்தின் பெருமை
3. தீயரைத் தூயராக்கும் ஆண்டவன் அருள்நிலை (விடுதலை)

இம்மூன்று கருத்துக்களையும் பாவுநூலும் ஊடுநூலுமாகக் கொண்டு நெய்து தம் காப்பியத்தை முழுமை செய்துள்ளார் புலவர். ஊழ்

வினையை இருப்பு நிலையாகவும், தவத்தை வளர்நிலையாகவும், ஆண்டவன் அருள் நிலையை விடுதலை நிலையாகவும் கொண்டு இக் காப்பியக்கதை அமைந்துள்ளது.

சூரன், பதுமன் ஆகிய இருவரும் முற்பிறப்பில் இயற்றிய ஒரு பிழையால் முருகனிடம் சாபம் பெற்று மண்ணுலகில் ஓரசுரனாகப் பிறக்கின்றனர். தக்கன் வேள்வியில் கலந்து கொண்ட தீய செயலுக்காக நந்தியின் சாபம் பெற்ற தேவர்கள் (6:10:27) அவுணரால் அளப்பில் காலம் துன்புறுகின்றனர். இரு சாரார் விதைத்த வினைகளை இருப்பு நிலையாகக் கொண்டு கந்தபுராணக்கதை முளைவிடுதலைக் காண்கின்றோம்.

இருப்புநிலையாம் பண்டை ஊழ்வினையிலிருந்து விடுதலைபெறும் முயற்சியாகச் சூரன் தவம் இயற்றுதலையும், அதனுல் அவன் எய்தும் பெரு வரங்களையும் (2, 8-9), இந்திரன் மேருமலையில் தவம் இயற்றுதலையும்(1:3:32;2:43:117),அதனால் அவன் உறும் பயன்களையும் (1:3:35) விரித்துரைத்துத் தவத்தைக் கதை நிகழ்வுகளின் வளர்நிலையாகக் காட்டுவர். சூரபதுமன் இறுதியில் முருகனிடம் வரம்பிலா அருள் பெற்றுய்தல் (4:13:496) இந்திரன் முதலியோர் மீண்டும் தொல்கதி பெற்று உய்தல் (5:3) என்பனவற்றுல் தீயரைத் தூயராக்கும் ஆண்டவன் அருள்நிலையாம் விடுதலை நிலையைப் புலப்படுப்பர். காப்பியக் கருவாகிய இப்பாவிகப் கருத்துக்கள் 'கந்தபுராணத்தின் நோக்கம்' என்ற பகுதியில் விரிவாக விளக்கப்படும்.

## கந்தபுராணத்துள் புராணக்கூறுகள்

'கந்தபுராணம்' என்று கவிஞரே பெயரிட்டிருந்தாலும் இரு மொழிகளிலும் விவரிக்கப்படுகின்ற புராண இலக்கணங்கள் முழுமையாகப் போற்றப்படவில்லையென்றும். அண்டகோசப் படலத்தில்தான் ஐந்திலக்கணங்களில் இரண்டு மட்டும் இயம்பப்படுகின்றன என்றும் முன்னர் உரைக்கப்பட்டது. நைமிசாரணிய முனிவர்கட்குச் சூத முனிவர் புகன்றதாகத் தொடங்கும் தமிழ்ப்புராண அமைப்புப் போற்றப் படுவதுடன், பொதுவாகப் புராணங்களில் சிறப்பிடம் பெறும் இறைவன்

இயல்புகள், அவன் எழுந்தருளியுள்ள இடத்தின் சிறப்புக்கள், ஆங்குள்ள நீர்நிலைகளின் பெருமைகள், இறைவழி பாட்டு நெறிமுறைகள், நோன்பு நோற்கும் திறங்கள், பத்திநெறி ஆகியன இக்காப்பியத்தில் உரிய இடங்களில் விளக்கப்பெறுகின்றன. இதனுல் கச்சியப்பர் தம் படைப்பில் புராணக்கூறுகளையும் இணைத்துள்ளமை புலனுகும். இருப்பினும், புராணம் என முன்னேர் கூறிய கருத்தடிப்படையில் கந்தபுராணத்தை முழுதும் கொள்ள இயலவில்லை. முருகன் பற்றிய பழங்கதை என்ற கருத்து வலிமை பெறவே தம் நூலுக்குப் 'புராணம் என்ற' தலைப்பைப் பெய்துள்ளார் எனலாம். "புராணம் எனப் பெயர் பெறினும் கந்தபுராணம், பெரியபுராணம் போன்றன இன்று காப்பியங்களாகவே கருதப்படுகின்றன" [50] என அறிஞர் கருதுவதும் நினையத் தகும்,

## முடிவுரை

கச்சியப்பர் முந்துதமிழ்க் காப்பிய நெறிகளையும் தண்டி கூறியுள்ள காப்பிய இலக்கணத்தையும் மனத்திற்கொண்டு தம் நூலைப் படைத்ததுடன்,புராணக் கூறுகளையும் காப்பியச்சுவை குன்றாவகைத் தழுவியுள்ளார். பழங்கதை என்ற கருத்து வலியுறத் தம் நூலுக்குப் 'புராணம்' என்று பெயரிடினும் காப்பிய நெறியில் நின்று தம் படைப்பினை உயர்த்தியுள்ளார். ஊழினை இருப்பு நிலையாகவும், தவத்தை வளர்ச்சி நிலையாகவும் ஆண்டவன் அருள் நிலையை விடுதலை நிலையாகவும் கொண்டு பாவிகம் அமையக் காப்பியத்தை உருவாக்கியுள்ளார். கதைக்கு மூலம் வடமொழியாயினும், கதைமேலெழுந்த காப்பியக் கட்டிடத்திற்குத் தமிழ் மரபினையே முதலாகக் கொண்டுள்ளமை பாராட்டற்குரியது.

## மேற்கோள்

1. S. D. Gyani, Agni-Purana : A Study, p. 4.
2. M. R. A. S. John Dowsun, A Classical Dictionary of Hindu Mythology, p. 245.
3. திருவாசகம், ப. 1.

4. பொ. வே. சோமசுந்தரனார், தணிகைப் புராணம், முன்னுரை, ப. 10.
5. கி. வா. ஜகந்நாதன், தமிழ்க் காப்பியங்கள், ப. 78.
6. வெண்பாப்பாட்டியல். நூ. 43.
7. ........................., ப. 58.
8. யாப்பருங்கலம், விருத்தியுரை, ப.566.
9. வீரசோழியம், ப. 280.
10. சிதம்பரப்பாட்டியல், மரபியல், நூ. 16.
11. S. D. Gyani, 'Introduction' Agni-Purana : A Study, pp 8-9.
12. Mahendale and Majumdar, 'The Puranas' The Classical Age, p. 294.
A. D. Pusalkar, Studies in the Epics and Puranas, p. 45.
13. கி. வா. ஜகந்நாதன், தமிழ்க் காப்பியங்கள், பக். 134-135.
14. இரா. காசிராசன், ' காப்பியங்களில் குல வரவு ' ஒன்பதாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி-1, இ. ப. த. மன்றம், ப. 137.
15. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், நீங்களும் சுவையுங்கள், பக்.83 .
16. சி. கே. சுப்பிரமணிய முதலியார், சேக்கிழார், பக். 34-35. சுப. அண்ணாமலை, 'பன்னிரண்டாந் திருமுறை' தெய்வத்தமிழ், பக். 222-274.
17. சுப்பிரமணிய சாஸ்திரி, கந்தபுராணம் - உற்பத்திக் காண்டம் உரை, உபோற்காதம், ப. 4.
18. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு — பதினான்காம் நூற்றாண்டு, ப. 14.
19. சே. வே, ஜம்புலிங்கம், ' பதிப்புரை ', தெய்வயானையம்மை திருமணப்படலம், ப. 1.
20. ம. பொ. சிவஞானம், 'சிறப்புரை' ஸ்ரீ கந்தபுராண வசனம், ப. iv.
21. கா. சுப்பிரமணிய பிள்ளை, இலக்கியவரலாறு, இரண்டாம் பாகம், ப. 336.
22. Ratna Navaratnam, The Divine Child Karttikeya, p. 165.
23. கடப்பேரி சுப்பிரமணிய சிவாச்சாரியார், கந்தபுராண வசனச் சுருக்கம், ப. 1.
24. க. த. திருநாவுக்கரசு, ' கந்தபுராணம் ', தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி 3, ப. 54.

25. நா. கதிரைவேற் பிள்ளை, சுப்பிரமணியபராக்கிரமம். ப. 214.
26. A. V. Subramania Aiyar The Tamil Studies, p. 121.
27. தண்டியலங்காரம், நூ. 8.
28. ......................, நூ. 11.
29. ......................, நூ. 91,
30. உமாபதி சிவாச்சாரியார், சேக்கிழார் நாயனார் புராணம், செ. 31.
31. வாமதேவமுருகப் பட்டாரகர், ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் புராணம், செ. 38.
32. தொல். பொருள். செய்., நூ. 109, (பேராசியர் உரை).
33. திருத்தக்கதேவர், சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், (உ. வே. சா. பதிப்பு), பக். 1, 1520.
34. அ. அ. மணவாளன், 'காப்பிய மரபும் பாயிரப்பாங்கும்' (கம்பனும் மில்டனும் ஒப்பாய்வு), திறனாய்வுக் கட்டுரைகள், ச. வே. சுப்பிரமணியம் (ப. ஆ.), ப. 120.
35. ..................., ப. 120.
36. தொல். பொருள். நூ. 411.
37. நன்னூல். நூ. 10.
38. தொல். பொருள். செய்., நூ. 439 உரை.
39. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், 'காப்பியம்', கலைக்களஞ்சியம், தொகுதி 3, ப. 506.
40. திருக்குறள், பரிமேலழகர் உரை, உரைப்பாயிரம்.
41. திருவாசகம், திருச்சாழல், 16.
42. "இவ்வுபதேச காண்டத்தைக் கச்சியப்பரின் மாணாக்கர் கோனேரியப்ப நாவலர் பாடியுள்ளார்,"
கோனேரியப்ப நாவலர், உபதேசக் காண்டம்.
43. சி. கணபதிப் பிள்ளை, கந்தபுராண கலாச்சாரம், ப. 12.
44. சி. கணபதிப் பிள்ளை, கந்தபுராண போதனை, ப. 15.
45. பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும், ப. 95.
46. பரி., 14:23-24.
47. சிலப்பதிகாரம், 5:111-138.
48. கம்பராமாயணம், பாலகாண்டம், படலங்கள் 16-18.
49. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பாட்டிலே புரட்சி, ப.69.
50. ச. வே. சுப்பிரமணியன், காப்பியப் புனைதிறன், ப. 61.

# 2

# கந்தபுராணத்தின் நோக்கம்

காப்பியத்தைப் பார்க்கும் முறைகள் பல. முழுப் பார்வை யாகவும் பார்க்கலாம்; துண்டுப் பார்வையாகவும் பார்க்கலாம். முன்னது, காப்பியம் படைத்த புலவன் பார்வை. பின்னது, நாம் காணும் உதிரிப் பார்வை. கவிஞன் படைத்த காப்பியத்தை அவன் கண் கொண்டு நோக்கினால்தான் அவனை முழுமையாகப் புரிந்து துய்க்க முடியும். எனவே, முழுப்பார்வையே சிறந்த பார்வை என்று அறிஞர் கருதுவர்.[1] தன் படைப்பின் வாயிலாகக் கவிஞன் வற்புறுத்த விரும்பிய நோக்கத்தினைக் காப்பியத்தின் முழுப் பார்வையால்தான் உணர்ந்து கொள்ள இயலும். கந்தபுராணமாகிய தம் பனடப்பின் மூலம் கச்சியப்பர் உள்ளுறுத்து உரைக்கும் பொருளினை விரிவாக ஆயுமுன், அந்நூல் தோன்றுதற்குரிய காரணத்தை ஆசிரியர் வழிநின்று காண்போம்.

காப்பிய ஆசிரியர் கேட்போரிடம் நேரிடையாகப் பேசுமிடம் நூலின் முற்பகுதியில் அமைந்துள்ள அவையடக்கம் ஆகும். அப் பகுதியில் கந்தபுராணத்தைத் தமிழில் படைத்தற்குரிய காரணங்களை ஆசிரியர் சுட்டுவர்.

'வடமொழி நூல்களில் முருகனைப் பற்றிய கதைகள் அளவில் மிகுந்தும், ஒன்றுக்கொன்று முரண்பட்டும் காணப்படுகின்றன. எனவே, உண்மையான கந்தன் கதையை முரணின்றித் தமிழர்க்குத் தருதல் வேண்டும்' (அவை : 15) என்ற வேட்கையும், 'தமிழ்த் தேசிகர் நன்புலத்து அக்கதைகளை எடுத்துக் காட்டல் வேண்டும் என்ற நயப்பும்' (அவை : 16), 'காஞ்சியில் வாழும் முற்றுணர் மேலவர் வடமொழியிலுள்ள கந்தன் கதையினைத் தமிழில் தருமாறு வேண்ட, அவ்வேண்டுகோளை நிறைவு செய்ய வேண்டும் என்ற அவாவும்' (அவை : 19) கச்சியப்பர் கந்தபுராணத்தைப் படைத்தற்குரிய காரணங்களாகும்.

*"ஏதி லாக்கற்ப மெண்ணில சென்றன*
*ஆத லாலிக் கதையு மனந்தமாம்*
*பேத மாகுமப் பேதத்தி னுள்விரித்*
*தோது காந்தத்தி னுண்மையைக் கூறுகேன்"* (அவை : 15)

*"முன்பு சூதன் மொழிவட நூற்கதை*
*பின்பி யான்றமிழ்ப் பெற்றியிற் செப்புகேன்*
*என்ப யன்னெனி லின்றமிழ்த் தேசிகர்*
*நன்பு லத்தவை காட்டு நயப்பினால்"* (அவை : 16)

*"செந்த மிழ்க்த வரம்பெனச் செப்பிய*
*முந்து காஞ்சியின் முற்றுணர் மேலவர்*
*கந்த னெந்தை கதையினை நூன்முறை*
*தந்தி டென்னத் தமிய னியம்புகேன்"* (அவை : 19)

என்பது கச்சியப்பர் வாக்கு. முன்னிரண்டு காரணங்களும் இருமொழிப் புலமையரான கவிஞரின் உள்ளுணர்வினையும், மூன்றாவது காரணம் தாம் வாழ்ந்த கால மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற நன்றியுணர்வினையும் புலப்படுத்தும். இவைகள் நூல் தோன்றுதற்குரிய காரணங்களேயன்றி நூலின் நோக்கங்கள் ஆகா. தேவர்கட்கு இன்னல் விளைவித்த அசுரர்களை அழிப்பது இந்நூலின் பாடுபொருள் எனக் கொண்டால் பொதுவாக இந்தியக் காப்பியங்கள் வற்புறுத்தும் 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்ற அறத்தை நிலை நாட்டுதலே கந்தபுராணத்தின் நோக்கம் என்றும் நவிலலாம்.

திருமால் இராமனாகத் திருப்பிறப்பு எடுத்ததற்கு இராவண வதம் நோக்கமாக அமைதல் போல் முருகன் திருப்பிறப்புக் கொள்ளு தற்குச் சூரன் வதை நோக்கமாக அமைவதுடன் அத்திசை நோக்கியே கதை வளர்ந்து செல்வதையும் கந்தபுராணத்தில் காணலாம். கதை நிகழ்ச்சிகளை வளர்த்துச் செல்லும் பொழுதெல்லாம் சூர்மா-தடிதலாகிய நோக்கத்தினை ஆசிரியர் ஆங்காங்கே சுட்டிச் செல்வர். நூலின் முற்பகுதியாம் பாயிரத்துள் நூற்பயனை நுவலும் கவிதையுள், "அந்தமில் அவுணர்தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற் கந்தவேள்" (பாயிரம் : 4) எனப் புராணநாயகனைச் சுட்டிச் சூரன்

வதையினைக் குறிப்பாகப் புலப்படுப்பர். முருகன் திருப்பிறப்பு எடுத்தற்கு முன்னர், இந்திரனது தவத்திற்கு இரங்கி அவன்முன் தோன்றிய சிவன்,

> *''நம்மிடை யொருசேய் வந்து நணுகிவெஞ் சூரைக்காதி*
> *இம்மென வும்மைக் காப்பன்'' (1 : 3 : 35)*

எனப் புகலுவதாகப் பாடுதலும், 'முருகன் தோன்றியபொழுது புவனத்துள்ள உயிர்கள் அனைத்திற்கும் உவகைக்குறிப்பும், சூரன் முதலியோர்க்கு மாயும் குறிப்பும் ஏற்பட்டதாக' (1 : 11 : 95) நவிலலும், முருகன் திருவிளையாட்டால் உலகப் பொருள்கள் நிலை குலைந்தமை கண்ட மக்கள்,

> *''தீயன முறையால் வெங்கோல் செலுத்திய அவுண ரெல்லாம்*
> *மாய்வது திண்ணம் போலும் மற்றதற் கேதுவாக*
> *மேயின விம்மி தங்கொல் இதுவென வெருவ லுற்றார்'' (1:14:33)*

எனப் பகர்தலும், திருவிளையாடல் புரியும் முருகனைச்,

> *''சூரன் முதலோருயிர் தொலைக்கவரு செவ்வேள்'' என்றும்,(1:15:1)*
> *''பொரு சூரொடு மலையச்செலும் வலியோன்'' (1: 14 : 11)*

என்றும் சுட்டுதலும், முருகனிடம் சூரபன்மன் முதலியோர் வரலாற்றை விரிவாகக் கூறிமுடித்த தேவகுருவாம் வியாழன்,

> *''எந்தைநீ வந்தபின்றை இந்திரன் அயன்மால் தேவர்*
> *அந்தமில் முனிவர் ஏனோர் அனைவர்க்கும் அகன்ற ஆவி*
> *வந்தது போன்ற தம்மா வலியவெஞ் சூரற் செற்றுத்*
> *தந்தம தரசு பெற்ற தன்மையர் போல வுற்றார்'' (2 : 43 : 122)*

என உரைத்தலும், முருகன் திருபிறப்புக் கொண்ட நோக்கத்தினைப் புலவர் ஆங்காங்கே வற்புறுத்திச் செல்லுதலைக் காட்டும் பகுதிகளாம். எனவே, சூர்மாதடிதலாகிய நோக்கம் நிறைவேறுவதன்

மூலம் 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்ற அடிப்படை அறத்தை நிறுவிக்காட்டுதலே கந்தபுராணத்தின் நோக்கம் என்பது வெளிப்படையாகத் தோன்றுகின்றது.

இந்த ஒரு நோக்கத்தை மட்டும் பாடுபொருளாகக் கொண்டு ஒரு பெருங்காப்பியம் இயல முடியாது. "சிறு தனிப்பாடலுக்கு ஒரு பாடுபொருள் இருக்கலாம். செய்யுட் பன்மையும், பாத்திரப்பன்மையும் கொண்ட தொடர்நிலைக் காப்பியத்துக்கும் பாடுபொருள் ஒன்று என்றுதான் முடிக்கவேண்டுமா?"[2] என வினவுவர் அறிஞர். சிலப்பதிகாரம் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாதல், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டல் என்ற மூன்று அறங்களையும் பாடுபொருளாகக் கொண்டு நடத்தல் போல பெருங்காப்பியங்களும் ஒன்றிற்கு மேற்பட்ட பொருட்களைப் பாடு பொருளாகக் கொண்டு உருவாவதில் தவறில்லை.

சங்க காலத்தில் ஓங்கிப் பரந்திருந்த முருக வழிபாடு பல்லவர் காலத்தில் (நாகரிக மக்கள் வழிபாட்டில்) வடநாட்டுக் கார்த்திகேயனோடு ஒன்றுபடுத்தப்பெற்று வளர்ந்துவரினும் சைவக் கடவுளர் குடும்பத்தில் சிவனைப் போன்ற தலைமையிடத்தை முருகன் பெறவில்லையென்பதனை முன்னர்க் கண்டோம். சிவனையன்றிப் பிற கடவுளரைத் தலைமையுடையவனாக ஏற்றுக் கொள்ளாத நாயன்மார்கள் வளர்த்த சைவப்பாத்தியுள் கந்தனைத் தோற்றுவித்துச் 'சிவனும் முருகனும் வேறல்லர்' என்ற கருத்தினைப் பல இடங்களில் வற்புறுத்திச் சென்று, இறுதியில் சிவனிடமிருந்தே முருகன் தலைமையிடத்தைப் பெறுமாறு அமைத்துத் (5 : 2 : 255) தமிழகத்தில் மீண்டும் முருக வழிபாடு ஓங்கி வளர்வதற்குத் தம் படைப்பாகிய கந்தபுராணத்தின் மூலம் அடித்தளம் அமைத்துத் தந்தவர் கச்சியப்பர். முருக பத்தியில் முருகி நின்று, தேவார திருவாசகம் போல் முருகனைக் கதைமாந்தர் கூற்றில் போற்றிப் பரவுதலை நூலின் பல இடங்களில் காண்கின்றோம் (1 : 14 : 82 ; 4 : 14 : 3-8).

*"காற்றிற் றள்ளுண்டு நெருப்பினிற் சூடுண்டு கங்கை*
*ஆற்றில் தாக்குண்டு சரவணம் புக்கலையுண்டு*

*வேற்றுப் பேர்முலை உண்டழு தேவிளை யாடும்*
*நேற்றைப் பாலனை யோபரம் பொருளென நினைந்தாய்'' (3:21:144)*

என இகழ்ந்து பேசிய சூரபன்மனையே,

*''மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்*
*மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ''* என்றும்,
*(4 : 13 : 433)*

*''சூழுதல் வேண்டுந் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை*
*தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந் தாலும்*
*ஆழுதல் வேண்டுந் தீமை அகன்றுநான் இவற்கா ளாசி*
*வாழுதல் வேண்டும்'' (4 : 13 : 444)*

என்றும் போற்றித் துதிக்குமாறு படைத்துக்காட்டிப் பகைவனும் முருகனைப் புகழும்வண்ணம் காட்டுவர். இதனால் சைவநெறிக்கு முரணின்றி, நாயன்மார்கள் போல் பத்தி நெறியில் தலைநின்று, முருகனது தலைமைதோன்ற முருக வழிபாட்டை மீண்டும் நிறுவிக் காட்டுதலும் இவர் படைப்பின் நோக்கமாகக் கொள்ளலாம்.

''வாழ்வும் வரமும் ஆக்கமும் ஊக்கமும் வாரி வாரி வழங்கிய சிவபெருமானுடைய திருக்குமாரனாகிய முருகப்பெருமானையே எதிர்த்தான் சூரபன்மன். அவன் மறந்த நன்றியே அவனை அழித்து விட்டது. கூற்றுவன் என்று ஒருவன் அவனுக்குத் தேவைப்படவில்லை.

*''ஒன்றொரு பயன்றனை உதவி னோர்மனங்*
*கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்*
*புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே*
*கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?'' (4 : 7 : 10)*

ஆதலால் நன்றி கோறலால் வரும் விளைவை விரித்துக் காட்டும் தருமநூல் கந்தபுராணம்''[3] என்பர். இக்கருத்து அடிப்படையில் நோக்கின்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற அறத்தை வலியுறுத்துவதும் கந்தபுராணத்தின் நோக்கமாகக் கருதலாம்.

இவ்வாறு பல நோக்கங்கள் ஒன்றிப் பிணைந்த கூட்டுப் பொருளாம் காப்பியத்தை, "ஒரு கல்லில் செய்யும் குடைவரைக் கோயிலன்று; ஒரு கோபுரமுடைய கோயிலுமன்று. கல் பல அடுக்கிய உள்ளும் புறமும் கோபுரங்கள் கொண்ட வானளாவிய கட்டுமானக் கோயிலாகும்,"[4] என்றும் அறிஞர் கருத்துரைப்பர்.

அறம் வெல்லும், பாவம் தோற்கும்; நன்றி கொன்றோர்க்கு உய்தியில்லை என்ற அறங்களை வலியுறுத்துதல், சைவநெறிக்கு மாறின்றித் தலைமை தோன்ற முருக வழிபாட்டை மீண்டும் நிறுவுதல் முதலிய நோக்கங்கள் வெளிப்படுமாறு கந்தபுராணம் அமைந்திருப்பினும், கதைப்போக்கின் வாயிலாகவும் கதை மாந்தர்கள் வாயிலாகவும், கவிக்கூற்றாகவும் காப்பியமெங்கும் தொடர்ந்து வலியுறுத்தப் படும் மூன்று கருத்துக்கள் ஊழின் வலிமை, தவத்தின் பெருமை, தீயரையும் தூயராக்கும் ஆண்டவன் அருள்நிலை (விடுதலை நிலை) ஆகியனவே என்பதனை நூலின் முழுப்பார்வையால் நாம் உணர்கின்றோம். இம் முக்கருத்துக்களையே காப்பியத்தின் பாவிகங்களாகக் கொண்டு சுருக்கமாக முற்பகுதியில் உரைத்ததை இவண் விரிவாகக் காண்போம்.

## ஊழ் (இருப்புநிலை)

அகத்திணை இலக்கியக் கொள்கையில் 'ஊழ்' இன்றியமையா இடம் பெறுதலை 'ஒன்றி உயர்ந்த பாலதாணை'[5] என்று குறிப்பிடுவர் தொல்காப்பியர். வள்ளுவர் ஊழியல் என ஓரதிகாரமே படைத்துள்ளார். இளங்கோவடிகளும் ஊழினை ஒரு பாவிகமாகக் கொள்வர். இந்தியச் சமயக் கொள்கைகள் அனைத்திலும் ஊழின் வலிமை போற்றப்படுகின்றது. கந்தபுராணத்திலும் 'ஊழ்' இருப்பு நிலையாக நின்று காப்பியத்தை இயக்கிச் செல்லும்.

கச்சியப்பர் தம் படைப்பில் சூரபன்மன் முதலியோரின் முற்பிறப்பு வரலாறு உணர்த்தும் உபதேசகாண்டச் செய்திகளைப் பாடா திருப்பினும் அக்காண்டக் கதை உணர்ச்சியுடன் கந்தபுராணத்தைப் படைத்துள்ளமை நூலின் அகச்சான்றுகளால் (2 : 8 : 29; 4 : 4 : 236; 4 : 13 : 443 ; 494; 5 : 3 : 9) நன்கு புலனாகும்.

சூரன் பதுமன் ஆகிய இருவரும் அகத்தியரின் அறிவுரையால் கந்தனுக்கு ஊர்தியாகவும், கொடியாகவும் விளங்கப் பல்லாண்டுத் தவமியற்றுகையில் ஒருநாள் கயிலைமலையின் அடிவாரத்தில் அவர்கள் செய்த ஒரு பிழையால் ஆறுமுகன் அவர்களை ஓர் அசுரனாகப் பிறக்கச் சாபம் (ஊழ்) இட்டான். பின்னர் அவ்விருவரின் வேண்டு-கோளை ஏற்று அசுரத்தன்மையிலிருந்து விடுதலை பெற்றவுடன் தவத்தின் பயன் கிட்டும் என முருகன் அருள் செய்தான்.[6] இவைகளே 'உபதேசகாண்டம்' சூரபன்மன் முற்பிறப்புக் குறித்துத் தரும் செய்திகளாகும். இதனால் கந்தன் காவியத்தின் பாவிகமாகிய ஊழ்வினையும், தவமும் உபதேசகாண்டத்திலிருந்தே தொடங்குவது பெறப்படும்.

கந்தபுராணத்துள் பின்புலக்காட்சியில் அமைந்துள்ள இரு காண்டங்களில் ஒன்று தக்ககாண்டம். பிரமன் இயற்றிய வேள்வியில் சிவனுக்குரிய பங்கைப் பெறுவான் வந்த நந்திதேவர், சிவனை இகழ்ந்த தக்கனுக்குச் சாபம் இட்டபின்னர், அவனைச் சார்ந்துநின்ற குற்றத்திற்காக,

*" ஈரமில் புன்மனத்து இழுதை மற்றுனைச்*
*சாருறு கடவுளர் தாமும் ஓர் பகல்*
*ஆருயிர் மாண்டெழீஇ அளப்பிலா உகம்*
*சூரெனும் அவுணனால் துயரின் மூழ்கவே"* (6 : 10 : 27)

எனத் தேவர்களுக்கும் சாபம் விடுத்தார் என்பது அத் தக்ககாண்டம் தேவர்களது முற்பிறப்புக் குறித்து நுவலும் செய்தியாகும்.

இவ்வாறு உபதேசகாண்டத்தில் சூரன் முதலியோர் விதைத்த விதையும், தக்க காண்டத்தில் இந்திரன் முதலியோர் விதைத்த விதையும் முளைத்து எழுந்து ஓங்கி வளருமாறு கந்தபுராணக் கதை செல்லுகின்றது. இந்த வகையில் கந்தபுராணக் கதை நிகழ்வுகட்கு இவ்விருசாரார் வினைகளும் இருப்புநிலையாகத் திகழ்கின்றன.

இந்திரன், சூரன் இவ்விருவர் வினை இருப்பினைப் புராணத்தின் கதைப்போக்கில் ஆசிரியர் கதைமாந்தர்களின் வாயிலாகவும், கவிக்கூற்றாகவும் சுட்டிச் செல்வர். சூரனது திக்குவிசயத்தின் போது அஞ்சித் தன்னிடம் எய்திய நான்முகன், இந்திரன் முதலியோரிடம் திருமால்,

*" புன்றொழில் தக்கன் வேள்வி புகுந்திடுந் தீமை தன்னால்*
*இன்றிது பொருந்திற்று அம்மா யாரிது விலக்கற் பாலார்"*
(2 : 13 : 21)

என்று கூறுவதும், அளப்பில் காலம் நோற்ற இந்திரனுக்கு வரமருளு முன் சிவன்,

*" மெய்ம்மைய தகன்ற தக்கன் வேள்வியின் இருந்த பாவம்*
*நும்மிடை யிருந்த தற்றால் நோதக வுழந்தீர் மேனாள்"* (1: 3: 35)

எனச் சாற்றுவதும், சூரனுக்கு அஞ்சி மறைந்தோடிய இந்திரனாம் தந்தையைக் காணாது வருந்தும் சயந்தனிடம் நாரதர்,

*" தீங்குவந் தடைய மாறும் நன்மைதான் சேரு மாறும்*
*தாங்கள்செய் வினையி னாலே தத்தமக் காய அல்லால்*
*ஆங்கவை பிறரால் வாரா"*
*" முறைமுறை நிகழும் ஈது முன்னையூழ் வினையே கண்டாய்"*
(2 : 21 : 31 , 33)

என மொழிவதும், மகேந்திரத்தில் சிறைப்பட்ட சயந்தனைத் தேற்றும் வீரவாகு,

*" சிறுவிதி வேள்வி நண்ணித் தீயவி நுகர்ந்த பாவம்*
*முறைதனில் வீரன் செற்று முற்றவும் முடிந்த தில்லை*
*குறைசில இருந்த ஆற்றாற் கூடிய துமக்குத் துன்பம்"* (3:11:25)

என்று புகலுவதும் தேவர்களின் ஊழ்வலியினைச் சுட்டும் பகுதிகளாம்.

மகேந்திரம் சென்று மீண்ட வீரவாகு, தான் தூது உரைத்தமை பயன்படாமையினைக் கந்தவேளிடம் கூறுகையில்,

*" வீதலே அவன் விதிய தாகலின்*
*தீதில் விண்ணவர் சிறைவி டோமென*
*ஓதினான்"* (3 : 18 : 19)

என்றும், சிங்கமுகன் தன் தமையனாம் சூரபன்மனுக்கு அறிவுரை கூறியும் பயனுறாத நிலையில்,

*"விதிவலி யாவரே தீர்ந்தார்"* (3 : 21 : 100)

என்றும், சூரபன்மன் மகனாம் இரணியன் தன் தந்தைக்குத் தக்கன எடுத்துரைத்தும் அவன் கொள்கை மாறாநிலை கண்டு,

*" உதித்த செங்கதிர்ப் பரிதியங் கடவுள்சூழ் உலகில்*
*விதித்தி றந்தனை யாவரே வன்மையால் வென்றோர்"* (4:7:46)

என்றும், மாயை தன் மகனாம் சூரபன்மனுக்கு இறுதியாக உறுதி கூறியும் எடுபடாநிலையில்,

*"சென்னியில் விதியை யாவராயினுந் தீர்ந்தார் உண்டோ?"*
(4 : 13 : 296)

என்றும் உரைத்துக் கதைமாந்தர் வாயிலாக ஊழின்வலியை உணர்த்துவர். சூரன் இறுதி முயற்சியாகக் கோழியாகவும், மயிலாகவும் முருகனைத் தாக்க முந்துற்றதனை,

"ஆட்படு நெறியிற்சேர்த்தும் ஆதியின் ஊழ்தந் துய்க்கத்
தாட்படை மயூரமாகி" (4 : 13 : 494)

வந்தான் என்று கவிக்கூற்றாகவும் பாடிச் சூரனின் முந்தை ஊழினை வற்புறுத்துவர். இவ்வாறு இருசாரார் ஊழ்வினைகளின் பின்னலாகக் கதைப்பின்னல் அமைந்துள்ளது கருதத்தக்கது.

**தவம் (வளர்நிலை)**

ஊழினை வெல்லும் முயற்சியாகத் தவம் கந்தபுராணத்தில் விளங்குகிறது. அதனைப் பலரும் பல நெறிகளில் முயல்வதை இப் புராணம் முழுதும் காணலாம்.

தக்கனது வேள்வி நண்ணியதின் விளைவே தேவர்கள் அசுரரால் படுந்துயரமாகும். இப்பெருந்துயர்க்கடலைக் கடக்கவே இந்திரன் சீர்காழியில் பொழில் அமைத்துச் சிவனை வழிபட்ட தோடமையாது, மேருமலையிலும் பன்னாள் தவமியற்றினான் (1 : 3 : 32; 2 : 43 : 117). அத்தவத்தின் பயனாகவே சூரனைத் தடிந்து தேவர்களைக் காக்கும் பொருட்டு முருகன் தோன்றினான். முருகனது தோற்றம் இந்திரனது தவத்தின் வளர்நிலையில் முதற் படியெனக் கொள்ளலாம்.

சூரன், பதுமன் ஆகியோர் அசுர் குலத்தில் சூர்பன்மனாகத் தோன்றிச் சுரர்கட்குத் துன்பந்தரல் வேண்டும் என்ற பண்டை ஊழின்படி, சூரன் கடுந்தவம் இயற்றுவதைக் காட்டும் 'அசுரர் யாகப்படலம்' தவத்தின் வளர்நிலையாக விளங்கும். தேவர்கட்கு இடுக்கண் தருதலாகிய அசுரப்பிறப்பு முழுமை பெறச் 'சூரன் தவம்' காரணமாகின்றது. இத்தவமாகிய வளர்நிலையில்தான் சூரன் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு உகம் ஆளுந் தகுதியும், இந்திர ஞாலத்தை ஊர்தியாகக் கொள்ளும் ஆற்றலும் விண்ணவர்கள் யாவருக்கும் முதல்வனாகும் மேன்மையும் பெற்றுத் தேவர்கட்கு அளப்பிலா இன்னல் தரத் தொடங்கினான். உலகைப் படைக்கும் பிரமனுக்குத் தன் அவையில் ஐந்தியலங்கம் (பஞ்சாங்கம்)

நாளும் நவிலும் பணி; உலகைக் காக்குந் திருமாலுக்கு ஏவிய வேலைகளை இயற்றும் பணி; இந்திரனுக்கு மீன் சுமந்து திரியும் வேலை- இத்தகைய கொடுமைகள் வளர்ந்து இந்திரன் மனைவியைக் கவரும் கொடுநிலைக்கும் சென்றது. சூரன் கொடுமைகளின் உச்சநிலையினை மகேந்திரச் சிறையில் சயந்தன் படுந்துயரால் உணர்கின்றோம். இவ்வாறு தேவர்கள் துயருறச் சூரனின் ஆளுமை வளர்நிலைக்குத் தவம் பெருந்துணை புரிகின்றது.

சூரனது தவ வளர்ச்சியினை மகேந்திரத்திற்கு ஏற்றி, 'மண் படைத்திடு தவமெனும் மகேந்திரம்' (3 : 8 : 84) என வீரவாகு வாயிலாகப் புகலுவர் ஆசிரியர். சூரனை அவைக்களத்தில் கண்ணுற்ற வீரவாகு, 'மனம் அடங்கத் தவம் புரிந்தவர்களில் இவனைப் போல் மாய்ந்தவரும் இல்லை. ஆய்ந்திடின் இறைவன் இவனுக்கு ஈந்தது போல் பிறருக்கு ஈந்ததும் இல்லை' (3 : 12 : 41) எனத் தவத்தால் வளர்ந்த அவன் உயர்நிலையை வியந்துரைப்பான். அவன் தவத்தால் பெற்ற உயர்வினைக் கவிக்கூற்றாக ஆசிரியர் பல்வேறிடங்களில் சுட்டுப. போர்க்களத்தில் முருகனைக்கண்ட சூரனை "ஆ! இவன் தவத்திற்கு அன்றி அறத்திற்கும் முதல்வன் அன்றோ?" (4 : 4: 238), "அன்னவன் தவத்தின் பேற்றை ஆரறிந்து உரைக்கற் பாலார்?" (4 : 4 : 239), "அவன் தவம் கணிக்கற் பாற்றோ?" (4 : 13 : 46) என்றெல்லாம் போற்றிப் புகழ்வர். சூரனும் இத்தகைய தவமாகிய வளர்ச்சிநிலையில் நின்று தேவர்கட்குச் சொல்லொணாத் தீங்கிழைத்ததால்தான் முருகன் வேலால் தடியப் பெற்றுத் தூயவனாகும் அருள்நிலை பெறுவன். எனவே, தேவர்கள் 'தொல்கதி' அடைவதற்கு இந்திரன் தவம் துணைபுரியுமாபோலே-சூரன் தூயவனாகும் அருள்நிலை பெறுதற்கும் அவனது வேள்வித் தவம் வளர்ந்து துணைபுரிகின்றமையினைக் கதைப்போக்கில் காண முடிகின்றது.

## விடுதலை (ஆண்டவன் அருள்புரிநிலை)

தேவர்கள் செய்த தீச்செயல், தம்மை என்றுங் காக்கும் சிவனை மறந்து, அச்சிவனை இகழ்ந்த தக்கனைச் சார்ந்திருந்தமையேயாகும்.

அதன் விளைவாகவே அவுணரால் ஆரப்பிற் காலந் துன்புற்றனர். அத்துன்ப நீக்கத்திற்கே இந்திரனும் பன்னாள் நெடுந்தவம் இயற்றினான். (1 : 3 : 33). இறைவன் அவன்முன் தோன்றி,

*" நம்மிடை ஒருசேய் வந்து நணுகிவெஞ் சூரைக்காதி*
*இம்மென உம்மைக் காப்பன் எனப்புகன்றும்" (1 : 3 : 35)*

செயல் நிகழாதநிலையில் சூரனின் அல்லலுக்கு ஆற்றாத இந்திரன் நான்முகனிடம் சென்று முறையிட்டகாலைப்,

*" படர்மதி மிலைச்சுஞ் சென்னிப் பகவன் ஆருயிர்க் கெல்லாம்*
*அடுவதும் வருத்தந்தீர்க்கும் ஆரருள் ஆன வர்போல்*
*கொடியவெஞ் சூரன் தன்னைக் கொண்டெமக்கு அலக்கண் செய்கை*
*விடலரும் பவப்பேறு ஆர்த்தி வீடருள் கருணை யன்றே" என்றும்,*
*(1 : 3 : 44)*

*" பெற்றிடுங் குரவ ரானோர் பிள்ளைகள் தம்பால் நோயொன்று*
*உற்றிடிற் பிறரைக் கொண்டும் உறுதுயர் செய்துதீர்ப்பர்*
*மற்றவர் தம்பால் அன்போ வன்கணோ அதுபோல் நம்பாற்*
*பற்றிய பவங்கள் தீர்ப்பான் பரமனும் இவைகள் செய்தான்"*
*(1 : 3 : 45)*

என்றும் பிரமன் உரைக்கும் ஆறுதல் மொழிகளில் தீயரையும் பக்குவம் அறிந்து தூயராக்கும் இறையருள் நிலை வற்புறுத்தப் பெறும்,

சூரபன்மன் தேவர்களைத் துன்புறுத்தியதோடு தனக்குப் பேராற்றலும் பெருவரமும் தந்த இறைவனையே இழித்துப் பேசிய இடமும் உண்டு (4:7:44). இரணியன் தந்தைக்குத் தக்கன எடுத்துரைக்கையில் சூரனது நன்றி கொன்ற பாவத்தைச் சுட்டுவன் (4:7:10). 'எத்தகைய அறத்தைச் சிதைத்தாரும் உய்யலாம். நன்றி கொன்றவர் உய்யார்' என்ற வள்ளுவத்தின்படி கடைத்தேற முடியாத கயவனாகவும் தன்மகனால் சூரபன்மன் சுட்டப்பெறுவன். இந்திராணியைக் கவர்ந்து வரமுயன்றதால் பிறர்மனை நயத்தலாகிய பேதையாயும் காட்சியளிப்பன். போர்க்களத்தில் மாயஞ்செய்தலின்

விஞ்சியவனாகத் திழ்வன். சயந்தனைச் சிறையில் துன்புறுத்துகையில் இரக்கமற்ற அரக்கனாகத் தோன்றுவன். இத்தகைய அனைத்துத் தீயபண்புகளின் கொள்கலனாக விளங்கும் சூரன் குமரவேள் உடம்பிடியை உய்த்த பொழுதும் ''அரற்றொடு குறைந்து வீழ்ந்தும் வீடிலனா''கி நின்றான் தன் வரத்தின் மேன்மையால் என்று கூறிப், 'பீடுறு தவமேயன்றி வலியது பிறிதொன்றுண்டோ?' (4:13:488) என்று அவன் தவத்தின் சிறப்பினைப் போற்றிப் புகழ்வர் ஆசிரியர். இறுதியாக, 'அட்படுநெறியிற் சேர்த்தும் ஆதியின் ஊழ்' அவனைத் தாட்படை மயூரமாகி முருகனை எதிர்க்கச் செய்தது (4:13:494). சிறந்தார் நோக்கால் இருள்கெழு கரும்பொன் செம்பொன்னாகிய இயற்கையே போல் செவ்வேளின் அருள்கெழு நோக்கால் இகல் நீங்கித் தெளிவுபெற்ற சூரன் (4:13:495) கந்தன் ஏவலினால் கொடியாகவும் ஊர்தியாகவும் விளங்கும் பேறுற்றான். இருப்புநிலையாகிய 'ஆதியின் ஊழும்' (4:13:494) வளர்ச்சி நிலையாகிய தவமும் இணைந்து இத்தகு விடுதலையாம் உயர்நிலையை அவனுக்கு நல்கியது. சிறந்த நெறியாம் தீயவரிடம் அமைந்த தீமைகளைக் களைந்து தூயவராக்குதல் என்ற கந்தன் காவியப் பாவிகம் விளங்குமாறு யுத்தகாண்ட நிகழ்ச்சிகள் நிறைவு பெறுகின்றன.

*''தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்*
*தூயவராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை*
*ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த*
*மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்''*
(4 : 13 : 496)

என்று கவிஞர் இந்நிகழ்ச்சிக்கு விளக்கந் தரும் முறையில் தன் கருத்தை (பாவிகம்) வற்புறுத்துவர்.

தக்கனைச் சார்தலாகிய தீய செயலால் தேவர்கள் பெற்ற சாபமும் (ஊழ்) இந்திரன் தவத்தால் (முருகன் தோன்றிச் சூரனை வேறலால்) நீங்கப் பெற்றதுடன் இந்திரன் முதலிய தேவர்கள் இறைவன் அருளால் 'மேலைத் தொல்கதியாகிய உயர்நிலை யெய்தி இன்புறும் செய்தி' விண்குடியேற்று படலத்தில் (5 : 3 : 40) விளக்கப்படும். 'தீயவரையும் தூயராக்கும் ஆண்டவன் அருள்நிலை'

சூரபன்மன் வரலாற்றில் தனியிடம் பெற்றும், இந்திரன் வரலற்றில் பொதுவாகவும் வெளிப்படுகின்றது. புராணத்தலைவன் கூற்றாலும் இப்பாவிகக் கருத்து நன்கு வெளிப்படுமாறு,

*"பாத கம்பல செய்தவ ராயினும் பவங்கள்*
*ஏதும் வைகலும் புரிபவராயினும் எம்பால்*
*ஆத ரங்கொடு தணிகைவெற் படைவரேல் அவரே*
*வேதன் மாலினும் விழுமியர் எவற்றினு மிக்கார்"*(6 : 24: 227)

என்று கச்சியப்பர் மொழிகுவர். 'பாவம் செய்தவர்கட்கும் ஆண்டவன் அருள் உண்டு என்ற செய்தியைத் தாங்கியவைகளே புராணங்கள்'[7] என அறிஞர்கள் நுவலுங்கருத்தும் கந்தபுராணப் பாவிகத்திற்குப் பொருந்தும்.

"கருணைத் திறத்தையே சிறப்பாகக் கொண்டது கந்த புராணம். தேவர்கள் துயர் தீர்க்க வேண்டும் என்ற கருணையின் மீதே தோன்றியவர் கந்தப்பெருமான். தேவர்கள் துயர் தீர்த்ததோடு, தேவசத்துருவான சூரனிடமும் கருணை பொழிந்து அவனைத் தமது வாகனமும் துவசமுமாக்கி அருள் பொழிந்தார்,"[8] என்னும் அறிஞர் கருத்தும் இவண் நினையத்தகும்.

*"தீயவை செய்வர் ஆகின் சிறந்தவர் பிறந்த உற்றார்*
*தாயவை தந்தைமார் என்று உணர்வரோ தருமம் பார்ப்பார்"*[9]

என்னும் இராமகாதை நெறி, 'தீயவை செய்தார் உய்ய முடியாது என்ற கருத்தை வலியுறுத்தித் தருமத்தின் உயர்வினைப் பேசற்றும் அறநெறியாகும். கச்சியப்பர் அத்தருமத்தினும் மேலாம் 'தீயரையுந் தூயராக்கும் அருள்நெறி'யைத் தம் படைப்பின் பாவிகமாகப் புலப்படுத்தியுள்ளமை போற்றற்குரியது.

## கிளைக்கதைகளில் பாவிகம்

கதைநிகழ்ச்சிகளோடு நேரடித் தொடர்புள்ள துணைநிகழ்ச்சி களிலும், நேரடித் தொடர்பில்லாக் கிளைக் கதைகளிலும் மேற்சுட்டிய பாவிகத்தை இழைத்துள்ளார் ஆசிரியர்.

காமதகனப்படலத்தில் காமவேள் எரிந்து சாம்பலாதற்கு 'விதி' (ஊழ்) தட்சகாண்டத்தில் அமைந்துள்ள கந்தவிரதப் படலத்தில் (6: 23: 81) விதைக்கப்படுகின்றது. அவ்வூழின் வலிமையால் சிவன் மீது காமக் கணை தொடுத்து அழிந்தான் காமவேள். பின்னர்த் தாபதநிலை (1:10:85) (காதலனை இழந்த மனைவி தவம் புரிந்து ஒழுகும் நிலை) யில் நின்ற இரதியின் தவத்தால் மீண்டும் உயிர்த்து எழுவன்.

தேவர்கள் எய்திய இன்னல்களுக்குரிய மூலகாரணத்தைச் சயந்தனுக்கு விளக்கும் முறையில் அமைந்த பகுதி 'தக்ககாண்டம்'. பிரமனது யாகத்தில் தான் செய்த சிவநிந்தனையால் நந்தியின் சாபம் (ஊழ்) பெற்றுத் தலைபிழந்த தக்கன் மீண்டும் அறிவு தெரிந்து சிவனை வழிபட்டு (தவம்) அவனருளால் பூதகணங் கட்குத் தலைவனாகும் பேறு பெறுவன் (6:22:7).

தவத்தின் சிறப்பினைக் காசிபர், சூரன் முதலியோர்க்கு உணர்த் துமுகமாக உரைக்கப்பட்டது மார்க்கண்டேயப்படலம். மார்க்கண் டேயர் பதினாறு வயது எல்லையென்ற ஊழின் இருப்புநிலையிலிருந்து விடுதலை பெற காசியிலுள்ள 'மணிகன்றிகை' யில் இறைவனை வழிபட்டு (தவம்) ஆண்டவன் அருள்நிலைக்கு உரியரானார். சிவனடி யாரது உயிரைச் சிதைக்க முயன்ற கூற்றுவனும் அழிந்து, மீண்டும் சிவன் அருளால் தொன்னிலை எய்துவன்.

மேற்குறிப்பிட்ட துணை நிகழ்ச்சிகளிலும், கிளைக்கதைகளிலும் ஊழின் வலிமை, தவத்தின் பெருமை, தீயரும் தூயராகும் ஆண்டவன் அருள்நிலை (விடுதலை) ஆகிய முக்கருத்துக்களும் பாவிகமாகப் பொலிதலைக் காண்கின்றோம்.

பரம்பொருளாகிய இறைவனைச் சுட்டும்பொழுதும்,

"..... உயிர்தொறுந் தங்கித் தொல்வினை
தேற்றுபு வினைமுறை செலுத்துந் தொன்மையோன்" (6:24:37)

என்றும்,

"அவரவர் வினைகள் நாடிஅதற்படு பொருளை நல்குஞ்சிவன்"
(1:11:3)

என்றும் சுட்டி வினையின் வலிமையினை வலியுறுத்துவர்.

'வேண்டிய வேண்டியாங்கு விரதருக்கு உதவும் வண்மை பூண்டிடு பரமன்' (6:7:12), 'நோற்றவர்க்கு ஏதும் ஈபவன்' (6:14:94) எனக் குறிப்பிட்டுத் தவத்தின் பெருமையினை உரைப்பர். முதல்நூலில் ஐந்து சுலோகங்களில் மிகச் சுருக்கமாக நவின்றுள்ள மார்க்கண்டேயர் வரலாற்றை[1] இருநூற்று எண்பத்தைந்து விருத்தத்தொகைகளால் விரித்து ஒரு படலமாகப் பாடியதும் தவத்தின் வலிமையினை வற்புறுத்தவே என்பதும் கருதத்தக்கது.

கந்தபுராணக்கதை வாயிலாக ஆசிரியர் உணர்த்தக் கருதிய பாவிகத்தினைக் காண்டங்கள் அடிப்படையிலும் வகைப்படுத்திக் காணலாம். அசுரர்களின் (சூரன்) ஊழ் இருப்பினை உபதேசக்காண்டமும், தவ வளர்ச்சியினை அசுர, மகேந்திர காண்டங்களும், இறையருளுற்ற விடுதலைநிலையினை யுத்தகாண்டமும் எடுத்துரைக்கின்றன. தேவர்களின் (இந்திரன்) ஊழ் இருப்பினைத் தக்ககாண்டமும், தவ வளர்ச்சியினை உற்பத்தி, மகேந்திர காண்டங்களும், விடுதலையாம் இறையருள் பெற்ற நிலையைத் தேவகாண்டமும் உணர்த்துகின்றன. பின்வரும் அட்டவணையால்[1] இக்கருத்து நன்கு விளக்கமுறும்.

| | ஊழ் இருப்புநிலை | தவம் வளர்ச்சிநிலை | விடுதலை அருள்புரி நிலை. |
|---|---|---|---|
| 1. அசுரர் | உபதேச காண்டம் | அசுரகாண்டம் | யுத்த காண்டம் |
| 2. தேவர் | தக்ககாண்டம் | உற்பத்தி காண்டம் | தேவ காண்டம் |
| 3. அசுரரும் தேவரும் | | மகேந்திரகாண்டம் | |

ஊழ்வினை முதலிய மூன்று கருத்துக்களையும் பாவிகமாகக் கொண்டு கந்தபுராணத்தை யாத்துள்ளமை மேற்காட்டிய சான்றுகளால் உறுதிப்படும். கல் பல அடுக்கிய உள்ளும் புறமும் கோபுரங்கள் கொண்ட வானளாவிய கட்டுமானக் கோயிலாம் காப்பியத்திற்கு இம்முக்கருத்துக்களே அடித்தளங்களாக அமைந்துள்ளமையினை உணர்கின்றோம்.

மனிதனின் குறைகளைச் சுட்டிக்காட்டி - அவற்றின் விளைவுகளை விளக்கி - அவைகளைக் களையும் நெறிகளையும் கூறும்பொழுதுதான் படைப்பாளன் நோக்கம் முழுமை பெறும். சிவனை மறந்து தக்கனொடு சார்தலாகிய தேவர்களின் குறையினைச் சுட்டி, சூரனால் உற்ற அளவிலாத் துன்பமாகிய அதன் விளைவுகளை விளக்கித் தவத்தின் மூலமாக அத்துன்பங்களைக் களைந்து, விடுதலை பெறும் முறைகளைக் கூறி, காப்பியத்தை முழுமையாக்குவர் கச்சியப்பர்.

## மேற்கோள்


1. வ. சுப. மாணிக்கம், கம்பர், பக். 12-13.
2. வ. சுப. மாணிக்கம், ஒப்பியல் நோக்கு, ப. 158.
3. திருமுருக கிருபானந்தவாரியார், கந்தன் கருணை, ப. 12.
4. வ. சுப. மாணிக்கம், ஒப்பியல் நோக்கு, ப. 162.
5. தொல். பொருள்., நூ. 90.
6. கோனேரியப்ப நாவலர், உபதேச காண்டம், சூராதிகளொடுக்கச் சருக்கம், செய். 15-54.
7. T. P. Meenakshisundaran, History of Tamil Literature, p. 166.
8. கிருபானந்தவாரியார், கந்தவேள் கருணை, ப. 475.
9. கம்பராமாயணம், கும்பகர்ணன் வதைப்படலம், செ. 142.

# 3

## இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்

மனித ஆற்றலுக்கு மேம்பட்டும், அப்பாற்பட்டும் நிகழுகின்ற நிகழ்ச்சிகளை மீவியல் நிகழ்ச்சிகள் என்கின்றோம். இத்தகைய நிகழ்ச்சிகளுக்குரிய காரண காரியங்கள் இயல் நிலைக்கு மாறு பட்டும், அறிவாராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகவும் இருப்பதால் இவற்றை மீவியல்நிலை எனக் குறிக்கின்றோம். மனிதநிலையைக் கடந்த அனைத்தையும் மீவியல்நிலை எனக் கொள்வதில் தவறில்லை.[1] புராணங்களில் காணப்படும் கதைமாந்தர்கள் பெரும்பான்மையும் மீவியல்புடையராகவே படைக்கப் பெறுவர். மீவியல்பு ஆற்றலுடைய தெய்வங்களும் தேவர்களும் அரசர்களும் பயிலும் இலக்கியங்கள் இயல்புக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளைத் தாங்கி அமையும். மீவியல்பில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும் மரபையும் வெளியிடவும் கற்போரைக் கவரவும் மக்கள் மனவுணர்வுக்கேற்பப் படைப்பாளர்கள் இவ்விலக்கியக் கூற்றினைப் பயன்படுத்துவர்[2]. ''நாடகங்களைவிடக் காப்பியங்களில்தான் இவ்வற்புதங்கள் அமைவதற்கு வாய்ப்பு மிகுதி. அற்புதத்தை விளைவிக்கும் கூறுகளில் 'நிகழவியலாதது' என்னும் கூறு மிகவும் சிறப்பானது,''[3] என்று அரிசுடாடிலின் 'கவிதை இயல்' மொழிகுவதால் மீவியற்கை காப்பியக்கூறுகளுள் ஒன்றென உணர்கின்றோம். உலகக் காப்பியங்களில் காணப்படுதல்போல் மீவியற்கூறுகள் தமிழ்க்காப்பியங்களிலும் பயின்றுவரினும், பெருங்காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்த தண்டி போன்ற இலக்கணிகள் இவற்றை விளக்காது சென்றமை வியப்பாகவே உள்ளது.

### தமிழ்க்காப்பியங்களில் மீவியற்கை

காய்கதிர்ச் செல்வன் கண்ணகியின் கேள்விக்கு விடையிறுத்தல்,[4] அங்கியங்கடவுள் கண்ணகியின் ஏவற்கேட்டல்,[5] சேரமன்னன் செங்குட்டுவனுக்கு விண்ணில் கண்ணகி காட்சிதருதல்[6] முதலிய மீவியற் செயல்கள் காப்பியத்தலைவியாம் கண்ணகியின் பத்தினித்தன்மையைக் காட்டத் துணைபுரிதலைச் சிலப்பதிகாரம் உணர்த்தும். மணிமேகலா

தெய்வம் மணிமேகலையை எடுத்துச்சென்று மணிபல்லவத்தீவில் சேர்த்தல், தீவதிலகையின் வரவு முதலிபன காப்பியத்தலைவியை அறச் செல்வியாக்கும் ஆசிரியரின் நோக்கத்திற்குத் துணைநிற்றலை மணிமேகலையில் காண்கின்றோம்.[7] சித்திரகூடமலையில் பரதனும் இராமனும் சந்திக்கும் களத்தில் இராமனைக் காட்டகச் செய்வதா? அல்லது நாடு சென்று அரசேற்கச் செய்வதா? என்ற சிக்கல் தோன்றுங்கால், கம்பன் அல்லியற்கையைப் பயன்படுத்தி அச் சிக்கலைத் தீர்ப்பதனை இராமகாதையில் காண்கின்றோம். "மக்களைக் கொண்டு காப்பியத்தை நடத்தமுடியாதபோது புலவன் தேவர்களைப் புகுத்தி நடத்துகின்றான்,"[8] என்று இதற்கு அறிஞர் விளக்கம் தருவர். இவற்றைப் போன்றே சீவகசிந்தாமணி, பெருங்கதை, பெரியபுராணம் முதலிய காப்பியங்களில் மீவியல்புகள் காணப்படுகின்றன.

## பிற தமிழ்க்காப்பியங்களினின்றும் வேறுபடுதல்

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, இராமாயணம் போன்ற தமிழ்க் காப்பியங்களில் மனிதர்கள் மிகுதியாகவும் தெய்வங்கள் குறைவாகவும் உலவுதலால் மீவியற்கூறுகள் அருகியே காணப்படும். தெய்வங்கள், தேவர்கள், அசுரர்கள் ஆகியோரே பெரும்பான்மையினராகவும், மக்கள் மிகச் சிறுபான்மையினராகவும் பயிலும் கந்தபுராணத்தில் தொடக்கம் முதல் இறுதிவரை மீவியற் கூறுகளே காணப்படுதலால் முன்னையவற்றினின்றும் இந்நூல் வேறுபட்டுத் தோன்றுதல் கருதற்பாலது. 'துறக்க நீக்கக்' கதையில் ஆதாம், ஏவாள் இவ்விருவரையும் தவிர அனைவரும் மீவியல் ஆற்றல் மிக்கோராக மில்டனால் படைக்கப்பட்டிருத்தலைப்போல், நம்பிராசன், வள்ளி முதலியோரைத் தவிர அனைவரும் மீவியற்றன்மையுடை யோராகவே கச்சியப்பரால் படைக்கப்பட்டுள்ளனர். மனிதர்களைத் தலைவராகக் கொண்டுள்ள காப்பியத்தில் காணும் மீவியல் நிகழ்ச்சி களினின்றும் மீவியல் ஆற்றலுள்ள தெய்வத்தினைக் கதைத்தலைமை யாகக் கொண்டிலங்கும் காப்பியத்தில் வரும் மீவியல்புகள் வேறு பட்டிருத்தல் இயல்பானதேயாகும்.

**பாவிகம்**

'கந்தபுராணத்தின் நோக்கம்' என்னும் பகுதியில் ஊழ்வினை இருப்புநிலையாகவும், தவம் வளர் நிலையாகவும், விடுதலை இறைவனது அருள்புரி நிலையாகவும் நின்று கதை இயங்குதலைக் கண்டோம். இம்முக்கருத்துக்களையும் வலியுறுத்தற்குக் கச்சியப்பர் அல்லியற்கையினைப் பயன்படுத்தும் திறத்தை இவண் காண்போம்.

**ஊழ்**

ஊழ்வினைக்கும் சாபத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. சாபமே ஊழ்வினையாக உருப்பெறுதலைக் கண்ணகியின் முன்-றோன்றிய மதுராபுரித்தெய்வம் கோவலன் முற்பிறப்பில் பெற்ற சாபத்தை விளக்கும் சிலப்பதிகாரப்பகுதிகளால்[9] உணர்கின்றோம். கந்தபுராணத்தில் தெய்வங்கள் இட்ட சாபங்களே இருப்புநிலையாக நின்று கதையை இயக்கும் வலிமைபெற்றவை. தக்ககாண்டத்தில் அமைந்துள்ள பிரமயாகப் படலத்தில் சிவனை இகழ்ந்த தக்கனுக்கும் அவனைச் சார்ந்துநின்ற குற்றத்திற்காகத் திருமால் முதலிய கடவுளர்கட்கும் நந்திதேவர் இட்ட சாபங்களே (6 : 10 : 25-27), உமை இமவான் மகளாகப் பிறத்தற்கும் திருமால், பிரமன், இந்திரன், முதலிய கடவுளர்கள் அளப்பிலா உகம் சூரபன்மனால் துயருறுதற்கும் காரணமாய் அமைவன. அவ்வாறே சூரனும் பதுமனும் இயற்றிய பிழைக்கு அறுமுகன் இட்ட சாபமே அவ்விருவரும் சூரபதுமனாகப் பிறத்தற்குக் காரணமாயதென்பது முன்னர் விளக்கப்பெற்றது. மனித அறிவுக்கு எட்டாநிலையிலிருந்து மனிதர்களை ஆட்டுவிக்கும் ஊழ்வினைக்கு மீவியல்புடைய தேவர்களும், அசுரர்களும் விலக்கல்லர் என்பதனை இதனால் உணர்கின்றோம்.

**தவம்**

அல்லியற்கையுடைய கந்தபுராணக் கதைமாந்தர்கள் இயற்றும் தவமும் வேள்வியும் இயற்கை இறந்த நிலையிலேயே புனைந்துரைக்கப்படும். மூங்கில் வடிவாக உருமாறி மறைந்த இந்திரன் சீர்காழியில்

நந்தவனம் அமைத்துச் சிவனை வழிபட்டு வருகையில், வானம் வறண்டு நந்தவனம் வாடிற்று. அதனால் பூவின்றிப் பூசனை செய்ய வியலாது வருந்திய நிலையில் நாரதன் அவ்விந்திரன் முன்றோன்றி, 'அகத்தியர் கமண்டலத்தில் உள்ள காவிரியை விநாயகரை வழிபடின் பெறுவாய்' எனக் கூறி மறைந்தான். இந்திரனது வழிபாட்டுக்கு உவந்த விநாயகர் காகவுருவிற் சென்று அகத்தியன் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியை நிலவுலகிற்குக் கொணர்வர். இச்செய்திகள் அல்லியற்கையாகவிருப்பினும் இந்திரன் தவம் (பூசனை) இடையூறின்றி முடிந்து காப்பியநோக்கம் நிறைவுபெறத் துணை நிற்பது கருதற்குரியது.

சூரபன்மன் தலைமையில் அசுரர்கள் இயற்றும் தவத்தினை 'அசுரர் யாகப் படலம்' (2 : 8) விரிவாக மீவியற்றன்மையில் விளக்கும். பதினாயிரம் யோசனைப் பரப்பை உள்வைத்து, மலைகளைப் பறித்துவந்து மதிலியற்றி, நான்கு வாயில்களை நிறுவி, அவ்வாயில்களைக் காக்கப் போர்மாதையும், சுற்றுப்புறங்களைக் காக்கக் கூளிகளையும், காளிகளையும் நிறுத்தி, ஆயிரம் யோசனை அகலமும், ஆயிரம் யோசனை ஆழமும் கொண்ட ஓமகுண்டம் அமைத்துச் சூரபன்மன் வீரவேள்வி இயற்றத் தொடங்குவன் (2 : 8 : 35-42). பதினாயிரமாண்டுகள் வேள்வி செய்தும், சிவன் எழுந்தருளிவாராமை கண்டு, விண்ணிற்சென்று தன் உடற்றசைகளை வெட்டி ஓமகுண்டத்திலிட்டும் குருதியை நெய்யாகப் பெய்தும் அமையானாய் இறுதியில் அவ்வேள்வித்தீயில் வீழ்ந்து சாம்பலானான். (2:85:91). பின்னர்ச் சிவன் தோன்றிச் சூரபன்மன் வேண்டிய வரங்களை அருளுவன்.

காசிபர் தம் குழந்தைகட்கு (சூரபன்மன் முதலியோருக்கு) உரைக்குமுகமாக அமைந்த மார்க்கண்டேயப் படலத்தில் துரவில் வீழ்ந்திறந்த விருத்தையைத் (உசத்திய முனிவரின் மகள்) தம் தவத்தால் குச்சக முனிவர் உயிர்பெறச்செய்தல், களிற்றைக் கடவுளாக்கி சுவர்க்கத்திற்கு உய்த்தல், மார்க்கண்டேயர் தவ வலியால் விதியினையும் வென்று கூற்றுவனைத் தொலைவு செய்தல்

(2 : 5 : 283-285) முதலிய இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் சுவை பெறப்புனைந்து புனைந்ரக்கப்பெறும். பாவிகத்துள் ஒன்றாம் தவத்தின் சிறப்பினை நன்கு விளக்க மீவியற்கையே கவிஞருக்கு மிகுதியாகத் துணைபுரிந்துள்ளமை நோக்கத்தகும்.

## விடுதலை (இறைவன் அருள்புரிநிலை)

முருகனை 'நேற்றைப்பாலன்' என்று எள்ளி நகையாடியதுடன், போர்க்களத்தில் பரம்பொருளே என்று துணிந்தபின்னும் ஆணவத்தால் உந்தப்பெற்றுச் சேவலும் மயிலுமாகப் பேருருக் கொண்டு அவனைத் தாக்கியவன் சூரபன்மன். அத்தகையவனையும் தூயனாக்கி அருள் புரிந்தவன் முருகன். 'கந்தபுராணத்தின் நோக்கம்' என்னும் பகுதியுள் இச்செய்தி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தீயவனைத் திடீரென்று தூயனாக்க இயலாது. தண்டித்தோ அறிவுரை பகர்ந்தோ படிப் படியாகத் தீயவனைத் திருத்தித் தூயனாக்குதலே நடப்பியல். பத்து நாட்கள் தன்னுடன் கடுஞ்சமரியற்றிய சூரபன்மனை முருகன் தன் அருள்கெழு பார்வையால் தூயனாக்கியது காப்பியத்தலைவனின் அருளை நிலைநாட்டுதற்கும் காப்பியப் பாவிகத்தினை வலியுறுத் தற்கும் கச்சியப்பர் மேற்கொண்ட அல்லியற்கை எனலாம்.

## கதை நீட்சிக்கு மீவியற்கை

சாபங்கள் (ஊழ்) காப்பியக்கதைக்கு அடிப்படையாக அமைதல் போல் தம்மை வழிபடுவோருக்குத் தெய்வங்கள் அளிக்கும் வரங்களும் கதைநீட்சிக்குத் துணை புரிதலும்உண்டு. 'செய்தவமில்லோர்க்கும் தேவர் வரங்கொடார்'[10] என்னும் இளங்கோவடிகள் வாக்கினால் தவமும் வரமும் தொடர்புடைமை பெறப்படும். பல்லாயிரமாண்டுகள் தவமியற்றித் தன்னையே வேள்விப்பொருளாக ஆகுதி செய்த பின்னரே சிவன் தோன்றிச் சூரபன்மனுக்கு வரமளிப்பன். அண்டங்கள் ஆயிரத்தெட்டினையும் நூற்றெட்டு உகம் ஆளும் பேறு, அவ்வண்டப் பரப்பெங்கும் ஏகும்வண்ணம் இந்திரஞாலத்தேர், அவ்வண்டங்களனைத்தையும் குறைவின்றி ஆள ஆணைச்சக்கரம்,

அரியூர்தி, எந்நாளும் அழிந்திடாத ஏறமிகு வச்சிர யாக்கை முதலியன (2 : 9 : 21-23) சிவன் சூரபன்மனுக்கு நல்கிய மீவியற்கை வரங்களாகும். இத்தகு வரங்களின் ஊற்றமே இந்திரன் முதலிய தேவர்களை அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்த சூரபன்மனுக்குத் துணை புரிந்தது. இவ்வாறு கொடுங்கோன்மையின் உச்சநிலையில் நிற்கும் சூரபன்மனைத் தடிய முருகன் தோன்றுதல் முதலிய பிற கதைநிகழ்ச்சிகளின் ஓட்டத்திற்குச் சிவன் தந்த வரங்கள் அடித்தளமாக அமைதல் குறிக்கத்தகுவது.

## முருகனது பேராற்றல்

கந்தபுராணத்தில் தலைமையும் முழுமுதற்றன்மையும் பெறும் கந்தக்கடவுளின் பேராற்றலைப் புலப்படுத்தும் வகையில் மீவியற்கைச் செய்திகள் கவிஞரால் மிகுதியாக விளம்பப்படும். முருகனைத் தோற்றுவிக்கும் முயற்சியாகச் சிவனது தொல்லைத் திருமுகங்களிலுள்ள நெற்றிக்கண்டொறும் தோன்றிய தீப்பொறிகளின் ஆற்றலை விளக்கும் பகுதிகளில் (1:11:45–49) அல்லியற்கை மிக்கிருப்பினும், தோன்றும் நிலையிலேயே முருகனது பேராற்றலைப் பிற கடவுளர் உணர இவை துணைநிறகும். இளம்பருவத்தில் முருகன் இயற்றும் திருவிளையாடலை மீவியற்கை நிலையில் ஒரு படலமாகவே (1:14) பாடி முருகனது பேராற்றலைப் புலப்படுப்பர் கச்சியப்பர். சூரபன்மனைத் தொலைவுசெய்து தமக்குப் புதுவாழ்வளிக்கத் தோன்றிய முருகன்மீது இந்திரன் முதலிய தேவர்கள் நம்பிக்கை கொள்வதற்கும் இத்திருவிளையாடல் நிகழ்ச்சி அடிப்படையாகத் திகழும். நாரதர் நடாத்திய வேள்வியில் 'தகர்' தோன்றுதல், அத்தகர் யாண்டும் சென்று விண்ணவருக்கு இன்னல் விளைத்தல் (1:15:6-8) முதலியன இயற்கை இறப்பப் புனையப் படினும் அச்செச்சையினை அடக்கி ஊர்தியாகக் கொள்ளும் மாவீரனாக முருகனைக் காணுதற்கு இவ்வல்லியற்கை பயன்படுதல் கருதத்தக்கது.

முருகனது திருப்பெருவடிவம் (விசுவரூபம்) கந்தபுராணத்துள் ஈரிடங்களில் மீவியற்றன்மையில் ஆசிரியரால் வருணிக்கப்பெறும். அண்டங்களனைத்தையும் தம்முள் அடக்கிக்கொள்பவனாக முருகனை வருணிப்பதன் மூலம் தேவர்களும், அசுரர்களும் அவனது

பேராற்றலையும் முழுமுதற்றன்மையையும் உணரும்படி செய்வர். 'நிலவுலகும் பாதலமும் திருவடிகளாகவும், மாதிரவரைப்பு இருதோள்களாகவும், வானம் முதலிய மேலுலகங்கள் அனைத்தும் திருமுடிகளாகவும், முச்சுடரும் கண்களாகவும், நடுவிடமெல்லாம் திருமேனியாகவும், வேதங்கள் திருவாயாகவும், ஞானங்கள் திருச்செவிகளாகவும், மால், அயன் இருவரும் இருபக்கங்களாகவும், உமையம்மை சிந்தையாகவும், சிவபிரான் உயிராகவும் கொண்டு முருகன் தன் பேருருவினை இந்திரன் முதலியோருக்குக் காட்டுவன்' (1:14:89). இப்பெருவடிவை அவனருளால் முழுதும் கண்டு இந்திரன் முதலியோர் போற்றிப் புகழ்வர் (1:14:91–99). சூரபன்மனது இன்னலுக்குட்பட்டு மனந்தளர்ந்து தன்னம்பிக்கை இழந்த நிலையிலிருக்கும் இந்திரன் முதலியோர் எதிர்காலத்தில் இனிய வாழ்வுண்டு என நம்பித் தெளியவும், முருகனைப் பரம்பொருளென மதித்துப் பத்தி செய்யவும் இவ்வருணனை துணைநிற்றல் கருதற்குரியது.

தன்னுடன் நான்கு நாள்கள் தொடர்ந்து அமரியற்றிய சூரபன்மனுக்கு முருகன் காட்டும் திருப்பெருவடிவைக் கச்சியப்பர் பல பாக்களில் விரித்துரைப்பர். புவனம், அண்டம், உயிர்கள் முதலிய அனைத்தும் உள்ளடக்கித் தோன்றிய அப்பெருவடிவை ஆசிரியர் மீவியல்பு மீக்கூர அடிமுதல் முடிவரை (பாதாதிகேசம்) வருணிக்கும் பாங்கு கற்போருக்கு வியப்புணர்ச்சியைத் தரும். 'அகவடியில் வரைகளும், புறவடியில் கடல்களும், திருவடி விரல்களில் இடியும் நாள்களும் கோள்களும், பரட்டில் வருணன் குபேரன் நிருதி முதலியோர்களும், கணைக்கால்களில் முனிவர்களும் சிந்தாமணி முதலிய மணிகளும், முழந்தாளில் விஞ்சையர் வானவர் முதலியோரும், தொடையில் இந்திரனும் அவன் மைந்தனும், தொடை முதலில் கூற்றுவனும் காலனும், கடிதடத்தில் அசுரர்களும், பக்கங்களில் தேவர்களும், மூலாதாரத்தில் நாகர்களும், குறியில் அமிர்தமும், உந்தியில் உயிரினங்களும், மார்பில் கலைகளும், முப்புரிநூலில் ஞானமும், உரோமத்தில் அண்டங்களும், அகங்கையில் அகிலபோகங்களும், தடந்தோள்களில் திருமாலும் விரிஞ்சனும், செங்கை விரல்களில் தேவப்பெண்டிரும், கழுத்தில் ஒலித்திரளும் அக்கினியும், மணிவாயில் வேதங்களும், பற்களில் எழுத்துக்களும், நாவில் சிவாகமங்களும், இதழில் மனுவின்

விஞ்சைகளும், மூக்கில் அனிலனும், விழிகளில் சோமனும் கதிரவனும், செவியில் திசைகளும், திருநுதலில் குடிலையும் (பிரணவம்), சென்னியில் பரமான்மாவாகிய பரசிவமும் பொருந்தித் தோன்றும்வண்ணம் பலகோடிப் பகலவன் ஒளியுடன் முருகன் தன் பேருருவைச் சூரபன்மனுக்குக் காட்டுவதாக நவில்வர்' (4:13:422–428). இப்பெருவடிவை முருகன் அருளால் கண்டுவந்த சூரபன்மன்,

*"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்*
*பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்*
*மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்*
*மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ" (4:13:433)*

என உணர்ந்து, உளந்திருந்தி முருகனது முழுமுதற்றன்மையை ஏற்றுக் கொள்ளுதற்கும், தனக்கு வரம் நல்கிய சிவனும் இம்முருகனும் ஒன்றென உணர்தற்கும் (4 : 13 : 434), பகையெனக் கருதிவந்த முருகனைப் பத்தியுணர்வுடன் போற்றுதற்கும் (4:13: 441-443) இத்தகு மீவியல் வருணனைகள் அடிப்படையாக அமைந்துள்ளன. "அறிவியல் வளர்ந்துவிட்ட தற்கால இலக்கியங்கள் எந்த அளவு நிகழ்வை அடிப் படையாக்கி இயல்பு மீறாது அமைகின்றனவோ, அந்த அளவு பழம் இலக்கியங்கள் இயல்புக்கு எதிரான பண்புகள் பொருந்திக் காணப் படுகின்றன,"[11] என்பார் கூற்றும் இவண் கருதத்தகும்.

முருகனது வடிவங்களில் ஒன்றாகக் கருதப்பட்டு முருகனடியார் களால் வழிபடப்பெறும் பெற்றியுடையது அவன் கரத்திலங்கும் வேல். வீரவாகுதேவர் அவ்வேலினை முருகனாகவே கண்டு தொழும் தகைமையினை 'முருகன் அழகுத் தோற்றங்கள்' என்னும் பகுதியில் விரிவாக விளக்கப்படும். பகைவரின் மீது குறிபார்த்து எறிதற்குப் பயன்படும் ஒரு கருவியாக வேலினைக் காட்டுதல் நடப்பியல். முருகனது சத்தியாக மிளிரும் இவ்வேல் தொடக்கமுதல் இறுதிவரை அல்லியற்றன்மையிலேயே செயற்படுதலை இந்நூலுள் காண் கின்றோம். தாரகன் வதைப்படலத்தில் (1 : 20) 'முருகனது கட்டளையின் வண்ணம் தாரகன் மார்பையும் கிரவுஞ்சவெற்பினையும்

ஊடுருவிச்சென்று அவர்களின் உயிரைக் குடித்த வேற்படை அவ்வெற்பினுள் துஞ்சும் வீரவாகு முதலிய வீரர்களை எழுப்பிய பின்னர், வானத்தின்கண்ணுள்ள கங்கையில் தோய்ந்து புனிதம் பெற்று மீண்டும் கந்தன் கரத்தில் தொன்மைபோல் இருந்தது' (1 : 20 : 180–186) என மொழிகுவர். சூரபன்மன் வதைப்படலத்தில் (4 : 13) முருகன் ஏவலின்படி சூரபன்மனைத் தடியச் செல்லும் வேற்படையின் செயல்கள் மீவியற்கையிலேயே கவிஞரால் இயம்பப் பெறும். ஆயிரங்கோடி அருக்கராகத் திகழ்ந்து தோன்றித் தீயழற் சிகழிகளைக் கான்று சென்று, சூரபன்மன் கொண்ட இருள் வடிவினை நீக்கியதாகவும் (4 : 13 : 464 - 465), கடலுள் நெடும்பெரும் மாமரமாகி நின்று ஆர்த்த அச்சூரபன்மனைச் சினந்த அவ்வுடம்பிடித் தெய்வம் உருத்திரமூர்த்தியைப்போல் தோன்றி அம்மாமரத்தைத் தடிந்ததாகவும் (4 : 13 : 487), இறைவன் தந்த வரத்தினால் அழியாத சூரபன்மன் மீண்டும் அவ்வேற்படையுடன் போரிடக் கருதி ஆர்த்தகாலை, அவனுடைய உரங்கிழித்து அங்கத்தை இருகூறாக்கிக் கடலில் வீழ்த்தியபின்னர், அங்கியின் வடிவம் நீங்கி அருளுருக்கொண்டு, 'வான்தோய் கங்கையில் படிந்து கந்தவேளின் கரத்தில் வீற்றிருந்ததாகவும்' (4 : 13 : 488-491) பல பாக்களில் விரித்துரைப்பர். செவ்வேளின் செவ்வேலைக் கந்தக்கடவுளாகவே காட்டவிருக்கும் கவிஞர் அவ்வுடம்பிடித்தெய்வத்தின் பேராற்றலை இத்தகு மீவியற்செயல்களால் விவரித்தல் கருதத்தக்கது.

முருகனது திருவிளையாடல், அவனது பேருருத்தோற்றம் வேற்படையின் வீரச்செயல் முதலியன இயல்பியலுக்கு ஒவ்வாதெனினும் மக்களின் நம்பிக்கைக்கு இடமளித்துக் கச்சியப்பர் இயற்கை இறந்த நிலையிலேயே இவைகளைக் கிளந்து செல்வர். "சிற்சில நம்பத்தக்க ஆனால் நடைமுறைக்கு இயலாத நிகழ்ச்சிகளைக் காப்பியப்புலவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்,"[12] என்பார் கருத்தும் இவண் கருதத்தகும். முருகனை முழுமுதற்பொருளாகக் காட்டும் கந்தபுராண நோக்கந்திற்கும் இவைகள் துணைபுரிதல் குறிக்கத் தகும்.

**மந்திரமும் உருமாறுதலும்**

மீவியற்கைக் கூறுகளும், மீவியற்றன்மை படைத்த கதை மாந்தர்களும் பயிலும் இந்நூலுள் மந்திரங்களும் அவற்றின் பயன்களும் ஆங்காங்கே தொலைக்கல் போல் காணப்படும். வயந்தமாலை வடிவிற்றோன்றி மயக்கவந்த இயக்கியிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள 'வஞ்சம் பெயர்க்கும் மந்திரம்[18]' கோவலனுக்குப் பயன்படுதலைச் சிலப்பதிகாரம் சுட்டுதலால் அக்காலச் சமுதாயத்தினருக்கு மந்திரத்தில் நம்பிக்கையிருந்தமை பெறப்படும்.

நாற்படைகளுடன் தம்பியர் புடைசூழ வீரவேள்வி இயற்றப் புகும் சூரபன்மனைச் சந்திக்க விழையும் சுக்கிரர் 'மண்ணில் உயிரை' வசிகரிக்கும் மந்திரமொன்றை (வசியமந்திரம்) விதிப்படி மனத்தில் எண்ணிச் செல்லுதல் (2:8:23), வேள்வி புரியும் சூரபன்மன் வாயில் களையும் சுற்றுப்புறங்களையும் காக்கும்பொருட்டு வீரலக்குமி, பூதம், பேய், காளி முதலியவர்களை மந்திரத்தால் அழைத்தல் (2:8:39-41), சயந்தனைத் தேற்றுதற்குச் செல்லும் வீரவாகு குமரக்கடவுளை மனத்தில் உன்னி, அவனது ஆறெழுத்து மந்திரத்தை அன்பினால் ஓதி காவல்புரியும் அவுணர்களை அறிவு மயங்கி உறங்கச் செய்தல் (3:11:4-5) முதலியவற்றால் மந்திரக்கலையின் பயன்பாட்டினைச் சுட்டுப. காசிப்பதியிலுள்ள மணிகன்றிகையில் சிவலிங்கம் நிறுவிப் பூசனை புரியும் மார்க்கண்டேயர் 'மிருத்யுஞ் செயமந்திரத்'தால் சிவனை வழிபட்டதிறத்தை,

*'' அந்தக் காலத் தெம்முயிர் காப்பான் அரனுண்டால்*
*வந்தக் கூற்றன் என்செய்வ னென்னா வடதொன்னூல்*
*சந்தப் பாவிற் போற்றுதல்''* (2:5:256)

செய்ததாகப் புகலுவர். பைந்தமிழ் முனிவன் காசிநகர் புக்கமையினை,

*" அந்தம தடைந்தோர்க் கங்கண் அருளினால் தனதுமுல*
*மந்திரம் உணர்த்தும் முக்கண் வானவன் காசி புக்கான் "*
*(2:25:2)*

எனக் குறிப்பிட்டுக் காசிப்பதியில் இறந்தோர்க்கு இறைவனே திருவைந்தெழுத்தை உணர்த்துவன் எனவுரைப்பர்.

உருமாறுதல், மறைதல் முதலிய மீவியல்புகள் மந்திர ஆற்றலின் துணையால் அவுணர்கட்கும் தேவர்கட்கும் இயற்கையாய் அமைந்த பண்புகளாகும். முருகனுடன் சமரியற்றும் சூரபன்மன் மாயமந்திரத்தைப் பன்னி (செபித்து) மாயிருள் வடிவங் கொள்ளுதல் (4:13:456), திருமால் பற்பலவடிவு கொண்டு தன்னுடன் பொருகையில் அதற்குத்தக பல்வேறுருக் கொள்ளுதற்குத் தன் தாய் (மாயை) அருளிய மந்திரத்தைத் தாரகன் உன்னுதல் (2:12:88), இரண்டாம் நாட்போரில் முருகனிடம் தோற்றுத் தனியனாய் நின்ற சூரபன்மன் மாயையின் மந்திரத்தால் மறைந்து மகேந்திரக்கோயில் புகுதல் (4:4:325) முதலியன கந்தபுராணக் கதைமாந்தர்கள் மந்திரவலியால் உருமாறுதலைக் காட்டும். முருகனது ஏவலால் தூது செல்லும் வீரவாகு கந்தமாதனத்தில் முருகனருளால் பேருருக்கொண்டு நின்றமையும் (3 : 1 : 18 - 33) மகேந்திரநகர் புகும் அம்மாவீரன் குமரவேள் தாளினைச் சிந்தை செய்து அணு உருக்கொண்டமையும் (3 : 8 : 54) இறை பத்தியால் இறையடியவர்கள் பெறும் உரு-மாற்றத்தை எடுத்துக்காட்டும்.

## சமுதாய மேம்பாட்டிற்குரிய மீவியற் கற்பனைகள்

எக்குறையுமில்லாத நல்லதொரு சமுதாயம் அமையவேண்டும் என்ற ஆசையால் உந்தப்பெற்றுக் கச்சியப்பர் தாமே படைத்துக் கொண்ட மீவியற் கற்பனைகள் பலவற்றைத் திருநகரப் படலத்தில் காண்கின்றோம். எண்வகைப் பொதுக்கள், ஒன்பதுவகை பொய்கைகள், பத்துவிதமான கற்கள், பதினொருவகையான மன்றங்கள் காஞ்சி மாநகரில் திகழ்தலையும் அவற்றின் பயன்களையும் விவரிப்பர் (திரு நகர: 96-101). நஞ்சினை நீக்குதல், மெய்ப்பிணி மாற்றுதல், இறந்த

வர்களை எழுப்புதல், பொருள் போக்கடித்தவர்கள் வந்து கேட்கின் இவ்விடத்து உள்ளதென்று உரைத்தல் முதலியவற்றை இயற்றும் கற்களும், பிறன்மனை விழைந்தோர், கணவனைப் பிழைத்தோர், அடிகளை இகழ்ந்தோர் அணுகின் அவர்களை ஊமையாக்கும் மன்றங்களும் மீவியற்கற்பனையெனினும் கவிஞர் காண விழையும் கனவுலகமாக (Utopia) அவற்றைக் கொள்வதில் தவறில்லை. இளங்கோவடிகள் இந்திரவிழவூரெடுத்த காதையில் மீவியற்றன்மையில் மொழியும் ஐவகை மன்றங்கள்[14] பற்றிய செய்திகளும் இவண் நினையத்தகும்.

**முடிவுரை**

கந்தபுராணத்தில் அல்லியல்புடைய கதைமாந்தர்களே மிகுதியாகப் பயிறலால் காப்பியக்கூறுகளுள் ஒன்றெனக் கருதப்பெறும் மீவியல் நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தலில் கச்சியப்பர் பிற தமிழ்க் காப்பியங்களினின்றும் வேறுபடுவர். காப்பியத்தின் பாவிகமாகிய ஊழ், தவம், விடுதலை ஆகியவற்றை வலியுறுத்தற்கும், கதை நீட்சிக்கும், காப்பியத் தலைவனாம் முருகனது முழுமுதற்றன்மையினை நிறுவிக் கற்போரைப் பத்தியுணர்வில் திளைக்கச்செய்தற்கும், எக்குறையுமில்லாத ஏற்றதொரு சமுதாயம் அமையவேண்டும் என்னும் தம் எண்ணத்தை வெளியிடவும் கச்சியப்பர் மீவியற்கூறுகளை மிகுதியும் பயன்படுத்தியுள்ளார்.

## மேற்கோள்

1. அ.பாண்டுரங்கன், தமிழ்க் காப்பியங்களில் மீவியல் நிலை, ப. 1. தமிழ் இலக்கிய வகைக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
2. ச. வே. சுப்பிரமணியன், காப்பியப் புனைதிறன், ப. 153.
3. அ.அ. மணவாளன், அரிஸ்டாடிலின் கவிதை இயல், ப. 120.
4. சிலப்பதிகாரம், 18 : 50-53.
5. ————————, 21 : 45-52.
6. ————————, 29 : 10.
7. அ. பாண்டுரங்கன், தமிழ்க் காப்பியங்களில் மீவியல் நிலை, ப. 12.

8. வ. சுப. மாணிக்கம், கம்பர், ப. 79.
9. சிலப்பதிகாரம், பதிகம், 43-54 ; 23 : 138-178.
10. ————, 9 : 17.
11. ச. வே. சுப்பிரமணியன், காப்பியப் புனைதிறன், ப. 153.
12. தா. வே. வீராசாமி, 'பெரியபுராணத்தில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்', வையை, மலர் : ஒன்று, ப. 226.
13. சிலப்பதிகாரம், 11 : 194-200.
14. ————, 5 : 111-140.

# 4

# சமயக் கருத்துக்கள்

பெரியபுராணத்தைப் போல் சிவபெருமானது திருவருட் சிறப்பையும், சிவனடியாரது அன்புத் திறத்தையுங் கூறுவதும், தேவாரம், திருவாசகம் போல் பத்தி விளைவிக்குந் தோத்திரப் பாக்கள் நிரம்பப் பெற்றதும், சாத்திர நூலாகிய சிவஞான சித்தியாரைப் போல சைவசமய உண்மையை நாட்டிப் புறச் சமயங்களைக் கண்டிப்பதும் கந்தபுராணத்தின் இயல்பாகும்.[1] தொண்டர்தம் பெருமையைக் கூறும் திருத்தொண்டர் புராணம் பெரியபுராணம் ஆயிற்று. இறைவன் பெருமையைக் கூறும் கந்தபுராணமோ புராண நன்னாயகம் ஆயிற்று[2] என்றும், கந்தபுராணம் போல் அவ்வளவு சிறப்பாகப் பிறிதொரு புராணம் சைவசித்தாந்தம் கூறுவதில்லை; முறைப்படுத்தப்பட்ட சைவசித்தாந்த கருத்துக்களையே இப்புராணம் ஆங்காங்கே புகலுகின்றது[3] என்றும், இப்புராணத்தைத் திருமுறை வரிசையிலும், கச்சியப்பப் பெருமானைக் குரவர்கள் வரிசையிலும் வைத்துப் போற்றுவது ஆன்றோர் வழக்கம்[4] என்றும் அறிஞர்கள் கருத்துரைப்பர். கந்தபுராணப் பண்பாட்டில் திளைத்தவர்கள் நுவலும் இக்கருத்துக்களால் கந்தபுராணம் சமயக் கருத்துக்களைக் கிளக்கும் நூலென்பது பெறப்படும்.

சைவநெறிக்கு மாறின்றி முருகனை முழுமுதற்கடவுளாக உயர்த்துவது கச்சியப்பரின் நோக்கமாதலாலும், சைவ சமயத்தின் தலைமைக்கடவுளாம் சிவனொடு முருகனை வேறுபாடின்றி ஒப்பக் காண்டலாலும் இந்நூல் மூலம் சைவசமயத்தை நிலைநாட்டுதலே அவர் கருத்தென உணர்கின்றோம். ''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' (பாயிரம் :5) என்ற வாழ்த்துக் குரலுடன் நூல் தொடங்குவதும் இவண் கருதற்பாலது. சைவ நாயன்மார்கள் அருளிய அருட்பாக்களில் தோய்வும், சந்தான குரவர்கள் அருளிய சாத்திர நூற்புலமையும் இணைந்து தோன்றும் வண்ணம் கச்சியப்பர் கந்தபுராணத்தை யாத்துள்ளார்.

உணர்ச்சிக்கூறுகளும், செயற்கூறுகளும், அறிவுக்கூறுகளும் ஒன்றுபட்டு இயங்கும்போதுதான் நிறைவான சமயம் தோன்றும்.[5] உணர்ச்சிக்கூறாம் பத்தித்திறத்தையும், செயற்கூறாம் வழிபாட்டு நெறிமுறைகளையும், அறிவுக்கூறாம் மெய்ப் பொருட் கருத்துக்களையும் கதைமாந்தர் வாயிலாகவும், கவிக் கூற்றாகவும், கதை அமைப்பானும், கதை நிகழ்ச்சிகளானும் கச்சியப்பர் உணர்த்தும் தன்மையினை இவண் காண்போம்.

## 1. பத்தி உணர்வு

ஆண்டவனைக் குறித்து அடியார் மேற்கொள்ளும் மெய்யன்பே 'பத்தி'யாகும். தமிழ்நாட்டிற்றோண்டிய மெய்யுணர்வுக் கவிஞர் கள் காலத்திற்றான் பத்தி இயக்கம் இந்திய நாட்டில் பெருமளவில் பரவத் தொடங்கிற்று.[6] பத்தியாம் ஆரணங்கு தன்னைத் திராவிட நாட்டில் பிறந்தவள் என்று கூறிக்கொள்வதாகப் பாகவத மகாத்மியம், பத்தும புராணம் என்னும் இருநூல்களும் பாடுதலால்[7] 'பத்தி'யின் தோற்றம் தென்னகமே என்பது புலனாகும். பாடாண் திணைக்குரிய அறுவகை வாழ்த்தைச் சார்ந்த கடவுள் வாழ்த்தினைத் தொல்காப்பியர் பத்தி இலக்கியத்திற்குத் தரும் வித்தாகக் கொள்ளலாம்.[8] பத்தி நெறி அறிவித்துச் சிவமாக்கித் தன்னை ஆட்கொண்டதாக மாணிக்கவாசகர் பாடுதலால்[9] இறைவனை எய்தும் சமய வழிகளில் பத்திநெறியும் ஒன்றென உணர்கின் றோம். சமயக் கருத்துக்களை அறிவின் துணைகொண்டு விளக்குவன சாத்திரங்கள்; உணர்வின் துணைகொண்டு உணர்த் துவன பத்திப்பனுவல்கள். ஆண்டவனை அறிவின் துணையால் ஆராய்தலைக் காட்டினும் அன்பின் துணையால் அனுபவிப் பதில் ஆன்றோர்கள் பெரிதும் ஈடுபட்டிருந்த காரணத்தால் தமிழில் பத்திநூல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. "உலக மொழிகளில் பத்தி இலக்கியம் என்றால் முதலிடத்தைத் தமிழும், இரண்டாமிடத்தை ஈப்ருவும் மூன்றாமிடத்தை சமற்கிருதமும் பெறுகின்றது,"[10] என்பார் கருத்தும் இவண் நினையத்தகும். "இன்ப வழிப்பட்டு நிற்பதாகிப் பத்தி மார்க்கமே அறிவின் வழிப் பட்டு நிற்பதாகிய ஞானமார்க்கத்தினும் சிறந்தது,"[11] எனக்

கருத்துரைப்பர். மறைமலையடிகளார்.

கச்சியப்பர் முன்னோர் நெறி பற்றித் தம் நூலுள் பத்தி-யுணர்வைப் பரக்க வெளிப்படுத்துவர். வாமதேவ முருகப்பட்டாரகர் தாம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார் புராணத்துள் கந்தபுராணத்தில் காணப்படும் பத்திச்சுவையினை, "யார்க்கும் பத்தியை மெய்ம்மை யோடு பாவித்து நிற்குமன்றே"[12] எனச் சுட்டுவதும் நோக்கத்தக்கது. ஆசிரியர்தம் இறையனுபவம் நூல் முழுவதும் இழைந்தோடினும் சில அலகுகளால் நாம் அவற்றைக் காண்போம்.

## அ) கதைமாந்தர் வாயிலாகப் பத்தி உணர்வு

இறைவனை அனுபவிக்கும் நிலைகள் பல. அவனுடைய திருநாமங்களைச் சொல்லி அனுபவித்தல், திருக்கல்யாண குணங்களைச் சொல்லி அனுபவித்தல், வடிவழகைச் சொல்லி அனுபவித்தல் என்றிப்படிப் பலவகைப்பட்டிருக்கும் பகவதனுபவம் என்பர்.[13] கதைமாந்தர் கூற்றுக்களில் இத்தகைய துய்ப்புணர்வு (அனுபவம்) தோன்றுமாறு முருகனைப் பலவிடங்களில் கவிஞர் துதித்துள்ளார். முருகன் திருவிளையாடலை உணராது அவனுடன் மலைந்து மடிந்த இந்திரன் முதலியோர் மீண்டும் அவனருளால் உயிர்த்து எழுந்தகாலைக்,

*"கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை யுமைதன்*
*மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை புனையுந்*
*தந்தைநம ஆறுமுக வாதிநம சோதிநம தற்ப ரமதாம்*
*எந்தைநம என்றுமிளை யோய்நம குமாரநம"* (1:14:82)

என்று தலைபன்புடன் தொழுநதாகவும், போர்க்களத்தில் சூரனுக்கு அஞ்சி இரங்கும் தேவர்கள் முருகனை,

*"நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞானநா யகனே ஓலம்*
*பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்*

*எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்*
*கண்ணுதற் பெருமான் நல்குங் கடவுளே ஓலம் ஓலம்"*

*"தேவர்கள் தேவே ஓலம் சிறந்தசிற் பரனே ஓலம்*
*மேலவர்க் கிடியே ஓலம் வேற்படை படைத்தாய் ஓலம்*
*பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்*
*மூவரு மாகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்" (4:13:460, 461)*

என அடைக்கலம் வேண்டிக் கதறுவதாகவும் பாடும்போது முருகனது திருப்பெயர்களை அடுக்கிக் கூறிப் பத்தியுணர்வினை மிகுவிப்பர்.

*"முருகன் குமரன் குகன்என் றுமொழிந்து*
*உருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்"*[14]

என முருகனிடம் வேண்டும் அருணகிரியார் வாக்கும் ஈண்டு கருதத்தக்கது.

முருகனது திருப்பெயர்களில் படிப்போர்க்குப் பத்தியுணர்வு தோன்றும் வண்ணம் தக்க அடைமொழிகளைப் புணர்த்திப் பாடுதல் ஆசிரியர்தம் இயல்பாம். (பின்னிணைப்புக்களில் 'முருகன் திருப்பெயர்கள்' காண்க.) "கற்போர் கதைச்சிறப்பினால் திருவருளை மறக்க நேருங்கால், உறங்குபவனை எழுப்புதல் போல் மெய் பொடிப்ப மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் சொரிவிக்கும் இனிய அடைமொழிகள் சார்ந்த குமாரக் கடவுளது திருநாமங்கள் அடிக்கடி ஒலித்து நிற்கும்"[15] எனக் கந்தபுராணங் குறித்து அறிஞர் நுவலும் கருத்து இவண் நினையத்தகுவது.

ஒன்பான் வீரருள் தலைவனாகிய வீரவாகுவைத் தொடக்க முதல் இறுதி வரை பத்திக்கோட்டில் பிறழாது செயற்படுவோனாகப் படைத்துக் காட்டுவர். பகைவன் நாட்டிற்குத் தூது செல்லும் வீரவாகு பேருருக் கொண்டு நின்று கந்தனை அகங்குளிர வாழ்த்தியதை,

"ஆவதோர் காலை எந்தை ஆறிரு தடந்தோள் வாழ்க
மூவிரு வதனம் வாழ்க முழுதருள் விழிகள் வாழ்க
தூவுடை நெடுவேல் வாழ்க தொல்படை பிறவும் வாழ்க
தேவர்கள் தேவன் சேயோன் திருவடி வாழ்க என்றான்"
(3 : 1 : 49)

என்று உவந்து பாடி முருகனது வடிவழகில் ஈடுபட்டுள்ள அவன் உள்ளுணர்வைச் சுட்டுவர். அவன் வடித்த அன்புக் கண்ணீர் கடல்நீரின் உவர்ப்பை மாற்றியதாகவும், அவன் மேனி முழுதும் உருத்திராக்க மணிபோல் பொடிப்பின் பொம்மல் தோன்றியதாகவும் (3 : 1 : 50) உவந்துரைப்பர். மெய்ப்பாடுகளாக வெளிப்படும் இத்தகு பத்தி உணர்வை வங்கநாட்டுப் புலவர்கள் சுவைகளுள் ஒன்றாக ஏற்றுக் கொண்டிருத்தலும்[16] இவண் கருதத்தகும். பகைவர் முன்னர் நிற்கும்பொழுதும், போர்க்களத்தில் தன்னை எதிர்க்கும் பகைவர் மீது படைக்கலன்களை ஏவும் பொழுதும், பகைவரின் மாயத்தால் சிக்குண்ட நிலையிலிருந்து விடுதலை பெற்று உவந்த போதும் முருகனை வாழ்த்த மறவாத வாயுடையவனாகவும் (3 : 12 : 46; 4 : 3 : 265; 4 : 4 : 114; 4 : 7 : 113; 4 : 8 : 213; 4 : 11 : 73; 4 : 11 : 129; 4 : 11 : 141; 4 : 3 : 352; 4 : 13 : 346) ஒரு நாள் கூட முருகனைப் பிரிந்து வாழ முடியாதவனாகவும் (3 : 18 : 4-5) வீரவாகு காட்சி தருகின்றான். "அவன் (முருகன்) தாளின் பிரியமொன் றேயுள்ள வீரன்"[17] என வீரவாகுவை வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் போற்றுவதும் கருதத்தகும். பானுகோபனைத் தடிந்து வஞ்சினம் முடித்த வீரவாகுவைப் பாராட்டிய முருகன், "வேண்டுவ தொன்றனை விரைந்து கேண்மதி நல்குதும்" என்ற பொழுது,

"கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவினும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்"

*"அந்த நல்வரம் முத்தியின் அரியதொன் றதனைச்*
*சிந்தை செய்திடு தவத்தரும் பெறுகிலர் சிறியேன்*
*உய்ந்தி டும்வகை அருள்செய வேண்டும்" (4:11:154,155)*

என வீரவாகு விளம்புதலும், சூரபன்மனை வென்று தம்மைக் காத்த முருகனை வழிபட்ட தேவர்கள்,

*"ஒன்றினி அளிப்பதுள தின்னடியம் யாக்கை*
*நின்றிடு பகற்றுணையும் நின்னிரு கழற்கண்*
*மன்றதலை யன்புற வரந்தருதி எந்தாய்" (4:16:27)*

எனக் கேட்பதும், மனந்திருந்திய தக்கன் சிவனைப் பூசனை புரிந்து, "நின்னிடைத்தகும்பரிசு அன்பினைத் தருதியால்" (6 : 22 : 6) என வேண்டுதலும் கந்தபுராணக் கதைமாந்தர்கள், "கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின"[18] ராகத் திகழ்தலைக் காட்டும்.

*"ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்*
*ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே"[19]*

என்னும் மாணிக்கவாசகரின் திருவாசகமும்,

*"காட்டில் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்*
*வீட்டில் புகுதல் மிகவெளிதே"[20]*

என்னும் அருணகிரியார் வாக்கும் ஈண்டு நினையத்தகும்.

'மூவாயிரவருடன் பொரும் பொழுது தனக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்கக் கருதிய விசயன் முருகப்பிரானன்றி இவ்விடத்தில் வேறொரு துணையில்லை எனத் துணிந்து, அருவி நீர் வழியும் கண்ணுடன் கந்தவேள் திருவடிகளை அகங்குழைந்து சிந்தை செய்து வைரவப் படைப் பெற்றதாக' மொழிகுவர் (4 : 9 : 74-81).

'மெய்மறந்து நினைந்து உற்றவிடத்து உதவும் விடையவர் தாள் தம்மனங்கொண்டுணர்ந்து' அவனருளால் மாங்கனி பெற்ற புனிதவதியார் வரலாறும்[21] இவண் கருதற்பாலது.

சிவனையும், முருனையும் இந்திரன், பிரமன், திருமால் முதலியோர் ஏத்தித்துதிக்கும் பகுதிகள் பத்தி இலக்கியமாம் திருமுறைகளில் கச்சியப்பர் கொண்டுள்ள ஈடுபாட்டை உணர்த்தும். காமவேளின் சுணையால் பயனின்மை உணர்ந்த நான்முகன் முதலியோர் 'ஆண்டவனைப் புணர்ப்பினால் (தந்திரத்தால்) வெல்ல முடியாது. அவனை ஏத்தல்செய்வதே கடன்' (1:5:4) என எண்ணி,

*"நஞ்ச ருந்தியும் நதியினைச் சூடியும் நடுநெற்றித்*
*துஞ்சும் வெங்கனல் பரித்தும்வெவ் வலியரைத் தொலைத்திட்டும்*
*அஞ்ச லென்றுமுற் காத்தனை இன்றெமக் கருளாயேல்*
*தஞ்ச மாருளர் தாதையே யல்லது தனயர்க்கே"* (1:5:6)

எனப் போற்றுதலும், தேவவுலகில் சோமாக்கந்த வடிவத்தில் எழுந் தருளியிருக்கும் சிவபெருமானை,

*"ஏகனே போற்றி யார்க்கும் ஈசனே போற்றி அம்மை*
*பாகனே போற்றி மேலாம் பரஞ்சுடர் உருவே போற்றி*
*மேகமார் களனே போற்றி விடைமிசை வருவாய் போற்றி*
*மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வர் போற்றி"*
(6:23:61)

என ஏத்துதலும், மயிலுருக் கொண்டு நின்ற இந்திரன் முருகனிடம்,

*"ஐயகேள் அமர ரெல்லாம் வழிபட அளியன் தன்பால்*
*செய்ய பேரருளை வைத்தாய் ஆதலிற் சிறுமை தீர்ந்தேன்*
*உய்யலாம் நெறியுங் கண்டேன் உன்னடி பரிக்கப் பெற்றேன்*
*பொய்யுலா மாய வாழ்க்கைப் புன்மையும் அகல்வன் மன்னோ"*
(1:13:380)

என உவந்துரைத்தலும், பத்தித்திறத்தால் பணிந்துபாடிய நாயன் மார்களின் திருமுறைகளை ஓதுவது போன்ற உணர்வினை நமக்கு ஏற்படுத்தும்.

இரணியன் போர்க்களம் ஏகுமுன் தன் தந்தையாம் சூரபன் மனுக்குச் செவ்வேளின் சிறப்புக்களைப் பத்திமை உணர்வு மிகும் வண்ணம் எடுத்துரைப்பன் (4:7:23-40). முருகனது திருப்பெரு வடிவங்கண்ட சூரபன்மன்,

"ஆயிர கோடி காமர் அழகெலாந் திரண்டொன்றாகி
மேயின எனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்"
"திருகிய வெகுளி முற்றுந் தீர்ந்தன செருவின் ஊக்கம்
அருகிய துரோமம் புள்ளி ஆயின விழியில் தூநீர்
பெருகிய திவன்பால் அன்பு பிறந்தன தமியேற் குள்ளம்
உருகிய தென்பு தானும் உலைமெழு காகும் அன்றே"

(4:13:439,442)

என மொழிந்து தன் அடிமனத்தில் முளைவிடும் பத்தி உணர்வைப் புலப்படுத்துவன். முருகனது மிக நெருங்கிய தொண்டனாம் வீரவாகுமுதல் மிகப் பெரும் பகைவனாம் சூரபன்மன்வரையுள்ள பல்வேறு கதைமாந்தர்கள் வாயிலாகப் பத்திநெறியைப் புலப் படுத்திய கச்சியப்பர் திறம் வியந்து பாராட்டுதற்குரியது.

## ஆ) கவிக்கூற்றில் பத்தியுணர்வு

தாம் படைத்த கதைமாந்தர் வாயிலாகப் பத்திமைநெறியைக் காட்டிய கச்சியப்பர் தம் கூற்றுக்களாலும் அன்றகக்டங்களில் அவ் வுணர்வை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. சிவனையும், முருகனை யும் ஒப்பக் காணும் இயல்புடைய கவிஞர் முருகனையே சிவனாகக் கண்டு வழிபட்டவர் எனினும் அவரது வழிபடு கடவுள் முருகனே என்பதனை, "என் உளத்தின் உலவும் சிவன் உமைக்கினிய மைந்தன்" (4 : 14 : 4) எனவும், "செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி தீயேன் நெஞ்சக அடுக்கலினும் நின்றுலவும்" (5:2:231) எனவும் வரும் அகச்சான்றுகள் வலியுறுத்தும். முருகனை "இலை குலாம் அயிலுடை எந்தை" (1 : 20 : 169) என்றும், "சண்முகத் தெந்தை" (1 : 20 : 25) என்றும், "என்னையாளுடை முருகன்" (6 : 24 : 581). என்றும், "என்னாயகன்" (4 : 12 : 458) என்றும், "எங்கோன்" (4 : 12 : 457) என்றும், "எங்கள் தம்பிரான்" (6 : 24 : 138) என்றும், "நம்பெரு மதலை" (1 : 13 : 4) என்றும் அழைத்தலால் நெருங்கிய உறவுமுறையில் கந்தனை அனுபவித்த கவிஞரின் உணர்வினைக் காண்கின்றோம்.

கதை நிகழ்வுகளில் கந்தவேளை வருணிக்கும் பொழுதும், அவனைக் காணும் பேறுபெற்றவர்களைச் சுட்டும் பொழுதும் கவிஞரிடம் பத்தியுணர்வே மேலோங்கி நிற்கும். போர்க்களத்தில் தாரகன் முருகனைக் காணும் பாங்கினை,

*"முழுமதி யன்னஆறு முகங்களும் முந்நான் காகும்*
*விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்*
*அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்குஞ்*
*செழுமல ரடியுங் கண்டான் அவன்தவஞ் செப்பற் பாற்றோ"*

(1 : 20 : 126)

என்று வியந்து பாடுவர். முருகனைக் கண்ட சூரன் நிலையினை'

*"முண்டக மலர்ந்த தன்ன முவிரு முகமுங் கண்ணுங்*
*குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோலமார்பும்*
*எண்டரு கரமீ ராறும் இலங்கெழிற் படைகள் யாவுந்*
*தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்குஞ் சரணமுந் தெரியக் கண்டான்')*

(4 : 4:235'

எனப் புகன்று, இக்காட்சியைக் கண்ணுற்றதால், 'அவன் தீவினை நீங்கி உய்ந்ததாகவும், அதனால் இனி அவன் துஞ்சில் என் தொலைவுற்றால் என்' (4 : 4 : 237) என்றும், 'ஆ! இவன் தவத்திற்கன்றி அறத்திற்கும் முதல்வன் அன்றோ' (4 : 4 : 238) என்றும் 'இன்னமும் முனிவர், தேவர் யாவரும் இனையன் என்று உணரு முடியாத குமரனை இவன் காணும் பேறுற்றதால் அன்னவன் தவத்தின் பேற்றை ஆரறிந் துரைக்கற் பாலார்' (4 : 4 : 239) என்றும் வியந்து பாராட்டிப் புகழ்வர். 'பநகன்' (1 : 20 : 59), 'தீயவன்' (2 : 18 : 10) போன்ற வசைச் சொற்களால் பகைவரைச் சுட்டும் பண்புடைய புலவர் இத்தருணத்தில் சூரபன்மனைத் 'தவத்தின் முதல்வன்', 'அறத்தின் முதல்வன்' (4 : 4 : 238) எனச் சுட்டுவது குறிப்பிடத்தக்கது. தனக்குக் கிடைக்காத ஒரு பொருள் தன் குழந்தைகட்குக் கிட்டும்போது மகிழ்ச்சியடையும் தாயைப் போல் முருகற் காட்சியில் ஈடுபட ஏங்கித் தவித்த கவிஞர் தாம் படைத்த கதைமாந்தர்க்கு அக்காட்சி கிட்டியதுணர்ந்து உளம் நெகிழும் போக்காகவே இதனைக் கொள்ளல் வேண்டும்.

'கழல் சேர்ந்தார்க்கு அருந்தி கொள் முத்தியும் ஆக்கமும்

ஈவோன்' (5 : 2 : 246) என்று முருகப் பெருமானது திருவடிப் பெருமையினைப் போற்றிப் புகழும் இயல்புடைய கச்சியப்பர் நிலந் தோயா அவன் திருவடிகள் நிலம் தோயுமாறு அமைந்துள்ள புராண நிகழ்ச்சிகளை உரைக்கும்பொழுது உளம் நெகிழ்ந்து பாடுவர். வள்ளியைத் தோழி வாயிலாகக் கூடக்கருதிய முருகன் நிலத்தில் நடந்து செல்வதனைத் 'தாட்டுணை சிவந்திடத் தமியன் ஏகினான்' (6: 24: 127) என்றும், நம்பிவேந்தன் வேண்டுகோளை ஏற்று வள்ளியை மணக்க மண்ணில் அவன் நடந்து செல்லுதலைப் 'பாத பங்கயங்கள் நோவப் பருப்பதச் சீரூர்ப்புக்கான்' (6 : 24 : 193) என்றும் நவிலும் பகுதிகள் ஆண்டவன் திருவடிகள் மண்ணுலகில் படுதலால் உறும் துயருக்கு வருந்தும் பாவலரின் பத்திமை யுணர்வைப் புலப்படுத்தும்.

பத்திநெறியில் தலைப்பட்டு ஆண்டவன் அருள் பெற்ற அடியவர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை உவமைகளாகக் கூறி, பத்திச் சுவையினை மிகுவிப்பதும் இவர்தம் இயல்பாகும். கண்ணப்பர் குடுமித்தேவர்க்கு நீராட்டுதல் (ஆறு:6), நமிநந்தி-யடிகள் நீரினால் விளக்கெரித்தல் (நாடு:47), வையையாற்றில் முத்தமிழ் விரகனது ஏடு எதிரேறல் (ஆறு:27), முத்தமிழ்க்கொரு தலைவனாம் சம்பந்தருக்கு முத்துப்பந்தரும் சிவிகையும் இறைவன் அளித்தல் (3:12:52) முதலிய செய்திகள் உள்ளத்தோய்வுடன் ஆசிரியரால் ஒப்பிட்டுரைக்கப் பெறும்.

## 2. வழிபாட்டுக் கூறுகள்

"உடம்பு நயப்படுதற்கு உணவும், மனம் நயப்படுதற்குக் கல்வியும் வேண்டப்படுதல் போல ஆன்மா நயப்படுதலுக்குக் கடவுள் வழிபாடு வேண்டற்பாலது[22]", எனக் கூறுப. 'வாலறிவன் (நற்றாள் தொழுதலே கல்வியின் பயனாகும்' என்று வள்ளுவரும்[23]

*"ஆக்கை யாற்பயனென் - அரன்*
*கோயில் வலம் வந்து*
*பூக்கை யால்அட்டிப் போற்றியென் னாதஇவ்*
*ஆக்கை யாற்பயனென்"[24]*

என்று திருநாவுக்கரசரும் வழிபாட்டின் இன்றியமையாமையினை வற்புறுத்துவர். பத்தி என்பது இறைவன் மீது அடியவர்கள் கொள்ளும் ஆழமான அன்பை அடித்தளமாகக் கொண்டு திகழ்தலால் அதை கட்டுப்பாட்டிற்குள் வைக்காவிடில் தடம்புரண்டு போய்விடும் என்பதனை நன்குணர்ந்த நாயன்மார்கள் கோயில் வழிபாட்டுடன் இணைத்தே தமிழகத்தில் பத்திப் பயிரினை வளர்த்து வந்தனர்.[25] மன உணர்வாம் பத்தியுடன் நடைமுறைச் செயல் களாம் வழிபாட்டுக்கூறுகளும் இணையும் பொழுதுதான் சமயம் முழுமை நோக்கி வளரமுடியும் என்பதனை இதனால் உணர்கின்றோம். முருகனைத் தேவர்களும், சிவனை முருகனும், பிற கடவுளரும் சிறப்பொடு பூசனை புரிந்த நிகழ்ச்சிகளைப் பாடும் பகுதிகள் இறைவழிப்பாட்டு நெறிமுறைகளை விரிவாக விளக்க ஆசிரியர்க்கு வாய்ப்பளித்துள்ளன.

## அ) முருகனை வழிபடும் முறை

கந்தவேளின் பேருருக்காட்சியைக் கண்ட பின்னர் இந்திரன் முருகன் திருவடிகளை வழிபட்ட திறம் விளக்கமாக மொழியப்படும். முருகனைப் பீடத்தில் அமரச் செய்து வான்கங்கை நீரால் முழுக் காட்டி, நுண்துகில் சூழ்ந்து, சந்தனம் முதலிய நறுமணப் பொருள் களால் மட்டித்துப் பொற்கலன் சாத்தி, மலர் மாலிகை சூட்டி, ஐவகை ஆவியினால் நறும்புகை எடுத்தும், கருப்பூர விளக்கம் காட்டியும் இந்திரன் வழிபடுவதாகப் பாடுவர் (1:14:120-123).

தாரகனைத்தடிந்த பின்னர்த் தேவகிரி அடைந்த திருமால் முதலியோர் அறுமுகன் இசைவு பெற்று அவனை நன்றி முகத்தான் வழிபாடாற்றுவர். குடங்கரில் வானதி நீரினைமுகந்து முருகக் கடவுள் அருகில் நின்று, அவன் திருப்பெயராம் ஆறெழுத்து மந்திரத்தை ஒலித்துக் கொண்டு திருமஞ்சனமாட்டி, அக்கடவுள் அணிந்திருந்த பொற்றுகிலை நீக்கி, புதிய நொய்ய பஃறுகில் சாத்திய பின்னர் வேறொரு இருக்கையில் எழுந்தருளச் செய்து, அம்மந்திரத்தை நவின்று கற்பக மலர்மாலை அணிவித்துச் சந்தனத் தேய்வையும் பச்சைக் கருப்பூரமும் அப்பி, நாவியும் நானமும் பூசி,

அக்கடவுள் திருமேனியை மணிக்கலனால் அழகுறுத்திச் சந்து, அகில், கருப்பூரம், குந்துருக்கம், குங்கிலியம் இவைகளாலியன்ற நறும்புகை-யினையும், செந்நிறத் தீபங்களையும் படுமணி ஒலிக்கத் தலைத்தலைச் சுற்றிப் பணிந்தேந்தியதாகப் பாடி (1 : 21 : 24-30) ஆகம வழிபாட்டு நெறியினை விளக்குவர்.

மணக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகனுக்கு மாங்கனி, வாழைக்கனி, பலாக்கனி, கரும்பு, செந்தேன், ஆவின்பால் என்னும் அறுவகைப் பொருட்களைக் கொண்டு தேவர்கள் அமுது செய்வித்ததாகப் புகலுவர் (5 : 2: 248). ஆறுமுகனுக்கு ஆறு பொருள்களைக் கொண்டு படையல் செய்வது கருதற்குரியது.

முருகக்கடவுளின் வரலாறு, எழுந்தருளச் செய்யும் முறை (பிரதிட்டை முறை) விழாக்கள், பூசனை, நோன்புகள் முதலியவற்றை விளக்கமாகக் கூறும் நூல் குமார தந்திரம். இவ்வாகம நூல் தென்னகத்தில் தோன்றிய வடமொழி நூல் என்று அறிஞர் கருதுவர்.[26] முருக வழிபாடு கார்த்திகேய வழிபாட்டுடன் இணைந்து தென்னகத்தே மிகவும் சிறப்புற்றுத் திகழ்தலால் முருக வழிபாட்டு முறைகளை விளக்கும் நூல் தென்னகத்தில் தோன்ற வேண்டிய இன்றி-யமையாமை ஏற்பட்டது. கச்சியப்பர் காலத்தில் குமாரதந்திரத்தில் சொற்றாங்கு முருகப்பெருமானை வழிபடும் வழக்கம் தமிழகத்தில் நிலவியது. சூரனைத் தடிந்து செந்தியில் மேவியிருந்த அறுமுகனை பிரமன் முதலியோர், 'குமாரதந்திர நெறிப்படி கும்பம், அக்கினி, உருவத்திருமேனி (விம்பம்) என்னும் மூவகை இடத்திலும் புந்தி மகிழப் பரிந்து பூசனை புரிந்தனர்' (4:16:24) எனச் சுட்டி அவர் காலத்து நிலவிய வழிபாட்டு நெறியினை உரியவிடத்தில் போற்றுவர். முருக வழிபாட்டின் கூறுகளாகிய வெள்ளிக்கிழமை நோன்பு, கார்த்திகை நோன்பு, அவற்றை நோற்கும் திறம், நோற்றார் பெறும் பயன் முதலியன வசிட்டர் வாயிலாகவும், விநாயகர் வாயிலாகவும் கந்தவிரதப் படலத்தில் (6:23) விரிவாக விளம்பப்படும்.

கச்சியப்பர் இறைவன் திருமேனி தீண்டும் பேறுடைய சிவாசாரியராகத் திகழ்ந்தமையால் கருத்து விளக்கத்திற்குப் பயன்

படுத்தும் அவரது உவமைகளிலும் இறைவழிபாட்டின் மணங்கமழ் தலை உணர்கின்றோம். சரவணப் பொய்கையில் தாமரைத் தவிசில் வீற்றிருக்கும் முருகனது திருவடிகளில் தாமரை இதழ்களையும், மகரந்தச்சேற்றினையும், மலரின் தேனையும் அலைக்கரங்கள் கொண்டு சேர்த்தலை அப்பொய்கை அன்பினால் வழிபாடு இயற்றுதல் போலும் என்று பாடி மகிழ்வர் (1:11:108). இறைவழிபாட்டிற்குரிய இடத்தில் தீயவர் சென்றால் அந்நிலத்தை மந்திரங்கள் கூறி நீர் தெளித்துப் புனிதமாக்குதல் சமயச் சடங்குகளில் ஒன்றாகும். பானுகோபன் கணைபட்டுப் பூதர்களின் தலைகள் அறுபட்டு வீழுமுன்னர் அவர்களின் குருதிப்புனல் நிலத்தில் சிந்துதலைத் தீயர் சென்ற நிலத்தைத் தூய்மையாக்கும் (புரோட்சனம்) செயலுடன் ஒப்பிட்டு உவப்பர் (4:3:192). வேள்வி வேட்கும் அந்தணர்கள் பல்வளனையும் பற்றின்றி வேள்வித் தீயில் இடுதலைப் பூதர்கள் தம்பாலுள்ள அனைத்துப் படைகளையும் பானுகோபன் மீது சொரிதலுக்கு உவமையாக்கி மகிழ்வர்(4:11:61).

## ஆ) சிவனை வழிபடும் முறை

தேவர்கள் முருகனைக் குமாரதந்திர நெறியில் வழிபட்டதைப் போன்று கந்தப்பெருமான் சிவபெருமானை சிவாகமநெறியில் பூசனை செய்த முறை விளக்கமாக இயம்பப்பட்டுள்ளது. திருச்சேய்ஞலூரில் 'சைவ தந்திர' (சிவாகமம்) விதிப்படி சிவனுக்குத் திருவுருவம் நிறுவி, ஆவின் ஓரைந்தும் (பஞ்ச கவ்வியம்) அமுதமும் (பஞ்சாமிருதம்) கொண்டு திருமுழுக்காட்டி, வெண்ணிற ஆடையும், சாந்தும், மலரும் அணிவித்து, அட்டில் தொழில் வல்லவர்களால் திருந்திய நிரலமை கருனையம் புழுக்கலையும், சோற்றையும் பொற்கலத்தில் ஏந்தி, மந்திரம் கூறி அருத்தி, மணப்பொருட்களுடன் கமுகும், வெள்ளிலையும் வைத்துப் புகையானும், சுடரானும் சுற்றி மும்முறை முருகன் வணங்கித் துதித்ததாகப் புகன்று (1:24:67-70) சைவாகம வழிபாட்டு முறைகளை விளக்குவர்.

சூரனைத் தடிந்த பின்னர்ச் செந்தி வந்திறுத்த முருகன் சிவனைத் தாணுவில் வருவித்து,ஆமயம் முதலிய ஐந்து கந்திகள், மாமலர்,

மஞ்சனம், அமிர்தம், வான்துகில், தூமணி விளக்கு, தூபம், கண்ணாடி சாமரை முதலியவற்றால் 'இறைவனூல்' தொடர்பு நாடி வழிபடல் புரிந்ததாகப் பாடுவர் (4:16:32-33). வள்ளியம்மையுடன் தணிகை வெற்பெய்திய முருகன், சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாரக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம், என ஐவகையுருவில் ஒன்றதாம் கன்ம சாதாக்கிய பீடலிங்க வடிவில் சிவபெருமானை ஆகமநெறியில் வழிபட்டு வேண்டியாங்கு அருளும் பெற்றமையினைச் சுருக்கியுரைப்பர் ( 6 : 24 : 230 ). இந்திரன் சீகாழியில் சிவலிங்கம் நிறுவிப் பல்வேறுபூக்களால் வழிபட்ட திறத்தை இந்திரன் அருச்சனைப் படலம் (2:29) விரிவாக விளக்கும். இந்திரன் வைகறைப் பொழுதில் எழுந்து வண்டு மொய்ப்பதற்கு முன்னரே மலர் கொய்து கொணர்ந்து, சிவன் திருவடிகளில் விதிமுறைப்படி அருச்சனை புரிந்ததாகப் புகலுவர் ( 2 : 29 : 29 ). 'சுரும்பு மூசாச் சுடர்ப் பூங் காந்தள்'[27] என்ற நக்கீரர் வாக்கு இவண் கருதத்தக்கது. அசுரரோடு பொருது கோடிழந்த அயிராவதம் திருவெண்காடு சென்று சிவபெருமானை 'அமலன் தந்திர' (சிவாகமம்) நெறியால் வழிபட்டு இழந்த கோட்டினைப் பெற்றதாக நவில்வர். சிவ வழிபாடு புரிவோர்க்குத் திருநீறு இன்றியமையாதது. ''பேணியணி பவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு'' என்பது சம்பந்தர் வாக்கு. 'புலால், மது முதலியவற்றை மலைமலையாக அயின்ற சிங்கமுகன், தன் நெற்றியில் நீறணிந்து புனிதமாயினன்' (4:12:30) எனப் புகன்று தீயரையும் புனிதராக்கும் திருநீற்றின் பெருமையினைச் சுட்டுவர்.

'உன்னியாங்கு நலமெல்லாம் வழிபட்டோர்க்கு நல்கிய குமரன்' ( 3 : 11: 15 ) என முருகனைச் சுட்டுதலால் வழிபாட்டின் பயனாக இறையருள் பெற முடியும் என்பது கச்சியப்பரின் கருத்தாகக் கொள்ளலாம். உலகியலில் மனிதர்கள் இயற்றும் வழிபாட்டு நெறிமுறைகளை விவரிக்கக் கந்தபுராணக்கதையமைப்பு இடம் கொடாததால் கச்சியப்பர், தெய்வங்களின் செயல்களாக அவற்றைப் படைத்து அமைதியுறுவர்.

### 3. மெய்ப்பொருள்

பல்லவர் காலத்து நூலாகிய உதீசித்தேவர் இயற்றிய திருக்

சலம்பகம் சமணப்புராணக் கதைகளுக்குப் புது விளக்கங்கள் தந்து அவற்றை அருகக் கடவுளோடு இணைத்துள்ளதால் பல்லவர் காலத்திலேயே புராணத்க்கதைகளுக்கு உட்பொருள் காணும் மரபு அரும்பியிருத்தலை உணர்கின்றோம். சுந்தரரும் பல புராணக் கதைகளைக் கூறி அவை நிகழ்ந்தது ஏன் என்று வினவுவர். சிவனது தோற்றப் பொலிவிற்கும் அருட் செயல்களுக்கும் உட்பொருள் காணவேண்டும் என்ற தமிழ் மக்களின் முயற்சி அவர் காலத்திலேயே தொடங்கியுள்ளமை புலப்படுகின்றது.[28] உயிர்களின் அழுக்காம் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அழித்தருளு பவன் சிவன் என்ற மெய்ப்பொருள் கருத்து விளக்கம் பெறுதற்கே அவன் முப்புரம் எரித்தனன் என்ற புராணக்கதை எழுந்தது என்பது திருமூலரின் கருத்தாகும்.[29] ''புராணக் கதைகளின் வெளிப் பொருள் பொருள் அன்று. அவைகள் வேறு உண்மைகளைக் காட்டி நிற்பன. பலாப்பழம் தின்போர் தோலையும் தடலையும் நீக்கி அவற்றாற் பொதியப்பட்ட சுளையைச் சாப்பிடுவது போல இக் கதைகளாற் பொதியப்பட்ட மெய்ப்பொருள்களை அறிவதே கற் போர்க்கு முறையாம்,'' என்பர்.[30] எனவே மெய்ப்பொருட் கருத்துக் களின் விளக்கங்களாகவே புராணங்களை ஆன்றோர் கொண்டுள்ளமை புலனாகும். பல்லவர் காலத்தில் உணர்ச்சிப் பேராறாகவும் பத்தி இயக்கமாகவும் வளர்ந்து வந்த சைவ சமயம் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஒழுங்குறுத்தப்பெற்று அறிவியல் அடிப்படையில் வளரத்தொடங்கிற்று. வரன்முறைப் படுத்தப்பெற்ற சைவசித்தாந்தக் கொள்கைகளை விளக்கும் சாத்திரநூற்கள் தோன்றிச் சைவத்தை மெய்ப்பொருள் நிலைக்கு உயர்த்தும் பணியைச் செய்தன. கந்தபுராணம் இத்தகு காலச் சூழலில் தோன்றியதால் கச்சியப்பர் மெய்ப்பொருட் கருத்துக்களைக் கதைமாந்தர், கவிக்கூற்று, கதையமைப்பு, கதை நிகழ்ச்சிகள் என்னும் இவற்றால் திறம்பட வெளிப்படுத்துவர்.

## அ) கதைமாந்தர் வாயிலாக மெய்ப்பொருட் கருத்துக்கள்

சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மைகளை வலியுறுத்தும் சமயக்கோட்பாடாகும். இறை(பதி), உயிர்(பசு), தளை(பாசம்)என்பனவே

அம்முப்பொருள்கள். உயிர் தன் அழுக்காம் தளைகளினின்றும் விடுபட்டு இறைவன் திருவடியில் இரண்டறக்கலத்தலே சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபாகும். 'சித்தாந்தம்' என்ற சொற்கே சமயம் அனைத்திலும் முடிந்த முடிபு என்று விளக்கம் காண்பர்.[31] இம்முப்பொருள்களின் இயல்புகளை விரிவாக மெய்கண்டசாத்திரநூற்கள் ஆராய்ந்துள. கச்சியப்பர் இத்தகு சாத்திரக் கருத்துக்களைக் கதை மாந்தர் வாயிலாகப் பல்வேறிடங்களில் நுவல்வர்.

காசிபர் தம்மக்களாம் சூரன் முதலியோருக்கு முதன்முதலாகச் சைவ மெய்ப்பொருள் கருத்துக்களை எடுத்துரைத்தலைக் 'காசிபர் உபதேசப் படலத்தில்' காணலாம். 'சான்றவர் ஆய்ந்திடத்தக்க பொருள்கள் இறை, உயிர், தளை என்பன. படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலியற்றும் சிவனே பதியாவர். மூவகைத் தளைகளிலும் மூழ்கி உழலும் உயிர்கள் எண்ணிலாதன. அவை என்றுமே உள்ளன (அநாதி), அவை தாம் செய்த நல்வினை, தீவினைகளினாலே இடையறாது பிறந்திறந்து உழலும் தன்மைய அவ்வுயிர்கள் பார், நீர், நெருப்பு, காற்று, விண் என்னும் ஐந்திடத்தும் மக்களாகவும், விலங்காகவும், பறவையாகவும், தாவரமாகவும், நீர்வாழ்வனவாகவும் தோன்றி அழியும் இயல்பின. இத்தகைய ஓருயிர் தருமத்தைப் போற்றிடின் அதன் வழியாக அன்பு, அருள், தவம், ஞானம் இவைகள் கைகூடப்பெற்றுச் சிவனைச் சேர்ந்து மூவகைத் தளையும், பிறவியும் நீங்கிப்பேரின்பத்தை நுகர்ந்தவண்ணமிருக்கும்' (2:4:3-14) என்ற காசிபர் உரை சைவ மெய்ப்பொருட் கருத்துக்களின் சாறாகப் பொலிகின்றது. 'உமை கயிலை நீங்கு படலத்தில்' இறைவனாம் பதியின் இயல்புகளைச் சிவன் உமைக்குக் கூறுமுகமாக ஐந்து விருத்தத்தொகைகளால் விளக்கமுற விளம்புவர். இறைவன் ஐவகை சக்திகளை உண்டாக்குதல், அருவுருவம் தாங்குதல், இருபத்தைந்து கேவல உருவமாக இருத்தல், மாயையினை முதலாகக் கொண்டு முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றுமாறு செய்தல், ஐந்தொழில் புரிதல் முதலிய செய்திகள் அப்பகுதியில் சுட்டப்பெறும் (6:5:3-7) பதியின் இலக்கணத்தைப் பதியின் வாயிலாகவே வெளிப்படுத்துவது கருதற்குரியது.

தூதுவனாகச் சென்ற வீரவாகு சூரபன்மனிடம் முருகன் இயல்புகளை மொழியுங்கால் (சிவனும், முருகனும் வேறல்லர் என்ற நோக்கில்) 'உயிர்கட்கு இருவினைப் பயனைக் கூட்டுவோனும், இருவினையொப்பு ஏற்படின் அவ்வுயிர்கட்கு வீடுபேற்றை அருளுபவனும் அவனே' என்று சுட்டி இறையியல்பை வலியுறுத்துவன் (3:12:136). மகேந்திரச் சிறையில் வாடும் சயந்தன் 'உத்தமனாம் கண்ணுதலை' (சிவன்) உன்னிப் புலம்புங்கால்,

*" பாசங்கொண் டாவிபலவும் பிணிப்போனும்*
*நேசங்கொண் டாங்கதனை நீக்கியருள் செய்வோனும்*
*ஈசன் சிவனென் றியம்புமறை நீயிழைத்த*
*ஆசொன்றும் இத்தீமை ஆர்தவிர்க்க வல்லாரே"* (3:9:61)

எனக் கேட்கும் பகுதியில் தளைகளைக் கொண்டு உயிர்களைப் பிணிப்பதும், பின் கருணையால் அத்தளைகளை நீக்கி அருள்செய்தலும் ஆகிய பதியின் இயல்பினைச் சுட்டுவர்.

சூரபன்மனது சொல்லொணாத் துயருக்கு ஆட்பட்டுழலும் இந்திரனிடம், 'இறைவன் உயிர்கட்குத் தரும் இன்னலும் அவன் அருளின்பாற்பட்டதே. பெற்றோர் தம் மகவு நோயுறின் பிறரைக் கொண்டு அறுத்தல், கீறுதல் முதலிய துயர்செய்தும் அந்நோயினைத் தீர்ப்பர். அது அன்பேயன்றி வன்கணன்று. அதுபோல நம் பிறவிப்பிணி தீர்க்கவே சிவன் சூரபன்மனைக் கொண்டு அலக்கண் செய்விக்கின்றான்' (1:3:44-45) என்று நான்முகன் ஆறுதல் மொழிகுவன்.

*" தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின்*
*வந்திடா விடினு றுக்கி வளாரினால் அடித்துத் தீய*
*பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவே யாகும்*
*இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவும் என்னும்"*[32]

என்ற வஞானசித்தியார் கருத்து இவண் ஒப்பிட்டுவதற்குரியது.

ஆணவத்தால் செயற்படும் தக்கன் தான் பெற்ற மக்களிடம் படைப்புத்தொழில் வேண்டிச் சிவனை எண்ணித் தவமியற்றக் கட்டளையிட்டான். தந்தை சொல் தவறாத அவர்கள் அந்நோக்கங் கருதி தவம் புரியும்போது நாரதர் அவண் தோன்றிப் படைப்புத் தொழிலினால் வரும் இழுக்கினை இயம்பி, தந்தை நெறி நின்றும் தடமாற்றி அவர்களை முத்தி நெறிக்கு ஆற்றுப்படுத்துங்கால், இறைவனை எய்தும் நான்கு படிநிலைகளையும் (சரியை, கிரியை, யோகம், ஞானம்) அப்படிநிலை நின்றோர் பெறும் நான்கு பதங்களையும் (சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்), இருவினையொப்பு எய்துங்கால் அவ்வுயிர்கள் பெறும் முத்தியினையும் விளக்கியுரைப்பர் (6:3:46-47). மனந்திருந்திய தக்கனுக்குப் பிரமன் உய்யும் நெறியுரைக்கையில், ''இருவினையியற்றிப் பிறவியில் மூழ்கும் பக்குவர்க்கு இறைவன் திருவருள் கிட்டாது. இருவினையொப்பு வரப்பெற்ற சத்திநிபாதர்க்கே அவன் திருவருள் கிட்டும்'' (6:21:98) எனச் சுட்டும் பகுதி சித்தாந்த நெறியில் வீடுபேறெய்தும் உயிர்களின் பக்குவநிலையினை உணர்த்தும்.

முருகனைப் 'பாலகன்' என்று அறியாது இகழ்ந்த சூரபன்மனுக்குச் சிங்கமுகன் அறுவுரைக்கையில்,

*''வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த*
*போதக் காட்சிக்குங் காணலன் புதியரில் புதியன்*
*மூதக் கார்க்குமு தக்கவன் முடிவிற்கு முடிவாய்*
*ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய்நின்ற அமலன்''*

(3:21:127)

என்று முருகனது பேரியல்புகளை நவிலுவன். வேதக்காட்சியாம் பாச ஞானத்திற்கும், உபநிடத்து உச்சியில் விரித்த போதக்காட்சியாம் பசு ஞானத்திற்கும்[33] அப்பாற்பட்டவனாக முருகனைச் சுட்டுதல்-கருதற்பாலது. அறிவுக்கு இன்பந் தரும் மெய்ப்பொருட் கருத்துக்களைக் கதைமாந்தர் கூற்றுக்களில் கவிதையாக வடித்து உணர்வுக்கும் இன்பம் நல்குமாறு அமைத்துள்ள கச்சியப்பர் திறம்

பாராட்டுதற்குரியது. ''சமயம், தத்துவம் ஆகிய இயல்கள் சாத்திரமாக அன்றிக் கவிதையாக வடிக்கப்பெறின், கற்பார்க்கு அறிவு நல்கி, இன்பமும் ஊட்ட வல்லவையாகும். கவிதைக்கு அடிப்படையானது உணர்வேயாதலின், அறிவுக்கு மட்டும் புலனாகும் சமய, தத்துவ உண்மைகள் அருளாளரால் நுகரப்பட்டு, அவர்களின் உணர்வுகளாகி, பின்பு அவர்களிடத்தே கவிதை வடிவில் வெளிப் படும்போது, அக்கலைவடிவம் பிறரும் சுவைப்பதாக அமைகின்றது,''[34] என்பார் கருத்தும் இவண் நினையத்தகும்.

## ஆ) கவிக்கூற்றில் மெய்ப்பொருட் கருத்துக்கள்

காவியங்களில் கருத்து விளக்கத்திற்குப் பயன்படுத்தும் உவமைகள் கவிஞர்தம் உள்ளுணர்வைப் புலப்படுத்தும். சைவ நீதியே உலகில் விளங்க வேண்டும் என்ற வேட்கையுடைய கச்சியப்பர் தம் உவமைப் பூக்களிலும் மெய்ப்பொருள் மணங் கமழச் செய்வர்.

விநாயகர் அகத்தியரின் குடத்திலிருந்த காவிரியினைக் காக்கை உருவெடுத்துக் கவிழ்த்து நிலவுலகில் படரச் செய்த நிகழ்ச்சியை,

*''விடலருந் தளையின் நீக்கி வியனெறிப் படுத்தலோடும்*
*அடிகளின் அருளாற் செல்லும் ஆருயிர் போன்ற தன்றே''*

(2 : 29 : 1)

என்று பாடித் தளை நீங்கியவுடன் ஞானாசிரியன் திருவருளால் ஆண்டவனோடு இரண்டறக் கலக்கும் உயிரின் (பசு) இயல்பினை மொழிவர். பகைவரின் மாயையால் கட்டுண்டு மயங்கிக் கிடந்த வீரவாகு முதலியோர் முருகனது ஞானக்கணையால் உணர்வு பெற்றுத் தொழும் தகைமையினை,

*''பாசத் தளையிற் படுவார் அதுநீங்கி*
*மாசற்ற நல்லுணர்வு வந்தெய்த உய்ந்தனராய்ப்*

*பேசற் கரியஇன்பம் பெற்றோர்கள் தாமாகி*
*ஈசற் கினியான் இணையடிகள் வாழ்த்தெடுத்தார்''*
*(4 : 12 : 369)*

என்று பத்தி பிறங்கப் பாடும்போதும், பிணிப்பு நீங்கிய உயிர் இறைவனோடு கலத்தலால் பெறும் பேரின்ப நிலையினைச் சுட்டுவர். முருகனது வரவால் பாலைநிலம் வெம்மை நீங்கித் தண்மை பெறுதற்குச் சிவனருள் பெற்ற ஆன்மாக்கள் பசுகரணங் கெட்டுச் சிவகரணமாக மாறியதை ஒப்பிட்டுரைப்பர் (1 : 25 : 22). 'விடிவாம் அளவும் விளக்கனைய மாயை'[35] இறைவனருளால் தொலைதலைச் சிங்கமுகன் கைகள் சோர்ந்து போதலுக்கு (4 : 12 : 364) ஒப்பிடுவர். உயிர்கட்குப் பிறவிப் பிணி நீக்கி முத்தியளிக்கும் ஆற்றல் சிவன் ஒருவனுக்கே உண்டென் பதும், பிற தேவர்கட்கு இலையென்பதும் சைவசமயத்தின் உட்கிடக்கை. இதனை அறியாத சிலர் பிற கடவுளரையும் வீடுபேற்றின் பொருட்டு வழிபட்டு வறிதே உழலுவர். இக் கருத்தைப் பாலைநிலத்தில் அங்கம் நொந்து, வெப்பமுற்று அயரும் கலைமான்கள் பருந்தின் நிழலை நாடிச் செல்லுதலுக்கு ஒப்பிட்டுவப்பர். (1 : 5 : 210).

## இ) கதையமைப்பில் மெய்ப்பொருட் கருத்துக்கள்

கந்தபுராணக் கதையமைப்பிற்கும், கதை நிகழ்ச்சிகட்கும் மெய்ப்பொருள் விளக்கம் காணும் முயற்சி பல அறிஞர்களால் சென்ற நூற்றாண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்தமையினை நாமறிவோம்.[36]

இறைவனை மறந்து தக்கன் வேள்விக்குச் சென்ற பாவத் தால் நந்தியின் சாபம் பெற்ற இந்திரன் முதலிய தேவர்கள் சூரபன்மன் முதலிய மூவரால் பல நாள்கள் அலைக்கழிக்கப்பட்டு வருந்தி மீண்டும் இறைவனை நினைத்து வழிபாடாற்றி

முருகன் துணையால் சூரபன்மன் முதலியோரைத் தொலைவுசெய்து இறையருள் பெற்று இன்புற்றிருந்தனர் என்ற கந்தபுராணக் கதையமைப்பின் வாயிலாக இறைவன் ஆணை வழி நில்லாது பாவங்களைச் செய்த உயிர்கள் அவ்வினைப்பயனை நுகர்ந்தே கழிவு தேடிக் கொள்ளவேண்டித் துன்புற்றபொழுது அன்பால் வழிபாடாற்றி இறைவன் துணையால் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல அழுக்கிலிருந்து விடுதலை பெற்று இறையருளில் இன்புற்றுத் திகழும் என்ற சைவ மெய்ப்பொருட் கருத்தினை உணர்கின்றோம்.[37] சூரபன்மன் ஆணவத்தின் உருவென்றும், சிங்கமுகன் கன்மத்தின் வடிவென்றும், தாரகன் மாயையின் தோற்றமென்றும் அவைகளை அழித்துவிடாது அடக்கி அருளுபவர் பரம்பொருளாகிய முருகப்பெருமான் என்றும் காண்கிறோம்.[38] மும்மலங்கள் என்றும் உள்ளதென்பது சைவ சமயக் கோட்பாடு.

> ''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
> பதியினைப் போற்பசு பாசம் அனாதி''[39]

என்பது திருமந்திரம். ஆகையால் அம்மூவரும் அழியாத நிலையில் கதைநிகழ்ச்சிகள் அமைந்துள்ளன என்பது கருதற்பாலது.[40] ''புராண இதிகாசங்களின் நோக்கம் வரலாறு கூறுவதல்ல; இலட்சியங்கட்கு உதாரணங்கள் காட்டுவதாகும்,'' என்றும்[41] ''காலங்கடந்த கருத்துக்களுக்குக் (மெய்ப்பொருட் கருத்துக்கள்) காலத்திற்கு உட்பட்ட நிகழ்ச்சிகளால் அளிக்கப்படும் அடையாள வெளியீடுகள் புராணங்கள்'' என்றும்[42] நுவலும் அறிஞர் கருத்துக்கள் ஈண்டு நினையத்தகும்.

## ஈ) கதை நிகழ்வுகளில் மெய்ப்பொருட் கருத்துக்கள்

பல நிகழ்ச்சிகள் பின்னிப் பிணைந்த ஒரு பெருநூல் கந்தபுராணம். அந்நூலில் காணும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் மெய்ப்பொருளின் விளக்கமாக அமைந்துள்ளன. 'முனைப்பு (ஆணவம்) உயிரைத்

தன் பக்கம் இருத்தி வைக்கிறது. உயிரை முனைப்பினின்றும் மீட்க ஆண்டவனருள் புகுகிறது. இரண்டிற்கும் போர் நிகழ்கிறது. இப்போரே முருகன், சூரன் போர். இப்போர் ஒவ்வொரு உள்ளத்திலும் நாடோறும் நிகழ்ந்த வண்ணமிருக்கிறது' என்பர் திரு.வி.க.[43] கந்தபுராணம் அண்டத்தில் நடந்த கதையைச் சொல்லுவதோடு பிண்டத்தில் நடக்கும் கதையையும் விளக்குந் திறத்தது என்று கூறுவர் பாம்பனடிகள்.[44] முருகனும், சூரபன்மனும் மோதியதில் முருகன் வென்றான் என்ற கதை ஒழுங்குடையதும், ஒழுங்கற்றதும் பொருதகாலை ஒழுங்குடையதே வென்றது என்ற தத்துவத்தை விளக்கவெழுந்ததாகத் தற்கால ஆய்வாளர் கருதுவர்.[45]

முருகன், சிவன் திருக்கண்களினின்றும் தோன்றி, காற்றாலும், கனலாலும், கங்கையாலும் தாங்கப் பெற்றுச் சரவணப் பொய்கையில் மகவாகத் தோன்றி நிலத்தில் திருவிளையாடல் புரிந்ததாகக் கூறும் நிகழ்ச்சி முருகன் மண், புனல், தீ, வளி, வெளி என்னும் ஐந்து பூதங்கட்கும் காரணன் என்ற தத்துவத்தை விளக்கவெழுந்ததாகக் கொள்ளல் தகும்.[46]

*"ஓங்கொளியாய் விசும்பாதி தோற்றுமியலுந்*
*தனதியல்பை யுருவின் மாட்டும்*
*பாங்குபெறத் தெரிந்ததுபோற் பலபொறியாப்*
*பரமர்விழி பயந்த ஞான்று*
*தேங்கொளியாய் வெளியடர்ந்து வளிதொடர்ந்தொள்*
*ளொளிபடர்ந்த தெளிநீர்ப் புக்கு*
*நீங்கிவிளை யாட்டயர்ந்து தணிகையமர்*
*பெருவாழ்வை நினைத்து வாழ்வோம்"*[47]

என்ற தணிகைப்புராண ஆசிரியரின் கருத்தும் இவண் கருதத்தகுவது.

இறைவன் உயிர்களின் பக்குவநிலைக்கு ஏற்றவாறு அவைகளை ஆணவம் முதலிய மலங்களில் அழுத்தி வினைப்பயனை ஊட்டி நல்லறிவைச் சிறிதே பெற ஞானவிளக்கை ஏற்றுவித்துப்

படிப்படியாக உயர்த்துவார் என்பதனை அசுரர் யாகப் படலமும் (2:3) வரம் பெறுபடலமும் (2:9) உணர்த்தும். மும்மலத்தொடர்பால் முடமான உயிர்கள் மட்டில்லா அவாவும், கட்டுக்கடங்கா காமமும் கொண்டு அனைத்து அண்டங்களையும் அடக்கியாள எண்ணும் என்பதனை திக்குவிசயப்படல முதல் தேவரை ஏவல்கொள் படலம் வரையுள்ள வரலாறுகள் (2:12-18) காட்டும். ஆணவத்தின் கொற்றத்தையடக்க முதற்கண் ஆணவம் பற்றுக்கோடாகக் கொண்டியங்கும் மாயாமலத்தை மாய்விப்பதே இறைவன் செய்யும் உதவி என்பதனைத் தாரகன் வதைப்படலம் (1:20) புலப்படுத்தும். இறைவன் கருணையிருந்தால் அணு அண்டமாகும்; அண்டம் அணுவாகும் என்பதனை வீரவாகு மகேந்திரம் செல்படலம் (3:1) முதலியனவற்றால் உணரலாம். ஐம்புல வேடரால் அலைக்கழிக்கப்படும் உயிரினைக் குருவடிவம் தாங்கி வந்து இறைவன் ஆட்கொள்ளும் திறத்தை வள்ளியம்மை திருமணப்படலம் (6:24) எடுத்துக்காட்டும். 'பிரிக்கப்பட்ட உயிர் (சீவன்) உலகத்திலுள்ள காடுகளில் அவித்தையின் சக்தியால் அலைந்து திரிகையில் அவ்வுயிரைக் காப்பாற்ற நாரதர் வடிவில் குரு தோன்றி வள்ளிக்கும் கார்த்திகேயனுக்கும் திருமணம் நடைபெற உதவிபுரிகின்றார். இதுவே 'சீவப்பிரம்ம ஐக்கியம்' ஆகும் என்று வேதாந்த நிலையில் விளக்கம் காண்போரும் உளர்.[48] இவ்வண்ணம் கந்தபுராண வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்தும் மெய்ப்பொருட் கருத்துக்களின் விளக்கங்களாகவே காணப்படுகின்றன.[49]

## சைவ சமயமே உய்யும் நெறி

சமயத்தை மிகுதியும் வலியுறுத்தும் காப்பியங்களில் பிற சமயக் கொள்கைகள் காரண காரியத்துடன் மறுக்கப்படுதல் இயல்பு. இதற்குத் தோற்றுவாய் செய்த பெருமை மணிமேகலை ஆசிரியராகிய சீத்தலைச்சாத்தனருக்கே உரியது. சைவ சித்தாந்த நெறியே மக்கள் கடைப்பிடித்தொழுக வேண்டிய நெறியென்பதும், பிற நெறிகள் அத்துணைச் சிறப்பிலவென்பதும் கச்சியப்பரின்

உட்கிடக்கையாதலால் உலோகாயதம், மாயாவாதம், மீமாம்சம், வைணவம் ஆகிய சமயங்களின் இழிவை முறையே இந்திரபுரிப் படலம் (5:5), சுக்கிரன் உபதேசப் படலம் (3:10), ததீசியுத்தரப் படலம் (6:12), திருக்குற்றாலப் படலம் (2:28) என்னுமிவற்றில் பெரும்பாலும் செயலினால் விளக்குவர். ஏகான்ம வாதத்தை வற்புறுத்தும் வேதாந்தக் கொள்கை உயிர்கட்கு ஆக்கம் தாராது என்னும் கருத்தை சூரபன்மன் வாழ்வின்மூலம் வடித்துக்காட்டுவர். தந்தையாம் காசிபரிடம் சைவ சித்தாந்த பாடம் பயின்று வந்த சூரபன்மனைத் தடுத்து நிறுத்திச் சுக்கிரரிடம் வேதாந்த பாடங் கேட்க ஆற்றுப்படுத்தினள் மாயை.

*"தருமஞ் செய்க தவறுள பாவமாங்*
*கருமஞ் செய்யற்க என்பர் கருத்திலார்*
*இருமை தன்னையும் யாவர்செய் தாலுமேல்*
*வருவ தொன்றிலை மாயம்வித் தாகுமோ"* (2:10:40)

என்றும்,

*"உற்றதோர் மேன்மை நர்டி உன்னைநீ பிரம மென்றே*
*தெற்றெனத் தெளிதி மற்றத் திசைமுகன் முதலோர் தம்மைப்*
*பற்றலை மேலோ ரென்று பணியலை இமையோர் உங்கள்*
*செற்றலர் அவரை வல்லே செறுமதி திருவுஞ் சிந்தி"*

(2:10:47)

என்றும் ஆசிரியராம் சுக்கிரர் உரைத்த நெறிகளில் வழுவாது நின்று செயலாற்றியவன் சூரபன்மன். முருகனது முழு முதற்றன்மையினைத் தனக்கு விளக்கிய சிங்கமுகனிடம்,

*"கடந்த கர்ந்துழி அவற்றிடை வெளிக்கக னத்ததோ*
*டடைந்த வாறுபோல் யாக்கையின் பேதகம் அனைத்தும்*
*முடிந்த காலையில் தொன்மைபோல் அபேதமாம் மொழிக்குந்*
*தொடர்ந்த சிந்தைக்கும் நாடொணா தமர்பெருஞ் சோதி"*

*"பிரம மேயிவர் அல்லவர் இவரெனப் பேதித்*
*திருமை யாகவே கொள்ளலை யாக்கையே வேறு*
*பரம மாகிய உயிரெலாம் ஒன்றுபல் பணியும்*
*பொருள தாகியே ஒருமையாய் முடிந்தவா போல"*

(3:21:146,147)

என்று சூரபன்மன் மறுக்கும் பகுதிகள் சுக்கிரரின் ஏகான்மவாத நெறியில் ஊன்றித் திளைக்கும் அவன் உளப்போக்கினை நன்குணர்த்தும். வேதாந்தப்பள்ளியில் பயிலும் நன்மாணாக்கனாகவும், அக்கொள்கையினைத் தன் வாழ்க்கையில் அழுந்தப் பின்பற்றுவோனாகவும் படைத்துக்காட்டி இறுதியில் உறுதிபெற அக்கொள்கை அவனுக்குத் துணைபுரியவில்லை என்பதனையும் கதைப்போக்கால் உணர்த்திச் சைவ சித்தாந்த நெறியே பிற நெறிகளிலும் விழுப்பமானது என்பதனைக் கச்சியப்பர் வலியுறுத்துவர்.

## மேற்கோள்


1. சே. வெ. ஜம்புலிங்கம், பதிப்புரை, தெய்வயானையம்மை திருமணப்படலம், ப. 1.
2. வ. சு. செங்கல்வராயபிள்ளை, கந்தபுராண வரலாற்று ஆராய்ச்சி, கந்தபுராணம், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு, ப. 7.
3. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பதினான்காம் நூற்றாண்டு, ப. 82.
4. சி. கணபதிப்பிள்ளை, கந்தபுராண போதனை, ப. v.
5. வ. ஆ. தேவசேனாபதி, கலைக்களஞ்சியம், தொகுதி 4, ப. 452.
6. Mariasusai Dhavamony, Love of God according to Saiva Siddhanta, p. 101.
7. — — — — —, pp. 101 – 102.
8. ச. தண்டபாணிதேசிகர், 'பக்தி இலக்கியங்கள்', உலகத்

தமிழ் மாநாடு விழாமலர், சமயப்பகுதி, ப. 6.
9. திருவாசகம், அச்சோப்பதிகம் செ. 1.
10. அ. ச. ஞானசம்பந்தம், 'தமிழும் சமயமும்', உலகத் தமிழ் மாநாடு விழாமலர், சமயப்பகுதி, ப. 4.
11. மறைமலையடிகளார், சைவசித்தாந்த ஞானபோதம், ப. 5
12. வாமதேவ முருகப்பட்டாரகர், கச்சியப்ப சிவாசாரியார் புராணம், ப. 78.
13. ப. அருணாசலம், பக்தி இலக்கியம், ப. 106.
14. அருணகிரியார், கந்தரநுபூதி. செ. 15.
15. சு. சிவபாதசுந்தரம், கந்தபுராண விளக்கம், ப. 7.
16. பெ. திருஞானசம்பந்தம், 'பெரியபுராணம்', தமிழ் இலக்கியக் கொள்கை – ஓர் அறிமுகம், தொகுதி - 1, ப 307.
17. தண்டபாணி சுவாமிகள், திருச்செந்திற் பிரபந்தங்கள், ப. 285.
18. திருத்தொண்டர் புராணம், திருக்கூட்டச் சிறப்பு, செ. 8.
19. திருவாசகம், திருச்சதகம், செ. 11.
20. கந்தரலங்காரம், செ. 85.
21. திருத்தொண்டர் புராணம், காரைக்காலம்மையார் புராணம். செ. 25.
22. சு. சிவபாதசுந்தரம், சைவசமய சாரம், ப. 9.
23. திருக்குறள், 2.
24. பன்னிரு திருமுறைத் திரட்டு, ப.170.
25. கோ.சுந்தரமூர்த்தி, சைவ சமயம், பக்.40-41.
26. Asim Kumar Chatterjee, The Cult of Skanda-Karttikeya in Ancient India, p.127.
27. திருமுருகு., 43.
28. ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பக்.86-88.
29. திருமந்திரம், செ.329.
30. சு.சிவபாதசுந்தரம், கந்தபுராண விளக்கம், ப.17.
31. மு.அருணாசலம், சைவ சமயம், ப.104.

32. சிவஞானசித்தியார் சுபக்க மூலமும் சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த பொழிப்புரையும், ப.103.
33. சி.கணபதிப்பிள்ளை, கந்தபுராண போதனை, பக்.54-55.
34. சுப.அண்ணாமலை, உருவம் உணர்வும், ப.1.
35. திருவருட் பயன், 30.
36. சென்ற நூற்றாண்டில் இலங்கையைச் சார்ந்த செந்தி நாதையர் இயற்றிய 'கந்தபுராண நவநீதம்' கந்தபுராணப்பாற் கடலைக் கடைந்து திரட்டிய மெய்ப்பொருள் வெண்ணெயாக மிளிர்வது. கந்தபுராணத்தை வேதாந்தத்தின் வெளியீடாகக் காட்டும் நூல் ந.சுப்பிரமணிய ஐயரின் ஸ்ரீசுப்பிரமணிய தத்துவம். இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்கள், சரியை முதலிய நான்கு பாதங்கள் முதலியவற்றைக் கந்தபுராணத்தின் உள்ளீடாக உணர்த்தும் நூல் 'கந்தபுராண நவநிதியம்'. ச.தண்டபாணி தேசிகர் 'முருகன்' என்னும் நூலில் மெய்ப்பொருட் கருத்துக்களை விரிவாக ஆய்ந்துள்ளார். பாம்பனடிகளின் '31-வதாகிய ஸ்ரீசுப்பிரமணிய வியாசமும் குரு சிஷ்ய சம்பவ வரலாற்று வியாசமும்' என்ற நூலில் கந்தபுராண நிகழ்வுகள் சில சைவசாத்திர நிலையில் விளக்கப்பட்டுள்ளன.
37. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், 'கந்தபுராணம்', கலைக் களஞ்சியம், தொகுதி - 3, ப. 193.
38. கிருபானந்தவாரி, கந்தபுராணக் கவியமுதம், ப. 7.
39. திருமந்திரம், செ. 159.
40. தாரகன் ஐயனாருக்கு ஊர்தியாகவும், சிங்கமுகன் அம்பிகைக்கு ஊர்தியாகவும், சூரபன்மன் முருகனுக்குக் கொடியாகவும், ஊர்தியாகவும் மாற்றுவடிவம் பெற்றனரே அன்றி அழிந்துவிடவில்லை.
41. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 68.
42. Rene Wellek and Austin Warren, Theory of Literature, p. 191.
43. திரு. வி. கலியாணசுந்தரனார், முருகன் அல்லது அழகு, பக். 66-67.

44. T. P. Meenakshisundaran, Introduction, Sri Subrahmanya Tatvam, p. iv.
45. Kamil V. Zvelebil, 'A Guide to Murukan', Journal of Tamil Studies, June, '76, p. 21.
46. திரு.வி.கலியாணசுந்தரனார், முருகன் அல்லது அழகு, ப.123.
47. கச்சியப்ப முனிவர், தணிகைப்புராணம், கடவுள் வாழ்த்து, 4.
48. சுவாமி சிவானந்த சரஸ்வதி, முருகனின் பெருமை, ப. 56.
49, Ratna Navaratnam, Karttikeya, The Divine Child, p. 181.

# 5

# கந்தபுராணத்தில் தமிழ் இலக்கிய மரபுகள்

பிற மொழியிலுள்ள இலக்கிய நூல்களை மொழி பெயர்த்து அதற்படயாக்கும்பொழுது தம் மொழியிலுள்ள இலக்கிய மரபுகளையும் இயன்றளவு தழுவியே நூலினை அமைத்தல் வழிநூலாசிரியர்களின் பண்பாகும். கச்சியப்பர் இத்தகு மரபில் நின்று கந்த புராணத்தினைப் படைத்துள்ளமை ''முன்பு சூதன் மொழி வட நூற்கதை பின்பியான் தமிழ்ப் பெற்றியிற் செப்புகேன்'' (அவை: 16) என்னும் அவர்தம் கூற்றால் இனிது புலனாகும். 'ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியுங் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருள் அகம் என்றும், 'ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லோராலும் துய்த்துணரப்படுதலும், இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப் படுதலும், ஆகியன' புறம்[1] என்றும் விளக்கம் கூறுப.

இவ்வகம் புற மரபுகள் தமிழ் கூறும் நல்லுலகத்தில் வாழும் மக்களைப் பற்றியெழும் இலக்கியங்கட்கு வகுத்த புலனெறி வழக்கம். தெய்வங்களும், தேவர்களும், அசுரர்களும் பெரும்பகுதியாகவும், மக்கள் சிறுபகுதியாகவும் உலவுகின்ற புராண இலக்கியத்துள் அந்நெறி முறைகளைப் பொருத்திப் பார்த்தல் எளிமை அன்று. 'அறுமுக முடையவோர் அமலன் மாக்கதை' அகம், புறம் ஆகிய இலக்கணத்திற்கு இலக்கியம் காண வேண்டி எழுந்த நூலும் அன்று. இந்நூல் வந்த நோக்கமும் வேறு. இப்புராணத்துள் உலவிடும் கதைமாந்தர்கள் மனிதநிலைக்கு அப்பாற்பட்டவரெனினும் அவர்களைப் படைத்த கவிஞர் தமிழ் மண்ணில் வாழ்ந்து சிறந்தவராகையால் தமிழுலகின் அடிப்பட்ட வழக்கமாகிய அகம், புற மரபுகளைத் தம் புராணத்துள் ஏற்ற பெற்றியின் இயன்றளவு

தழுவியுள்ளார். உலகத்தோரும் சமயத்தோரும் கூறுகின்ற அறம் முதலிய நாற்பொருளையும் அகத்திலும் புறத்திலும் பொருத்திக் காட்டுவர் இளம்பூரண அடிகள்.[2] நாற்பொருளையும் நல்கும் இந்நூலில் அவ்விரு பொருளையும் ஈண்டுக்காண்போம். முருகனைப் பற்றிய தொன்மை (புராணக் கருத்துக்கள்) பழங்காலத் தமிழகத்தில் ஆழமாக வேரூன்றி நின்றதென்றும், 'முருகன் வள்ளியை மணந்த கதை, தமிழ் அகத்திணைக் கதை, அப்பெருமான் சூரனை வென்ற கதை தமிழ்ப் புறத்திணைக் கதை'[3] என்றும் அறிஞர் நுவலும் கருத்து இவண் நினையத்தகும்.

## அக மரபுகள்

கச்சியப்பர் கம்பரைப் போல் யுத்தகாண்டத்தை மிக விரிவாகப் (2967 விருத்தங்களில்) பாடியிருப்பினும் தமிழ்நாட்டுப் போர்த்-துறைக்குரிய புற மரபுகளை மிகுதியாகப் போற்றவில்லை. ஆனால், 267 பாடல்களே உள்ள வள்ளியம்மை திருமணப் படலத்தில் அக மரபுகளை மிகுதியாகப் போற்றுவர். அகப்பொருள் இலக்கணத்திற்கு எழுந்த கோவை நூல்கள்போல் நானூறு துறைகளில் பிற்காலத்து வாழ்ந்த கச்சியப்ப முனிவர் தணிகைப்புராணத்தில் 'களவுப்படலம்' பாடியுள்ளார். கச்சியப்பரோ இலக்கணத்திற்கு இலக்கியம் வகுக்கும் நெறியிற் செல்லாது கதைப்போக்கில் களவியல் மரபினை இயன்றளவு போற்றுவர். களவியற் கூறுகளாகிய இயற்கைப் புணர்ச்சி, பாங்கியிற் கூட்டம், உடன்போக்கு, பிரிவழிக் கலங்கல், முதலிய பகுதிகள் மரபின் வழி அமைக்கப் படுகின்றன.

### 1. இயற்கைப் புணர்ச்சி

'இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தாலும் (பால்) கிழத்தியாலும் பெறப்படும் எனவும், முன்னதால் பெறப்படும்பொழுது முயற்சியின்றித் தானே முடியும் என்பதும் பின்னதாற் பெறுங் காலத்து முயற்சியானே முடியும்' என்பதும் அகப்பொருள் மரபு.

வள்ளியை மணந்தருள் புரியுமாறு நாரதன் வேண்ட, முருகன் வேட்டுவக் குமரனாகிப் 'பண்டொருபுடையில் வைத்த பழம்பொருள் கிடைத்ததைப் போல்' (6 : 24 : 68) தினைப்புனத்தில் வள்ளியைக் கண்டான். விரகச் செந்தீ சுட்டிட வெதும்பிச் சோர்ந்து,

''*மொழியொன்று புகலா யாயின் முறுவலும் புரியா யாயின்*
*விழியொன்று நோக்கா யாயின் விரகமிக் குழல்வேன் உய்யும்*
*வழியொன்று காட்டா யாயின் மனமுஞ்சற் றுருகா யாயின்*
*பழியொன்று நின்பாற் சூழும் பராமுகந் தவிர்தி*'' (6:24:72)

என்று 'உலைப்படுமெழுகைப் போல்' வள்ளியின்பால் காதல் வயப்பட்டு இரங்கித் தளர்ந்தான். அப்பொழுது நம்பியரசன் எயினர் சூழ ஆங்கு வந்தபொழுது வேங்கை மரமாக மாறினான். அவர்கள் சென்ற பின்னர் மீண்டும் குமரனாகிப் பல உரை பகர்ந்து, 'ஈண்டு நின் கைதனில் இவ்வுயிர்க் காத்துக் கோடியால்' (6:24;86) என்று வள்ளியை வேண்டினான். 'நான் இழி குலமாகிய வேட்டுவக் குலத்திற் பிறந்தவள். என்னைத் தழுவும் பொருட்டுத் தாழ்ச்சி செப்புதல் தக்கதன்று' (6:24:90) என வள்ளி மறுத்துரைத்த பொழுது நம்பிவேந்தன் வேட்டுவருடன் மீண்டும் ஆங்கு வந்தான். அவர்கள் முன்னர் விருத்த வேடங்கொண்டு தோன்றிய முருகனுக்குப் பணி செய்யும் வாய்ப்பு நம்பியால் நங்கைக்கு நல்கப்பட்டது. சுனைநீர் அருந்திய முருகன்,

''*ஆகத்தை வருத்துகின்ற அரும்பசி அவித்தாய் தெண்ணீர்த்*
*தாகத்தை அவித்தாய் இன்னுந் தளர்ந்தில தளர்ச்சி மன்னோ*
*மேகத்தை யனைய கூந்தல் மெல்லியல் வினையேன் கொண்ட*
*மோகத்தைத் தணித்தியாயின் முடிந்தது என் குறை*'' (6:24:104)

என்று கூறியும், இசையாத வள்ளியைக் களிற்றின் உதவியால் இசைவித்துப் பின்னர்க் கூடினான். நாற்பத்தெட்டு செய்யுட்களால் இந்நிகழ்ச்சியை ஆசிரியர் பாடுவர்.

இவ்வளவு முயற்சிகட்குப் பின்னர் முடிந்த இவ்வியற்கைப் புணர்ச்சியைத் தெய்வத்தின் எய்தியதாகக் கொள்வதா? கிழத்தியின் எய்தியதாகக் கொள்வதா? என்பதே இங்கு எழும் சிக்கல்.

முன்னொரு காலத்து முருகனைக் கணவனாகப் பெறத் தவம் இயற்றிய சுந்தரவல்லி முருகன் ஏவலால் வேட்டுவக்குலத்தில் வள்ளியாகப் பிறந்துள்ளாள் (1:18:5). முருகனும் அவள் தவ முயற்சியை நிறைவேற்றவே வேடனாக இங்கு வந்துள்ளான். 'இம்மை மாறி மறுமை யாயினும் நீயா கியரென் கணவனை'[5] என்பது போல அம்மை மாறி இம்மையாகினும் அவளுக்கு அவன்தானே கணவன். முன்னர் விதித்த 'பாலது ஆணை'[6] கூட்டும் தெய்வப் புணர்ச்சியே ஈங்கு நிகழ்ந்தது. எனவே இவ்வியற்கைப் புணர்ச்சியைத் தெய்வத்தின் எய்திய புணர்ச்சி எனக் கொள்வதில் தவறில்லை. முயற்சியின்றி முடியும் தெய்வப் புணர்ச்சிக்கு, முருகனே தெய்வமாக இருந்தும் இவ்வளவு முயற்சிகள் தேவையா? என்பது அடுத்து எழும் வினாவாகும்.

புணர்ச்சிக்குரிய இருவரில் தலைவன் முந்தைய வரலாற்றை முற்றிலும் உணர்ந்தவன். தலைவி அதனை அறியாள். அதனை அறிவுறுத்தற்கு அவளை அணியப்படுத்தும் முயற்சியே இங்குப் பெருமுயற்சியாகத் தோன்றுகிறது. புணர்ச்சிக்குப் பின்னர் முற்பிறப்பு உணர்ச்சி பெற்ற வள்ளி,

> *'' மின்னே அனையசுடர் வேலவரே இவ்வுருவம்*
> *முன்னேநீர் காட்டி முயங்காமல் இத்துணையுங்*
> *கொன்னே கழித்தீர்''* (6:24:118)

எனக் கூறுவதும் பழம் பிறப்புணர்ச்சி அறியாதவள் என்பதனையே காட்டும். பால் கூட்டக் கூடும் புணர்ச்சியாகக் கொண்டாலும், குறிஞ்சித் தெய்வமாகிய முருகன் நல்கிய புணர்ச்சியாகக் கொண்டாலும், இங்கு நிகழ்ந்தது தெய்வத்தின் எய்திய இயற்கைப் புணர்ச்சியே ஆகும்.

இயற்கைப் புணர்ச்சி நிகழுமுன்னர்த் தலைவி தலைவ-னிடத்துப் பேசுதல் களவியல் மரபன்று எனப் பொதுவாகக் கருதுவர். நாற்கவிராச நம்பியாரும், இறையனாரும், புத்தமித்திரரும் இப்புணர்ச்சிக்கு முன்னர்த் தலைவி கிளத்தலுக்கு விதி வகுத்திலர். இப்படலத்துள் புணர்ச்சிக்கு முன்னர் வள்ளியின் கூற்றில் சில பாக்கள் அமைந்துள்ளன.

*"இழிகுல மாகிய எயினர் பாவைநான்*
*முழுதுல கருள்புரி முதல்வர் நீரெனைத்*
*தழுவுதல் உன்னியே தாழ்ச்சி செப்புதல்*
*பழியது வேயலால் பான்மைத் தாகுமோ?"*

*"இலைமுதிர் ஏனல்காத் திருக்கும் பேதையான்*
*உலகருள் இறைவர்நீர் உளம யங்கியென்*
*கலவியை விரும்புதல் கடன தன்றரோ*
*புலியது பசியுறில் புல்லுந் துய்க்குமோ?"* (6:24:90,91)

என்பன வள்ளியின் சில மறுப்புரைகள். இவ்வாறு மறுத்துக் கூறினும் இவள் வேட்கைக் குறிப்பினளே என்பது வேடுவர் தலைவன் மீண்டும் வந்தபொழுது,

*"வெந்திறல்கொள் வேடுவர்கள் வெய்யர்இவண் நில்லாது*
*உய்ந்திட நினைந்துகடி தோடும்இனி"* (6:24:93)

என முருகனை வேண்டிக் கொள்ளுதலால் பெறப்படும். தலைவி வேட்கைக் குறிப்பினளாயினும் அதற்கு உடம்பாடல்லாத மொழி-களை இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர்க் கூறுவதற்குச்,

*"சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்*
*அல்ல கூற்றுமொழி அவள் வயினான"*[7]

என்று தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். (இளம்பூரணர்

உரையே இங்கு கொள்ளப்படுகிறது.) இத்தொல்காப்பிய மரபினைத் தழுவியே கச்சியப்பர் வள்ளியின் மறுப்புரைகளை அமைத்துள்ளமை கருதற்குரியது.

இத்தகைய இயற்கைப் புணர்வினுக்கு உகந்த அகவை பன்னிரண்டெனா அகப்பொருள் நூல்கள் கூறும் மரபைத் தழுவி,

*'' எந்தைபுயம் புல்லுவதற் கிப்பருவம் ஏற்குமெனப்*
*பைந்தொடியி னுக்கியாண்டு பன்னிரண்டு சென்றனவே,''*
(6:24:47)

என்றும் இயம்புவர்.

## 2. முன்னுற உணர்தல்

இயற்கைப் புணர்வுக்குப் பின்னர்த் தலைமகளது நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு ஆகிய ஏழு உணர்ச்சிகளிலும் வேறுபாடு கண்டு தோழி ஐயமுற்றுச் சொல்லாடி தலைவியின் கூட்டமுண்மையை ஆராய்வாள்.[8] இதனை 'முன்னுற உணர்தல்' என்பர்.

*'' நாற்றமுந் தோற்றமும் நவில் ஒழுக்கமும்*
*மாற்றமுஞ் செய்கையும் மனமும் மற்றதும்*
*வேற்றுமை யாதலும் விளைவு நோக்கியே*
*தேற்றமொ டிகுளையங் கினைய செப்புவாள்''* (6:24:122)

என்று பாங்கியின் ஆய்வுக்குக் கச்சியப்பர் மரபு வழியில் அடித்தளம் அமைப்பர். 'இப்புனம் அறிதர எங்ஙன் ஏகினை' எனத் தோழி கேட்க, 'அப்புறன்சுனை ஆடப் போந்தேன்' என வள்ளி விடையிறுக்க,

*'' மைவிழி சிவப்பவும் வாய்வெ ளுப்பவும்*
*மெய்வியர் வடையவும் நகிலம் விம்மவுங்*

*கைவளை நெகிழவுங் காட்டுந் தண்சுனை*
*எவ்விடை இருந்துள தியம்பு வாய்* (6;24:124)

என்று கவர்பொருள் நாட்டத்தால் தோழி மீண்டும் வினவுமாறு இப் பகுதிகளைப் பாடுவர். இம்முன்னுற உணர்தலை இறையனார் களவியல் உரையாசிரியராகிய நக்கீரர், "இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றை ஞான்று அவள் கண் சிவப்பும், நுதல் வேறுபாடுங் கண்டு கரவு நாடி உணர்வதாயிற்று. எங்ஙனம் உணருமோ எனின், 'எம் பெருமாட்டிக்குப் பண்டைத் தன்மைத் தன்றால் இவ்வேறுபாடு, இஃது எற்றினான் ஆயிற்று, எனக்குச் சொல்லாய்' என்னும். என 'நெருநல் நின்னின் நீங்கி மேதக்கதோர் சுனை கண்டு ஆடினேன், நெடுங்காலமும் நின்றாடினேற்கு ஆயிற்று; ஆகாதே, கண் சிவப்பும் நுதல் வேறுபாடும்' என்னும் ; 'அஃதேல், சுனையாடினோர்க் கெல்லாம் இக்காரிகை நீர்மை பெறலாமேயெனின், யானும் ஆடிக் காண்கேன் என்னும்"' என விளக்குவர். 'பொய்யற்ற கீரன்' (6:24:264) என்று நக்கீரரைப் போற்றும் கச்சியப்பர் அவர் நெறியில் நின்று முன்னுற உணர்தலை அமைத்துள்ளமை கருதற்குரியது.

### 3. மெய்யுறு புணர்ச்சி

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன'[10] என்ற தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாவிற்குத் 'தலைமகன் களவில் உள்ளப்புணர்ச்சி அளவில் நின்று வரைந்தபின்னர் மெய்யுற்றுப் புணர்வான்' என்று உரையாசிரியர்கள் உரை வரைந்தனர். நாற்கவிராசநம்பியாரும்,

*" உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியுங்*
*கள்ளப் புணர்ச்சியுள் காதலர்க்குரிய"*[11]

என விதி வகுப்பர். நக்கீரர், இறையனார் களவியல் இரண்டாம் சூத்திர உரையில் பல தடைவிடைகளை எழுப்பி ஆய்ந்து களவிற்குரியது மெய்யுறு புணர்ச்சியே என நிறுவியுள்ளார்.[12] வள்ளியும்

முருகனும் முன்னர் சரவணத்தில் உள்ளப்புணர்ச்சி நிகழ்த்தியிருந் தாலும், தமிழ் மண்ணில் நிகழும் இக்களவுப்புணர்ச்சியில் 'மெய்யுற்றே புணர்ந்தனர்' என்பதனை, "அம்மைதனைத் தழுவி ஐயன் அருள் புரிந்தான்" (6:24:119) எனவும், "எடுத்தனன் புல்லினன் இன்ப மெய்தினான்" (6:24:143) எனவும் ஆசிரியர் குறிப்பிடுவது நக்கீரரின் களவியல் மரபினைத் தழுவியதற்கு மேலும் ஒரு சான்றாகும்.

## 4. தோழியிற் கூட்டம்

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் இடையில் நிகழும் புணர்ச்சி களைக் கூறாது தோழியிற் கூட்டத்தை அஃ மரபிற்கு மாறுபடாது ஆசிரியர் அமைத்துக்காட்டுவர். சங்கச் செய்யுட்களும் இப்புணர்வையே மிகுதியும் பாடியுள்ளமை கருதத்தக்கது.

வள்ளியும் தோழியும் ஒருங்கிருக்கும் தருணத்தில் வேழம் வினவி முருகன் வந்தான். பறவை எய்யும் வேடர்கள் அதனை நேரே பாராமல் குறிப்பாகப் பார்த்தலைப் போல (6:24:130) அவ்விருவரின் நோக்குத் திகழ்தலைக் கண்ட பாங்கி 'மையல் உண்மை' உணர்ந்து, அயற்புணர்த்துக்கு ஏகுவள். தோழியைத் தொடர்ந்து சென்று,

*" உற்ற கேளிரும் நீங்களே தமியனுக் குமக்குப்*
*பற்ற தாயுள பொருளெலாந் தருவன் நும்பணிகள்*
*முற்று நாடியே புரிகுவன் முனிவு கொள்ளாது*
*சற்று நீரருள் செய்திடும்"* (6:24:132)

என முருகன் இரப்பன். 'குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப் பெருமையிற் பெயர்த்தல்'[13] என்ற முறையில்,

*" .... .... .... .... எம்பெருங் கிளைக்கிதோர் இழுக்கை*
*மண்ணின் நாட்டவோ வந்தது மறவர்தம் பேதைப்*
*பெண்ணை ஆதரித்திடுவரோ பெரியர்"* (6 : 24 : 133)

என்றும், 'அஞ்சி அச்சுறுத்தலும்'[14] என்ற நெறியில்,

"குன்றங் காவலர் வருகுவர் அவர் மிகக் கொடியோர்
ஒன்றுந் தேர்கிலர் காண்பரேல் எம்முயிர் ஒறுப்பர்
நின்றிங் காவதென் போம்" (6 : 24 : 135)

என்றும் தோழி கூறி மறுப்பள்.

வள்ளியைப் 'பேதை' எனச் சுட்டிய தோழியிடம் முருகன்,

"சீதரன் தரும் அமிர்தினை எயினர்கள் செய்த
மாதவந்தனைப் பொன்னினுக் கரசை மற்றெனக்குக்
காதல் நல்கியே நல்லருள் புரிந்த காரிகையைப்
பேதை யென்பதே பேதைமை" (6 : 24 : 134)

எனக் கூறுதல், 'பாங்கி குலமுறை கிளந்தபொழுது தலைவன் தலைவியை உயர்த்திப் பேசுதல்'[15] என்ற நம்பி அகப்பொருள் மரபினைத் தழுவி அமைந்ததாகும்.

### 5. மடல்மா கூறுதல்

தலைவன் தோழியைப் பலவாறு இரந்தும் பயன்படாத் விடத்து வீதியில் மாமடல் ஏறியாகினும் அக்குறையினை முற்று வித்துக் கொள்வதாகக் கூறுவது முறை. 'முற்காலத்தே தாம் விரும்பிய பெண்டிர் பொருட்டுச் செய்து கொள்ளுந் தற்கொலை முறை'[16] என்றும், 'தலைவியைப் பெறவேண்டித் தன்மானத்தை யும் துறந்து மேற்கொள்ளும் அன்புச் சோதனை'[17] என்றும் தமிழறிஞர்கள் இதனை விளக்குவர். "தோழி நீக்கலினாகிய நிலைமை நோக்கி மடல்மா கூறும் இடனுமாறுண்டே."[18] எனத் தொல்காப்பியரும், "காமம் உழந்து வருந்தினார்க் கேமம் மடலல்ல தில்லைவலி"[19] என வள்ளுவரும் விளக்குவர். அம்முறையில் முருகன் தோழியிடம்,

"தோகையோடு என்னைக்
கூட்டிடாயென்னில் கிழிதனில் ஆங்கவள் கோலந்

*தீட்டி மாமட லேறிநும் மூர்த்தெரு வதனில்*
*ஒட்டு வேனிது நாளையான் செய்வது''* (6:24:136)

என உரைப்பன். தோழி 'ஐயர்க்கு நீதியன்று' எனக் கூறி, மடல் விலக்கித் தன்னுதவியுடன் கூடும் கூட்டத்தை அகநெறியில் நின்று முற்றுவிப்பள். மடல் கூறுவதையும் மடல் விலக்குவதையும் மிக விரிவாகக் கூறும் நம்பியார் வழியிற்[20] செல்லாமல், தொல்க காப்பியர் வழிநின்று சுருக்கமாகப் பாடியுள்ளார்.

## 6. வெறியாட்டு

ஏனல் முற்றியதால் வள்ளி மறுகும் உள்ளத்தளாய்த் தன் சிறுகுடி புகுந்து கொள்கை வேறாகிப் பண்டு போல் மடவாள் எவரோடும் பேசாது புலம்பி வீற்றிருந்தமையை அன்னையும் செவிலியும் நோக்கிச் செற்றமெய்தி இற்செறித்தனர். இதனால் வள்ளி மேலும் துன்பமுற்று உணர்விழந்து அவசமாய் வீழ, 'சூர்ப்பகை' தொட்டது ஓராராகித் தன் குலவழக்குப்படி வெறி அயர்-விக்க, முருகன் வேலன் மேல் வந்து தோன்றி உரைத்ததை,

*''வெறியயர் கின்றகாலை வேலன்மேல் வந்து தோன்றிப்*
*பிறிதொரு திறமும் அன்றால் பெய்வளை தமிய ளாகி*
*உறைதரு புனத்தில் தொட்டாம் உளமகிழ் சிறப்புநேரிற்*
*குறையிது நீங்கு மென்றே குமரவேள் குறிப்பிற் சொற்றான்'',*
(6:24:156)

என இயம்புவர். வெறியாட்டின் பொழுது வேலன் மேல் தோன்றும் தெய்வம் பொய் புகலலும், அதனால் அத்தெய்வத்தைக்,

*''கடவு ளாயினும் ஆக*
*மடவை மன்ற வாழிய முருகே''*[21]

எனத் தோழி இகழ்தலும் சங்ககால மரபு. இங்கு இவள் வேறு-பாட்டிற்கு இத்தெய்வமே காரணமாதலின் பொய் புகலாது வாய்மையைக் குறிப்பாகக் கூறுவதாகப் பாடியுள்ளமை குறிக்கத்-தக்கது.

## 7. பிரிவுழிக் கலங்கல்

சிறுகுடிக் குரம்பையில் வள்ளி இற்செறிக்கப்பட்டிருந்தபொழுது முருகன் தினைப்புனஞ் சென்று கன்னியைக் காணாது வாடித் தளர்ந்து, மஞ்சைக் கணத்தையும், மான்கணத்தையும் நோக்கி வினவுவதாகப் பாடி (6:24:159, 160),

> ''காட்சி ஆசையாற் களம்புக்குக் கலங்கி
> வேட்கையின் மயங்கிக் கையறும் பொழுதினும்''[22]

தலைவனுக்குக் கூற்று நிகழும் என்ற தொல்காப்பியக் களவியல் விதிமுறைகளைப் போற்றுவர்.

## 8. உடன்போக்கு

தோழியால் கையடையாக நேர்ந்த வள்ளியை நெடுவேலண்ணல் சுரத்திடை அழைத்துச் செல்கையில் வேட்டுவ நம்பியும் கானவர் பலரும் கன்னியைக் கவர்ந்த கள்வனைக் காண்போம் என்று போர்த்தொழிற்கு அமைந்தாராய்த் தொடர்ந்த பொழுதும், அம்பு வீசி முருகனை வளைத்துக் கொண்டபொழுதும் பதட்ட உணர்வுடன் வள்ளி முருகனிடம் சில சொற்கள் கூறுதலும், முருகன் அவளுக்கு அமைதி நல்கும் வகையில் 'இருந்தருள் நம்பின்' (6:24:178) எனப் புகலுவதும், 'இடைச்சுர மருங்கில் அவள் தமர் எய்திக் கடைக்கொண்டு பெயரும்பொழுது தலைவி மிக வருந்தித் தமர்பாற்பட்டு உரையாடாது தலைவன்பாற்படுதலாகிய கற்பொடு புணர்ந்த கௌவையை'[23] நினைவுறுத்தும்.

## 9. கற்பியல் மரபுகள்

'களவு ஒரு குறிக்கோளன்று. முடிவான பயன் அன்று. ஒரு குறிக்கோளை, முடிந்த பயனை அடைதற்குரிய நெறியேயாம். கற்பாக முடியுங்கால் களவுநெறி நன்னெறியெனப் போற்றப்படும் ........ களவின் முடிவு கற்பு என்பது அகத்திணை வலியுறுத்தும்

அறங்களுள் தலையானது'[24] என்பர். கற்பாவது தலைவியைக் கொடுத்தற்குரியோர் கொடுப்பக் கரணமுறையால் தலைவன் ஏற்றுக்கொள்வதாகும்.

> "கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
> கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

என மணமுறையைத் தொல்காப்பியர் சுருக்கமாக உரைப்பர். திருமண வாழ்வாகிய கற்பியல் நெறிக்கு வர இரு நெறிகள் உண்டு. களவு நெறியும் மரபு நெறியும் என்று அவை சொல்லப்படும். இவ்விரு நெறிகளுள் சங்க இலக்கியத்துப் பாடல் சான்றதாகிய களவு நெறியே[25] வள்ளியின் திருமணமாகிய கற்பியல் நெறிக்கு வழிவகுத்துத் தந்தது.

மேற்காட்டப்பட்ட கற்பியல் தலை நூற்பாவில் பயிலும் 'கரணம்' என்ற கிளவிக்கு 'வதுவைச் சடங்கு' என்றும், 'வேள்விச் சடங்கு' என்றும் முறையே இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் பொருள் கொள்வர். கந்தபுராணத்துள் நிகழும் திருமணச்சடங்குகள் அனைத்தும் வேள்விச் சடங்குகளாகவே காணப்படுகின்றன.

இடைச்சுர மருங்கில் முருகனை எதிர்த்து மாய்ந்த வேடர்கள் வள்ளியின் அருளால் விழித்தெழுந்து, கன்னியைக் கவர்ந்துசென்றவன் கந்தனே எனத் தெரிந்ததும், 'தீங்கனல் சான்றா வேட்டுச் செல்லுதி நின்னூர்க்கு' (6:24:192) என்று கந்தனை வேண்டினர். பின்னர்க் குறவர் கோமான்,

> "கந்தவேள் பாணி தன்னில் கன்னிகைக் கரத்தை நல்கி
> நந்தவமாகி வந்த நங்கையை நயப்பால் இன்று
> தந்தனன் கொள்க" (6:24:199)

என்று கூறித் தண்புனலால் தாரை வார்த்தளிக்க, நாரதன் வதுவைச் சடங்கினை அங்கியோடு அருமறை விதியாற் செய்து முடித்தான்.

கந்தபுராணத்துள் உற்பத்தி காண்டத்தில் பார்வதி திருமணமும், அசுர காண்டத்தில் மிருககண்டூயர்-விருத்தை திருமணமும், சூரபதுமன்-பதுமகோமளை, சிங்கமுகன்-விபுதை, தாரகன் - சௌரி ஆகியோர் மணங்களும், தேவ காண்டத்தில் தெய்வயானை திருமணமும், தக்க காண்டத்தில் தக்கன்-வேதவல்லி, தண்மதிக்கடவுள் - இருபானேழு கன்னியர் திருமணங்களும், உமையம்மை திருமணமும், வள்ளித்திருமணமும் ஆகிய பத்துத் திருமணங்கள் பேசப்படும். இவற்றுள் சிவனுக்குரிய இரண்டும் சேய்க்குரிய இரண்டும் ஆகிய நான்கு திருமணங்களே விரிவாக விளம்பப்படுகின்றன சிவனுக்குரிய இரு மணங்களிலும், முருகனுக்-குரிய தெய்வயானைத் திருமணத்திலும் நான்முகன் கரணம் இயற்றுவோனாகவும், வள்ளித்திருமணத்தில் மட்டும் நாரதன் மணவேள்வி இயற்றுபவனாகவும் அமைந்துள்ளனர். நாரதன் துணையுடன் இயலும் களவின் வழிவந்த கற்பு நெறிக்கு அவனே கரணத்தானாக இருப்பது பொருத்தமாகவுள்ளது. மேற்கண்ட நான்கு மணங்களிலும் தாரை வார்த்தல், தீ வளர்த்தல் முதலியன பொதுக் கூறுகளாகஇருப்பினும், தெய்வயானைத் திருமணத்தில் மங்கல-நாணணிதலும் (5:2:247). அம்மி மிதித்தலும் (5:2:252), அருந்ததி நோக்கலும் (5:2:253) ஆகிய சடங்குகள் அமைந்துள்ளமை கருதத்தக்கது. வள்ளித் திருமணத்தில் மங்கலநாணணிதல் பற்றிய செய்தி சுட்டப்பெறவில்லை. தஞ்சைக் கலைக்கூடத்தில் சுப்பிர-மணியருடன் இணைந்து தோன்றும் வள்ளி தெய்வயானையின் உலோகச் சிலைகளில் (11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன) தேவசேனை மங்கலநாணுடனும், வள்ளி அஃதின்றியும் காணப்-படுதல்[26] சிற்பக்கலையும் இலக்கியமும் இணைந்து செல்லுதலைக் காட்டும்.

பெரியவர்களை மணம்பேச பெண்வீட்டாரிடம் அனுப்புதல் (1:7:6), மணப்பிள்ளையின் அடிகளை மாமியார் பாலினாற் கழுவுதல் (1:10:39), மாமனும் மாமியும் மணப்பிள்ளைக்குத் திருவடி பூசை செய்தல் (5:2:241,242), திருமணப்பந்தல் அமைத்தல் (1:8:16), மணமக்களை முதிய பெண்டிர் வாழ்த்துதல் (6:24:207) முதலிய நிகழ்ச்சிகள் வதுவைச் சடங்குகளாகத் திகழ்கின்றன.

மார்க்கண்டேயப் படலத்தில் குச்சக முனிவர் மிருககண்டுயருக்கு இல்லறத்தின் சிறப்பை மிக விரிவாகக் கூறி,

"நற்றவம தாகுமில றந்தனை நடாத்திச்
சுற்றமற நீங்குதுறவே துறவதம்மா" (2:5:51)

என்று முடிப்பது, இல்லறத்தின் முடிவான பயனைத் தொல்காப்பியர்,

"காமஞ்சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"[27]

எனக் கூறிய கற்பியல் மரபினைத் தழுவியதாகும்.

## 10. கைக்கிளை

"காமஞ்சாலா இளமையோள் வயின்
ஏமஞ்சாலா இடும்பை யெய்தி
நன்மையும் தீமையும் என்றிருதிறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறான் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"[28]

எனத் தொல்காப்பியர் கைக்கிளையை விளக்குவர். நாற்கவிராச நம்பியார் தம் அகப்பொருள் விளக்கத்தில் இக்கைக்கிளையை 'அகம்' என்றும், 'அகப்புறம்' என்றும் வகுத்துக்கொண்டு,

"காமஞ்சான்ற இளமையோள் வயிற்
குறிப்படு காறுங் குறுகாது நின்று
குறிப்பறி நெஞ்சொடு கூறல்"[29]

அகத்திற்குரியதென்றும்,

"காமஞ்சாலர் இளமையோன் வயிற்
குறிப்பறிவுறாது குறுகியாங்கு அவளோடு
இறப்பக் கூறுவது"[20]

அகப்புறத்திற்கு உரியதென்றும் விளக்குவர்.

முருகன் வள்ளியைக் கண்டு அருகில் சென்றமையை,

"பூமஞ்சார் மின்கொல் என்னப் பொருப்பினில் ஏனல் காக்கும்
காமஞ்சால் இளைமை யாளைக் கடம்பமர் காளை நோக்கித்
தூமஞ்சால் விரகச் செந்தீச் சுட்டிடச் சோர்ந்து வெம்பி
ஏமஞ்சால் கின்ற நெஞ்சன் இதணினுக் கணியன் சென்றான்"
(6:24:69)

எனக் கச்சியப்பர் மொழிகுவர். மேற்காணும் விருத்தத்தில், 'காமஞ் சால் இளைமையாள்', 'ஏமஞ்சால் கின்ற நெஞ்சன்' என்ற தொடர்கள் கூர்ந்து நோக்கத் தகும். காமஞ்சாலா இளமையோளிடத்து ஏமஞ்சாலா இடும்பை யெய்தி வருந்துகின்ற அகப்புறக் கைக்கிளையை விலக்கி, அகத்திற்கே உரிய கைக்கிளை மரபினை ஆசிரியர் போற்றியுள்ளார் என்பது தெளிவாகிறது.

## 11. பெருந்திணை

இளமை தீர்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல்[31] எனத் தொல்காப்பியர் சுட்டுகின்ற பெருந்திணைக் குறிப்பில் நோக்கின், காசிபர் மாயையுடன் சேர்தல் (2:3), விபுதை மாகதரைச் சேர்தல் (6:14) ஆகியன இளமைதீர் திறத்திலும், அசமுகி துருவாசரை வலிந்து புணர்தல் மிக்க காமத்து மிடலிலும் அடக்கிக் கொள்ளலாம்.

எண்வகை மணங்களில் நான்கு மணங்கள் அதன்பாற்படுதலால் அது பெருந்திணை ஆயிற்று"[32] என்ற இளம்பூரணர் கருத்தில் நோக்கின், வள்ளித்திருமணம் தவிர ஏனைய அனைத்தும் அப்பாற்

பட்டு அத்திணையுள் அடங்கும். 'தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதல்'[33] என்ற நிலையிருப்பதால் காசிபர் - மாயை ஆகிய இருவரின் புணர்ச்சியை இளமை தீர்திறமாகிய பெருந்திணைப்பாற்படுத்தினும், அகனைந்திணையுள் அடக்கும் திறத்தில் சில கூறுகள் காணப்படுகின்றன.

பெண்கள் நோக்கில் பொதுநோக்கும் புணர்ச்சிநோக்கும் உண்டெண்பதனை வள்ளுவர் 'குறிப்பறிதல்' அதிகாரத்தில்,

"இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"[34]

எனவும், மாணிக்கவாசகர் தம் திருக்கோவையாரில்,

"பிணியு மதற்கு மருந்தும் பிறழப்பிறழ மின்னும்
பணியும் புரை மருங்குற் பெருந்தோளி படைக்கண்களே"[35]

எனவும் குறிப்பிடுவர். காசிபர் இவ்விரு நோக்கினையும் மாயையிடத்துக் கண்டு குறிப்புணர்ந்தமையைப்,

"பொதுவியல் நோக்கொடு புணர்ச்சி நோக்கினைக்
கதுமெனக் காட்டினள் முனிவன் காணுற" (2 : 1: 32)

எனவும்,

"பெருந்துயர் உதவுவெம் பிணியுந் தீர்ப்பதோர்
மருந்துமற் றாதலும்" (2 : 1 : 34)

எனவும் கச்சியப்பர் புகலுவர்.

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில் நிகழும் காமக் கூட்டத்தினை மறையோர் நூலுள் பேசப்படும் எண்வகை மணங்களில் ஒன்றாகிய கந்தருவத்துடன் இணைத்துப் பேசுவர் தொல்காப்பியர்.[36] காசிபரும் மாயையும் இன்பந் துய்த்ததனை,

*"உணர்வுடை முனிவரன் உயர்ந்த விஞ்ஞையர்*
*மணமுறை இதுவென மாயை தன்னொடு*
*புணர்தொழில் புரிந்தனன் போக முற்றினான்"* (2 : 3 : 16)

என ஆசிரியர் சுட்டுவர். இயற்கை இறந்தவர்களின் புணர்ச்சியை இயற்கை இறந்த நிலையில் பாடினாலும் தமிழ் அகவியல் பினை மறவாது போற்றும் ஆசிரியர் திறன் பாராட்டற்குரியது.

**மரபில் மாற்றம்**

கந்தபுராணத்தில் அகமரபைத் தழுவிச் சென்றுள்ள இடங்களில் சில மாற்றங்கள் காணப்படுதல் கருதத்தக்கது.

களவியற் பகுதியில் தலைவன், தலைவியின் ஊர், பேர் முதலியவற்றைத் தோழியிடம் வினவுதல்தான் மரபாகப் போற்றப்படும். தொல்காப்பியரும், இறையனாரும், நாற்கவிராச நம்பியாரும் அவ்வாறே விதி வகுத்துச் சென்றுள்ளனர்.

முருகன், இயற்கைப் புணர்வுக்கு முன்னர்த் தலைவியாம் வள்ளியிடம்,

*"வாரிருங் கூந்தல் நல்லாய் மதிதளர் வேனுக்குன்றன்*
*பேரினை உரைத்தி மற்றுன் பேரினை உரையாய் என்னின்*
*ஊரினை உரைத்தி"* (6:24:71)

என்று வினவுதல் அகமரபின் மாற்றத்தைக் காட்டும்.

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர், தலைவன், தலைவியது நலம் புனைந்துரைத்தல் இயல்பு. தலைவி அக்கூட்டத்தைக் குறித்துத் தலைவனிடம் பேசுதல் மரபன்று. தம்மைப் பெருமுயற் சிக்குப் பின்னர் முயங்கிய முருகனிடம் வள்ளி,

*"மின்னே அனைய சுடர் வேலவரே இவ்வுருவம்*
*முன்னேநீர் காட்டி முயங்காமல் இத்துணையுங்*
*கொன்னே கழித்தீர்"* (6:24:118)

எனக் கூறும் பகுதியிலும் மரபின் மாற்றத்தைக் காண்கின்றோம். இம்மாற்றத்திற்கு வள்ளியின் முன்னைத் தவ உணர்ச்சியே காரணம் என்று அமைதி கொளினும், முருகன் தலைவியிடமே ஊர், பேர் வினாதலுக்கு அமைதி காண இயலவில்லை.

கற்பு நெறியில், உணவிற்கு உப்புப்போல் ஊடல் இன்றி யமையாதது. அது கூடலுக்கு ஆக்கந்தரும் என்றும் ஆன்றோர் விதிப்பர். ஒரே தலைவனை இருவர் காதலிப்பதால் ஏற்படும் தற்கால இலக்கியச் சிக்கல் அக்கால இலக்கியங்களில் தோன்றா விடினும், அதனால் ஊடல் விளைதல் தவிர்க்க இயலாது. உதயணன் பல பெண்டிரை மணத்தலும், சீவகன் எண்மரை மணத்தலும், சுந்தரர் இருவரை மணத்தலும் அவ்வக்காவியங் களில் நிகழினும் ஆங்கெல்லாம் ஊடல் நிகழ்தலைக் காண்கிறோம். இப்புராண காவியத்துள் முருகன் வள்ளியை மணந்துகொண்டு கந்தவெற்பிற்குச் சென்றகாலை, தெய்வயானை, வள்ளியை எடுத்துப் புல்லி 'இன்றுனைத் துணையாய்ப் பெற்றேன்' (6 : 24 : 254) எனப் புகலுதல் பண்டைக் காவிய ஊடல் மரபிற்கு மாறுபட்டுத் தோன்றுகிறது.

## புறமரபுகள்

புறப்பொருள் வெண்பாமாலை உழிஞைப்படலத்தில் 'காந்தள்' துறையில் முருகன் சூரபன்மாவைத் தடிந்த செய்தியினையும், பாடாண் படலம் குடுமி களைந்த புகழ்சாற்றுநிலைத் துறையில் அவன் சரவணப் பொய்கையில் தோன்றிய காலத்தே இந்திரனை வென்ற செய்தியினையும் ஐயனாரிதனார் விளக்குவதால் முருகனது போர்ச் செயல்கள் புறப்பொருளுடையாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை புலனாகும். கச்சியப்பர் முருகன் சூரனை வென்ற புறத்திணைச் செய்திகளை மிக விரிவாகப் பாடியிருப்பினும் புற மரபுகளை மிகக் குறைவாகவே போற்றியுள்ளார்.

சயந்தனையும், பிற தேவர்களையும், பானுகோபன் பற்றிக் கொணர்ந்து மகேந்திரத்தில் தளைப்படுத்திய செயல் வெட்சி வீரர்

செயலுடன் ஓரளவு இணைந்து செல்லும். தாரகன் வதைப்படலத்தில் முருகன் வீரவாகுவிடம், "தாரகன் மாய நொச்சியுள் அமர்ந்துள்ளான், துணைவர்களுடன் சென்று அவன் பதியினை வளைத்தி" (1:20:8) எனக் கூறுவது எயில் வளைத்தலாகிய உழிஞையினையும், அமரர் சிறைபுகு படலத்தில், விண்ணுலகம் அசுரர்களால் எரியூட்டப் பெற்றழிந்தமையைப்,

*"புத்தழல் கொளுவ லோடும் பொள்ளெனப் பொடிபட்டன்றே*
*முத்திறவரைப்பும் எங்கோன் முறுவலான் முடிந்த வாபோல்"*
(2:43:94)

எனக் கூறுதல் 'எரிபரந்தடுத்தலா'கிய[37] வஞ்சியினையும், தனக்கு முன்னர்ப் போருடற்ற இயலாத தாரகன் தேர் விட்டிறங்கிப் புறங் கொடுத்து ஓடுங்காலை, 'போரழிந்து வென்னிட்டவன் தன்மிசைப் புத்தேள் வீர வெம்படை விடுப்பது வீரமன்று' (1:20:86) எனக் கருதி அன்னதைத் தூணியுள் செறித்த வீரவாகுவின் செயல், 'அழிகுநர் புறக்கொடை யயில்வாள் ஓச்சாக் கழிதறு கண்மை'[38] யாகிய வஞ்சித் தழிஞ்சியையும், பானுகோபன் களம் செல்லுமுன் ஆயுத சாலைக்குச் சென்று பூசை ஆற்றியமை (4:3:20) வென்றி வேண்டி வழிபடும் கொற்றவைநிலையையும்,[39] தாரகனாகிய வேழம் முள்ளம்பன்றியாகும் வண்ணம் கணைகளால் முருகன் அவன் உடலைச் செறித்தமை 'இருநிலந்தீண்டா அருநிலை'[40]யினையும் உணர்த்தும்.

### புறத்திணைப் பூக்கள்

பூச்சூடிப் போர் புரிதல் தமிழருக்கே உரிய வழக்கம் என்பதனை 'ஆதிகவி' எனக் கருதப்படும் வான்மீகியும், தம் காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார்.[41] சூரன், பானுகோபன் ஆகியோர் புற மரபிற்கு ஏற்றவகையில் அடையாளப் பூவினை மிலைந்தமையைச், "சுந்தரத் துணர்மென் தும்பை தொடுத்திடு பிணையல் சேர்த்தி" எனவும் (4:4:11), "தும்பையஞ் சிகழிகை மவுலி சூட்டினான்" (4:3:24) எனவும் முறையே கச்சியப்பர் குறிப்பிட்டு

வப்பர். வெற்றி பெற்றவுடன் வாகைப்பூச் சூடும் மரபினை, "மாற்றலர் வன்மையை அழித்துப் புனைவன் வாகை" (4:4:3) என்னும் சூரபன்மன் கூற்றில் போற்றுவர்.

காஞ்சி

'இத்தன்மையதொன்றைச் செய்ய ஆற்றேனாயின் இன்ன வாறாகக் கடவேன்' என்று கூறும் வஞ்சினக்காஞ்சியில், சில கதைமாந்தர்களின் வஞ்சினத்தைப் புகலுவர்.

"கன்னலொன் றளவை தன்னில் கந்தவேள் ஒற்றன் யாக்கை
சின்னபின் னங்களாகச் செய்வேன் செய்தி டேனேல்
பின்னுயிர் வாழ்க்கை வேண்டேன் யான்பிறந் தேனு மல்லேன்
என்னொரு சிலையும் யானும் எரியிடைப் புகுவேன்" (4:3:320)

என்று வீரவாகுவை வெல்வது குறித்துப் பானுகோபன் உரைத்த நெடுமொழியும்,

"வெஞ்சமர்க் காற்றல் இன்றிவெருவிப் போய் நின்று
வஞ்சனை புரிந்து நம்மை மாயத்தால் வென்று மீண்டும்
உஞ்சனன் இருந்த கள்வன் உயிர்குடித் தன்றி ஐயன்
செஞ்சரண் அதனைக் காணச் செல்லுவ தில்லை யானே"
(4:6:3)

என்று பானுகோபனை வெல்வது குறித்து வீரவாகு உரைத்த சூள்மொழியும்,

"இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்"

என்ற தொல்காப்பிய மரபினைக் கவிஞர் போற்றியிருத்தலுக்குத் தக்க சான்றுகளாகும்.

உழுவலன்பு பற்றிய சாக்காட்டை மூதானந்தம்[43] என்பர். சூரபதுமன் மடிந்தான் என்ற துயர்ச்செய்தி செவிப்புலம் எட்டும் அளவில் உயிர் நீத்த அவன் மனைவியாம் பதுமகோமளையின் பண்பினைக்,

*"காவல் மன்னவன் இறந்தனன் எனுமுரை கன்னத்துள்*
*மேவு மெல்லை யிலசனி ஏறுண்ட வெம்பணி யேபோல்*
*தேவி யாகிய பதுமகோ மளையெனுந் திருமங்கை*
*ஆவி நீங்கினள் தலையளி ஆகிய ததுவென்றோ"* (4:15:2)

என்று இயம்பி, கணவனொடு முடிந்த படர்ச்சியாகிய மூதானந்தத்தைக் குறிப்பிடுவர்.

இறந்த தாரகன் மிசை, 'ஆழ்ந்த கடல் படியும் அம்மென் மயில்' (1:22:2) போன்று வீழ்ந்து புலம்பிய சவுரி (தாரகன் மனைவி) தன் மகனிடம் 'தீ முற்றருதி' என உரைக்க, அவன் அன்னையைப் பணிந்து அதனை விலக்குமாறு வேண்ட, அவள் மறுத்துரைத்ததால் தீ வளர்க்க உடம்பட்டான் என்ற செய்தியை,

*"நற்றாய் மொழிந்ததனைக் கேட்டு நடுநடுங்கிப்*
*பொற்றாள் பணிந்தென்னைப் போற்றி யிருத்தியெனச்*
*சொற்றா னதுமறுத்துத் தோகை சுளித்துரைப்ப*
*அற்றாக வென்றான் அசுரேந் திரனென்பான்"* (1:22:18)

என விளக்குவதன்மூலம் 'கற்புடை மனைவி தன் கணவன் இறந்த விடத்து அவனொடு எரிபுகுதலை வேண்ட அச்செயலை விலக்குவாரோடு அவள் மாறுபட்டுக் கூறும் பாலைநிலைக்கு[44] இலக்கியமாக அவ் 'வந்தமிலாக் கற்பிற் சவுரி'யின் (1:22:1) பண்பினைப் பகர்வர்.

தன் காதலன் சாம்பரானமை உணர்ந்து இரங்கிப் புலம்பிய இரதி, சிவன்பால் சென்று முறையிட, அதற்கவன், 'கவுரியை வரை போதில் உனது கேள்வனை அளிக்குதும்' (1.5:28) என்று கூற, 'வன்னமா முகில் வரவு பார்த்து உறைதரும் மயில்' (1:5:29) போல் இமயத்தில் ஓர்பால் தவமேற்கொண்டு அவள் உறைந்தமையைத்

,, தன்னுறு கணவன் துஞ்சத் தாபத நிலையளாகி
இன்னலை யடைந்தாங் குற்ற இரதி '' (1:10:85)

எனக் குறிப்பிட்டுக் 'காதலனை இழந்த மனைவி தவம் புரிந்தொழுகுதலாகிய தாபதநிலையை'ச்[45] சுட்டுவர்.

**முடிவுரை :**

தமிழிலக்கிய மரபுகளாம் அகம், புறம் என்னும் இவ்விரு மரபுகளில் முன்னதனையே பெரிதும் கச்சியப்பர் போற்றுவர். குறிப்பிட்டதொரு பொருள்நூல் நெறியினைத் தழுவாது, அவர்தம் காலத்துப் பொதுவாக நிலவிய பொருள்நூற் கொள்கையினைப் பெரும்பாலும் போற்றியிருப்பினும், சில இடங்களில் உரையாசிரியர் இளம்பூரணர், நக்கீரர்) கருத்துக்களையும் தழுவிச்செல்வர். களவின் வழிவந்த கற்பாக வள்ளித்திருமண நிகழ்ச்சிகளைச் சிறப்பாகப் பாடியிருப்பினும், களவுநெறியைப் 'பழிநெறி' (6: 24:191) எனக் குறவர் கூற்றில் கூறியிருத்தலால், அந்நெறியினும் கரணமுறையிலமைந்த கற்பியல் நெறியே விழுமியதென்பது ஆசிரியர்தம் உட்கிடக்கையாகக் கருதலாம். தெய்வக் கதையைத் தமிழில் படைக்கும்பொழுது அகமரபில் ஏற்படும் மாற்றங்களை ஆசிரியரால் தவிர்க்க இயலவில்லை.

## மேற்கோள்


1. தொல். பொருள்., நச்சினார்க்கினியர் உரை, ப. 2.
2. தொல். பொருள்., இளம்பூரணர் உரை, ப. 2.
3. இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்), 'தொன்மை மிக்க தமிழ்ப் புராண மரபுக் கதைகள்', வையை: மலர் மூன்று, பக். 422-423.
4. அகப்பொருள் விளக்கம், நூற்., 31, 32.
5. குறுந், 49.
6. தொல். பொருள்., நூ. 90.
7. .............., நூ. 108.

8. தொல். பொருள்., நூ. 112.
9. இறையனார் அகப்பொருள், நக்கீரர் உரை, ப. 69.
10. தொல். பொருள்., நூ. 95.
11. அகப்பொருள் விளக்கம், நூ. 34.
12. இறையனார் அகப்பொருள், நக்கீரர் உரை, பக். 34-36.
13. தொல். பொருள்., நூ. 112.
14. ..............., நூ. 135.
15. அகப்பொருள் விளக்கம், நூ. 144.
16. மு. இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப. 68.
17. அ. ச. ஞானசம்பந்தன், அகமும் புறமும், ப. 20.
18. தொல். பொருள்., நூ. 99.
19. திருக்குறள், 1131.
20. அகப்பொருள் விளக்கம், நூ. 145, 146.
21. நற்., 34.
22. தொல். பொருள்., நூ. 105.
23. ..............., நூ. 44.
24. வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், பக். 88-89.
25. ..............., ப. 127.
26. Kamil V. Zvelebl, 'Skanda-Murukan', Journal of Tamil Studies, June 1978, P. 7.
27. தொல். பொருள்., நூ. 190.
28. ..............., நூ. 53.
29. அகப்பொருள் விளக்கம், நூ. 29.
30. ..............., நூ. 211.
31. தொல். பொருள்., நூ. 54.
32. தொல். பொருள்., இளம்பூரணர் உரை, ப. 6.
33. ..............., ப. 66.
34. திருக்குறள், 1091.
35. திருக்கோவையார், 5.
36. தொல். பொருள்., நூ. 89.
37. ..............., நூ. 65.

38. புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப் படலம், 55.
39. புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சிப்படலம், 20.
40. தொல். பொருள்., நூ. 71.
41. மு. இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப. 115.
42. தொல். பொருள்., நூ. 77.
43. தொல். பொருள்., நச்சினார்க்கினியர் உரை, நூ. 78.
44. தொல். பொருள்., நூ. 77.
45. ............... நூ. 77.

# 6

# கச்சியப்பரின் புலமைப் பாங்குகள்

பெருங்காப்பியங்களையோ அல்லது புராணங்களையோ படைக்கப் புகும் கவிஞர்கட்குத் தாம்பாடப் புகுந்த பொருளைப்பற்றிய தெளிவான அறிவோடு பல்வேறு துறைபற்றிய அறிவும் நிரம்பியிருத்தல் இயல்பு. கள்வனைக் குறித்துச் சொல்ல நேரின் களவுநூல் கருத்துக்களை விளக்குதலும்,[1] மணிகள் விற்கும் தெருக்களைப் பாட நேர்ந்தால் ஒன்பான் மணிகள்பற்றிய செய்திகளை ஆண்டுத் தருதலும்,[2] கதைமாந்தர் ஒருவரை அராத்தீண்டின் பாம்பின் சாதி வகைகள், நஞ்சு ஏறும் விதம், நஞ்சினை இறக்கும் முறை முதலிய தொடர்புள்ள செய்திகளைப் பகர்வதும்[3] காப்பியக் கவிஞர்கள் வகுத்த மரபுகளாகும். இவைகள் காப்பியப் படைப்பாளர்களின் அகன்ற புலமையைக் காட்டும். கச்சியப்பர் அத்தகு மரபினைத்தழுவிப் பல்வேறு துறை பற்றிய செய்திகளைத் தம் நூலுள் உரிய இடத்தில் விளக்குவர்.

## 1. இசையும் கூத்தும்

சூரபன்மனது திருவோலக்கச் சிறப்பை விவரிக்கும்போது கின்னரர் முதலியோர் கிளத்தும் மங்கல இசையை,

*'' தென்னுறுபாலை குறிஞ்சியே மருதஞ் செவ்வழி யென்னுநா னிலத்திற்*
*பின்னகப்புறமேஅருகியல்மற்றைப்பெருகியல்உறழவெண் ணிரண்டாய்*
*மன்னிய நாதத் திசைகளிற் பிறவில் வரம்பில வாயபாட் டதனுட்*
*கின்னரர் சித்தர் இயக்கர்கந் தருவர் கிளத்துமங் கலத்தன இசைப்ப ''*

**(2:39:23)**

என்று பாடி, பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்னும் நான்கினையும், அகம், புறம், அருகியல், பெருகியல் என்னும் நான்குடன் உறழப் பதினாறாகப் பிரிபடும் பண்வேறுபாட்டின் நுட்பத்தை நயமுற விளக்குவர். பருந்து பறக்கும் பொழுது மெள்ள மெள்ள மேலெழுந்தாற் போல மிடற்றிசை படிப்படியாக உயர வேண்டும்; அப்பருந்தினைத் தொடர்ந்து அதன் நிழல் பின் செல்லுதல்போல் யாழ் இயக்கம் தொடர வேண்டும் என்னும் இசை நூலார் கருத்தைச் சிவபெருமானைப் புகழ்ந்து நாரதரும், விஞ்சையரும் பாடுதலை விளக்கும்பொழுது சுட்டுவர் (1:10:1). பிரிவுக்குரிய பாலைப்பண்ணை, ''நைவளம் பழுநிய நயந்தெரிபாலை''[4] என்று சிறுபபாணாற்றுப்படை மொழியும். முருகனொடு கூடிய பின்னர்ப் பிரிவுத்துயரில் வாடி வருந்தும் வள்ளியை, ''நைவள மேயென நவிலுந் தீஞ்சொலாள்'' (9:24:146) என்று சுட்டிச் சங்க இலக்கிய மரபில்காணும் பிரிவுக்குரிய பாலைப் பண்ணைக் குறிப்பிடுவர்.

கூத்துக்கலை நாற்பொருளையும் பயக்கும் என்பதும், மனஉறுதி, உடல் வளம், இன்ப உணர்ச்சி முதலிய நற்பண்புகளை அளிக்கவல்லது என்பதும் இக்கலை தரும் இன்பம் தவத்தினர் அடையும் இன்பத்திற்கு இணையானது என்பதும் பரதநூலில் காணப்படும் செய்தியாகும்.[5] இந்நூலைக் கச்சியப்பர் 'நாடகநூல்' (2:40:14) என்று பல்லிடங்களிலும் சுட்டுவர். மகேந்திர நகரத்தாரும், சூரபன்மனும் கூத்துக்கலையினைக் கண்டு மகிழ்ந்த திறத்தைப் பல இடங்களில் பாங்குற மொழிவர். சூரபன்மன் முடிசூட்டு விழாவின்போது அரம்பையர் முதலியோர் 'பரத நூல்' விதியின்படி நரம்பிசை, மிடற்றிசை, தாள இசை இவற்றினோடு இணங்கிய தேசிகம், வடுகு, சிங்களம் என்னும் மூன்று கூத்துக்களையும் ஆடினர் என்றும் (2:16:13), 'நாடக நூன்முறை' நுனித்து நன்றுணர்ந்த கோடியர், கழாயினர், கூத்தர் முதலியோர் தம் ஆடற்கலையால் மகேந்திர மக்களை மகிழச் செய்த வண்ணமிருந்தனர் (2:40:14) என்றும் பாடுவர்.

## 2. மந்திரக்கலை

> *" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்*
> *மறைமொழி தானே மந்திரம் என்ப "*[6]

என்று மந்திரத்தின் பொருளை விளக்குவர் தொல்காப்பியர். "தொல்காப்பியம் கூறும் எழுவகைச் செய்யுட்களில் ஒன்றாதலின் இதன் தொன்மையும் தமிழ்த் தோற்றமும் பரந்த வழக்கும் பெறப்படும்" என்றும், "தமிழ்க் காப்பியங்களில் மந்திரம் பற்றிய குறிப்புக்களும் அவற்றின் வியத்தகு பயன்களும், தொலைக்கல் போல் ஆங்காங்கே காணப்படும்"[7] என்றும் அறிஞர் கருதுப. கச்சியப்பர் இத்தகு மரபினைப் போற்றி மந்திரக்கலை பற்றிய குறிப்புக்களையும் அவற்றின் பயன்களையும் விரித்துரைப்பர்.

மந்திரம் என்ற சொற்கு நினைப்பவரைக் காப்பது என்று பொருள். இது தமிழ் மரபும் ஆகும்.[8] வீரவேள்வி இயற்றப் புகும் சூரபன்மனுக்குப் பகைவர் செய்யும் இடையூறுகள் குறுகாதிருத்தற்கு 'மிருத்தியுஞ்சய' மந்திரத்தை இருடி, சந்தசு முதலிய உறுப்புக்களோடு சுக்கிரன் உரைத்தமையினை,

> *" நூறொடர் சேள்வி சான்றோய் நோற்றுநீ இருக்குமெல்லை*
> *ஊறுசெய் கிற்பர் ஒன்னார் உனையவை குறுகா வண்ணங்*
> *கூறுதுந் திறனொன் றென்னாக் கூற்றுவற் கடந்த மேலோன்*
> *மாறின்மந் திரம தொன்று மரபுளி வழாமல் ஈந்தான்"*
> (2 : 8 : 32)

என நவிலுவர். பகைவரது மந்திரத்தால் தமக்கு ஏற்பட்ட இன்னலிலிருந்து நீங்கப் பிறிதொரு மந்திரத்தைப் பயன்படுத்தல் சுட்டப்பெறுதலின் (2:43:61) மந்திரத்தை மந்திரத்தால் வெல்லும் வழக்கம் இருந்தமையினை உணர்கின்றோம். இவையன்றிச் சிவன்,

முருகன் ஆகியோருக்குரிய ஐந்தெழுத்து, ஆறெழுத்து மந்திரங்களும் ஆங்காங்கே இயம்பப்பெறும் (3:11:4,5; 2:25:2).

## 3. சூதாட்டக்கலை

திருமால் முன்னிலையில் சிவனும், உமையும் ஆடிய சூதாட்-டத்தை விரிவாகப் பாடுவர்.

*"பஞ்சென வுரைசெய்வர் பாலை என்பர் ஈர்*
*அஞ்சென மொழிவர் அஞ்சென்பர் அன்றியுந்*
*துஞ்சலின் நடம்என்பர் துருத்தியீ தென்பர்*
*விஞ்சிய மகிழ்வொடு வெடியென் றோதுவார்"*

*"அடியிது பொட்டைஈ தென்பர் அஃதென*
*முடிவில் குழூஉக்குறி முறையின் முந்துறக்*
*கடிதினில் கழறினர் கவறு சிந்தினார்*
*நொடிதரு கருவிகள் எதிரின் நூக்கினார்" (6:14:167,168)*

மேற்கண்ட பாடலில் கவறாட்டத்தில் பயன்படுத்தும் பஞ்சு, பாலை, ஈரைஞ்சு, அஞ்சு, நடம், துருத்தி, பொட்டை, வெடி முதலிய குழூஉக்குறிகளைக் குறிப்பிடுவர் (6:14:165). சூதாடுவோர் எதி-ரெதிராக அமர்ந்துகொண்டு சூதாடுவதற்குரிய பலகையில் வல்லநாய் நிரைத்துச் சூளுரைத்துக் கட்டைகளை உருட்டுதல் (2:40:5) முதலிய செய்திகளும் விளம்பப்படும்.

## 4. சோதிடப் புலமை

மிருகண்டு முனிவரின் தவத்தின் பயனாய் மருத்துவதி, மார்க்கண்டேயரைக் கருவுயிர்த்தபொழுதுள்ள கோள் நிலைகளைச் சோதிடப்புலமை வெளிப்படும்வண்ணம், 'பங்குனித் திங்களில் இரேவதி நாளில் மிதுனஓரையில் சுக்கிரனும், குருவும் உச்ச

ராசியை அடைந்து நன்மை பெற்றிருக்க மற்றைப் பரிதி முதலிய கோள்கள் நட்பு, ஆட்சி ஆகிய இடங்களில் திகழ மார்க்கண்டேயர் புவியில் பிறந்தார்' என்று (2:5:186-187) உரைப்பர். ''கணித நூலோர் ஓதுபங் குனியின் திங்கள் உத்தரம் இன்றே யாரும் ஈதுநன் முகூர்த்தம் எந்தாய்'' (1:8:35) எனத் தன் மகளை வதுவை புரிய விருக்கும் சிவனிடம் இமவான் கூறியதாகப் பாடுதலும், பானுகோபன் சரமாரி பொழிதலைச் சுக்கிரன் (வெள்ளி) சூரியனுக்கு முன்றோன்றி ஆட்சியில் இருக்கும் காலத்துச் சூற்கொண்ட மேகங்கள் மழை பொழிதலோடு ஒப்பிட்டுரைத்தலும் (4:3:185) ஆசிரியன் சோதிடப் புலமையைக் காட்டா நிற்கும்.

## 5. பொன்மம் பற்றிய அறிவு

உலோகங்களைப் பற்றிய செய்திகளை ஆசிரியர் உவமையாகப் பயன்படுத்துவர். இரசவாதம் தெரிந்தவர் இரும்பைப் பொன் னாக்குவர் என்பது ஒரு நம்பிக்கை. சிறந்தவர் பார்வையால் இரும்பு செம்பொன் ஆகியமை, முருகன் பார்வையால் சூரபன்மன் இகல் நீங்கி நல்லவனாகியதற்கும் (4:13:495), இன்னாத இரும்பை இலங்கு பொன்னாக்கும் வல்லோன் தீயோரை நல்லோராக்கும் சிவனுக்கும் (6:21:91) உவமையாக ஆளப்பெற்றுள்ளன. வெள்ளியை மிகுதியாக வேறொரு உலோகத்தோடு கலந்தால் பழைய உலோகத்தின் தன்மை தோன்றாது என்பதனை ''வெள்ளி மிகப் புணர்க்கின் மேலையுரு நின்றிடுமோ'' (2:8:24) என்று சிலேடைப் பொருளிலும் சுட்டுவர். இரசவாதம் செய்யும் முறைகளை மார்க்கண்டேயப் படலத்தில் விரிவாக விளக்கி (2:5:131-137) பொன்மம் பற்றிய தமது அறிவைப் புலப்படுத்துவர்.

## 6. பாலியல்

'பாலியல் அறிஞராம்' தொல்காப்பியரைத் தழுவி ஆசிரியர் மொழிந்த கருத்துக்களை அகமரபில் கண்டோம். வடநூற்புலமை மிகுதியுமுடைய கச்சியப்பர், 'காம சூத்திரம்', 'மதனாகமம்' என

மொழியப்படும் நூல்களையும், அந்நூல்கள் நுவலுங் கருத்தினையும், அந்நூல்களின் நெறியில் இணைவிழைச்சில் ஈடுபடுவோரையும் ஆங்காங்கே சுட்டிச் செல்லுவர். காசிபரும், மாயையும் புணர்தலை,

*'' தோமறு முனிவரன் சுரதத் தாற்றினாற்*
*காமரு மதனநூல் கருத்திற் சிந்தியாத்*
*தேமொழி மயிலொடு செறிந்து போகமார்*
*பூமியி னோரெனப் புணர்தல் மேயி னான்''* (2:3:13)

எனவும்,

இந்திரன் இந்திராணியுடன் மருவுதலை,

*'' ......................... காமத் தின்பமே*
*துய்த்தனன் மதனநூல் துணிபு நாடியே''* (5:5:61)

எனவும் பாடுவர். இல்லறத்தைத் துறந்து தவம் புரியச் செல்லும் இந்திரனது மனநிலையை மாற்றுவான் வேண்டி, வியாழன் வேள்நூலின் சிறப்பினை விளக்கமுற மொழிகுவன். இத்தருணத்தில் வேள்நூலின் கருத்துக்களைத் தொகை, வகை, விரியாக இருபத்தாறு பாக்களில் (5:5:25-50) விளக்குவதன் வாயிலாகப் பாலியல் பற்றிய அகன்ற புலமையினைக் காட்டுவர்.[9]

## 7. முந்துநூற் புலமை

காப்பியம் படைக்கும் புலவர்களின் பாக்களில் முந்துநூல்கள் ஆட்சிசெய்தல் ஓரிலக்கிய மரபாகும். தொல்காப்பியர் முதலிய இலக்கணிகளைத் தழுவி அகம், புற மரபுகளை ஆசிரியர் அமைத்த திறனை முன்னர்க் கண்டோம். ஈண்டு புறநானூறு, திருக்குறள், திருவாசகம், பெரியபுராணம், கம்பராமாயணம் முதலிய இலக்கியங்களின் தோய்வு புலப்படும்வண்ணம் கவிஞர் படைத்துள்ள வற்றில் ஒருசிலவற்றை இவண் காண்பாம்.

தான் விரும்பியாங்கு வீரவேள்வி இயற்றி, சிவனிடமிருந்து வரமும், வலியும் பெற்று வெற்றிக்களிப்புடன் வரும் மைந்தர்களைக் கண்டு மகிழ்ந்த மாயையினை, 'ஈன்ற ஞான்றினும் உவந்தனள்' (2:12:5) என்று சுட்டி, 'ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே'[10] என்ற புறநானூற்றுத் தொடரை நினைவுறுத்துவர். 'உண்டு போரெனின் உளங்களிப்பவன்' (4:12:468) என்று சிங்கமுகனைச் சூரபன்மன் சுட்டுமிடத்தில், 'போரெனிற் புகலும் புனைகழல் மறவர்'[11] என்னும் புறப்பாட்டின் ஒலியும், வீரவாகுவை இன்று கொன்று அழிக்கவில்லையெனின்,

*''காசாற் பொலியும் அகல் அல்குலின் காமம் வெஃகி*
*வேசாக்கள் பின்செல் வறியானில் விளங்க யானே''*
(4:11:41)

எனப் புகலும் பானுகோபன் சூளுரையில்,

*''தீதில்நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்*
*பல்லிருங் கூந்தல் மகளிர்*
*ஒல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே''*[12]

என்னும் சோழன் நலங்கிள்ளியின் வஞ்சினக் குரலும் கேட்பதை உணர்கின்றோம்.

வெறுக்கையும் வேந்தியற்கையும் வெறுத்துத் துறத்தலை உன்னிய இந்திரனுக்கு உலகாயத மதத்தின் சிறப்பை விவரிக்கப் போகும் வியாழன்,

*''புன்றொழி லாகிய பொய்யும் வாய்மையாம்*
*ஒன்றொரு பெரும்பயன் உதவு மாயிடின்''* (5:5:7)

என்று எண்ணியதாக உரைக்கும் பகுதியில், ''பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்''[13] என்ற

குறளின் மணத்தைக் கமழச் செய்வர். ''பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்''[14] என்னும் தமிழ் மறைப்பொருளை,

*''முற்பக லோர்ப்பழி முடிக்கின் மற்றது*
*பிற்பகல் தமக்குறும் பெற்றி என்னவே''*

(4:4:365)

என உவமையாக ஆண்டு முன்னோர்மொழிபொருளைப் பொன்னே போல் போற்றுவர்.

மகேந்திரச் சிறையில் அசுரர்களின் சொல்லொணா இன்னலுக்கு ஆட்பட்டுழலும் சயந்தன்,

*''............................ சிவனே சிவனேயென்*
*றிங்கு நினதடியேம் எல்லேங்களும் அரற்றல்*
*நங்க ளுயிர்க்குயிராம் நாயகநீ கேட்டிலையோ''*

(3:9:60)

என்று சிவனைக் குறித்து ஓலிடும் மொழிகளில்,

*''.......................... சிவனே சிவனேயென்று*
*ஓலம் இடினும் உணராய் உணராய்காண்''*[15]

என்னும் திருவாசகத்தின் தோய்வு புலப்படும்.

சம்பந்தர் சிவபெருமான் அருளால் முத்துப்பந்தரும், முத்துச் சிவிகையும் பெற்றமையும், பெற்ற அவ்வீரிடங்களிலும் சேக்கிழார் சம்பந்தரை 'முத்தமிழ் விரகன்', 'மும்மைநிலைத் தமிழ் விரகர்' என்று சுட்டியிருத்தலும் பெரியபுராணத்தில் காணப்படும் செய்தியாகும். சூரபன்மனது அவைக்களத்தில் வறிதே நிற்கும் வீரவாகு, குமரவேள் அருளால் அரியணை பெற்றமைக்கு உவமையாக அச்செய்தியை அமைத்து,

"நித்தி லப்படு பந்தருஞ் சிவிகையும் நெறியே
முத்த மிழ்க்கொரு தலைவனாம் மதலைக்கு முதல்வன்
உய்த்த வாறெனக் குமரவேள் வீரனுக் குதவ
அத்த லைப்பட வந்தது மடங்கலேற் றணையே"

(3:1:252)

என அழகுறப் பாடுவர். ஞானசம்பந்தரைச் சேக்கிழாரின் மொழி வழியாகவே குறிப்பிடுதல் கருதத்தக்கது.

இந்திரசித்து, இராவணனுக்கு உறுதியுரைக்கையில்,

"ஆதலால், அஞ்சினேன் என்று அருளலை, ஆசைதான் அச்
சீதைபால் விடுதி ஆயின், அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்; உன்மேல்
காதலால் உரைத்தேன் என்றான் உலகுஎலாம்
கலக்கிவென்றான்"[16]

எனக் கம்பர் பாடுவர். தந்தையாம் சூரபன்மனுக்குப் பானுகோபன் இறுதியாக உறுதி கூறும்பொழுது,

"வெஞ்ச மஞ்செய வல்லவர் கிடைத்திடின் மிகவும்
நெஞ்ச கந்தளிர்ப் பெய்துவன் நேரலர் சமருக்
கஞ்சி னேன்என்று கருதலை அரசநீ இன்னும்
உஞ்சு வைகுதி யோவெனும் ஆசையால் உரைத்தேன்"

(4:11:20)

என்று கூறுவன். கம்பரின் வழிநின்று கவிஞர் மொழிதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும்.

## 8. சொல்லாட்சி

சங்ககாலப் புலவர்கள் வடமொழிச் சொற்களைப் பெரும்பாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளாது அவற்றின் மொழிபெயர்ப்பை ஏற்றுக்

கொள்வர். 'உத்தரம்' என்பதை 'நாளொடு பெயரிய கோளமை விழுமரம்[17] என்ற தொடராலும், 'கருப் பக்கிரகம்' என்பதை கருவொடு பெயரிய காண்பின் நல்லில்'[18] என்ற தொடராலும் குறிப்பர். இது சங்ககாலப் புலவர் நெறியாகும்.[19] முருகபத்தியில் ஆழங்கால்பட்ட அருணகிரியார் போன்றோர் இம்மரபினை மீறி வடசொற்களையும் வடவெழுத்துக்களையும் மிகுதியாகக் கலந்து பாடிவந்தனர். பத்திப் பேராறு பெருக்கெடுத்துப் பாசுரங்களாக வருகையில் மொழி தடைக் கல்லாக இருத்தலாகாது என்று இதற்கு நாம் அமைதி காணலாம். கச்சியப்பர் முருகபத்தியில் சாலத் தோய்வுடையவரெனினும் சங்கப் புலவர் நெறியைத் தழுவியே பெரும்பாலும் வடசொற்களை மொழி பெயர்த்து வழங்கியிருப்பது உளங்கொளற்குரியது.

தருமகோபனை 'அறத்தினை வெகுளும் நாமத்தான்' (3:20:17) என்றும், சகத்திரவாகுவை 'ஆயிர மொய்ம்பர்' (3:16:14) என்றும், அக்கினிமுகனைத் 'தழல் முகன்' (4:8:133), 'தீமுகன்' (4:9:6), 'கனல்முகன்' (4:8:138) போன்ற தொடராலும், விரசிங்கனை 'மடங்கற்பேரோன்' (3:3:16) என்றும் 'நவவீரரை 'ஒன்றிலாப்பதின்மர்' (1:12:24) என்றும் தமிழ்த்தொடரால் வழங்கிச் 'சங்கப்புலவர் மரபினைப்போற்றுவர். போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் பிணங்களைக் குறிப்பிடும்பொழுது மட்டும் 'களேவரம்' (4:12:440) என்ற வடசொல்லையே பயன்படுத்துதல் இவரதியல்பு.

எளிய சொற்களால் செம்பாகமாகப் பாடுதல் கச்சியப்பரின் பொதுவியல்பெனினும் சிலவிடங்களில் அரிதாகக் கூறிப் பொருள் புலப்படுத்தும் பாங்கினையும் இவரிடம் காண்கின்றோம். பிரமன் மகன் காசிபன் என்பதும், அக்காசிபன் மகன் சூரபன்மன் என்பதும், அச்சூரபன்மன் மகன் பானுகோபன் என்பதும் நாமறிந்த செய்தி. இக்கால்வழிச் செய்தியைச் சுருக்கமாக உணர்த்துமுகமாகப் பானு கோபனை 'அயன்மகன் மதலைசேய்' (4:3:36) என்று சுட்டுவர். திருமால், பிரமன், காசிபன் என்ற கால்வழியைக் குறிப்பிடும் வகையில் காசிபனை 'நீனிறம தாகுஞ் செல்லுறழு மேனிதரு செம்மல் அருள்

மைந்தன்' (2:1:79) என்றும் மொழிவர். ஒரே சொல்லைப் பல் பொருளில் ஆளுதலும் (1:17:31) இவர் பண்பாகும்.

**9. நடை**

''சுவாமிகளது தமிழ் நடை மிக எளிது. இலக்கண இலக்கிய அறிவு சிறிதுடையாருங் கற்றுய்வடைதலே சுவாமிகளது நோக்கம் போலும். சொற்களும் சொற்றொடர்களும் சால இனியன. பிற்காலத் தமிழ்நடைத் தலைவராகிய ஆறுமுகநாவலர் பெருமானது நடை கந்தபுராண நடையே,''[20] எனக் கச்சியப்பரின் நடைச்சிறப்பனைப் பாராட்டுவர் சு. சிவபாதசுந்தரனார். பாட்டின் இயக்கம் நடையெனப் படும். 'புலவன் கருதிய பொருளைச் சொல் குறிக்கும்; ஒலி உணர்த்தும்; நடை எடுத்துக்காட்டும்' என்று நடைச்சிறப்புணர்த் துவர் டாக்டர் வ.சுப மாணிக்கனார்.[21] சூழலுக்கும், சுவைகட்கும் ஏற்றவாறு நடையினை வேறுபடுத்திப் பாடுதல் கச்சியப்பர் இயல்பு.

### அ) உவகை நடையும், வெகுளி நடையும்

கதைமாந்தர்கள் மிகுதியாக மகிழினும் வெகுளினும் கம்ப ரைப்போல் முற்றுச் சொற்களைத் தொடுத்தல் இவரது நடைப் போக்காகும். மகேந்திரக் காவலாளர் தன்னைக் கடுமையாகத் தாக்கிய பொழுது வெகுளி முற்றிய வீரவாகுவின் செயற்றிறத்தை,

*''மிதித்தனன் கொதித்தனன் விடுத்திலன் படுத்தனன்*
*சதைத்தனன் புதைத்தனன் தகர்த்தனன் துகைத்தனன்*
*உதைத்தனன் குதித்தனன் உருட்டினன் புரட்டினன்*
*சிதைத்தனன் செகுத்தனன் செருக்கினன் தருக்கினன்''*

(3:14:21)

என்றும், மாயையின் அறிவுரைப்படி 'அமுதசீத மந்தரகூடம்' கொணர்ந்து, இறந்துபோன தம் சுற்றத்தார் அனைவரையும் எழுப்பிய பின்னர், சூரபன்மன் உற்ற உவகைத் திறத்தை,

"மகிழ்ந்தனன் ஆர்த்தனன் வானவர் தம்மை
இகழ்ந்தனன் விம்மிதம் எய்தினன் யாயைப்
புகழ்ந்தனன் மேனி பொடித்தனன் நெஞ்சந்
திகழ்ந்தனன் நன்னகை செய்தனன் அன்றே" (4:13:311)

என்றும் பாடும் பகுதிகளில் முற்றுச் சொற்களை மிகுதியும் ஆண்டு மிகு உணர்ச்சியைப் புலப்படுத்துவர்.

ஆ) அவல நடை

உடன் பிறந்த தம்பியரும், பெற்ற மக்களும் மடிந்த ஞான்று புலம்பித் தவிக்கும் சூரபன்மன் நிலையினைப் பல பாக்களில் வடித்து மனித இயல்பிற்கு அப்பாற்பட்ட அவுணர்கோனையும் மனித நிலைக்குட்பட்டவனாகக் காட்டுவர். இவ்வாறு காட்டுதற்கு அவரது மொழிநடையும் துணைபுரிந்தது என்று நவிலலாம். பானுகோபன் இறந்தபொழுது தரையில் வீழ்ந்து சூரபன்மன் செயலற்றுப் புலம்புதலை,

"மைந்தவோ என்றன் மதகளிறோ வல்வினையேன்
சிந்தையோ சிந்தை தெவிட்டாத தெள்ளமுதோ
தந்தையோ தந்தைக்குத் தந்தையிலான் கொன்றனனோ
எந்தையோ நின்னை இதற்கோ வளர்த்தனனே"
(4:11:64)

என்று துயரச்சுவை மிகுமாறு பாடுவர். மைந்தனைக் குறித்து வரும் ஒவ்வொரு சொற்களின் இறுதியிலும் கழிவிரக்கப்பொருளை நல்கும் ஓகார இடைச்சொல்லை[22] அமைத்து அவலச் சுவையினை மிகுவிப்பது பாராட்டுதற்குரியது.

## 10. நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்

கச்சியப்பர் வடமொழிக் காந்தத்தைப் பாடுபொருளாகக் கொண்டாலும் பிறந்த நாட்டின்மீதும், பேசும் மொழியின்மீதும் தமக்குள்ள பற்றினைத் தக்காங்கு வெளிப்படுத்துவர். கந்தபுராணக் கதைநிகழ்ச்சி கயிலாயத்தில் தொடங்கினும்(முதனூல்) நாட்டுப்படலம், நகரப்படலம் பாடிக் காஞ்சி மாநகரில் கதைக்குத் தோற்றுவாய் செய்வதன் மூலமாகத் தாம் பிறந்த தொண்டை நாட்டை உளம் குளிரப் பாராட்டுவர். ''செந்தமிழ்க்கு வரம்பெனச் செப்பிய முந்து காஞ்சி'' (அவை : 19), 'தண்டமிழ் வளநகர்' (நாடு:51) எனக் காஞ்சி நகரையும், 'தீந்தமிழின் வைப்பான தெக்கிணதேயம்' (2:30:2) என்று தென்னாட்டையும், தமிழோடு இயைபுறுத்திப் போற்றுவர். தமிழ்நாட்டில் திகழும் திருமுதுகுன்றத்தைக் 'காசியின் விழுமிதான முதுகுன்றவரை' (1:23:13) என்று போற்றிப் பிறந்த நாட்டின் மீதுள்ள பற்றினை வெளிப்படுத்துவர்.

குறிஞ்சிக் கடவுளாம் தமிழ் முருகனைத் தமிழோடு இயைத்துப் பார்க்கக் கந்தபுராணக் கதையில் மிகுதியும் வாய்ப்பில்லையெனினும் தக்க அடைமொழிகளால் முருகனைத் தமிழோடு புணர்த்திப் புகலுதல் இவர்தம் இயல்பாம். 'குழங்கல் வேட்டுவக் கோதையர் ஆடலுங் கழங்கு நோக்கிக் களிப்பவன்' (1:21:13), 'குன்று தொறாடல் செய்யுங் குமரவேள்' (1;17:32;4:13:71) என்னும் தொடர்களால் முருகனைக் குறிஞ்சிக் கடவுளாகக் காட்டுவர். 'சங்கத் தவர்க்குள் தலையாந் தமிழ்ப்புலவன்' (4:12:456), 'திருத்தமிழ் மதுரை தன்னிற் சிவன் பொருள் நிறுக்கு மாற்றால் உருத்திர சருமனாகி உற்றிடு நிமலன்' (4:3:261) என்னும் தொடர்களால் முருகனைப் பற்றிய தமிழ்நாட்டுப்புராண வரலாற்றுடன் கந்தனை இயைபுறுத்திப் பாடுவர். 'சங்கத்தமிழின் தலைமைப் புலவா தாலோ தாலேலோ'[23] என்ற குமரகுருபரரின் வாக்கு ஈண்டு நினையத்தகும்.

அகத்தியர் வரலாற்றை வடமொழிக் காந்தத்தில் கூறியாங்கு விரிவாகப் பாடிவரினும், ''தமிழ்தேர் வள்ளல்'' (2:27:45), ''சந்த நூற்றமிழ்த் தாபதன்'' (2:23:15), ''தமிழ் நேர் கோமான்'

(2:28:6), ''பைந்தமிழ் முனிவன்' (2:25:2), ''வண்டமிழ் முனிவன்' (2:24:13) போன்ற தமிழ்த் தொடரால் அகத்தியரைச் சுட்டுதலும் கச்சியப்பரின் மொழிபற்றைக் காட்டா நிற்கும்.

## முடிவுரை

காப்பியக் கவிஞர்களின் மரபினைத் தழுவிப் புலமைநலந் தோன்றுமாறு பல்துறைக் கருத்துக்களைப் புராணத்தில் உரியவிடங்களில் விளக்கிச் செல்வர். பாலியற்செய்திகளைத் தொகை, வகை, விரியாகப் பகுத்துக்கொண்டு விரிவாகப் பாடியிருத்தல் குறிக்கத்தக்கது. சங்கச் சான்றோர் நெறியினைப் போற்றி வடமொழிச் சொற்களை இயன்றவரைத் தமிழ்ப்படுத்துவது இவரதியல்பாகும். சூழலுக்கும் சுவைகட்கும் ஏற்றவாறு மொழிநடையினை வேறுபடுத்திப் பாடுதலும் இவரது பண்பாகும். பிறந்த நாட்டின்மீதும் பேசும்மொழியின்மீதும் தாம் கொண்டுள்ள பற்றினைத் தக்காங்கு வெளிப்படுத்துவர்.

## மேற்கோள்


1. சிலப்பதிகாரம், 16:166 — 186.
2. ————, 14:180-199.
3. சீவகசிந்தாமணி, செ.1286.
   திருத்தொண்டர் புராணம், அப்பூதியடிகள் நாயனார் புராணம், செ. 27.
4. சிறுபாண்., 36.
5. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 618
6. தொல். பொருள். ,நூ .480.
7. வ. சுப. மாணிக்கம், திருமூலர் அருளிய திருமந்திரமாலை முந்நூறு, பதிப்புரை, பக். (i)–(ii).
8. —————, ப. (i).
9. காண்க. பின்னிணைப்பு.7.
10. புறம், 278.

11. ———, 31.
12. ———, 73.
13. திருக்குறள், 292.
14. ———, 319.
15. திருவாசகம், திருவெம்பாவை, செ. 5.
16. கம்பராமாயணம், யுத்தகாண்டம், 27:6.
17. நெடுநல்., 82.
18. ———, 114.
19. மா.இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 762.
20. சு.சிவபாதசுந்தரம், கந்தபுராண விளக்கம், ப.6.
21. வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியப் புதுமை, ப.103.
22. நன்னூல், நூ. 243.
23. குமரகுருபரர், ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டு, செய், 375-377.

# III. இயல் மூன்று

1. முருகன் அழகுத் தோற்றங்கள்

2. முருகனும் பிற தெய்வங்களும்

3. முருகனின் மக்கட் பண்புகள்

4. முருகன் முழுமுதற்றன்மை

1

# முருகன் அழகுத் தோற்றங்கள்

உலகில் காணும் அனைத்துச் சமயங்களிலும் இறைவனை உருவத்திருமேனியில் கண்டு போற்றும் மரபு இருந்துவந்துள்ளது. சில அறிஞர்களால் உருவ வழிபாடு கடியப்படினும் அம்முயற்சி முழுதும் வெற்றி பெற்றதென்று கூற வியலாது. தானாகவே இயங்கித் தனித்து நிற்கும் செம்பொருளை இதுதான் என்று சுட்டி உணரத்தக்க நிலைக்கே பெயர், வடிவம் உடைய ஒரு பொருள் ஏற்பட்டது. இதைச் சகுணத்திருமேனி என்றும் உருவத்திருமேனி என்றும் அழைப்பர். பத்திக்கு நிலைக்களமாக அமையும் இத்திருமேனியே தலைமுறை தலைமுறையாக மனிதகுலத்தை மேலும் உயர்த்தவல்லதாக அமைகிறது.[1] மறைகளின் முடிவாலும், வாக்காலும், மனத்தினாலும் அளக்கொணாமல் நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமல மூர்த்தியாம் பரம் பொருளே மனிதகுலம் உய்யவேண்டி அறுமுக உருவாய் முருகன் என்னும் திருப்பெயருடன் தோன்றியது (1:11:92, 96) என்பர் கச்சியப்பர். இவ்வாறு தோன்றிய முருகனின் அழகுத் தோற்றங்களை அவர் வழிநின்று காண்பாம்.

## 1. இயற்கையழகில் செவ்வேள்

"பண்டைத் தமிழ் மக்கள், இயற்கை வழி வாழ்வு செலுத்தி அதற்கு அடிப்படையாயுள்ள அழகுண்மை கண்டு, அவ்வழகால், இயற்கை அழகு பெறுவது நோக்கி, அவ்வியற்கையை வழிபட்டு, முழுமுதற்பொருட்கு அழகு என்னும் பொருள்பட முருகன் என்னும் பெயரணிந்தார்கள்", என்றுரைப்பர் திரு. வி. க.[2]. பழந்தமிழ்த கடவுளாம் முருகனை இயற்கை அழகு வாயிலாகக் கண்டுணர்ந்த் தமிழ்ப்புலவோர் தாம் பாடிய பாக்களில் அவனது கவின்மிகு தோற்றத்தினை அழகொழுக வருணிப்பர். மாக்கடலில் நிவந்தெழும் காலைக்கதிரோன் தோற்றத்தை நீலமயில் மீது அமர்ந்திருக்கும்

செவ்வேளின் தோற்றமாகக் கண்டு மகழ்வர்.[3] 'பைங்காற் கொக்கினம் அந்திச் செக்கர் வானத்தில் பறந்து செல்லும் அழகுக் காட்சியினை முத்துமாலைகள் புரளும் முருகனின் செந்நிற மார்பாக'க் கண்டுவப்பர்.[4] முருகன் தோற்றத்தை, "ஞாயிற்றேர் நிறத்தகை"[5] என்றும், "உருவு முருவத்தீ யொத்தி முகனும் விரிகதிர் முற்றா விரிசுடரொத்தி"[6] என்றும் பரிபாடற் புலவோர் போற்றுவர். இயற்கையின் வனப்பினையே முருகனாகக் கண்டனுபவித்த தமிழ்மக்களின் உள்ளுணர்வினையே இவைகள் புலப்படுத்தும். முருகனது இயற்கையழகில் ஈடுபட்டு உளந்தோய்ந்த புலவர்களின் கால்வழியில் வந்த கச்சியப்பர், மணித்தேரில் ஏறிய நளும் முருகவேளை உதயமால்வரையில் தோன்றும் கதிரிளம் பரிதியுடனும் (1:19:3), பூதர்கள் புடை சூழ அவனிக்கு அவன் வருதலைக் கடல் நடுவண் திகழும் ஞாயிற்றோடும் (1:19:13) ஒப்பிட்டு மகிழ்தல் நினையத்தகுவது.

கச்சியப்பர் தம் பிறப்பினால் இறைவன் திருமேனி தீண்டும் பேறுடையவராதலால்[7] முருகனை அணிமணிகளால் அழகுறுத்தி மகிழ்தலுடன் பிறரையும் அவ்வடிவழகில் ஈடுபடச் செய்து உளம் நிறைவு பெறுதல் அவர்தம் இயல்பாகலாம். திருமேனி தீண்டும் பேறும், பத்தியுணர்வும், கவிபாடும் ஆற்றலும் ஒருங்கே பெற்றுத்திகழும் கவிஞர், 'அறுமுக முடையவோர் அமலன் மாக்கதை' (அவை : 1) யில் செவ்வேளின் அழகுத் தோற்றங்களைத் துய்ப்புணர்வுடன் வருணித்தல் இயல்பானதே. தென்னகத்தில் தோன்றிய வடமொழி நூல்களாம் குமார தந்திரமும், ஸ்ரீதத்துவநிதியும் பிரதிட்டை முறைகளின் அடிப்படையில் முருகனது திருவடிவங்களை விளக்கும். (1) சத்திதரன், (2) கந்தன், (3) சேனாபதி, (4) சுப்பிரமணியன், (5) கசவாகனன், (6) சரவணபவன், (7) கார்த்திகேயன், (8) குமரன், (9) சண்முகன், (10) தாரகாரி, (11) சேனானி, (12) பிரம்மசாத்தன், (13) வள்ளி-கல்யாணசுந்தரமூர்த்தி, (14) பாலசுவாமி, (15) கிரவுஞ்சபேதன் (16) சிகிவாகனன் என்னும் இப்பதினாறு வடிவங்களும்இரு நூல்களிலும் சிற்சில வேறுபாடுகளுடன் இயம்பப்படும்.[8] ஸ்ரீதத்துவநிதி மட்டும் அக்கினிசாத சுப்பிரமணியம், சௌரபேய சுப்பிரமணியம், காங்கேய சுப்பிரமணியம், வேலாயுத சுப்பிரமணியம், பிரம்மச்சாரி

சுப்பிரமணியம் என வேறு சில திருவடிவங்களையும் விளக்கும்.[9] இவ்விரு நூல்களிலும் உள்ள வடிவங்களை விளக்கமாகப் பாடத் தம் படைப்பில் வாய்ப்பில்லை யெனினும் காப்பியக் கதைப்போக்கில் முருகவேளின் அழகுத் தோற்றங்களைப் பத்தியுணர்வு தோன்றும் வண்ணம் வருணிக்குமிடங்களில் அந்நூல்களின் செல்வாக்குக் காணப்படுதல் கருதத்தக்கது.

## 2. குழவிப் பருவத்தோற்றம்

சரவணபவன் ஆறுமுகங்களும், பன்னிரு விழிகளும், பன்னிரு கரங்களும் கொண்ட தோற்றமுடையவன் என்று குமாரதந்திரமும்,[10] ஒருமுகமும், மூன்று கண்களும், ஆறு கரங்களும் உடைய தோற்ற முடையவன் என்று ஸ்ரீதத்துவநிதியும்[11] குறிப்பிடும். கச்சியப்பர் குமாரதந்திரத்தைத் தழுவியே சரவணத் துதித்த முருகனை,

*''கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே*
*ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய''*

என்றும், *(1 : 11 : 92)*

*''அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்*
*வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளி னானே''*

*(1 : 11 : 96)*

என்றும் வருணிப்பர். இளஞ்சிறு மதலை போல இனிது வீற்றிருக்கும் குமரமூர்த்தியை முலையமுதூட்டிப் போற்ற கார்த்திகை மாதர் அறுவரும் முன்வரும் போது அவர்களின் அன்பிற்குக் கட்டுப்பட்டு ஆறு குழந்தைகளாகப் பிரிந்தமையினை,

*''உறுநர்கள் தமக்கு வேண்டிற் றுதவுவோன் ஆதலாலே*
*அறுமுக வொருவன் வேறாய் அறுசிறார் உருவங் கொண்டான்'*

*(1 : 11 : 116)*

என்று பாடி முருகனது எளிமை நிலையைப் புலப்படுத்துவர். கார்த்திகைமாதர் உதவிய ஊறுபாலமுதத்தைப் பசியால் ஆற்ற வருந்தியவன் போல் அயின்ற முருகன் குழவிப்பருவச் செயலுக் கேற்றவாறு பல்வேறு தோற்றங் கொண்டமையினை,

*"துயிலவோ ருருவம் துஞ்சித் துண்ணென எழுந்து மென்சொற்*
*பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவள வாய்வைத்*
*தயிலவோ ருருவம் நக்காங் கமரவோ ருருவம் ஆடல்*
*இயலவோ ருருவம் வாளா இரங்கவோ ருருவஞ் செய்தான்"*
என்றும், *(1 : 11 : 119)*

*"ஆடவோ ருருவம் செங்கை அறையவோ ருருவம் நின்று*
*பாடவோ ருருவம் நாடிப் பார்க்கவோர் ருருவம் ஆங்கண்*
*ஓடவோ ருருவம் ஓர்பால் ஒளிக்கவோ ருருவம் யாண்டுந்*
*தேடவோ ருருவ மாகச் சிவன்மகன் புரித லுற்றான்" (1 : 11 : 121)*

என்றும் பத்திப்பிறங்கப் பாடுவர். கைபயில் குழவி போலக் காட்டும் இப்பருவத்திலேயே இயற்றும் விளையாட்டிற்கேற்பப் பல்வேறுருக் கொண்டு காட்சி தரும் இளமுருகனை 'ஒப்பறு பரனே ஆம்' (1 : 11 : 125) என்று அயன் முதலியோர் வியப்பதாகக் கிளந்து முருகன் முழுமுதற்றன்மையினைச் சுட்டுதல் குறிக்கத்தக்கது.

### 3. உமை - முருகு - இறைவர் தோற்றம் (சோமாக்கந்த வடிவம்)

உமைக்கும் இறைவனுக்கு'மிடையில் முருகன் எழுந்தருளி யிருக்கும் தோற்றமே சோமாக்கந்த வடிவமாகும். இந்தியநாட்டில் வேறுபிற எந்தப் பகுதிகளிலும் காணப்படாமல், தமிழ்நாட்டில் மட்டுமே தனிப்பெருஞ் சிறப்பாகச் சோமாக்கந்தர் திருவுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன என்று ஆராய்ச்சியாளர் கூறுப.[12] சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கால் துறவறமே சால்புடைத் தென்னும் கொள்கை வேரூன்றிய தமிழகத்தில் குடும்ப வாழ்வின்

அளப்பரு நலங்களையும், அரும்பெரும் சிறப்பினையும் விளக்குதற்காகப் போற்றிப் பரவப்பெற்ற திருவுருவமே சோமாக்கந்தமூர்த்தமாகும்.[13] பல்லவர் காலத்தில் சிவபெருமானுக்கு எடுத்த ஆலயங்களின் கருவறைகளில் சோமாக்கந்த வடிவம் காணப்படுதலும், அங்குள்ள கல்வெட்டுக்களில் 'சிவபெருமான் இவனுடன் (முருகனுடன்) கூடியே இங்கு எந்நாளும் வாசம் செய்யட்டும்' என்று பொறித்துள்ளதும்[14] நினையத்தகும்.

பல்லவர் தலைநகராம் காஞ்சிப்பதியில் வாழ்ந்து கந்தபுராணம் படைத்த கச்சியப்பர், தாய்தந்தையருக்கு நடுவண் வீற்றிருக்கும் முருகனைப் பகலுக்கும் இரவுக்கும் இடையில் தோன்றும் மாலைப் பொழுதோடு ஒப்பிட்டு,

*"ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் றனக்கும்*
*பால னாகிய குமரவேள் நடுவுறும் பான்மை*
*மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றொக்கும்"*

(1:13:26)

என்று அழகொழுகப் பாடுவர். இச்செய்யுளில் பயிலும், "ஏலவார்குழல் இறைவி' என்னும் பெயர் காஞ்சி காமாட்சியம்மைக்குரிய ஒரு திருப்பெயராகும். 'ஏலவார் குழலாள் உமைநங்கை என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற காலகாலனைக் கம்பன் எம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே' என்பது சுந்தரர் தேவாரம். காஞ்சியில் திருவேகம்பநாதர் கோயிலுக்கும், காமாட்சியம்மை கோயிலுக்கும் இடைநடுவே முருகப்பெருமான் எழுந்தருளி விளங்கும் குமரகோட்டம் அமைந்திருத்தல் சோமாக்கந்த மூர்த்தத்தின் தத்துவநுட்பத்தினைப் புலப்படுத்துவதாகும்," என்பர்.[15] கங்கை, யமுனை, சரசுவதி என்னும் மூன்று பேராறுகளும் ஒன்று கலந்திடும் திரிவேணி சங்கமத்தைச் சோமாக்கந்த வடிவில் விளங்கும் திருவாரூர்த் தியாகேசராக உருவகித்துத்,

*"தம்மேனி வெண்பொடியாற் றண்ணளியா லர்ரூரர்*
*செம்மேனி கங்கைத் திருநதியே - அம்மேனி*

மானே யமுனையந்த வாணிநதி யுங்குமரன்
தானே குடைவேந் தனித்து"[16]

என்று குமரகுருபரர் பாடுவதும் ஈண்டு நினையத்தகும்.

சரவணத்துதித்த முருகனைப் மேற்சுட்டிய தோற்றத்திலேயே பிரமன் முதலியோர் முதன் முதலாக வழிபட்டனர் என்று கச்சியப்பர் மொழிகுவர். முதனூலில் இல்லாத இந்நிகழ்ச்சி கச்சியப்பர் படைத்துக்கொண்ட ஒன்றென்பதும் குறிப்பிடத்தக்கது. 'தமிழ்க்கந்தபுராணமும் வடமொழிக்கந்தபுராணமும்' என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.[17].

திருப்பரங்குன்றில் மைந்தனது மணங்காண வந்த சிவனும், உமையும் முருகனை எடுத்துத் தழுவி மடியின்மீது வைத்துத் தண்ணளி புரிந்தனர் (5:2:223) என்று சுட்டிச் சோமாக்கந்த வடிவத்தை நினைவூட்டுவர். கந்தவிரதப் படலத்தில், திருமால் தம் மார்பில் ஏந்திப்போற்றிப் பரவியதும், இந்திரனால் வழிபடப்பெற்றதும் ஆகிய விண்ணுலக சோமாக்கந்த வடிவத்தை முசுகுந்தன் அரிதின் முயன்று மண்ணுலகு கொணர்ந்து திருவாரூர் முதலிய ஏழு ஊர்களில் நிறுவி வழிபட்ட திறத்தினைப் பத்தியுணர்வுடன் பல பாக்களில் விரித்துரைப்பர் (5:23:57-119). இத்திருமேனியில் கவிஞருக்குள்ள ஈடுபாட்டை இவைகள் புலப்படுத்தாநிற்கும்.

### 4. பிரம்மசாத்தன் தோற்றம்

சிவனை வழிபட்டுச் செல்லும் பிரமன், தன்னைப் பணிந்திடாது தொழுதபொழுது அவனிடம் குடிலைப்பொருள் வினவி, பொருளறியாது மருண்டநிலையில், அவனது நான்கு மாமுடிகளும் குலுங்கக் குட்டிச் சிறையும் புரிவித்தான் முருகன். பின்னர்ப் படைப்புத் தொழில் தடையின்றி இயலுதற்குத் தானே நான்முகன் போல் வடிவுகொண்டு கந்தவெற்பில் எழுந்தருளி படைப்புத்தொழிலை மேற்கொண்டான். இவ்வடிவினையே 'பிரம்மசாத்தன் தோற்றம்'

என்றழைப்பர். பிர்ம்மசாத்தன் என்னுந் தொடர் 'பிரமனைத் தண்டித்தவர்' என்று பொருள்படும்.[18] முருகன் கொண்ட இவ்வெழில் வடிவினை,

"ஒருக ரந்தனில் கண்டிகை வடம்பரித் தொருதன்
கரத லந்தனில் குண்டிகை தரித்திரு கரங்கள்
வரத மோடப யந்தரப் பரம்பொருள் மகனோர்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்"
(1:16:17)

என்று கச்சியப்பர் பாடுவர். திருநகரப் படலத்தில் காஞ்சிக் குமர கோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் முருகன் பிரம்மசாத்தன் தோற்றத்துடன் விளங்குதலைக்,

"கொண்டலை யளக்கு நொச்சிக் குமர்கோட்டத்துச் செவ்வேள்
கண்டிகை வடமுந் தூநீர்க் கரகமுங் கரத்தி லேந்திப்
பண்டையி லயனை மாற்றிப் படைத்தருள் வேடந் தாங்கி
அண்டர்க ளெவரும் போற்ற வருள்புரிந் தமர்ந்தா னன்றே"
(திருநகர: 109)

என்றும் விளக்குவர். கச்சியப்ப முனிவர் தணிகைப்புராணத்துள்

"வரத மணிக்குண் டிகையிரண்டும் வாமத் திருக்கைத் தலமாக்கிப்
புரவு புரியு மபயமொடு புரைதீ ரக்க வடம்வலப்பால்
இரவை யிரிக்கும் வலத்தமைத்திட் டெல்லா வுலகு மினிதளித்துப்
பிரம சாத்த னெனப்பொலிந்த பெருமா னுருவம் பிறக்குநரும்"[19],

எனக் கூறுதலும், காஞ்சிப்புராணம், குமரகோட்டப்படலத்துள்,

"புள்ளிமான் தோல்உடுக்கை முஞ்சிநாண் அரைப்பொலிய அக்கமாலை,
தெள்ளுநீர்க் குண்டிகையுங் காத்தொளிரத் திருக்குமர கோட்டம்
என்னும்

*உள்ளியோர் பிறப்பறுக்கும் ஆச்சிரமத் தினிதிருந்தான் உறுவர் போற்ற*
*வள்ளியார் இணைக்களப மணிக்கலச முலைத்திளைக்கும் வாகைத் தோளான்''[20]*

எனச் சிவஞானசுவாமிகள் பாடுதலும், கச்சியப்பர் குறிப்பிடும் பிரம்ம சாத்தன் தோற்றத்தை மேலும் விளக்கும் வகையில் அமைந்துள்ளமை கருதற்பாலது.

''ஒரு திருமுகமும், நான்கு திருக்கரங்களும் கொண்டு வரதம், கமண்டலம் என்ற இரண்டும் இடத்திருக்கரங்களிற் பொருந்தவும், அபயம், அக்கவடம் என்பன வலத்திருக்கரங்களிற் பொருந்தவும், தாமரை மலரையொத்த பிரகாசமுடையவராய் விளங்குவார்'' என இத்திருக்கோலத்தைக் குமாரதந்திரம் நுவல்வதும்[21] இவண் ஒப்பிட்டு வத்தற்குரியது.

## 5. போர்க்கோலத் தோற்றம்

அழகுத் தெய்வமாகவும் இளமைத் தெய்வமாகவும் திகழும் முருகனைப் போர்த்தெய்வமாகவும் சங்கப்பனுவல் போற்றுவதைக் காண்கின்றோம்.[22] வடமொழிப் பேரிதிகாசங்களும் அவனைப் போர்க் கடவுளாகச் சுட்டுதல் கருதத்தக்கது.[23] புராணக்கூறுகள் வளர்ச்சியுற்ற நிலையில் போர்க்கோலங் கொண்ட முருகனது தோற்றத்தைச் சிற்ப நூல்கள் 'சேநாநீ' என்றும், 'சேனாபதி' என்றும் சுட்டும்.[24]

அவுணர்களுடன் பொரச் செல்லும் முருகனது பன்னிருகரங்களிலும் இலங்கும் படைகளை வரிசைப்படுத்திக் கூறுமுகமாக முருகவேளின் போர்க்கோலத் தோற்றத்தினைக் கச்சியப்பர் விடைபெறு படலத்தில் (1:18) விளக்குவர். சிவன், தன் உருத்திரகணத்தார் பதினொருவரையும் தோமரம் (இருப்புலக்கை), கொடி, வாள், குலிசம் (வச்சிராயுதம்), பகழி, அங்குசம், மணி, தாமரை மலர், தண்டு, வில், மழு என்னும் பதினொரு படைகளாக மாற்றி

முருகன் கரங்களில் வீற்றிருக்கச் செய்தலுடன் (1:18:37) 'எப்படைக்கும் நாயகமாம்' ஒரு தனிச்சுடர்வேலையும் நல்கியதாகக் கூறிப் (1:18:38) பகைமேற் செல்லும் பன்னிருகரத்தனின் 'பன்னிரு ஆயுதங்களையும் சுட்டுவர். இந்தகு போர்க்கோலத்துடன் எழுந்தருளிய முருகனைப் போர்க்களத்தில் தாரகன் கண்ணுற்ற திறத்தை,

*"முழுமதி யன்னஆறு முகங்களும் முந்நான் காகும்*
*விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்*
*அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்குஞ்*
*செழுமல ரடியுங் கண்டான் அவன்தவஞ் செப்பற் பாற்றோ"*
*(1:20:126)*

என்று உவந்து பாடுவர். ஸ்ரீதத்துவநிதி ஒருமுகமும் மூன்று கண்களுமுடையவனாகத் 'தாரகாரி' வடிவத்தைச் சுட்டுவதினின்றும் கச்சியப்பர் மாறுபடுதல் கருதத்தக்கது. தணிகைப்புராண ஆசிரியர், கச்சியப்பர் வழிநின்று விளக்கந்தரும் வகையில்,

*"வரதங் கொடிகே டகந்தோட்டி வார்ந்த வெறுழ்ப்பா சங்குலிசம்*
*பரவு மபயம் வாள்சூலம் பரிதி முசலம் வேன்முந்நாற்*
*கரமும் விளங்க வறுமுகங் கதிர்ப்ப விழிகள் கருணைமழை*
*தரவென் றருளுந் தாரகாந் தகன்சீ ருருவஞ் சமைப்போரும்"*[25]

என்று தாரகாரி வடிவினை விளக்குதல் நினையத்தகும்.

போரின் இரண்டாம் நாளில், போர்க்கோலத்துடன் மிளிரும் கந்தனைச் சூரபன்மன் முதன்முதலாகக் கண்ட பாங்கினை,

*"ஆயது காலை தன்னில் அவுணர்கோன் அநந்த கோடி*
*ஞாயிறு திரண்டொன் றாகி ஞாலமேல் இருளை ஒட்டிச்*
*சேயுயர் விசும்பை நீக்கிச் செருநிலத் துற்ற தென்னத்*
*தூயதோர் குமரன் போரில் தோன்றிய தோற்றங் கண்டான்"*

என்றும்,
*(4:4:234)*

*" முண்டக மலர்ந்த தன்ன முவிரு முகமுங் கண்ணுங்*
*குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோல மார்பும்*
*எண்டரு கரமீ ராறும் இலங்கெழிற் படைகள் யாவுந்*
*தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்குஞ் சரணமுந் தெரியக்*
*கண்டான்"*
(4:4:235)

என்றும் அழகொழுகப் பாடுவர். தாரகனும் சூரபன்மனும் பகைவனாகக் காணும் முருகனது தோற்றப்பொலிவினைக் கருணையுருவாகவும் அழகுருவாகவும் காட்டுதல் கந்தனது கருணைத் திருவுருவில் இதயந்தோய ஈடுபட்ட கவிஞரின் உளப்பாங்கினைப் புலப்படுத்தும்.

சூரபன்மனுடன் பொருதற்காக முருகவேள் கைத்தலங்கொண்ட பன்னிரு படைகளையும்,

*" புத்தலர் நீபத் தாரான் புகர்மழுக் குலிசஞ் சூலஞ்*
*சத்திவாள் பலகை நேமி தண்டெழுச் சிலைகோல் கைவேல்*
*கைத்தலங் கொண்டான்"* (4:13:46)

என்று சூரபன்மன் வதைப்படலத்தில் மொழிகுவர். விடைபெறு படலத்தில் சுட்டாத சூலம், சக்கரம், எழு, கைவேல் முதலிய புதுப் படைக்கருவிகளை முருகன் கொண்டதாகக் கூறுதல் குறிப்பிடத் தக்கது. இப்படைகளில் கணிச்சி, சூலம், சக்கரம், தண்டு, எழு ஆகிய ஐம்படைகளே போர்க்களத்தில் முருகன் கட்டளைகளை நிறைவேற்றப் பயன்படுவனவாம் (4:13:261). (முருகனது உருவாகத் திகழும் வேற்படையின் ஆற்றல் இப்பகுதியின் இறுதியில் விளக்கப்படும்.)

## 6. திருப்பெரு வடிவம் (விசுவரூபம்)

இந்திரன் முதலிய தேவர்க்கும், சூரபன்மனுக்கும் முருகன் காட்டியருளிய திருப்பெருவடிவம் நூலில் ஈரிடங்களில் இயம்பப் பெறும். முன்னது சுருக்கமாகவும், பின்னது பெருக்கமாகவும்

விளக்கப்பட்டுள்ளன. தன்னாற்றலை உணராதார்க்கு உணர்த்த வேண்டி முருகன் எடுத்த வடிவங்களாகவே இவ்விரண்டினையும் கொள்ளல் தகும்.

பாதலமெல்லாம் திருவடிகளாகவும், மாதிரவரைப்பு தோள் களாகவும், விண்ணெலாம் முடிகளாகவும், ஞாயிறும் திங்களும் கண்களாகவும், நடுவெலாம் திருமேனியாகவும், வேதமனைத்தும் மணிவாயாகவும், ஞானங்கள் செவிகளாகவும், மருங்கெல்லாம் அயன்மால்களாகவும், சிந்தனை உமாதேவியாகவும், உயிர் சிவனாகவும் பொலியுமாறு குமரவேள் இந்திரன் முதலிய தேவர்கட்காக எடுத்த பேருருவை விளக்குவர் (1:14:89). அவ்வுருவை அவனருளால் கண்டு மகிழ்ந்த தேவர்கள், பிரமனும் திருமாலும் சிவனும் அத்தோற்றத்தில் செறிந்திருப்பதாகவும் (1:14:94), சிவன் கொண்ட பேருருவினும் மிகப்பெரியது இவ்வுருவென்றும் (1:14:98) வியந்து, "ஆகையால் எம்பி ரான்நீ அருவுரு வாகிநின்ற வேதநாயகனே யாகும்" (1:14:99) என்றும் போற்றுவதாகப் பாடுவர்.

சூரபன்மனுக்குக் காட்டும் திருப்பெருவடிவம், அடிமுதல் முடிவரை (பாதாதி கேசம்) முருகனது ஒவ்வோருறுப்பிலும் பொருந்தி யுள்ளனவற்றைச் சுட்டும் வகையில் முன்னதைவிடச் சற்று விளக்கமாகத் திகழும் (4:13:422-427). இப்பேருருவில் நெற்றியில் குடிலையும் (பிரணவம்), சென்னியில் சிவனும் விளங்குதலாகக் கூறுதல் குறிக்கத்தக்கது. திருப்பெருவடிவத்தை வருணிக்கும் இவ்விரு பகுதிகளிலும் சிவனுக்கும் முருகனுக்கும் வேறுபாடற்ற நிலையில் முருகனது முழுமுதற்றன்மை வலியுறுத்தப்படுதல் கருதற்பாலது.

## 7. அன்பருக்குக் காட்சிதரும் தோற்றம்

கந்தபுராணக் கதைமாந்தர்களில் சயந்தனுக்கும், வள்ளி யம்மைக்கும், நம்பிராசன் முதலிய வேடுவருக்கும் தன்னை உணர்த்துதற்கு முருகன் தன் திருவுருவைக் காட்டுமிடங்கள்

சிறப்பாகக் குறிக்கத்தக்கன. செவ்வேள் மகேந்திரச் சிறையில் வாடி மெலியும் சயந்தனுக்குக் காட்டிய உருவினை,

*" வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்*
*மாறி லாதவேல் அபயமே வலமிடம் வரதம்*
*ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த*
*ஆறி ரண்டுகை அறுமுகங் கொண்டுவேள் அடைந்தான்"*
(3:10:4)

என்றும், வள்ளியாம் கன்னியை மானுட வடிவங்கொண்டு கடிகா வினிற் கலந்த முருகன், கருணையுடன் அவட்குத் தன் தொல்லுருவம் காட்டியதை,

*"முந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டுங்*
*கொன்னார்வை வேலுங் குலிசமுமே னைப்படையும்*
*பொன்னார் மணிமயிலு மாகப் புனக்குறவர்*
*மின்னாள் கண்காண வெளிநின் றனன்விறலோன்"* (6 : 24 : 116)

என்றும், முருகனுடன் போரிட்டு மடிந்த வேடுவர்கள் அவனருளால் மீண்டும் எழுந்தபொழுது, "எம்பிரான் கருணைவெள்ளம் பொழிந்திடு வதன மாறும் புயங்கள்பன்னிரண்டும் வேலும் ஒழிந்திடு படையு"மாகிய உருவினை அவர்கட்குக் காட்டினன் (6 : 24 : 190) என்றும் நவில்வர். அன்பர்கட்குத் தன்னைக் காட்டும் இடங்களிலும், தாரகன், சூரபன்மன் முதலிய எதிர்நிலை மாந்தர்கட்குக் காட்சி தரும்பொழுதும் ஆறுமுகமும் பன்னிருகரமும் வேல் முதலிய படைகளுடனும் தோன்றுவதாகப் பாடுவதும், 'மூவிருமுகங்கள் போற்றி' (பாயிரம்:3) என்று புராணத் தொடக்கத்திலும், 'ஆறிருதடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க' (6 : 24 : 261) என்று புராணத்திறுதி யினும் போற்றுதலாலும், புராணத்தில் முருகனைச் சுட்டும் பல்வேறு பெயர்களுள் 'அறுமுகன்' 'சண்முகன்', 'ஆறுமாமுகத்து வள்ளல்', 'அறுவகை உருவுகொண்டுற்ற சிறுவன்', 'பன்னிரு மொய்ம்புடைப் பகவன்', 'இராறுதோளுடையோன்' என்பன போன்ற திருப்பெயர்

களே பிற பெயர்களிலும் மிகுதியாக ஆளப்படுதலாலும் முருகனது பல்வேறு தோற்றங்களில் ஆறுமுகமும் பன்னிருகரமும் கொண்டிலங்கும் வடிவமே கச்சியப்பரைப் பெரிதும் கவர்ந்துள்ளமை பெறப்படும். பின்னிணைப்பிலுள்ள 'முருகன் திருப்பெயர்கள்' அட்டவணை இதனை மேலும் உறுதிப்படுத்தும். முருகன் தன்னை அன்பினால் வழிபடும் அடியவர்கட்குக்காட்சி தரும் அணங்குசால் உயர்நிலையைத் (திருப்பெருவடிவம்) தழீஇக் கொண்டு மணங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டி அருள்புரிபவன்[26] என்னும் நக்கீரர் வழியில் கவிஞர் விளக்கும் பாங்கும் போற்றுதற்குரியது.

## 8. மயிலூர்திப்பெருமான் தோற்றம்

குமரவேள் சூரபன்மனைத் தடியுமுன் இந்திரனை மயிலூர்தியாகக் கொண்டிருந்தவன் (4:13:378-382). இறுதிப்போரில் சேவலும் மயிலுமாகிச் சினங்கொண்டு வந்த சூரபன்மனைத் தன் அருள் நோக்கால் இகல் நீக்கியதுடன், அச்சேவலையும் மயிலையும் முறையே கொடியாகவும், ஊர்தியாகவும் கொண்டருளியவன். அம்மயில் மீதமர்ந்துள்ள முருகப்பெருமானின் அழகுமிகு தோற்றத்தையும், அம்மயிலைப் பரியென நடாத்தி எண்டிசைக்கண்ணும் முருகன் சென்று வந்த திறத்தையும் ஆறு விருத்தத்தொகைகளில் அன்பு கனியப் பாடுவர் (4:13:499-504). 'வெயில் விடும் அநந்தகோடி வெய்யவர் திரண்டு ஒன்றாகி மேகம் தவழும் வானில் வந்ததுபோல் அயிலுடைச்செவ்வேள் மரகதத்து அழகு சான்ற மயிலிடை வைகியூர்ந்தான்' (4:13:503) என்றும், 'உலகையும் நான்முகனையும் படைத்தற்காகப் பன்னாள் மாயவன் காரென வந்து முக்கட்கடவுளைப் பரித்ததைப் போலவேலுடைக் குமரனைச் சூருருவாகி நின்ற தோகை மேற்கொண்டது' (4:13:502) என்றும் பாடி மயிலூர்திப் பெருமானின் அழகுருவைப் புலப்படுத்துவர்.

'மயிலூர்திக்கோலத்தில் முருகன் வலக்கரங்களில் வேலும் அபயமும் தாங்கி இடக்கரங்களில் வரதமும் வச்சிரமும் ஏந்தி ஒரு

திருமுகத்துடன் செம்பவள நிறத்துடன் மயிலின் மீது வீற்றிருப்பன் என்று சிற்பநூல்கள் நவிலும்.[27] கச்சியப்பர் இவ்வடிவத்தை விளக்கும் பாக்களில், முருகனை அறுமுகன் என்று சுட்டாது, 'குமரமூர்த்தி' (4:13:499), 'வேலுடைக்குமரன்' (4:13:502), 'வாகைவேல் வீரன்' (4:13:504) என்னுந் தொடர்களால் சுட்டுதலாலும் 'செவ் வேள்' (4:13:503) என்று சுட்டுதலாலும் சிற்பநூல்கள் குறிப்பிடும் ஒருமுக வடிவமும் பவள நிறமுடைமையும் பெறப்படும். இதனால் முருகன் மயிலூரும் நிகழ்ச்சியைச் சிற்பநூலுணர்வுடனே கவிஞர் பாடியுள்ளமையினை உணர்கின்றோம்.

## 9. வேட்டுவக்கோலம்

திருத்தணிகைமலையில் உறையும் முருகன், நாரதர் வேண்டு கோட்கிணங்கி வள்ளிக்கு அருள்புரியக் கருதி மானுட வடிவந் தாங்கி வேட்டுவக்கோலம் கொண்ட தன்மையினைக்,

*''காலிற் கட்டிய கழலன் கச்சினன்*
*மாலைத் தோளினன் வரிவில் வாளியன்*
*நீலக் குஞ்சினன் நெடியன் வேட்டுவக்*
*கோலத் தைக்கொடு குமரன் தோன்றினான்'' (6:24:66)*

என்று விளக்குவர். ''கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்''[28] என்று நக்கீரர் வேலனை வருணிக்கும் பகுதி இவண் நினையத்தகும்.

## 10. வள்ளி-தெய்வயானையுடன் விளங்கும் தோற்றம்

முருகன் கந்தவெற்பில் வள்ளி தெய்வயானையுடன் ஒருங்கிருந்த பாங்கினைக் கச்சியப்பர் சுவைபடப் பல பாக்களில் பாடுவர். மங்கையர் இருவரும் மருங்கிருக்க முருகப்பெருமான் திகழும் தோற்றத்தைக் கங்கையும், யமுனையும் கடலில் கலத்தல் போன்றும் (6 : 24 : 256), ஞாயிறும் திங்களும் சேர்ந்திருக்குங்கால் அவற்றி

னிடையே உற்றிடும் கனலிப்புத்தேள் போன்றும் (6 : 24 : 257), பிஞ்ஞகன் வதனம் ஒன்றில் கண்ணொருமூன்றும் வைகும் காட்சி போன்றும் (6 : 24 : 259) திகழ்வதாகப் பாடி மகிழ்வர்.

முருகனை ஒரு மரமாகவும் கிரியாசத்தி, ஞானசத்திகளாகிய வள்ளியையும் தெய்வயானையையும் அம்மரத்தின் கிளைகளாகவும், அவன் உயிர்கட்கு அருளுதலைப் பூவாகவும், பிறவியைக் காய்தலைக் காயாகவும், முத்தியளித்தலைக் கனியாகவும் உருவகித்துக்,

*''கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவ தாகி*
*வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்*
*பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட் டன்பர்*
*எல்லவர் தமக்கு முத்தி இருங்கனி உதவும் என்றும்''*
*(6:24:258)*

என்று மொழிகுவர். மாவினைத் தடிந்தவனும், வேங்கை மரமாக மாறியவனும் ஆகிய முருகனை இறுதியில் முத்திக்கனி உதவும் மரமாக உருவகம் செய்தல் குறிக்கத்தக்கது.

## 11. தத்துவ வடிவம்

முருகனைக் குடிலை (பிரணவம்) வடிவினனாக ஆசிரியர் பலவிடங்களில் குறிப்பிடுவர். ''தாரகத் துருவமாந் தலைமை யெய்திய ஏரகத் தறுமுகன்'' (கடவுள் வாழ்த்து : 15) என்றும்) ''முகத்திலொன்றதா அவ்வெழுத்துடையதோர் முருகன்'' (1:16:10, என்றும் கவிக்கூற்றிலும்,

*''தாம ரைக்கணான் முதலிய பண்ணவர் தமக்கும்*
*ஏமு றப்படு மறைக்கெலாம் ஆதிபெற் றியலும்*
*ஓமென னப்படுங் குடிலையே ஒப்பிலா முருகன்*
*மாமு கத்துளொன் றாம்'' (3 : 12 : 134)*

என்று கதைமாந்தர் கூற்றிலும் முருகப்பெருமானின் குடிலை வடிவினை மொழிகுவர்.

பிரணவமும், ஐம்பொறிகளும், வேதங்களும், ஆகமங்களும், கலைகளும், அக்கலைகளுணர்த்தும் ஞானங்களும் முருகனின் பொருவிலா உருவமெனச் சூரபன்மனுக்கு அறிவுறுத்தும் வீரவாகுவின் கூற்றில் எடுத்துரைத்து முருகவேளின் தத்துவவடிவத்தினை விளக்குவர் (3 : 12 : 132). முருகன் ஊர்தியாகக் கொள்ளும் மயில், தோகை விரித்த நிலையில் ஓங்கார வடிவத்துடன் திகழ்தலால் முருகனை அவ்வோங்காரத்து உள்ளொளிரும் கடவுளாகக் கண்டு, "ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு தூங்கார்"[29] என்றும், "ஓதிய ஐந்து ஓங்காரத் துள்ளொளிக்கும் உள்ளொளியாய் ........... நின்றோனே"[30] என்றும் பின்வந்த சான்றோர் போற்றுவதும் நினையத்தகும்.

## 12. வேலின் வடிவம்

முருகனது தோற்றப்பொலிவில் காணும் படைக்கலங்களில் வேல் தலைமையிடம் பெறும் "எப்படைக்கும் நாயகமாவ தொரு தனிச் சுடர்வேல்" (1 : 18 : 38) என்பது கச்சியப்பர் வாக்கு. அத்தகு வேலினை 'உடம்பிடித் தெய்வ'மாகப் போற்றுவதுடன் முருகப்பெருமானின் திருவுருவாகவே கச்சியப்பர் படைத்துக்காட்டலால் வேலின் வடிவம் முருகப்பெருமான் வடிவங்களுள் ஒன்றாகக் கருதி ஈண்டு விளக்கப்படுகிறது.

தென்னிந்தியாவிலே கி. மு. 7 – ஆம் நூற்றாண்டளவில் திடீரென்று இரும்புக்காலம் தொடங்குகிறது என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் கருதுவதால், சங்கப்பாக்கள் நேர்முக வருணனையாகவோ அல்லது பழைய இனநினைவுகளாகவோ கூறும் வேல் பற்றிய செய்திகள் மிகவும் தொன்மையுடையன என்றும், முருக வணக்கத்தின் தொன்மையை இது உறுதிப்படுத்தும் என்றும் அறிஞர் கருதுப.[31] வேலிற்கெனத் தனித்துக் கோட்டம் அமைத்து வழிபட்டமையினைச் சிலப்பதிகாரம்[32] சுட்டுதலால் வேல் வழிபாடு பழந்தமிழகத்தில் நிலவி வந்தமையினைக் காண்கின்றோம். "கடவுள் வழிபாட்டிற்குரிய கோவில்களிலே ஆதிகாலத்தில் கடவுளின் உருவங்களை வைத்து

வணங்கவில்லை............... குறிப்பிட்ட அடையாளங்கள் வைத்து வணங்கப்பட்டன........... முருகக்கடவுளின் கோயிலில் பழங்காலத்தில் முருகன் உருவம் வைக்கப்படாமல் முருகனைக் குறிக்கும் அடையாளமாக வேலாயுதம் வைத்து வழிபடப்பட்டது''[33] என்றும், ''பொதுவாகப் படைவீடு என்று கூறும்பொழுது, பகையைப் போக்க முருகன் படையோடு தங்கியிருக்கும் இடமென நாம் கூறினாலும் உண்மையில் 'படைவீடு' என்பது 'வேல் இருக்கும் இடம்' என்பதைக் குறிக்க வந்ததாகவே தோன்றுகிறது''[34] என்றும் அறிஞர்கள் கருத்துரைப்பர். மேற்காணும் கருத்துக்கள் முருக வழிபாட்டின் தொன்மையைக் காட்டுவதுடன், முருக வணக்கத்திற்குரிய உருவ வழிபாட்டில் வேலே தொன்மையும் முதன்மையும் பெறுதலையும் வலியுறுத்தும்.

கச்சியப்பர் பண்டைக்காலத்தில் நிலவிய வேல் வழிபாட்டினை மீண்டும் நிறுவுவான் வேண்டி முதனூலில் இயம்பாத வேல் பற்றிய செய்திகளைத் தம் நூலுள் படைத்து மொழிகுவர். 'கந்தபுராணமும் வடமொழிக் கந்தபுராணமும்' என்ற பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.[35] முருகன் கட்டளையை நிறைவேற்றுவதுடன், தன் தனித்தன்மை தோன்றும்வண்ணம் வேல் செயற்படுவதனைத் தாரகன் வதைப்படலத்தும் (1:20:186), சூரபன்மன் வதைப்படலத்தும் (4:13:490-491) விளக்கமுற இயம்புவர். கிரவுஞ்சவெற்பின் மாயையாலும், பானுகோபன் மாயையாலும் வீரவாகு முதலியோர் கட்டுண்டபொழுது, அம்மாயையினின்றும் நீக்கிக் காத்தலாலும் (1:20:186; 4:5:206-207), சூரபன்மன் இருளுருவாகி முருகனோடு போர்புரிகையில் வேலே அவ்விருளை அகற்றுவதாலும் (4:13:465) அறியாமையினைப் போக்கி உயிர்கட்கு அறிவை நல்கும் அறிவுருவாக (ஞானவடிவாக) விளங்கும் வேலின் இயல்பு பெறப்படும்.

'எப்படைக்கும் நாயகம்' (*1:18:37*), 'எண்ணரும் படைகட்கெல்லாம் இறைவ' (4:5:213), 'தெய்வப்படைக்கலம்' (4:13:481), 'தெய்வச்செவ்வேல்' (4:13:482), 'கடவுட் செவ்வேல்' (4:13:433), 'உடம்பிடித் தெய்வம்' (4:13:487) என வரும் தொடர்களால் வேலினைச் சுட்டுதலால் வேலினைத் தெய்வமாகவே கருதும் கச்சியப்பரின் உட்கிடக்கையினை உணர்கின்றோம்.

சுத்தோதக்கடலில் மயங்கிக் கிடந்த வீரவாகு முதலியோர் வேற்படையால் மீண்ட ஞான்று,

*'' அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்*
*எந்தைகண் நின்றும் வந்த இயற்கையாற் சத்தி யாம்பேர்*
*தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்*
*கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தேம்''*
*(4:5:212)*

எனப் போற்றுவர். செவ்வேளின் செவ்வேலைத் தெய்வமாகக் காட்டிய கவிஞர் முருகனது தோற்றமாகவே காட்டி வேல் வழி பாட்டின் பழமரபினைப் புதுக்கியுள்ளமை கருதத்தக்கது. 'சுப்பிர மணியர் சக்திக்கும் அவர்தரித்த வேற்படையின் சக்திக்கும் பேத மின்மை (ஒற்றுமைப்பாடு) புலப்படுத்தியவர் கச்சியப்பர் என மொழி யும் அறிஞர்[36] கருத்தும் இவண் கருதத்தகும். 'மூவிரு முகங்கள் போற்றி' எனத் தொடங்கும் பாயிரப் பகுதிப் பாடலில், ''ஆறுமுகங் கட்கு ஒரு போற்றியையும், ஆறு கருணைகளுக்கு ஒரு போற்றி யையும், பன்னிரு தோள்களுக்கு ஒரு போற்றியையும், இரு திருவடிகளுக்கு ஒரு போற்றியையும் கூறிவந்த ஆசிரியர் வேலுக்கு இரண்டு போற்றியைக் கூறியது கவனிக்கத்தக்கது.'' என்று வேலின் பெருமையைக் கந்தபுராண வாயிலாகச் சுட்டுவர் ஞானியா ரடிகள்.[37] காஞ்சிக் குமரகோட்டத்தில் இன்றும் மேற்காட்டியாங்கு அறுமுகங்களுடன் வேல் காணப்படுதல் கருதத்தக்கது. அருணகிரி நாதர் வேல்வகுப்பில்,

*'' தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி*
*படைத்தவிறல் படைத்தஇறை கழற்குநிக ராகும்''* [38]

என்று பாடி உயிர்கட்கு முத்திப் பேறளிக்கும் ஆற்றலுடைய சிவன் திருவடியாக வேலைக்காணுதற்கும், மார்க்கசகாயதேவர் 'திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமி'ழில் காப்புப் பருவத்தில் வேலைத் தெய்வமாகக் கொண்டு முருகனைக் காக்குமாறு வேண்டு

தற்கும்[39] வழிவகுத்துத் தந்தவர் கச்சியப்பர் என்று கொள்வதில் தவறில்லை. முருகனது வேலினைப் போற்றும் இம்மரபினைப் பின்பற்றி, வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள், வீரவாகுவின் வாளினைப் போற்றி (நூறு பாக்களில்) 'வாளலங்காரம்' என்றொரு நூலாகப் பாடியதும் ஈண்டு ஒப்பிடத்தக்கது.[40] நூலின் தொடக்கப் பகுதிகளில் 'சிவனே முருகன்' என்ற கருத்தை வலியுறுத்துமுகமாக முருகனது முழுமுதற்றன்மையினைப் படிப்படியாகவளர்த்துச் சென்று, நூலின் இறுதிப் பகுதியில் 'முருகனே சிவன்' என்னும் கருத்து வலிமை பெறுமாறு கவிஞர் அமைத்துள்ள திறம் 'முருகன் முழுமுதற்றன்மை' என்னும் பகுதியில் விரிவாக விளக்கப்படும். 'முருகனே சிவன்' என்ற நிலையிலிருந்தும் மேலும் வளர்ந்து 'முருகனே உடம்பிடித் தெய்வம்' என்று கூறுமளவிற்கு வேலின் தனித்தன்மையை நிறுவிப் பண்டைய வேல்வழிபாட்டைப் போற்றுந்திறன் பாராட்டற்குரியது.

இலங்கையில் சில கோவில்களிலும், மலேசியாவில் பத்து மலையிலும், கோலாலம்பூர் கந்தசாமி கோவிலிலும் கருவறையினுள் வேலே நிறுவப்பெற்று (பிரதிட்டை செய்யப்பெற்று) வழிபடப்பெறுதல் முருகனும் வேலும் ஒன்றே என்ற சிந்தனையையும், முருகனுக்குக் கொடுக்கும் மதிப்பை வேலுக்கும் கொடுத்தார்கள் என்ற உண்மையையும் புலப்படுத்துகின்றன[41] என்றும், வேல்தான் முருகனின் உண்மைச் சொரூபம்[42] என்றும் அறிஞர்கள் கருதுவது ஈண்டு நினையத்தகும்.

## முடிவுரை

முருகனது எழில்மிகு தோற்றங்களைச் சங்கப்புலவர் நெறியில் இயற்கையழகுடன் ஒப்பிட்டுவந்த கச்சியப்பர், கதைப்போக்கில் முருகனது தோற்றப்பொலிவினைப் பத்தியுணர்வுடன் வருணிக்குமிடங்களில் சிற்பநூலுணர்வும் தோன்றுமாறு பாடுவர். முருகவேளின் பல்வேறு தோற்றங்களில் தாய்தந்தையர் நடுவண் வீற்றிருக்கும் சோமாக்கந்த வடிவமும், ஆறுமுகமும் பன்னிருகரமுங் கொண்ட வடிவமும் ஆசிரியரைப் பெரிதுங் கவர்ந்துள்ளமையினை அகச்சான்று

களால் தெளிந்தோம். முருகன் கரத்திலங்கும் வேலினை 'உடம்பிடித் தெய்வம்' எனப் போற்றியதுடன் முருகனாகவே படைத்துக்காட்டிப் பழந்தமிழகத்தில் நிலவிய வேல் வழிபாட்டினைப் புதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்கோள்

1. மு.அருணாசலம், சைவ சமயம், பக்.60-63.
2. திரு.வி.கலியாணசுந்தரனார், முருகன் அல்லது அழகு, ப.18.
3. திருமுருகு., 1-2.
4. அகம்., 120:1-3.
5. பரி., 5:12.
6. ———, 19:99-100.
7. வாமதேவ முருகப்பட்டாரகர், ஸ்ரீகச்சியப்ப சிவாசாரியார் புராணம், செய்.12,35.
8. Asim Kumar Chatterjee, The Cult of Skanda-Karttikeya in Ancient India, PP.127–130.
9. ராஜஸ்ரீ கிருஷ்ணராஜ மஹாராஜா, ஸ்ரீதத்துவநிதி (முதலாவது பாகம்), பக்.320-331.
10. Asim Kumar Chatterjee, The Cult of Skanda-Karttikeya in Ancient India, P.128.
11. ராஜஸ்ரீ கிருஷ்ணராஜ மஹாராஜா, ஸ்ரீதத்துவநிதி (முதலாவது பாகம்), ப.324.
12. ந.ரா.முருகவேள், தெய்வத் திருவுருவங்கள், பக்.72-73. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, பக்.93-94.
K.R. Venkataraman, 'Skanda Cult in South India', The Cultural Heritage of India, Vol.IV, p.304.
R. Nagaswamy, Gangaikonda Cholapuram, p.36.

13. ந.ரா. முருகவேள், தெய்வத் திருவுருவங்கள், ப.73.
14. இரா.நாகசாமி, 'வரலாற்றில் முருகப்பெருமான்', கலைமகள் தீபாவளி மலர், 1965, ப.127.
15. ந.ரா. முருகவேள், தெய்வத் திருவுருவங்கள், ப.67.
16. ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, செ.345.
17. காண்க, பக். 69-70.
18. ந.ரா.முருகவேள், தெய்வத் திருவுருவங்கள், ப.96.
19. கச்சியப்ப முனிவர், தணிகைப்புராணம், ப.428.
20. சிவஞானயோகிகள், காஞ்சிப் புராணம், குமரகோட்டப் படலம், செ.24.
21. நா.கதிரைவேற்பிள்ளை, சுப்பிரமணிய பராக்கிரமம், பக்.51-52.
22. அகம்., 1:3; 158:16.
புறம்., 16:12, 56:14.
பொருந., 131.
23. E.W. Hopkins, Epic Mythology, p.227.
24. Asim Kumar Chatterjee, The Cult of Skanda-Karttikeya in Ancient India, p.129.
ராஜஸ்ரீ கிருஷ்ணராஜ மஹாராஜா, ஸ்ரீதத்துவ நிதி (முதலாவது பாகம்), ப.326.
25. கச்சியப்பமுனிவர், தணிகைப்புராணம், ப.426.
26. திருமுருகு., 289-290.
27. ராஜஸ்ரீ கிருஷ்ணராஜ மஹாராஜா, ஸ்ரீதத்துவநிதி (முதலாவது பாகம்), ப.331.
Asim Kumar Chatterjee, The Cult of Skanda-Karttikeya in Ancient India, p.130.
28. திருமுருகு., 208.
29. அருணகிரிநாதர், கந்தரலங்காரம், செ.55.
30. ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு, செய்.1:58-59.
31. க.கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப.19.
32. சிலப்பதிகாரம், 9:1.
33. மயிலை.சீனி.வேங்கடசாமி, நுண்கலைகள், ப.20.

34. ப. அருணாசலம், 'முருகன் வழிபாடு: வேலும் மயிலும்'. தமிழ் ஒளி, இதழ் 11, 1973-74, ப.3.
35. காண்க, பக்.75-76.
36. சோமசுந்தரேச சிவாசாரியார், ஸ்ரீவள்ளியம்மை திருமணப்படல மூலமும் தெய்வ மெய்ப்பொருட்டிருவருள் விரிவுரையும், ப.17.
37. ஞானியாரடிகள், கந்தர்சட்டிச் சொற்பொழிவுகள், பக்.42-43.
38. அருணகிரிநாதசுவாமிகள், திருவகுப்பு, திருப்புகழ் பொதுப் பாடல்களும் மற்றைய நூல்களும், மூன்றாம் பாகம், ப.6.
39. மார்க்கசகாயதேவர், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், ப.7.
40. தண்டபாணி சுவாமிகள், திருச்செந்திற் பிரபந்தங்கள், பக்.273-302.
41. ப.அருணாசலம், 'முருகன் வழிபாடு : வேலும் மயிலும்', தமிழ் ஒளி, இதழ் 11, 1973-74, பக்.3-4.
42. சுவாமி சிவானந்த சரஸ்வதி, முருகனின் பெருமை, கி.வான மாமலை, (மொ.பெ.ஆ.), ப.59.

2

# முருகனும் பிற தெய்வங்களும்

கந்தபுராணத்துள் முருகனையன்றிப் பிற தெய்வங்கள் மிகுதியாய்க் காணப்படுகின்றனவெனினும் அத்தெய்வக்குழுவினுள் சிவன், உமை, விநாயகன், தெய்வயானை, வள்ளி, திருமால், நான்முகன், இந்திரன் என்போரே சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள். இவர்கட்கும் முருகனுக்கும் உள்ள தொடர்புகளும், அத்தொடர்பினால் வெளிப்படும் முருகனது முதன்மையும், பிறவும் ஈண்டுக் காண்பாம்.

## 1. முருகனும் சிவனும்

சங்ககாலத்தில் தலைமை பெறாத சிவன், நாயன்மார்காலச் சைவ உலகில் தலைமையும் முழுமுதற்றன்மையும் பெற்றுத் திகழ்ந்தமையினை முன்னர்க் கண்டோம்.[1] சைவநெறிக்கு மாறின்றி மீண்டும் முருகன் தலைமையும் முழுமுதற்றன்மையும் பெற்றுச் சிறத்தல் 'முருகன் முழுமுதற்றன்மை' என்னும் பகுதியில் விரிவாக விளக்கப்படும். சிவனுக்கும் முருகனுக்குமுள்ள தந்தை மகன்மை உறவுகளும் தனக்கும் தனயனுக்கும் அயன்மையின்றி (அபேதம்) முருகனை முழுமுதற்பொருளாக உயர்த்தச் சிவன் மேற்கொள்ளும் முயற்சியும் ஈண்டு விளக்கப்பெறும்.

### அ) முருகனைத் தோற்றுவிக்கும் சிவன்

முருகன் தோன்றுதற்கு முதலாகத் திகழ்பவன் சிவன். சிவனை மறந்து தக்கனது வேள்விக்குச் சென்ற பாவமே இந்திரன் முதலிய தேவர்கள் அசுரரால் அளப்பில் காலம் சொல்லொணாத் துயருக்கு ஆட்பட்டுழலக் காரணமாயிற்று. அத்துயரத்தினின்றும் விடுதலை பெறச் சிவனைக் குறித்து இந்திரன் நெடு

நாட்கள் தவமியற்றிய பின்னர்ச் சிவன் அவன்முன்தோன்றி, 'தம்மிடை ஒரு சேய் தோன்றிச் சூரனைக் கொன்று உம்மைக் காப்பன்,' எனக் கூறிய பின்னர் சனகர் முதலிய நான்கு முனிவர்கட்கும் யோகநிலையினைப் போதித்துக்கொண்டு கல்லாலமரநீழலில் அமர்ந்தான். காரியம் நிகழா நிலையில் காமவேளால் சிவனது மோனம் கலைக்கப்பெற்று, பார்வதி மணம் நிகழ்ந்தது. பின்னும் குமரன் தோன்றாத நிலையில், மீண்டும் இந்திரன் முதலியோர் உளமுருகி வேண்டிக்கொள்ளச் சிவன் அறிஞராயோர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டு, அவ்வாறு முகங்களிலுள்ள நெற்றிக்கண்தோறும் ஒவ்வொரு தீப்பொறியைத் தோற்றுவித்தான். அப்பொறிகளின் வெம்மைக்காற்றாது உமை, திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் அஞ்சி அகன்றோடியதால் அப்பொறிகளின் ஆற்றலைக் குறைத்து, அனிலன், தீக்கடவுள் முதலியோர் அதனை ஏந்திச் சென்று கங்கையில் உய்க்குமாறு பணிகொண்டு சரவணத்தில் முருகனைத் தோற்றுவிக்கச் செய்தான் சிவன்.

நினைப்பளவில் (சங்கல்பம்) அனைத்தையும் தோற்றுவிக்கும் பேராற்றலுடைய சிவன், பிறகடவுளரின் அரிய முயற்சிக்குப் பின்னர் முருகனைத் தருதலால் முருகனது அருமைப்பாடும், தொடக்கத்திலேயே குழந்தையாகத் தோற்றுவிக்காமல் உமையுட்பட பலரும் அஞ்சி அகலுமாறு தீப்பொறிகளாய்த் தோற்றுவித்தலால் முருகனது வரம்பிலாற்றலுடைமையும் பெறப்படும். தன்னையே நிகர்க்கும் பேராற்றல் முருகனுக்கும் உளதெனப் பிற கடவுளரும் உணர்தற்கே இத்தகு அருமைப்பாட்டுடன் முருகனைச் சிவன் தோற்றுவித்தனன் என்பது குறிக்கத்தக்கது.

## ஆ) முருகனது பீடுற்றிடு நெறியினை உரைத்தல்

முருகன் பல்லுருக்கொண்டு நிகழ்த்தும் திருவிளையாடலைக் கண்டு வியந்த உமை, சிவனை வணங்கி, ''மாயையின் நினைநேர்தரு மனையான் பீடுற்றிடு நெறிதன்னையெம் பெருமான் மொழி கென்று'' (1:14:14) கேட்க, சிவன் முருகன் பெருமைகளைப் பகர்வன்.

'நம் கண்ணில் தோன்றிய குமரனைக் கங்கை தாங்கிச் சரவணத்திடுதலால், 'காங்கேயன்' எனவும், சரவணத்தின் பாங்கரில் தோன்றலால், 'சரவணபவன்' எனவும் (1:14:16), கார்த்திகைத் தெரிவையர் பாலருந்தலால் 'கார்த்திகேயன்' எனவும், வடிவமாறும் திரட்டி ஒன்றாக நீ செய்தமையால் 'கந்தன்' எனவும் வழங்கப் பெறுவன் (1:14:17). நமக்குள்ள ஆறுமுகங்களே கந்தனுக்கு ஆறு முகங்களாயும், தாரகப்பிரமமாய் எவ்வித மந்திரங்கட்கும் முதலில் மொழியும் நந்தம் ஆறெழுத்தும் ஒன்றாகக்கூடி உன் மகனது திருப் பெயரின் ஆறெழுத்தாயும் (சடாட்சரம்) விளங்குகின்றது (1:14:18). ஆதலின் நமது சத்தியாம் அறுமுகன் தன்னை வழிபடுவோருக்குச் செல்வத்தையும் ஞானத்தையும் முத்தியையும் அருள வல்லவன் (1:14:19), என முருகப்பெருமானது திருப்பெயர்களையும், பெருமை களையும் மொழிகுவன். பிரமனை குடிலைப் பொருள் வினவி அவனறியாது மயங்கக்கண்டு, சென்னியில் குட்டிச் சிறைப்படுத்தி உயிர்களைப் படைக்கும் தொழிலைத் தானே மேற்கொள்வான் (1:14:20) என்றும், தாரகனையும் சிங்கமுகனையும், சூரபன்மனை யும் தொலைவு செய்து இந்திரன் முதலோர் இன்னல்களை அழித்து அருள் புரிகுவன் (1:14:21) என்றும் முருகன் எதிர் காலத்தில் நிகழ்த்தவிருக்கும் பீடுறு செயல்களையும் விளம்புவன்.

### இ) குடிலைப்பொருள் வினவல்

குடிலைப்பொருள் வினவி நான்முகனைத் தண்டித்துச் சிறையிருத்திய குமரனிடம் சிவனே எழுந்தருளிவந்து மகனை வேண்டி அயனைச் சிறைவிடுத்தான். பின்னர், முருகனை மடிமீதிருத்திக் கொண்டு, 'ஓமென உரைக்கும் சொல்லின் உறுபொருள் உனக்கு வருமோ'வெனக் கேட்க, 'மூலத்தொல்பொருளை யாருங் கேட்கச் லாமோ' என மகன் மறுக்க, பின்னர்த் தன் திருச்செவி சாய்த்து சொல்ல மறைவாக அதனைக் கேட்டருளினன் (1:17:36-39).

தலைமைக் கடவுளாகத் திகழும் முருகன் குடிலைப் பொருளை நன்கறிந்தவனா எனப் பிறகடவுளர் கொள்ளும் ஐயப்பாட்டினைக் களைதற்கே சிவன் இச்செயல் புரிந்தான் என்பதனை,

*"அன்னதோர் ஐய மாற்றி அகமகிழ் வெய்தி அங்கண்*
*தன்னிளங் குமரன் றன்னைத் தலைமையோ டிருப்ப நல்கி"*
(1:17:40)

எனப்பாடுவர் கவிஞர். பிற தெய்வங்களைக் காட்டிலும் செவ்வேள் தலைமையுடையவன் என்பதனை இச்செயலால் உணர்த்துவன் சிவன்.

ஈ) படை வழங்கல்

சிவன், இந்திரன் முதலிய தேவர்களின் வேண்டுகோளை ஏற்றுப் 'பாரினை அலைத்துப் பல்லுயிருக்கும் பருவரல் செய்து விண்ணவர் ஊரினை முருக்கித் தீமையே இயற்றித் திரியும் சூரனை அவுணர்குழுவொடுந் தடிந்து வேதநெறியினை நிறுவி இந்திரனுக்குப் பேரரசளித்துப் பெயர்தி' (1:18:35) எனக் கூறிப் பதினொரு உருத்திரர்களையும் தோமரம் முதலிய ஆயுதங்களாகப் படைத்தும், 'ஏவின ஐம்பெரும்பூதங்களையும் அடுவதும், பல்லுயிரையும் ஒருங்கே முடிப்பதும், யாவர்மேல் விடுக்கினும் அவர்தம் திறலும் வரங்களும் கெடுத்து உயிரை உண்பதும், எப்படைக்கும் நாயகமாவதும் ஆகிய வேலினைப் படைத்தும் முருகன் கரத்தில் நல்கினன்' (1:18:37-38), இலக்கத்தொன்பது மைந்தரையும் துணைப்படைகளாகவும், அண்டாபரணர் முதலிய கணப்பெருந்தலைவர்களைப் படைத்தலைவர்களாகவும் உடன் செல்லுமாறு பணித்து (1:18:39-40) மனத்தினும் விரைந்து செல்லும் தேரினையும் படைத்தளித்தனன். இப்படைகளின் துணையுடன் தாரகனை வென்றபின்னர்ச்

சூரபன்மனை வெல்லத் தெற்கேகும் முருகன், திருச்சேய்ஞல்லூரில் சிவனை இயல்பாக வழிபட்டபொழுது படைக்கலத் திறையை (பாசுபதாத்திரம்)யும் முருகனுக்கு வழங்கினன் (1:24:76). தன்னைக் குறித்துத் தவமியற்றிய தெய்வங்கட்கே சிவன் படைகளை வழங்குவது மரபாகும். தோமரம் முதல் பாசுபதாத்திரம் வரை சிவன் வழங்கிய படைகளனைத்தும் முருகன் வேண்டிப் பெற்றவையல்ல என்பதும், முதன்மை பெறும் முருகனுக்குச் சிவனே உவந்தளித்தவை என்பதும் ஈண்டுக் குறிக்கத்தக்கது.

## உ) முதன்மை தருதல்

முருகன் மகேந்திரப்போர் முடித்துத் தேவர்களைச் சிறை மீட்ட பின்னர், இந்திரன் நன்றிமுகத்தான் தன் மகளாம் தெய்வயானையை முருகனுக்கு மணம்புரிவிக்க ஏற்பாடு செய்தனன். மகனது மணம் காணவந்த சிவனும் உமையும் தம் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய மணமக்களை எடுத்தணைத்துப் பாங்கரில் இருத்தி, 'உமக்கு எம்முறு முதன்மை கொடுத்தும்' (5:2:255) என்று மைந்தர்க்கும் மகட்கும் தலைமையருள் செய்து, பிரமன் முதலிய பிற தெய்வங்கள் அனைவரும் அவ்விருவரின் திருவடிகளையும் முடிமிசைக் கொண்டு போற்றுமாறும் செய்தனர்.

தெய்வயானை மணத்திற்கு விண்ணுலக, மண்ணுலக வேந்தர்கட்கு அழைப்பு விடுத்த இந்திரன் சிவனுக்கு இச்செய்திகளைத் தெரிவிக்காதது வியப்பாகவே உள்ளது. முற்றுணர்வினனாம் சிவன் தானே வலிய எழுந்தருளிவந்து மகனது மணக்கோலத்தைக் கண்டு களித்துத் தனக்குள்ள முதன்மையினைத் தனயன் கேளாது உவகையுடனளித்தல் கருதற்குரியது. படைகளையும், தெய்வ முதன்மையையும் மகன் கேட்டுப்பெறும் நிலையின்றித் தானே அவைகளைத் தருதல்மூலம் முருகனது தலைமைப்பண்பினைக்

காக்கும் சிவனது செயல் பாராட்டத்தகும். சைவ உலகில் முருகன் தலைமையும் முழுமுதற்றன்மையும் பெற்றுச் சிறத்தற்குத் தொடக்க நிலையிலிருந்து சிவன் முயன்று வந்துள்ளமையினை இதனாற் அறிகின்றோம்.

## 2. முருகனும் உமையும்

திராவிடரின் வெற்றித் தெய்வமாம் கொற்றவையே பிற்காலத்தில் பண்பாட்டுக் கலப்பினால் உமையாக உருவெடுக்கின்றாள். திருமுருகாற்றுப்படை முருகனைக் 'கொற்றவை சிறுவ',[2] 'பழையோள் குழவி'[3] என்னுந் தொடர்களால் சுட்டுவதால் பழந்தமிழ்க் கடவுளாம் முருகனோடொத்த பழைமையுடையள் கொற்றவையென உணர்கின்றோம். முருகன் தாய்த் தெய்வத்தினின்றும் பிறந்த செய்தி தமிழ்நாட்டுக்கே உரியதென்றும் வடநாட்டுச் சான்றுகளில் கந்தன் ஆணின் வித்தினின்றும், பெண்ணின் உதவியின்றியே உருவானவனென்றும் அறிஞர் கூறுப.[4] சமயத்துறையில் இரு பண்பாடுகளும் முழுதுமாக இணைந்த காலத்தில் தோன்றிய தமிழ்க்கந்தபுராணத்துள் கச்சியப்பர் உமையின் தொடர்பின்றியே முருகன் தோன்றியதாகப் பாடினும் 'உமைமகன்' (1:11:99), 'கவுரிதன் குமரன்' (1:13:21) இமையத்தவள் சேய்' (1:13:31), 'கொற்றவை சிறுவன்' (4:4:398) என முருகனைக் குறிப்பிட்டுப் பழந்தமிழ் மரபினைப் போற்றுவர். பின்னிணைப்பில் உள்ள முருகன் 'திருப்பெயர்கள் அட்டவணை' மேலும் விளக்கந்தரும்.

### அ) தாய்மை உணர்வு

முருகனது அவதார நிலையில் உமையின் தொடர்பில்லாதிருப்பினும் தோன்றிய முருகனை மகவாகப் போற்றும் உமையினிடத்துத் தாய்மையுணர்வு விஞ்சியிருத்தலைக் காண்கின்

றோம். சரவணத்தில் அறுவகை உருவுகொண்டு வீற்றிருக்கும் முருகனிடம் பேராதரத்துடன் சென்று அவ்வாறுவடிவங்களையும் அன்புடன் எடுத்துத் தழுவி, ஆறுமுகங்களும் பன்னிரு புயங்களுங் கொண்ட ஒருருவாக மாற்றிக் 'கந்தன்' என்று பெயர் பெறுமாறு செய்தனள் (1:13:19-21) என்றும், குமரவேளின் முடிதொறும் உச்சி முகர்ந்து அவன் புறத்தை நீவி, தலையன்பு இதுவென்று கூறுமாறு கொங்கைகளில் சுரந்த பாலை அரதனவள்ளத்தில் ஏற்றுக் காதல் மாமகற்கு அன்போடு அருத்திய பின்னர்க் குமரனைக் கொடுசென்று சிவனிடம் கொடுத்தனள் (1:13:22-24) என்றும் ஆசிரியர் விளக்கும் பகுதிகள் தாய்மையின் தலையன்பினையும், கவுரிதன் குமரன் கந்தனெனப் பெயர் பெறுதலையும் உணர்த்தும்.

படைகளைச் சிவன்பால் பெற்ற முருகன், பெற்றோரை வலம் வந்து தொழுது விடைபெறுங்கால் சிவன் குமரவேளைத் தழுவிக் கைகளால் எடுத்து, கவானில் உய்த்து உச்சிமேல் உயிர்த்து உமையின் கையில் கொடுக்க, குழந்தையைப் பெற்ற உமை மடிமீதிருத்தி அருளினாற் புல்லி அன்பினால் உச்சி முகர்ந்து, 'அவுணர்கிளையைத் தடிந்து கடவுளர் குறையை முடித்து வருதி' என்று அருள் புரிகுவள் (1:18:42-43). விடைபெறுங் குமரனிடம் சிவன் 'ஏகுதிநீ' (1:18:42) என நவில்வதாகவும் உமை 'வருதி' (1:18:43) என்று உரைத்ததாகவும் குறிப்பிட்டுத் தந்தையினும் சாலப்பரியும் தாய்மை யுணர்வினைச் சுட்டுவர். தெய்வயானையம்மை திருமணத்தில் முருகனுக்கு முதன்மை நல்குவான் வேண்டி உமையுடன் சிவன் எழுந்தருளியபொழுது தம்மைப் பணிந்த முருகனையும் தெய்வ யானையையும் பெற்றோரிருவரும் ஆர்வத்துடன் எடுத்தணைத்து முடித்தலத்தில் உயிர்த்த பின்னரே 'எமக்குறு முதன்மை கொடுத்தும்' என்றும் உரைத்ததாகப் பாடுவர். பெற்றோர் மகன்மை உறவு

நிலையிலேயே முருகன் அயன்மையின்றி முதன்மை பெறுதலை ஆசிரியர் படைத்துக்காட்டுதல் கருதத்தக்கது. முதனூலில் காணப்படாத இந்நிகழ்ச்சி ஆசிரியரால் படைத்துக்கொள்ளப்பட்டதென்பதும் இவண் நினையத்தகும்.

### 3. விநாயகர்

தக்க காண்டத்தில் ததீசி முனிவர் தக்கனுக்கு உரைக்குமுகமாக விளங்கும் கயமுகன் உற்பத்திப்படலம் விநாயகபுராணத்தின் சுருங்கியலாகத் திகழ்கிறது. கயமுகாசுரனது துன்பத்தினின்றும் விடுதலை பெற இந்திரன் முதலியோர் சிவனை வேண்டி விநாயகரைத் தோற்றுவித்தமையும், அவ்வேழமுகத்தான் கயமுகனை வென்று அவனை ஊர்தியாகக் கொண்டமையும், திருச்செங்காட்டில் சிவனை நிறுவி அவ்விநாயகர் பூசனை புரிதலையும் அவ்வூரே கணபதீச்சுரம் என அழைக்கப் பெறுதலையும் இப்படலத்துள் (6:14) கச்சியப்பர் விளக்குவர். பல்லவ வேந்தன் படைத்தலைவராயிருந்து வாதாபியை வென்று மீண்ட பரஞ்சோதியார் இறுதிக்காலத்தில் தம் பதியாகிய திருச்செங்காட்டங்குடி சென்று கணபதீச்சுரத்து இறைவனை இறைஞ்சி வாழ்ந்தவர் என்று வரலாற்றாசிரியர்கள் நவில்வதும்[5], அங்குள்ள விநாயகர் 'வாதாபி கணபதி' என்று அழைக்கப்படுவதும் இவண் கருதத்தகும்.

சிவனது மூத்த பிள்ளையாம் விநாயகரைச் சிவனைப் போன்று முழுமுதற்றன்மை பெற்றவரென ஆசிரியர் உணர்த்துவர் (6:14:149-150). தன் மலரடி வணங்கிய விநாயகரிடம்,

*"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்*
*முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்*
*அன்னர்தஞ் சிந்தைபோல் ஆக்குதி அலதுனை*
*உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதீ"* (6:14:152)

எனச் சிவன் உரைத்ததாகக் குறிப்பிட்டு, எச்செயல் தொடங்கினும் முதன்முதலில் விநாயகரை வாழ்த்தித் தொடங்கும் மரபினை வலியுறுத்துவர். ''திகட சக்கரச் செம்முக மைந்துளான்'' என முருகனால் முதலடி எடுத்துக் கொடுக்கப்பெற்றுப்[6] பாடும் முதற்பாடலிலும், அடுத்த பாடலிலும் விநாயகரை வாழ்த்தியே கந்தபுராணத்தைத் தொடங்குதலால் ஆசிரியர் நூலுள் வலியுறுத்திய மரபினைத் தாமும் பின்பற்றும் பாங்கினைக் காண்கிறோம்.

சூரபன்மனது துன்பத்தினின்றும் உய்வுபெற இந்தின் சீகாழியில் சிவவழிபாடு நிகழ்த்தி வருகையில் வானம் வறண்டு 'மலர் வனம்' வாடியதால் சிவபூசனைத் தடைப்பட்டது. நாரதன் அறிவுரைப் படி இந்திரன் விநாயகரை வழிபட்டு (2:27:25) அகத்தியன் கமண்டலத்திலிருந்த பொன்னியாற்றினை நிலவுலகில் கொணர்வன். பொன்னியாறு புரந்தரன் நோற்கும் போதார் தண்டலையிற் புகுந்த ஞான்று அவன் கொண்ட உவகையினை,

> ''*சீரினை யகற்றி நீங்காத் திருவினை மாற்றித் தொல்பேர்*
> *ஊரினைக் கவர்ந்து தன்னோர் உயிருக்கும் இறுதி நாடுஞ்*
> *சூரனை வென்றால் என்னத் தொலைவிலா மதர்ப்பு மிக்கான்*
> *ஆரவன் உளத்திற் கொண்ட உவகையை அறைதற் பாலார்*',
> (2:29:11)

என்று வியந்து போற்றுவர் ஆசிரியர். இதனால் முருகன் தோற்றத் திற்கு விநாயகரும் துணைநிற்பது புலனாகும்.

வள்ளியைக் களவில் புணர்தற்குத் ''தந்திமுகத் தெந்தைதனை முன்னே வருவாய் முதல்வா'' (6:24:110) என முருகன் வேண்டுங் கால், களிற்றுருவுடன் கடல்போல் முழங்கி முன்தோன்றி உதவுவர் விநாயகர். களிற்றின் முழக்கத்திற்கு அஞ்சி முருகனது பின்புறத்தை வள்ளி தழுவிக்கொண்ட நிலையில் முருகன் திகழும் பாங்கினை,

"அன்ன தொருகாலை அறுமா முகக்கடவுள்
முன்னொரு சார்வந்து முதுகளிற்றின் கோடொற்றப்
பின்னொரு சார்வந்து பிடியின் மருப்பூன்ற
இந்நடு வேநின்றான் எறுழ்வயிரத் தூணேபோல்"
(6:24:113)

என்று நயமுறப் பாடுவர். தமிழ் அகமரபின் வழியில் முருகன் வள்ளியைக் கூடும் களவுப்புணர்ச்சிக்கு விநாயகரும் துணைநிற்பது இதனால் பெறப்படும்.

ஏழு முனிவர்களில் தானே மேற்பட விரதமொன்றை விளம்புதியெனத் தம்மிடம் வேண்டிய நாரதரிடம்,

"ஆறுமா முகத்து நம்பி பொன்னடி வழிபா டாற்றிப்
பொருவில் கார்த்திகைநாள் நோன்பைப் பன்னிரு
வருடங் காறும் பரிவுடன் புரிதி" (6:23:10)

என விநாயகர் உரைப்பர். வழிபடும் அன்பர்கட்கு அருளும் திறத்தில் முருகனது முதன்மையினை விநாயகர் மூலம் ஈண்டு வலியுறுத்தல் கருதத்தக்கது.

### 4. முருகனும் தெய்வயானையும்

திருமாலின் புதல்வியராம் அமுதவல்லியும் சுந்தரவல்லியும் கந்தனை மணத்தற்குச் சரவணத்தில் அருந்தவம் இயற்றுகையில் அவர்கள் முன்தோன்றிய முருகன், மூத்தவளாம் அமுதவல்லியை விண்ணுலகில் இந்திரன் மகளாக வளரும்படியும், இளையவளாம் சுந்தரியை மண்ணுலகில் சிவமுனியின் புதல்வியாய் வேடர்பால் வளருமாறும் பணித்து, அங்ஙனம் வளருங்கால் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதாகவும் கூறியருளினன் (1:18:1-6). இந்திரன்பால் சென்ற அமுதவல்லியை அயிராவதம் அன்புடன் வளர்த்தமையால் தெய்வயானை என்ற பெயரும் பெற்றனள் (1:18:10).

## அ) முருகனோடு இணைந்து முதன்மை பெறுபவள்

கந்தபுராண நிகழ்ச்சியின் வண்ணம் முருகனுக்கு முதல் மனைவியாகும் பேறு பெறுபவள் தெய்வயானையே. தன்னிடம் வளர்தற்குக் குழந்தைவடிவில் வரும் அமுதவல்லியை, "என்னை ஈன்றயாய் இங்ஙனம் வருக" (1:18:8) என இந்திரன் இசைத்ததாகவும், மணச்சாலைக்கு இந்திரன் தெய்வதக்கன்னியை அழைத்து வருதலைக் கண்ணுற்ற முனிவரும் தேவரும் "அன்னை வாழி" என்று அவளது திருவடிகளைப் போற்றுவதாகவும் (5:2:233) மொழிந்த கச்சியப்பர், தம் கூற்றிலும் "எம்மன்னை" (5:2:230) என்றும், "எம்மை ஈன்றெடுத்த அன்னை" (5:2:263) என்றும் சுட்டித் தெய்வயானையின் தெய்வவியல்பினைப் புலப்படுத்துவர். மண, சாலைக்கு எழுந்தருளிய தெய்வயானையின் மருங்கில் வந்த சூரரமங்கையர், "தீயசூருயிர் வவ்விய வேலினான் மனைவியா தியால் எவ்வுலகிற்குநீ இறைவியாம்" (5:2:171) என அன்போடு எத்தி அவள் அடிபணிதலைக் குறிப்பிட்டு, முருகனோடு இணைந்து தெய்வயானை தெய்வக்குழுவினுள் முதன்மை பெறுதலைச் சுட்டுவர்.

தெய்வயானையின் மணிக்கழுத்தில் மங்கலநாணை ஆர்த்தும் நறுமுடியில் நறுந்தொடை சூழ்ந்தும் (5:2:247), அவள் சீறடியினை அம்மியில் தூக்கிவைத்தும், அருந்ததி காட்டியும் (5:2:252–253 வேதநெறிப்படி மணம்புரிந்தான் முருகப்பெருமான். அம்மையின் அடிகளை அம்மியில் ஏற்றிய முருகனை, "மலரயன் உச்சியில் மேலடி வைத்தான்" (5:2:247) எனச் சுட்டுதலால் முழுமுதற் கடவுளாம் முருகனும் உலகியல் நெறிகட்குக் கட்டுப்பட்டவன் என்பதனைக் குறிப்பாக உணர்த்துவர். தம்மைப் பணிந்தெழுந்த மணமக்களிருவரையும் ஆர்வத்துடன் எடுத்தணைத்து முடித்த லந்தனில் உயிர்த்து, சிவனும் உமையும் முதன்மை தருதலால் (5:2:255) முருகனோடு இணைந்து தெய்வயானை முதன்மை

பெறுதல் பெறப்படும். ஆணும் பெண்ணுமாக விளங்கி உலகைப் பாலித்தருளும் சிவனும் உமையும் அம்முறையிலேயே முருகனுக்கும். தெய்வயானைக்கும் முதன்மை தருதல் கருதற்குரியது.

முருகனால் மங்கலநாண் அணியப்பெறுதல், சிவனாலும் உமையாலும் முதன்மை பெறுதல் முதலியன தெய்வயானைக்கே கிட்டிய பேறுகளாம். திருமணம் முடிந்தபின்னர்த் தன் உறையுள் எய்திய முருகன், பொன்னின் மஞ்சமேற்படுத்து அவளுடன் முயங்கிய திறத்தைப், ''புவனம் மன்னு யிர்த்தொகை உய்ந்திட முயங்கி வைகினனால்'' (5 : 2 : 263) என்றுரைத்து, உலகையும் உலகில் வாழும் உயிர்களையும் உய்யச்செய்யும் முருகனது அருள் வெளிப் பாட்டிற்குத் துணைநிற்பவளாகத் தெய்வயானையைக் காட்டுவர்.

## 5. முருகனும் வள்ளியும்

'மனிதன் வேட்டையாடி உணவு தேடுதற்கு முன்னும் நெல் முதலிய தானியங்களைப் பயிரிட்டுப் பழகுவதற்கு முன்னும் காய், கனி, கிழங்குகளையே உண்டுவந்தான். அப்பொழுது கிடைத்த வள்ளிக்கிழங்கினையே செழிப்பிற்கும் உற்பத்திக்கும் அறிகுறியாகக் கொண்டான். வள்ளிக்கிழங்கு அகழ்குழியில் வள்ளி பிறந்தாள் என்ற கதை அவள் செழிப்புத்தெய்வம் என்பதனை வலியுறுத்தும். அர்த்தசாத்திரம் விதைகளிலும் பயிர்களிலும் வாழ்பவளாகச் சீதை யைக் கூறுதலால் தானியப்பயிர்களைப் பயிரிட்டுப் பழகிய காலத்தில் தோன்றிய செழிப்புத்தெய்வம் அவள் என்பது பெறப்படும். இவ்விரு செழிப்புத்தெய்வங்களிலும் வள்ளியே தொன்மையான தாய்த்தெய்வ மாகும். தாய்த்தெய்வமாம் கொற்றவையின்சிறுவனாக முருகனைக் கண்ட தமிழர்கள் பிறிதொரு தாய்த்தெய்வத்தையே முருகனுக்கு மனைவியாக்கியதில் வியப்பில்லை, என உரைப்பர்.[7] முருகன் மனைவியருள் வள்ளியைப் பற்றிய செய்திகளையே சங்கப்பாக்களில்

மிகுதியாகக் காண்கின்றோம். தமிழினவழியிலும், தமிழ்மரபு வழியிலும் தொன்மையும், முதுமையுமுடைய வள்ளியைப் புராணக் கூறுகள் வளர்ச்சியுற்ற நிலையிலும் அத்தகு தமிழ்மரபுகள் கெடா வண்ணம் கந்தபுராணத்துள் கச்சியப்பர் காட்டுவர். தமிழுலகம் வகுத்த புலனெறி வழக்கமாம் அகமரபினை விளக்க வள்ளியம்மை திருமணப்படலமே ஆசிரியருக்கு வாய்ப்பளித்துள்ளமை குறிக்கத் தகும். 'கந்தபுராணத்தில் தமிழ் இலக்கிய மரபுகள்' என்னும் பகுதியில் இச்செய்தி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## அ) மண்ணுலகத் தொடர்பு

முற்பிறப்பில் சரவணத்தில் தவமிருந்த சுந்தரவல்லியே முருகன் ஏவலால் தொண்டைநாட்டு மேற்பாடியில் . சிவமுனிக்கும் மானுக்கும் மகளாகத் தோன்றினள். வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியில் ஏறந்தமையால் வள்ளியெனும் பெயர் சூட்டப்பெற்று வேட்டுவ வேந்தனாம் நம்பியால் வளர்க்கப் பெறுவள். கழிந்த பிறவியில் அவள் இயற்றிய தவத்தின் பயனை நுகர்விக்கவே முருகன் மனித உருக் கொண்டு மண்ணுலகில் நடமாடி தமிழிலக்கிய அகமரபின்வண்ணம் களவின் வழிவந்த கற்பினளாக வள்ளியை உயர்த்துவன். நிலந்தோயா தெய்வமுருகனை வேட்டுவக் கோலத்துடன் தோன்றுமாறு செய்து நிலந்தோயவைத்த பெருமை வள்ளிக்கே உரியதாகும். "தாட்டுணை சிவந்திடத்தமியன் ஏகினான்" (6:24:127) என முருகன் வள்ளிக்காக நிலந்தோய நடத்தலைப் பத்தியுணர்வுடன் கவிஞர் பாடுதலும் இவண் நினையத்தகும்.

## ஆ) வள்ளியின் தெய்வத்தன்மை

மனித வடிவில் வள்ளி பிறந்திருப்பினும் அவளைத் தெய்வமாகவே காணும் இயல்பினர் கச்சியப்பர். "மூவா முகுந்தன்

முதனாட் பெறும் அமுது'' (6:24:45) என்றும், ''தேவாதிதேவன் திருமைந்தன் தேவி'' (6 : 24 : 45) என்றும், ''தீட்டுசுடர் வேற் குமரன் தேவி'' (6 : 24 : 49) என்றும் வள்ளியைச் சுட்டும் இயல்புடைய கவிஞர், வேட்டுவக்குடியில் அவள் வளரும் பாங்கினை, முன்னாளில் அவள் தந்தையாம் கண்ணன் அரசர்குடியில் தோன்றி ஆயர்குடியில் புகுந்தமைக்கு ஒப்பிட்டுவப்பர் (6 : 24 : 44). வள்ளியின் தெய்வத்தன்மையை உணராது குலமரபின்படி தினைப்புனங் காக்கவைத்த வேடுவர் செயுலுக்கு இரங்கி,

*''காட்டில் எளிதுற்ற கடவுள்மணி யைக்கொணர்ந்து*
*கூட்டி லிருளோட்டக் குருகுய்த்த வாறன்றோ*
*தீட்டுசுடர் வேற்குமரன் தேவியாந் தெள்ளமுதைப்*
*பூட்டுசிலைக் கையார் புனங்காப்ப வைத்ததுவே''*
(6 : 24 : 49

என்று நைந்துருகிப் பாடுவர்.

தோழியிடம் கையடையாக நேர்ந்த வள்ளியை நெடுவேலண்ணல் சுரத்திடை அழைத்துச் செல்லுகையில், வேட்டுவ நம்பியும் கானவர் பலரும் கன்னியைக் கவர்ந்த கள்வனென்று கருதி முருகனை முன்னிப்பொருதகாலைச் சேவற்கொடியின் கூவுதல் கேட்டு அனைவரும் பொன்றி வீழ்ந்தனர். பின்னர், நாரதர் வேண்டுகோளின் வண்ணம் வீழ்ந்தவர்களை எழுப்பக் கருதிய முருகன், ''நம்மேற் பழிப்படு வெம்போர் ஆற்றிப் பட்டநுங் கிளையை எல்லாம் எழுப்புதி,'' (6:24:188) என வள்ளியிடம் கூறி அவர்களை உயிர்த்தெழச் செய்வன். அறியாமை நிரம்பிய வேடர்கட்கு வள்ளியின் தெய்வத் தன்மையை உணர்த்தும் வகையில் இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது குறிக்கத்தகும்.

மணம் புணர்ந்த வள்ளியுடன் தணிகைமலை செல்லும் முருகன் நம்பிவேந்தனைத், ''தேவருந்தொழச் சிறுகுடி அரசியல்

செலுத்தி மேவுக'' (6:24:212) என வாழ்த்திப் போவதாக ஆசிரியர் மொழிந்து, மனித உருவில் திகழ்ந்த வள்ளித்தெய்வத்தை வளர்க் கும் பேறுற்றதால் குறவர்குரிசிலும் தேவர்களால் தொழுந்தகைமை பெறுதலைச் சுட்டுவர்.

## இ) அன்பருக்கு அடிபணியும் அழகுத்தெய்வம்

முருகப்பெருமானின் எளிவந்தநிலையைப் (சௌலப்பியம்) புலப்படுத்த வள்ளியம்மை திருமணப்படலம் புலவர்க்குப் பெரிதும் துணைநிற்கும். 'கழல் சேர்ந்தார்க்கு அருத்திகொள் முத்தியும் ஆக்கமும்' நல்கும் பேராற்றலுடைய முருகன் களவுநெறியில் தலைப்பட்டஞான்று,

*'' கோங்கென வளர்முலைக் குறவர் பாவையே*
*ஈங்குனை அடைந்தனன் எனக்கு நின்னிரு*
*பூங்கழல் அல்லது புகலொன் றில்லையால்*
*நீங்கலன் நீங்கலன் நின்னை என்றுமே''* (6:24:84)

என வள்ளியிடம் உரைத்தல், அன்புடன் வழிபடும் அடியவருக்கு வலியவந்து அருள்புரியும் ஆண்டவனின் எளிமைநிலையைக் காட்டும். ''பாகுகனிமொழி மாது குறம்கள் பாதம் வருடிய மணவாளா''[8] என்றும், ''பணியா வென வள்ளிபதம் பணியும் தணியா அதிமோக!''[9] என்றும் முருகனது எளிவருநிலையைச் சுட்டும் அருணகிரியார் வாக்கும் இவண் நினையத்தகும். விருத்தவேடங்கொண்டு தன்னைத் தழுவ உன்னித் தாழ்ச்சி செப்பிய முருகனை,

*'' நத்துப் புரைமுடியீர் நல்லுணர்வு சற்றுமிலீர்*
*எத்துக்கு முத்தீர் இழிகுலத்தேன் தன்னைவெஃகிப்*

*பித்துக்கொண் டார்போல் பிதற்றுவீர் இவ்வேடர்*
*கொத்துக் கெலாமோர் கொடும்பழியைச் செய்தீரே"*
(6:24:108)

என வசவுரைத்து வெறுத்தொதுக்கிய வள்ளிக்கும் இறுதியில் தன்னையுணர்த்தித் தண்கருணை செய்து வாழவைத்தவன் முருகன். "மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால் வைதா ரையுமங்கு வாழவைப்போன்"[10] என்னும் கந்தரலங்காரப் பாடல் இச்செய்தியினையே வலியுறுத்துவதாக அறிஞர் கருதுப.[11] ஐம்புல வேடரால் அலைக்கழிக்கப்பட்டு அறியாமையிருளில் மூழ்கித் தவிக்கும் அன்புள்ளம் கொண்ட அடியவருக்கு வலியவந்து அருள் செய்யும் முருகனது எளிவருநிலையை வள்ளியம்மை திருமணப் படலம் வாயிலாக உணர்கின்றோம்.

## 6. முருகனும் திருமாலும்

தொல்காப்பியர் காலத்து முல்லைத்திணைத் தெய்வமாக மட்டும் விளங்கிய திருமால் பரிபாடற்காலத்து எல்லா நிலமக்களாலும் வழிபடப்பெற்றுத் திணைகடந்த தெய்வமாக விளங்குவன்.[12]

*"நாறிணர்த் துழாயோ னல்கி னல்லதை*
*ஏறுத லெளிதோ வீறுபெறு துறக்கம்"*

என்ற பரிபாட்டடிகள் திருமாலின் முழுமுதற்றன்மையை உணர்த்தும். தென்னாட்டிற்குரிய முல்லைநிலத் தெய்வமான மாயோனே பிற் காலத்தில் கலப்புப்பண்பாட்டினால் விட்டுணுவாகவும் கண்ணனாக வும் காட்சி தருவன். சைவபுராணங்களுள் ஒன்றாம் கந்தபுராணத் துள் முருகன், சிவன் என்போரின் முழுமுதற்றன்மையினை நிலை நாட்டுதற்குத் துணையாகத் திருமால், பிரமன் முதலியோரின்

செயற்றிறன் அமைந்துள்ளதால் பரிபாடலிலும் வைணவ புராணங்களிலும் ஆழ்வார் பாசுரங்களிலும் காணப்படும் திருமாலின் பரத்துவ இயல்பினை ஈண்டுக் காண இயல்வதில்லை.

## அ) அவுணரால் உற்ற இடுக்கண்

அவுணப்படைகள் திருப்பாற்கடலைக் கலக்கியஞான்று திருமகளும், நிலமகளும் வேர்த்து உடல்பதைப்ப அஞ்சித் திருமாலின் மார்பைத் தழுவிக்கொண்டனர் என்றும் (2:12:75), தாரகனை நான்கு நாட்கள் வரையில் எதிர்த்துப் போரிட்டுத் தோற்ற திருமால் இறுதியில் அப்பகைவனைப் புகழ்ந்தும், வாழ்த்தியும் உய்ந்தான் என்றும் (2:12:77-97) கவிஞர் குறிப்பிடுதலால் காத்தற்கடவுளாம் திருமாலும் அவுணரின் கொடுமைக்கு ஆட்பட்டுழலும் நிலையினைக் காண்கின்றோம்.

## ஆ) முருகன் அவதாரத்தில் முகுந்தனின் பங்கு

சிவன், சனகர் முதலிய நான்கு முனிவர்கட்கும் யோகத்தை உணர்த்திக் கொண்டிருத்தலாலும் பார்வதி சிவனைப்பிரிந்து இமவான் மகளாக வளர்ந்து வருதலாலும், முருகன் தோற்றத்திற்குத் தாமதம் ஏற்படுவதை உணர்ந்த இந்திரனும் பிரமனும் திருமாலிடம் சென்று தம் துயரினைக் கூறுவர். 'தக்கன் வேள்விக்குச் சென்ற பாவ வினையின் எச்சத்தை முற்றும் அருத்தியே தொலைத்துப் பழைய வாழ்வினை நமக்கருளவே சிவன் இவ்வாறு நம் துயர்த்தை அறியான் போன்றுள்ளான். இதுவும் பேரருள் முறையேயன்றிப் பிறிதொன்றில்லை. சிவன் மோனத்தை நீங்கி உமையை மணம்புரியின் குமரன் தோன்றி நம் துயர் களைவான். அச்செயல் நிறைவேறக் காமவேளை சிவன்பால் உய்த்தலே சிறந்த வழியாகும்', என்று திருமால் வழிகாட்டுவன். இதனால் முருகன் தோன்றுதற்குத் திருமாலும் காரணமாதல் பெறப்படும்.

## இ) முருகனது பெருமை உரைத்தல்

போர்க்களத்தில் ஆயிரத்தெட்டு அண்டங்களினின்றும் வந்த சூரபன்மனது படைகளின் பெருக்கங் கண்டு அஞ்சி வருந்திய இந்திரனிடம் திருமால், முருகன் முன்னர் எடுத்தத் திருப்பெரு வடிவத்தை நினைப்பித்து, 'சூரன் முதலியோரை இமைப்பில் தொலைக்க உன்னில் முருகன் தன் மூரலாலோ, முனிவினாலோ' நாட்டச் செய்கையாலோ அடுவன். பூதகணங்களின் படைகளோடும், இலக்கத்தொன்பான் வீரர்கள் புடையிற்போற்ற படைகளை ஏந்திச் சூரனை அடுவதற்கு அவன் வந்தமையை ஆராயின் அனைத்தும் ஒரு திருவிளையாடலேயாகும்' (4 : 13 : 74 - 75) என்று தெளிவுறுத்தி முருகனின் வரம்பிலாற்றலைப் புலப்படுத்துவன். முருகனும் சூரபன்மனும் அண்டங்கள்தொறும் சென்று அமர்புரிகையில் முருகனைக் காணாமல் குரவரை நீங்கிய சேய்களைப்போலத் தேம்பித்தேம்பியழும் பிரமன் முதலியோரிடம், 'அவுணர்கோன் ஆற்றலை மதித்து அஞ்சி இரங்கலிர் ; அறுமுகத்தவன் சிலைவன்மையும் வீரமுந் தெரிந்தும் ஐயுறுதல் நெறியோ ? (4:13:280), ஞானமாகியும், உணர்ந்தார்க்கும் உணரவோண்ணா நீதியாகியும், நின்மல சோதியாகியும், வழிபடும் என்போன்றோர்க்கெலாம் மூலமாகவும் நின்றவன் அறுமுகன் அன்றோ?' (4:13:281) எனத்திருமால் அவன் பெருமைகளைப் பகர்ந்து நம்பிக்கை இழந்த அவர்கட்கு நம்பிக்கையூட்டுவன்.

## ஈ) முருகனைப் போற்றுதல்

சூரபன்மனைத் தடிந்து மயிலூர்தியில் தோன்றும் முருகனைக் கண்டு திருமால் முதலிய தேவர்கள் ஆர்த்தும் துள்ளியும் ஆடியும் பாடியும் பூவின்மாரி தூர்த்தும் முருகனைப் போற்றும் திறத்தைத் 'தேவர்கள் போற்றுபடல'த்தில் (4:14) ஆசிரியர் விளக்குவர்.

*"கார்தடிந்து துய்க்குங் கனைகடலின் நீர்வறப்பப்*
*போர்தடிந்து செல்லும் புகர்வேல் தனைவிடுத்துச்*
*சூர்தடிந்தாய் அன்றே தொழுமடியேம் வல்வினையின்*
*வேர்தடிந்தாய் மற்றெமக்கு வேறோர் குறையுண்டோ"*
என்றும், (4: 14: 3)

*"இன்று பகைமாற்றி எமக்கருள்நீ செய்கையினால்*
*சென்றஉயிர் மீண்ட திறம்பெற்ற னம்ஐயா"* (4 : 14 : 6)

என்றும்,

*"வெய்ய பவமகன்று வீடுமினிக் கூடுதுமால்"* (4 : 14 : 7)

என்றும் திருமால் முதலியோர் போற்றுதலால் காத்தற்கடவுளையும் காக்கும் வல்லமையும், அக்காத்தற்கடவுளுக்கு வீடருளும் தகுதியும் உடையோனாக முருகன் திகழ்தலைக் காண்கின்றோம்.

## 7. முருகனும் நான்முகனும்

பிரமன் வழிபாடு சங்ககாலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை அவனைப் பற்றிக் கூறும் பகுதிகளிலிருந்து அவன் அவ்வளவு முக்கியத் தெய்வமாகக் கருதப்படவில்லையெனக் கொள்ளலாம். திருமாலின் உந்தியில் தோன்றியவன் என்றும் படைப்புத் தொழிலைப் புரிபவன் என்றும் சங்கச்செய்யுட்கள் குறிப்பிடும்.[13] புராணக்காலத்தில்தான் மும்மூர்த்திகளுள் ஒருவராகப் போற்றப்பெறும் நிலையில் பிரமன் சிறப்புப்பெறுதலைக் காண்கின்றோம்.

### அ) அகந்தை நீங்கி உய்தல்

உயிர்களின் அழுக்காம் அகந்தை நீங்கின் இறைவன் திருவருள் கைகூடும் என்னும் தத்துவத்தை நான்முகன் வரலாற்றின் துணைக்கொண்டு ஆசிரியர் விளக்குவர். கயிலையில் சிவனை

வணங்கித் திருவருள் பெற்று மீளும் பிரமனை முருகன் அழைக்க அவன் பணிந்திடாது தொழுதனன். அவன் உளக்கருத்தை நோக்கி, 'நீ யாது தொழில் புரிகின்றாய்?' என முருகன் கேட்க, 'நாதன் ஆணையால் அனைத்தும் நான் படைப்பன்' என மறுமொழிந்தான். 'படைப்புத்தொழில் புரியும் உனக்குச் சுருதிகள் வருமோ?' என முருகன் வினவ, 'ஓம்' எனத் தொடங்கி நான்முகன் வேதம் பகருமுன், அப்பிரணவத்தின் பொருளை வினவி, அறியாது திகைத்த அப் பிரமனது நான்குமாமுடிகளும் குலுங்கக்குட்டிச் சிறையிடுவித்தான். பின்னர்ச் சிவன் முயற்சியால் சிறைவீடு பெற்ற பிரமன்,

*"..........ஐய உன்றன் புதல்வன்ஆற் றியவித் தண்டம்*
*ஏதமன் றுணர்வு நல்கி யானெனும் அகந்தை வீட்டித்*
*தீதுசெய் வினைகள் மாற்றிச் செய்தது புனிதம்"*

(1:17:34)

என்று சிவனிடம் உரைப்பன். வினைகளை மாற்றி அகந்தையினை வீட்டி உயிர்கட்கு உணர்வு நல்கும் பெருந்தெய்வமாக முருகனைக் காண்பதற்கு நான்முகன் வரலாறு சான்றாக மிளிர்தல் கருதத்தகும்.

## ஆ) பிரமன் பெற்ற பேறு

சூரபன்மன் அவையில் நாடோறும் தன் புதல்வர்களுடன் 'ஐந்தியலங்கம்' (பஞ்சாங்கம்)அறைந்துழன்ற பிரமன் (2:17:2) முருகன் சூரனைத் தடிதலால் அவ்விழி தொழிலினின்றும் விடுதலை பெறுவன். தெய்வயானையம்மை திருமணத்திற்கு எதிர்பாரா நிலையில் சிவனும் உமையும் எழுந்தருளிய ஞான்று, பிரமனே சிவன்பாற் சென்று 'அவுணரை வீட்டி இமையோர் சிறைநீக்கிய குமரனுக்கு நாங்கள் புரியும் கைம்மாறு ஒன்றுமிலையெனினும் இந்திரன் மனத்தெழும் ஆசையால் தன் மகளை முருகனுக்கு ஈந்திட நினைத்தான்'

(5:2:224-225) என்று குறிப்புணர்ந்து பேசி திருமணத்திற்கு இசைவு பெறுவன். சிவனது கட்டளையை ஏற்று அத்திருமணத்தை வேத நெறிப்படி முன்னின்று நிகழ்த்தும் பேறும் பெறுவன் (5:2:247,251). முன்னொரு காலத்து அவுணருக்கு அஞ்சியும் விருப்பின்றியும் சூரபன்மனுக்கு முடிசூட்டும் சடங்கினை நிகழ்த்திய பிரமன், முருகன் சூரனைத் தடிந்த பின்னர் விண்ணுலக அரசு பெறும் இந்திரனுக்கு உளமுவந்து மணிமுடி சூட்டும் வாய்ப்பினைப் பெற்று மகிழ்வன் (5:3:38-40).

## இ) முருகனைப் போற்றி வழிபடல்

முருகன் தாரகனைத் தடிந்த பின்னரும், சூரனைத் தடிந்த பின்னரும் பிரமன் முதலியோர் செவ்வேளை அன்பினால் வழிபட்ட திறத்தைப் பத்தியுணர்வுடன் பாடுவர் கச்சியப்பர். ஆறெழுத்து மந்திரங்களைக் கூறி முருகனைத் திருமுழுக்காட்டிப் புதுத்துகில் அணிவித்து நறுமலர்த் தொடையல் சூட்டிச் சந்தனக்குழம்பணிந்து திருமேனியை அணிகலன்களால் அழகுறுத்தி மணியொலியுடன் தூபதீபம் காட்டி மெய்யன்புடன் வணங்கித் துதித்தனர் (1:21:25-29) என்று தேவகிரிப் படலத்திலும், குமாரதந்திர நெறிப்படி கும்பம், விம்பம், யந்திரம் ஆகிய மூவகையிடத்தும் முருகன் மகிழுமாறு பூசனை செய்தனர் (4:16:24) என்று மீட்சிப்படலத்திலும் விளக்குவர். பிரமன் முதலிய கடவுளர்கள் உள்ளன்புடன் வழிபட்டுப் போற்றும் தெய்வத் தலைமையுடையவன் முருகன் என்பதனை இதனால் உணர்கின்றோம்.

## 8. முருகனும் இந்திரனும்

"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"[14] என்னும் தொல்காப்பிய நூற்பாவில் இந்திரன் மருதநிலக் கடவுளாகச் சுட்டப் பெறினும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் அவனைப்

பற்றிய செய்திகள் குறைவாகவே காணப்படுகின்றன.[15] தமிழகத்தில் இந்திரனுக்குத் தனிக்கோயில் இருந்தமையினை, "ஒண்டொடி வச்சிரத்தடக்கை நெடியோன் கோயில்"[16] என்னும் புறநானூற்றுப் பகுதி சுட்டும். சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய தொடர் நிலைச் செய்யுட்கள் எழுந்த காலத்திலே சிறப்புற்றிருந்த இந்திர வழிபாடு கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பின் மறைந்து விடுவதனையும் காண்கின்றோம்.[17] வேதகாலத்தில் இந்திரன், அக்கினி, வருணன் முதலிய கடவுளர் பெற்றிருந்த முதன்மையினைப் புராணங்கள் தோன்றிய காலச் சூழலில் மும்மூர்த்திகள் பெறுதலால் தெய்வத்தலைமையிழந்த இந்திரனையே புராணவாசிரியர்கள் படைத்துள்ளனர். பல்லாண்டுக் காலம் அவுணரால் துன்புற்று வாடி மெலிபவனாகவும் முருகனால் அத்துன்பத்தினின்றும் விடுதலை பெற்று மீண்டும் நல்வாழ்வு பெறுபவனாகவும் இந்திரனைக் காட்டுவர் கச்சியப்பர்.

## அ) இந்திரன் எய்திய இன்னல்

கந்தபுராணக் கதைமாந்தர்களில் அவுணரின் அளப்பிலாக் கொடுமைக்கு ஆட்பட்டு வருந்தியவர்கள் இந்திரனும் அவன் குடும்பத்தினருமே ஆவர். சூரபன்மனின் திக்குவிசயத்தின்போது அவுணப்படைகளின் வருகையுணர்ந்த இந்திரன், சூரபன்மன் தன்னைச் சிறைசெய்வான் எனக் கருதித் தன் மனைவியுடன் குயிலுருவாகித் தப்பிப் பிழைப்பன் (2 : 12 : 108). சூரபன்மன் முடிசூட்டுவிழாவில் களாசி (படிக்கம்) ஏந்தும் பணிபுரிந்து வருந்துவன், (2 : 16 : 9). "மானுடரும் பாவமென நூலில் பகருகின்ற" (2 : 18 : 12) மீன் சுமத்தல் தொழிலைச் சூரபன்மன் ஏவலால் செய்துழல்வன் (2 : 18 : 3-25). "தேவகதியின் நிரயஞ் சிறப் புடைத்தே" (2 : 18 : 12) என மனம் நொந்து கூறுமளவிற்கு அசுரரால் துன்புற்று மெலிவன்.

*"கோவுநீ எங்கள் குரவனுநீ தேசிகன்நீ*
*தேவுநீ மேலாந் திருவுநீ செய்தவநீ*
*ஆவிநீ மற்றை அறிவுநீ இன்பதுன்பம்*
*யாவுநீ..........."* (2: 30 : 21)

என இந்திரனைத் தெய்வமாகப் போற்றித் தொழுந் தன்மையுடையோர் தேவர்கள். 'அர்சனை நம்பியிருந்த தேவர்களாம் பசுக்களை சூரவல்லியத்தின் வன்சிறையில் காட்டிக் கொடுத்துக் கரந்தாயே' (2:30:4) என அத்தேவர்கள் புலம்புதலால், தன்னால் புரக்கப்படுபவர்களைக் காக்கத் தவறியதுடன், காட்டியுங்கொடுத்தவன் என்னும் பழியையும் சூரபன்மன் செயலால் சுமந்து நொந்தனன்.

## ஆ) உணர்ச்சி வடிவினன்

மிக எளிதில் உணர்ச்சிக்கு ஆட்படும் இயல்பினனாக இந்திரனைப் படைத்துள்ளார் ஆசிரியர். தனது துயர்தீர்க்கத் தோன்றிய முருகனின் திருவிளையாடலை உணராது உணர்ச்சிக்கு ஆட்பட்டு அவனை எதிர்த்துப் போரிட்டு மாள்வன். நாரதர், வியாழன் இவ்விருவரின் முயற்சியால் மீண்டும் முருகனின் அருள்பெற்று உயிர்த்தெழுந்த காலை முருகனைப் பத்தியுடன் பரவித்தொழுது தன் தவற்றிற்கு வருந்துவன் (1:14:82-83). இகமொடு பரமும் நல்கும் அறுமுகத்தவனிடம் 'சூர்பன்மனைத் தடிந்து என்னரசை நீ ஏற்று நடத்தல்வேண்டும்' என்று உணர்ச்சி நிலையில் பேசுவன் (1:14:104). தீக்கடவுளுக்குச் சுடரொன்று தருவதாகப் பரவும் ஒருவனோடு இந்திரனை ஒப்பிட்டு (1:14:105) அவனறியாமை உணர்வினைப் புலப்படுத்துவர் ஆசிரியர். இந்திரனது அறியாமையினைக் கண்டு, புன்னகை செய்த முருகன், அவனது அன்புணர்வை மட்டும் கருத்திற்கொண்டு, 'நீ நமக்களித்த தொல்சீரினை நினக்கு

நாமளித்தோம். உம்மைப் படைகளாகக் கொண்டு நாமே படைத் தலைவனாக விருந்து பகைவரை அழிப்போம்' (1:14:106) என்று கூறி அவனது தளர்ச்சியினை மாற்றுன்.

சூரபன்மனது படைப்பெருக்கங்கண்டு நம்பிக்கையிழந்த இந்திரன்,

*''அடுதிறல் வலிபெற் றுள்ள அவுணராம் பானாட்கங்குல்*
*விடிவதும் அமரர் தங்கள் வெஞ்சிறை வீடு மாறும்*
*நெடியதொல் வெறுக்கை தன்னை நீங்கிய நமது துன்பம்*
*முடிவது மில்லை கொல்லோ மொழிந்தருள் முதல்வ''*

(4:13:68)

எனத் திருமாலிடம் கேட்பது, முருகனது வெற்றியில் ஐயுறும் அவனது உளப்போக்கினைப் புலப்படுத்தும். முருகன் படைகளால் அசுரர்கள் துன்புறும்பொழுது மகிழ்ச்சிக்கடலில் மூழ்கிக் களிப்புறுதலும் அவனியல்பாகும் (2:8:106).

முருகன் கட்டளையின் வண்ணம் மகேந்திரத்திற்குத் தூது செல்லும் வீரவாகுவிடம் 'மகேந்திரச் சிறையில் வாடிமெலியும் சயந்தனையும் அவனைச் சார்ந்தோரையும் தேற்றிய பின்னர் உன் செயலினை முடித்தருள்க' (3:1:14) என வேண்டும்பொழுதும், சூரனை வென்றபின்னர்ச் சிறைமீண்ட மகனைப் புல்லியும், புறம்நீவியும், 'பல்லுகம் கொடியோன் சிறையில் புகுந்து எய்த்தனை போலும்' என்றிரங்கும் பொழுதும் (4:16:12) மகன்மையுறவின் உணர்ச்சி அலைகளால் உந்தப்படுவோனாகத் தோன்றுவன்.

''எண்ணுதற் கரியதோர் இன்பந் துய்த்துளான்'' (1:24:25) என்றும், ''முருந்துறழ் எயிற்றினாள் முலைத்தடங்களில் பொருந்துற மூழ்கியே புணர்ந்து வைகலும் இருந்திடு கின்றவன்'' (1:24:29) என்றும், ''வெற்றுடலத்தில் விழித்தொகை பெற்ற சிற்றறிவினன்''

(5:5:19) என்றும் இந்திரனைச்சுட்டி இன்பத்துறையில் எளிவரும் அவனியல்பினைப் புலப்படுப்பர் ஆசிரியர். தாரகன் வதைக்குப் பின்னர்த் திருச்சேய்ஞலூரில் முருகனுடன் தங்கியிருக்கும் இந்திரனிடம், சீகாழியிலுள்ள வனதெய்வம் இந்திராணியின் அணிகலப் பொதியினைக் கொடுத்தவளவில், மனைவியின் நினைவு தோன்றிப் புலம்புதலைப் பலபாக்களில் பாடிக் காமவுணர்வுக்கு ஆட்பட்டுழலும் அவன் பண்பினைக் காட்டுவர். விரகமிக்குழலும் இந்திரன், 'உனது உடலை நெற்றிக்கண்ணால் படுத்த சிவனது குமாரன் இங்குளன்; உன்னுயிரும் வாங்குவன்; விரைவில் போய்விடு' (1:24:45) எனக் காமவேளிடம் உரைத்துக் காமத்தீயினால் வாடி மெலியும் உயிர்களையும் காத்தருள்பவன் முருகனே என்ற கருத்தைப் புலப்படுத்துவன்.

## இ) முருகன் அடிமை

சூரபன்மன் போர்க்களத்தில் சக்கரவாகப் பறவையின் வடிவு கொண்டு பொருதலால் தேரிற்சென்று பகைவனைத் தாக்குதல் பழியெனக் கருதிய முருகன் இந்திரனை நோக்குவன். அந் நோக்கத்தின் குறிப்புணர்ந்து முருகவேள் ஊர்தற்கேற்ற மாமயிலாய் உருவெடுத்து நின்ற இந்திரன்,

> *"ஐயகேள் அமர ரெல்லாம் வழிபட அளியன் தன்பால்*
> *செய்ய பேரருளை வைத்தாய் ஆதலிற் சிறுமை தீர்ந்தேன்*
> *உய்யலாம் நெறியுங் கண்டேன் உன்னடி பரிக்கப் பெற்றேன்*
> *பொய்யுலா மாய வாழ்க்கைப் புன்மையும் அகல்வன் மன்னோ*
> *(4 : 13 : 380)*

எனப் பத்தியுணர்வுடன் முருகனைப் பரவித் தன்மேல் ஏறியருளுமாறு வேண்டுவன் (4 : 13 : 381). முருகன் திருவடி தாங்கும் பேறுபெறுவோர் பிறவிப்பிணி நீங்கி உய்வர் என்பதனை இந்திரன் கூற்றால் உணர்கின்றோம். தெய்வயானை திருமணத்தின் போது கரகத்திலுள்ள நீரினை இந்திராணி உய்ப்ப, முருகனது மெல்லிய திருவடிகளைப்பற்றி விளக்கிக் களபம் ஊட்டி, மலரைச்

சூட்டி, அகிற்புகையுங் நெய்மலி பூஞ்சுடருங் காட்டி வழிபட்டு (5 : 2 : 242-243) முருகனது தெய்வத்தலைமையினை நிறுவுவன். அமரர் சிறைநீக்கித் தம் துயர்களைந்த முருகனைத் தேவர்களுடன் சேர்ந்து போற்றுங்கால் ''மேலாய நின்கழற்கே பூண்டேந் தொழும்பு புகழேம் பிறர்தமையே'' (4:14:8) என உரைத்து முருகனுக்கு அடிமை பூண்டதால் தான் பெற்ற வீற்றினை உணர்த்துவன்.

## முடிவுரை

நினைப்பளவில் அனைத்தையும் தோற்றுவிக்கும் பேராற்றலுடைய சிவன், கடவுளர் குழுவில் முருகன் ஒப்பறு தலைவனாக விளங்கவேண்டும் என்பதற்காகவே மிகு அருமைப்பாட்டுடன் முருகனைத் தோற்றுவித்ததுடன், அவனது தலைமைக்கு இழுக்கு நேரா வகையில் படைகளைப் படைத்து வழங்கினன். முருகனது பீடுறுநெறியினைப் பகர்தல், குடிலைப்பொருள் வினவல், தனக்குள்ள முதன்மையினைத் தருதல் முதலியன தன்னையே நிகர்க்கும் ஆற்றலுடையோனாக முருகனை உயர்த்த சிவன் மேற்கொள்ளும் முயற்சியாகும். சிவன் முதல் இந்திரன் வரையுள்ள அனைத்துத் தெய்வங்களின் செயற்றிறன்களும் முருகனின் தலைமையை உயர்த்தும் வண்ணமே அமைந்துள்ளன. முருகன் தாய்த்தெய்வத்தினின்றும் பிறந்ததாகக் கூறப்படும் தமிழ்நாட்டிற்கே உரிய செய்தியைக் கச்சியப்பர் பலவிடங்களில் வற்புறுத்திப் பழந்தமிழ்மரபினைப் போற்றியுள்ளார்.

## மேற்கோள்

1. 'கந்தபுராணமும் முன்னூல்களும்' என்ற பகுதியில் விளக்கப் பட்டுள்ளது.
2. திருமுருகு., 259.
3. ———, 260.
4. நா.வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப.34, க.வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.139.

6. மா.இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, ப.214, வாமதேவ முருகப்பட்டாரகர், ஸ்ரீகச்சியப்ப சிவாசாரியார் புராணம், செ.38.
7. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, பக்.89-91.
8. அருணகிரிநாதர், திருப்புகழ் (கழகப்பதிப்பு), செ.226.
9. ————, கந்தரநுபூதி, செ.6.
10. ————, கந்தரலங்காரம், செ.22.
11. வ.சு.செங்கல்வராயபிள்ளை, அருணகிரிநாதர் வரலாறும் ஆராய்ச்சியும், பக். 161-162.
12. இரா. சாரங்கபாணி, பரிபாடல்திறன், ப. 130.
13. சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.149.
14. தொல். பொருள்., நூ. 5.
15. சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.147.
16. புறம்., 241:-4.2
17. சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு, பக்.147-148.

3

# முருகனின் மக்கட்பண்புகள்

முருகனை முழுமுதற்கடவுளாக உயர்த்துதலையே கந்த புராணம் பெருநோக்கமாகக் கொண்டிருப்பினும் தமிழ்க் காப்பிய மரபுகளைத் தழுவித் தம் படைப்பினைக் காப்பியமாக்கக் கச்சியப்பர் முயன்றிருத்தலால், காப்பியத்தலைவனாம் முருகன் 'மக்கட்பண்புகளையும் கொண்டு திகழ்பவனாகக் காட்சி தருவன். எல்லாம்வல்ல இறைவனே இராமனாகப் பிறந்தான் என்பது கம்பனின் உட்கருத்தாக இருந்தாலும் அவனது வரலாறு கவிஞனது உணர்ச்சிக் களத்திலே காப்பியப் படும்பொழுது அவன்மீது மக்களுணர்வுகள் படிவதனைத் தவிர்க்க இயலாது. ''சிறந்த காப்பியத்தலைவன் மனிதப்பண்புகளும் தெய்வவியல்புகளும் ஒருங்குபெற்றவனாகவே காணப்படுவன்''[1] என நுவலும் அறிஞர் பவுராவின் கருத்தும் இவண் நினையத்தகும். கிறித்துவைத் தெய்வவியல்புகளும், மனிதப்பண்புகளும் பின்னிப் பிணைந்தவராக விவிலிய நூலும், சுவர்க்க மீட்சியும் (Paradise Regained) படைத்துள்ளமையும்[2] கருதத்தக்கது. கச்சியப்பரின் கதை மாந்தர்களின் செயல்களில் மீவியற்கை மிகுந்துகாணப்படினும் அவர்களின் உணர்வுகளில் மனிதப்பண்புகள் ஊடுருவி நிற்றலை உணர்கின்றோம். தேவர்களும் அசுரர்களும் நிறைந்த கந்த புராணத்தின் நிகழ்ச்சிகளை இயற்கையைக் கடந்து கற்பனை செய்த கவிஞரால் கதைமாந்தர்களின் உணர்வுகளை மனிதக்கட்டுக் கோப்பினைக் கடந்து கற்பனை செய்ய இயலவில்லை. படைப்பாளரும் படிப்போரும் மனிதர்களாயிருத்தலே இதற்குக் காரணம் எனக் கொள்ளுவதில் தவறில்லை.

'காப்பியத்தின் கதையினும் கதை மாந்தர்கட்குச் சிறப்பு மிகுதியாகத் தரப்படும் எனவும் அவர்தம் செயல்களாலும் அவர்தம் வாயினின்றும் வெளிப்படும் உரையாடல்களாலும்

அவர்களுடைய பண்புகள் நன்கு விளங்கும்படி அமைப்பதுவே காப்பியத்தின் தனிச்சிறப்பென்றும்'[3] அறிஞர் நவில்ப. தனித்தனிக் கதைமாந்தர்களின் பண்புநலன்களை விரிவாக ஆராய்தற்குக் கந்தபுராணத்தில் வாய்ப்பு மிகுதியாக உளதெனினும் முழுமுதற் கடவுளாம் முருகன்மீது படிந்துள்ள மக்கட்பண்புகளை மட்டும் இவண் காண்பாம்.

## 1. வீரருள் வீரனாகும் வேலுடைக் குமரன்

சங்கப்பனுபவல்களும், வடமொழிக் காப்பியங்களும் முருகனைச் சிறந்த போர்வீரனாகவே சுட்டும்.[4] கந்தபுராணத்தில் உற்பத்தி காண்டமும், உயுத்த காண்டமும் முருகன் தன் வீரத்தின் துணையால் அறியாது பொருத இந்திரனைப் பொன்றுவித்தல், தாரகன், சிங்கமுகன், சூரபன்மன் என்னும் பகைவரோடு பெருஞ்சமரியற்றி வெற்றி பெறுதல் முதலியனவற்றை விரிவாக விளக்கும். கச்சியப்பர் முருகனை 'வீரருள் வீரனாகும் வேலுடைக்குமரன்'' (4:13:502), ''வீரவேள்'' (1:24:15), ''விற்புலவன்'' (4:13:100), ''விறற்குமரன்'' (1:14:88), ''பொற்றையொடு இளவலைப் பொன்ற வீட்டினோன்'' (3:21:73), ''சூர்ப்பகை'' (1 : 14 : 111), ''விண்ணுளோர்கள் சேனையந் தலைவன்'' (5:4:4) போன்ற சொற்றொடரால் சுட்டுதல் அவனது வீரப்பண்பினை உணர்த்தும்.

முருகனைத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை ஒரு சிறந்த போர்வீரனாகவே ஆசிரியர் படைத்துக்காட்டுவர். இளம் பருவத்திலே முருகன் இயற்றும் திருவிளையாடல் நிகழ்ச்சிகள் (1 : 14) அவன் எதிர்காலத்தில் சூரபன்மனை வென்று இந்திரன் முதலியோர் இன்னலை உறுதியாகத் தீர்த்தருளுபவன் என்பதனை உணர்த்தும் முன்னறிவிப்பாகத் திகழும். ''மிகு இளமைக் காலத்திலேயே விரைந்து செயற்படும் காப்பியத் தலைவனின் பண்புகள் அவனது எதிர்காலத்தைக் காட்டுவதாக இருத்தல் வேண்டும்''[5] என நுவலும் அறிஞரின் கருத்தும் ஈண்டு நினையத்தகுவது.

போர்க்களத்தில் முதன்முதலாக முருகனைச் சந்தித்த சூர பன்மன், தான்பெற்ற பெருவரங்களையும் பேராற்றலையும் விரிவாக

விளம்பி, ''நீயொரு பாலனோ என்னொடு மலைந்து கொற்றம் எய்துதி நன்றுநன் றுன்னுளக் குறிப்பு'' (4 : 4 : 243) என ஏளனமாக உரைப்பன். அதற்கு மறுமொழியாக,

''அறிவுடை முதியர் என்றும் ஆண்டிளை யோர்கள் என்றுஞ்
சிறியவர் பெரியர் என்றும் திருத்தகு வளத்தர் என்றும்
வறியவர் என்றும் வீரர் மதிக்கிலர் யாவ ரேனும்
விறல்வலி படைத்து நேரின் வெஞ்சமர் விளைப்பர் அன்றே''
(4:4:251)

எனக் கந்தன் உரைக்கும் பகுதி வீரரின் இலக்கணத்தைப் புலப் படுத்தும். வாய்வீரம் பேசித் தோற்றுநின்ற சூரபன்மன்,

''என்னொ டேபொரற் கிவனலால் வேறிலை இனையோன்
தன்னொ டேபொரற் கியானலா திலையிது சரதம்''
(4:4:310)

என்றுரைத்தல் கந்தனைப் 'பாலன்' என்று இகழ்ந்த நிலையிலிருந்து வளர்ந்து, அவனது வீரத்தைப் போற்றும் பாங்கினைக் காட்டும். தான் தோற்பினும் ஒரு சிறந்த போர் வீரனுடன் அமர்செய்தலால் பெற்ற புகழினை, ''நன்றிதோர் பெருமை பெற்றேன் வீனும் நானே யானேன் என்றுமிப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்பதுண்டோ'' (4:13:448) எனச் சூரபன்மன் வியந்துரைத்ததாகக் குறிப்பிட்டு, எதிர்நிலைத்தலைவன் வாயிலாக முருகனது வீரத்தைக் கவிஞர் புலப்படுத்துவர். படையிழந்து வறியனாய் நிற்கும் சூரபன்மனை அழித்தல் வீரத்திற்கு இலக்கணமன்றாதலால்,

''படையிழந்திடு நின்னுயிர் உண்டிடில் பழியாய்
முடியு மென்றுதாழ்க் கின்றனம் தருமத்தின் முறையால்''
(4:4:316)

என உரைத்து, முருகன் தன் பழிபடா வீரத்தை வெளிப்படுத்துவன். 'ஒரு பாத்திரத்தின் பேச்சோ செயலோ ஒருவகை ஒழுக்க நோக்கத்தை (moral purpose) உணர்த்துவதாக இருத்தல் சிறப்புடையது' என நுவலும் அரிசுடாட்டிலின் கருத்தும்[6] ஈண்டுக் கருதற்குரியது. படை

யிழந்த சூரபன்மன் மாயமந்திரத்தின் துணையால் மறைந்து சென்ற பொழுதும், 'தீயவன் மீண்டும் உணர்ந்து உய்வனோ என்று அவன் மீது கொண்ட கருணையால் வேல் கொண்டு அவன் உயிரைக் கவர நினைத்திலன்' (4:4:326). இதனைக் கண்ட திருமால் முதலிய தேவர்கள் வேற்படையால் அப்பொழுதே அவனைத் தடிய வேண்டுங்கால், ''மீண்டும் நம்முன் வந்து சமர்செய்திடின் விரைவில் அவனை வீட்டுதும்'' (4:4:331) எனக் கூறி, விழுமிய வீரத் தலைவனுக்குரிய பண்பினை நிறுவுவன். ''பிறருடைய பாராட்டுதலைப் பெறவும், ஏனையவர்களை விஞ்சி நிற்கவும் காப்பியத்தலைவன் தன்னுடைய விழுமிய பண்புகளை அனைத்து நேரங்களிலும் பயன் படுத்த வேண்டும். இத்தன்மை அவனது வீரத்திற்கு விளக்கந் தருவதோடு அதற்குக் கிடைக்கும் பரிசாகவும் திகழ்கிறது''[7] என்றுரைக்கும் மைக்கேல் கிராண்டுவின் கருத்தும், ''காப்பியத் தலைவன் தலைமைக்குறிக்கோள் தனக்குரிய நிலையில் செயலாற்றி தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுதலேயாகும். அதற்கு அவன் எத்தகைய வஞ்சகச் செயலையும் சிறிதும் பயன்படுத்தல் கூடாது''[8] எனப் பகரும் பவுராவின் கருத்தும் இவண் நினையத்தகும்.

கந்தபுராணக் கதைமாந்தர்களில் பகைவனுக்கு மிகவும் அஞ்சி ஒடுங்குபவனாகவும், பகைவர் தாக்கவரின் உருமாறித் தப்பிப் பிழைப்பவனாகவும் தோன்றுபவன் இந்திரன். முருகன் அவ்விந்திரனை மயிலூர்தியாகக் கொண்டு ஊர்ந்து, சக்கரவாகப் பறவையின் உருக் கொண்டு தாக்கும் சூரபன்மனுடன் பெரும்போர் உடற்றச்செய்து அஞ்சியஞ்சிச் சாகும் விண்ணவர் கோவினையும் வீரனாக மாற்றுவன்.

## 2. சீற்றம்

மறவேந்தர்கள் பகைவரைத் தடிதற்கு எழும்பொழுது கொள்ளும் சினத்திற்கு முருகனது சீற்றத்தையே சிறப்பாகச் சங்கப்புலவர்கள் ஒப்பிட்டுப் பேசுவர்.[9] எனவே, சிறந்த வீரனுக்குரிய பண்புகளில் சினமும் ஒன்றாகும். உறுப்புக்களை அறுத்தல், கீழ் வாழ்வாரை நலிதல், அலைத்தல் கொல்லுதற்கொருப்படுதல் என்னும் நான்கும் தான் பிறரைச் செய்யுங்காலும், தன்னைப் பிறர் செய்யுங் காலும் வெகுளி பிறக்கும் என்பர் தொல்காப்பியர்.[10] வீரவாகு

முதலியோர்களை மாயையால், மயங்கச்செய்த தாரகன், முருகன் முன் தோன்றித் தன் வீரத்தையும் வரத்தின் ஆற்றலையும் விளம்பியகாலை, ''மாயையினைப் புரிந்த கிரவுஞ்சவெற்பினையும் கள்வனாகிய நின்னையும் வேலினால் செற்று என் படைகளை விரைவில் மீட்பன்'' எனச் சீற்றத்துடன் முருகன் கூறுவன். (1:20:139). முருகனது கணைகளால் அழியாத சிங்கமுகன் தன் தவத்தின ஆற்றலை வியந்தும் முருகன் ஆற்றலை இகழ்ந்தும் கூறிய பொழுது ''உன்னுயிர் முடியும் காலம் வந்தது; கூற்றுவன் பின்னே நிற்கின்றான். அறிவில்லாதவனே நீ ஏன் பிதற்றுகின்றாய்? ஒரு கணத்தில் உன்னைக் கொல்வேன்.'' (4: 12 : 430) என்றுரைக்கும் பகுதி முழுமுதற் கடவுளாம் முருகனது வெகுளும் இயல்பினை வெளிப்படுத்தும்.

களத்தில் போரிடும் சூரபன்மன் முருகனிடம், ''தேவர்களின் மொழியினை உண்மையென நம்பி சேற்றில் புக்க யானைக்கன்று போல் பிள்ளைமை மதியால் என்னுடன் பொரவந்தனை வெரிந்து கொடுக்கினும் பாலன் என்று உன்னை விடுக்கிலன் விரைவில் படுப்பன்'' (4:13:156) என்று வெகுண்டுரைத்த காலை, ''வெம்புரைத் தொழிற்கு ஒருவனாம் கயவ நீ வெறிதே வப்புரைத்தனை. உன் மார்பம் செம்புரைப்படயாம் விடும் அம்பே உனக்கு மறுமொழி பகரும்'' (4:13:157) எனவுரைத்துத் தன் அம்பின் ஆற்றலை வெகுளிக்குரிய மெய்ப்பாட்டுடன் மொழிகுவன் முருகன்'. படைகள் அனைத்தும் இழந்து வறியனாய் நின்ற சூரபன்மன் தன் தாய் மாயையின் அறிவுரையைச் செயற்படுத்திப் போரிற் பட்டவர்கள் அனைவரையும் எழுப்பிச் செம்மாந்து நின்றகாலை விண்ணவர் அனைவரும் புள்ளுருக்கொண்டு உயிர் தப்பி ஓடுவர். இதனைக் கண்டு வெகுண்ட வேற்குமரன், ''நன்று நன்றெனக் கையெறிந்து அழலெழ நகைத்தான்'' (4:13:320) எனக் கூறி அவன் கொண்ட சீற்றத்தின் இயல்பைச் சுட்டுவர் ஆசிரியர். சிறைப்பட்ட நான் முகனைச் சிவன் ஏவலின்படி விடுவிக்கவந்த நந்தியிடம் சீறிச் சினந்த முருகன், ''நிற்றியேல் நின்னையும் சிறைவீட்டுவன்'' (1:17:13) என வெகுண்டுரைப்பன். காமவெகுளி மயக்கம் கடந்த கடவுளர்களும் காப்பியத் தலைவர்களாக விளங்கும்பொழுது வெகுளிப் பண்பிற்கு ஆட்படுதல் கருதத்தக்கது.

## 3. இறைமாட்சி

கச்சியப்பரின் உளப்பாங்கின் வண்ணம் அண்டங்கள் அனைத்திற்கும் முருகன் தலைவனாதலால், இருந்த இடத்திலிருந்தே நினைப்பளவில் சூரபன்மனைத் தடிந்து தேவர்தம் துயரினைத் தீர்த்திருத்தல்கூடும். முருகனது வரலாறு கவிஞன் கைவண்ணத்தில் காப்பியப்படுதலால் கடவுளேயாயினும் அவன் காலமும் உலகுமாக மயங்கிய மயக்கத்தில் புகும்பொழுது மனித உலகைக் காக்கும் அரசனாகவும் தோன்றுவன்.

### அ) அறநெறி நிற்போன்

கடுஞ்சினத்த கொல்களிறு முதலிய நால்வகைப் படையுடைய வேந்தராயினும் அறநெறிதான் அவர்கட்கு வெற்றியைத் தருமென் பதனை, ''மாண்ட அறநெறி முதற்றே யரசின் கொற்றம்'' எனப் புறநானூறு புகலும்.[11] ''அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மான முடைய தரசு''[12] என்பது வள்ளுவர் வகுத்த நெறியாகும். அதனால் பகைவரைக் கோறலையே குறிக்கோளாகக் கொண்டெழுந்த போர்த்துறையிலும் அரசர்கள் அறநெறியே கடைப்பிடித்தொழுகினர். சூரபன்மனைத் தடிதற்காகச் செந்திமாநகரம் 'வந்திறுத்த கந்தன், 'கடியுரை முடிவுசெய்தல் நீதிநூல் முறையும் தருமநெறியும் ஆகுமெனினும் சூரனையும், அவனைச் சார்ந்தோரையும் அழித்தல் முறையதன்றென எண்ணித் தூதனுப்பி அவன் உளக்கருத்தறிந்த பின்னரே அவனை அடுதல் அறத்தாறு' (3:1:77) என நினைத்துத் தன்னைச் சூழ்ந்துள்ள திருமால், பிரமன், இந்திரன் முதலியோர் களிடம் உரைத்து இசைவு பெற்ற பின்னர், அவர்களின் எண்ணப் படியே வீரவாகுவை மகேந்திரத்திற்குத் தூதாக உய்ப்பன். இறைவன் நிலையில் தானே அனைத்தும் இயற்றலாமெனினும் அரசனுக்கு ஏற்றவாறு சூழ்வாரைச் சூழ்ந்து செயற்படுதல் இவண் குறிக்கத்தகும். 'சூரபன்மனைத் தன் வேலால் தடிந்த பின்னரே தேவர்களைச் சிறை மீட்கமுடியும் என்பதனை உணர்ந்திருந்தும் போர் மேற்கொள்ளும் வேந்தர்க்குரிய அறநெறி தூக்கி அடியனைத் தூதாய் விடுத்தனன்

(3:11:29) எனச் சயந்தனைத் தேற்றும் வீரவாகுவின் கூற்றிலும் முருகனது வேந்தியற்பண்பாம் அறநெறியினைப் புலப்படுப்பர் ஆசிரியர். ''காப்பியங்களில் தூது முக்கியமான இடம் பெறும். இராமாயணத்தில் அங்கதன் தூதும், பாரதத்தில் கண்ணன் தூதும், நைடதத்தில் அன்னப்பறவையின் தூதும் சிறப்பிடம் பெறும். இதிகாச புராணங்களின் இலக்கணத்திற்கேற்ப கந்தபுராணத்தில் வீரவாகு தூது சிறப்பாக அமைந்துள்ளது''[13] என்பார் கருத்தும் இவண் நினையத்தகும். புள்ளுருவாகிப் பொரும் சூரபன்மனைத் தேரிற் சென்று தாக்குதல் பழியெனக் கருதிய முருகன், தேரினின்றும் இழிந்து மயிலை (இந்திரனை) ஊர்தியாகக் கொள்ளுதல் (4:13:377-382) புறத்துறையில் அரசர்கள் போற்றும் அறநெறிப்பட்டதாகும்.

## ஆ) சார்ந்தோர் கருத்துக்களை மதித்தல்

வீரவாகுவின் தூதால் பயனின்மை கண்ட முருகன், சூரனைத் தடிதற்குப் படைத்தலைவர்கள் புடைசூழ இலங்கையைக் கடந்து மகேந்திரத்தை நெருங்கி வந்தபொழுது, நான்முகன் முதலியோர், ''சூரனூரில் கடுங்கண் நீசர் செறிதலால் ஆண்டுச்சேறல் முறையதன்று; அதற்கடுத்த எல்லையாகிய ஈண்டுப் பாசறைத்தலம் இயற்றுவித்து நீ விரும்புமாறு வினையம் நாடிப் போர்புரிந்தருள்க'' (4:11:30) என வேண்டுவர். இவர்கள் கருத்தை ஏற்றுக்கொண்ட முருகன் நாகர்கம்மியனால் பாடிவீடு அமைத்து, அங்கிருந்தே போர்த்தொழில் தொடங்கினன் (4:1:31-36).

கடுஞ்சமரியற்றிப் பானுகோபனைக் கொன்றதால் 'வீரவீரன்' எனத் தேவர்களால் பாராட்டுப் பெற்றான் வீரவாகு (4 : 11 : 145). அடுத்த நாள் சிங்கமுகன் போருக்கு வருதலைத் தேவர்கள் மூலம் உணர்ந்து போருக்கு எழுந்த முருகனிடம், நெருநல் வெற்றியால் நெஞ்சுரம் பெற்ற வீரவாகு, ''யான்போய் ஒன்னலன் ஆவியை உண்டிவண் மீள்வன் என்னை விடுக்குதி'' (4:12:67) என வேண்டிக்கொள்வன்.

சிங்கமுகன் ஆற்றலுக்குத் தோற்று அவனது சூழ்ச்சிக்கயிற்றால் (மாயாபாசம்) வீரவாகு கட்டுண்பான் என்பதனை முற்றுணர்ந்த முழுமுதற்கடவுளாயினும், தன்னிளவல் கருத்துக்கு மதிப்பளித்துப் போருக்குச்செல்ல விடைகொடுத்தனுப்புவன் முருகன் (4:12:68).

இ) சார்ந்தோரைக் காக்கும் திறன்

"உலகபாலர் உருவாய் நின்று உலகங்காத்தலால் உலகாள் அரசர்களும் இறையென்று அழைக்கப்பெறுவர்"[14] என்பர் பரிமேலழகர். முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் பிறப்பால் மகனாயினும் செயலால் கடவுளாக மதிக்கப்படுவன் என்பது வள்ளுவம்.[15] முருகனுடன் களத்தில் போரிடும் சிங்கமுகன், 'பகைவரின் வலியை மாற்றல் இறையவர் கடன். அதனால் விண்ணவரைத் தண்டித்தோம். அவருள்ளும் ஒருவன் அல்லை. எங்கட்கும் பகைவன் அல்லை. எங்களுடன் பொருதற்கெழுந்த காரணம் என்ன?' (4:12:348) எனக் கேட்க,

*"உறைதரும் அளியன் தன்னை வலியவன் ஒறுக்கின் நாடி*
*முறைகெழு தண்ட மாற்றி அண்டங்கள் முழுவ துக்கும்*
*இறையினைப் புரிதும் அற்றால் நீவிர்கள் இமையோர்க் கிட்ட*
*சிறையினை அகற்ற வந்தேஞ் செருவுமத் திறத்துக்கு"*
*(4:12:349)*

என உரைக்கும் காப்பியத்தலைவன் மறுமொழியில் சமுதாய நீதிக்குட்பட்டு முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மாண்பினைக் காண்கின்றோம்.

தன்னைச் சார்ந்து நின்று பகைவருடன் போரிடும் வீரர்கள் துன்புறும்பொழுது தாயினும் சாலப்பரிந்து காக்கும் கந்தவேளின் இயல்புகள் பலவிடங்களில் வெளிப்படும். தாரகனது மாயையால் கிரவுஞ்சவெற்பில் உணர்விழந்து வருந்திய வீரவாகு முதலியோரை வேலினால் மீட்டல் (1:20:199), பானுகோபன் தன் மாயைப்

படையால் வீரவாகு முதலியோரின் அறிவைக் கெடுத்து உயிரை நீக்கிச் சுத்தோதக் கடலில் ஆழ்த்தியகாலை மோகப்படைகொண்டு அவர்களை மீட்டுக்கொணர்தல் (4:3:342-353), சிங்கமுகனது சூழ்ச்சிக்கயிற்றால் உயிர்ப்பிலாது உதயமால் வரையில் உறங்கும் படைத்தலைவர்களை வீரக்கணையால் மீட்டருளுதல் (4:12:296) முதலியன சார்ந்தோரைக் காக்கும் முருகனது வேந்தியல்பினைக் காட்டும். சூரபன்மனது அம்புமழைக்கு ஆற்றாது இரிந்தோடும் தேவர்களை நோக்கி, 'நையலிர் புலம்பலிர் நடுங்கலிர்கள் என்றோர் செய்யகரம் ஏந்தி முருகன் கருணை செய்தலும்' (4:13:220), நாரதர் இயற்றிய வேள்வியில் தோன்றும் தகரின் கொடுமைக்கு ஆற்றாது அஞ்சிவந்தடைந்த தேவர்களைப் 'பரிவின்நோக்கி அஞ்சல் விடுமின்கள் என அங்கையமைத்துக்' கந்தன் அவர்கட்குத் தஞ்சமளித்தலும் (1:15:17) தம்மைச் சார்ந்தோரைக் காக்கும் தலைவனின் இயல்புகளை உணர்த்தும்.

## ஈ) சார்ந்தோர் துயருக்கு வருந்துதல்

தன்னைச் சார்ந்தோருக்கு நேரிட்ட இடரினைக் கேட்ட வளவில் உணர்ச்சிக்காட்படும் போக்கினனாக முருகனைப் படைத்து மனித உணர்வினனாகக் காட்டுவதும் கச்சியப்பர் இயல்பாம். பூதகணங்களையும் படைத்தலைவர்களையும் சிங்கமுகன் சூழ்ச்சிக் கயிற்றால் உதயப்பொருப்பிலிட்ட துயரச் செய்தியினை உணர்ச்சி ததும்ப வாயுதேவன் கூறும்பொழுது "யாண்டுளன் யாண்டுளான்அவ்வரி முகத்தவன்" (4:12:297) என முருகன், இருகாற்கூறுதல் தற்சார்ந்தார் படும் துயரத்தின் தாக்கத்திற்கு ஆட்படும் நெகிழ் உணர்வினைப் புலப்படுத்தும். கிரவுஞ்சவெற்பினின்றும் மீண்ட வீரவாகு முதலியோர் களைத், "தாரகன் வரையுட்பட்டுத் தகுமுணர் வின்றி நீவிர் ஆருநொந்தீர்கள் போலும்" (1:20:200) என்றும், தூது சென்று மீண்ட வீரவாகு தன்னைத் தாக்க வந்த சூரபன்மன் மக்களையும், யாளிமுகன் முதலிய காவலர்களையும் அருஞ்சமரியற்றி அட்டு வந்த செய்தியினைப் பணிவுடன் பகருங்கால், "இகலினோர்களால்

வருந்தி னாய்கொலோ மன்ற'' (3:19:16) என்றும், சிங்கமுகனது சூழ்ச்சிக்கயிற்றால் உணர்விழந்து மெலிந்த பூதகணங்கள் முதலிய படைத்தலைவர்கள் தன் கணையால் மீண்டுவந்துற்றகாலைத்,

*'' தொக்கீர் அவுணன் தொடுமாயைச் சூழ்வலையில்*
*புக்கீர் புலர்ந்தீர் புலன் அழிந்தீர் யாப்புறவும்*
*தக்கீர் உதயந் தனிற்புகுந்தீர் இவ்வாறு*
*மிக்கீரும் நொந்தீர்கள் போலும்''* (4:12:374)

என்றும் புகன்று தன் படைத்தலைவர்களின் துயருக்குத் துயருறு பவனாக முருகன் விளங்குவான். பானுகோபனுடன் கடும் போரியற்றி மீண்ட வீரவாகுவிடம்,

*'' ........ ........ நம்பி இப்பகல்*
*தொல்லமர் உழத்தலில் துன்பங் கூர்ந்துளாய்*
*எல்லிது பொழுதுநின் இருக்கை தன்னிடைச்*
*செல்லுதி துணைவரோடு''* (4:3:376)

எனச் செப்புதல் தன்னையே நம்பி வாழும் படைத்தலைவன் மீது முருகன் கொண்டுள்ள பரிவினைக் காட்டும். வஞ்சினம் கூறிப் பானுகோபனைக் கொன்று வீரவாகை சூடிவந்த வீரவாகுவிடம், 'வேண்டுவ கேண்மதி விரைந்து நல்குதும்' என முருகன் கேட்பதாகவும், விரவாகு பத்தியுணர்வையே முருகனிடம் வேண்டிப் பெற்றதாகவும் கதைநிகழ்ச்சி அமைந்திருப்பினும் (4:11:151-155) வெற்றிபெற்ற வேந்தன் அவ்வெற்றிக்குத் துணைநின்ற வீரர்கட்கு வழங்கும் 'பாதீடு', 'கொடை'[16] முதலிய புறத்துறை மரபுகளையும் இந்நிகழ்ச்சி நினைவுறுத்தல் கருதற்குரியது.

## 4. காதலுணர்வுக்கு ஆட்படுதல்

'காதல் உடலுக்கு நல்லது, உள்ளத்துக்கு நல்லது, ஊருக்கு நல்லது, உலகத்துக்கே நல்லது' எனவும், 'அஃறிணையுயிர்களின்

காதலாவது கல்லாக்காமம், இயற்கைவீறு, மொழி பேசும் மக்களினத்தின் காதல் நினைவில் இனித்து, அறிவில் விளங்கி, கல்வியில் வளர்வது' எனவும் அறிஞர் நவில்வர்.[17] இத்தகு உயர்ந்த குறிக்கோளுடைய காதலுணர்வுகளைத் தெய்வத்தன்மையுடைய காப்பியத் தலைவர்கட்கும் ஏற்றி மொழிகுவர் காப்பியக் கவிஞர்கள். தெய்வ இயல்பினனாகிய இராமனையும் காதலுணர்வுக்கு ஆட்படுத்தியவன் கம்பன். காப்பியமாந்தர்கள் தெய்வங்களேயாயினும், 'அவ்விலக்கியப் பாத்திரங்கள் புலவனுடைய அடிமைகள். அவன் ஆட்டினால் ஆட வேண்டும்; அடக்கினால் அடங்கவேண்டும்' என்றும் திறனாய்வாளர் கருதுவர்.[18]

முருகனை முழுமுதற்றன்மையுடையவனாகக் காட்டுதலையே முழுநோக்கமாகக் கொண்டுள்ள கந்தபுராணத்துள் அந்நோக்கத்திற்கு ஊறுவாரா நிலையில் வள்ளியம்மை திருமணப்படலத்தில் தமிழ்க்களவியல் மரபுகளைத் தழுவிக் கத்தனது காதலுணர்வுகளைப் படைத்துக் காட்டுவர் கச்சியப்பர். 'கந்தபுராணத்தில் தமிழ் இலக்கியமரபுகள்' என்னும் பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.[19]

நாரதர் வாயிலாக வள்ளியின் அழகினைச்செவியுற்ற கந்தன், ''கன்று காமநோய்க் கவலை யுள்வைத்தான்'' (6:24:64) என்றும், 'மையல் மானுட வடிவுதாங்கி வேட்டுவக்குமரன் கோலங்கொண்டு கிளிமொழியாள் வள்ளியின்மாட்டுள்ள மோகம் தன்னுள்ளகந்தனைத் தள்ள வள்ளிவெற்பு எய்தினான்' (6:24:65-67) என்றும் ஆசிரியர் உரைத்து அவன் காதலுணர்வைச் சுட்டுவர். 'விரகச் செந்தீச் சுட்டிட' (6:24:69) வள்ளியின் அருகிற்சென்ற முருகன்,

*''நாந்தக மனைய உண்கண் நங்கைகேள் ஞாலத் தன்னில்*
*ஏந்திழை யார்கட் கெல்லாம் இறைவியாய் இருக்கும் நின்னைப்*
*பூந்தினை காக்க வைத்துப் போயினார் புளின ரானோர்க்*
*சாய்ந்திடு முணர்ச்சி யொன்றும் அயன்படைத்திலன்கொல்''*

**(6:24:70)**

என்று வள்ளியின் அருமையறியாது தினைப்புனம் காக்கவைத்துச் சென்ற அவளது பெற்றோர்களின் அறியாமையினை நேரிடையாகத் தூற்றாது தலைவியின் நெஞ்சு நோகாவண்ணம் அயன்மேல் வைத்துக்கூறும் திறன் வியத்தற்பாலது. வள்ளியின் காதலுக்கு ஏங்கி நெஞ்சழியும் காப்பியத்தலைவனை,

*'' உலைப்படு மெழுக தென்ன உருகியே ஒருத்தி கர்தல்*
*வலைப்படு கின்றான்போல வருந்தியே இரங்கா நின்றான்''*(6:24:73)

எனப் பாடுவர். அறுவடைக்குப் பின்னர்த் தினைப்புனத்தில் வள்ளியைக்காணாது வருந்தும் முருகன் செயலினைக்,

*'' வாடினான் தளர்ந்தான் நெஞ்சம் வருந்தினான் மையற் கெல்லை*
*கூடினான் வெய்து யிர்த்தான் குற்றடிச் சுவடு தன்னை*
*நாடினான் திகைத்தான் நின்று நடுங்கினான் நங்கை தன்னைத்*
*தேடினான்............''* (6:24:160)

என உரைப்பர். உடன்போக்கின்போது தன் காதலியாம் வள்ளியைக் 'கையடை' யாகத் தந்த தோழியிடம், ''விளங்கிழாய் நீ எம்பாலின் வைத்திடு கருணைத்தன்னை மறக்கலம்'' (6:24:167) எனக் கந்தவேள் மொழிகுவதாகப் புகன்று, உலக உயிர்களைத் தன் கருணையால் தழைக்கச் செய்யும் முருகனைத் தோழியின் கருணையை வியந்து போற்றும்வண்ணம் படைத்துக் காதலுணர்விற்கு ஆட்படும் தமிழ்க் காப்பியத்தலைவனாக் காட்டுவர். இவ்வாறு காதலுணர்வினால் உந்தப்படும் முருகனது பண்புகளைப் பாடிவரும் கவிஞர் அவனது முழுமுதற்றன்மைக்கு ஊறுநேராவண்ணம், ''குமரற்கீது திருவிளையாடல் போலாம்'' (6:24:160) என்றும் இடையிடையே புகலுதல் குறிக்கத்தகும்.

## 5. உலகியற் சடங்குகள்

பரம்பொருளாம் முருகன் உலகியலில் நிகழ்த்தப்படும் சடங்குகட்கும் உட்பட்டவனாகத் திகழ்வன். தெய்வயானையம்மை

திருமணத்தின்போது எழுந்தருளி வந்த சிவன், உமை இவ்விரு வரையும் முருகன் அடிபணிந்து வணங்குதலும் (5 : 2 : 217), சூரபன்மன் முதலிய அசுரர்களைத் தடிதற்கு விடைபெறுங்கால் தன் பெற்றோரை அவன் மும்முறை வலங்கொண்டு தொழுது வணங்குதலும் (1 : 18 : 42) இளையோர் தம் இருமுதுகுரவரைக் காணும்பொழுதும், விடைபெறும் பொழுதும் வீழ்ந்து வணங்கும் உலகியல் மரபினை எடுத்துக்காட்டும். அசுரர் வரலாற்றைத் தன்னிடம் விரிவாக எடுத்துரைத்த தேவகுருவாம் வியாழனது முதுகை முருகன் தட்டிக்கொடுத்துப் பாராட்டுதல் (2 : 43 : 136) உலகியலிற்காணும் மனிதர் செயலை நினைவுறுத்தும்.

தெய்வயானை திருமணத்திற்காக எழுந்தருளிவரும் முருகனை முனிவர்கள் கும்பத்திலுள்ள தருப்பை தோய்ந்த நீரைத் தெளித்துப் போற்றுதல் (புரோட்சித்தல்), (5:2:201), தேவமாதர்கள் நிறைகுடம், விளக்கு, கண்ணாடி, மணி, சாமரம், கொடி, தோட்டி, முரசு என்னும் நாலிரண்டு மங்கலப் பொருட்களால் (அட்ட மங்கலப் பொருட்கள்) போற்றி வரவேற்றல் (5 : 2 : 202), செம்பஞ்சும், நெய்யும், கருப்பூரமும், புனுகும் கலந்தெரியும் விளக்குகளைப் பொன்தட்டிலில் ஏந்தி ஆலத்தி சுற்றுதல் (5 : 2 : 203) முதலிய நிகழ்ச்சிகள் இன்றைய அந்தணர்களின் திருமணத்தில் காணும் மாப்பிள்ளை அழைப்புச் சடங்குகளை நினைவுறுத்தும். வள்ளியம்மை திருமணத்தில் குறவர்கோமான் தாரைவார்த்துத் தன் மகளைக் கொடுத்த பின்னர், குறப்பெண்டிர் முருகனையும் வள்ளியையும், 'இன்னேபோல வைகலும் வாழ்கவென்று ஆசிகூறி அரிசி கலந்த அருகம்புல்லைத் தூவிப்போற்றுவர்.' தஞ்சை மாவட்டத்தில் திருமண நிகழ்ச்சியின் இறுதியில் பூவுடன் கலந்த அரிசியினைத் தூவிப் பெரியோர்கள் மணமக்களை வாழ்த்துதலை 'மணையிடுதல்' என்பர். பிற மாவட்டங்களில் இதனைச் 'சேசையிடுதல்'[20] என்றும் அழைப்பர். வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் முழுமுதற்கடவுளாம் முருகன் காப்பியத்தலைவனாகும்போது, குறவர்கோமான் தண்புனல் வார்த்தளிப்ப வள்ளியை ஏற்றுக்கோடல், பிறரின் ஆசியை ஏற்றல் போன்ற உலகியற் சடங்குகளுக்கு உட்பட்டவனாகவே விளங்குவன்.

இவ்வாறு ஏற்றுக்கொள்வது உலகம் நீதிசாத்திர விதிகளைக் கைக்கொண்டு ஒழுகுதற்கே என அவனது முழுமுதற்றன்மைக்கு இழுக்கு நேராவகையில் விளக்கம் கூறுவோரும் உளர்.[21]

### 6. மன்னிக்கும் மாண்பு

மடமையானும், மனச்செருக்காலும் ஒருவன் தமக்குத் தீயன செய்தவழித் தாமும் அவற்றை அவன்கட்செய்யாது பொறுத்தருளல் மனிதப்பண்புகளுள் தலையாயதாகும். "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந் தகுதியான் வென்று விடல்"[22] என்பது தெய்வப் புலவர் வகுத்த நெறி. முருகனது திருவிளையாடலை உணராது அவனுடன் பொருதழிந்த இந்திரன் முதலியோர் மீண்டும் உயிர் பெற்றெழுந்தகாலைத் தங்கள் தவறுக்கு வருந்திப் புலம்புவர். அவ்வாறு அரந்தைகொண்டு மெய்நடுங்கும் அவர்களிடம் 'வருந்தலிர் வருந்தலிர்' எனக் கருணை செய்திடல் (1:14:83) அறியாமையுடையவர்களை மன்னித்தருளும் முருகன் மாண்பினைக் காட்டும்.

> "*காற்றிற் றள்ளுண்டு நெருப்பினிற் சூடுண்டு கங்கை*
> *ஆற்றில் தாக்குண்டு சரவணம் புக்கலை யுண்டு*
> *வேற்றுப் பேர்முலை உண்டழு தேவிளை யாடும்*
> *நேற்றைப் பாலன்"* (3:21:144)

என இகழ்ந்துரைத்ததுடன் தன்னைக் கொல்லவும் முயன்ற சூரபன்மனையும் அழிக்காது அன்பனாக மாற்றியவன் முருகன். பிற கடவுளர்கள் தம்மை எதிர்த்த அசுரர்களை அழித்துக் கொன்றதாகவே புராணங்கள் புகலும். சேவலும், மயிலுமாகத் தன்னைத் தாக்க முந்திய சூரபன்மனின் பிழை பொறுத்துப் பண்பார்ந்த அன்பனாக மாற்றிக் கொடியும் ஊர்தியுமாக ஏற்றுக்கொண்டமையினைக் கந்தபுராணம் நவிலும். "பகைவனை அழித்தலில் வீரமோ, பெருமையோ இல்லை. பகைவனையும் மன்னித்து இன்னருள் புரிந்து திருத்தி ஆட்கொண்டருளும் அரிய செயலின் திறம்தான் பெருவீரமும் பெருஞ்சிறப்புமாகும். 'தீமையை வெறு; தீயவனை வெறுக்காதே' (Hate the sin; but not the sinner) என்பது ஓர்

உயர்வற உயர்ந்த கொள்கை''[23] என்பார் கருத்தும் இவண் கருதற் பாலது. 'பிழைத்தோர் தாங்கும் காவலும்'[24] என வாகைத்துறையில் தொல்காப்பியர் வகுக்கும் நெறிக்கு இயையுமாறு முருகனது செயற்றிறன் காணப்படுதல் கருதத்தகும். 'கந்தபுராணத்தின் நோக்கம்' என்னும் பகுதியில் தீயரையும் தூயராக்கி மன்னிக்கும் முருகனது மாண்புகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன[25].

## முடிவுரை

தெய்வங்களைக் கதைமாந்தராகக்கொண்டு படைக்கப்படும் காப்பியங்களில் மீவியற்கை இயல்புகளுடன் மனித இயல்புகளும் கதைமாந்தரிடம் விரவிக் காணப்படுதல் உலகக் காப்பியங்கள் அனைத்திலும் காணும் பொதுப் பண்பாகும். முழுமுதற் பொருளாக முருகனைக் காட்டுதலே கச்சியப்பரின் இதயநாதமாக ஒலிப்பினும், காப்பியத்தலைவனாக அவன் படைக்கப்படுவதால் மனித இயல்புகளும் அவன்மீது படிவத்னை உணர்கின்றோம். காப்பியத்தை இயற்று பவரும் காப்பியத்தை நுகர்வோரும் மனிதர்களாகவிருத்தலே இதற்குக் காரணமெனலாம். நினைப்பளவில் (சங்கல்பம்) பகைவரைக் கொன்று தேவர்களைக் காக்கும் பேராற்றலுடைய முருகன், காப்பியத் தலைவனாகும்பொழுது, வீரம், சீற்றம், சூழ்வாரைச் சூழ்ந்து செயற்படுதல், புறத்துறையிலும் அறநெறி போற்றுதல், சார்ந்தோர் துயருக்கு வருந்துதல் முதலிய வேந்தியல்புகளையும், காதலுணர்வுக்கு அடிமையாதல், உலகியற் சடங்குகளைப் போற்றுதல், பிழைத்தோரை மன்னித்தல் முதலிய மக்கட்பண்புகளையும் கொண்டு திகழ்தலை அவனது முழுமுதற்றன்மைக்கு ஊறு நேராவண்ணம் கச்சியப்பர் படைத்துக்காட்டியுள்ளார்.

### மேற்கோள்

1. C.M. Bowra, Heroic Poetry, P.94.
2. கி.லஷ்மணன், கம்பனது கதாபாத்திரங்கள், ப.33.
3. தா.ஏ.ஞானமூர்த்தி, சிந்தாமணிச் செல்வம், ப.41,

4. அகம், 1:3; பதிற்று. ,26:12; மதுரைக்., 181.
E.W. Hopkins, Epic Mythology, P.227.
5. C.M. Bowra, Heroic Poetry, P.95.
6. அ அ.மணவாளன், அரிஸ்டாடிலின் கவிதை இயல், ப.75.
7. Michael Grant, Myths of the Greeks and Romans, P.45.
8. C.M. Bowra, Heroic Poetry, P.100.
9. புறம், 16:12; பெருந., 131.
10. தொல். பொருள்., இளம்பூரணருரை, நூ.254.
11. புறம், 55:7-10.
12. திருக்குறள், 384.
13. திருமுருக கிருபானந்தவாரியார், கந்தன் கருணை, ப.223.
14. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், ப.145.
15. திருக்குறள், 388.
16. தொல்.பொருள்., இளம்பூரணருரை, நூ.61.
17. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.3.
18. ————, ப.173.
19. காண்க, பக். 186-209.
20. ச.சாம்பசிவன், கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலம் (உரை), ப.109.
21. நிரம்ப அழகிய தேசிகர், திருப்பரங்கிரிப்புராண மூலமும் மு.ரா. அருணாசலக்கவிராயர் எழுதிய மொழிப்புரையும், திருக் கலியாணச் சருக்கம், செ.49.
22. திருக்குறள், 158.
23. ந.ரா.முருகவேள், முருகன் பெருமை, ப.118.
24. தொல்.பொருள்., இளம்பூரணருரை, நூ.75.
25. காண்க, பக்.128-144.

4

# முருகனின் முழுமுதற்றன்மை

குலங்களாகவும், குடிகளாகவும் (tribes and clans) தமிழ் மக்கள் வாழ்ந்த பழங்காலக் கூட்டுமுறை வாழ்க்கையிலே கொற்றவை வேலன், வருணன் முதலிய தெய்வங்களே சிறப்புடையனவாகத் திகழ்ந்தமையால் சிவவழிபாடு மக்களிடத்தில் அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. காலப்போக்கில் கலப்புப் பண்பாட்டின் விளைவாகச் சிந்துவெளி நாகரிகத்தில் உதித்த சிவன் பழைய புதிய பண்புகளையெல்லாம் சேர்த்துத் தனிப்பெருந்தெய்வமாகக் காட்சி தருகின்றான். பழைய பெண்தெய்வத்தை மணந்து மாதொரு பாகனாகி, முருகனுக்குத் (கார்த்திகேயன்) தந்தையாகிப் படிப் படியாகத் தமிழ்நாட்டுப் பெருந்தெய்வமாக உயர்ந்து வளர்ந்த மையினைக் காண்கின்றோம்[1].

அறிவுக் கொள்கைகளை வலியுறுத்தும் புத்த, சமண சமயங்கள் தமிழகத்தில் நுழைந்தபொழுது, அப்புறச் சமயங்களை எதிர்க்கும் இயக்கமாகச் சைவசமயம் உருப்பெற்றது. அக்காலத்திற்றான் சிவன் சைவசமயத்தின் தன்னேரில்லாக் கடவுளாகவும், முழுமுதற் கடவுளாகவும் போற்றப்பெறும் நிலைக்கு உயர்கின்றான். திருஞான சம்பந்தர் முதலிய சமயகுரவர்கள் தாம் பாடிய திருமுறைகளில் சிவனது முழுமுதற்றன்மையினைப் பரக்க வெளிப்படுத்தியுள்ளனர். பரிபாடலும், திருமுருகாற்றுப்படையும் முருகனைக் காணச் சிவன், திருமால், நான்முகன் முதலியோர் வந்திருந்தமையினைக் குறிப்பிட்டு முருகனது முதன்மையினை வலியுறுத்தியதனையும், அதற்கு மாறாகத் திருமுறைகள் சிவனை வழிபடச் சென்றோர் வரிசையில் முருகனையும் ஒருவனாகச் சுட்டியமையும் முன்னர் உணர்த்தப்பெற்றன.[2] எனவே, சங்ககாலத்தில் முருகனுக்கு இருந்த முதன்மை திருமுறைக்காலத்தில் சிவனுக்குச் சென்றமையினைக் காண்கிறோம். சிவனே முழுமுதற் கடவுள் என்று பத்தியுணர்வில் தலைநின்ற சைவசமயம் ஏற்றுக்

கொண்ட பின்னரே, அம்முழுமுதற்றன்மையினை நிறுவும் சாத்திர நூல்கள் சந்தானகுரவர்களால் இயற்றப்பெற்றன.

பத்திநிலையிலும், சாத்திரநிலையிலும் சிவனை முழுமுதற் கடவுளாக ஒத்துக்கொண்ட சைவமரபில் தோன்றிய கச்சியப்பர், அம் மரபிற்கு மாறுபடாமல் முருகனை முழுமுதற்கடவுளாக உயர்த்த மிகவும் முயன்றுள்ளமையினை நூலின் முழுப்பார்வையினால் உணர லாம். நூலின் தொடக்கப் பகுதியில் 'சிவனே முருகன்' என்ற கருத்தைக் கதைமாந்தர் வாயிலாகவும், தம் கூற்றாகவும் பல்கால் வற்புறுத்தி வந்த கச்சியப்பர், படிப்படியாக முருகனின் முழுமுதற் றன்மையினை வளர்த்துச்சென்று நூலின் இறுதிப்பகுதியில் 'முருகனே சிவன்' என்ற கருத்து வலிமை பெறுமாறு அமைத்துள்ள திறத் தினை ஈண்டுக் காண்போம்.

## 1. கந்தபுராணத்தின் தலைமைக்கடவுள்

சைவ முழுமுதற்கடவுளாம் சிவனது தலைமைக்கு மாறின்றி முருகனை முழுமுதற்பொருளாக உயர்த்துவது கவிஞரின் நோக்க மாதலால் இடையிடையே சிவனது பேராற்றல்களையும், பேரியல் புகளையும் எடுத்துரைத்துள்ளார். அவ்வாறு மொழியும் பகுதிகள் சிவனே கந்தபுராணத்தின் தலைமைக்கடவுளெனக் கொள்ளுமாறு அமைந்துள்ளன. முருகனது முழுமுதற்றன்மையினை விளக்கும் இப் பகுதியில் கந்தபுராணத்தின் தலைமைக்கடவுளை உறுதிப்படுத்துதல் இன்றியமையாததாகும்.

### அ) கந்தபுராணத்தின் தலைமைக் கடவுள் சிவனே

சிவனை மதியாது தக்கன் இயற்றும் வேள்விக்குச் சென்ற பாவத்தின் விளைவாகவே இந்திரன் முதலிய தேவர்கள் அவுணரால் அளப்பில் காலம் துன்புறுகின்றனர். இத்துன்பத்தினின்றும் விடுதலை பெற இந்திரன் சிவனைக் குறித்துத் தவஞ்செய்த பின்னர்ச் சிவனரு ளால் முருகன் தோன்றி அவர்களின் துயர் களைவன். இவ்வகையில்

கந்தபுராணக் கதைக்குச் சிக்கலைத் தோற்றுவிப்பவனும் அச்சிக்கலைத் தீர்ப்பவனுமாகச் சிவன் விளங்குதலைக் காண்கின்றோம்.

ஐந்து காண்டங்களாக அமைந்துள்ள கந்தபுராணத்தின் இறுதிக் காண்டமாம் தக்ககாண்டம் சிவன் பெருமையினையே பரக்கப் பேசும் பெற்றியது. தக்கன் வினவும் வினாக்களுக்கு விடையிறுக்கும் பிரமன் வாயிலாக ஆசிரியர் கீழ்க்காணும் கருத்துக்களை மொழிகுவர்.

'சிவனே யார்க்கும் மேலவன் (6:1:5); பிறரை வேதம் பிரமம் என்றல் முகமன் (6:1:15); சிவன் ஒருவனே முத்தி யளிக்கக் கூடியவன் (6:1:24); அவனையன்றிப் பிறரைத் தெய்வம் என்று சிறப்புச் செய்பவர்கள் நிரயத்தில் வீழ்வர் (6:1:29); யாதொரு பொருளை யாவர் இறைஞ்சினும் அது சிவனைச் சென்றெய்தும் (6 : 1 : 17)'. கந்தபுராணத்துள் சிவபுராணமாக விளங்கும் தக்க காண்டத்தில் பிரமன் வாயிலாகக் கூறும் இக்கருத்துக்களாலும், தக்க காண்டக் கதை நிதழ்வுகளாலும் சிவனே தலைமைக் கடவுளென்று கருதவேண்டியுளது.

இத்தகு தலைமைக்கடவுளின் திருவருளால் தோன்றிய முருகன் தேவர்களின் துயர்துடைத்தற்கும், சூரபன்மனைவெல்லுதற்கும் சிவனது கட்டளைப்படி செலவு மேற்கொள்வன். அக்காலைப் படைக்கலன் களும், படைகளும் சிவனால் முருகனுக்குப் படைத்து நல்கப்படும். கந்தனது வெற்றிக்கு மிகவும் உறுதுணையாகவிருக்கும் வேலாயுதம் சிவனால் படைத்து அளிக்கப்படுதலும் குறிப்பிடத்தக்கது.

தாரகன் வதைக்குப் பின்னர்த் தெற்கு நோக்கி ஏகும் முருகன் திருக்கேதாரம் முதல் திருவாரூர் வரையுள்ள சிவன் எழுந்தருளி யிருக்கும் திருத்தலங்களைத் திருவுளங்கனிந்து வழிபட்டுச் சென்ற மையினை வழிநடைப்படலம் (1 : 23), சுரம்புகுபடலம் (1 : 25) முதலியன உணர்த்தும். கந்தன் திருச்சேய்ஞலூரில் சிவனை வழி பட்டதன் பயனாகப் பகைவரை எளிதில் வெல்லுதற்குரிய பேராற்றல்

படைத்த சிவப்படை (பாசுபதாத்திரம்) பெற்றமையினைக் குமராபுரிப் படலம் சுட்டும் (1 : 24 : 76). இவையன்றிச் சூரனைத் தடிந்த பின்னர்த் திருச்செந்தூரிலும், வள்ளியை மணந்த பின்னர்த் திருத் தணியிலும் முருகன் சிவனை வழிபட்டு அருள்பெறுவன் (4 : 16 : 33 ; 6 : 24 : 230). இதனால் ஏவுதற்கருத்தாவாம் சிவன் கட்டளையை அவன் உதவியினால் பத்தியுணர்வுடன் செயற்படுத்தும் இயற்றுதற்கருத்தாவாக முருகன் விளங்குதலைக் காண்கின்றோம்.

தேவர்கள் கூற்றிலும், பகைவர்கள் கூற்றிலும், தம் கூற்றிலும் சிவனது தலைமை தோன்றும் வண்ணம் கவிஞர் பாடுவர்.

*"செங்கண்மா றானும் நானுந் தேடுதற் கரிதாய் நின்ற*
*எங்கடம் பிரான்கு மேலா எண்ணவோர் தேவு முண்டோ"*
(1:3:43)

எனப் பிரமனும்,

*"ஆவிக ளனைத்து மாகி அருவமா யுருவ மாகி*
*மூவகை யியற்கைத் தான மூலகா ரணம தாகுந்*
*தேவர்க டேவன்..................."*
(1:3:75)

எனத் திருமாலும் உரைப்பர்.

*"பெருக மளப்பில பெயர்த லின்றியே*
*சூர்ன தர்ணையில் துயர்ப்பட் டாழ்ந்தனங்*
*காருறழ் கந்தரக் கடவுள் நீயலர்*
*தாருளர் அடியரேம் அலக்கண் நீக்குவர்"*
(1:5:22)

எனத் தேவர்கள் வனைப் போற்றும் கூற்றுக்களாலும், 'கூற்று வனைக் கடந்த சிவனுக்கே குறையொன்றுமில்லை; ஏனையோர் அனைவர்க்கும் குறைகளுண்டு' (2:8:19) என்னும் சுக்கிரன் கூற்றாலும், பிற பகைமாந்தர்களாம் சிங்கமுகன், இரணியன் முதலியோர் கூற்றுக்களானும் (3:21:118-119; 4:7:11,20)

சிவனாரது தலைமை நிறுவப்படும். இத்தகு தலைமையும், முதன்மையுமுடைய சிவனை "யார்க்குங் காரணன் சிவனே யென்கை கழறவும் வேண்டற் பாற்றோ" (1:3:18) எனத் தன் கூற்றிலும் எடுத்து மொழிவர்.

கந்தபுராணக் கதைசிக்கலுக்குக் காரணனாக இருத்தலுடன், அச்சிக்கலை அறுப்பவனுமாக சிவன் விளங்குதலாலும். புராண நாயகனாம் கந்தன் ஏவுதற்கருத்தாவாம் சிவனது கட்டளையை அவன் நல்கும் படைத்துணையுடன் நிறைவேற்றும் இயற்றுதல் கருத்தாவாகக் காணப்படுதலானும், பிற கதைமாந்தர் கூற்றுக்களானும் சிவனே கந்தபுராணத்தின் தலைமைக்கடவுள் எனும் கொள்கை வலுப்பெறும்.

## ஆ) கந்தபுராணத்தின் காப்பியத் தலைவன் முருகனே

மேலே காட்டிய கருத்துக்களால் சிவனே தலைமைக்கடவுள் என்ற கருத்து வலிமைபெறுமாறு தோன்றினும் அத்தலைமைக் கடவுளைக் காட்டிலும் பேராற்றல் பொருந்தியவனாகவும், அக்கடவுளே மதித்து ஒழுகும் தகுதியுடையோனாகவும் கச்சியப்பர் முருகனை உயர்த்திக் காட்டுதலானும், பிற காரணங்களானும் கந்தனே கந்தபுராணக் காப்பியத்தலைவன் என்பதனைத் தெளியமுடியும்.

முருகனது திருப்பெருவடிவம் புராணத்தில் ஈரிடங்களில் விரிவாக விளம்பப்படும். முன்னதைத் தேவர்களும், பின்னதைச் சூரபன்மனும் காணும் பேற்றினைப் பெறுவர். கந்தனது திருவிளையாடலையறியாது அவனொடு பொருது மடிந்த இந்திரன் முதலியோர் மீண்டும் அவனருளால் எழுந்தகாலை, முருகன் தன் திருப்பெருவடிவை அவர்கட்குக் காட்டுவன். 'அனைத்து அண்டங்களையும் தன்னகத்து அடக்கிக்கொண்டு எழுந்த அப்பெருருவில் திருமாலும் செம்பதுமத்தோனும் சிவனொடுஞ் செறிந்திருத்தலைக் கண்டோம்' (1:14:94) என்றும், 'திருமாலும் நான்முகனும் ஒருவருக்கொருவர் இகலும் எல்லையில் சிவன் எடுத்த பேருருவம் முருகன் கொண்ட திருவுருவிதனுக்கு ஆற்றச் சிறியன போலும்' (1:14:98) என்றும் இந்திரன் கூற்றில் நவின்று, சிவன் உள்ளிட்ட முக்கடவுளரும்

அவன் திருப்பெருவடிவில் அடங்கியிருத்தலையும், சிவன் கொண்ட பெருவடிவினும் இப்பேருரு பெரிது என்றும் ஆசிரியர் சுட்டுவர். "நகேசன் மங்கையோ டிகலிவேங் கடகிரி நண்ணுங் குகேசன்" (4:4:163) என முருகனைச் சுட்டுதல் வாயிலாக வேங்கடத்தானையும் குகனாகவே காணும் கவிஞரின் உளப்பாங்கும் இவண் நினையத்தகும்.

அண்டங்கள் ஆயிரத்தெட்டையும் நூற்றெட்டு யுகம் ஆளவும், தானடக்கப் பிறர் அடங்கவும் தன் கடுந்தவத்தால் வரம் பெற்றுயர்ந்தவன் சூரபன்மன். இத்தகு பேராற்றல்மிகு சூரபன்மன் முருகனது பேருருக்காட்சியைக் கண்ணுற்று, "அமரரில் அழிவிலாத சீரிய வரங்கொண்டுள்ளேன் ஆதலில் தெரிகின்றேனால்" (4:13:438) என்றும், "நாயகன் வடிவம் கண்டேன் நற்றவப் பயனீதன்றோ" (4:13:443) என்றும் உரைப்பன். சிவனைக் குறித்து இயற்றிய தன் தவத்தின் பயனாகவும், சிவன்பால் பெற்ற வரத்தின் வலிமையாலும் முருகனது பேருருவைக் காண்பதாகக் கூறுதல் கருதற்பாலதாம்.

சிவனது செயலைத் தவறு என்று பிற கடவுளர் எவரும் சுட்டாத நிலையில், முருகன் அதனைச் சுட்டிக்காட்டித் தன் தலைமையினைப் புலப்படுத்தும் போக்கினையும் கதை நிகழ்ச்சியில் காண்கின்றோம். பிரணவப் பொருள் அறியாத பிரமனைக் குட்டிச் சிறையிருத்திய முருகனிடம் சிவன் நந்தியை உய்த்து நான்முகனைச் சிறைவீடு செய்யுமாறு மேற்கொள்ளும் முயற்சியில் தோல்வி கண்டதால், சிவனே தன் விடையூர்தியில் கந்தவெற்படைந்து, தன் ஊர்தியினின்றும் இறங்கி, முருகன்பால் சென்று, பிரமனை விடுதலை புரியுமாறு வேண்டுவன். அப்பொழுது முருகன், 'உயிர்கட்கு உறுதி நல்கும் ஓரெழுத்தின் பயனை அறியாதான் உயிர்களைப் படைத்தலென்பது பேதைமையாகும். உன்னை வழிபட்ட ஒரே காரணத்திற்காகத் தகுதியில்லாத அவனுக்குப் படைப்புத் தொழிலுரிமை நல்கி ஒரு சுமையை அவனுக்குச் சுமத்தியருளினீர். தன் தகுதிக்கு மேற்பட்ட உயர்ந்த தொழிலை மேற்கொண்டதால் நித்தலும் உன்னைத் துதிப்பினும் தன்னகந்தை மட்டும் தீர்ந்திலன்.

அதனால் அவனைச் சிறை நீக்கேன்' (1:17:25-28) என மறுத்து மொழிகுவன். தந்தையாம் சிவனின் செயலை இடித்துக் கூறுதல், கட்டளையை மறுத்தல் முதலிய முருகன் செயல்களும், கயிலையிலுறை யும் சிவனே தன் தலைமை பாராது கந்தவெற்பெய்தித் தன் விடையூர்தியினின்றும் இறங்கித் தன் மகனிடம் செல்லுதலும், பின்னர்த் தந்தையின் வேண்டுகோளின் வண்ணம் பிரணவப் பொருளைத் தந்தைக்கே உரைத்தலும் முருகனின் தலைமையினை வலியுறுத்தும் பகுதிகளாகும். சிவனது திருவடிகளில் முருகன் வீழ்ந்து பணிந்ததைப் பாடும்பொழுதும் முருகனது தலைமை தோன்றும் வண்ணம் உரைப்பது ஆசிரியர்தம் இயல்பாகும். தெய்வயானை வதுவையின் ஞான்று மணச்சாலைக்கு எழுந்தருளிய சிவன், உமை இவ்விருவரின் திருவடிகளில் அறுமுகன் தன் முடிதோய வணங்குதற்குக் 'கதிரும் கமலங்களும் ஒன்றுபட்டதை, (5:2:217) உவமையாக்குவர். பெற்றோரின் தாமரைத்திருவடிகள் பிள்ளையின் கதிர்முடியால் மலர்ச்சி பெறுவதை உவமை மூலம் குறிப்பாக உணர்த்திப் பணியும் நிலையிலும் முருகனின் முதன்மையினைப் போற்றும் கச்சியப்பர் திறம் பாராட்டற்குரியது.

கந்தபுராணக் கதைச்சிக்கலைத் தீர்க்கும் முயற்சியாகச் சிவன் முருகனைத் தோற்றுவித்தலுடன் சூரபன்மனை வேறலுக்குத் துணையாகப் படைகளும், படைக்கலன்களும் நல்கியிருப்பினும், சூரபன்மனைத் தடிந்து தேவர்களின் துயர் களைதலாகிய கதைச் சிக்கலை அறுக்கும் முயற்சியில் முருகனே தன்வயத்தனாக நின்று செயற்படுதலால் கந்தனே கதைக்குத் தலைமையாளன் என்பது பெறப்படும். கதைச்சிக்கலைத் தீர்த்தற்குச் சிவன் ஏவுதல் அளவில் அமைந்து டுதலும், சூர்மாதடிதல் நிகழ்ச்சியில் சிவனது இடையீடு மிகச் சுருங்கிக் காணப்படுதலும் குறிக்கத்தக்கன.

சிவனது கட்டளையேயன்றித் தன் தனித்தன்மை தோன்றும் வண்ணம் முருகன் பல செயல்களைப் புரிந்துளன். செந்தில் மேவி யிருந்த கந்தவேள், 'கடியறை முடிவு செய்தல் நூல்முறை இயற் கையும், அறனும் ஆகும் எனினும் சூரபன்மனையும், அவன்

தமரையும் செற்றிடல் முறையன்று' (3 : 1 : 3–4) என்ற அருளுள்ளத் தால் வீரவாகுவைத் தூதாக விடுத்து அவன் உளக்கருத்து அறிந்து வரச்செய்தல் சிவனது கட்டளைக்கு அப்பாற்பட்ட செயலாகும் தீயவையே புரிந்த சூரபன்மனையும் அழித்துவிடாமல் தூயவனாக மாற்றி வரம்பிலா அருள் பெற்றுய்யச்செய்த செயல் (4 : 13 : 496) "சூரனை அவுணர்குழுவொடும் தடிந்து........... பெயர்தி" (1: 18: 35) என்ற சிவனது கட்டளைக்கு மாறுபட்ட செயலுமாகும். உயிர்கட்குக் கருணை வழங்குதலில் சிவனைக் காட்டிலும் தாராள சிந்தையுடை யோனாகக் காட்டி முருகனது தலைமையினைக் கச்சியப்பர் போற்றுவர். ஏவுதற்கருத்தாவாகவன்றித் தன்வயத்தனாக நின்று செயற்படும் முருகனது தலைமை இதனால் உறுதிப்படும்.

தேவர்களின் துன்பநீக்கம் சூரனைத் தடிதலில் அடங்கியுள்ளது. அச்சூர்தடிதல் கந்தபுராணக்கதையின் முடிவுநிலைப் பொருளுமாகும். அசுரர் வரலாற்றை முருகனிடம் விரிவாகக் கூறிவந்த தேவகுருவாம் வியாழன் இறுதியில், 'அழியாத வரத்தை அருளிய சிவனே வரம் பெற்றவனை அழித்தல் இயலாததாகையால் நீயே அவனைக்கொன்று எங்களைக் காத்தருள்புரிக' (2 : 43 : 133 - 134) என வேண்டிக் கொள்ளுதலால் கதையின் முடிவுப்பொருளை முற்றுவிக்கும் தகுதி சிவனுக்கு இல்லை என்பதும் முருகன் ஒருவனுக்கே அஃது உண் டென்பதும் பெறப்படும். மகேந்திரச் சிறையில் வாடும் சயந்தனுக்கு ஆறுதல் கூறும் வீரவாகு,

*"பங்கய முகங்கள் ஆறும் பன்னிரு புயமுங் கொண்டே*
*எங்கடம் பெருமான் போந்த ஏதுமற் றென்னை என்னில்*
*செங்கண்மா லுந்தி பூத்தோன் சிறுமையும் மகவான் துன்பும்*
*உங்கடஞ் சிறையும் நீக்கி உலகெலாம் அளிப்பக் கண்டாய்"*
*(3 : 11 : 24)*

என்றுரைத்தலுடன், 'தக்கன் வேள்வி நண்ணித் தீயவி நுகர்ந்த பாவத்தால் உங்கட்கு நேர்ந்த துன்பத்தை அறுமுகப்பெருமானன்றி யாரிது நீக்கற்பாலார்?' (3 : 11 : 25) என வினவுதலும், முருகனது பேருருக் கண்ட தேவர்கள்,

''ஆகையால் எம்பி ரான்நீ அருவுரு வாகி நின்ற
வேதநா யகனே யாகும் எமதுமா தவத்தால் எங்கள்
சோகமா னவற்றை நீக்கிச் சூர்முதல் தடிந்தே எம்மை
நாகமே லிருத்து மாற்றால் நண்ணினை குமர னேபோல்''
(1 : 14 : 99)

எனப் பகர்வதும் அக்கருத்தை மேலும் வலியுறுத்தும்.

சைவ சமயத்தின் முழுமுதற்கடவுளாம் சிவனது வழிநிலையில் நின்றே முருகனுக்கு முதன்மையினைத் தருதல் கச்சியப்பரின் உட்கிடக்கையாதலால் புராணத்தின் பல்வேறிடங்களில் சிவனது தலைமை தோன்றும்வண்ணம் கவிக்கூற்றாகவும், கதைமாந்தர் வாயிலாகவும் போற்றியிருத்தலுடன் முருகன் சிவனை வழிபட்டு அருள் பெற்றமையினையும் விரித்துரைத்துள்ளார் எனலாம்.

''அறுமுக முடையவோ ரமலன் மாக்கதை'' (அவை : 1) என்றும், ''கந்தபுராணம்'' (அவை : 17) என்றும் ஆசிரியரே நூலின் பெயரைச் சுட்டுதலுடன் இக்கதையினைக் கந்தனுக்குரைத்ததாகவும் (அவை:4) குறிப்பிடுதலால் கதைத்தலைமை கந்தனுக்கே உரிமையுடையதென்பது ஆசிரியர்தம் நோக்கம் என்பதனை உணர்கின்றோம்.

## 2. சிவனே முருகன்

சைவ சமயத்தின் முழுமுதற்கடவுளாம் சிவனுக்கும், கந்தபுராணக் கதைத் தலைவனாம் முருகனுக்கும் உள்ள ஒற்றுமைத் திறத்தைக் கதைமாந்தர் வாயிலாகவும் கவிக்கூற்றாகவும் எடுத்துரைத்து முருகனின் முழுமுதற்றன்மையினை ஆசிரியர் நிறுவுவர்.

### அ) சிவன் கூற்றில்

கந்தன் மழவிளங்குழவிப் பருவத்திலே இயற்றிய திருவிளையாடலைக் கண்டு உளம் வியந்த உமையம்மை முருகனது

இயல்புகளைக் கூறுமாறு சிவனிடம் கேட்க, 'நம் ஆறுமுகங்களே கந்தனுக்கு ஆறுமுகங்களாகவும் நமக்குரிய தாரக (பிரணவம்) மந்திரமே முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரமாகவும் ஆயிற்று. ஆதலால் அறுமுகன் நம் சத்தியாகவே விளங்குகின்றான். அவனுக்கும் நமக்கும் வேறுபாடில்லை. அவன் நம்மைப்போல் எங்கும் பரவியிருந்து (வியாபித்து) அனைத்துப் பொருட்களையும் புலப்படக்காணும் முற்றறிவினன். தன்னை வழிபடுவோருக்குத் திருவும், ஞானமும், வீடுபேறும் அளிக்கவல்லான்' (1:14:18-19) என்று சிவன் உரைப்பான். சிவனுக்கும் முருகனுக்குமுள்ள வேறுபாடற்ற தன்மையை விளக்குதலுடன், எங்கும் பரவியிருத்தல் முற்றறிவுடைமை வீடுபேறருளும் வல்லமை முதலிய முழு முதல் இயல்புகளை சிவனது இசைவீட்டுடன் (recognition) முருகனுக்கு ஏற்றிமொழிதல் குறிக்கத் தக்கது.

## ஆ) திருமால் கூற்றில்

முருகனுக்கும் சூரபன்மனுக்கும் போர் நிகழும்பொழுது பகைவரின் படைப்பெருக்கங்கண்டு அஞ்சி வருந்திய இந்திரனைத் தேற்றும் திருமால், 'காலமாகவும், கருமமாகவும், உருவமாகவும் குணங்களாகவும், உலகமாகவும், மூலமற்றவனாகவும், நமக்கெல்லாம் மூலமாகவும் இருந்த வள்ளலே (சிவன்) அறுமுகங்களுடன் எழுந்தருளி வந்துள்ளான்' (4:13:70) எனப் பகர்ந்து சிவனும், முருகனும் ஒருவரே எனச் சுட்டுவன். பிறிதோரிடத்தில் நம்பிக்கையிழந்த தேவர்கட்கு நம்பிக்கையூட்டும் வகையில் முருகனது பேராற்றலைப் புலப்படுத்தும் பொழுது,

*"ஓதி யாகியும் உணர்ந்தவர்க் குணர்வும் ஒண்ணா*
*நீதி யாகியும் நிமலம தாகியே நிகழுஞ்*
*சோதி யாகியுந் தொழுதிடும் எம்மனோர்க் கெல்லாம்*
*ஆதி யாகியும் நின்றவன் அறுமுகன் அன்றோ" (14 : 13 : 281)*

எனவும்,

"ஏறி லாதமர் பரமனே குழவியின் இயல்பாய்
ஆறு மாமுகங் கொண்டுதித் தானென்ப தல்லால்
வேறு செப்புதற் கியையுமோ?" (4 : 13 : 282)

எனவும் புகலுவன். வைணவசமயத் தலைமைக்கடவுளாம் திருமாலின் வாயிலாகவும் சைவசமயத்தில் சிவனோடொத்து முதன்மைபெறும் முருகனது முழுமுதற்றன்மையினைக் கவிஞர் சுட்டுவது குறிக்கத்தகும்.

## இ) பிரமன் கூற்றில்

சரவணப் பொய்கையில் கந்தனின் திருவிளையாடலைக் கண்ட பிரமன், 'சிறுகுழந்தையாகத் தோன்றும் இக்கடவுள் செய்யும் மாயைகள் யாவரும் புரிதல் தேற்றார். ஆதலால் இவன் ஒப்பற்ற சிவபெருமானேயாகும்' (1 : 11 : 125) என உரைப்பன்.

## ஈ) இந்திரன் கூற்றில்

முருகனது பேருருக்காட்சியில் திளைத்த இந்திரன்,

"நாரணன் மலரோன் பன்னாள் நாடவுந் தெரிவின் றாகிப்
பேரழல் உருவாய் நின்ற பிரான்திரு வடிவே போலுன்
சீருரு வுற்ற தம்மா" (1 : 14 : 97)

எனவுரைத்துச் சிவன், முருகன் இவ்விருவரின் ஒற்றுமைத்திறத்தைச் சுட்டுவன்.

## உ) வீரவாகு கூற்றில்

முருகவேளின் தூதுவனாக மகேந்திரம் சென்ற வீரவாகு, தன் தலைவனை இழித்துப் பேசிய சூரபன்மனிடம்,

"ஈச னேயவன் ஆடலால் மதலையாயினன்காண்
ஆசி லாவவன் அறுமுகத் துண்மையால் அறிநீ
பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்
தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்"

(3:12:129)

எனவுரைக்கும் பகுதி அவ்விருவருக்குமுள்ள வேறுபாடற்ற திறத்தைக் காட்டும்.

ஊ) அவுணர்கள் கூற்றில்

போர்க்களம் ஏகும் இரணியன் தன் தந்தையாம் சூரபன்மனுக்குத் தக்கன எடுத்துரைக்கையில், 'இந்திரன் முதலியோர் குறை தீர்ப்பான்வேண்டி, சிவனே குழவி போன்று அறுமுகங்கொண்டு வந்துளன்' (4:7:29) என அறைகுவன். தாரகன் முருகனைக் கண்டவளவில், 'கற்பனை கடந்த ஆதிக்கடவுளோ இவன்' (1:20:127) என்று மொழிகுவன். முருகனது பேருருக்காட்சி கண்டு தன் சிறுமையுணர்ந்த சூரபன்மன் 'கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரனைப் பாலன் என்று இகழ்ந்துரைத்தேன். அந்நாளில் இதனை உணர்ந்திலேன். மாலயன்தனக்கும் ஏனைவானவர்தமக்கும் யார்க்கும் மூல காரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியே' (4:13;433) என்றும் "இற்றையிப் பொழுதில் ஈசன் இவனெனுந் தன்மை கண்டேன்", (4:13:434) என்றும், "பங்கயன் முதலோர் காணாப் பரமனே யாகும் என்றார்; அங்கவர் மொழிந்த வாறுஞ் சரதமே ஆனதன்றே" (4:13:440) என்றும் உணர்ந்து கூறுவன். சிவன், முருகன் இவ்விருவருக்குமுள்ள வேறுபாடற்ற திறத்தைச் சுட்டி, முருகனை முழுமுதற் பொருளாக உயர்த்துவதற்குப் பகைமாந்தர்களும், எதிர்நிலைத் தலைவனும் பயன்படுத்தப்பெறுதல் கருதத்தக்கது.

எ) கவிக்கூற்றில்

கதைமாந்தர்மூலம் சிவனும் முருகனும் ஒருவரே என்ற கருத்தை வலியுறுத்தியதைப் போன்றே தம்கூற்றினாலும் அக்கருத்தை வெளிப்படையாகவும், உவமைமுகத்தானும் புலப்படுத்துவர் கச்சியப்பர்.

'அருவம் முதலிய பதியிலக்கணங்களையுடைய சோதிப்பிழம்பே (சிவன்) உலகைக் காக்கும்பொருட்டு ஆறுமுகமும் பன்னிரண்டு கரங்களும் கொண்டு சரவணத்தில் முருகக்கடவுளாக உதித்தனன்

(1:11:92) என்றும், 'மறைகளின் முடிவாலும் வாக்காலும் மனத்தாலும் அளக்கொணாது நிறைவுடன் யாண்டும் நின்றிடும் நிமலமூர்த்தியே (சிவன்) அறுமுகவுருவாய்த் தோன்றித் தாமரை மலரில் வீற்றிருந்தான்' (1:11:96) என்றும் வெளிப்படையாக உரைப்பர்.

'பெருநுக்கொண்ட திருமாலின் உள்ளச்சுடரில் திகழ்ந்திடும் சிவனைப்போல் தாரணி நடுவண் வைகும் சரவணப் பொய்கையின் கமலப்போதில் செவ்வேள் வீற்றுள்ளான்' (1:11:100) என்றும், 'விராட்புருடனுடைய இதயத் தாமரையில் சிவன் எழுந்தருளியதைப் போன்று குமரவேள் சரவணக்கமலத்தில் எழுந்தருளியுள்ளான் (1:11:101) என்றும், 'பிஞ்ஞகன் வதனம் ஒன்றில் கண்ணொரு மூன்றும் வைகும் காட்சிபோல் வள்ளியும் தெய்வயானையும் மருங்கில் மேவ முருகன் அருள்புரிந்திருந்தான்' (6:24:259) என்றும், 'சிவன் உமை இவ்விருவருக்கும் எதிரில் கந்தனும், தெய்வயானையும் மணக்கோலத்துடன் அமர்ந்திருந்த காட்சி எதிரெதிர் விம்பம் இலங்கியவா போல் இருந்தது' (5:2:237) என்றும், 'திருமால் மேகமாக மாறி முக்கட்கடவுளைப் பரித்ததைப்போல் சூரபன்மன் தோகையாக மாறி முருகவேளைச் சுமந்தான்' (4:13:502) என்றும் பாடும்பொழுது சிவனாகவே முருகனைக் காணும் கவிஞரின் உள்ளுணர்வை உணர்கின்றோம். 'மாறின்றி வைகும் பரமன் வடிவான செவ்வேள்' (1:20:153) என்றும், 'ஈச னெனவே இனிதருள்செய் துற்றனனே' (4:12:459) என்றும் குறிப்பிட்டு அவ்விருவருக்குமுள்ள வேறுபாடற்ற திறத்தைச் சுட்டுவர். சிவன் எழுந்தருளியிருக்கும் இடமாகவே முருகன் எழுந்தருளியுள்ள இடத்தைக் கவிஞர் காண்கின்றார் என்பதனைப் பாசறையில் முருகன், வீற்றிருக்குமிடத்தை 'சிற்சபை' (4:12:54) என்றும், 'மன்றம் (4:12:69) என்றும் சுட்டுதலால் உணர்கின்றோம். மன்றங்கள் தோறும் ஆடும் தந்தைக்கிணையாக முருகன் குன்றங்கள் தோறுமாடுவான் என்பதனை,

*"மன்றுதொ றாடிய வள்ளல் காமுறக்*
*குன்றுதொ றாடிய குமரன்"* (க. வா. 16

என்றும் குறிப்பிடுவர்.

தணிகைப்புராணம் பாடிய கச்சியப்பமுனிவர் சிவனுக்கும் முருகனுக்கும் உள்ள ஒற்றுமைத்திறத்தைத்,

"தனக்குத்தா னேமக னாகிய தத்துவன்
தனக்குத்தா னேபொரு தாவருங் குருவுமாய்த்
தனக்குத்தா னேயருட் டத்துவங் கேட்டலும்
தனக்குத்தா னிகரினான் தழங்கிநின் றாடினான்"

என வீராட்டகாசப் படலத்துள் குறிப்பிடுவர்.[3] பிற்காலத்தில் வாழ்ந்த குமரகுருபரர், இராமலிங்கர் போன்றோர் சிவனையும் முருகனையும் ஒன்றாய்க் கருதிச் சிவனுக்குக் கூறப்படும் இயல்புகளை முருகனுக்கும் ஏற்றிப்பாடுவர்.[4] இவ்வாறு பாடுதற்கு வழிவகுத்த பெருமை கச்சியப்பருக்கு உரியதென உணர்கின்றோம்

## 3. மெய்ப்பொருள் நிலையில் முழுமுதற்றன்மை

முழுமுதற்றன்மையுடைய இறைவன் இயல்புகளைச் சைவ மெய்ப்பொருள் நூல்கள் விரிவாக இயம்பும். கச்சியப்பர் முருகனை அத்தகு இயல்புகளுடையோனாகப் பாடி, சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாக உயர்த்தும் திறத்தினைக் காண்பாம்.

### அ) தன்னியல்பும், பொதுவியல்பும்

சைவசித்தாந்தத்தில் இறைவனுக்கு இருவகை நிலைகள் நவிலப்படும். அவை தன்னியல்பு (சொரூப இலக்கணம்), பொது வியல்பு (தடத்த இலக்கணம்) என்பன. தன்னியல்பு நிலையில் பெயர், குணம், குறி இவைகள் இல்லாதவனாய் மனம், வாக்கு, மெய் இம்மூன்றாலும் அறியப்படாதவனாய் விளங்குபவன் இறைவன். 'இருதிறனல்லது சிவசத்தாம்' என வரும் சிவஞானபோதம் ஆறாம் நூற்பாப்பகுதி இறைவனது சொரூப இலக்கணத்தைச் சுட்டுவதாகச் சிவஞான முனிவர் மொழிகுவர்.[5] கச்சியப்பர் முருகப்பெருமானின் தன்னியல்பு நிலையினை,

"ஊரி லான்குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரி லான்ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரி லான்உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்" (2:1:1)

என்றும்,

"இன்னமும் முனிவர் தேவர் யாவரும் இன்னயன் என்றே
உன்னருந் தலைமைத்தாகும் ஒருதனிக் குமரன்" (4:4:230)

என்றும் தம் கூற்றுக்களானும்,

"வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன்" (3:21:127)

என்று சிங்கமுகன் கூற்றாலும் புலப்படுத்துவர். எவரானும் அறிய முடியாது தன்னியல்பாய் உள்ள இறைவனே ஆன்மாக்களின் நல் வாழ்விற்காக அளவற்ற அன்பாலும் அருளாலும் தானாகவே பல படிகள் இறங்கிவந்து பெயரும் வடிவமும் (நாமரூபம்) பெறுவான். இந்நிலையினைத் 'தடத்தநிலை' என்று சுட்டுப.[7]

"அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்திபற"[8]

என்னும் திருவுந்தியார் கருத்தும் இவண் நினையத்தகும்.

"அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய" (1:11:92)

என வரும் முருகன் திருவவதாரத்தை விளக்கும் செய்யுளின் முன்னிரு அடிகளில் தன்னியல்பு நிலையினை உணர்த்தியவர், பின்னிரு அடிகளில் உயிர்கள் மீதுகொண்டுள்ள கருணைத் திறத்தாலும், உயிர்கள் நல்வாழ்வு பெற்றுய்ய வேண்டும் என்ற அருட்டிறத்தாலும் ஆறுமுகங்களும் பன்னிருகரங்களும் உடைய வடிவுடனும் முருகன் என்னும் பெயருடனும் தோன்றியதாகக் கூறி இறைவனுக்குரிய பொதுவியல்பு நிலையினையும் விளக்குவர்.

## ஆ) ஐந்தொழில் நிலை

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் சாத்திரநூலார் 'பஞ்சகிருத்தியம்' என்பர். சிவபெருமானது திருக்கூத்தின் கோலத்திற்கும், ஐந்தொழில் நடத்தும் குறிப்புண்டு என்பதனைத்,

> *'' தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்*
> *சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா*
> *ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி*
> *நான்ற மலர்ப்பதத்தே நாடு''*

என 'உண்மை விளக்கம்' விரிவாக எடுத்துரைக்கும்.

பிரணவப் பொருளறியாத நான்முகனைச் சிறையிலிட்டு முருகனே படைத்தல் தொழிலை மேற்கொள்ளுதல் படைத்தலையும், அவுணர்தம் கொடுமையினின்று தேவர்களை மீட்டல் காத்தலையும், அசுரரைத் தடிதல் அழித்தலையும், பேருருக் கொண்ட காலை சிறிது நல்லுணர்வு தந்து சூரன் உள்ளுணர்வினை அவன் உரையால் வெளிப்படச் செய்தபின்னர் அதனை மாற்றுதல் மறைத்தலையும், இறுதியில் சூரனைத் தூயனாக்கி ஆட்கொள்ளல் அருளலையும் புலப்படுத்தும் கதை நிகழ்வுகளாகும். 'சிறியதோர் ஆலம் வித்தில் யாவையும் ஒடுங்கிப் பின்தோன்றுதல் போல் முருகனிடத்தில் பல பொருளும் மேலைநாள் வந்து தோன்றியது' (3:21:125) என முருகனது படைத்தல் தொழிலைக் கதைமாந்தர் மூலமாகவும்

உணர்த்துவர். முக்கடவுளரும் முருகனே எனப் பலவிடங்களிலும் (3:12:135; 4:1:1; 4:13:461) சுட்டிவந்த கவிஞர், போர்க்களத்தில் விடுக்கும் அவன் கணைகளுக்கே முப்பெருங்கடவுளருக்குரிய முத்தொழில்களையும் இயற்றும் ஆற்றல் உண்டு என்பதனைச் சிங்கமுகன் கூற்றில்,

*"அறத்தை நல்கலின் அந்தணன் போல்வன அகிலத்*
*திறத்தை அன்பொடு போற்றலிற் செங்கண்மால் போல்வ*
*ஒறுத்து மன்னுயிர் உண்குறும் அவுணரை ஒருங்கே*
*இறுத்தல் செய்திடுந் தன்மையால் ஈசனே போல்வ"*

(4 : 12 : 384)

எனப் பாடுவர். தன்னருளினால் பிரமன், திருமால், உருத்திரன் மகேசுவரன், சதாசிவன் என்ற ஐந்துருவிலும் முருகன் வெளிப்படுவன் என்பதனைக் குமரகுருபரர், "தனாதருளின் பஞ்சவிதரூப பரசுகமாய்"[10] என்று கந்தர் கலிவெண்பாவில் சுட்டுவதும் நினையத் தகும்.

## இ) கருமேனி கழிக்கவந்த கருணைவடிவு

இறைவன் உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் விளங்குபவன் என்றும் இம்மூன்றும் 'நந்தம் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு'[11] என்றும் இறைவன் ஒருவனே மகேசுவரன் முதலிய ஒன்பது வகையாக விளங்கி 'நவந்தருபேத'[12] மாகக் காட்சி யளிப்பன் என்றும் சிவஞானசித்தியார் புகலும். முருகன் உயிர்கள் மாட்டுக் கொண்ட கருணைத் திறத்தால் உரு, அரு, அருவுரு என்னும் மூவுருவாக விளங்குபவன் என்பதனை,

*"அருவு மாகுவன் உருவமு மாகுவன் அருவும்*
*உருவு மில்லதோர் தன்மையும் ஆகுவன்"* (3 : 21 : 126)

எனச் சிங்கமுகன் கூற்றில் மொழிகுவர். "ஏகத்து உருவும் அருவும் உருவுருவமாகிப் பருவ வடிவம் பலவாய்" விளங்குபவன் முருகன்[13] எனக் குமரகுருபரர்மொழிவதும் இவண் கருதத்தக்கது.

## ஈ) அருவியல்பு

இறைவன் அருள்மயமானவன். அதனையே அருட்சத்தி என்றும் சிவசத்தி என்றும் சைவசித்தாந்தத்தில் குறிப்பிடுவர்.[14] அறிவுக்கெட்டா நிலையிற் திகழும் இறைவன் உயிர்கட்கு அருளும் நோக்கால் தானே இறங்கிவந்து அருள்புரிதலைத் 'திருவருட்பயன்' விளக்கமாக மொழியும்.[15] சிவபெருமானே உலகில் குருவடிவில் எழுந்தருளி பக்குவான்மாக்களுக்கு அருள்புரிவன் என்பதனை 'ஐம்புலவேடரின் அயர்ந்தனை' என வரும் சிவஞானபோதம் எட்டாம் நூற்பா உணர்த்தும்.[16] இத்தகு அருட்குணங்கள் அனைத்தையும் தன்னகத்துக் கொண்டு முருகன் விளங்குதலைக் கந்தபுராணம் பரக்கப் பேசும்.

"ஆதலின் நமது சத்தி அறுமுகன்" (1:14:19) என்ற சிவன் கூற்றினால் முருகவேள் அருட்சத்திவடிவினன் என்பது போதரும். "தஞ்சமின்றியே தனித்தயர் சிறுவரைத் தழுவி அஞ்சலென்று போற்றிட வரும் ஈன்ற யாய் அனையான்" (3:12:22), "கருணை கொண்டிருந்த வள்ளல்" (4:7:39), "வற்றா அருள்சேர் குமரேசன்" (6:24:266) என முருகனைச் சுட்டும் தொடர்கள் அருள்வடிவினன் என்பதனை வலியுறுத்தும் சில சான்றுகளாகும். பின்னிணைப்பிலுள்ள 'முருகன் திருப்பெயர்கள்' அட்டவணை மேலும் விளக்கந்தரும். முருகன் குருவாய் வந்து உயிர்கட்கு அருளிய திறம் வள்ளியம்மை திருமணப்படலத்தின் மெய்ப்பொருட் கருத்தாக மிளிர்வது 'சமயக் கருத்துக்கள்' என்னும் பகுதியில் தெளிவுறுத்தப்பெற்றது.

> "அருபரத் தொருவன் அவனியில் வந்து
> குருபரனாகி யருளிய பெருமையை"[17]

என்ற திருவாசக அடிகளும் ஈண்டு ஒப்பிட்டுவத்தற்குரியது.

## உ) பிற இயல்புகள்

'சங்கார காரணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர் போல் அவ்வுயிர்களேயாய் பிரிவின்றி நிற்பன்' என்ற இறையியல்பினைச் சிவஞானபோதம் இரண்டாம் நூற்பா மொழியும்.[1]

ஓங்கார மூலப்பொருளாய்த் திகழும் குமரேசன் உயிர்தோறும் தங்கியிருந்து அருள் புரிகுவன் என்பதனை நூலினகத்தே பல்வேறிடங்களில் குறிப்பிடுவர். "ஓங்கார மூலப் பொருளாய் உயிர்தோறுமென்றும் நீங்காதமருங் குமரேசன்" (3:11:4) என்றும், "உயிர்கட்கெல்லாம் ஒன்றிய உயிருமாகி உணர்வுமாய் இருந்தமூர்த்தி" (1:25:29) என்றும் முருகனைச் சுட்டி அவ்விறையியல்பை உணர்த்துவர்.

இறைவன் பண்புகள் எட்டென மெய்ப்பொருள் நூல்கள் நுவலும். தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை எட்டும் சைவாகமத்துட் கூறப்பட்ட இறைப் பண்பாகும்.[19] இவ்வெண் குணங்களையும் ஆறு குணங்களில் அடக்கி இறைவனைத் 'தூய அறுகுணன்' (சுத்தஷட் குண்ணியன்) என்றலும் வேதாகம மரபாகும்.[20] இவ்வறு குணங்களையும் முருகன் ஆறு முகங்களாகக் கொண்டு விளங்குதலை,

> *"ஏவர்தம் பாலு மின்றி யெல்லைதீர் அமலற் குள்ள*
> *மூவிரு குணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்ததென்னப்*
> *பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகும் ஐயன்*
> *ஆவிகள் அருளு மாற்றால் அறுமுகங் கொண்டா னன்றே"*
> *(1 : 11 : 94)*

எனக் கச்சியப்பர் மொழிகுவர். அன்றியும் நூலினகத்தே முருகனைச் சுட்டும் பொழுதும் இப்பண்புகளை இணைத்தே பாடுவது இவர்தம் இயல்பாகும். 'தூயன்' (4 : 12 : 398), 'வரம்பிலா அறிவன்' (1 : 11 : 124), 'முற்றுணர்ந்துளான்' (5 : 1 : 33), 'யாரினும் உயர்ந்திடு பரஞ்சுடர் ஒருவன்' (3 : 10 : 17), 'யாருங் காணொணா வள்ளல்' (6 : 24 : 10), 'நீண்டவருள் செய்திடு நெடுந்தகை' (4 : 16 : 26), 'ஊழிநாயகன்' (6 : 24 : 129), 'எங்குமாகி யிருந்திடு நாயகன்' (4: 5: 40) எனக் கந்தனைச் சுட்டும் பகுதிகள் முருகன் அவ்வறு குணங்கொண்டோன் என்பதனைக் காட்டும்.

உயிர்கட்கு இருவினையொப்பு ஏற்படின் சிவசத்தித் தோய்வினால் குருவருள் பெற்று, ஞானயோகத்தைக் குறுகி, மும்மலம் அறுத்து, உயிர்கள் முக்தி பெறும் என இறைவனருளால் உயிர்கள் எய்தும் மேனிலையைச் சித்தியார் விளக்கும்.[21] முருகன் முழுமுதற் பொருளே என்று சூரபன்மனிடம் வலியுறுத்தும் வீரவாகு,

*" ஈட்டு மன்னுயிர் எவற்றிற்கும் இருவினைப் பயனைக்*
*கூட்டு வானவன் ஆங்கவை துலையெனக் கூடின்*
*வேட்ட மேனிலைக் கதிபுரி வானவன்"* (3:12:136)

என உரைக்கும் பகுதி மேற்காணும் சித்தியார் கருத்துடன் இணைந்து செல்வது கருதத்தக்கது.

முழுமுதற்றன்மையுடைய முருகனுக்கு மெய்ப்பொருள் நூல்கள் நவிலும் சில இறையியல்புகளை ஏற்றி மொழியினும், முருகன் தெய்வத்தின் பூரண இலக்கணமுடையவன் என்பதே கச்சியப்பரின் கருத்தாகக் கொள்ளல்வேண்டும். " 'முருகன்' என்னும் பதத்திற்கு அழகு, இளமை முதலிய பல அர்த்தங்கள் இருப்பினும் தெய்வத்தின் பூரண இலக்கணத்தையுடையவர் என்பதே விசேஷப் பொருளாம்"[22] என்று ஞானியார் சுவாமிகள் மொழியுங் கருத்தும் நினையத்தகும்.

## 4. முருகனே சிவன்

சிவன், முருகன் இவ்விருவருக்குமுள்ள ஒற்றுமைத் திறத்தைப் புலப்படுத்தியும், மெய்ப்பொருள்நிலையில் பேசப்படும் பரசிவத்தினியல்புகளைக் கந்தனுக்கு ஏற்றி மொழிந்தும் முருகனது முழுமுதற்றன்மையினை படிப்படியாக வளர்த்துவந்த புலவர், இறுதியில் சிவனளிக்கும் வீடுபேறு முதலிய அனைத்தையும் முருகனே நல்குதலால் பிற தெய்வங்களைத் தொழாது முருகனையே தொழுது உயிர்கள் உய்வதனைக் காட்டியும், முருகனை வழிபடின் அது சிவனை வழிபடுதலுக்குச் சமம் என்பதனை உணர்த்தியும் முருகனே சிவன் என்று நிறுவியுள்ளமையினைக் காண்பாம்.

## அ) முருகன் முதன்மை பெறுதல்

தெய்வயானையை மணந்த முருகன் தன் பெற்றோரின் திருவடிகளில் மனைவியுடன் வீழ்ந்து பணிந்தான் (5:2:254). அடித்தலத்தில் வீழும் மக்களிருவரையும் ஆர்வத்துடன் எடுத்தணைத்து அருள்செய்து பாங்கரில் இருத்தி முடித்தலத்தினில் உயிர்த்து 'உமக்கு எம்முறும் முதன்மை கொடுத்தும்' (5:2:255) என்று சிவனும் உமையும் புகலுவதால் அவ்விருவரும் தமக்குள்ள முதன்மையினை முருகனுக்கு அளித்தல் பெறப்படும். மலைமடந்தையும் இறைவனும் அவ்விருவருக்கும் தலைமைசெய்து அருள்புரிந்தவுடன் மணச்சாலையிலிருந்த பிரமன் முதலிய அமரரும் முனிவரும் அவரடி (சிவன் திருவடி) முடிமிசைக் கொள்ளுதல் (5:2:256) பிற கடவுளர் அம்முதன்மைனைப் பத்தியுடன் ஏற்றுக்கொண்ட பாங்கினையும், சிவனும் உமையும் மறைந்தகாலை அவ்விருவரும் அமர்ந்திருந்த அப்பீடத்தில் குமரநாயகன் தெய்வதக்களிற்றொடு அமர தேவர்கள் மகிழ்சிறந்து அன்னார் கமலமெல்லடி தொழுது களிப்பால் வாழ்த்துதல் (5:2:260) ஏற்றுக்கொண்ட தலைமைக்கு அடிபணிந்தொழுகும் அக்கடவுளர் பண்பினையும் காட்டும். சிவனும் உமையும் மறைந்ததால் துயரக்கடலில் மூழ்கிய தேவர்கள் முருகனையும் தெய்வயானையையும் கண்டு அக்கடலினின்றும் கரையேறியவர்கள் போல் துயரொழிந்தார் (5:2:259) எனக் கவிஞர் மொழிதல் முருகனையே சிவனாகக் கண்டு அமைதியுறும் தேவர்களின் உளப்பாங்கினைப் புலப்படுத்தும். சைவசமய முழுமுதற்கடவுளாம் சிவன் தமக்குள்ள முதன்மையினை முருகனுக்கு வழங்குதல், பிற கடவுளர் அதனை ஏற்றுச் செயற்படல் முதலிய செய்திகள் முதனூலில் இல்லை என்பதும் கச்சியப்பர் படைத்துக்கொண்டவை என்பதும் குறிப்பிடத்தக்கன.

முருகனது முதன்மையினையும், சிறப்புக்களையும் சைவக் கடவுளர் குடும்பத்தில் ஒருவராகிய விநாயகர் வாயிலாகவும் உணர்த்துவர். தான் உயர்வு பெறுவான்வேண்டி ஏற்ற விரதம் ஒன்றினைக் கூறுமாறு தன்னிடம் வேண்டிய நாரதருக்கு, 'ஆறுமுகனை வழிபாடு செய்து கார்த்திகை விரதமிருப்பின் நீ எண்ணியது திண்ணமாகப்

பெறுதி' (6:23:10) என விநாயகர் புகன்றதாக உரைப்பர். பழந் தமிழ்க் கடவுளாம் முருகன், பண்பாட்டுக் கலப்புடைய சைவசமய உலகில் முதன்மைபெறுதலை விநாயகராலும் இசைவீடு பெறுமாறு அமைத்துள்ளமை கருதத்தக்கது.

வள்ளியை மணந்த ஞான்று மலைக்குறவர் உவந்தளித்த தேன், தினை முதலிய சில்லுணவினை முருகன் அயின்றகாலை, அச்சில்லுணா திருமால் முதலிய தேவர்கள்பாலும் முனிவர்களிடத்தும் மற்றைச் சராசரங்களிடத்தும் எங்குஞ் சார்ந்தது (6:24:209) எனக் குறிப்பிட்டு எங்கும் நிறைந்த முருகனே அனைவருக்கும் முதன் மையுடையோன் என்பதனை வலியுறுத்துவர். "அவனே மகேசுரன், அவனே உமை; அவனே விநாயகன்; அவனே ஸ்கந்தன்" எனப் பஞ்சருத்திரங்களுள் ஒன்றாய அதர்வசிரசு என்னுஞ் சாகை சுட்டு தலும்[23] இவண் கருதத்தகுவது.

## ஆ) மூந்துறு தெய்வம்

சூரபன்மன் தோல்வியுற்று மறைந்த பின்னர் இந்திரன் முதலி யோர்மருங்கிருந்து வழுத்த முருகன் பாசறைக்கண் அரியணையில் எழுந்தருளியிருக்கும் பாங்கினைப்,

> "*பாச றைப்புகு குமரவேள் பாரிடப் பகுதி*
> *ஆச றப்புனை ஆவணச் சூழல்போய் அமர*
> *வாச வத்தனிக் கடவுளா தியர்புடை வழுத்த*
> *ஈச னிற்சிறந் தரியணை தன்னில்வீற் றிருந்தான்*"
>
> (4:4:379)

எனப் பாடுவர். ஈசனைப்போல் சிறந்து என ஒப்புப்பொருளில் கூறாது 'ஈசனிற் சிறந்து' என உறழ்ச்சிப் பொருளில் நவிலுதல் குறிக்கத்தக்கது.

மகேந்திரச் சிறையில் வாடி வருந்தும் சயந்தன், சிவனைத் துதித்துத் தன் துன்பத்தைப் போக்கியருள வேண்டுதலை இருபத்திரண்டு பாக்களில் தேவாரத் தோய்வுடன் பாடுவர் ஆசிரியர். அப்பொழுது, 'தஞ்சமின்றித் தனித்தயர் சிறுவரைத் தழுவி அஞ்சலென்று போற்றிட வரும் ஈன்ற யாயனையானா'கிய குமரவேள் அச்சயந்தன் கனவில் தோன்றி இன்னருள்புரிந்ததாக மொழிகுவர் (3:10:3). தாதையை வேண்டத் தனயன் தோன்றிய நிகழ்ச்சி உயிர்கட்கு அருள் வழங்குதலில் தந்தையினும் முந்துறு தெய்வமாக முருகன் விளங்குதலை எடுத்துக்காட்டும்.

> *"கதறும் அடியரார் தமக்கெனாளுமெ*
> *உதவ விரைவிலே செலுத்து மாபல*
> *கனக மயூரவா கனத்து லாவிய புயவீரா"*[24]

என அடியவர்க்கு அருள முந்துறும் முருகனியல்புகளைக் குறிப்பிடும் அருணகிரியார் வாக்கும் இவண் நினையத்தகும்.

## இ) முருகனுக்கே அடிமை

சூரபன்மனைத் தடிந்து தம்மைக்காத்த முருகனைத் திருமால் முதலியோரும் பிற தேவர்களும்,

> *"ஈண்டே எமருக் கிடர்செய் அவுணரெலாம்*
> *மாண்டே விளியும் வகைபுரிந்து காத்தனையால்*
> *வேண்டேம் இனியாதும் மேலாய நின்கழற்கே*
> *பூண்டேந் தொழும்பு புகழேம் பிறர்தமையே"*
>
> (4:14:8)

என்று போற்றுவர். சிவனை ஏத்தித் தொழுதலைத் தம் கடனாகக் கொண்டொழுகிய தேவர்கள் (1:5:4), அவ்வேத்துதல் மூலமே தம் குறை நீங்க முருகனைச் சிவன்பால் பெற்ற தேவர்கள், 'முருகனை

யன்றிப் புகழேம் பிறர் தம்மை' என்னும்பொழுது சிவனையும் மறக்கும் போக்குக் காணப்படுதல் கருதத்தக்கது. சிவனுக்கும் முருகனுக்கும் வேறுபாடின்மையால் முருகனைப் புகழின் அது சிவனுக்குமாகும் என்ற கருத்தில் அவர்கள் அவ்வாறு கூறியதாகக் கொள்ளுதலே ஏற்புடையதாகும். குமரக்கடவுளை வழிபடுவோர் சிவனை வழிபட்டவராவர் எனச் சுருதிகள் கூறுவதும்[25] இவண் நினையத் தகுவது. அவ்வாறு கொள்ளின் 'சிவனே முருகன்' என்ற தொடக்கநிலையிலிருந்து வளர்ந்து 'முருகனே சிவன்' என்ற பெரு நிலைக்கு முருகனை உயர்த்துதல் ஆசிரியரின் உட்கிடையாகக் கருதலாம்.

## முடிவுரை

சிவனைக் கந்தபுராணக் கதைத்தலைவனாகக் கொள்ளுமாறு சில கதைநிகழ்ச்சிகள் காணப்படினும் கந்தனே கதைத்தலைமைக்கு உரிமையுடையவன் என்பது ஆசிரியர்தம் நோக்கமாகும். சிவனும் முருகனும் இறைநிலையில் வேறுபாடற்றவர்கள் என்னும் கருத்தைக் கதைமாந்தர் கூற்றுக்களானும், கவிக்கூற்றானும் வலியுறுத்தியும், மெய்ப்பொருள் நூலோர் கூறும் இறையியல்புகளை முருகனுக்கு ஏற்றியும் முருகனது முழுமுதற்றன்மையினை நிறுவுவர். சைவ நெறிக்கு மாறின்றிச் சிவனிடமிருந்தே முருகன் முதன்மை பெற்றுச் சைவசமயத்தில் முழுமுதற்கடவுளாதலையும், பிற கடவுளர் அதனை ஏற்றுப் பணிந்து முருகனைப் போற்றிப் பரவுதலையும், உயிர்கட்கு) அருள் வழங்குதலில் சிவனைக்காட்டிலும் முந்துறுதெய்வமாக முருகன் திகழ்தலையும் விளக்குவர். 'சிவனே முருகன்' என்ற தொடக்க நிலையிலிருந்து வளர்ந்து 'முருகனே சிவன்' என்னும் பெருநிலைக்கு முருகனை உயர்த்துவர்.

## மேற்கோள்


1. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் பண்பாடும், பக். 22-23.
2. 'கந்தபுராணமும் முன்னூல்களும்' என்னும் பகுதியில் விளக்கப் பட்டுள்ளது.
3. கச்சியப்பமுனிவர், தணிகைப்புராணம், ப. 250.
4. SP. Annamalai, The Life and Teachings of Saint Rama lingar, P.16.
5. கலைக்களஞ்சியம் — தொகுதி 5, ப. 239.
க. வச்சிரவேல் முதலியார், 'சைவம்', சைவமும் வைணவமும், பக். 60-61.
6. சிவஞானபோதமும் சிவஞானமுனிவர் அருளிச்செய்த சிற்று ரையும், ப. 77.
7. முத்துராமன், சைவசித்தாந்தம், ப. 84.
8. திருவியலூர் உய்யவந்த தேவநாயனார், திருவுந்தியார், செ.1.
9. திருவதிகை மனவாசகங் கடந்தார், உண்மை விளக்கம், செ.35.
10. குமரகுருபரர், குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, செ. 1 : 5-6.
11. சிவஞான சித்தியார் சுபக்கம், சூ. 1 : 55.
12. ..................., சூ. 2 : 74.
13. குமரகுருபரர், குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, செ. 1 : 10-11
14. முத்துராமன், சைவ சித்தாந்தம், ப. 97.
15. உமாபதி சிவாசாரியார், திருவருட்பயன், அருளுருநிலை, செ.5.
16. சிவஞானபோதமும் சிவஞானமுனிவர் அருளிச்செய்த சிற்று ரையும், ப. 100.
17. திருவாசகம், போற்றித் திருவகவல், 75-76.
18. சிவஞானபோதமும் சிவஞானமுனிவர் அருளிச்செய்த சிற்று ரையும். ப, 21.

19. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், ப. 6.
20. க. வச்சிரவேல் முதலியார், 'சைவம்', சைவமும் வைணவமும், ப. 58.
21. சிவஞான சித்தியார் சுபக்கம், சூ. 4 : 40.
22. ஞானியார் சுவாமிகள், 'முருகன் பெருமை', திருத்தணிகாசல ஷேத்திர மகிமை, ப. 36.
23. நா. கதிரைவேற்பிள்ளை, சுப்பிரமணிய பராக்கிரமம், ப. 6.
24. அருணகிரிநாதசுவாமிகள் அருளிச்செய்த திருமுறைத் திரட்டு காஞ்சி நாகலிங்க முனிவர், (ப. ஆ.), ப. 11.
25. நா. கதிரைவேற்பிள்ளை, சுப்பிரமணிய பராக்கிரமம், ப. 7.

# முடிவுரை

முருகக்கடவுளின் புராணக்கூறுகள் சங்ககால முதல் கந்த புராணக்காலம் வரை படிப்படியாக வளர்ந்து வந்துள்ளன. திரு முருகாற்றுப்படை, பரிபாடற் காலங்களில் முருகன் பெற்றிருந்த தலைமையினை நாயன்மார் காலங்களில் சிவன் பெற்றுத் திகழினும் தமிழ்ப் பழங்குடிமக்களிடையே முருகனது தலைமை குறையவில்லை என்பதனைத் திருமுறைகளின் சான்று கொண்டே தெளியமுடியும். பத்தியின் மூலமாகத் தமிழ் மக்களின் எண்ணத்தை ஈர்க்கக் கருதிய நாயன்மார்கள் சிவனது புராணக்கூறுகளைக் காப்பியங்களி லிருந்தும் புராணங்களிலிருந்தும் எடுத்தாளும்பொழுது அங்குள்ள உயர்நிலையை மட்டுமே சிறப்பித்துப் பாடுதற்போல் சைவ நாயன் மார் வகுத்த தடத்திற்சென்று முருகபத்தியை வளர்க்க விழையும் கச்சியப்பர், முன்னூல்களில் முருகனது முழுமுதற்றன்மைக்கு ஏற்றந்தரும் வகையிலுள்ள புராணக்கூறுகளை மட்டும் தழுவிக் கொண்டுள்ளார். ஒன்பதாம் திருமுறையிலும் பதினொராம் திரு முறையிலும் முருகனைப் போற்றும் பாக்கள் இடம்பெற்றிருத்தலும், கல்லாடத்தில் முருகனது புராணக்கூறுகள் மிகுதியாக வளர்ச்சி பெற்றிருத்தலும் மீண்டும் தமிழுலகில் முருகனுக்குத் தலைமை அரும்புதலை உணர்த்தும் அடையாளங்களாகக் கருதலாம்.

கச்சியப்பர் வடமொழிக் கந்தபுராணத்துள் தென்னகத்துப் படியினை (South Indian Text) முதனூலாகக் கொள்ளினும் காப்பிய மரபு, முருகன் தமிழ்க்கடவுள், முருகன் முழுமுதற்றன்மை வேலின் தெய்வத்தன்மை, போன்ற காரணங்கட்காக முதனூ லிலிருந்து வேறுபடுதலுடன் முதனூல் நுவலும் சில செய்தி களைப் பெருக்கியும், விடுத்தும், படைத்தும் தமிழுலகிற்கும் தமிழுள்ளத்திற்கும் பொருந்துமாறு தம் நூலை யாத்துள்ளார்.

பல்லவர்கள் சைவசமயத்தைச் சார்ந்திருப்பினும் முருகக் கடவுளை முற்றிலும் ஒதுக்காது சோமாக்கந்த வடிவத்தை போற்றி யமையும், குறிப்பிட்ட சில பல்லவ வேந்தர்கள் முருகபத்தி உடைய

வராய்த் திகழ்ந்தமையும், பல்லவர் காலத்தில் முருக கார்த்திகேய வழிபாடு முழுமையாக இணைந்தமையும் வரலாற்றுச் சான்றுகளால் உணர்கின்றோம். வட நாட்டில் குப்தர்கள் காலத்தில் வடமொழிப் புராணங்கள் ஒழுங்குறுத்தப் பெற்றுத் தொகுக்கப்பட்டது போல் வடமொழிச்செல்வாக்கு ஓங்கியிருந்த பல்லவர் காலத்தில் தென்னாட்டில் நிலவிய முருகனது தொல்கதைகளையும் இணைத்து வடமொழிக் கந்தபுராணம் ஒழுங்குபடுத்தப்பெற்றுத் தொகுக்கப் பெற்றிருக்கலாம். பின்னர்த் தோன்றிய தமிழ்க் கந்தபுராணத்துள் முருகனது புராணக்கூறுகள் பரிபாடலைக் காட்டினும் செம்மையுற அமைந்திருத்தல் இக்கருத்திற்கு மேலும் அரண் செய்யும். பல்லவரை அடுத்துத் தமிழகத்தைச் சிறப்புடன் ஆண்ட சோழர்களும் பாண்டியர்களும் சிவனை வழிபட்டதோடு முருகவழிபாட்டிலும் ஈடுபட்டிருந்தமையினைக் கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன. அப்பேரரசுகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் முகமதியர் படையெடுப்பால் தமிழகத்தில் ஏற்பட்ட பண்பாட்டுத் தேக்கம் தமிழர்களை விழிப்புணர்ச்சி பெறச்செய்து மீண்டும் முருகவழிபாடு ஓங்கி வளர வாய்ப்பளித்தது. இத்தகு காலச் சூழ்நிலையில்தான் முருகனைப் பற்றிய ஒரு பெருங்காவியம் எழுந்தது.

முந்து தமிழ்க்காப்பிய நெறிகளையும் தண்டியாசிரியரின் காப்பிய இலக்கணத்தையும் உளத்திற்கொண்டு தம் நூலை யாத்த கச்சியப்பர் புராணக்கூறுகளையும் காப்பியச்சுவை குன்றாவகையில் தழுவிக்கொள்வர். கதைக்கு மூலம் வடமொழியாயினும் கதைமேலெழுந்த காப்பியக் கட்டிடத்திற்குத் தமிழ்க்காப்பிய மரபினையே முதலாகக் கொண்டமை குறிக்கத்தகும். முருகனை முழுமுதற்பொருளாகக் காட்டும் ஆசிரியரின் பெருநோக்கத்திற்குத் துணையாக ஊழினை இருப்புநிலையாகவும் தவத்தினை வளர்ச்சி நிலையாகவும் ஆண்டவன் அருட்டிறத்தை விடுதலை நிலையாகவும் கொண்டு காப்பியப் பாவிகம் புலப்படும் வண்ணம் கந்தபுராணத்தைப் படைத்துள்ளார். இப்புராணத்தில் அல்லியல்புடைய கதைமாந்தர்களே மிகுதியும் பிறலால் காப்பியக்கூறுகளுள் ஒன்றெனக் கருதப்

பெறும் மீவியல் நிகழ்ச்சிகளைப் பயன்கொள்வதில் கச்சியப்பர் பிற தமிழ்க்காப்பியங்களினின்றும் வேறுபடுவர். காப்பியத்தின் பாவிகம், கதைநீட்சி, முருகனது முழுமுதற்றன்மை, பத்தியுணர்வு முதலியவற்றை வலியுறுத்த ஆசிரியர் மீவியற்கூறுகளை மிகுதியும் பயன்படுத்தியுள்ளார்.

உணர்ச்சிக்கூறாம் பத்நித்திறத்தையும், செயற்கூறாம் வழி பாட்டு நெறிகளையும், அறிவுக்கூறாம் மெய்ப்பொருட் கருத்துக் களையும் கதைமாந்தர் வாயிலாகவும், கவிக்கூற்றானும், கதை அமைப்பாலும், கதைநிகழ்ச்சிகளானும் தெளிவாக உணர்த்தி யுள்ளார். பிற சமயங்களாகிய உலோகாயதம், மாயாவாதம், மீமாம் சம் முதலியவற்றின் சிறப்பின்மையினைக் கதை நிகழ்ச்சிகளின் வாயி லாக ஆங்காங்கே சுட்டிச்செல்வர். வேதாந்தப்பள்ளியில் பயிலும் நன் மாணாக்கனாகவும், அக்கொள்கையினைத் தன் வாழ்க்கையில் அழுந்தக் கடைப்பிடித்தொழுகுபவனாகவும் சூரபன்மனைப் படைத் துக்காட்டி, இறுதியில் உறுதிபெற அக்கொள்கை அவனுக்குத் துணை புரியவில்லை என்பதனையும் கதைப்போக்கால் உணர்த்தி, சைவ சித்தாந்தநெறியே பிறநெறிகளினும் விழுமியது என்பதனை வலியுறுத்துவர்.

தமிழ் இலக்கிய மரபுகளாம் அகம், புற மரபுகளில் முன்னதைத் தம் நூலுள் பெரிதும் போற்றுவர். அவர்காலத்துப் பொதுவாக நிலவிய பொருள்நூற்கொள்கையினைப் போற்றுவதுடன் சிலவிடங்களில் உரையாசிரியர்களின் கருத்துக்களையும் தழுவிச் செல்வர். வள்ளித் திருமண நிகழ்ச்சியை அகமரபாம் களவியல் வழிநின்று சிறப்பாகப் பாடியிருப்பினும், களவு நெறியைப் ‘பழிநெறி’ எனக் குறவர் கூற்றில் சுட்டுதலால் அந்நெறியினும் கரணமுறை யிலமைந்த கற்பியல் நெறியே விழுப்பமுடையதென்பது ஆசிரியரின் உட்கிடக்கையென உணர்கின்றோம். தெய்வக்கதையினைத் தமிழில் படைக்கும்பொழுது அகமரபில் சிலமாற்றங்களை ஆசிரியர் மேற் கொண்டுள்ளமை குறிக்கத்தக்கது. காப்பியக் கவிஞர்களின் மர

பினைத் தழுவித் தம் புலமைநலன் தோன்ற பல்துறைக் கருத்துக் களைப் புராணத்துள் உரிய இடங்களில் விளக்கிச் செல்வதும் சங்கச் சான்றோர் நெறியினைப் போற்றி வடமொழிச் சொற்களை இயன்றளவு தமிழ்ப்படுத்தி வழங்குதலும் இவரதியல்பாகும். பிறந்த நாட்டின்மீதும் பேசும் மொழியின்பாலும் தாம் கொண்டுள்ள பற்றினை ஏற்ற இடங்களில் உரியவாறு வெளிப்படுத்துவர்.

முருகனது எழில்மிகு தோற்றங்களைச் சங்கப்புலவர் நெறியில் இயற்கையழகுடன் ஒப்பிட்டுவக்கும் கச்சியப்பர், கதைப்போக்கில் அக்கடவுளின் தோற்றப்பொலிவினைப் பத்தியுணர்வுடன் வருணிக்கு மிடங்களில், பிரதிட்டை முறைகளின் அடிப்படையில் முருகனது திருவடிவங்களை விளக்கும் குமாரதந்திரம், ஸ்ரீதத்துவநிதி முதலிய சிற்பநூலுணர்வு புலப்படும் வண்ணம் பாடுவர். இந்திய நாட்டில் வேறு பிற பகுதிகளில் காணப்படாமல் தென்னகத்தில் மட்டுமே காணப்படும் 'உமை-முருகு—இறையவர்' (சோமாக்கந்த வடிவம்) தோற்றமும், ஆறுமுகமும் பன்னிருகரமும் கொண்ட வடிவமும் கச்சியப்பரைப் பெரிதும் கவர்ந்துள்ளமையினை அகச்சான்றுகளால் உணர்க்கின்றோம். முருகன் கரத்திலங்கும் வேலினைத் தமிழ்மரபின் வண்ணம் 'உடம்பிடித்தெய்வ'மாகப் போற்றுவதுடன் முருகனாகவே அதனைப் படைத்துக்காட்டிப் பழந்தமிழகத்தில் நிலவிய வேல் வழிபாட்டினை நிறுவியுள்ளார். சிவன் முதல் இந்திரன் வரையுள்ள அனைத்துத் தெய்வங்களின் செயற்றிறன்களையும் முருகனின் தலைமையை உயர்த்தும் வண்ணம் விவரிப்பர். முருகன் தாய்த் தெய்வத்தினின்றும் பிறந்ததாகக் கூறப்படும் தமிழ்நாட்டிற்கே உரிய செய்தியைப் பலவிடங்களில் வற்புறுத்திப் பழந்தமிழ் மரபினைப் போற்றுவர்.

முழுமுதற்பொருளாக முருகனைக் காட்டுதலே கச்சியப்பரின் இதயநாதமாக ஒலிப்பினும் அக்கடவுளின் வரலாறு காப்பியப்படும் பொழுது மனிதப்பண்புகளும் அவன்மீது படிகின்றன. அதனால் வீரம்

சீற்றம், சூழ்வாரைச் சூழ்ந்து செயற்படல், புறத்துறையிலும் அற நெறி போற்றுதல் முதலிய வேந்தியல்புகளையும், காதலுணர்வுக்கு அடிமையாதல், உலகியலுக்கு உட்பட்டொழுகுதல், பிழைத்தோரை மன்னித்தல் முதலிய மக்கட் பண்புகளையும் அவன் கொண்டு திகழ் தலை முழுமுதற்றன்மைக்கு ஊறு நேராவண்ணம் படைத்துக் காட்டுவர்.

நாயன்மார்கள் வளர்த்த சைவசமயத்திற்கும், சிவனது தலைமைக்கும் மாறுபடாமல் முருகனை மீண்டும் முழுமுதற்கடவு ளாக உயர்த்திக் காட்டுதலே ஆசிரியரின் பெருநோக்கமாகும்' அதனால் சிவனும் முருகனும் இறைநிலையில் வேறுபாடற்றவர்கள் என்னும் கருத்தை வலியுறுத்தியும், மெய்ப்பொருள் நூலோர் நவிலும் இறையியல்புகளை முருகனுக்கு ஏற்றி மொழிந்தும், சைவநெறிக்கு மாறின்றிச் சிவனிடமிருந்தே முருகன் முதன்மை பெற்றுச் சைவ சமயத்தின் முழுமுதற்கடவுளாகச் சிறத்தலைப் படைத்துக்காட்டியும், உயிர்கட்கு அருள் வழங்குதலில் சிவனைக் காட்டிலும் முந்துறு தெய்வமாக முருகன் செயற்படுதலை விளக்கியும் முருகனது முழு முதற்றன்மையை நிறுவுவர். 'சிவனே முருகன்' என்ற தொடக்க நிலையிலிருந்து வளர்ந்து 'முருகனே சிவன்' என்னும் பெரு நிலைக்கு முருகனை உயர்த்திக் காட்டியுள்ளார்.

திருமுறைகள் சிவனுக்கும் ஆழ்வார்களின் பாசுரங்கள் திரு மாலுக்கும் முதன்மை தருதல்போல் அருணகிரியாரின் திருப்புகழ் முருகனுக்கு முதன்மையளித்தல் நாமறிந்த செய்தி. அருணகிரியாரின் நெறியினைப் பின்பற்றி முருகனடியார் பலர் (குமரகுருபரர், தண்ட பாணி சுவாமிகள், இராமலிங்க அடிகள், பாம்பனடிகள் போன் றோர்) முருகனை முழுமுதற்பொருளாகக் கொண்டு தமிழ்ப்பாக் களில் போற்றியுள்ளனர். திருமுருகாற்றுப்படை, பரிபாடற்காலங் களில் முருகனுக்கிருந்த முதன்மையினை மீண்டும் சைவநெறிக்கு மாறின்றி ஆசிரியர் நிறுவிக்காட்டியமையால் சைவத்திருமுறைகள்

போன்று முருகனுக்கெனத் தனித்த நூல்கள் பிற்காலத்தில் பெருகக் கந்தபுராணம் ஊற்றமாய்த் திகழ்தலை உணர்கின்றோம்.

சம்பந்தசரணாலயரின் 'கந்தபுராணச் சுருக்கம்', தி. சு. வேலுப்பிள்ளையின் 'கந்தபுராண வெண்பா', கவிகுஞ்சரபாரதியார், சேலம் குமாரசுவாமி முதலியார் இவ்விருவரும் தனித்தனியே பாடியுள்ள 'கந்தபுராணக் கீர்த்தனை'கள், காஞ்சிபுரம் சூரப்ப முதலியாரின் 'கந்தபுராணச் சங்கிரகம்', முத்துக்குமாரதாசரின் 'கந்தபுராணச் சதகம்'. செந்திநாதையரின் 'கந்தபுராண நவநீதம்' போன்ற பல நூல்கள் தமிழ்க் கந்தபுராணத்தைத் தழுவிப் பிற்காலத்தே எழுந்தமை கச்சியப்பரின் சிறப்பிற்கு போதிய சான்றுகளாகும். முருகனை முழுமுதற்கடவுளாக உயர்த்தி மீண்டும் முருக நெறியைத் தமிழகத்தில் நிறுவக் கச்சியப்பர் முயன்றுள்ள திறத்தினையும் தமிழ் மரபுகட்கு ஏற்ற பெற்றியில் கந்தபுராணத்தைப் படைத்திருக்கும் பாங்கினையும் நிறுவுதலே நோக்கமாகக்கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப்பெறினும் கந்தபுராணக் கதைமாந்தர்களைப் பற்றியும், கந்தபுராணக் கதைமாந்தர்களை இராமாயணக் கதைமாந்தர்களுடன் ஒப்பிட்டும், பிற தமிழ்ப்புராணங்களுடன் இப்புராணத்தை ஒப்பிட்டும், கந்தபுராணத் தழுவல் நூல்களுடன் இந்நூலை ஒப்பிட்டும், இப்புராணத்துள் உள்ள கிளைக்கதைகளைக் குறித்தும் விரிவாக ஆராயின் கச்சியப்பரின் தனிச்சிறப்புக்கள் மேலும் புலப்படும். பிற்காலத் தமிழகத்தில் முருகவழிபாடு வளர்ச்சியுற்ற பாங்கினைக் கச்சியப்பருக்குப் பின்தோன்றிய முருகனடியார் படைத்த பத்திப்பனுவல்களுடன் இப்புராணத்தை ஒப்பிட்டு ஆராய்வதற்கும் இடமுள்ளது.

பிறமொழிக் கதைகளைத் தமிழில் பெயர்த்துப் படைத்தலுக்கு வழிவகுத்துக் கொடுத்தவர்கள் கொங்குவேளிர், திருத்தக்கதேவர்,

கம்பர் முதலியோராவர். கந்தபுராணம் வழிநூலாயினும், முதனூலுக்கு முற்றிலும் அடிமைப்பட்டுவிடாமல் சங்கச் சான்றோர் கருத்துக்களைத் தழுவியும், திருக்குறள் முதலிய முத்துநூல்களின் செல்வாக்கைப் பெற்றும், தமிழ்க்காப்பிய மரபுகளைப் போற்றியும், 'முருகன் தமிழ்க்கடவுள்', 'வேல் வழிபாடு' போன்ற தமிழ்க்கோட்பாட்டினை நிறுவிக்காட்டியும் தன் தனித்தன்மை தோன்றும்வண்ணம் அமைந்துள்ளது. இவ்வகையில் தம் நூலையே முதனூலாகக் கொள்ளுமாறு கச்சியப்பர் கந்தபுராணத்தைப் படைத்துள்ளமை பாராட்டற்குரியது.

# IV. பின்னிணைப்புக்கள்

1. முருகன் திருப்பெயர்கள்
2. முருகன் உறைவிடங்களும் முருகன் சிவனை வணங்கிய திருத்தலங்களும்
3. வடமொழிக்கந்தபுராணமும் தமிழ்க்கந்தபுராணமும் வேறுபடுமிடங்கள்
4. கச்சியப்பரின் புதிய கூறுகள்
5. படைச்சொற்கள்
6. அணிகலன்கள்
7. வேள்நூல் கருத்துக்கள்
8. கச்சியப்பரைக் குறித்த பாராட்டுக்கள்
9. கந்தபுராண வெளியீடுகள்

# பின்னிணைப்பு 1

## முருகன் திருப்பெயர்கள்

கந்தபுராணத்தில் கச்சியப்பரால் ஆளப்படும் முருகன் திருப்பெயர்கள் அடைமொழிகளுடன் தொகுக்கப்பெற்றுப் பொருளின் அடிப்படையில் வகைப்படுத்தி அகரவரிசையில் இவண் தரப் பட்டுள்ளன.

* * *

## I குடும்ப உறவுப் பெயர்கள்

### 1. சிவன் மகன்

அகிலம் யாவுமாம் மூவிருமுகனுடை
முக்கணான் மகன் 4:13:347
அட்டமூர்த்திசேய் 4:4:308
அண்டநாயகன் குமரன் 4:4:260
அரனிடைப் பிறந்த அண்ணல் 4:7:33
அரன்பால் வந்த சிறுவன் 4:7:28
அரன் மகன் 3:21:10, 4:12:346
அரண் மாமகன் 1:20:124
அமலன் தந்த கந்தன் 4:3:10
அம்மென் கொன்றை அணிமுடிக் கொண்டவன் செம்மல் 3:10:2

எல்லுறழ் கண்டன்தந்த அறுமுகன் 4:12:208
ஆதி தந்த அறுமுகத்து எம்பிரான் 4:11:73
ஆதி தந்தருளும் மைந்தன் அறுமுகன் 4:12:207
ஆதி தன் குமரன் 4:7:22
ஆதிதேவன் அருளும் மைந்தன் 1:16:5
ஆதி மைந்தன் 4:5:204
ஆதியங்கடவுள் மைந்தன், 1:22:65
ஆதியங்குமரன் 4:4:240, 4:4:253

ஆலமாமிடற்றண்ணல் சேய் 1:17:1
ஆறார் சென்னிப் பண்ணவன் மைந்தன் 4:13:394
இருளுறு மிடற்றினான் ஏவுமைந்தன் 4:3:13
ஈசற்கினியான் 4:12:369
ஈசனது அருள்மகன் 4:13:40
ஈசனருள் மாமதலை 4:13:223
ஈசனருள் மைந்தன் 4:4:37
ஈசன்தன் மகன் 4:12:329
ஈசன் நெந்னலின் உதவும்பிள்ளை 1:22:56
ஈசன் மகன் 4:3:179
ஈசன் மாமகன் 4:5:82, 4:13:217
ஈசன் மைந்தன் 1:14:56, 4:4:63
ஈசன் வன்றிறல் குமரன் 1:22:34
ஈசன் விட்டகுமரன் 4:5:32
ஊழிநாள் எல்லையின் உலகெலாமடுங்
கேழிலான் மதலை 4:12:379
ஊழியின் முதல்வன் மைந்தன் 4:13:237
எம்பிரான் கண்ணின்றோன் 3:7:28
எம்பிரான் குமாரன் 4:12:430
எறிநீர்ச் சென்னிப் பராபரன் மைந்தன் 4:2:25
ஏறுடைமுதல்வன் மைந்தன் 4:13:245
ஐந்துமுகர் தந்த முருகேச! 1:14:82
ஒருத்தனையாகியே உலகெலாமடும்
நிருத்தனதருள் மகன் 4:12:340
கடலுடைக் கடுவை உண்டோன் காதலன் 3:1:7
கட்செவி மதியொடு கலந்த செய்யவார் சடைப்பரம்—
பொருள் திருநுதல் விழிசேர் ஐயன் 3:12:124
கண்ணுதல் அருள்புரி கந்தன் 4:3:374
கண்ணுதல் ஞெரேலென உதவியநிமலன் 1:24:45
கண்ணுதல் முதல்வன் மைந்த! 4:12:348
கண்ணுதற் சேய் 3:21:35

கண்ணுதற்பெருமகன் நல்குங்கடவுள் 4:13:460
கயப்பொருப்பினை உரித்த மால்வரை தருகாளை 4:4:261
கரந்தை சூடுவான் குமரன் 3:21:87
கறுத்த கண்டர் காளை 4:13:187
காரணனாகித் தானே கருணையால் எவையும் நல்கி
ஆருயிர் முழுதுமேவி அனைத்தையும் இயற்றி நிற்கும்
பூரணமுதல்வன் மைந்தன் 4:13:451
கார்தரு கண்டத் தெந்தை காதல! 1:15:23
கார்பொரு மிடற்றவன் காதலன் மாமகன் 3:21:19
குழந்தை வெண்பிறை மிலைச்சினோன்மதலை 3:21:85
கொன்றை வேணியின் மிலைச்சிய பரஞ்சுடர்
குமரன் 3:10:7

கோக்குமரன் 1:26:13
சங்கரன் குமரன் 1:11:109
சங்கரன் மதலை 6:24:195
சிவ குமாரன் 3:10:23
சிவசங்கரன் என்று அரிபோற்றிய செம்மல்
மைந்தன் 1:14:54
சிவனருள் நாயகன் 3:6:19
சிவன்கண் நெருநல் வந்திடுஞ் சிறுவன் 3:12:121
சிவன் மகன் 1:11:121, 1:19:18, 1:20:116, 3:12:54,
4:3:344, 4:6:73

சிற்பரன் குமரன் 4:13:257
